


உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஓம் மஹாகணபதயேநமஃ.

———:O:———

# திருவருட்பா.

(அரும்பத விளக்க உரையுடன்)

## சுத்த சன்மார்க்க விளக்கத்தின்
முதற்பிரிவாகிய

# சீவகாருணிய ஒழுக்கம்.

☞ சீவகாருண்ணியம் என்பது சீவர்களிடத்து தயவு அல்லது இரக்கம்; அதாவது சீவர்களது ஆன்ம வியற்கை விளக்கம். விரித்துரைக்குமிடத்து சீவர்களுக்கு சீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக்கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் என்று அறியவேண்டும்.

## பரசிவ வணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

### எழுசீரடியாசிரிய விருத்தம்.

அன்பெனும்பிடியு ளகப்படுமலையே யன்பெனுங்குடில்புகுமரசே
யன்பெனும்வலைக்குட் படுபரம்பொருளே யன்பெனுங்கரத்தமரமுதே
யன்பெனுங்கடத்து ளடங்கிடுங்கடலே யன்பெனுமுயிரொளிரறிவே
யன்பெனுமணுவு ளமைந்தபேரொளியே யன்புருவாம் பரசிவமே.

(இ - ள்.) அன்புஎன்னும்பிடியுள்-அன்பென்கிறபிடிக்குள்ளே, அகப்படும்மலையே-அகப்பட்டுக்கொள்ளுகிறபர்வதமே, அன்பு என்னும் குடில் - அன்பென்கிற குடிலில், புகும்-புகுகின்ற, அரசே - அரசனே, அன்புஎன்னும் வலைக்குள் படு - அன்பென்கிறவலையில் சிக்கிக்

கொள்ளுகிற, பரம்பொருளே - மேலானபொருளே, அன்பு என்னுமகரத்து அமர்-அன்பெ ன்கிற கையிலே யமர்ந்திருக்கிற, அமுதே - அமிர்தமே, அன்பு என்னும் கடத்துள் - அன் பென்கிற குடத்தில், அடங்கிடும்கடலே - அடங்குகின்ற சமுத்திரமே, அன்பு என்னும் - அன் பென்கிற, உயிர் - உயிரினுள்ளே, ஒளிர் - பிரகாசிக்கிற, அறிவே - ஞானமே, அன்பு என்னும் அணுவுள் அமைந்த பேரொளியே - அன்பென்கிற ஒளியினுள்ளே யமர்ந்த பெரிய ஒளியே, அன்பு உரு ஆம் - அன்பே யுருவாகக்கொண்ட, பரசிவமே - மேலானசிவமே, எ-று. இச்செய்யுளால் அன்பின்சிறப்புக்கூறப்பட்டது.

திருச்சிற்றம்பலம்.

——:0:——

## சன்மார்க்கவிளக்கம்—முதற்பிரிவு.

உலகத்தில் மனிதப்பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தப்பிறப்பினு லடையத்தக்க ஆன்மலாபத்தைக் காலமுள்ளபோதேயறிந்து அடையவேண்டும்.

அந்த வான்மலாபமெது வென்றறியவேண்டில் - எல்லா வண்டங்களேயும் எல்லாப்புவனங்களேயும் எல்லாப்பொருள்களேயும் எல்லாச்சீவர்களேயும் எல்லா வொழுக்கங்களேயும் எல்லாப்பயன்களேயும் தமது பூரணவியற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றிவிளங்க விளக்கஞ் செய்விக்கிற இயற்கை யுண்மை வடி வினராகிய **கடவுளின்** பூரணவியற்கை யின்பத்தைப் பெற்று, எக்காலத்தும் எவ் விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவுந் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வே இந்த மனிதப்பிறப்பினு லடையத்தக்க வான்மலாபமென்று உண்மையாக வறியவேண்டும்.

இயற்கை யின்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப்பெரிய வாழ்வை யெதனுலடையக் கூடுமென்றறிய வேண்டில்-**கடவுளின்** இயற்கை விளக் கமாகிய **வருளைக்**கொண்டே யடையக்கூடுமென்றறியவேண்டும். **கடவுளின்** இய ற்கை விளக்கமாகிய **அருளை** எதனுற் பெறக்கூடுமென் றறியவேண்டில் - சீவகாரு ணிய ஒழுக்கத்தினுற் பெறக்கூடுமெல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக் கூடாது என்று உறுதியாக அறியவேண்டும். **கடவுளினருளைச்** சீவகாருணிய வொ ழுக்கத்தினுல் பெறக்கூடுமல்லது வேறெந்தவழியாலும் பெறக்கூடாதென்பது எப் படியென்னில்:—

அருளென்பது **கடவுள்தயவு, கடவுளியற்கை** விளக்கம். சீவகாருணியமெ ன்பது சீவர்கள் தயவு, சீவர்களான்ம வியற்கை விளக்கம். இதனுல் தயவைக் கொ ண்டு தயவைப்பெறுதலும், விளக்கத்தைக்கொண்டு விளக்கத்தைப் பெறுதலுங் கூடும்;வேறொன்றினுல் பெறக்கூடாமையநுபவமாகலின் சீவகாருணியத்தைக்கொ ண்டு **அருளைப்** பெறுதல்கூடும்; வேறொன்றினுலும் பெறக்கூடாமை நிச்சயம். இத ற்குவேறு பிரமாணம் வேண்டாமென்றறியவேண்டும். **அருளைப்**பெறுதற்குச் சீவகாரு ணியமே வழியாதலால், ஞானவழியென்பதும் சன்மார்க்கமென்பதுஞ் சீவகாரு ணிய வொழுக்கமென்றும், அஞ்ஞானவழியென்பதுந் துன்மார்க்க மென்பதுஞ் சீவகாருணியவொழுக்க மில்லாமை யென்றும் அறியப்படும். சீவகாருணியம் விள ங்கும்போது அறிவும் அன்பும் உடனுக நின்று விளங்கும்; அதனுல் உபகாரசத்தி விளங்கும்; அந்த உபகார சத்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும்; சீவகாரு ணியம் மறையும்போது அறிவு மன்பு முடனுக மறையும்;அதனு லுபகார சத்தி மறை யும்; உபகார சத்தி மறையவே யெல்லாத்தீமைகளுந்தோன்றும்; ஆகலின் புண்ணி யமென்பது சீவகாருணியமொன்றே யென்றும், பாவமென்பது சீவகாருணியமில் லாமை யொன்றேயென்றும் அறியப்படும். சீவகாருணியவொழுக்கத்தினுல் வரும் **விளக்கமே கடவுள்** விளக்கமென்றும், சீவகாருணிய வொழுக்கத்தினுல் வரும்

இன்பமே கடவு ளின்பமென்றும், இவ்விளக்கத்தையும் இன்பத்தையும் பலகால் கண்டு அநுபவித்துப் பூர்த்தியடைந்த சாத்தியர்களே சீவன்முத்தரென்றும், அவர்களே கடவுளை யறிவாலறிந்து கடவுள் மயமாவார்களென்றுஞ் சத்தியமாக வறிய வேண்டும். ஆனால் சீவகாருணிய வொழுக்கமென்பது தென்னவெனில்—சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக வுண்டாகிற ஆன்மவுருக்கத்தைக்கொண்டு தெய்வ வழிபாடுசெய்து வாழ்தலென்றறியவேண்டும். சீவர்கள் விஷயமாக வான்ம வுருக்கமெப்போது உண்டாகுமெனில்—சீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை யநுபவிக்கக்கண்டபோதாயினும் கேட்டபோதாயினும் இவ்வாறுண்டாகுமென்று அறிந்தபோதாயினும் ஆன்மவுருக்க முண்டாகுமென் றறியவேண்டும். சீவகாருணிய முண்டாவதற்கு உரிமையெதுவென்னில்—சீவர்களெல்லா மொருதன்மையாகிய இயற்கையுண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருட்டிக்கப்பட்டபடியால் ஒருமையுள்ள சகோதரர்களேயாகும்; சகோதரர்களு ளொருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும், துக்கப்படுவாரென் றறிந்தபோதும் அவரைத் தமது சகோதரரென்று கண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது சகோதர உரிமையாகலின், ஒரு சீவன் துக்கத்தை யனுபவிக்கக்கண்டபோதும் துக்கப்படுமென்றறிந்தபோதும், மற்றொரு சீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய ஆன்மவுரிமையென் றறியவேண்டும்; சீவர்கள் துக்கப்படுகிறதைக் கண்டபோதும் சிலர் சீவகாருணிய மில்லாமல் கடின சித்தர்களாயிருக்கின்றார்கள். இவர்களுக்குச் சகோதரவுரிமையில்லாமற் போவது என் என்னில்—துக்கப்படுகின்றவரைத் தமது சகோதரரென்றும் துக்கப்படுகின்றாரென்றுந் துக்கப்படுவாரென்றும் அறியத்தக்க வான்ம வறிவு என்கின்ற கண்ணனது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளிமழுங்கினபடியாலும், அவைகளுக்கு உபகாரமாகக்கொண்ட மனமுதலான உபநயனங்களாகிய கண்ணாடிகளும் பிரகாச பிரதிபலிதமில்லாமல் தடிப்புள்ளவைகளா யிருந்தபடியாலும் கண்டறியக் கூடாமையாயிற்று; அதனால் சகோதரவுரிமை யிருந்தும் சீவகாருணிய முண்டாகாமலிருந்ததென் றறியவேண்டும்.

இதனால் சீவகாருணியமுள்ளவர் ஆன்மதிருஷ்டி விளக்கமுள்ளவரென்றறியப்படும். சீவர்களுக்குப் பசி தாகம் பயமுதலியவற்றால் வருந் துன்பங்களெல்லாம் மனம் கண் முதலிய கரணேந்திரிய வநுபவங்களல்லது ஆன்ம வநுபவங்களல்ல. அதனாற் சீவகாருணியங்கொள்வதில் விசேஷ பிரயோசனமில்லையே யென்னில்—இந்தத் தூலதேகத்தில் சீவனாக விருக்கிற வான்மாவும் அறிவுக் கறிவாயிருக்கிற கடவுளியற்கை விளக்கமுந்தவிரக் கரணம் இந்திரியமுதலிய மற்றவைகளெல்லாங் கருவிகளாகிய தத்துவ சடங்களே யல்லது சித்துக்களல்ல. ஆதலின் சுகதுக்கங்களைச் சடங்களநுபவிக்கவறியாது, செம்மண் சந்தோஷித்தது துக்கித்தது என்றும் சொல்லப்படாது; செம்மண்ணினால் தேகவாழ்க்கைக்கு வீடுகட்டிக்கொள்வதுபோல மனமுதலான கரணேந்திரியங்கள் சீவ வாழ்க்கைக்குக் கடவுளால் கட்டிக்கொடுக்கப்பட்ட ஒரு சிறிய வீடாகும். இன்பதுன்பங்களை வீட்டிலிருக்கின்றவன் அநுபவிப்பானல்லது வீடு அநுபவிக்கமாட்டாது. அன்றியும் காசத்தினால் ஒளிமழுங்கப்பட்டு, உபநயனங்களாகிய கண்ணாடிகளாற்பார்க்கின்ற கண்கள் துன்ப விஷயத்தைக் கண்டபோது, அக்கண்கள் நீர்சொரியுமேயல்லது கண்ணாடி நீர் சொரியமாட்டாது. ஆகலின் ஆன்மதிருஷ்டிக்கு உபநயனங்களாகவிருக்கின்ற மனமுதலான கருவிகள் சுகதுக்கங்களை யநுபவிக்கமாட்டாது, ஆத்மாவேயநுபவிக்குமென்றறியவேண்டும். ஒருசீவனுக்குச் சுகம்நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது; துக்கம் நேரிட்டபோது மனந்தளர்கின்றது. ஆகலின் சுகதுக்கங்களை அம்மனம்அநுபவிப்ப

தாக வறியப்படாதோவென்னில்—அறியப்படாது.பளிங்கினாற்செய்த வீட்டினுள்ளிருக்கின்ற வீட்டுத்தலைவனுடைய தேகவிளக்கமுந்தேகச்சோர்வும் அந்தப் பளிங்குவீட்டில் பிரதிபலித்துப்புறத்தில் தோன்றுவதுபோலும், கண்களின் மலர்ச்சியுஞ்சோர்வும் அக்கண்களிலிட்ட உபநயனங்களில் பிரதிபலித்துப் புறத்திற்றோன்றுவதுபோலும்,சுகதுக்கங்களால் ஆன்மாவுக்குண்டாகிற மகிழ்ச்சியுந் தளர்வும் மன்முதலானகரணேந்திரியங்களில்பிரதிபலித்துப் புறத்திற்றோன்றுகின்றது.ஆகலின் சுகதுக்கங்கள் ஆத்மாவுக்கேயநுபவமென்றும், சுகதுக்கங்களை யறிந்தநுபவிப்பதற்குக்கரணேந்திரியங்கள் ஆன்மாவுக்குபகாரகருவிகளாகுமென்றுமறியவேண்டியது. **கடவுளால்** சிருஷ்டிக்கப்பட்ட சீவர்களிலனேகர் பசி தாகம் பயமுதலியவற்றால் மிகவுந் துன்பப்படுகின்றது என்னெனில்—முன்தேகத்தில் சீவகாருணியவொழுக்கத்தை விரும்பாமல் கடினசித்தர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்களாதலாற் **கடவுள்** விதித்த அருளாக்கினைப்படி பசி தாகம் பயமுதலியவற்றால் மிகவுந் துக்கப்படுகிறார்களென் றறியவேண்டும். முன் தேகமுண்டென்பது எப்படியென்னில் - ஒரு வீட்டில் குடிக்கூலிகொடுத்துக் குடித்தனஞ் செய்யவந்த சமுசாரி அதற்குமுன் வேறொரு வீட்டில் குடிக்கூலிகொடுத்துக் குடித்தனஞ் செய்திருந்தானல்லது வீடில்லாமல் குடித்தனஞ்செய்யமாட்டானென்றும், இப்போது வந்த வீட்டிலுங் கலகம்நேரிட்டால் பின்னும் வேறொரு வீட்டில் குடிபோவானென்றும் அறிவதுபோல் இந்தத்தேகத்தி லாகாரக்கூலி கொடுத்துக் குடியிருக்கவந்தசீவன், இதற்கு முன்னும் வேறொருதேகத்தி லந்தக்கூலியைக் கொடுத்துச் சீவித்திருந்தானல்லது தேகமில்லாமல் சீவித்திருக்கமாட்டானென்றும், இந்தத்தேகத்திலுங் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு தேகத்திற் குடிபோவானென்றுந் துணியவேண்டும். ஆதலால் முன்னும் பின்னுஞ் சீவர்களுக்குத் தேகங்கள் நேரிடுமென்றறியவேண்டும். சீவர்கள் முன்தேகத்தில்செய்த பாபகர்மங்களிந்தத்தேகத்திலும் வருமென்பது எப்படியென்னில் - ஒரு சமுசாரி முன் குடித்தனஞ் செய்திருந்த வீட்டில் தன்தலைவன் கட்டளைப்படி நடவாமல் துன்மார்க்கர்களைவருவித்து, அவர்களோடுகூடிப் பழகியிருந்தானானால் அந்தச்சமுசாரி யந்த வீட்டைவிட்டு வேறொரு வீட்டில் குடிவந்த காலத்திலும் அந்தத்துன்மார்க்கர்கள் இந்தவீட்டிலும்வந்து அவனுடன் பழக்கஞ்செய்வார்கள். அதுபோல் ஒருசீவன் முன் குடியிருந்த தேகத்தில் **கடவுள்** கட்டளைப்படி நடவாமல் துன்மார்க்கத்தாற் பாபகர்மங்களை விரும்பிச் செய்திருந்தானானா லந்தச்சீவன் வேறொரு தேகத்தில் வந்தபோதும் அந்தப்பாபகர்மங்க ளிப்போது வந்த தேகத்திலும் வந்து அந்தச்சீவனைச் சேருமென் றறியவேண்டும். முன்பிறப்பில் சீவகாருணிய வொழுக்கத்தைவிட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்கள் இந்தப்பிறப்பில் பசி, தாகம், பயம் முதலியவற்றால் துக்கப்படச்செய்வது **கடவுளருளாக்கினை** நியதியென்றால், அந்தச்சீவர்கள் விஷயத்தில் காருணியம் வைத்து, ஆகாரமுதலியவை கொடுத்து, அவர்கள் துக்கத்தை மாற்றுவது **கடவுளருளாக்கினைக்கு** விரோதமாகாதோ என்னில்—ஆகாது; அரசன் தன்கட்டளைக்கு முழுதும் விரோதித்துக்கால்களுக்கு விலங்கிடப்பட்டுச் சிறைச்சாலையி லிருக்கின்ற பெரியகுற்றவாளிகளுக்குந் தன் சேவகர்களைக்கொண்டு ஆகாரம் கொடுப்பிக்கின்றான். அதுபோல் **கடவுள்** தன்கட்டளைக்கு முழுதும் விரோதித்துப் பலவகையால் பந்தஞ்செய்யப்பட்டு, நரகத்திலிருக்கின்ற பாபிகளுக்குந் தன்பரிவாரதேவர்களைக்கொண்டு ஆகாரம் கொடுப்பிக்கின்றார். அரசன் தன் கட்டளைப்படி நடவாமல் வேறுபட்ட சாதாரண குற்றமுடையவர்களைத் தன்னா லவர்கள் பெறத்தக்க லாபத்தைப் பெறவொட்டாம லுத்தியோகத்தினின்றும் நீக்கி, அவர்களுக்கு நல்லறிவு வருகின்றநிமித்தம் அவ்விடத்தைவிட்டு வேறிடங்களில் வெளிப்படுத்து

கின்றான். அவர்கள் உத்தியோக மிழந்தபடியால் சுகபோஜன முதலிய போகங்களையிழந்து ஊர்ப்புறங்களிற்போய் ஆகார முதலியவைகளைக்குறித்து அலைந்து வருந்துகின்றபோது, தயவுள்ளவர்கள் கண்டு ஆகாரமுதலியவை கொடுக்கின்றார்கள். அதை யரசன் கேட்டகாலத்திலுங் கண்டகாலத்திலுங் கொடுத்தவனை இரக்கமுள்ள நல்லசமுசாரியென்று சந்தோஷித்து உபசரிக்கின்றானே யல்லது கோபிக்கவில்லை. அதுபோல் **கடவுள்** தன் கட்டளைப்படி நடவாத சாதாரண குற்றமுடைய சீவர்களைத் தமது **சக்தி**யால் அவர்கள் பெறத்தக்க சுகங்களைப் பெறவொட்டாமல் தான்கொடுத்த சௌக்கிய புவனபோகங்களை விடுவித்து, அந்தச் சீவர்களுக்கு நல்லறிவு வருவிக்குநிமித்தம் அந்தத் தேகத்தினின்றும் நீக்கி வேறொருதேகத்தில் விடுக்கின்றார். அந்தச் சீவர்கள் சௌக்கிய புவனபோகங்களை யிழந்தபடியால் சௌக்கிய போஜனமுதலியவற்றை யிழந்து, வேறு வேறிடங்களி லாகாரமுதலியவை யில்லாமல் வருந்தும்போது தயையுள்ளவர்கள் அந்த வருத்தத்தைக்கண்டு ஆகாரமுதலியவை கொடுத்தாலப்படிக்கொடுத்தவர்களை நல்லவிரக்கமுள்ளவர்கள் மேன்மேலுஞ் சுகத்தை யடையக்கடவர்களென்று சந்தோஷித்து உபசரிப்பார்களல்லது கோபிக்கமாட்டார்கள். ஆதலால் **கடவுள் அருள்** ஆக்கினைப்படி சீவர்களிடத்துச் சீவர்கள் காருணியம் வைப்பதே சம்மதமென்று உண்மையாக வறியவேண்டும்.

இந்த சீவகாருணியத்தால் இகலோகவொழுக்கம் வழங்குகின்றது. சீவகாருணியமில்லையாகில் இகலோகவொழுக்கமெவ்வளவும் வழங்கமாட்டாதென்றறியவேண்டும். எப்படியென்னில் - சீவகாருணிய மில்லாதபோது அறிவும் அன்புந் தோன்றாது; அவை தோன்றாதபோது கண்ணோட்டமும் ஒருமையும் உபகாரமும் விளங்காது; அவை விளங்காதபோது வலிய சீவர்களா லெளிய சீவர்களொழுக்கம் பொருமை முதலானவைகள் தடைபட்டழிந்துபோம். பின்பு வலிய சீவர்கள் ஒழுக்கங்களுந் தாமச வொழுக்கங்களாகி ஒருவரொழுக்கத்தால் மற்றொருவரொழுக்கம் மதத்தினாற்சோர்வடைந்து மாறுபட்டழிந்துபோம். சீவகாருணிய வொழுக்கஞ்சிறிதுமில்லாத புலி சிங்க முதலிய மிருகங்கள் வழங்குகின்ற காட்டில் இகலோகவொழுக்கம் வழங்கவேயில்லை; அதுபோல் சீவகாருணியமில்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோக வொழுக்கம் வழங்கவே மாட்டாதென்றறியவேண்டும்.

பரலோக வொழுக்கமுஞ் சீவகாருணியத்தால் வழங்குகின்றது; அது வில்லையாகில் பரலோகவொழுக்கமும் வழங்கமாட்டாது. எப்படியென்னில் - சீவகாருணியமில்லாதபோது அருள்விளக்கந் தோன்றாது. அது தோன்றாதபோது **கடவுள் நிலை** கைகூடாது; அது கூடாதபோது முத்தியின்ப மொருவரு மடையமாட்டார்கள். அடையாத பட்சத்தில் பரலோக வொழுக்கம் வழங்கவே மாட்டாதென் றறியவேண்டும். சீவகாருணிய ஒழுக்கம் மிகவும் வழங்காமையால் துன்மார்க்கப்பிறவியே பெருகி, எங்கும் புல்லொழுக்கங்களே வழங்குகின்றது. எப்படியென்னில்—சீவகாருணிய மில்லாத கடினசித்தர்களெல்லா மவரவர் கடினச் செய்கைக்குத் தக்கபடி சிலர் நகரவாசிகளாகவும், சிலர் சமுத்திரவாசிகளாகவும், சிலர் ஆரணியவாசிகளாகவும், சிலர் புலி கரடி சிங்கம் யாளி யானை கடமை கடா பன்றி நாய் பூனை முதலிய துட்டமிருகங்களாகவும், சிலர் பாம்பு தேள் முதலிய விஷசெந்துக்களாகவும், சிலர் முதலை சுறா முதலிய கடின செந்துக்களாகவும், சிலர் காக்கை கழுகு முதலிய பட்சி சண்டாளங்களாகவும், சிலர் எட்டி கள்ளி முதலிய அசுத்த தாபரங்களாகவும் பிறந்திருக்கின்றார்கள். ஆதலால் புல்லொழுக்கங்களே மிகவும் வழங்குகின்றதென்றறியவேண்டும். சீவகாருணியம் **கடவு**

ளருளைப் பெறுவதற்கு முக்கிய சாதனமென்பதுமல்லாமல் அதுவே யவ்வருளின் ஏகதேசவிளக்கமென்று மறியவேண்டும்.

ஜீவகாருணியம் ஆன்மாக்களின் இயற்கை விளக்க மாதலால் அந்த வியற்கை விளக்கமில்லாத ஜீவர்களுக்குக் **கடவுள் விளக்கம்** அகத்திலும் புறத்திலும் வெளிப்படவேமாட்டாது. ஜீவகாருணியத்துக்கு முக்கியமான லக்ஷியம் எது வென்னில்—ஆன்மாக்களெல்லா மியற்கை யுண்மை யேகதேசங்களாயும்,இயற்கை விளக்கமாகிய **அருள்** அறிவுக்கறிவாய் விளங்குவதற்கு ஒற்றுமை யுரிமை இடங்களாயு மிருக்கின்றனவென்றும், அந்த வான்மாக்கள் ஜீவர்களாகி யதிகரிப்பதற்குப் பூதகாரிய தேகங்களே உரிமையாகவிருக்கின்றனவென்றும், அந்தத்தேகங்களிலான்மாக்கள் ஜீவர்களாகி யதிகாரியாகாவிடில் ஆன்மவிளக்கம் மறைபடுமென்றும், அதனால் **அருள்** விளக்கம் வெளிப்படாதென்றும், அப்போது மூடமுண்டாகுமென்றும், அதுவே யான்மாக்களுக்குப் பந்தமாகுமென்றும், அதுபற்றி அவசியம் பூதகாரிய தேகம் வேண்டுமென்றும், பூதகாரியதேகங்களுக்கு மாயை முதற்காரணமாதலா லந்த மாயையின் விகற்ப ஜாலங்களாகிய பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை என்பவைகளால் அந்தத் தேகங்களுக்கு அடிக்கடி அபாயங்கள் நேரிடுமென்றும், அப்படி அபாயங்கள் நேரிடாமல் கரணேந்திரிய சகாயங்களைப் பெற்ற தம்மறிவைக்கொண்டு சர்வசாக்கிரதையோடு முயற்சிசெய்து தடுத்துக்கொள்வதற்குத்தக்க வல்லப சுதந்தரம் ஜீவர்களுக்கு **அருளால்** கொடுக்கப்பட்டதென்றும், அந்தச்சுதந்தரத்தைக்கொண்டு ஜீவர்களெல்லாந் தேகங்களிலிருந்து அபாயங்களை நீக்கி, ஆத்மலாபத்தைப் பெறுதற்கு முயற்சிசெய்யக்கடவரென்றும், ஊழ்வகையாலும் அஜாக்ரதையாலும், பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை என்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்திசெய்து கொள்ளமாட்டாமல் வருந்துகின்ற ஜீவர்கள் விஷயத்தில், அவை நிவர்த்தி செய்விக்கத்தக்க சுதந்தரமுள்ள ஜீவர்கள், காருணியத்தால் நிவர்த்திசெய்விக்கவேண்டுமென்றும், அப்படி நிவர்த்தி செய்விப்பதில் பசியினால்வருந் துன்பமுங் கொலையினால்வருந் துன்பமுந்தவிர, மற்றவைகளால் வருத்துக்கங்களை மாற்றுவது அபரஜீவகாருணிய மாதலா லிவ்வுலக வின்பத்தைமாத்திரஞ் சிறிது உண்டுபண்ணுமென்றும், பசியினால்வருந் துன்பத்தையுங் கொலையினால் வருந்துன்பத்தையும் நிவர்த்திசெய்விப்பது பரஜீவகாருணியமாதலாலிவ்வுலகவின்பங்களையு மளவிறந்த சித்தியின்பங்களையு மெக்காலத்து மழியாத முத்தியின்பத்தையு **மருளா** லடையப்படுமென்றும், ஊழ்வகையாலு மஜாக்கிரதையாலும் அன்னியஜீவர்களுக்கு நேரிடுகிற அபாயங்களை நிவர்த்தி செய்விப்பதற்குத் தக்க சுதந்தரமு மறிவுமிருந்தும், அவ்வாறுசெய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு இவ்வுலக வின்பத்தோடு மோக்ஷவின்பத்தை யநுபவிக்கின்ற சுதந்தரம் **அருளா** லடையப்படுவதில்லையென்றும், தற்காலத்திலநுபவிக்கின்ற புவனபோகசுதந்தரங்களையுமிழந்துவிடுவரென்றுங் **கடவுள்** வேதத்தில் விதித்திருக்கின்றபடியால், ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி கொலை யென்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்திசெய்துகொள்ளத்தக்க அறிவும் சுதந்தரமுமில்லாத ஜீவர்கள் விஷயத்தில்அவைகளை நிவர்த்திசெய்விக்கத்தக்க அறிவும் சுதந்தரமுமுள்ளஜீவர்கள் வஞ்சியாமல் தயையினால் நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கியமான லட்சியமென்றும், அதில் சத்தியமாக நம்பிக்கை வைத்துப் பசித்த ஜீவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்கியும், கொலைப்படும் ஜீவர்களுக்குச் செய்வகையால் கொலை நீக்கியும், திருப்தியின்பத்தை யுண்டுபண்ணுவதே மேலான பிரயோசன மென்றும் அறியவேண்டும். பசி கொலை பிணி எளிமை பயம் இச்சை யென்பவைகளால்வரும் அபாயங்களை நிவர்த்திசெய்விப்பது விதியாகவிருக்கவும், இவ்விடத்துப் பசியினை

லும் கொலையினாலும் வரும் அபாயங்களைமாத்திரம் நிவர்த்திசெய்விப்பது விசேஷ மென்று குறித்தது என்னென்றறியவேண்டில்:—

சீவகாருணியவொழுக்கத்தில் அபரசீவகாருணியமென்றும், பரசீவகாருணியமென்று மிருவகையாம். அவற்றில் பசி நீக்கலும் கொலை நீக்கலும் பரசீவ காருணியமாதலால் விசேஷமாகக்குறிக்கப்பட்டதென் றறியவேண்டும்; அன்றியும் பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்குப்பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயையுடையவர்கள் தாகம் நீங்குதற்குத் தண்ணீர்கொடாமலிரார்கள். தண்ணீர்கொடுப்பது பிரயாசமல்ல; தண்ணீர் ஏரி, குளம், கால்வாய் முதலானவிடத்து மிருக்கின்றது; தாகத்தால் மாற்றிக்கொள்ளத்தக்க வேகதேச அபாயம் நேரிடுமேயல்லது அதனால் தேகத்திற்கு ஆனி நேரிடாது; பசியினால் மாற்றிக்கொள்ளக்கூடாத கெடுதி தேகத்திற்கு நேரிடும் பசியினால்வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விக்கத்தக்க தயவுடையவருக்குப் பிணியினால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதற்குத் தயவு உண்டாகாமலிராது. பசி மிகுதியினாலேயே பிணிகள் விருத்தியாகின்றன; ஆகாரப் பக்குவங்களாலேயே அப்பிணிகள் நீங்குகின்றன; பிணிக்கு வேறுமருந்து கொடுப்பினும் பத்திய ஆகாரமே தேகம் நிற்பதற்கு அவசியமான வாகாரமா யிருக்கின்றது; பிணியோடு நெடுநாள் தேகத்தை வைத்திருக்கக்கூடும்; ஒருநாளாகிலும் ஆகாரமில்லாமல் தேகத்தை வைத்திருக்கக்கூடாது; பசித்தவர்களுக்கு ஆகாரத்தால் பசிநீக்குவிக்கின்ற தயவுடையவர்களுக்கு இச்சையால் வருந்துன்பங்களை நீக்குவிப்பதற்குத் தயவு வராமலிராது. சீவர்களுக்கு உள்ளபடி பசி நேரிடுமாகிலாகாரத்தி லல்லது மற்றொன்றிலு மிச்சையே யிராது; ஆகாரங்கிடைக்கிலுண்டு பசிதீர்ந்தவர் தம் மிச்சையைச் சிறியமுயற்சிகளால் முடித்துக்கொள்ளவுங் கூடுமல்லது சமாதானஞ் செய்துகொள்ளவுங் கூடும்; இச்சையோடு பலநாள் தேகத்தை வைத்திருக்கலாம்; பசியோடு ஒருநாளும் தேகத்தை வைத்திருக்க முடியாது; பசித்த சீவர்களுக்கு ஆகாரத்தால் பசியை நிவர்த்திசெய்விக்கின்ற தயவுள்ளவர்க்குச் சுதந்தரமற்ற சீவர்களது எளிமையை நீக்கத் தயவு வராமலிராது. பசியால் வருந்துகின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையே இல்லை; எளிமையைச் சிலநாள்சென்று மாற்றிக்கொள்ளக் கூடும்; பசியை யவ்வாறு மாற்றிக்கொள்ளக் கூடாது; எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக்கூடும்; பசியோடு வைத்திருக்க முடியாது; பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவருக்குப் பயத்தை நிவர்த்தி செய்விப்பதில் தயவு வராமலிராது; பசியினால் வரும் பயத்துக்குங் கொலையினால் வரும் பயத்துக்கும் மேற்பட்ட பயமேயில்லை; பயத்தை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக்கூடும்; பசியை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக்கூடாது; பயத்தோடு தேகத்தை வைத்திருக்கலாம்; பசியோடு வைத்திருக்கப்படாது. பசியினால் வரும்அவத்தைகளுந் துன்பங்களுங்கொலையினால் வருமவத்தைகளுந் துன்பங்களுந் தம்முளொத்திருக்கின்றன; ஆதலால் பசியினால் வருந் துன்பத்தையுங் கொலையினால்வருந் துன்பத்தையும் நிவர்த்திசெய்விப்பதே சீவகாருண்ணியத்திற்கு முக்கிய லட்சியமென் றறியவேண்டும்.

பசியினால் வருந் துன்பத்தை நீக்குதலுங் கொலையினால் வருந் துன்பத்தை நீக்குதலுஞ் சீவகாருணியத்திற்கு முக்கியலக்ஷியமாக இருக்கவும் இவ்விடத்தில் பசி நீக்குதலைமாத்திர மடிக்கடி வலி யுறுத்துவது என்னெனில்—ஒரு சீவன் பசியினால் தொல்லைப்படுமென்பதை யறிந்து, காருணியத்தால் பசியை நீக்கி, உயிர் பிழைக்கும்படி செய்பவர் வேறு வகையா லுயிர்க்கொலை நேரிட்டால் அதற்கிரங்கி,அந்தக் கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்யாம லிரார்கள். கொலையால்வருந் துன்பத்தை நிவர்த்தி செய்வியாதவர்கள் பசியால்வருந் துன்பத்தையும் நிவர்த்தி

செய்விக்கத்தக்க தயவுடையவர்களாகார்கள். பசியால்வருங் கொலையையாகாரத்தாலன்றி வேறுவகையால் நிவர்த்திசெய்விக்கப்படாது; பகை முதலியவற்றால் வருங்கொலையை யனேக வுபாயத்தால் நிவர்த்திசெய்விக்கக் கூடுமாதலால், கொலையால்வருந் துன்பத்தைப் பசியால்வருந் துன்பத்திலமைத்து, அடிக்கடி வலியுறுத்துகின்றதென்றறியவேண்டும். அன்றியும், தாகத்தால் வருந்துகின்றவரும், பிணியால் வருந்துகின்றவரும், இச்சையால் வருந்துகின்றவரும், எளிமையால் வருந்துகின்றவரும், பயத்தால் வருந்துகின்றவரும், பசிவருத்த முண்டாகும்போது அவ்வவ்வருத்தங்களை யெல்லாம் மறந்து, பசிவருத்தம் மேற்பட்டு, ஆகாரங்கொடுக்க முயற்சிசெய்கின்றார்கள். அன்றியும், அரசன் ஆக்கினையால் கொலைக்குற்றம்பற்றிக் கொலைசெய்ய விதிக்கப்பட்ட குற்றவாளியும் பசிவந்தபோது, தன் பயத்தையுந் துன்பத்தையும் மறந்து, அந்தப்பசியை மாற்றிக்கொள்ளுகிறான். வயித்தியரால் தாமிறந்து விடுவது நிச்சயமென்று தெரிந்துகொண்ட வியாதியாளரும் மூப்பாளரும் பசிவந்தபோது, தமது துன்பத்தை மறந்து பசி நீக்க முயலுகின்றார்கள். பசிக்குத் தயவினாலாகாரங்கொடுக்கத்துணிந்தவன் வேறுவகையால் சீவர்கள் இம்சைப்பட்டழிவதற்குச் சம்மதிக்கவே மாட்டான். ஆகலானும் பசியால்வருந் துன்பத்தை நிவர்த்திசெய்விக்கிற தருமத்தை யடிக்கடி வலியுறுத்துவதென்றறியவேண்டும்.

பசியினால்வருங் கெடுதி எல்லாச் சீவர்களுக்குந் தேகநாசஞ்செய்வது உண்மையானால் எல்லாச்சீவர்களும் பசியையறிந்து நிவர்த்திசெய்விக்கவேண்டும். அப்படிநிவர்த்தி செய்விக்கத்தொடங்கி **கடவுளால்** சிருட்டிக்கப்பட்ட தேவர் மனிதர் நரகர் மிருகம் பறவை ஊர்வன தாபரமென்கிற இவ்வெழுவகைப்பட்ட அளவிறந்த பேதங்களுடைய சீவர்களது பசியையறிந்து நீக்குவது அசாத்யமாகுமேயென்னில்—தேவர்கள் மனித சுதந்திரத்தினுமேற்பட்ட சுதந்தரமுடையவர்களாய்த் தங்களுக்கு நேரிட்ட பசியைத் தங்கள் முயற்சியினாலேயே மாற்றிக்கொள்ளத்தக்க வல்லபமுடையவர்களாதலா லவர்கள் பசியைக்குறித்து மற்றவர் யோசிப்பது அவசியமல்லவென்றும், தேவர்களுக்கு பசிநேர்ந்தால் துன்பமுண்டாகுமேயென்று இரங்குவதுமாத்திர மவசியமென்றும், நரகர் நாம் பசியாற்றுவிக்கத்தக்க இடங்களில் இல்லாமல் வேறிடங்களி லிருக்கின்றபடியாலும், நரகர் பசிக்குத் தண்டனைப்பரிவாரங்களால் பசியாற்றுவித்தலாலும், நரகர் பசியைக்குறித்து யோசிப்பது அவசியமல்லவென்றும், நரகரும் பசிநேரிடில் வருந்துவார்களேயென்று இரங்குவது மாத்திரமவசியமென்றும், ஊழ்வகையினால் சிறிதுஞ் சுதந்தரமில்லாத மரம் புல் முதலிய தாபரங்களில் மனிதர் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் முயற்சியால் விளைவிக்கின்ற தாபரவர்க்கங்களுக்குப் பசிகுறித்து நீர்விடுவது அவசியமென்றும், மற்றைத் தாபர வர்க்கங்களெல்லாம் **அருள்** நியதியின்படி யாகாரங்கொடுப்பிக்க உயிர்த்திருக்கின்றனவாதலாலும், அவைகளுக்கெல்லாம் பசியறிந்து ஆகாரங்கொடுப்பது நமது சுதந்தரமின்றி **கடவுள்**சுதந்தரமென்றும், அவைகுறித்து யோசிப்பது அவசியமல்லவென்றும், ஆகாரமில்லாவிடில் வருந்துமேயென்று இரங்குதல் மாத்திரமவசியமென்றும், நிலத்திலும் நீரிலும் ஊர்கின்ற உயிர்களுக்கும் பறவைகளுக்கும் மிருகங்களுக்கு மவ்வவற்றின் ஊர்வகைக்குத் தக்கபடி **யருள்** நியதி யாகாரங்கொடுப்பிக்க வுண்டு பசியாறுகின்றனவென்றும், அவ்வவைகளுக்குத்தக்க வாகார மறிந்துகொடுப்பது நமது சுதந்தரமல்ல **கடவுள்** சுதந்தரமென்றும், அவைகளில் மனிதர் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் சுதந்தரத்தால் சம்பாதித்துக்கொள்ளுகின்ற பசு, எருது, எருமைக்கடா, ஆடு, குதிரை முதலிய சில மிருகங்களுக்கு ஆகாரங் கொடுத்துப் பசியாற்றுத லவசியமென்றும், மனிதர்களில் ஆண் மனிதர் பெண் மனிதர் என்றிருவகைப்பட்ட எல்லா மனிதர்களுக்கும்

பசியால்வரும் நஷ்டங்களும் துன்பங்களும், பசி நிவர்த்தியால்வரும் லாபங்களு மின்பங்களும் பொதுவிலொருதன்மையாயிருத்தலாலும், பசியால்வரும் நஷ்டங் களையுந் துன்பங்களையும் மனமுதலான அந்தக்கரணவிருத்தியினாலும், கண் முத லான இந்திரியங்களாலும் மிகவுமறிந்துகொள்கின்ற ஆன்மவறிவு ஒத்திருத்தலா லும்,மனிதர்களுக்கு ஊழ்வகையினால் **அருள்** நியதியின்படி கொடுப்பிக்கின்ற வாகார மட்டில் உண்டு சீவித்துத் தேகத்தை வைத்திருக்கக்கூடாமையாலும், தங்கள் முயற் சியாலும் அறிவாலுஞ் சுதந்தரத்தாலும் சம்பாதிக்கின்ற ஆகாமிய வாகாரத்தால் பசி நீக்கித் தேகத்தை வைத்திருக்க வேண்டுமாதலாலும், ஆகாமியத்தால் சம்பாதி க்கின்ற சீவ சுதந்தரம் மனிதர்களுக்கு **அருளால்** மிகவும் கொடுக்கப்பட்டபடி யால், ஊழ்வகையாலாகாரம் நேரிடாமல் பசித்து வருந்தும்படியாகவும் அந்தப்பசி யை நீக்குநிமித்தமொருவரையொருவ ரெதிர்பார்க்கும்படியாகவும், அவர்தயவினா லாகாரங்கொடுத்து அப்பசியைநீக்கி யவரை நன்முயற்சியிற் செலுத்தவும், ஆகா ரங்கொடுத்தவர் சித்திமுத்திகளடையவும், **அருள்** நியதியாக விதிக்கப்பட்டபடி யாலும், மனித தேகம் மற்றச்சீவதேகம்போல இலேசிலே எடுக்கக்கூடா தாதலா லும், மனித தேகத்தி லான்மவிளக்கமும் **அருள்** விளக்கமும் மிகவும் விளங்குதலா லும், இந்த மனித தேகம்போனால் மீளவு மிந்தத்தேகம் வருமென்கிற நிச்சயமில் லாமையாலும், இந்த மனித தேகம் முக்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாத லாலும், இந்த மனித தேக மாத்திரமே முதற்சிருட்டி தொடங்கிக் கடவுள் சம்ம தத்தால் சிருட்டிக்கப்பட்ட உயர்ந்த வறிவையுடைய தேகமாதலாலும், மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற சீவகாருணிய விதியைப் பொதுவில் அவசியமுறுதி யாகக் கைப்பிடிக்கவேண்டுமென்று கடவுள் விதித்திருக்கின்றபடியாலும்; பசியை யாகாரத்தினால் நிவர்த்தி செய்விக்கின்ற சீவகாருணியவொழுக்கம் மனிதர்களிடத் தே பெரும்பான்மை நடத்தவேண்டுமென் றறியவேண்டும்.

ஊழ்வகைக்குத்தக்கபடி மிருகம் பறவை முதலிய சீவர்களுக்கு **அருளால்**நிய தியாகாரமாத்திர மிருக்க, மனிதர்களுக்குமாத்திரம் ஊழ் நியதியாகாரத்தோடு ஆகாமிய முயற்சி யாகாரமும் வேண்டுவது அவசியமென்றது எப்படியெனில்—மனி தர்கள் பிராரத்தப்படி நியதி யாகாரத்தைப் புசித்துப் பிராரத்துவ அநுபவத்தை நீக்கிக்கொள்வதற்கு, ஆகாமியத்தால் முயற்சி யாகாரத்தைப் புசித்துக் கரணேந் திரிய தேகத்தை வலிவுள்ளதாகச் செய்துகொண்டு சன்மார்க்க சாதனத்தை யநு சரித்துச் சித்திமுத்தி இன்பங்களைப் பெறக்கடவரென்று **கடவுள்** விதித்திருக்கின் றபடியால், மனிதர்களுக்குப் பிராரத்த வாகாரமும் ஆகாமிய முயற்சியாகாரமும் அவசியம் வேண்டுமென்றறியவேண்டும். மிருகம், பட்சி, ஊர்வன, தாபரமென்கிற சீவதேகங்கள் தண்டனை நிமித்தம் விதித்த தேகங்களாதலால் பிராரத்த வாகாரம் **கடவுள்** விதித்தவண்ணம் **அருட்சத்தியால்** தடைபடாமல் கொடுக்கப்படும். ஆத லால் ஆகாமியவாகாரஞ் சம்பாதிக்கவேண்டாமென் றறியவேண்டும்.

ஆனால் சீவகாருணியம் எல்லாச்சீவர்களுக்கும் பொதுவென்று முதலில் குறிக்கப்பட்ட தென்னையெனில்—சீவகாருணிய வொழுக்கத்தில் முக்கியமாக எல்லா மனிதர்களுக்கும் பொதுவில் பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்து ஆகாரத்தினால் திருப்தியின்பத்தை யுண்டுபண்ணவேண்டுமென்றும்,பசியைப்போல் வேறு வகையினால் சீவகொலை நேரிடுவதானால் அந்தச் சீவகொலையைத் தம்மாற் கூடியமட்டில் எவ்விதத்திலாயினுந் தடைசெய்து உயிர்பெறுவித்துச் சந்தோஷிப் பிக்க வேண்டுமென்றும், பிணி பயமுதலிய மற்றவேதுக்களால் சீவர்களுக்குத் துன் பம்நேரிடில் அத்துன்பங்கள் தங்களால் நீக்கத்தக்கவைகளாகில் நீக்கவேண்டுமென் றும், மிருகம் பறவை ஊர்வன தாபரம் முதலிய சீவர்களிடத்துப் பயத்தினால்

வருந் துன்பத்தையுங் கொலையினால்வருந் துன்பத்தையும் எவ்விதத்தும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும், அவற்றுள் துட்டசீவர்களிடத்துச் சிறிது பயத்தினால்வருந் துன்பமாத்திரமேயல்லது கொலையினால்வருந் துன்பங்களைச் செய்யப்படாதென்றும், இவ்வகைமுழுதுஞ் சீவகாருணியமேயாதலால் எல்லா உயிர்களிடத்துஞ் சீவகாருணியம் வேண்டுமென்று **கடவுளால்** ஆணைசெய்ததென்றும் அறியவேண்டும்.

மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகச் சம்பாதிக்கின்ற உயிர்களில் சில உயிர்கள் தாமச வாகாரமாகிய மாமிச வாகாரஞ் செய்வதானால் அவைகளுக்குப் பசியாற்றுவிக்கும்போது அந்தவாகாரத்தைக் கொடுத்தாற்றுவிக்கப்படாதோ வென்னில்—ஒரு சீவனைக்கொன்று ஒருசீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் சீவகாருணியவொழுக்கமே யல்லவென்றும், **கடவுள் சம்மதமு**மல்லவென்றும், இவைக்கு முழுவிரோதமென்றும் அறியவேண்டும். எல்லாச்சீவர்களுக்கு மியற்கையுண்மையேகதேசங்களாகிக் **கடவுளியற்கைவிளக்கமாகிய அருளுக்கு** இடமாகவிருக்கின்றபடியாலும், **கடவுளியற்கை விளக்கம்** மறைபடும்போது சீவத்தன்மை யில்லாதபடியாலும், **கடவுளியற்கை விளக்கம்** ஒன்றோடொன்று மாறுபடா தாதலாலும், **கடவுளியற்கை விளக்கமுஞ்** சீவ வியற்கை விளக்கமும் அந்தந்தத் தேகங்களில் விளங்குகின்றபடியாலும், ஒரு சீவனை வதைத்து அதனால் மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுதல் சீவகாருணிய வொழுக்கத்திற்கு முழு விரோதமென்று மறியவேண்டும். புலி சிங்கம் முதலிய மிருகங்கள் மற்றொரு சீவனைக்கொன்று தின்று தாமச வாகாரத்தால் பசியாற்றித் திருப்தியின்பத்தை யடைந்து சந்தோஷிக்கின்றன. அந்தச் சந்தோஷம் **கடவுளியற்கை** விளக்க வேகதேசமுஞ் சீவ வியற்கை விளக்க நிறைவுமெனவுங் கொள்ளக்கூடாதோவென்னில்—கூடாது. தாமச வாகாரத்தால் பூரணசத்துவமாகிய **கடவுளியற்கை விளக்க**வேகதேசமும் ஏகதேச சத்துவமாகிய வான்மவியற்கை விளக்கமும் விளங்காது. இருளால் ஒளி விளங்காதது போல். இதைத் தாமசவாகாரமென்பது என்னவெனில்—**கடவுள் விளக்கம்** வெளிப்படாதபடி யான்மவிளக்கத்தை மறைத்த இம்சையாகாரமாதலால் தாமச வாகாரமாயிற்று. இந்த வாகாரத்தால் வந்த திருப்தியின்பமாகிய சந்தோஷ விளக்கம் எதனுடைய விளக்கமென்னில் அநாதி பசுகரண மாயாவிளக்கமென்றறியவேண்டும்.

பசுவென்பதென்னை? ஆணவம், மாயை, கன்மம் என்கிற மும்மல பந்தத்தாலொன்றுபட்டு அறிவிழந்த வான்மாவையே பசுவென்பது. அப்பசுவிற்கு விளக்கந் தோன்றுவது எப்படியென்னில்—சூரியனை மறைத்த மேகவண்ணத்திலுள்ள விருளினிடத்துஞ் சூரியப்பிரகாச விசேஷந்தோன்றுதலா லவ்விருளும் விளக்கமாக வழங்குகின்றது. அதுபோல், அசுத்தமாயாகாரணங்களுந் தாமசகுணமு மிருள்வண்ணமுடையவாயினும் தம்மால் மறைக்கப்பட்ட பரசீவ விளக்க விசேஷத்தால் அசுத்த மாயாகாரணமுந் தாமச குணமும் விளக்கமாக வழங்குகின்றன. இதனால் தாமச வாகாரத்தினால் வரும் விளக்கம் அசுத்த மாயாகாரண விளக்கமேயென்றறியவேண்டும். ஆனால் மரம் புல் நெல் முதலான தாபரங்களுமுயிராகவே கொல்லப்படுகின்றதே; அவைகளை இம்சைசெய்து ஆகாரமாகக்கொண்டால் அவை தாமச வாகாரமல்லவோ? அதனால் வந்த சந்தோஷம் அசுத்த மனோகரண சந்தோஷ மல்லவோ என்னில்—மரம் புல் நெல் முதலான தாபரங்களு முயிர்கள்தான்; அவைகளை இம்சைசெய்து ஆகாரங்கொண்டால் அது ஏகதேச தாமச வாகாரந்தான்; அந்த வாகாரத்தால் வந்த சந்தோஷமும் அசுத்தகரண சந்தோஷந்தான்; ஆனால் அப்படியல்ல. மரம் புல் நெல்முதலான சீவர்கள் பரிசமென்கின்ற ஓரறிவையுடைய சீவர்களாதலாலும், அவ்வுடம்பில் சீவவிளக்க மொருசார் விளங்குதலாலும், அவ்வுயிர்

கள் தோன்றும் வித்துக்களும் மற்ற வித்துக்கள்போல சடமாதலாலும், அவ்வித்துக்களை நாமே விதைத்து உயிர்விளைவு செய்யக்கூடுமாதலாலும், அவ்வுயிர்களை வேறு செய்யாமல் அவ்வுயிர்களினிடத்து உயிரில்லாம லுயிர்தோன்றுதற்கிடமான சடங்களாகத்தோன்றிய வித்துக்களையும் காய்களையுங் கனிகளையும் பூக்களையுங் கிழங்குகளையுந் தழைகளையும் ஆகாரங்களாகக் கொள்வதேயன்றி அவ்வுயிருள்ள முதல்களையாகாரமாகக் கொள்ளாதபடியாலும், அவைகளில் வித்து, காய், கனி முதலானவை கொள்ளும்போது சுக்கிலம் நகம் ரோமம் முதலியவைகளை வாங்கும்போது இம்சையுண்டாகாமைபோல் இம்சையுண்டாகாதபடியாலும், தாபரவர்க்கங்களுக்கு மனமுதலான அந்தக்கரணங்கள் விருத்தி யில்லாதபடியாலும், அது உயிர்க்கொலையுமல்ல, துன்பமுண்டுபண்ணுவதுமல்ல; அதனால் அது சீவகாருணியவிரோதமுமாகாது; அந்த வாகாரத்தால் வந்த சந்தோஷமுஞ் சீவ விளக்க சந்தோஷமுஞ் சீவவிளக்க சகிதமான **கடவுள் விளக்க**மேயாகுமென்றறியவேண்டும்.

மர முதலிய தாபரங்களில் தோன்றிய வித்துக்களை இனி உயிரேறுதற்கிடமாகிய சடங்களென்பது எப்படியென்னில்—வித்துக்களில் சீவனிருந்தால் நிலத்தில் விதையாமுன்னமே விளையவேண்டும்; நிலத்தில் விதைத்தகாலத்துஞ் சில வித்துக்கள் விளையாமலே யிருக்கின்றன; அன்றியும் வித்தென்பது காரணம்; இந்தக்காரணம் உடம்புதோன்றுதற்கேயென்று சிறுபிள்ளைகளாலும் அறியப்படும்;அன்றி,உயிர் நித்தியம், உடம்பு அநித்தியம்; நித்தியமான உயிர் காரணம்வேண்டாது; அநித்தியமாகிய உடம்பே காரணம் வேண்டும். ஆகலின் வித்துக்களை சடமென்றறியவேண்டும். ஆனல் வித்துக்களினிடத்து ஆன்மாக்கள் ஏறுவது எப்படி யென்னில்—நிலத்திற்கலந்த வித்திற்கு நீர்விடில் அந்த நீரின்வழியாகக் **கடவுள் அருள் நியதியின்படி** ஆன்மாக்கள் அணுத்தேகத்தோடு கூடி நிலத்திற்சென்று, அந்நிலத்தின் பக்குவ **சத்தியோடு** கலந்து, வித்துக்களினிடமாகச் செல்கின்றன வென்றறியவேண்டும். முளைகளையே பிடுங்கப்படாதென்று சிலர் சொல்லுகின்றார்கள்; வித்து, காய், இலை முதலியவைகளைப் புசிக்கலாமென்று சொல்வதெப்படியென்னில்—வித்து நிலத்திற்படிந்தபின் நீர்வழியாக வான்மாவானது சென்று, பக்குவ சத்தியிற்கலந்து, வித்திலேறி முளைத்தபடியால் முளையானது வித்து காய் முதலியவைகளைப் போலச் சடமல்ல; ஆதலால் முளைகளைப்பிடுங்கப்படாதென்பது உண்மையென்றறியவேண்டும்.

வித்து, காய், கனி முதலியவற்றி லுயிர்க்கொலையில்லாவிடினும், நகம் ரோமம் சுக்கிலம் முதலியவற்றிலிருக்கிற அசுத்தமாவதில்லையோ வென்னில்—சத்துவ விருத்தியுந் தாதுவிருத்தியுமில்லாதபடியால் அசுத்தமில்லை; ஆகலின் மரம், புல், நெல் முதலியவைகளின் வித்து காய் கனி தழை முதலியவற்றைப் புசிப்பது சீவகாருணிய விரோதமல்லவென்றறியவேண்டும். மாமிச ஆகாரம் புலி முதலாகிய துட்ட மிருகங்களுக்கு நியதியாகார மல்லவோ வென்றறியவேண்டில், அது அவ்வுயிர்களுக்குச் சிருட்டி நியதி ஆகாரமல்ல; பரம்பரைவழக்கத்தாற் பெற்றவாகாரமாமென்றறியவேண்டும்; ஆகலின், அதை நிவர்த்தி செய்வித்துச் சத்துவ வாகாரங்களைப் புசிப்பிக்கும்படி செய்யவுங்கூடும்; ஒரு சீலமுடையவன் கிருகத்தில் வழங்குகின்ற பூனைக்கும் நாய்க்கும் வேறிடங்களிற்போய் அசுத்த வாகாரங் கொள்ளாமல் காவல் செய்து அடிநாள்தொடங்கிச் சுத்தவாகார வழக்கமே செய்விக்கின்முன்; அவைகள் அவைகளைப்புசித்து உயிர்வழங்கிவருகின்றன; அப்படியே புலி சிங்கமுதலிய துட்டவர்க்கங்களையும் மேல்நின்று சுத்த வாகாரத்தில் பழக்குவாரில்லாமையால் அசுத்த ஆகாரங்களைப்பழக்கத்தாற் புசிக்கின்றன வென்றறியலாம். ஆகலின், ஒரு சீவ

ணக்கொன்று மற்றொருசீவனுக்குப்பசியாற்றுவித்தல் **கடவுள்** அருளுக்குச் சம்மதமுமல்ல சீவகாருணிய வொழுக்கமுமல்லவென்று சத்தியமாக வறியவேண்டும்.

இந்த சீவகாருணியமென்கின்ற சாதனத்தில் சாத்தியமாகின்ற வின்பம் அபர இன்பமென்றும், பரவின்பமென்றும் இருவகைப்படும். இச்சைமுதலிய வைகளைப்பற்றியுண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருமின்பம் அபரவின்பமாகும். அவை இம்மையிலனுபவிக்கின்ற வின்பங்களில் சிலவென்றறியவேண்டும். அவை யெவையென்னில்—உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும், இருப்பதற்கு இடமில்லாமலும், உழுவதற்கு நிலமில்லாமலும், பொருந்துவதற்கு மனைவியில்லாமலும், விரும்பியபடி செய்தற்குப் பொருள் முதலிய வேறு வேறு கருவிகளில்லாமலுந் துன்பப்படுகின்ற சீவர்கள் விஷயத்தில் சீவகாருணியந்தோன்றி, உடுப்பதற்கு வஸ்திரம், இருப்பதற்கு இடம், உழுவற்கு நிலம், பொருந்துவதற்குப் பெண், விரும்பியபடி செய்வதற்குப்பொருள்முதலானவை கொடுத்த போது, பெற்றுக்கொண்டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்பவிளக்கமும், அந்த வின்பத்தைக்கண்டு கொடுத்தவர்களுக் குண்டாகின்ற வின்பவிளக்கமும் **கடவுள்** கரணத்தில் ஏகதேசமுஞ் சீவகரணத்திற் பூரணமுமாகத்தோன்றுகின்றவை; ஆதலால் அபரவின்பமென்றறியவேண்டும். பசியினால் வருந்துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருமின்பம் பரவின்பமாகும்; அவை இம்மையில் போகசித்திகளாலும் யோகசித்திகளாலும் ஞானசித்திகளாலும் வருகின்ற இன்பங்களும் முடிவில் அநுபவிக்கப்படும் மோட்சவின்பமு மாகுமென்றறியவேண்டும்.

உண்பதற்கு ஆகாரமில்லாமல் சோர்வடைந்த சீவர்களுக்குச் சீவகாருணியத்தால் ஆகாரங்கொடுக்க உண்டு, பசி நீங்கிய தருணத்தி லந்தச்சீவர்களுக்கு அகத்தினிடத்தும் முகத்தினிடத்துந் தழைந்து பொங்கித் ததும்புகின்ற வின்பமும், அதுகண்டபோது கொடுத்தவர்களுக்கு அகத்திலும் முகத்திலும் அவ்வாறுண்டாகின்ற வின்பமும் ஆன்ம சகிதமாகிய கடவுள் கரணத்திற் பூரணமாகத்தோன்றுகின்றவை யாகலான் பரவின்பமென்றறியவேண்டும். வஸ்திரம் இடம் நிலம் பெண் பொருள் முதலானவைகளில்லாமல் துன்பப்படுகின்றவர்கள் அத்துன்பங்களை மனவெழுச்சியால் சகித்துக்கொண்டு, உயிர்தரித்துத் தங்களாற் செய்யக்கூடிய முயற்சியைச் செய்யக்கூடும்; பசியினால் துன்பம் நேரிட்டபோது மனவெழுச்சியா லத்துன்பத்தைச் சகித்துக்கொள்ளக்கூடாது; சகிக்கத்தொடங்கி லுயிரிழந்துவிடுவார்கள். பசிநேரிட்டபோது பெற்றவர்கள் பிள்ளைகளைவிற்றும், பிள்ளைகள் பெற்றவர்களை விற்றும், மனைவியைப் புருடன்விற்றும், புருடனை மனைவி விற்றும், அந்தப்பசியினால் வருந்துன்பத்தை மாற்றிக்கொள்ளத் துணிவார்களென்றால், அன்னியமாகிய வீடு மாடு நிலம் உடைமை முதலியவைகளைவிற்றுப் பசியை நீக்கிக் கொள்வார்களென்பது சொல்லவேண்டுவதில்லை. உலகமுழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தியாகிய அரசனும் பசி நேரிட்டபோது தனது அதிகார வுயர்ச்சி முழுதும் விட்டுத் தாழ்ந்த வார்த்தைகளாற் பசிநேரிட்டதே என்ன செய்வதென்று அருகிலிருக்கின்ற அமைச்சர்களிடத்துக் குறைசொல்லுகின்றான். பகைவராலெறியப்பட்டு மார்பிலுருவிய பாணத்தையுங் கையாற்பிடித்துக்கொண்டு, எதிரிட்ட பகைவரையெல்லாம் அஞ்சாது ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்தவீரரும், பசிநேரிட்டபோது சௌரியத்தை இழந்து, பசிக்கஞ்சிப் பக்கத்தினின்றவரைப் பார்த்து, இளைப்புவருமே சண்டை எப்படி செய்வது என்று முறையிடுகின்றார்கள்; இவ்வுலக போகங்களோடு இந்திரபோக முதலிய போகங்களையுந் துரும்பாக வெறுத்து முற்றுந்துறந்து, அறிவையறிந்து, அநுபவம் விளங்கியஞானிகளும்,

இந்திரியங்களை யடக்கி மனோலயஞ்செய்து உண்மை நிட்டையிலிருக்கின்ற யோகிகளும், இறந்தோரையுமெழுப்பத்தக்க வளவிறந்த மகத்துவங்கள் விளங்கிய சித்தர்களும் முனிவர்களும் தபசிகளும் பசிநேரிட்டபோது தங்கள் தங்கள் அநுபவ லட்சியங்களைவிட்டு, அடுத்த ஊரைநோக்கிப் பலிக்கு வருகின்றார்கள். பசி நேராதபோது நிலைகலங்குகின்றார்கள்; சொப்பனத்திலோர் இழிவு வரினும் அது குறித்து உயிர்விடத்தக்க மானிகளும், பசிநேரிட்டபோது சொல்லத்தகாதவரிடத்துஞ்சொல்லி மானங்குலைகின்றார்கள்; சாதிசமய வாசாரங்களி லழுத்தமுடைய ஆசாரியர்களும், பசிவந்தபோது ஆசாரத்தை மறந்து ஆகாரத்திற்கு எதிர்பார்க்கின்றார்கள். கல்வி கேள்விகளில் நிரம்பி, அறிதற்கரிய நுட்பங்களையறிந்து, செய்தற்கரிய செய்கைகளைச்செய்து முடிக்கவல்லவர்களும், பசிநேரிட்டபோது அறிவுங்கருத்து மழிந்து தடுமாறுகின்றார்கள்; இராப்பகல்தோன்றாது புணர்ச்சியின்பத்திற் பொங்குகின்ற காமிகளும், பசிநேரிட்டபோது புணர்ச்சியை மறந்து காமத்தைக்கசந்து கலங்குகின்றார்கள். நாமே பெரியர் நமக்குமேற் பெரியரில்லையென்று இறுமாப்படைகின்ற அகங்காரிகளும், பசிநேரிட்டபோது அகங்காரங் குலைந்து, ஆகாரங்கொடுப்பவரைப் பெரியவராகப்புகழ்கின்றார்கள்; ஒருவகைக் காரியங்களி லனேகவகைகளாக உபசரிக்கச் செய்கின்ற டம்பர்களும், பசிநேரிட்டபோது டம்பத்தையிழந்து மயங்குகின்றார்கள்; இவரிவர் இப்படி இப்படியானால், ஒருவகை யாதாரமுமில்லாத வேழைகள் பசிநேரிட்டபோது என்னபாடுபட்டார்கள். அந்தக் காலத்தில் அந்தவேழைகளுக்கு ஆகாரங்கிடைத்தால் எப்படிப்பட்ட சந்தோஷமுண்டாகும். அந்தச்சந்தோஷத்தைத் தோற்றுவித்தவர்களுக்கு எப்படிப்பட்ட லாபம் கிடைக்கும். இப்படிப்பட்டதென்று சொல்லுதற்கு அருமையென்றறிய வேண்டும்.

சீவர்களுக்குப் பசி யதிகரித்த காலத்தில் சீவ வறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது; அதுமயங்கவே யறிவுக்கறிவாகிய **கடவுள்** விளக்கம் மறைபடுகின்றது; அது மறையவே புருடதத்துவஞ்சோர்ந்து விடுகின்றது; அது சோரவே பிரகிருதி தத்துவம் மழுங்குகின்றது; அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன; மனம் தடுமாறிச் சிதறுகின்றது; புத்திகெடுகின்றது; சித்தம் கலங்குகின்றது; அகங்காரமழிகின்றது; பிராணன்சுழல்கின்றது; பூதங்களெல்லாம் புழுங்குகின்றன; வாத பித்த சிலேத்துமங்கள் நிலைமாறுகின்றன; கண்பஞ்சடைந்து குழிந்துபோகின்றது; காது கும்மென்று செவிடுபடுகின்றது; நா உலர்ந்து வறளுகின்றது; நாசி குழைந்து அழல்கின்றது; தோல் மெலிந்து ஸ்மரணைகெடுகின்றது; கை கால் சோர்ந்து துவளுகின்றன; வாக்குத்தொனிமாறிக் குளறுகின்றது; பற்கள்தளருகின்றன; மலசலவழி வெதும்புகின்றன; மேனி குறுகுகின்றது; ரோமம் வெறிக்கின்றது; நரம்புகள் குழைந்து நைகின்றன; நாடி கட்டுவிட்டுக் குறைகின்றன; எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்கு விடுகின்றன; இருதயம் வேகின்றது; மூளை சுருங்குகின்றது; சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது; ஈரல்கரைகின்றது; இரத்தமுஞ்சலமுஞ் சுவறுகின்றன; மாமிசம் குழைந்து தன்மைகெடுகின்றது; வயிறு பகீலென்றெரிகின்றது; தாபசோபங்கள் மேன்மேலுமுண்டாகின்றன; உயிரிழந்துவிடுவதற்கு மிகவுஞ்சமீபித்த அடையாளங்களும் அநுபவங்களுந்தோன்றுவது சீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே யிருக்கின்றன; இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங்கிடைத்தபோது உண்டு பசி நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாந் தழைத்து உள்ளங்குளிர்ந்து அறிவு விளங்கி, அகத்திலும் முகத்திலும் சீவகளையுங் **கடவுள் களையும்** துளும்பி, ஒப்பில்லாத திருப்தி யின்பமுண்டாகின்றது. இப்படிப்பட்ட இன்பத்தை உண்டுபண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப்புண்ணியத்தை இணையென்று சொல்லலாம். இந்தப்

புண்ணியத்தைச்செய்கின்ற புண்ணியர்களே எந்தத்தெய்வத்துக்குச்சரியென்றுசொல்லலாம். எல்லாத்தெய்வங்களுக்கும் மேலாகிய **கடவுளம்சமென்றே** சத்தியமாக அறியவேண்டும். இதனால் நரகவேதனை, சனனவேதனை, மரணவேதனை என்கின்ற மூன்றுவேதனைகளுங் கூடி முடிந்த வேதனையே பசிவேதனையென்றும், அகம் புறம் நடு கீழ் மேல் பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து, எக்காலத்தும் வேறுபடாத மோக்ஷவின்பமே யாகாரத்திலுண்டாகுந் திருப்தி யின்பமென்றும் அறியப்படும்.

பசியில்லாவிடில் சீவர்கள் ஆகாரங்குறித்து ஒருவரை யொருவர் எதிர்பார்க்கமாட்டார்கள்; எதிர்பாராதபக்ஷத்தில் உபகாரச்செய்கைதோன்றாது; அது தோன்றாதபோது சீவகாருண்ணியம் விளங்காது; அது விளங்காதபோது **கடவுளருள்** கிடைக்கமாட்டாது; ஆதலால் **கடவுளால்** கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக்கருவியென்றே அறியவேண்டும். பசியினால் துன்பப்படுகின்றவர்கள் ஆகாரத்தைக் கண்டகாலத்திலடைகின்ற சந்தோஷம் தாய் பிதா பெண்டு பிள்ளை காணி பூமி பொன் மணி முதலானவைகளைக் கண்டகாலத்திலு மடையார்களாயின், ஆகாரமுண்டகாலத்திலுண்டாகுஞ் சந்தோஷ மெப்படிப்பட்டதாக விருக்கும். ஆதலால் இந்த ஆகாரத்தின் சொரூப ரூபசுபாவங்களும் **கடவுளருளின்** ஏகதேச சொரூபரூபசுபாவங்களாகவே யறியவேண்டும். பசியென்ற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றியெரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருணியம். பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகளறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்திலாகாரங்கொடுத்து அவிக்காமலேற்றுகின்றதே சீவகாருணியம். **கடவுளியற்கை** விளக்கத்திற்கிடமாகிய சீவதேகங்களென்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந்தருணத்தில் ஆகாரங்கொடுத்து, அவ்வாலயங்களை விளக்கஞ்செய்விப்பதே சீவகாருணியம். **கடவுளின்பத்தைப்** பெறுகின்றநிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ்செய்கின்ற சீவரது தத்துவக்குடும்பமுழுதும், பசியினால்நிலைதடுமாறி யழியுந்தருணத்திலாகாரங்கொடுத்து, அக்குடும்பமுழுதும் நிலைபெறச்செய்வதே சீவகாருணியம். பசியென்கிற புலியானது ஏழையுயிர்களைப்பாய்ந்து கொல்லத்தொடங்குந் தருணத்தில் அப்புலியைக் கொன்று அவ்வுயிரை ரட்சிப்பதே சீவகாருணியம். பசியென்கிற விஷந்தலைக்கேறிச் சீவர்கள் மயங்குந் தருணத்தி லாகாரத்தா லவ்விஷத்தை யிறக்கி மயக்கந்தெளியச்செய்வதே சீவகாருணியம். பசியென்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற்புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக்கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தா லக்கடுப்பைமாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம். நேற்று இராப்பகல் முழுதும் நம்மை யரைப்பங்கு கொன்றுதின்ற பசியென்கிற பாபி இன்றும்வருமே! இதற்கு என்ன செய்வோமென்றேக்கங் கொள்கின்ற ஏழைச்சீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் சீவகாருணியம். வெயிலேறிப்போகின்றதே! இனிப்பசியென்கிற வேதனைவந்து சம்பவிக்குமே! இந்த விதிவசத்திற்கென்னசெய்வதென்று தேனில் விழுந்த ஈயைப்போலத் திகைக்கின்ற ஏழைச்சீவர்களுடைய திகைப்பைநீக்குவதுதான் சீவகாருணியம். இருட்டிப்போகின்றதே! இனி ஆகாரங்குறித்து எங்குபோவோம்? யாரைக்கேட்போம்? என்னசெய்வோமென்று விசாரத்திலழுந்திய ஏழைச்சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருணியம். நடந்து நடந்து காலுஞ்சோர்ந்தது; கேட்டுக்கேட்டு வாயுஞ்சோர்ந்தது; நினைத்துநினைத்து மனமுஞ்சோர்ந்தது; இனி இப்பாவி வயிற்றுக்கென்ன செய்வோமென்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங்கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருணியம். பகற்போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது; வேறிடங்களிற் போக வெட்கந்தடுக்கின்றது; வாய்திறந்துகேட்க மானம் வலிக்கின்றது; வயிறு எரிகின்றது; உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை; இவ்வுடம்பை என் எடுத்

தோமென்று, மனமுமுகமுஞ்சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாதசொற்பனங்கண்ட ஊமையைப்போல் மனமுருகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து மானத்தைக்காப்பதுவே சீவகாருணியம். நாம் முற்பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால் இப்பிறப்பில் நமது பசிக்குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை; இப்போது நமக்கிப்படி செய்வாருமில்லையென்று விவகரித்துக்கொண்டு தூக்கம்பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச்சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துத் துக்கத்தைநீக்கித் தூக்கம்பிடிக்க வைப்பதே சீவகாருணியம். தேகமுழுதும் நரம்புகள்தோன்றப் பசியினாலிளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை மூடியகாலத்து, அயலாரைக்கேட்கத் துணியாமற் **கடவுளை** நினைத்து நினைத்து நெருப்பிற் படுத்து நித்திரைசெய்யத் தொடங்குவாரைப்போல் அடி வயிற்றிற் கொடிய பசிநெருப்பைவைத்துப் படுக்கத்தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப் பசிநெருப்பை யாற்றுவதே சீவகாருணியம். நேற்றுப் பட்டினிகிடந்தது போல் இன்றும் பட்டினிகிடப்பது எப்படி? நாம் பாலியவசத்தால் இன்றும் பட்டினிகிடக்கத் துணிவோமாயினும் பட்டினி சகியாத நமது ஏழைமனைவி வயிற்றுக்கு யாதுசெய்வோம்? இவள் பசியைக்குறிப்பது பெரிதல்ல; வார்த்திப திசையால் மிகவுஞ்சோர்ந்த நமது தாய்தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்துவிடுவார்களே! இதற்கென்னசெய்வோம்? பசியினாலழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப்பார்ப்போம்? என்று எண்ணியெண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்டநெருப்பைப்போலப் பசிநெருப்பும் பயநெருப்பும் விசாரநெருப்புமுள்ளே மூண்டபடி யிருக்கக் கன்னப்புடையில் கைகளை வைத்துக்கொண்டு, கண்களில் நீர்கலங்கவருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங்கொடுத்து, வருத்தத்தை மாற்றுவதே சீவகாருணியம். கண் கை கால் முதலிய உறுப்புக்களிற் குறைவில்லாதவர்களாகி, ஆகாரஞ் சம்பாதிக்கத்தக்க சக்தியுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார்கள்! குருடும்செவிடும் ஊமையும் முடமுமாக விருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்தவழியாற் கிடைக்கும்? பசி எப்படி நீங்கும்? என்று தனித்தனி நினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங்கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சீவகாருணியம். பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத்தேசத்தாராயினும் எந்தச்சமயத்தாராயினும் எந்தச்சாதியாராயினும் எந்தச்செய்கையாராயினும் அவர்கள் தேசவொழுக்கம் சமய ஒழுக்கம் சாதி ஒழுக்கம் செய்கைஒழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் **கடவுள்** விளக்கம் பொதுவாய் விளங்குவதை யறிந்து பொதுவாகப்பார்த்து, அவரவர் ஒழுக்கத்திற்குத்தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்திசெய்விப்பதே சீவகாருணியம். சன்மார்க்கவொழுக்கத்திற்கு ஒத்த சத்துவ வாகாரத்தால் பசிநிவர்த்தி செய்துகொள்ளத்தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாபரம் என்கின்ற உயிர்களுக்கும் பசி வந்தபோது பசி நிவர்த்திசெய்விப்பதே சீவகாருணியம்.

பசியை நிவர்த்திசெய்துகொள்ளத்தக்க புவனபோக சுதந்தரங்களைப்பெறுதற்குரிய அறிவிருந்தும், பூர்வ கர்மத்தாலும் அஜாக்கிரதையாலும் அச்சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து, அந்தப்பசிவருத்தத்தை நீக்கித்திருப்தியின்பத்தை யுண்டுபண்ணுவதற்குக்காரணமாகிய சீவகாருணியமென்கிற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக்கதவைத் திறந்துகொண்டு உள்ளேபுகுந்து, எக்காலத்துமழியாதவின்பத்தை யனுபவித்து வாழவேண்டும். ஆகலின், சீவகாருணியமென்கின்ற மோட்சவீட்டுத் திறவுகோலைக்காலமுள்ளபோதே சம்பாதித்துக்கொண்ட சமுசாரிகள் சரியை,

கிரியை, யோகம், ஞானம் என்ற சாதனசகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்பவீட்டையடைந்து, அவ்வீட்டுக்கதவைத் திறந்துகொண்டு,உள்ளே புகுந்து, நித்தியமுத்தர்களாய் வாழ்வார்கள். புண்ணிய பூமிகளை வலஞ்செய்தல், புண்ணியதீர்த்தங்களிலாடல்,புண்ணியதலங்களில் வசித்தல்,புண்ணியமூர்த்திகளை த்தரிசித்தல், தோத்திரஞ்செய்தல், ஜபஞ்செய்தல், விரதஞ்செய்தல், யாகஞ் செய்தல்,பூசைசெய்தல் முதலிய சரியை கிரியைகளைச்செய்கின்ற விரதிகளும், பத்தர்களும், இருடிகளும் உணவைநீக்கி, உறக்கத்தைவிட்டு, விஷயச்சார்புகளைத் துறந்து, இந்திரியங்களையடக்கி, மனோலயஞ்செய்து யோகத்திலிருக்கின்ற யோகிகளும், அளவிறந்த சித்தியின்பங்களைப்பெற்ற சித்தர்களும், நித்தியாநித்தியங்களை யறிந்து எல்லாப்பற்றுக்களையுந் துறந்து பிரமாநுபவத்தைப்பெற்ற ஞானிகளும், சீவகாருணியமென்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானால், மோட்சமென்கிற மேல்வீட்டிற்கு முன்னும் பின்னுமாகவேறிச் சமீபத்திற் காத்திருந்து, மீளவுமத்திறவுகோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்களல்லது, கதவைத்திறந்துள்ளேபுகுந்து இன்பத்தையடைந்து வாழமாட்டார்களென்று உண்மையாக வறியவேண்டும். இதனாலறிவுவிளங்கிய சீவர்களுக்கெல்லாம் சீவகாருணியமே **கடவுள்** வழிபாடென்றறியவேண்டும்.

அன்றியும், சீவகாருணிய வொழுக்கத்தை யுடையவர்களாகி, அருந்தல் பொருந்தல் முதலிய பிரபஞ்ச போகங்களை யநுபவிக்கின்ற சமுசாரிகளெல்லாம் சர்வ சத்தியுடைய **கடவுள்அருளுக்கு** முழுதும் பாத்திரராவார்கள். சீவகாருணிய வொழுக்கமில்லாமல் ஞானம் யோகம் தவம் விரதம் செபம் தியானமுதலியவைகளைச் செய்கின்றவர்கள் **கடவுள்அருளுக்குச்** சிறிதும் பாத்திரராகார்கள். அவர்களையான்ம விளக்கமுள்ளவர்களாகவும் நினைக்கப்படாது. சீவகாருணியமில்லாது செய்யப்படுகிற செய்கைகளையெல்லாம் பிரயோசனமில்லாத மாயாசாலச் செய்கைகளே யாகுமென்றறியவேண்டும். எல்லாச் சீவர்களுங் **கடவுள்** இயற்கையுண்மை ஏகதேசங்களாதலாலும் அவரவரிடங்களிற் **கடவுள் அருள்விளக்கம்** விளங்குதலாலும், சமுசாரிகளுள் தமது தாய் தந்தை புணர்ந்தோர் மக்கள் துணைவர் முதலிய குடும்பமட்டில் பசியாற்றிக்கொள்ளத்தக்க அற்ப சக்தியுள்ள சமுசாரிகள், தாய் பிதா மக்கள் துணைவர் முதலிய குடும்பத்தாரைப் பசியினாற் பரதவிக்கவிட்டு, அயலார்க்குப் பசியாற்றத் தொடங்குதலும், தம்மிடத்துப் பசித்துவந்த அயலாரை அந்தப்பசியால் பரதவிக்கவிட்டுத் தங்குடும்பத்தார் பசியாற்றத் தொடங்குதலும், **கடவுளுக்குச்** சம்மதமல்ல. ஆதலால், தமது குடும்பச்செலவைக் கூடிய மட்டில் செட்டாய்ச்செய்து இருதிறத்தார் பசியும் நீக்குதல்வேண்டுமென்றும், அற்பசத்தியினுங் குறைவுபட்டு, தமது குடும்ப மட்டிலும் பசியாற்றுவிப்பதற்குப் பிரயாசையால் மிகச்சிறிய முயற்சியுடைய சமுசாரிகள், தமது குடும்பமட்டிலாவது பசியாற்றுவித்துக்கொண்டு,தம்மிடத்துப் பசித்துவந்த அயலார்விஷயத்தில் மிகவுந் தயவுடையவர்களாகி, அவர் பசியை மற்றொருவரைக்கொண்டாவது ஆற்றுவிப்பதற்குத்தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், இயல்புள்ள பிரபல சமுசாரிகள், தங்கள் தங்கள் வருவாய்க்குத் தக்கவளையில் தாய் பிதா புணர்ந்தோர் மக்கள் துணைவர் உறவினர் சிநேகர் அடியார்கள் பெரியோர்கள் அடிமைகள் அயலார் பகைவர் முதலியவர்களுக்கும், தமதுகுடும்பத்திற்குச் சகாயங்களாகத்தேடிய பசு எருது எருமை ஆடு குதிரை தாபரமுதலிய பிராணிகளுக்கும், பசியை ஆற்றுவித்துத் திருப்தியின்பத்தை யுண்டுபண்ணவேண்டுமென்றும், விவாகம் புத்திரப்பேறு தெய்வம்படைத்தல் முதலிய பலவகைச்செய்கைகளில், வேறுவேறு சடங்குகளும், வேறு வேறு பெருமைப்பாடுகளுங்குறித்துப் பொருட்செலவு செய்தலை

யமைத்து, விவாகமுதலிய அந்தந்தச் செய்கைகளிலும், பசித்த சீவர்களுக்குப் பசியை யாற்றுவித்து இன்பத்தை உண்டுபண்ணுகின்ற சிறப்பினையே செய்ய வேண்டுமென்றும், அப்படிச்செய்யில் பசித்தவர் பசிநீங்கி யடைந்த இன்பத்திலும் அனேக மடங்கதிகமான இன்பத்தைத் தாம் அடைவார்களென்றும் சத்தியமாக அறியவேண்டும்.

சமுசாரிகள் விவாகமுதலிய விசேஷ காரியங்களில் பந்தலை யலங்கரித்தும், அவ்விடத்தில் வேறு வேறு சடங்குகளைச் செய்வித்தும், ஆடல்பாடல் வரிசை ஊர்க்கோலம் முதலிய விநோதங்களையும், அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளையும் நடத்தி, எக்களிப்பிலழுந்தி யிருக்குந்தருணத்தில், பசித்த ஏழைகள் முகத்தைப்பார்க்கவுஞ் சம்மதிக்கவில்லை; இப்படிப்பட்ட சந்தோஷ காலத்தில் தமக்காயினுந் தமது மக்கள் துணைவர் முதலியோர்க்காயினும் ஒவ்வோர் ஆபத்து நேரிடுகின்றது. அப்போது அவ்வளவு சந்தோஷத்தையும் இழந்து துக்கப்படுகின்றார்கள். இப்படி துக்கப்படும்போது அலங்காரஞ்செய்த பந்தலும், சங்கற்ப விகற்பமான சடங்குகளும்,ஆடல்பாடல் வாத்தியம் வரிசை ஊர்க்கோலம் முதலிய விநோதங்களும், அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளும் அந்த ஆபத்தைத்தடைசெய்யக்கண்டதில்லை. அந்தச் சுபகாரியத்திலுள்ள படியே பசித்த ஜீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துப் பசியை நீக்கி, அவர்கள் அகத்திலும் முகத்திலும் கடவுள் விளக்கத்தையும் கடவுளின்பத்தையும் வெளிப்படச் செய்திருந்தார்களானால், அந்த விளக்கமும் இன்பமும் அத்தருணத்தில் நேரிட்ட ஆபத்தைநீக்கி விளக்கத்தையு மின்பத்தையுஞ் சத்தியமாக உண்டுபண்ணுமல்லவா?

ஆகலின் விவாகமுதலிய விசேஷச்செய்கைகளிலும் தங்கள் தங்கள் தரத்திற்கொத்தபடி பசித்தவர்களது பசியை யாற்றுவித்துத் திருப்தி யின்பத்தை யுண்டுபண்ணுவது முக்கியமென்றறியவேண்டும். சூலை, குன்மம், குஷ்டம் முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்கொத்தபடி பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அநுசரித்தார்களானால் அந்தச் சீவகாருணிய அநுசரிப்பே நல்ல மருந்தாக அந்த வியாதிகளை நிவர்த்திசெய்து, விசேஷ சௌக்கியத்தை யுண்டுபண்ணுமென்பது உண்மை. பலநாள் சந்ததியில்லாமல் பற்பல விரதங்களைச்செய்து வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள்தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளது பசியை யாற்றுவிப்பதே விரதமாக அநுசரிப்பார்களானால் அந்தச்சீவகாருணிய அநுசரிப்பு நல்லறிவுள்ள சந்ததியை உண்டுபண்ணுமென்பது உண்மை. அற்ப வயதென்று குறிப்பினாலறிந்துகொண்டு இறந்துபோவதற்கஞ்சி விசாரப்படுகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத்தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியை யாற்றுவிப்பதே விரதமாக அநுசரிப்பார்களானால் அந்தச் சீவகாருணிய அநுசரிப்பு தீர்க்காயுளை உண்டுபண்ணும் என்பது உண்மை.

கல்வி, அறிவு, செல்வம், போகம் முதலியவைகளைக்குறித்து வருந்துகின்ற சமுசாரிகள், தங்கள் தரத்திற்குத்தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால் அந்தச்சீவகாருணிய அநுசரிப்பு கல்வி அறிவு செல்வம் போகம் முதலானவைகளை உண்டுபண்ணு மென்பது உண்மை. பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாகக்கொண்ட சீவகாருணியமுள்ள சமுசாரிகளுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது; மண்ணுஞ் சூடு செய்யாது; பெருமழை, பெருங்காற்று,பெரும்பனி, பேரிடி,பெருநெருப்பு முதலிய உற்பாதங்களுந் துன்பஞ் செய்விக்கமாட்டா; விசேிகை, விஷக்காற்று, விஷசுரம்முதலிய அசாத்தியப்பிணிகளு முண்டாகா; அந்தச் சீவகாருணியமுள்ள சமுசாரிகள் ஆற்று வெள்ளத்தாலும் கள்ளர்களாலும் விரோதிகளாலுங் கலக்கப்படார்கள்; அரசர்க

ளாலும் அவமதிக்கப்படார்கள்; ஜீவகாருணியமுள்ள சமுசாரிகளது விளைநிலத்தில் பிரயாசையில்லாமலே விளைவு மேன்மேலுமுண்டாகும்; வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும் உத்தியோகத்தில் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும். சுற்றங்களாலும் அடிமைகளாலுஞ்சூழப்படுவார்கள்; துஷ்டமிருகங்களாலுந் துஷ்டஜந்துக்களாலுந் துஷ்டபசாசுகளாலுந் துஷ்டதெய்வங்களாலும் பயஞ்செய்யப்படார்கள்; ஜீவகாருணியமுள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துகளும் அஜாக்கிரதையினாலும் ஊழ்வகையினாலுஞ் சத்தியமாக வாரா; பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை யுண்டுபண்ணுகின்ற ஜீவகாருணிய வொழுக்கமாகிய மேலான விரதமானது தேவர்கள், மனிதர்கள், பிரமசாரிகள், சமுசாரிகள், தபசிகள், சந்நியாசிகள், ஆண்சாதியர், பெண்சாதியர், வார்த்திகர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியஞ் செய்யத்தக்கதென்பது **கடவுளாணை** யென்றறியவேண்டும். பசித்தவர்களுப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப்பெண்சாதி தடுத்தாலும், பெண்சாதியைப் புருஷன் தடுத்தாலும், பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும், தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும், சீஷரை ஆசாரியர் தடுத்தாலும், அடியாரை ஆண்டவன் தடுத்தாலும், குடிகளை அரசன் தடுத்தாலும், அந்தத்தடைகளால் சிறிதுந் தடைபடாமல் அவரவர் செய்த நன்மை தீமைகள் அவரவரைச் சேருமல்லது வேறிடத்திற் போகாதென்பதை யுண்மையாக நம்பிச் ஜீவகாருணிய வொழுக்கத்தை நடத்தவேண்டுமென்று மறியவேண்டும். உள்ளபடி பசியால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங்கொடுக்க நினைத்தபோது, நினைத்தபுண்ணியரது மனசுவேறு பற்றுக்களைவிட்டுச் சுத்தக்கரணமாகி நினைத்தபடியால் அந்தப்புண்ணியர்களை யோகிகளென்றே உண்மையாக அறியவேண்டும். ஆகாரங்கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது அவருண்ணுவது தாமுண்ணுவதாக அறிந்து களிக்கின்றபடியால் ஞானிகளென்றே உண்மையாக அறியவேண்டும். ஆகாரங்கொடுக்க உண்டு பசிதீர்ந்தவர்களுக்கு அத்தருணத்தில் ஆன்மாவின் உள்ளும்புறமும், கீழும்மேலும், நடுவும்பக்கமும், நிறைந்து கரண முதலிய தத்துவங்களெல்லாங் குளிர்வித்துத் தேகமுழுதுஞ் சில்லென்று தழைய முகத்தினிடமாகப் பூரித்து விளங்குகின்ற **கடவுள்** விளக்கத்தையும் திருப்தியின்பமாகிய **கடவுள்** இன்பத்தையும் பிரத்தியட்சத்தில் தெரிசித்து அநுபவிக்கின்றார்களாதலால் அந்தப்புண்ணியர்கள் **கடவுளைக்** கண்டவர்களென்றும் **கடவுளின்பத்**தை யனுபவிக்கின்ற முத்தரென்று மறியவேண்டும். பசிநீங்க உண்டு சந்தோஷித்தவர்கள் இந்தப் புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக்கின்றார்களாதலால் இவர்களே தெய்வமுமென்று உண்மையாக அறியவேண்டும்.

ஜீவகாருணிய வொழுக்கமுடையவர்களாகிச் ஜீவர்களைப் பசியென்கிற அபாயத்தினின்றும் நீங்கச்செய்கின்ற உத்தமர்கள் எந்தச்சாதியாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச்செய்கையுடையவராயினும், தேவர் முனிவர் சித்தர் யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையராவார்களென்று சர்வ சக்தியுடைய **கடவுள்** சாட்சியாகச் சத்தியஞ்செய்வோமென்றறியவேண்டும்.

இன்னும் இந்தச் ஜீவகாருணிய ஒழுக்கத்தின் விரிவைச் சமரச வேதத்திற் கண்டுகொள்ளலாம்.

## ஜீவகாருணிய ஒழுக்கம் முற்றிற்று.

**திருச்சிற்றம்பலம்.**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# திருவருட்பா.

## (முதற்றிருமுறை.)

# திருவடிப்புகழ்ச்சி.

### நூற்றிருபத்தெட்டடியான் மிகுத்துவந்த கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

பரசிவஞ் சின்மயம் பூரணஞ் சிவயோக பாக்கியம் பரமநிதியம்
பரசுகந் தன்மயஞ் சச்சிதா னந்தமெய்ப் பரமவே காந்தநிலயம்
பரமஞா னம்பரம சத்துவம கத்துவம் பரமகை வல்யநிமலம்
பரமதத் துவநிரதி சயநிட்க ளம்பூத பௌதிகா தாரநிபுணம்
பவபந்த நிக்ரக விநோத சகளஞ்சிற் பரம்பரா னந்தசொரூபம்
பரிசயா தீதஞ்சு யஞ்சதோ தயம்வரம் பரமார்த்த முக்தமௌனம்
படனவே தாந்தாந்த மாகமாந் தாந்தநிரு பாதிகம் பரமசாந்தம்
பரநாத தத்துவாந் தஞ்சகச தரிசனம் பகிரங்க மந்தரங்கம்
பரவியோ மம்பரம ஜோதிமயம் விபுலம் பரம்பர மனந்தமசலம்
பரமலோ காதிக்க நித்தியசாம் பிராச்சியம் பரபதம் பரமசூக்ஷமம்
பராபர மநாமய நிராதர மகோசரம் பரமதந் திரம்விசித்திரம்
பராமுத நிராகரம் விகாசனம் விகோடணம் பரசுகோ தயமக்ஷயம்
பரிபவ விமோசனங் குணரகிதம் விசுவம்ப தித்துவ பரோபரீணம்
பஞ்சகிர்த் தியசுத்த கர்த்தத்து வந்தற்ப ரஞ்சிதம் பரவிலாசம்
பகர்சுபா வம்புனித மதுலமது விதமம்ப ராம்பர நிராலம்பனம்
பரவுசா க்ஷத்கார நிரவயவங் கற்பனாதீத நிருவிகாரம்
பரதுரிய வநுபவங் குருதுரிய பதமம் பகம்பகா தீதவிமலம்
பரமுகரு ணம்பரந் தற்பதங் கனசொற் பதாதீத மின்பவடிவம்
* பரோக்ஷஞா னாதீத † மபரோக்ஷ ஞானானு பவவிலாசப் பிரகாசம்
பாவனா தீதங்கு ணாதீத முபசாந்த பதமகா மௌனரூபம்

---

* பரோக்ஷஞானம்:—குருவினால் உபதேசிக்கப்பட்ட "சத்தியம் ஞானமநந்தம் ப்ரமம்" என்கின்ற சுருதிவாக்கியத்தால் ப்ரம்மமென்றொருவஸ்து உண்டென்று தெரிந்துகொள்வது.

† அபரோக்ஷஞானம்:—"தத்துவமஸி" மகாவாக்கியத்தை அநுசரித்து ப்ரம்ம விசாரணை செய்து சகல சந்தேகங்களையும் போக்கடித்துக்கொண்டு ஸ்வானுபவத்தை அடைந்து நிஷ்டையிலிருப்பது.

பரமபோ தம்போத ரகிதசகி தஞ்சம்ப வாதீத மப்பிரமேயம்
பகரனந் தானந்த மமலமுசி தஞ்சிற்ப தஞ்சதா னந்தசாரம்
பரையாதி கிரணங்க சாங்கசௌ பாங்கவிம் பாகார நிருவிகற்பம்
பரசுகா ரம்பம்ப ரம்பிரம வித்தம்ப ரானந்த புரணபோகம்
பரிமிதா தீதம்ப ரோதயம் பரகிதம் பரபரீணம் பராந்தம்
பரமாற்பு தம்பரம சேதனம் பசுபாச பாவனம் பரமமோக்ஷம்
பரமாணு குணநவா தீதஞ்சி தாகாச பாஸ்கரம் பரமபோகம்
பரிபாக வேதன வரோதயா னந்தபத பாலனம் பரமயோகம்
பரமசாத் தியவதீ தானந்த போக்கியம் பரிகதம் பரிவேத்தியம்
பரகேவ லாத்விதா னந்தானு பவசத்த பாதாக்ர சுத்தபலிதம்
பரமசுத் தாத்விதா னந்தவனு பூதிகம் பரிபூத சிற்குணாந்தம்
பரமசித் தாந்தநிக மாந்தசம ரசசுத்த பரமானு பவவிலாசம். (வ)

## (அரும்பத உரை.)

1. பரசிவம் - மேலான சிவம். (சிவம் = சுபத்தைத்தருகின்ற பொருள்) சின்மயம் - ஞானஉருவம். பூரணம் - நிறைவு. சிவபோகபாக்கியம் - சிவானுபவமாகியசெல்வம். பரமநிதியம் - மேலானநிக்ஷேபம். பரசுகம் - மேலான இன்பம். தன்மயம் - பரசொரூபம். சச்சிதானந்தம் - சத்து சித்து ஆனந்தம். (சத்து - என்றும் உள்ள பொருள், சித்து - அதன் ஒளிய, கியஞானம், ஆனந்தம் - இன்பம்).

பரம ஏகாந்த நிலயம் - மேலானதனியிடம். பரமஞானம் - மேலான அறிவு. பரமசத்துவம் - மேலான சத்துவகுணம். மகத்துவம் - பெருமை. பரமகைவல்லிய நிமலம் - மேலான கைவல்லியமாகிய பரிசுத்தவஸ்து. பரமதத்துவம் - மேலான உண்மைப் பொருள். நிரதிசயம் - தனக்குமேல் ஒன்றில்லாதது. நிட்களம் - உருவில்லாதது. பூதபௌதிக ஆதார நிபூணம் - பஞ்சபூதங்களாலாகிய பௌதிகங்களுக்கு ஆதாரமாய் இருக்கிற மேலானபொருள். பவபந்த நிக்கிரக விநோத சகளம் - பிறவிக்கட்டை அறுத்தலாகிய விளையாட்டையுடைய திருவுருவம். சிற்பரம் - ஞானவடிவாகிய மேலானபொருள். பரானந்த சொரூபம் - மேலான இன்ப வடிவம். பரிசயாதீதம் - அறிதற்கரியது. சுயம் - தானுயுள்ளது. சதோதயம் - என்றும் ஒளி உருவாய் இருப்பது. வரம் - மேலானது. பரமார்த்தம் - மேலானபொருள். முக்தம் - பற்றற்றிருப்பது. மௌனம் - பேச்சற்றிருப்பது. படநம் - படித்தல். வேதாந்தாந்தம் - வேதாந்த நூன்முடிபு. ஆகமாந்தாந்தம் - ஆகம நூன்முடிபு. நிருபாதிகம் - உபாதியற்றது. பரமசாந்தம் - மேலான சாந்தவஸ்து. பரநாத தத்துவாந்தம் - மேலான நாத தத்துவத்தின் முடிபு. சகசதரிசனம் இயற்கையாகிய சேவை. பகிரங்கம் - வெளி. அந்தரங்கம் - உள். பரவியோமம் - மேலான ஆகாயம். பரமசோதிமயம் - மேலானஒளியுருவம், விபுலம் - விஸ்தீரணம். பரம்பரம் - மேன்மையின் மேன்மை. அனந்தம் - முடிவில்லது. அசலம் - அசைவில்லது. பரமலோகாதிக்கம் - மேலான லோகங்களுக்கெல்லாம் மேலான பொருள். நித்திய சாம்ராஜ்ஜியம் - அழிவற்ற செல்வம். பரபதம் - மேலான இடம். பரம சூட்சுமம் - மிகு நுண்மை. பராபரம் - மேன்மையின் மேன்மை. அநாமயம் - நோயில்லது. நிராதரம் - ஆதாரமில்லது. அகோசரம் - அறியப்படாதது. பரமதந்திரம் - மேலானஉபாயம். விசித்திரம் - ஆச்சரியகரம். பராமுதம் - மேலான அமிர்தம், நிராகரம் - ஆகாரமில்லது. விகாசனம் - ஒளியுள்ளது. விகோடணம் - ஒலிக்குப்பிறப்பிடமாயுள்ளது, பரசுகோதயம் - மேலானஇன்பத்துக்குப்பிறப்பிடம். அட்சயம் - குறையாதது. பரிபவவிமோசனம் - துன்பநீக்கமுள்ளது. குணரகிதம் - குணமற்றது. விசுவம்பதித்துவபரோபரீணம் - உலகத்திற்கு தலைமையாதலாகிய மேன்மையைத்தாங்கியிருப்பது, (தோற்றக்கேடில்லாதது.) பஞ்சகிருத்திய சுத்தகர்த்தத்துவம் - ஐந்தொழில்களை நடத்துதலாகிய பரிசுத்தமான தொழிலையுடையது. தற்பரம் - அந்தப்பரம்பொருள். சிதம்பரவிலாசம் - ஞானகாயத்தில் விளையாடுவது. பகர்சுபாவம் - சொல்லப்பட்டஇயற்கைவடிவம், புனிதம் - பரிசுத்தம், அதுலம் - நிறையில்லது. அதுலிதம் - ஒப்பில்லது. அம்பராம்பரம் - ஆகா

யத்தின் ஆகாயம். நிராலம்பனம் - பற்றுக்கோடில்லது. பரவு சாட்சாத்காரம்-யாவராலும் துதிக்கப்படுகின்ற பிரத்தியட்ச வடிவம், நிரவயவம்-உறுப்பில்லது. கற்பனாதீதம் - கற்பனைக்கெட்டாதது. நிருவிகாரம்-வேறுபாடற்றது. பரதுரிய அனுபவம்-மேலான துரிய அனுபவமாயுள்ளது. குருதுரியபதம் - குருதுரியபதமாயுள்ளது. அம்பகம்-கண்ணுக்குப் புலப்படுவது. அம்பகாதீதம் - கண்ணுக்குப் புலப்படாதது. விமலம் - பரிசுத்தமானது, பரமகருணாம்பரம் - மேலான அருளாகாயமாயிருப்பது, தற்பதம் - தற்பதமாயிருப்பது. கனசொற்பதாதீதம் - மேன்மையாகிய புகழையுடைய இடங்களுக்கெட்டாதது. இன்பவடிவம் - சுகரூபம். பரோக்ஷஞானாதீதம் - பரோக்ஷஞானத்திற்கு எட்டாதது. அபரோக்ஷஞானானுபவ விலாசபிரகாசம்-அபரோக்ஷஞானானுபவமாகிய இடத்தில் பிரகாசிப்பது. பாவனாதீதம் - நினைப்புக்கெட்டாதது. குணாதீதம் - குணங்களுக்கெட்டாதது. உபசாந்தம் - உபசாந்தபதமாயிருப்பது. (உபசாந்தம், பதம் - விசிராந்தியாகிய இடம்.) மகாமௌனரூபம் - பெரிய மௌனவடிவம். பரமபோதம் - மேலானஞானரூபம். போத ரகித சகிதம்-அறிவுஅணுகாமையோடு கூடினது. சம்பவாதீதம் - கிட்டுதற்கரியது. அப்பிரமேயம் - அளவிடப்படாதது. பகர் அநந்தானந்தம்-சொல்லப்பட்ட முடிவற்ற இன்பம். அமலம் - மலநீக்கமுள்ளது. உசிதம் - சிறந்தது. சிற்பதம் - ஞானபதமாயுள்ளது. சதாநந்த சாரம் - எப்பொழுதும் இன்ப வடிவாயுள்ள சாரமான பொருள். பரையாதிகிரணங்க சாங்க சௌபாங்க விம்பாகார நிருவிகற்பம் - பரைமுதலிய கிரணங்களாகிய உறுப்புக்களோடு கூடின மங்களவடிவத்தின் பிரதிபிம்ப ரூபமாகிய வேறுபாடற்றவஸ்து. (நிருவிகற்பம் - வேறுபாடற்றது). பரசுகாரம்பம் - மேலான இன்பத்தொடக்கம். பிரமவித்தம்-பிரமமாகிய பொருள். பரானந்த புரணபோகம் - மேலான இன்பத்தைத்தருகின்றநினைப்பின்விளைவு. பரிமிதாதீதம்-அளவுக்கெட்டாதது. பரோதயம் - மேலான ஒளியுள்ளது. பரகிதம் - மேலான நன்மையைத்தருவது. பரபரிணம் - மேலான தாங்கு நிலையுடையது. பராந்தம் - மேலானமுடிவுள்ளது. பரமாற்புதம் - மேலான ஆச்சரியகரமாயுள்ளது. பரமசேதனம் - மேலான அறிவுருவமாயிருப்பது. பசுபாசபாவனம் - பசுக்களது பாசத்தை நீக்குவது. (பசு - ஜீவர்கள்.) பரமமோட்சம் - மேலானமுத்தி. பரமானுகுணநலாதீதம் - மேலானகுண நன்மைகளுக்கு எட்டாதது. சிதாகாச பாஸ்கரம் - ஞானாகாயத்தினுள்ள சூரியகிரணம். பரமபோகம் - மேலானஇன்பவிளைவு. பரிபாக வேதன வரோதயானந்த பதபாலனம் - பக்குவமாகிய முயற்சி மிகுதியால் உண்டாகின்ற இன்ப பதத்தை ஆளுவது. பரமயோகம் - மேலான யோகரூபமாயுள்ளது. பரமசாத்திய அதீதானந்த போக்கியம் - மேலான கைவசப்படுதற் கெட்டாத இன்பவிளைவு. பரிகதம் - அறிவுருவாயிருப்பது. பரிவேத்தியம் - மிகுதியாய் அறியத்தக்கது. பரகேவலாத்விதானந்தானுபவ சத்தபாதாக்ர சுத்த பலிதம் - மேலான கேவல அத்துவிதானந்த அனுபவ சுத்தபாத முடிவுக்குப் பலிக்கப்படும் பொருள். பரம சுத்தாத்விதானந்த அனுபூதிகம் - மேலான சுத்த அத்துவிதானந்த அனுபவ ரூபமாயுள்ளது. பரிபூத சிற்குணாந்தம் - மிகுந்த பரிசுத்தமான ஞானகுணத்தின் முடிவாயுள்ளது. பரம சித்தாந்த நிகமாந்த சமரச சுத்த பரமானுபவவிலாசம் - மேலான சித்தாந்த வேதாந்த சமரச சுத்தமான பரமானுபவமாகிய திருவிளையாட்டுள்ளது. (வ)

தரமிகுஞ் சர்வசா திட்டான சத்தியஞ் சர்வவா னந்தபோகம்
சாந்தசர் வாதார சர்வமங் களசர்வ சத்திதர மென் றளவிலாச்
சகுணநிர்க் குணமுறு சலட்சண விலட்சணத் தன்மைபல வாகநாடித்
தம்மைநிகர் மறையெலா மின்னுமள விடநின்ற சங்கர னநாதியாதி
சாமகீ தப்பிரியன் மணிகண்ட சீகண்ட சசிகண்ட சாமகண்ட
சயசய வெனுந்தொண்ட ரிதயமலர் மேவிய சடாமகுடன் மதனதகனன்
சந்திரசே கரனிடப வாகனன் கங்கா தரன்சூல பாணியிறைவன்
தனிமுத லுமாபதி புராந்தகன் பசுபதி சயம்புமா தேவனமலன்
தாண்டவன் றலைமாலை பூண்டவன் றெழுமன்பர் தங்களுக் கருளாண்டவன்
தன்னிகரில் சித்தெலாம் வல்லவன் வடதிசைச் சைலமெனு மொருவில்லவன்
தக்ஷணா மூர்த்தியருண் மூர்த்திபுண் ணியமூர்த்தி தகுமட்ட மூர்த்தியானோன்

தலைமைபெறு கணநாய கன்குழக னழகன் மெய்ச் சாமிநந் தேவதேவன்
சம்புவே தண்டன் பிறப்பிலான் முடிவிலான் றாணுமுக் கண்களுடையான்
சதுரன் கடாசல வுரிப்போர்வை யான்செந் தழற்கரத் தேந்திநின்றோன்
சர்வகா ரணன்விறற் காலகாலன் சர்வ சம்பிரமன் சர்வேச்சுரன்
தகைமைகொள்பர மேச்சுரன் சிவபிரா னெம்பிரான் றம்பிரான் செம்பொற்
தகவுபெறு நிட்பேத நிட்கம்ப மாம்பரா சத்திவடி வாம்பொற்பதம் [பதம்
தக்கநிட் காடின்ய சம்வேத நாங்கசிற் சத்திவடி வாம்பொற்பதம்
சாற்றரிய விச்சைஞா னங்கிரியை யென்னுமுச் சத்திவடி வாம்பொற்பதம்
தடையிலா நிர்விடய சிற்குண சிவானந்த சத்திவடி வாம்பொற்பதம்
தகுவிந்தை மோகினியை மானையசை விக்குமொரு சத்திவடி வாம்பொற்பதம்
தாழ்விலீ சானமுதன் மூர்த்திவரை யைஞ்சத்தி தஞ்சத்தி யாம்பொற்பதம்
சவிகற்ப நிருவிகற் பம்பெறு மனந்தமா சத்திசத்தாம் பொற்பதம்
தடநிருப வவிவர்த்த சாமர்த்தி யதிருவருட்சத்தியுரு வாம்பொற்பதம்
தவாதசாந் தப்பதந் துவாதசாந் தப்பதந் தருமிணை மலர்ப்பூம்பதம்
சகலர்விஞ் ஞானகலர் பிரளயா கலரிதய சாக்ஷியா கியபூம்பதம்
தணிவிலா வணுபக்ஷ சம்புபக்ஷங்களிற் சமரச முறும்பூம்பதம்
தருபரஞ்சுக்குமந் தூலமிவை நிலவிய தமக்குளாயி ராம்பூம்பதம்
சரவசர வபரிமித விவிதவான் மப்பகுதி தாங்குந் திருப்பூம்பதம்
தண்டபிண் டாண்டவகி லாண்டபிர மாண்டந் தடிக்கவரு ளும்பூம்பதம்
தத்வதாத் விகசகசி ருட்டிதிதி சங்கார சகலகர்த் துருபூம்பதம்
சகசமல விருளகல நின்மலசு யம்ப்ரகா சங்குலவு நற்பூம்பதம். (௭)

## (அரும்பத உரை.)

தரமிகுஞ் சர்வசாதிட்டான சத்தியம் - பகுப்புக்கள் மிகுந்த எல்லாப் பொருள்களுள்ளும் வியாபித்திருக்கிற மெய்ப்பொருள். சர்வ ஆனந்தபோகம் - முழு இன்பமாகிய விளைவு. சர்வாதாரம் - எல்லாப்பொருளுக்கும் ஆதாரமாயுள்ளது. சர்வமங்களம் - எல்லாச்சுபங்களுக்கும் ஆதாரமாயுள்ளது. சர்வ சக்திதரம் - எல்லாம்வல்லதன்மை. சகுணம் - குணத்தோடுகூடினது. நிர்க்குணம் - குணமில்லது. சலட்சணம் - லக்ஷணத்தோடுகூடினது. விலட்சணம்-லக்ஷணத்தோடுகூடாதது. சங்கரன் - சுகத்தைச்செய்பவன். அனாதி - முதலில்லது. ஆதி - எல்லாப்பொருட்கும் முதற்பொருளாயுள்ளது. சாமகீதப்பிரியன் - சாமகீதத்தில் விருப்பமுள்ளவன். மணிகண்டன் - நீலமணிபோலும் கண்டத்தையுடையவன். சீகண்டன் - காளகூடவிஷத்தையமைத்துக்கொண்டதனால் உண்டான நீலநிறமுள்ள கண்டத்தையுடையவன். சசிகண்டன் - சந்திரகண்டத்தையுடையவன். சாமகண்டன் - நீலநிறத்தையுடைய கழுத்தையுடையவன். (சாமம் - பச்சைநிறமுமாம்.) சடாமகுடன் - சடைமுடியை யுடையவன். மதனதகனன் - மன்மதனையெரித்தவன். சந்திரசேகரன் - சந்திரகலையைத்தரித்த திருமுடியை யுடையவன். கங்காதரன் - கங்கையைத்தரித்தவன். சூலபாணி - சூலத்தையேந்திய கையை யுடையவன். உமாபதி - உமாதேவிக்குநாயகன். புராந்தகன்-முப்புரங்களையழித்தவன். பசுபதி - உயிர்களுக்குத் தலைவன். சுயம்பு - தானேயுண்டானவன். வடதிசைச்சயிலம் - வடதிசையிலுள்ள மலை (மேருமலையாகிய). வில்லவன் - வில்லையுடையவன். தக்ஷிணாமூர்த்தி-கல்லாலினிழலில் தென்முகமாயிருந்து சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வர்க்கு அருள்செய்த உருவத்தையுடையவன். அருள்மூர்த்தி - அருளுருவாயிருப்பவன். புண்ணியமூர்த்தி - புண்ணிய உருவமாயிருப்பவன். அட்டமூர்த்தி - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுவடிவங்களையுடையவன். கணநாயகன் - பூதகணங்களுக்குத் தலைவன், குழகன் - கட்டழகுள்ளவன். சம்பு - சுகத்தையுண்டாக்குவோன். வேதண்டன் - கைலைமலையையுடையவன். தாணு - அசைவில்லாதவன். சதுரன் - சமர்த்தன். கடாசலம் -

மத மலை (யானை), உரி - தோல், சர்வகாரணன்-எல்லாப்பொருள்களுக்கும் மூலமாயுள்ளவன். காலகாலன் - யமனுக்கு யமனானவன், சர்வசம்பிரமன் - எல்லாச்சம்பிரமங்களையு முடைய வன். சர்வேச்சுரன் - எல்லார்க்குந்தலைவன். பதம் - திருவடி. நிட்பேதம் - வேற்றுமையில் லது. நிட்கம்பம் - அசைவில்லது. நிட்காடின்னியம் - கடினமின்மை சம்வேதனம்—பூர்ண ஞானம், சத்தி - ஞானசத்தி, நிர்விடயம் - விடயமின்மை. சிற்குணம் - ஞானகுணம், சிவா னந்தசக்தி வடிவு - சிவானந்தசக்திரூபம், விந்தை, மோகினி, மான் - தத்துவவிசேடங்கள். அசைவித்தல் - இயங்குவித்தல், ஈசானம் - சிவபிரானது ஐந்துமுகங்களில் ஒன்று, ஐஞ்சத்தி - பஞ்சசத்தி. சவிகற்பம் - வேறுபாட்டோடு கூடினது. நிருவிகற்பம் - வேறுபா டில்லாதது. அவிவர்த்தம் - திரிபில்லது. தவாத - கெடாத. துவாதசாந்தம் - பன்னிரண்டா மவத்தை, சகலர், மெய்ஞ்ஞானகலர், பிரளயாகலர் - மூவகையான்மாக்கள். அணுபட் சம் - ஆன்மாக்கள் தாமே பக்குவப்பட்டடைவது. சம்புபட்சம் - இறைவனால் பக்குவப் படுத்தப்பட்டடைவது. சரம் - இயங்கியற்பொருள். அசரம்-நிலையியற்பொருள். அபரிமிதம் - அளவுகடந்தது. விவிதம் - நானாவிதம். தத்துவம் - பிருதுவி முதலிய தத்துவங்கள். தாத் விகம் - தத்துவங்களாலாயது. சுயம்பிரகாசம் - தானேபிரகாசிக்கும்பொருள். (௯)

**மா**புறு மதாதீத வெளிநடுவி லானந்த மாநடன மிடும்பதம்
மன்னும்வினை யொப்புமல பரிபாகம் வாய்க்கமா மாயையை மிதிக்கும்பதம்
மலிபிறவி மறவியி னழுந்துமுயிர் தமையருளின் மருவுற வெடுக்கும்பதம்
வளரூர்த்த வீரதாண் டவமுதற் பஞ்சக மகிழ்ந்திட வியற்றும்பதம்
வல்லமுய லகன்மீதி லூன்றிய திருப்பதம் வளந்தரத் தூக்கும்பதம்
வல்வினையெ லாந்தவிர்த் தழியாத சுத்தநிலை வாய்த்திட வழங்கும்பதம்
மறைதுதிக் கும்பத மறைச்சிலம் பொளிர்பத மறைப்பாது கைச்செம்பதம்
மறைமுடி மணிப்பத மறைக்குமெட் டாப்பத மறைப்பரி யுகைக்கும்பதம்
மறையவ னுளங்கொண்ட பதமமித கோடியா மறையவர் சிரஞ்சூழ்பதம்
மறையவன் சிரசிகாமணியெனும் பதமலர்கொண் மறையவன்வாழ்த்தும்பதம்
மறையவன் செயவுலக மாக்கின்ற வதிகார வாழ்வைமீந் தருளும்பதம்
மறையவன் கனவினுங் காணாத பதமந்த மறையவன் பரவும்பதம்
மால்விடை யிவர்ந்திடு மலர்ப்பதந் தெய்வநெடு மாலருச் சிக்கும்பதம்
மால்பரவி நாடொறும் வணங்குபத மிக்கதிரு மால்விழியி லங்கும்பதம்
மாறேட நின்றபத மோரனந் தங்கோடி மாறலை யலங்கற்பதம்
மான்முடிப் பதநெடிய மாலுளப் பதமந்த மாலுமறி வரிதாம்பதம்
மால்கொளவ தாரங்கள் பத்தினும் வழிபட்டு வாய்மைபெற நிற்கும்பதம்
மாலுலகு காக்கின்ற வண்மைபெற் றடிமையின் வதிந்திட வளிக்கும்பதம்
வரையுறு முருத்திரர்கள் புகழ்பதம் பலகோடி வயவுருத் திரர்சூழ்பதம்
வாய்ந்திடுமுருத்திரற்கியல்கொண்முத்தொழில்செய்யும் வண்மைதந்தருளும்பதம்
வானவிந் திராதி யெண்டிசைக் காவலர்கண் மாதவத் திறனும்பதம்
மதியிரவி யாதிசுர ரசுரரந் தரர்வான வாசிகள் வழுத்தும்பதம்
மணியுரகர் கருடர்காந் தருவர்விஞ் சையர்சித்தர் மாமுனிவ ரேத்தும்பதம்
மாநிருதர் பைசாசர் கிம்புருடர் யக்ஷர்கள் மதித்துவர மேற்கும்பதம்
மன்னுகின் னரர்பூதர் வித்தியா தரர்போகர் மற்றையர்கள் பற்றும்பதம்
வண்மைபெறு நந்திமுதல் சிவகணத் தலைவர்கண் மனக்கோயில் வாழும்பதம்
மாதேவியெங்கண்மலைமங்கையென்னம்மைமென்மலர்க்கையால்வருடும்பதம்
மறலியை யுதைத்தருள் கழற்பத மரக்கனை மலைக்கீ ழடர்க்கும்பதம்
வஞ்சமறு நெஞ்சினிடை யெஞ்சலற விஞ்சுதிறன் மஞ்சுற விளங்கும்பதம்
வீந்தனைசெய் புந்தியர் தந்துயர் தவிர்ந்திடவுண் டிந்தணை விற்றும்பதம்

மாறிலொரு மாறனுள மீறின்மகிழ்வீறியிட மாறிநட மாடும்பதம்
மறக்கருணை யுந்தனி யறக்கருணை யுந்தந்து வாழ்விக்கு மொண்மைப்பதம்(௬)

## (அரும்பத உரை.)

மதாதீதவெளி - மதங்களுக்கெட்டாத ஆகாயம். வினையொப்பு - இருவினையொப்பு. மலபரிபாகம் - மலபரிபக்குவம், ஊர்த்தவீரதாண்டவம் - ஊர்த்தநடனம், வீரநடனம். பாதுகை - திருவடிநிலை (பாதகுறடு). உகைத்தல் - செலுத்துதல், மறையவன் - பிரமன், அமிதம் - அளவற்றது. சிகாமணி - சூடாமணி, பரவும் - வணங்குகின்ற, இவர்தல் - ஏறுதல், வாய்மை - உண்மைநிலை. மதி - சந்திரன், இரவி - சூரியன், வருடுதல் - தடவுதல், மறலி - யமன், அரக்கன் - இராவணன் மஞ்சு - அழகு, மந்தணம்-இரகசியம், மாறன்-பாண்டியன், வீறுதல் - அதிகரித்தல், மாறிநடமாடுதல் - கான்மாறிநடனஞ்செய்தல், மறக்கருணை - கோபக்கருணை. அறக்கருணை - தருமக்கருணை. (௬)

இரவுறும் பகலடிய ரிருமருங் கினுமுறுவ ரெனவயங் கியசீர்பதம்
எம்பந்த மறவெமது சம்பந்த வள்ளன்மொழி யியன்மண மணக்கும்பதம்
ஈவாச ரெம்முடைய நாவரசர் சொற்பதிக விசைபரி மளிக்கும்பதம்
ஒவலார் புகழெமது நாவலா ரூரர்புக லிசைதிருப் பாட்டுப்பதம்
ஏதவூர் தங்காத வாதவூ ரெங்கோவி னின்சொன்மணி யணியும்பதம்
எல்லூரு மணிமாட நல்லூரி னப்பர்முடி யிடைவைகி யருண்மென்பதம்
எடுமேலெ னத்தொண்டர் முடிமேன் மறுத்திடவு மிடைவலிந் தேறும்பதம்
எழில்பரவை யிசையவா ரூர்மறுகி னருள்கொண்டி ராமுழுது முலவும்பதம்
இன்றொண்டர் பசியறக் கச்சூரின் மனைதொறு மிரக்கநடை கொள்ளும்பதம்
இளைப்புற லறிந்தன்பர் பொதிசோ றருந்தமு னிருந்துபி னடக்கும்பதம்
எறிவிறகு விற்கவளர் கூடற் றெருத்தொறு மியங்கிய விரக்கப்பதம்
இறுவைகை யங்கரையின் மண்டபப் பல்கா லெழுந்துவிளை யாடும்பதம்
எங்கேமெய் யன்பருள ரங்கே நலந்தர வெழுந்தருளும் வண்மைப்பதம்
எவ்வண்ணம் வேண்டினு மவ்வண்ண மன்றே யிரங்கியீந் தருளும்பதம்
என்போன்ற வர்க்குமிகு பொன்போன்ற கருணைதந் திதயத் திருக்கும்பதம்
என்னுயிரை யன்னபத மென்னுயிர்க் குயிரா யிலங்குசெம் பதுமப்பதம்
என்னறிவெ னும்பதமெ னறிவினுக் கறிவா யிருந்தசெங் கமலப்பதம்
என்னன்பெ னும்பதமெ னன்பிற்கு வித்தா யிசைந்தகோ கனகப்பதம்
என்றவ மெனும்பதமென் மெய்த்தவப் பயனா யியைந்தசெஞ் சலசப்பதம்
என்னிருகண் மணியான பதமென்கண் மணிகளுக் கினியநல்விருந்தாம்பதம்
என்செல்வ மாம்பதமென் மெய்ச்செல்வ வருவாயெனுந்தாமரைப்பொற்பதம்
என்பெரிய வாழ்வான பதமென்க ளிப்பா மிரும்பதமெ னிதியாம்பதம்
என்றந்தை தாயெனு மிணைப்பதமெ னுறவா மியற்பதமெ னட்பாம்பதம்
என்குருவெ னும்பதமெ னிட்டதெய்வப்பத மெனதுகுல தெய்வப்பதம்
என்பொறிக ளுக்கெலாநல்விடயமாம்பதமெனெழுமையும்விடாப்பொற்பதம்
என்குறையெலாந்தவிர்த்தாட்கொண்டபதமெனக்கெய்ப்பில்வைப்பாகும் பத
எல்லார்க்குநல்லபதமெல்லாஞ்செய்வல்லபதமிணையிலாத்துணையாம்பதம் [ம்
எழுமன முடைந்துடைந் துருகிநெகிழ் பத்தர்கட் கின்னமுத மாகும்பதம்
எண்ணுறிற் பாலினறு நெய்யொடு சருக்கரை யிசைந்தென வினிக்கும்பதம்
ஏற்றமுக் கனிபாகு கன்னல்கற் கண்டுதே னென்னமது ரிக்கும்பதம்
எங்கள்பத மெங்கள்பத மென்றுசம யத்தேவ ரிசைவழக் கிடுநற்பதம்
ஈறிலாப் பதமெலாந் தருதிருப் பதமழிவி லின்புதவு கின்றபதமே. (௧)

## அரும்பத உரை.

இருமருங்கினும் - இரண்டுபக்கத்தினும். உறுவர் - முனிவர். வயங்கிய - விளங்கிய. பந்தம் - பிறவிக்கட்டு. ஈவரசர் - கொடைவேந்தர். நாவரசர் - வாகீசர் (அப்பர்சுவாமிகள்) ஏவலார் - அஸ்திரவித்தையில் வல்லார் (அரசர்கள்). நாவலாரூரர் - சுந்தரமூர்த்திசுவாமிகள். ஏதம் - குற்றம். வாதவூரெங்கோ - மாணிக்கவாசகசுவாமிகள். சொல்மணி - திருவாசகம். எல் - சூரியன், தொண்டர் - சுந்தரமூர்த்திசுவாமிகள். பரவை - பரவைநாச்சியார். மறுகு - வீதி, கச்சூர் - திருக்கச்சூர் (ஒருதிருப்பதி.) பொதிசோறு - கட்டமுது. இறுவைகை யங்கரை - உடைபட்ட அழகியவைகைநதியின்கரை. கோகனகம் - தாமரைமலர். சலசம் - தாமரை. வருவாய் - வருமானம். பெரியவாழ்வு - பெருஞ்செல்வம், நிதி - நிக்ஷேபம். (புதையல்). பொறிகள் - இந்திரியங்கள். விடயம் - புலன்கள், எழுமை - ஏழ்பிறவி. எய்ப்பில்வைப்பு - இளைத்தகாலத்தில் உதவும்தனம் துணை - சகாயம். மூக்கனி - மூவகைக் கனிகள். (அவை வாழைக்கனி பலாக்கனி மாங்கனி) பாகு - சர்க்கரைப்பாகு. கன்னல் - சர்க்கரை. மதுரிக்கும் - இனிக்கின்ற. சமயத்தோர் - சமயக்கடவுளர். ஈறு - முடிவு. இன்பு - இன்பம், உதவுகின்ற - கொடுக்கின்ற. (௧)

திருச்சிற்றம்பலம்.

## திருவடிப்புகழ்ச்சி அரும்பத உரை முற்றிற்று.

---

## தத்துவங்கள் தொண்ணூற்றாறின் விபரம்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். என பூதங்கள் ... ... ... 5
வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம். என கர்மேந்திரியங்கள் ... 5
வசனம், கமனம், விசர்ஜனம், ஆனந்தம். என கர்மேந்திரிய விஷயங்கள் 5
துவக்கு, சக்ஷு, சுரோத்திரம், ஜிஹ்வை, ஆக்கிராணம். என ஞானேந்திரியங்கள் 5
சப்த, ஸ்பர்ச, ரூப, ரச, கந்தம். என தன்மாத்திரைகள் ... ... ... 5
மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம். என அந்தக்கரணம் ... 5

இடை=வலதுகால் பெருவிரலிலிருந்து இடது நாசிவரைக்கு மிருப்பது. பிங்கலை=இடதுகால் பெருவிரலிலிருந்து வலது நாசி வரைக்குமிருப்பது. சுழுமுனை=எல்லாநாடிகளுக்கும் ஆதாரமாய் மூலாதாரத்திலிருந்து நடு நாடியாய் சிரசுவரைக்கு மிருப்பது. கண்டம்=தண்ணீர் சோறு முதலானவைகளை உண்ணுகின்றவிழுங்கச் செய்வது. அக்ஷிகன்=வலது கண்ணிலிருப்பது. காந்தாரி=இடது கண்ணிலிருப்பது. அத்தி=வலது காதிலிருப்பது. அலம்புடை=இடது காதிலிருப்பது. சங்கினி=உபஸ்தத்தி லிருப்பது. குகு=அபானத்திலிருப்பது. } நாடிகள்=10

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன். என வாயுக்கள் 5
நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன், தநஞ்சயன். என உப வாயுக்கள் 5
அமராச்ரயம், விபஜாச்ரயம், ஜலாச்ரயம், மலாச்ரயம், சுக்கிலாச்ரயம். என ஆச்சிரயங்கள். 5
அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆநந்தமயம். என கோசங்கள் ... ... ... ... ... 5
மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தம், ஆக்ஞேயம். என ஆதாரங்கள் ... ... ... ... 6
வாத, பித்த, சிலேஷ்மம். என தோஷங்கள் ... ... ... 3
தாரேஷணை, புத்திரேஷணை, வித்தேஷணை. என ஈஷணாத்திரயங்கள் ... 3
ஸாத்விகம், ராஜஸம், தாமஸம். என குணங்கள் ... ... 3
இராக, த்வேஷ, காம, குரோத, லோப, மோக, மத, மாத்சர்ய, டம்ப, தர்ப ஈர்ஷை, அசூயை, அகங்கார, மமகாரங்கள், என துர்க்குணங்கள் 14
நல்வினை, தீவினை. என வினைகள் இரண்டு. ... ... ... 2
ஜாக்ரத், சுவப்ந, சுழுப்தி, துரியம், துரியாதீதம். என அவஸ்தைகள் ... 5

ஆக 96

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# விண்ணப்பக்கலிவெண்பா.

## காப்பு.

### நேரிசைவெண்பா.

அவ்வவ்விடைவந்தகற்றியருடரலா
லெவ்வெவ்விடையூறு மெய்தலிலந்-தெவ்வர்தமைக்
கன்றுமதமாமுகமுங் கண்மூன்றுங்கொண்டிருந்த
தொன்றது நம்முள்ள முறைந்து.

### பதவுரை.

தெவ்வர்தமை - பகைவரை, கன்றும் - கோபிக்கின்ற, மத மா முகமும் - மதத்தையுடைய யானை முகத்தையும், கண் மூன்றும் - மூன்று கண்களையும், கொண்டு இருந்தது - கொண்டிருந்ததாகிய, ஒன்று - ஒருபொருளுண்டு, அது - அப்பொருள், நம் உள்ளம் உறைந்து - எமது மனத்தில் தங்கி, அவ்வவ்விடைவந்து - அந்த அந்த இடங்களில் எழுந்தருளி, அகற்றி - நீக்கி, அருள்தரலால் - அருள் செய்தலால், எவ்வெவ் இடையூறும் - எந்த எந்த இடையூறுகளையும், எய்தல் இலம் - (யாம்) அடைதல் இலம். எ-று.

### விரிவுரை.

அவ்வவ்விடை என்பதில் இடை இடப்பொருளது. இடையூறு - துன்பம், தடை எனினுமாம்; தெவ்வர்தமை என்பதில் தம் சாரியை. கன்றுதல் - கோபித்தல் என்னும் பொருளதாயினும் இவ்விடத்து அழித்தல் என்னும் பொருளது. தெவ் - பகை; தெவ்வர் என்றது கயாசுரன் முதலியவர்களை. சிவபெருமானுர்க்குப்போல விநாயகர்க்கும் மூன்று கண்கள் உண்மையால் " கண் மூன்றுங் கொண்டிருந்தது " என்றூர்.

திருச்சிற்றம்பலம்.

சொற்பெறு மெய்ஞ்ஞானச் சுயஞ்சோதியாந் தில்லைச்
சிற்சபையில் வாழ்தலைமைத் தெய்வமே - நற்சிவையாந் (க)
தர்யினு லகனைத்துந் தாங்குந் திருப்புலியூர்க்
கோயி லமர்ந்த குணக்குன்றமே - மாயமிகும் (உ)
வாட்களமுற் ருங்குவிழி மாதர்மய லற்றவர்சூழ்
வேட்களமுற் ரேங்கும் விழுப்பொருளே - வாழ்க்கைமனை (ங)
நல்வாய லெங்குநவ மணிக்குன்ரேங்கு திரு
நெல்வாயி னின்ருெளிரு நீளொளியே - செல்வாய்த் (ச)
தெழிப்பாலை வேலைத்திரை யொலிபோலார்க்குங்
கழிப்பாலை யின்பக் களிப்பே - விழிப்பாலன் (ரு)
கல்லூர்ப் பெருமணத்தைக் கட்டுரைக்கச் சோதிதரு
நல்லூர்ப் பெருமணம்வாழ் நன்னிலையே - சொல்லுந் (சு)
தயேந்திர ருள்ளத்தடம்போ லிலங்கு
மயேந்திரப் பள்ளியின்ப வாழ்வே - கயேந்திரனைக் (எ)

காயலுறு தன்றுவந்து கர்த்தோன் புகழ்முல்லை
வாயிலி னோங்குமணி விளக்கே - மேய (அ)
பலிக்காவூர் தோறும் பதஞ்சேப்பச் சென்று
கலிக்காமூர் மேவுங் கரும்பே - வலிக்காவில் (கூ)
பாய்க் காடுகின்ற வொருபச்சை முகில்பாவுஞ்
சாய்க்காடு மேவுந் தடங்கடலே - வாய்க்கமையச் (க0)
சொல்ல வனீச்சரங்கு தோயவும்ப ராம்பெருமைப்
பல்லவ னீச்சரத் தெம்பாவனமே - நல்லவர்கள் (கக)
கண்காட்டு நெற்றிக்கடவுளே யென்றுதொழ
வெண்காட்டின் மேவுகின்ற மெய்ப்பொருளே - தண்காட்டிக் (கஉ)
கார்காட்டித் தையலர்தங் கண்காட்டிச் சோலைகள்சூழ்
சீர்காட்டுப் பள்ளிச் சிவக்கொழுந்தே - பார்காட் (கங)
உருகாவூ ரெல்லா மொளிநயக்க வோங்கும்
குருகாவூர் வெள்ளடை யெங்கோவே - யருகாத (கச)
கார்காழி னெஞ்சக் கவுணியர்க்குப் போதமருள்
சீர்காழி ஞானத் திரவியமே - யோர்காழிப் (கரு)
பாலற்கா வன்றுபசும் பொற்குளங் கொடுத்த
கோலக்கா மேவுங் கொடையாளா - கோலக்கா (கசு)
உள்ளிருக்கும் புள்ளிருக்கு மோதும் புகழ்வாய்ந்த
புள்ளிருக்கும் வேளூர்ப் புரிசடையாய் - கள்ளிருக்குங் (கஎ)
காவின் மருவுங் கனமுந்திசை மணக்குங்
கோவின் மருவுகண்ணூர் கோயிலாய் - மாவின் (கஅ)
இடைமுடியின் நீங்கனியென் றெல்லின் முசுத்தாவுங்
கடைமுடியின் மேவுங்கருத்தா - கொடைமுடியா (ககூ)
நன்றியூ ரென்றிந்த ஞாலமெலாம் வாழ்த்துகின்ற
நின்றியூர் மேவுநிலை மையனே - யொன்றிக் (உ0)
கருப்புன்கூ ருள்ளக் கயவர் நயவாத்
திருப்புன் கூர்மேவுஞ் சிவனே - யுருப்பொலிந்தே (உக)
ஈடேரிலா துயர்ந்த வேதுவினா லோங்குதிரு
நீடூ ரிலங்கு நிழற்றருவே - பீடுகொண்டு (உஉ)
மன்னியூ ரெல்லாம் வணங்கவளங் கொண்ட
வன்னியூர் மேவு மதிபதியே - மன்னர்சுக (உங)
வாழ்விக் குடிகளடி மண்பூசலா லென்னும்
வேழ்விக்குடி யமர்ந்த வித்தகனே - சூழ்வுற்றோர் (உச)
விண் ணெதிர்கொண் டிந்திரன்போன் மேவிநெடுநாள்வாழப்
பண்ணெதிர் கொள்பாடிப் பரம்பொருளே - நண்ணு (உரு)
வணஞ்சே ரிறைவன் மகிழ்ந்து வணங்கு
மணஞ்சேரி நீங்கா மகிழ்வே - மணஞ்சேர்ந்து (உசு)
வார்ட்ட கொங்கை மலையாளொடுங் கொறுக்கை
வீரட்ட மேவும் வியனிறைவே - யோரட்ட (உஎ)
திக்குங் கதிர்நாட்டிச் சீர்கொடிருத் தொண்டருள
மொக்குங் கருப்பறிய லூரரசே - மிக்கதிரு (உஅ)

மாவளருஞ் செந்தா மரைவளருஞ் செய்குரக்குக்
காவளரு மின்பக்கன சுகமே - தாவுமயில் (உகூ)

காழ்கொளிரு மனத்துக் காரிருணீத் தோர்மருவும்
வாழ்கொளி புத்தூர் மணிச்சுடரே - தாழ்வகற்ற (ருO)

நண்ணிப் படிக்கரையர் நாடோறும் வாழ்த்துகின்ற
மண்ணிப்படிக் கரைவாழ் மங்கலமே - விண்ணினிடை (ருக)

வாமாம் புலியூர் மலர்ச்சோலை சூழ்ந்திலங்கு
மோமாம் புலியூர்வா ழுத்தமனே - நேமார்ந்த (ருஉ)

வானாட்டு முள்ளூர் மருவுகின்றோர் போற்றுதிருக்
கானாட்டு முள்ளூர்க் கலைக்கடலே - மேனாட்டுந் (ருங)

தேரையூர் செங்கதிர்போற் செம்மணிக ணின்றிலங்கு
நாரையூர் மேவு நடுநிலையே - பாரில் (ருச)

உடம்பூர் பவத்தை யொழித்தருளு மேன்மைக்
கடம்பூர்வா ழென்னிரண்டு கண்ணே - தடம்பொழிற் (ருரு)

கொந்தணவுங் கார்குழலார் கோலமயில் போலுலவும்
பந்தண நல்லூர்ப் பசுபதியே - கந்தமலர் (ருசா)

அஞ்சனூர் செய்ததவத் தாலப்பெயர் கொண்ட
கஞ்சனூர் வாழுமென் றன் கண்மணியே - யஞ்சுகங்கள் (ருஎ)

நாடிக்கா வுள்ளே நமச்சிவாயம் புகலும்
கோடிக்கா மேவுங் குளிர்மதியே - யோடிக் (ருஅ)

கருமங்கலக் குடியிற் காண்டுமென வோதுந்
திருமங்கலக் குடியிற் றேனே - தரும (ருகூ)

மனந் தாண்மலரை மருவுவிப் போர்வாழும்
பனந்தாளிற் றாலுகந்த பாகே - தினந்தாளிற் (சாO)

சூழ்திருவாய்ப் பாடியங்கு சூழ்கினுமா மென்றுலகர்
வாழ்திருவாப் பாடியின்ப வாரிதியே - யேழ்புவிக்குள் (சாக)

வாய்ஞ்ஞலூ ரீதே மருவவென வானவர்சேர்
சேய்ஞ்ஞலூ ரின்பச்செழுங் கனியே - வாஞ்சையுறும் (சாஉ)

சீவன்குடியுற விச்சீர்நக ரொன்றே யெனுஞ்சீர்த்
தேவன் குடிமகிழ்ந்த தெள்ளமுதே - யோவின் (சாங)

மயலூர் மனம்போல் வயலிற் கயலூர்
வியலூர் சிவானந்த வெற்பே - யயலாம்பன் (சாச)

மட்டையூர் வண்டினங்கள் வாய்ந்து விருந்துகொளுங்
கொட்டையூ ருட்கிளருங் கோமளமே - யிட்டமுடன் (சாரு)

என்னம்ப ரென்னம்ப ரென்றயன்மால் வாதுகொள்
ளின்னம்பர் மேவிநின்ற வென்னுறவே - முன்னம்பு (சாசா)

மாற்கும் புறம்பியலா வாய்மையருள் செய்யவுள
மேற்கும் புறம்பியம்வா ழென்னுயிரே - மாற்கருவின் (சாஎ)

கண்விசைய மங்கைக் கனிபோற் பெறத்தொண்ட
ரெண்விசைய மங்கையில்வா ழென்குருவே - மண்ணுலகில் (சாஅ)

வைகாவூர் நம்பொருட்டான் வைகியதென் றன்பர்தொழும்
வைகாவூர் மேவியவென் வாழ்முதலே - யுய்யும்வகைக் (சாகூ)

காத்தும் படைத்துங் கலைத்துநிற்போர் நாடோறு
மேத்துங் குரங்காட்டி னென்னணியே - மாத்தழைத்த (ரு0)
வுண்பழனத் தின்குவிவெண் வாயிற்றேன் வாக்கியிட
வுண்பழனத் தென்ற னுயிர்க்குயிரே - பண்பகன்ற (ருக)
வெய்யாற்றி னின்றவரை மெய்யாற்றி னேற்றுதிரு
வையாற்றின் மேவிய வென்னுதரவே - பொய்யாற்றி (ருஉ)
மெய்த்தான நின்றோர் வெளித்தான மேவுதிரு
நெய்த்தானத் துள்ளமர்ந்த நித்தியமே - மைத்த (ருங)
கரும்புலியூர்க் காலையொடுங் கண்ணோட்டங் கொள்ளும்
பெரும்புலியூர் வாழ்கருணைப் பேறே - விரும்பிநிதம் (ருச)
பொன்னுங் கௌத்துவமும் பூண்டோன் புகழ்ந்தருளை
மன்னு மழபாடி வச்சிரமே - துன்னுகின்ற (ருரு)
நாய்க்குங் கடையே னவைதீர நற்கருணை
வாய்க்கும் பழுவூர் மரகதமே - தேய்க்களங்கில் (ருசு)
வானூர் மதிபோன் மணியாற் குமுதமலர்
கானூ ருயர்தங்கக் கட்டியே - நானூறு (ருஎ)
கோலந் துறைகொண்ட கோவையருள் கோவைமகி
ழாலந் துறையி னணிமுத்தே - நீலங்கொள் (ருஅ)
தேந்துறையி லன்னமகிழ் சேக்கை பலநிலவு
மாந்துறைவாழ் மாணிக்க மாமலையே - யேந்தறிவாம் (ருகூ)
நூற்றுறையி னின்றவர்க ணோக்கிமகிழ் வெய்துதிருப்
பாற்றுறையி னின்ற பரஞ்சுடரே - நாற்றிசையுந் (சு0)
தேனைக்கா வுண்மலர்க டேங்கடலென் முக்குவிக்கு
மானைக்கா மேவியம ரற்புதமே - மானைப்போன் (சுக)
மைஞ்ஞீல வாட்கண் மலராண் மருவுதிருப்
பைஞ்ஞீலி மேவும் பரம்பரமே-யெஞ்ஞான்றும் (சுஉ)
எச்சிரா மங்கலத்தோ டின்பந் தரும்பாச்சி
லாச்சிரா மஞ்சேரரு ணிலையே-நீச்சறியா (சுங)
தாங்கோய் மலைப்பிறவி யார்கலிக்கோர் வார்கலமா
மீங்கோய் மலைவா ழிலஞ்சியமே-யோங்காது (சுச)
நாட்போக்கி நிற்குநவை யுடையார் நாடரிதாம்
வாட்போக்கி மேவுகின்ற வள்ளலே-கோட்போக்கி (சுரு)
நில்லுங் கடம்பநெறி போலெனப் பூவை
சொல்லுங் கடம்பந்துறை நிறைவே-மல்லலொடு (சுசு)
வாழும்பராய்த் துறைவான் மன்னவரு மன்னவருஞ்
சூழும்பராய்த் துறைவாழ் தோன்றலே-கூழும்பல் (சுஎ)
நற்குடியுமோங்கி நலம்பெருகு மேன்மைதிருக்
கற்குடியிற் சந்தான கற்பகமே-சிற்சுகத்தா (சுஅ)
பிற்சநந மில்லாப் பெருமைதரு முறையூர்க்
சற்சனர்சேர் முக்கீச்சரத் தணியே-மற்செய் (சுகூ)
அராப்பள்ளி மேவுமவ னின்று வாழ்த்துஞ்
சிராப்பள்ளி ஞானத் தெளிவே-யிராப்பள்ளி (எ0)

நின்றெழன் மெய்யன்றெனவே நேர்ந்துலகு வாழ்த்துகின்ற
நன்றெறும்பி யூரிலங்கு நன்னெறியே-துன்றுகயற் (எக)

கண்ணார் நெடுங்களத்தைக் கட்டழித்த மெய்த்தவர்சூழ்
தண்ணார் நெடுங்களமெய்த் தாரகமே-யெண்ணார் (எஉ)

தருக்காட்டுப் பள்ளித் தகைகொண்டோர் சூழுந்
திருக்காட்டுப் பள்ளியில்வாழ் தேவே-மருக்காட்டு (எ௩)

நீலம் பொழிற்குணிறை தடங்கட் கோர்காட்டு
மாலம் பொழிற்சிவ யோகப்பயனே-சீலநிறை (எச)

வாந்துருத்தி கொண்டுள் ளனவெழுப்பு வோர்புகழும்
பூந்துருத்தி மேவுசிவ புண்ணியமே-காந்தருவத் (எ௫)

தண்டியூர் போற்றுந் தகைகாசிக் கட்செய்து
கண்டியூர் வாழுங் களகண்ணே-கொண்டியல்பின் (எசு)

வேற்றுத் துறையுள் விரவாதவர் புகழுஞ்
சோற்றுத் துறையுட் சுகவளமே-யாற்றலிலாத் (எஎ)

தீதிக்குடி யென்று செப்பப்படார் மருவும்
வேதிக்குடி யின்ப வெள்ளமே-கோதியலும் (எஅ)

வன்குடித் திட்டைமருவார் மருவுதிருத்
தென்குடித் திட்டைச் சிவபதமே-நன்குடைய (எகூ)

உள்ளமங்கை மார்மே லுறுத்தாதவர் புகழும்
புள்ளமங்கை வாழ்பரம போகமே-கள்ளமிலஞ் (அ0)

சக்கரப் பள்ளிதனிற் றும்பயின்ற மைந்தர்கள்சூழ்
சக்கரப் பள்ளிதனிற் றண்ணளியே-மிக்க (அக)

அருகாவூர் சூழ்ந் தழகுபெற வோங்குங்
கருகாவூ ரின்பக்கதியே-முருகார்ந்த (அஉ)

சோலைத் துறையிற் சுகஞ்சிவநூல் வாசிக்கும்
பாலைத் துறையிற் பரிமளமே-சீலத்தர் (அ௩)

சொல்லூ ரடியப்பர் தூயமுடி மேல்வைத்த
நல்லூ ரமர்ந்தநடு நாயகமே-மல்லார்ந்த (அச)

மாவூ ரிரவியின்பொன் வையமளவுஞ் சிகரி
யாவூரிலுற்ற வெங்களாண் டகையே-யோவாது (அ௫)

சித்திமுற்ற யோகஞ் செழும்பொழிலிற் பூவைசெயுஞ்
சத்திமுற்ற மேவுஞ் சதாசிவமே-பத்தியுற்றோர் (அசு)

முட்டீச் சுரத்தின் முயலா வகையருளும்
பட்டீச் சுரத்தெம் பராபரமே-துட்டமயல் (அஎ)

நீங்குவிழை யார்தமைவான் சென்றமரச் செய்விக்க
வோங்குபழை யாறையிலென் னுள்ளுவப்பே-பாங்குபெற (அஅ)

ஆர்ந்தவட விலையா னன்னத்தான் போற்றிநிதஞ்
சார்ந்த வடதளிவாழ் தற்பரமே-சேர்ந்த (அகூ)

மலஞ் சுழிகின்ற மனத்தார்க் கரிதாம்
வலஞ்சுழி வான்பொன் மலையே-நிலஞ்சுழியா (கூ0)

தோணத்தில் வந்தோ னுடன்றுதித்து வாழ்கும்ப
கோணத்திற் றெய்வ குலக்கொழுந்தே-மாணுற்றோர் (கூக)

காழ்க் கோட்ட நீங்கக்கருதுங் குடமூக்கிற்
கீழ்க்கோட்ட மேவுமன்பர் கேண்மையே-வாழ்க்கோட்டத் (௯௨)
தேரோண மட்டுந் திகழ்குடந்தை மட்டுமன்றிக்
காரோண மட்டுங் கமழ்மலரே-சீரோங்கும் (௯௩)
யோகீச் சுரர்நின்று வந்து வணங்குதிரு
நாகீச் சுரமோங்கு நங்கனியே-யோகையுளந் (௯௪)
தேக்கும் வரகுணனுந் தென்னவன்கண் சூழ்பழியைப்
போக்கு மிடைமருதிற் பூரணமே-நீக்கமிலா (௯௫)
நன்குரங் காணுநடையோ ரடைகின்ற
தென்குரங் காடுதுறைச் செம்மலே-புன்குரம்பை (௯௬)
ஏலக் குடிபுகுந்த வெம்மனோர்க் குண்மைதரு
நீலக் குடியிலங்கு நிட்களமே-ஞாலத்து (௯௭)
நீடக்கோர் நாளுநினைந் தேத்திடும் வைகன்
மாடக் கோயிற்குண் மதுரமே-பாடச்சீர் (௯௮)
வல்ல தமிழ்ப்புலவர் மன்னி வணங்குதிரு
நல்ல மகிழின்ப நவவடிவே-இல்லமயல் (௯௯)
ஆழம்பங்கென்ன வறிந்தோர் செறிந்தேத்துங்
கோழம்பம் வாழ்கருணைக் கொண்டலே-வீழும்பொய் (௧௦௦)
தீரா வடிவுடையார் சேர்தற் கருந்தெய்வச்
சீரா வடுதுறையெஞ் செல்வமே-பேராக் (௧௦௧)
கருத்திருத்தி யேத்துங் கருத்தர்க் கருள்செய்
திருத்துருத்தி யின்பச் செழிப்பே-வருத்துமயல் (௧௦௨)
நாளு மழுந்தூர் நவையறுக்க மன்பருள்ள
நீளு மழுந்தூர் நிறைதடமே-வேளிமையோர் (௧௦௩)
வாயூரத் தேமா மலர்சொரிந்து வாழ்த்துகின்ற
மாயூரத் தன்பர் மனோரதமே-தேயா (௧௦௪)
வளநக ரென்றெவ்வுலகும் வாழ்த்தப் படுஞ்சீர்
விளநகர்வா ழெங்கண் விருந்தே-யிளமைச் (௧௦௫)
செறியலூர் கூந்தற் றிருவனையா ராடும்
பறியலூர் வாழ்மெய்ப் பரமே - நெறிகொண்டே (௧௦௬)
அன்பள்ளி யோங்குமறி வுடையோர் வாழ்த்துஞ்செம்
பொன்பள்ளி வாழ்ஞான போதமே-யின்புள்ளித் (௧௦௭)
தெள்ளியார் போற்றித் திகழுந் திருநன்னிப்
பள்ளியார்ந் தோங்கும் பரசிவமே-எள்ளுறுநோய் (௧௦௮)
ஏயவலம் புரத்தை யெண்ணும லெண்ணுகின்றோர்
மேயவலம் புரத்து மேதகவே - தூயகொடி (௧௦௯)
அங்காடு கோபுரம்வா னுற்றாடு கின்றதலைச்
சங்காடு மேவுஞ் சயம்புவே - பொங்குமிருட் (௧௧௦)
கூறுதிரு வாக்கூர் கொடுப்பனபோற் சூழ்ந்துமதில்
வீறுதிரு வாக்கூர் விளக்கமே - மாறகற்றி (௧௧௧)
நன்கடையூர் பற்பலவு நன்றிமறவா தேத்துந்
தென் கடையூ ரானந்தத் தேறலே-வன்மையிலாச் (௧௧௨)

சொற்கடவி மேலோர் துதித்தலொழியா தோங்கு
நற்கடவூர் வீரட்ட நாயகனே - வற்கடத்தும் (௧௧௩)
வாட்டக்குடி சற்றும் வாய்ப்பதே யில்லையெனும்
வேட்டக் குடிமேவு மேலவனே - நாட்டமுற்ற (௧௧௪)
வாக்குந் தெளிச்சேரி மாதவத்தர்க் கின்பநல
மாக்குந் தெளிச்சேரி யங்கணனே - நீக்கும் (௧௧௫)
கரும புரத்திற் கலவா தருள்செய்
தரும புரஞ்செய் தவமே-யிருமையினும் (௧௧௬)
எள்ளாற்றின் மேவாத வேற்புடையோர் சூழ்ந்திறைஞ்சு
நள்ளாற்றின் மேவியவென் னற்றுணையே-தெள்ளாற்றின் (௧௧௭)
நீட்டாறு கொண்டரம்பை நின்றுகவின் காட்டுங்
கோட்டாறு மேவுங் குளிர்துறையே - கூட்டாக (௧௧௮)
கருவம்பர் தம்மைக் கலவாத மேன்மைத்
திருவம்பர் ஞானத் திரட்டே - யொருவந்தர் (௧௧௯)
மாகாளங் கொள்ள மதனைத் துரத்துகின்ற
மாகாளத் தன்பர் மனோலயமே-யோகாக் (௧௨0)
காயச்சூர் விட்டுக் கதிசேர வேட்டவர்சூழ்
மீயச்சூர் தண்ணென்னும் வெண்ணெருப்பே - மாயக் (௧௨௧)
களங்கோயி னெஞ்சக் கயவர் மருவா
விளங்கோயின் ஞான விளிப்பே - வளங்கோவை (௧௨௨)
நாடுந் திலதநயப் புலவர் நாடோறும்
பாடுந் திலதைப் பதிநிதியே - யாடுமயில் (௧௨௩)
காம்புரங்கொள் தோளியர்போற் காவிற் பயில்கின்ற
பாம்புரங்கொ ளுண்மைப் பரம்பொருளே - யாம்புவனந் (௧௨௪)
துன்னும் பெருங்குடிகள் சூழ்ந்துவலஞ் செய்துவகை
மன்னுஞ் சிறுகுடியான் மார்த்தமே - முன்னரசுங் (௧௨௫)
காழிமிழ லையருங் கண்டுதொழக் காசளித்த
வீழி மிழலை விராட்டுருவே - யூழிதொறும் (௧௨௬)
மன்னியூர் மால்விடையாய் வானவா வென்றுதொழ
வன்னியூர் வாழுமணிகண்டா - விந்திமிடஞ் (௧௨௭)
சிந்துங் கருவலியின் றிண்மையென்று தேர்ந்தவர்கள்
முந்துங் கருவிலிவாழ் முக்கண்ணே - மந்தணத்தைக் (௧௨௮)
காணு மருந்துறையிக் காமர்தல மென்றெவரும்
பேணு பெருந்துறையிற் பெம்மானே - யேணுடன்காண் (௧௨௯)
ஈட்டும் பெருநறையா றென்னவயலோடி
நாட்டும் பெருநறையூர் நம்பனே - காட்டும் (௧௩0)
பரிசிற் கரைப்புற்றோர் பாங்குபெற வோங்கும்
அரிசிற் கரைப்புத்தூ ரானே - தரிசனத்தெக் (௧௩௧)
காலுஞ் சிவபுரத்தைக் காதலித்தோர் தங்கதி
யேலுஞ் சிவபுரத்தி லெம்மானே - மாலுங்கொள் (௧௩௨)
வெப்புங் கலையநல்லோர் மென்மதுரச் சொன்மாலை
செப்புங் கலையநல்லூர்ச் சின்மயனே - செப்பமுடன் (௧௩௩)

ஓங்குந் திருத்தொண்ட ருள்குளிர நல்லருளாற்
றூங்குங் கருக்குடிவாழ் சங்கரனே - யாங்ககனந் (கஙச)
தாஞ் சியத்தை வேங்கை தலையாற் றடுக்கின்ற
வாஞ்சியத்தின் மேவு மறையோனே - யாஞ்சியிலா (கஙரு)
திந்நிலத்தும் வாஞுதி யெந்நிலத்து மோங்குபெரு
நன்னிலத்து வாழ்ஞான நாடகனே - மன்னுமலர் (கஙசு)
வண்டீச் சுரம்பாடி வார்மதுவுண் டுள்களிக்குங்
கொண்டீச் சுரத்தமர்ந்த கோமானே - கண்டீச
நண்பனையூ ரன்புகழும் நம்பவென வும்பர்தொழத்
தண்பனையூர் மேவுஞ் சடாதரனே - பண்புடனே (கஙஅ)
எற்குடியா னங்கொண் டிருக்கமகிழ்ந் தளித்த
விற்குடியின் வீரட்ட மேயவனே - சொற்கொடிய (கஙகூ)
வன்புகலா நெஞ்சின் மருவுமொரு தகைமைத்
தென்புகலூர் வாழ்மகா தேவனே - யின்பமறை (கச0)
அர்த்தமா நீக்கரிய வாதார மாகிநின்ற
வர்த்தமா னேச்சரத்து வாய்ந்தவனே - மித்தையுற்ற (கசக)
காமனதீ சங்கெடவே கண்பார்த் தருள்செய்த
ராமனதீ சம்பெறு நிராமயனே - தோமுண்
மயற்றூர் பறித்த மனத்தில் விளைந்த
பயற்றூர் திசையம் பரனே - யியற்றுஞ்சீர் (கசங)
ஆச்சிரம மேவுஞ் செங்காட்டங் குடியினங் கணப
தீச்சரம் வாழுஞ்சந்திர சேகரனே - யேச்சகல (கசச)
விண்மருவி ஞேனவிட நீக்கநல் லருள்செய்
வண்மருகன் மாணிக்க வண்ணனே - திண்மைகொண்ட (கசரு)
மாத்த மங்கை யுள்ளமருவிப் பிரியாத
சாத்தமங்கை கங்கைச் சடாமுடியோய் - தூத்தகைய (கசசு)
பாகைக் காரென்னும் பனிமொழியார் வாழ்த்தோர்வா
நாகைக் காரோண நயந்தோனே - யோர்கையற (கசஎ)
விக்கல்வருங் கால்விடாய் தீர்த்துல கிடைநீ
சிக்கலெனுஞ் சிக்கற் றிறலோனே - மிக்கமினூர் (கசஅ)
வாளூர் தடங்கண் வயல்காட்டி யோங்குங்கீழ்
வேளூரிற் செங்கண் விடையோனே - நீளுவகைப் (கசகூ)
பாலூ ரிசையிற் பயன் சுவையிற் பாங்குடைய
தேவூர் வள்ர்தேவ தேவனே - பூவினிடை (கரு0)
இக்கூடன் மைந்த வினிக்கூட லென்றுபள்ளி
முக்கூடன் மேவியமர் முன்னவனே - தக்க நெடும் (கருக)
தேரூ ரணிவீதிச் சீரூர்பணி மாட
வாரூரி லெங்க ளருமருந்தே - நீரூர்ந்த (கருஉ)
காரூர் பொழிலுங் கனியீந் திளைப்பகற்று
மாரூ ரரனெறி வேளாண்மையே - யோரார்ந்த (கருங)
மண் மண்டலிகர் மருவு மாரூர்ப்பரவை
யுண் மண்டலியெம் முடைமையே - திண்மைக் (கருச)

களமர் மகிழக் கடைசியர் பாடும்
விளமர் கொளுமெம் விருப்பே - வளமை (கருரு)
எருக்கரவீ ரஞ்சே ரெழில்வேணி கொண்டு
திருக்கர வீரஞ்சேர் சிறப்பே - யுருக்க (கருசு)
வருவேளூர் மாவெல்லா மாவேறுஞ்சோலைப்
பெருவேளூ ரின்பப் பெருக்கே - கருமை (கருஎ)
மிலையாலங் காட்டு மிடற்றா யென்றேத்துந்
தலையாலங் காட்டுத் தகவே - நிலைகொள் (கருஅ)
தடவாயில் வெண்மணிகள் சங்கங்க ளீனுங்
குடவாயி லன்பர் குறிப்பே - மடவார்க்கோர் (கருகூ)
கூறையுவந் தளித்த கோவேயென் றன்பர்தொழச்
சேறை யுவந்திருந்த சிற்பரமே - வேறுபடாப் (கசுO)
பாலூர் நிலவிற் பணிலங்க டண்கதிர்செய்
நாலூரி லன்பர்பெறு நன்னயமே - மேலூரு (கசுக)
நோய்க்கரையுட் செய்யாத நோன்மையோர் சூழ்ந்தகடு
வாய்க்கரையுண் மேவுகின்ற வண்மையே - வாய்த்த (கசுஉ)
பெரும்பூகந் தெங்கிற் பிறங்க வளங்கொள்ளு
மிரும்பூளை மேவி யிருந்தோய் - விரும்பும் (கசுங)
விரதப் பெரும்பாழி விண்ணவர்க ளேத்தும்
அரதைப் பெரும்பாழி யமர்ந்தோய் - சரதத்தால் (கசுச)
ஏதுமவ ணிவணென் றெண்ணுதவ ரிறைஞ்சி
யோது மவளிவ ணல்லூருடையோய் - கோதகன்ற (கசுரு)
நீட்டுங் கருதிநியமத் தோர்க் கின்னருளை
நீட்டும் பரிதி நியமத்தோய் - காட்டிய நந் (கசுசு)
தேவனூரென்று திசைமுகன் மால்வாழ்த்துகின்ற
பூவனூர் மேவும் புகழுடையோய் - பூவுலகாம் (கசுஎ)
ஈங்கும் பாதாளமுத லெவ்வுலகு மெஞ்ஞான்றுந்
தாங்கும் பாதாளேச்சரத் தமர்ந்தோ - யோங்குபுத்தி (கசுஅ)
மான்களரி லோட்டிமகிழ் வோடிருந் தேத்தும்
வான்களரில் வாழுமறை முடிபே - மேன்மைதரு (கசுகூ)
முற்றேமம் வாய்ந்த முனிவர்தினம் பரவுஞ்
சிற்றேமம் வாய்ந்த செழுங்கதிரே - கற்றவர்கள் (கஎO)
எங்குமுசாத தானமிருங் கழகமன்ற முதற்
றங்குமுசாத் தானத் தனிமுதலே - பொங்குபவ (கஎக)
வல்லிடும் பாவநத்த மட்டொளிசெய் கின்றதிரு
மல்லிடும் பாவனத்து மாட்சிமையே - தொல்லைப் (கஎஉ)
படிக்கு ணுவாத பண்புடையோர் வாழ்த்துங்
கடிக்குளத் தன்பர் களிப்பே - கடிக்குளத்தின் (கஎங)
வண்டலைக்கத் தேனலரின் வார்ந்தோர் தடமாக்குந்
தண்டலைக்கு ணீணெறிச்சிந் தாமணியே - கொண்டலெண (கஎச)
மன்கோட்டூர் சோலைவளர் கோட்டூர் தண்பழனத்
தென்கோட்டூர் தேவசிகா மணியே - தென்கூட்டிப் (கஎரு)

போய்வண் டுறைதடமும் பூம்பொழிலுஞ் சூழ்ந்துதம
ராய்வெண் டுறைமா சிலாமணியே - தோய்வுண்ட (கஎசு)

கள்ளம்பூ தாதிலை கண்டுணர்வு கொண்டவர்சூழ்
கொள்ளம்பூ தூர்வான் குலமணியே - வெள்ளிடைவான் (கஎஎ)

வாம்பே ரெயில்சூழ்ந்த மாண்பாற் றிருநாம
மாம்பே ரெயி லொப்பி லாமணியே - தாம்பேரா (கஎஅ)

வீட்டிலன்ப ரானந்த மேவச்செயுங் கொள்ளிக்
காட்டி லமர்ந்தவெண் கண் காட்சியே - நீட்டுமொளி (கஎகூ)

ஆங்கூ ரிலைவேல வனுதியர் சூழத்
தேங்கூரில் வாழ்தேவ சிங்கமே - யோங்குமலை (கஅ0)

வல்லிக்கா தாரமணிப் புயவென் றன்பர்தொழ
நெல்லிக்கா வாழ்மெய் நியமமே - யெல்லஜற்கட் (கஅக)

சேட்டியத் தானேதெரிந்து சுரர்வந் தேத்து
நாட்டியத்தான் குடிவாழ் நல்வினமே - நாட்டமொரு (கஅஉ)

நூறுயி லன்பர்தமை நோக்கியருள் செய்திருக்
காறுயின் மேலோர் கடைப்பிடியே - வீறுகு (கஅங)

மின்றுப்பூர் வந்தோட் டிருந்ததிவ்வூ ரென்னவுயர்
கன்றுப்பூர் பஞ்சாக் கரப்பொருளே - துன்றுசை (கஅச)

வெய்யவலி வலத்தைவீட்டி யன்பர்க் கின்னருள்செய்
துய்யவலி வலத்துச் சொன்முடியே - நையுமன (கஅரு)

மைச்சினத்தை விட்டோர் மனத்திற் சுவைகொடுத்துக்
கச்சினத்தி னுட்கரையாக் கற்கண்டே - நெற்சுமக்க (கஅசு)

ஆளிலையென் றூரனூர் துதிக்கத் தந்தருளுங்
கோளிலியி னன்பர்குலங் கொள்ளுவப்பே - நீளுலகம் (கஅஎ)

காய்மூர்க் கரேனுங் கருதிற் கதிகொடுக்கும்
வாய்மூர்க்க மைந்த மறைக் கொழுந்தே - நேயமுணத் (கஅஅ)

தேடெவியை மூவுலகுந் தேர்ந்துதொழச் செய்தருளு
மீடின்மறைக் காட்டிலென்ற னெய்ப்பில்வைப்பே - நாடுமெனை (கஅகூ)

நின்னகத்தி யான்பள்ளி நேர்ந்தேனென் றுட்கொண்ட
தென்னகத்தி யான்பள்ளிச் செம்பொன்னே - தொன்னெறியோர் (ககூ0)

நாடிக் குழகநல மருளென் றேத்துகின்ற
கோடிக் குழகரருட் கோலமே - நீடுலகில் (ககூக)

நாட்டும் புகழீழ நாட்டிற் பவவிருளை
வாட்டுந் திருக்கோண மாமலையாய் - வேட்டலகின் (ககூஉ)

மூதீச்சர மென்று முன்னோர் வணங்குதிருக்
கேதீச் சரத்திற் கிளர்கின்றோ - யோதுகின்றோர் (ககூங)

பாலவாய் நிற்கும் பரையோடு வாழ்மதுரை
யாலவாய்ச் சொக்கழ கானந்தமே - சீலர்தமைக் (ககூச)

காப்பனூ ரில்லாக் கருணையா லென்றுபுகு
மாப்பனூர் மேவுசதா னந்தமே - மாப்புலவர் (ககூரு)

ஞானபரங் குன்றமென நண்ணிமகிழ் கூர்ந்தேத்த
வானபரங் குன்றலின் பானந்தமே - வான்வர்கோன் (ககூசு)

தேமே டகத்தனொடு சீதரனும் வாழ்த்துஞ்சீ
ராமே டகத்தறி வானந்தமே - பூமீதின் (௧௯௭)

நற்றவருங் கற்றநவ சித்தரும் வாழ்த்தி
யுற்றகொடுங் குன்றத் தெம்முதியமே - முற்றுகதி (௧௯௮)

இத்தூர மன்றியினித் தூரமில்லை யெனப்
புத்தூர் வருமடியார் பூரிப்பே - சித்தாய்ந்து (௧௯௯)

நாமீச ராகுநலந் தருமென் றும்பர் தொழும்
ராமீசம் வாழ்சீவரத்தினமே - பூமீது (௨௦௦)

நீடானை சூழுநில மன்னர் வாழ்த்துதிரு
வாடானை மேவுகரு ணாகரமே - சேடான (௨௦௧)

வானப்பே ராற்றை மதியை முடிசூடுங்
கானப்பே ரானந்தக் காளையே - மோனருளே (௨௦௨)

பூவணமும் பூமணமும் போலவமர்ந்த திருப்
பூவணத்தி லானந்தப் பொக்கிஷமே - தீவணத்தில் (௨௦௩)

கண்சுழிய லென்றுகருணை யளித்தென் னுளஞ்சேர்
தண்சுழியல் வாழ்சீவ சாக்ஷியே - பண்செழிப்பக் (௨௦௪)

கற்றாலங் குண்மைக் கதிதருமென் றற்றவர்சூழ்
குற்றாலத் தன்பர் குதுகலிப்பே - பொற்றாம (௨௦௫)

நல்வேலி சூழ்ந்துநயன்பெறுமொண் செஞ்சாலி
நெல்வேலி யுண்மை நிலயமே - வல்வேலை (௨௦௬)

நஞ்சைக் களத்துவைத்த நாதவெனத் தொண்டர்தொழ
வஞ்சைக் களஞ்சே ரருவுருவே - நெஞ்சடக்கி (௨௦௭)

ஆன்றுநிறைந் தோர்க் கருளளிக்கும் புக்கொளியூர்த்
தோன்றுமவி நாசிச் சுயம்புவே - சான்றவர்கள் (௨௦௮)

தம்முருகன் பூணுட் டலம்போல வாழ்கின்ற
வெம்முருகன் பூண்டி யிருநிதியே - செம்மையுடன் (௨௦௯)

அங்குன்று தோங்கு மணிகொள் கொடிமாடச்
செங்குன்றூர் வாழுஞ் சஞ்சீவியே - தங்குமன (௨௧௦)

வஞ்சமாக் கூடல்வரையா தவர்சூழும்
வெஞ்சமாக் கூடல் விரிசுடரே - துஞ்சலெனும் (௨௧௧)

இன்ன லகற்ற விலங்கு பவானிக்கூட
லென்னு நணுவினிடை யின்னிசையே - துன்னியருள் (௨௧௨)

வேண்டிக் கொடுமுடியா மேன்மைபெறு மாதவர்சூழ்
பாண்டிக் கொடுமுடியிற் பண்மயமே - தீண்டரிய (௨௧௩)

வெங்கருவூர் வஞ்சவினை தீர்த்தவர் சூழ்ந்த
நங்கருவூர்ச் செய்யு ணவரசமே - தங் களற்றின் (௨௧௪)

தீங்கார் பிறதெய்வத் தீங்குழியில் வீழ்ந்தவரைத்
தாங்கா வரத்துறையிற் றாணுவே - பூங்குழலார் (௨௧௫)

வீங்கானை மாடஞ்சேர் விண்ணென் றகல்கடந்தைத்
தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே - நீங்காது (௨௧௬)

நீடலை யாற்றூர் நிழன்மணிக்குன் றோங்குதிருக்
கூடலை யாற்றூர்க் குணநிதியே - நாடியவான் (௨௧௭)

அம்புலியூர் சோலையணி வயல்களோங் கெருக்கத்
தம்புலி யூர்வேத சமரசமே - நம்புவிடை (உகஅ)

ஆங்குந் தினையூர்ந் தருளாயென் றன்பர்தொழு
தோங்குந் தினையூ ருமாபதியே - தீங்குறுமொன் (உககூ)

றார்புரத்தை வெண்ணகைத் தீயாலழித்தா யென்றுதொழச்
சோபுரத்தின் வாழ்ஞான தீபமே - வார்கெடிலச் (உஉ0)

சென்னதிகை யோங்கித் திலதவதி யார்பரவு
மன்னதிகை வீரட்ட மாதவமே- பன்னரிதாம் (உஉக)

ஆவலூ ரெங்களுடை யாரூரனூரா
நாவலூர் ஞானியருண் ஞாபகமே - தேவகமாம் (உஉஉ)

மன்ற மமர்ந்த வளம்போற் றிகழ்ந்தமுது
குன்ற மமர்ந்த வருட்கொள்கையே - யன்றகத்தின் (உஉங)

நல்வெண்ணெ யுண்டொளித்த நாரணன்வந் தேத்துகின்ற
நெல்வெண்ணெய் மேவுசிவ நிட்டையே - சொல்வண்ண (உஉச)

நாவலர் போற்றிநலம் பெறவே யோங்குதிருக்
கோவலூர் வீரட்டங் கொள்பரிசே - யாவலர்மா (உஉரு)

தேவா விறைவா சிவனே யெனுமுழக்க
மோவா வறையணிநல் லூருயர்வே - தாவாக் (உஉசு)

கடையாற்றி னன்பர்தமைக் கல்லாற்றி னீக்கு
மிடையாற்றின் வாழ்நல் லியல்பே - யிடையாது (உஉஎ)

சொல்லூரன் றன்னைத் தொழும்புகொளுஞ் சீர்வெண்ணெய்
நல்லூ ரருட்டுறையி னற்பயனே - மல்லார்ந்து (உஉஅ)

மாசுந் துறையூர் மகிபன்முதல் மூவருஞ்சீர்
பேசுந் துறையூர்ப் பிறைசூடி-நேசமுற (உஉகூ)

வேற்று வடுகூ ரிதயத்தினூர்க் கென்றுந்
தோற்றுகூற்று வடுகூர்ச் சுயஞ்சுடரே - யாற்றமயல் (உங0)

காணிக் குழிவீழ் கடையர்க்குக் காண்பரிய
மாணிக் குழிவாழ் மகத்துவமே - மாணுற்ற (உஙக)

பூப்பா திரிகொன்றை புன்னைமுதற் சூழ்ந்திலங்கு
மேர்ப்பா திரிப்புலியூ ரேந்தலே - சீர்ப்பொலியப் (உஙஉ)

பண்டிச் சுரனிப் பதியே விழைந்ததெனு
முண்டீச் சுரத்தின் முழுமுதலே - பெண்டகையார் (உஙங)

ஏர்ப்பனங்காட் டோன் றிருநிலத்தோர் வாழ்த்துகின்ற
சீர்ப்பனங்காட் டூர்மகிழ் நிக்ஷேபமே - சூர்ப்புடைத்த (உஙச)

தாமாத்தூர் வீழத்தடிந் தோன் கணேசனொடு
மாமாத்தூர் வாழ்மெய் யருட்பிழம்பே - யாமேத்தும் (உஙரு)

உண்ணு முலையா முமையோடு மேவுதிரு
வண்ணா மலைவா ழருட்சுடரே - கண்ணார்ந்த (உஙசு)

நீர்கம் பராந்தொண்ட நாட்டி லுயர்காஞ்சி
யேகம்ப மேவும்பே ரின்பமே - யாருக்கென் (உஙஎ)

கீற்றளிவண் பூமணத்தைக் காட்டும் பொழிற்கச்சி
மேற்றளிவா ழானந்த வீட்டுறவே - நாற்றமலர்ப் (உஙஅ)

பூந்தண் டளிவிரித்துப் புக்கிசைக்குஞ் சீரோண
காந்தன் றளியருட் பிரகாசமே - சேர்ந்தவர்க்கே (௨௩௯)

இங்கா பதஞ்சற்று மில்லாத வனேக
தங்கா பதஞ்சேர் தயாநிதியே - மங்காது (௨௪௦)

மெச்சிநெறிக்கார்வ மேவிநின்றோர் சூழ்ந்ததிருக்
கச்சிநெறிக் காரைக்காட் டிறையே - முச்சகமும் (௨௪௧)

ஆயுங் குரங்கணின் முட்டப்பெயர் கொண்டோங்குபுக
ழேயுந் தலம்வாழி யன்மொழியே - தோயுமன (௨௪௨)

யோகற லிலாத்தவத்தோ ருன்ன விளங்குதிரு
மாகறலி லன்பரபி மானமே - யோகையிலா (௨௪௩)

வீத்தூர மாவேட மெய்த்தவர்கள் சூழ்ந்ததிரு
வோத்தூரில் வேதாந்த வுண்மையே - பூத்தவிசின் (௨௪௪)

ஆர்த்தான் பனகத்தவனிந் திரன்புகழ்வன்
பார்த்தான் பனங்காட்டூர்ப் பாக்கியமே - பார்த்துலகில் (௨௪௫)

இல்ல மெனச் சென்றிரவா தவர்வாழும்
வல்லமகி ழன்பர் வசித்துவமே - சொல்லரிக்குங் (௨௪௬)

காற்பேறு கச்சியின்முக் காற்பே றிவணென்னு
மாற்பேற்றி னன்பர் மனோபலமே - யேற்புடைவாய் (௨௪௭)

ஊறலடி யாருறத் தொழுது மேவுதிரு
ஊற லழியா வுவகையே - மாறுபடு (௨௪௮)

தீதுமி லம்பயங் கோட்டூ ரென்றடியர்புக
ழோதுமிலம் பயங்கோட்டூர் நலமே - தீதுடைய (௨௪௯)

பொற்கோல மாமெயிற்குப் போர்க்கோலங் கொண்டதிரு
விற்கோல மேவுபர மேட்டிமையே - சொற்போரில் (௨௫௦)

ஓலங் காட்டும் பழையனூர்நீலி வாதடக்கு
மாலங் காட்டிற்கு ழருண்மயமே - ஞாலஞ்சேர் (௨௫௧)

மாசூ ரகற்று மதியுடையோர் சூழ்ந்ததிருப்
பாசூரி லுண்மைப் பரத்துவமே - தேசூரன் (௨௫௨)

கண்பார்க்க வேண்டுமெனக் கண்டூன்று கோல்கொடுத்த
வெண்பாக்கத் தன்பர்பெறும் வீருப்பே - பண்பார்க்கு (௨௫௩)

நள்ளிப்பதியே நலந்தருமென் றன்பர்புகுங்
கள்ளிற் பதிநங் கடப்பாடே - யெள்ளலுறுங் (௨௫௪)

கோளத்தி நீக்குங் குணத்தோர்க் கருள்செய்திருக்
காளத்தி ஞானக் களஞ்சியமே - யாளத்தா (௨௫௫)

வெற்றி யூரென்ன வினையேன் வினைதவிர்த்த
வொற்றியூர் மேவியவென் னுள்ளன்பே - தெற்றிகளில் (௨௫௬)

பொங்குமணிக் கால்கள் பொலஞ்செய் திருவொற்றிநகர்
தங்குஞ் சிவபோக சாரமே - புங்கவர்கள் (௨௫௭)

சேர்ந்துவலங் கொள்ளுந் திருவொற்றியூர்க் கோயில்
சார்ந்து மகிழமுத சாரமே - தேர்ந்துலகர் (௨௫௮)

போற்றுந் திருவொற்றிப் பூங்கோயிற் குட்பெரியோர்
சாற்றும் புகழ்வேத சாரமே - யூற்றுறுமெய் (௨௫௯)

அன்புமிகுந் தொண்டர் குழுவாயும் வலிதாயத்தி
லின்பமிகு ஞான விலக்கணமே - துன்பமற (உசு0)

எல்லைவா யற்குண்மட்டு மேகில்வினை யேகுமெனு
முல்லைவாயிற் குள்வைத்த முத்திவித்தே - மல்லல்பெறு (உசுக)

வேற்காட்ட ரேத்துதிரு வேற்காட்டின் மேவியமுன்
னூற்காட் டியர்வேத நுட்பமே - பாற்காட்டும் (உசுஉ)

ஆர்த்திபெற்ற மாதுமயி லாப்பூசித் தார்மயிலைக்
கீர்த்திபெற்ற நல்வேத கீதமே - கார்த்திரண்டு (உசுங)

வாவுகின்ற சோலைவளர் வான்மியூர்த் தலத்தின்
மேவுகின்ற ஞான விதரணமே - தூவிமயில் (உசுச)

ஆடும் பொழிற்கச்சூ ராலக்கோயிற்கு ளன்பர்
நீடுங் கனதூய நேயமே - யீடில்லை (உசுரு)

என்னுந் திருத்தொண்ட ரேத்துமிடைச் சுரத்தின்
மன்னுஞ் சிவானந்த வண்ணமே - நன்னெறியோர் (உசுசு)

துன்னுநெறிக் கோர்துணையாந் தூயகழுக் குன்றினிடை
முன்னுமறி வானந்த மூர்த்தமே - துன்னுபொழில் (உசுஎ)

அம்மதுரத் தேன்பொழியு மச்சிறுபாக்கத் துலகர்
தம்மத நீக்குஞ்ஞான சம்மதமே - யெம்மதமுஞ் (உசுஅ)

சார்ந்தால் வினைநீக்கித் தாங்குதிரு வக்கரையு
ணேர்ந்தா ருபநிடத நிச்சயமே - தேர்ந்தவர்கள் (உசுகூ)

தத்தமது மதியாற் சாருமர சிலியூ
ருத்தம மெய்ஞ்ஞான வொழுக்கமே - பத்தியுள்ளோர் (உஎ0)

எண்ணும் புகழ்கொ ளிரும்பை மாகாளத்து
நண்ணுஞ் சிவயோக நாட்டமே - மண்ணகத்துட் (உஎக)

கோபலத்திற் காண்பரிய கோகரணங் கோயில்கொண்ட
மாபலத்து யாபலமா மாபலமே - தாபமிலாப் (உஎஉ)

பாகியற்சொன் மங்கையொடும் பாங்கார் பருப்பதத்தில்
யோகியர்க ளேத்திடவா ழொப்புரவே - போகிமுதல் (உஎங)

பாடியுற்ற நீலப் பருப்பதத்தி னல்லோர்க
டேடி வைத்த தெய்வத்திலகமே-நீடுபவம் (உஎச)

தங்காத வனேக தங்கா பதஞ்சேர்ந்த
நங்காத லான நயப் புணர்வே - சிங்காது (உஎரு)

தண்ணிறைந்து நின்றவர்தாஞ் சார்திருக்கேதாரத்திற்
பண்ணிறைந்த கீதப் பனுவலே - யெண்ணிறைந்த (உஎசு)

சான்றோர் வணங்குநொடி த்தான்மலையில் வாழ்கின்ற
தேன்றோ யமுதச் செழுஞ்சுவையே - வான்றோய்ந்த (உஎஎ)

இந்திரரு நாரணரு மெண்ணில் பிரமர்களும்
வந்திறைஞ்சும் வெள்ளி மலையானே - தந்திடுநற் (உஎஅ)

றாய்க்குங் கிடையாத தண்ணருள்கொண் டன்பருளம்
வாய்க்குங் கயிலை மலையானே - தூய்க்குமரன் (உஎகூ)

தந்தையே யென்னருமைத் தந்தையேதாயேயென்
சிந்தையே கோயில்கொண்ட தீர்த்தனே - சந்தமிகும் (உஅ0)

எண்டோ ளுடையா யெனையுடையாய் மார்பகத்தில்
வண்டோ லிடுங்கொன்றை மாலையாய் - தொண்டர்விழி (உஅக)

உண்ணற் கெளியா யுருத்திரன் மாலாதியர்தங்
கண்ணிற் கனவிலுங் காண்பரியாய் - மண்ணுலகில் (உஅஉ)

என்போன் றவர்க்கு மிருணீக்கி யின்புதவும்
பொன்போன்ற மேனிப் புராதனனே-மின்போன்ற (உஅ௩)

செஞ்சடையாய் மூவருக்குந் தேவருக்குமி யாவருக்கு
மஞ்சடையா வண்ண மளிப்போனே - விஞ்சுலகில் (உஅ௪)

எல்லார்க்கு நல்லவனே யெல்லாஞ்செய் வல்லவனே
எல்லார்க்கு மொன்றா யிருப்போனே - தொல்லூழி (உஅ௫)

ஆர்ந்தசரா சரங்க ளெல்லா மடிநிழலிற்
சேர்ந்தொடுங்க மாநடனஞ் செய்வோனே - சார்ந்துலகில் (உஅ௬)

எத்தேவர் மெய்த்தேவ ரென்றுரைக்கப் பட்டவர்க
ளத்தேவர்க் கெல்லாமுன் னானோனே - சத்தான (உஅஎ)

வெண்மைமுத லைவணமு மேவியைந்து தேவர்களாய்த்
திண்மைபெறு மைந்தொழிலுஞ் செய்வோனே - மண்முதலாம் (உஅஅ)

ஐந்தா யிருசுடரா யான்மாவாய் நாதமுடன்
விந்தாகி யெங்கும் விரிந்தோனே - யந்தணவெண் (உஅ௯)

ணீறுடையா யாறுடைய நீண்முடியாய் தேடரிய
வீறுடையாய் நின்றனக்கோர் விண்ணப்பம் - மாறுபட (உ௯௦)

எள்ள லடியே னெனக்கு ளொளியாம
லுள்ள படியே யுரைக்கின்றேன் - விள்ளுறுமி யான் (உ௯க)

வன்சொ லுடனன்றி வள்ளலுன தன்பர்தமக்
கின்சொ லுடன்பணிந்தொன் றீந்ததிலை - புன்சொலெனும் (உ௯உ)

பொய்யுரைக்க வென்றுற் புடையெழுவே னன்றியொரு
மெய்யுரைக்க வென்றும் விழைந்ததிலை - வையகத்தில் (உ௯௩)

பொல்லா விரதத்தைப் போற்றியுவந் துண்பதல்லாற்
கொல்லா விரதத்தைக் கொண்டதிலை - யல்லாதார் (உ௯௪)

வன்புகழைக் கேட்கமனங் கொண்ட தல்லாம
லின்புகழைக் கேட்க நினைந்ததிலை - வன்புகொண்டே (உ௯௫)

இன்னடிக்கு நுண்ணிடையார்க் கேவல்புரிந்தே னலதுன்
பொன்னடிக்குத் தொண்டு புரிந்ததிலை - பன்னுகின்ற (உ௯௬)

செக்குற்ற வெள்ளெனவே சிந்தைநசிந்தே னலது
முக்குற்றந் தன்னை முறித்ததிலை - துக்கமிகுந் (உ௯எ)

தாவில்வலங் கொண்டுசெஞ் சரித்தே னல்லதுநின்
கோவில்வலங் கொள்ளக் குறித்ததிலை - பூவுலகில் (உ௯அ)

வன்னிதியோர் முன்கூப்பி வாழ்த்தினே னன்றியுன்றன்
சன்னிதியிற் கைகூப்பித் தாழ்ந்ததிலை - புன்னெறிசேர் (உ௯௯)

மிண்டரொடு கூடிவியந்த தல்லா லையாநின்
றொண்டரொடுங் கூடிச் சூழ்ந்ததிலை - கண்டவரைக் (௩௦௦)

கன்றுமுகங் கொண்டு கடுகடுத்துப் பார்ப்பதல்லா
லென்றுமுக மலர்ச்சி யேற்றதில்லை - நன்றிபெறு (௩௦க)

நன்னெஞ்ச ருன்சீர் நவில்வது கேட்டுக்
கன்னெஞ்சைச் சற்றுங் கரைத்ததிலை - பின்னெஞ்சாப் (௩0௨)
பண்ணீர்மை கொண்ட தமிழ்ப் பாமாலையாற் றுதித்துக்
கண்ணீர்கொண் டுன்பாற் கனிந்ததிலை - தண்ணீர்போல் (௩0௩)
நெஞ்சமுருகி நினைக்கு மன்பர்போ லெனைநீ
யஞ்சலென நின்று ளடுத்ததிலை - விஞ்சுலகர் (௩0௪)
மெய்யடிய னென்றுரைக்க வித்தகநின் பொன்னடிக்குப்
பொய்யடிமை வேடங்கள் பூண்டதுண்டு - மையமிகு (௩0௫)
மையல் வினைக்குவந்த மாதர் புணர்ச்சியெனும்
வெய்ய வினைக்குழியில் வீழ்ந்ததுண்டு - துய்யர்தமை (௩0௬)
என்னென்று மில்லா தியல்பாகப் பின்னென்று
முன்னென்று மாகமொழிந்த துண்டு - மன்னுகின்ற (௩0௭)
மானஞ்செ யாதுமன நொந்திரப் போர்க்குத்
தானஞ்செய் வாரைத் தடுத்ததுண்டு - ஈனமிலா (௩0௮)
வார முரையாது வழக்கி னிடையோர
வார முரைத்தே மலைந்ததுண்டு - ஈரமிலா (௩0௯)
செஞ்ச ருடன்கூடி நேசஞ்செய் தும்மடியே
தஞ்ச மெனத்தாழாது தாழ்ந்ததுண்டு - எஞ்சவிலாத் (௩௧0)
தாயனையா யுன்றனது சன்னிதிநேர் வந்துமொரு
நேயமு மில்லா தொதிபோ னின்றதுண்டு - தீயவினை (௩௧௧)
மாளாக் கொடிய மனச்செல்வர் வாயிலிற்போய்க்
கேளாச் சிவநிந்தை கேட்டதுண்டு - மீளாத (௩௧௨)
பொல்லாப் புலையரைப்போற் புண்ணியரை வன்மதத்தாற்
சொல்லா வசையெல்லாஞ் சொன்னதுண்டு - நல்லோரைப் (௩௧௩)
போற்றாது பொய்யுடம்பைப் போற்றிச்சிவபூசை
யாற்றாது சோற்றுக் கலைந்ததுண்டு - தேற்றாமல் (௩௧௪)
ஈபத்தா வென்றிங் கிரப்போர் தமைக்கண்டு
கோபத்தா னாய்போற் குரைத்ததுண்டு - பாபத்தால் (௩௧௫)
சிந்தையொன்று வாக்கொன்று செய்கையொன்றாய்ப் போகவிட்டே
யெந்தைநினை யேத்தா திருந்ததுண்டு - புந்தியிந்த (௩௧௬)
சொல்லைக்கல் லென்று நல்லோர் சொன்னபுத்தி கேளாம
லெல்லைக்கல் லொத்தே யிருந்ததுண்டு - தொல்லைவினை (௩௧௭)
யாழ்த்தா மயவுலகி லற்பமகிழ்ச் சியினால்
வாழ்த்தாம லுன்னை மறந்ததுண்டு - தாழ்த்தாமற் (௩௧௮)
பூணு வெலும்பணியாய்ப் பூண்டோய்நின் பொன்வடிவங்
காணாது வீழ்நாள் கழித்ததுண்டு - மாணாத (௩௧௯)
காடுபோன் ஞாலக் கடுநடையிலே யிருகான்
மாடுபோ னின்றுழைத்து வாழ்ந்ததுண்டு - நாடகன்ற (௩௨0)
கள்ளிவா யோங்குபெருங் காமக்கடுங் காட்டிற்
கொள்ளிவாய்ப் பேய்போற் குதித்ததுண்டு - ஒள்ளியரால் (௩௨௧)
எள்ளுண்ட மாயாவியல்புறு புன்கல்வி யெலாங்
கள்ளுண்ட பித்தனைப்போற் கற்றதுண்டு - நள்ளுலகிற் (௩௨௨)

சீராசை யெங்குஞ்சொற் சென்றிடவே வேண்டுமெனும்
பேராசைப் பேய்தான் பிடித்ததுண்டு - தீராவென் (ஙஉங)

சாதகமோ தீவினையின் சாதனையோ நானறியேன்
பாதகமென் றொலெனக்குப் பாற்சோறு - தீதகன்ற (ஙஉச)

தூய்மைநன் றொமென்கின்ற தொன்மையினர் வாய்க்கினிய
வாய்மையென் றொலென்னுடைய வாய்க்குமட்டுங் - காய்மைதரும் (ஙஉரு)

கற்குநிக ராங்கடுஞ் சொலன்றி நன்மதுரச்
சொற்கு மெனக்கும் வெகுதூரங்காண் - பொற்புமிக (ஙஉசு)

நண்ணியுனைப் போற்றுகின்ற நல்லோர்க் கினியசிவ
புண்ணியமென் றொலெனக்குப் போராட்ட - மண்ணனுனை (ஙஉஎ)

நாளுரையா தேத்துகின்ற நல்லோர் மேலில்லாத
கோளுரை யென்றொலெனக்குக் கொண்டாட்ட - நீளநினை (ஙஉஅ)

நேசிக்கு நல்லறி வாஞ்சிவா கமநூல்
வாசிக்க வென்றொ லென் வாய்நோகுங் - காசிக்கு (ஙஉகூ)

நீடிக்கி லாறுநே ர்ந்தறிவ தல்லதுவீண்
வேடிக்கை யென்றால் விடுவதில்லை -- நாடயலில் (ஙஙO)

வீறொ முனதுவிழாச் செயினு மவ்விடந்தா
ன்றுயிரங் காதமாங் கண்டாய் - மாறான (ஙஙக)

போகமென்றொ லுள்ளமிகப் பூரிக்குமன்றி சிவ
யோகமென்றொ லென்னுடைய வுண்ணடுங்குஞ் - சோகமுடன் (ஙஙஉ)

துள்ளலொழிந் தென்னெஞ்சஞ் சோர்ந்தழியுங் காலத்திற்
கள்ளமென் றொ லுள்ளே களித்தெழும்பு - மள்ளனெறி (ஙஙங)

செல்லென் றொ லன்றிச்சிவ சிவாவென் றொருகாற்
சொல்லென்றொ லென்றனக்குத் துக்கம்வரு - நல்லநெறி (ஙஙச)

வாம்பலன் கொண்டோர்கள் மறந்தும் பெறுக்கொடிய
சோம்பலென்ப தென்னுடைய சொந்தங்கா - ணேம்பலுடன் (ஙஙரு)

எற்றோவிரக்கமென்ப தென்றனைக்கண் டஞ்சியெனை
யுற்றோரையு முடன்விட்டோடுங் காண் - சற்றேனும் (ஙஙசு)

ஆக்கமேசேரா தறத்துரத்து கின்றவெறுந்
தூக்கமே யென்றனக்குச் சோபனங்கா - ணூக்கமிகும் (ஙஙஎ)

ஏறுடையாய் நீறணியா வீனர்மனை யாயினும்வெண்
சோறுகிடைத்தா லதுவே சொர்க்கங்காண் - வீறுகின்ற (ஙஙஅ)

வாழ்வுரைக்குநல்ல மனத்தர் தமை யெஞ்ஞான்றுந்
தாழ்வுரைத்த லென்னுடைய சாதகங்காண் - வேள்விசெயுந் (ஙஙகூ)

தொண்டர்தமைத் துதியாத் துட்டரைப்போ லெப்பொழுதுஞ்
சண்டையென்ப தென்றனுக்குத் தாய்தந்தை - கொண்டவெழு (ஙசO)

தாதாட வோங்கித் தலையாட வஞ்சரொடு
வாதாட வென்றொ லென்வாய்துடிக்குங் - கோதாடச் (ஙசக)

சிந்தைதிரிந் துழலுந் தீயரைப்போ னற்றரும
நிந்தையென்ப தென்பழைய நேசங்காண் - முந்தநினை (ஙசஉ)

எண்ணென்றொ லன்றி யிடர்செய் திடுங்கொடிய
பெண்ணென்றொற் றூக்கம் பிடியாது - பெண்களுடன் (ஙசங)

புல்லென்றாற் றேகம்புளகிக்கு மன்றிவிட்டு
நில்லென்று லென்கண்ணி னீரரும்பும் - புல்லரென்ற (௩௪௪)
பேர்க்கும்விருப் பெய்தாத பெண்பேய்கள் வெய்யசிறு
நீர்க்குழியே யான்குளிக்கு நீர்ப்பொய்கை - சீர்க்கரையின் (௩௪௫)
ஏருப்பெண்மாத ரிடைக்கு ளிளிந்தென்று
மாறுப்புண் ணுக்கே யடிமைநான் - தேறுத (௩௪௬)
வெஞ்சலஞ்செய் மாயாவிகாரத்தி னுல்வரும்வீண்
சஞ்சலமெல்லா மெனது சம்பந்த - மஞ்செழுத்தை (௩௪௭)
சேர்ந்தார்க் கருள்புரியு நின்னடியர் தாமேயுஞ்
சார்ந்தாலது பெரிய சங்கட்ட - மார்ந்திடுமான் (௩௪௮)
காந்தும் விழிப்புலியைக் கண்டதுபோ னல்லகுண
சாந்தமெனைக் கண்டாற் றலைசாய்க்கு - மாந்தகையோர் (௩௪௯)
சேர மனத்திற் செறிவித் திடும்புருட
தீரமெனைக் கண்டாற் சிரிக்குங்காண் - கோரமதைக் (௩௫0)
காணி லுலகிற்கருத் துடையோர் கொள்ளுகின்ற
நாணமெனைக் கண்டு நாணுங்கா - ணேனுலகில் (௩௫௧)
ஞானங்கொளா வெனது நாமமுரைத்தாலு மபி
மானம் பயங்கொண்டு மாய்ந்துவிடு - மானவுன்றன் (௩௫௨)
கேண்மைக் குலத்தொண்டர் கீர்த்திபெறக் கொண்ட
வாண்மைக்கு நானென்று லாகாது - வாண்மைபெறும் (௩௫௩)
ஐயநின்றாட் பூசிக்கு மன்பருள்ளத் தன்பிற்கும்
பொய்ய னெனக்கும் பொருத்தமிலை - வையகத்தோர் (௩௫௪)
இல்லெனினுஞ் சும்மாநீ யீகின்றே னென்றொருசொற்
சொல்லெனினுஞ் சொல்லத் துணிவுகொளே - னல்லையெமக்
கீயென்பா ரன்றியன்னை யென்பயத்தா னின்சோற்றி (௩௫௫)
லீயென்ப தற்குமிசையாள் கா - ணீயென்பார்க் (௩௫௬)
கெண்ணுஞ் சிலர்மண் ணிடுவா ரெனக்கந்த
மண்ணுங் கொடுக்கமனம் வாராது - அண்ணுறுமென் (௩௫௭)
இல்லை யடைந்தே யிரப்பவருக் கெப்போது
மில்லையென்ப தென்வாய்க் கியல்புகாண் - டொல்லுலகை (௩௫௮)
ஆண்டாலு மன்றி யயலார்புன் கீரைமணி
பூண்டாலு மென்கண் பொறுக்காது - நீண்டவெழு (௩௫௯)
தீபமுறு வோர்திசை யோர்மற்றி யாவர்க்குங்
கோபமது நான்கொடுக் கிலுண்டு - ஆபத்தில் (௩௬0)
வீசங் கொடுத்தெட்டு வீசமெனப் பிறரை
மோசஞ் செயநான் முதற்பாதம் - பாரமுளோர் (௩௬௧)
கைக்குடைய வேயெழுதிக் கட்டிவைத்த விவ்வுலகப்
பொய்க்கதையே யான்படிக்கும் புத்தகங்காண் - மெய்ப்படுநின் (௩௬௨)
மந்திரத்தை யுச்சரியா வாயுடையே னென்போலத்
தந்திரத்திற் கைதேர்ந்த வரில்லை - யெந்தையினி (௩௬௩)
ஏதென்று ரைப்பே னிருங்கடல்சூழ் வையகத்திற்
சூதென்ப தெல்லா மென்சுற்றங்கா - ணோதுகின்ற (௩௬௪)

நஞ்சமெலாங் கூட்டி நவின்றிடினு மொவ்வாத
வஞ்சமெலா மென்கை வசங்கண்டா - யஞ்சவரும் (௫௬௫)
வீணவமாம் வஞ்சவினைக்கு முதலாகி நின்ற
வாணவமே யென்காணி யாட்சியதாம் - மாணிறைந்த (௫௬௬)
நல்லறிவே யென்னைநெடு நாட்பகைத்த தன்றிமற்றைப்
புல்லறிவே யென்னுட் பொருள்கண்டாய் - சொல்லவொணா (௫௬௭)
வேடருக்குங் கிட்டாத வெங்குணத்தா லிங்குழலு
மூடருக்குள் யானேமுதல்வன் காண் - வீடடுத்த (௫௬௮)
மேதையர்கள் வேண்டா விலங்காய்த் திரிகின்ற
பேதையென்ப தென்னுரிமைப் பேர்கண்டாய் - பேதமுற (௫௬௯)
ஓதுவதென் பற்பலவா யுற்றதவத்தோர் நீத்த
தீதுகளெல்லா மெனது செல்வங்கா - ணாதலினால் (௫௭௦)
பேயினையொத் திவ்வுலகிற் பித்தாகி நின்றவிந்த
நாயினைநீ யாண்டிடுதனன் கன்றே - யாயினுமுன் (௫௭௧)
மண்ணா ருயிர்களுக்கும் வானவர்க்குந் தானிரங்கி
யுண்ணாக்கொடு விடமு முண்டனையே - யெண்ணாமல் (௫௭௨)
வேய்த்தவள வெற்பெடுத்த வெய்யவரக்கன் றனக்கும்
வாய்த்தவர மெல்லாம் வழங்கினையே - சாய்த்தமன (௫௭௩)
வீம்புடைய வன்முனிவர் வேள்விசெய்து விட்டகொடும்
பாம்பையெல்லாந் தோளிற் பரித்தனையே - நாம்பெரியர் (௫௭௪)
எஞ்சே மென்றா ணவத்தாலேற்ற விருவரையு
மஞ்சே லென்றாட்கொண் டருளினையே - துஞ்சுபன்றித் (௫௭௫)
தோயாக் குருளைகளின் றுன்பம் பொறாதன்று
தாயாய் முலைப்பாலுந் தந்தனையே - வாயிசைக்குப் (௫௭௬)
பாண்டியன்முன் சொல்லிவந்த பாணன் பொருட்டடிமை
வேண்டி விறகெடுத்து விற்றனையே - யாண்டொருநாள் (௫௭௭)
வாய்முடியாத் துன்புகொண்ட வந்திக்கோ ராளாகித்
தூய்முடிமேன் மண்ணுஞ் சுமந்தனையே - யாய்துயர (௫௭௮)
மாகவஞ்சேர் மாணிக்க வாசகருக்காய்க் குதிரைச்
சேவகன்போல் வீதிதனிற் சென்றனையே - மாவிசயன் (௫௭௯)
வில்லடிக்கு நெஞ்சம் விரும்பியதல்லா லெறிந்த
கல்லடிக்கு முள்ளங் களித்தனையே - மல்லலுறும் (௫௮௦)
வில்வக் கிளையுதிர்த்த வெய்யமுசுக் கலையைச்
செல்வத் துரைமகனாச் செய்தனையே - சொல்லகலின் (௫௮௧)
நீளுகின்ற நெய்யருந்த நேரெலியை மூவுலகு
மாளுகின்ற மன்னவனா யாக்கினையே - கோளகல (௫௮௨)
வாய்ச்சங்கு நூலிழைத்த வாய்ச்சிலம்பி தன்னையுயர்
கோச்செங்கட் சோழனெனக் கூட்டினையே - யேச்சறுநல் (௫௮௩)
ஆறடுத்த வாகீசர்க்காம் பசியைக் கண்டுகெட்டுச்
சோறெடுத்துப் பின்னே சுமந்தனையே - கூறுகின்ற (௫௮௪)
தொன்மை பெறுஞ் சுந்தரர்க்குத் தோழனென்று பெண்பரவை
நன்மனைக்குத் தூது நடந்தனையே - நன்மைபெற (௫௮௫)

இற்றென்ற விற்றென்று வெத்தனையோ பேர்கள்செய்த
குற்றங் குணமாகக் கொண்டனையே - பற்றுலகில் (௩௮௬)
அன்புடைய தாயர்களோ ராயிரம் பேரானாலு
மன்புடையாய் நின்னைப்போ லாவாரோ - வின்பமுடன் (௩௮௭)
ஈண்டவருந் தந்தையர்க ளெண்ணிலரே யாயினுமென்
னாண்டவனே நின்னைப்போ லாவாரோ - பூண்டகைகொள் (௩௮௮)
ஏனுடைய நின்னையன்றி யெந்தைபிரா னேயுன்
னாணையெனக் குற்றதுணை யாருமில்லை - நாணமுளன் (௩௮௯)
ஆனேன் பிழைக ளனைத்தினையு மையாநீ
தானேபொறுக்கத் தகுங் கண்டாய் - மேனோற்ற (௩௯0)
மாற்றனுக்கு மெட்டா மலர்க்கழலோய் நீயென்னைக்
கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க - பாற்றவள (௩௯௧)
நந்தக் கடற்புவியி னானின்னும் வன்பிறவிப்
பந்தக் கடலழுந்தப் பண்ணற்க - முந்தைநெறி (௩௯௨)
நின்றே யுன்பொற்றா ணினையாதார் பாழ்மனையிற்
சென்றே யுடலோம்பச் செய்யற்க - நன்றேநின் (௩௯௩)
றேங்கு நெறியோ ருளத்தமர்ந்தோ யென்றன்னைத்
தீங்கு நெறியிற் செலுத்தற்க - வீங்கடக்கி (௩௯௪)
வாழியெனத் தான்வழுத்தினு மென்சொற் கடங்கா
வேழை மனத்தா லிளைக்கின்றேன் - வாழுமரக் (௩௯௫)
கோடேறும் பொல்லாக் குரங்கெனவே பொய்யுலகக்
காடேறு நெஞ்சாற் கலங்குகின்றேன் - பாடேறும் (௩௯௬)
உள்ளறியா மாயையெனு முட்பகையாற் காமமெனுங்
கள்ளறியா துண்டு கவல்கின்றேன் - றெள்ளுறுமென் (௩௯௭)
கண்ணனையாய் நின்றாட் கழலங்களை வழுத்தா
மண்ணனையார் பாற்போய் மயங்குகின்றேன் - றிண்ணமிலாக் (௩௯௮)
காதரவாந் துன்பக் கவலைக்கடல் வீழ்ந்தே
யாதரவொன் றின்றி யலைகின்றே - னோதுமறை (௩௯௯)
யாத்தரெனு முன்ற னடியார் தமைக்கண்டு
நாத்திகஞ் சொல்வார்க்கு நடுங்குகின்றேன் - பாத்துண்டே (௪00)
உய்வ தறியா வுளத்தினே னுய்யும்வகைச்
செய்வ தறியேன் றிகைக்கின்றேன் - சைவநெறி (௪0௧)
யுண்ணிரம்பு நின்கருணை யுண்டோ விலையோவென்
றெண்ணி யெண்ணி யுள்ள மிளைக்கின்றேன் - மண்ணினிடைக் (௪0௨)
கொன்செய்கை கொண்ட கொடுங்கூற்றன் குறுகிலதற்
கென்செய்வோ மென்றெண்ணி யெய்க்கின்றேன் - முன்செய்வினை (௪0௩)
யாமறையா நோயா லகமெலிவுற் றையோநான்
றாமரையி னீர்போற் றயங்குகின்றேன் - றாமமுடி (௪0௪)
வள்ளலருள் கொடுக்க வந்திலனே யின்னுமென
வுள்ளமது நீரா யுருகுகின்றே - னெள்ளலுறு (௪0௫)
மாலைபாய்ந் தின்னுமென் வந்திடுமோ வென்றுநெஞ்ச
மாலைபாய்ந் துள்ள மழிகின்றேன் - ஞாலமிசைக் (௪0௬)

கோட்பார வாழ்க்கைக் கொடுஞ்சிறையி னின்றென்னை
மீட்பா ரிலாது விழிக்கின்றேன் - மீட்பாரும் (௪௦௭)

ஆற்றி லொருகாலு மடங்காச் சமுசாரச்
சேற்றி லொருகாலும் வைத்துத் தேய்கின்றேன் - ரூற்றுமயற் (௪௦௮)

பாகமுறு வாழ்க்கையெனும் பாலைவனத் துன்னருணீர்த்
தாகமது கொண்டே தவிக்கின்றேன் - மோகமதிற் (௪௦௯)

போய்ப்படு மோர்பஞ்சப் பொறிகளால் வெம்பாம்பின்
வாய்ப்படுமோர் தேரையைப்போல் வாடுகின்றேன் - மாய்ப்பவரு (௪௧௦)

மீன்போலு மாதர்விழி யால்வலைப் பட்ட
மான்போலுஞ் சோர்ந்து மடங்குகின்றேன் - கான்போல (௪௧௧)

வீற்று முலக விகாரப் பிரளயத்திற்
ரூற்றுஞ் சுழியுட் சுழல்கின்றே - னூற்றவுநான் (௪௧௨)

இப்பாரி லுன்மே லன்பில்லெனினு மன்பனென
வொப்பாரி யேனுமுடையேன் காண் - டப்பாய்ந்த (௪௧௩)

மட்டுவிடே னுன்ருண் மறக்கினும் வெண்ணீற்றுநெறி
விட்டுவிடே னென்றனைக் கைவிட்டுவிடே - றுட்டனென (௪௧௪)

மாலுந் திசைமுகனும் வானவரும் வந்துதடுத்
தாலுஞ் சிறியேனைத் தள்ளிவிடேல் - சாலுலக (௪௧௫)

வாதனைகொண் டோனென்று மற்றெவராலும் வந்து
போதனைசெய் தாலுமெனைப் போக்கிவிடே - னீதயவு (௪௧௬)

சூழ்ந்திடுக வென்னையுநின் ரூண்டருடன் சேர்த்தருள்க
வாழ்ந்திடுக நின்ருண்மலர் (௪௧௭)

திருச்சிற்றம்பலம்.

## விண்ணப்பக்கலிவெண்பா

முற்றிற்று.

---

## இதன் பதவுரை.

☞ 1 - வது வரிமுதல் 6- வது வரிவரையும் பதஉரை.

சொல்பெறு - புகழ்பெற்ற, மெய் ஞானம் * சுயம் சோதிஆம்-மெய்ஞ்ஞானத்தையுடைய சுயஞ்சோதியாகிய, † தில்லைசிற்சபையில் - தில்லையிலுள்ள ஞானசபையில், வாழ்-வாழ்கின்ற, தலைமை தெய்வமே-முதன்மையையுடையகடவுளே; நல் சிவை ஆம் தாயின்-நன்மையைத்தருகின்ற உமாதேவியாகிய தாயோடுகூடி, உலகு அனைத்தும் காக்கும் - எல்லா உலகங்களையும் காத்துரக்ஷிக்கின்ற, திருப்புலியூர் கோயில் அமர்ந்த - (வியாக்ரபாத முனிவரால் பூசித்த) திருப்புலியூர்க்கோயிலில் எழுந்தருளிய, குணக்குன்றமே - குணமலையே; மாயம் மிகும் - மாயம் மிகுந்த, வாள் கள்ளம் உற்ருங்கு விழி - வாளிடனித்துக் கபடத்தன்மை பொருந்தியிருந்தாற்போல விழித்துப்பார்க்கின்ற கண்களையுடைய, மாதர் மயல் அற்றவர் - மாதரது மயக்கத்தை ஒழிந்தவர்களாகிய ஞானிகள், சூழ் - வலம் வருகின்ற, வேட்களம் உற்று ஓங்கும் - திருவேட்களமென்னும் திருப்பதியில் எழுந்தருளிப் பிரகாசிக்கின்ற, விழுப்பொருளே-மேலானபொருளே; வாழ்க்கைமனை-இல்வாழ்க்கைக்கு

---

* சுயம்சோதி - வேறொரு ஒளியை விரும்பாது தானே பிரகாசிக்கும் ஒளி.

† தில்லை - தில்லைவனம். இது ஒரு திருப்பதி.

☞ 6 - வது வரிமுதல் 27 - வது வரிவரையும் பதவுரை.

ரிய, நல்வாயல்எங்கும் - நல்லவாயில்களின் எவ்விடத்தும், நவமணி குன்று ஓங்கு - நவரத்நங்களிழைத்த செய் குன்றுகள் உயர்ந்து தோன்றுகின்ற, திருநெல்வாயல் - திருநெல்வாயல் என்னும் திருப்பதியில், நின்று ஒளிரும் - நின்று விளங்குகின்ற, நீள் ஒளியே - பேரொளியே; செல்வாய் தெழிப்பால் - மேகத்தின்கண் உண்டாகின்ற முழக்கத்தோடு, ஐ வேலை திரை ஒலிபோல் ஆர்க்கும் - அழகிய கடல் அலையின் ஓசைபோல முழங்குகின்ற, கழிப்பாலை - திருக்கழிப்பாலை என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற, இன்பக்களிப்பே - ஆனந்தக்களிப்பே; விழிப்பாலன் - கண்ணுதல் விஷயமாய், கல்லூர்ப் பெருமணத்தை - கல்லூர்ப்பெருமணமென்னும் முதற்குறிப்பினையுடைய தேவாரத் திருப்பதிகத்தை, கட்டுரைக்க - (திருஞானசம்பந்தர்) உறுதியாகச் சொல்ல, சோதிதரும் - ஒளி உருவாய்த் தோன்றியருளின, நல்லூர்ப் பெருமணம் - திருநல்லூர் என்னுந் திருப்பதியில், வாழ் - வாழ்கின்ற, நல்நிலையே - நல்ல நிலையே; சொல்லும் - புகழ்ந்து சொல்லப்படுகின்ற, தயேந்திரர் - அருளிற் சிறந்தவராகிய ஞானியரது, உள்ளத் * தடம் போல் - மனத்தடம்போல, இலங்கும் - விளங்குகின்ற, மயேந்திரப்பள்ளி - திருமயேந்திரப்பள்ளி யென்னும் திருப்பதியில் எழுந்தருளிய, இன்பவாழ்வே - ஆனந்த வாழ்க்கையே; கயேந்திரனை - கஜேந்திரன் என்னும் யானையை, காயல் உறுது-(முதலையானது) கொல்லாமல், அன்று வந்து காத்தோன்-அந்நாளில்வந்து காப்பாற்றினவனுகிய திருமால், புகழ் - புகழ்கின்ற, முல்லைவாயிலின் ஓங்கும் - திருமுல்லைவாயிலென்னுந் திருப்பதியில் எழுந்தருளி விளங்குகின்ற, மணி விளக்கே - இரத்தின தீபமே; மேயபலிக்கா - பொருந்திய பிட்சையின்பொருட்டு, ஊர்தொறும் - ஊர்கள்தோறும், பதம் சேப்ப சென்று - திருவடிகள் சிவக்கும்படி நடந்துபோய், கலிக்காமூர் மேவும் - திருக்கலிக்காமூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற, கரும்பே - (அன்பர்க்குக்) கரும்பை நிகர்த்தவனே; வலி கால் இல் பாய்க்கு - வலியையுடைய கால் இல்லாத பாயாகிய காளிங்கன் என்னுஞ் சர்ப்பத்தின்மீது, ஆடுகின்ற - நடனஞ் செய்கின்ற, ஒரு பச்சை முகில் - ஒப்பற்ற பச்சைநிறமுள்ள மேகமானது (திருமால்), பரவும் - துதிக்கின்ற, சாய்க்காடு மேவும் - திருச்சாய்க்காடு என்னும் திருப்பதியில் எழுந்தருளின, தடம் கடலே - பெரிய ஆனந்தக்கடலே; வாய்க்கு அமைய சொல்ல அல் - வாய்நிறைய சொல்லுதற்கு உரியதல்லாத, நீசர் - சண்டாளர், அங்கு தோய - அவ்விடத்தில் தங்க, உம்பர் ஆம்பெருமை - (அவர்கள்) தேவர்கள் ஆம்படியான பெருமையையுடைய, பல்லவனீச்சரத்து - திருப்பல்லவனீச்சரமென்னும் திருப்பதியில் எழுந்தருளின, எம் † பாவனமே - எமது பரிசுத்தமான பொருளே; நல்லவர்கள் - நல்லவர்களாகிய அன்பர்கள், கண்காட்டும் நெற்றி - கண்ணுள்ள நெற்றியையுடைய, கடவுளே என்று தொழ - கடவுளே யென்று வணங்கும்படி, வெண்காட்டில் மேவுகின்ற - திருவெண்காட்டில் எழுந்தருளின, மெய்ப்பொருளே - அழியாத பொருளே; தண்காட்டி - குளிர்ச்சியைக்காட்டி ‡ கார்காட்டி - மேகத்தைக்காட்டி, § தையலர்தம் கண்காட்டி-மாதருடைய கண்களைக் காட்டி, சோலைகள்சூழ்-சோலைகள் சூழ்ந்திருக்கிற, சீர்-மேன்மையுள்ள, காட்டுப்பள்ளி-திருக்காட்டுப்பள்ளியிலெழுந்தருளின, சிவக்கொழுந்தே-சிவக்கொழுந்தே; பார்காட்டு-பூலோகத்திலுண்டாகிய, உரு - அழகாகிய, காவூர் எல்லாம் - சோலைகள் சூழ்ந்த ஊர்களெல்

* தடம் - தடாகம் அல்லது பிரதேசம். † பாவனம் - பரிசுத்தமாக்கவல்லபொருள்; ‡ கார்காட்டி யென்பதற்கு மேலே தவழப்பெற்று என்றும், § தையலர்தம் கண்காட்டி யென்பதற்கு வண்டுகள் சஞ்சரிக்கப்பெற்று என்றும் பொருள்கொள்க.

☞ 28 - வது வரிமுதல் 51 - வது வரிவரையும் பதஉரை.

லாம், ஒளிநயக்க - தனது ஒளியை விரும்பும்படி, ஓங்கும் - உயர்ந்திருக்கிற, குருகாவூர் வெள்ளடை-திருக்குருகாவூர் வெள்ளடை யென்னுந் திருப்பதியிலெழுந்தருளின், எம் கோவே - எம்மிறைவனே; அருகாத - வளங்குறையாத, கார்காழ் இல்நெஞ்சம் - கரிய வயிரமில்லாத மனத்தையுடைய, கவுணியர்க்கு - திருஞானசம்பந்தருக்கு, போதம் அருள் - ஞானப்பாலை யருள்செய்த, சீர்காழி - திருச்சீர்காழியிலெழுந்தருளின, ஞானத்திரவியமே - ஞானச் செல்வமே; ஓர் - ஒப்பற்ற, காழிபாலற்கா - சீகாழியிலவதரித்தருளின பாலகனாகிய திருஞானசம்பந்த சுவாமிக்கு, அன்று - அந்நாளில், பசும்பொன்தாளம்கொடுத்த - பசியபொன்னினாற் செய்யப்பட்ட தாளத்தைக் கொடுத்தருளின திருப்பதியாகிய, கோலக்காமேவும்-திருக்கோலக்காவி லெழுந்தருளின, கொடையாளா - பரமோதாரனே; கோலம் சாவுள் இருக்கும் புள் - அழகிய சோலையிலிருக்கிற புட்களும், இருக்கும் - இருக்குவேதமும், ஓதும் - துதிக்கின்ற, புகழ்வாய்த்த - புகழ்பொருந்திய, புள்ளிருக்குவேளூர் - திருப்புள்ளிருக்கு வேளூரிலெழுந்தருளின, புரிசடையாய் - கட்டப்பட்ட சடையையுடையோனே; கள் இருக்கும் - தேன்பொருந்திய, காவில் மருவும் - பூஞ்சோலைகளில் தவழ்கின்ற, கனமும் - மேகமும், திசைமணக்கும் - அஷ்டதிக்குகளிலும் பரிமளிக்கிற, கோவில்மருவு - கோயில்கள் பொருந்தின, கண்ணார் கோயிலாய் - திருக்கண்ணார் கோயிலையுடையவனே; மாவின்இடைமுடியின்- மாமரத்தின் இடையினும் முடியினுமுள்ள, தீங்கனியென்று - இனிய கனிகளென்று, எல்வில் - பகற்காலத்தில் (சூரியோதயகாலத்தில்), முசுதாவும் - குரங்குகள் தாவுகின்ற, கடைமுடியில்மேவும் - திருக்கடைமுடியி லெழுந்தருளின, கருத்தா - கர்த்தனே; கொடைமுடியா - ஈகைமாறாத, நன்றியூர் என்று - நன்மையாகியவூரென்று, இந்த ஞாலம் எல்லாம் வாழ்த்துகின்ற - இந்த உலகமெல்லாந் துதிக்கின்ற, நின்றியூர்மேவும் நிலைமையனே - திருநின்றியூரிலெழுந்தருளின நிலைமையுடையோனே; ஒன்றி - பொருந்தி, கருபுன்கூர் - பிறவியாகிய புன்மை மிகுந்த, உள்ளம் - மனத்தினையுடைய, கயவர் - கீழ்மக்கள், நயவா - விரும்பாத, திருப்புன்கூர் மேவும் - திருப்புன்கூரென்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருக்கிற, சிவனே - சிவபெருமானே; உருபொலிந்து - அழகுமிகுந்து, ஈடு ஊர் இல்லாது உயர்ந்த - சமானமான ஊர்கள் இல்லாமல் உயர்ந்த, எதுவினால் - காரணத்தால், ஓங்கு - சிறந்து விளங்குகின்ற, திருநீடூர் - திருநீடூரென்னுந் திருப்பதியில், இலங்கும் - பிரகாசிக்கிற, நிழல்தருவே - நிழலையுடைய கற்பகத்தருவே, பீடுகொண்டு மன்னி - பெருமையைக்கொண்டு நிலைபெற்று, ஊர் எல்லாம் வணங்க - எல்லா ஊர்களும் வணங்கும்படி, வளம்கொண்ட - வளத்தைக்கொண்டிருக்கின்ற, வன்னியூர்மேவும் - திருவன்னியூரில் எழுந்தருளிய, அதிபதியே - இறைவனே; மன்னர் - அரசரது, சகவாழ்வு - பிரபஞ்சவாழ்க்கை, இக்குடிகள் - இக்குடிகளது, அடிமண் பூசலால் - பாதரேணுவைப் பூசிக்கொள்ளுதலாலுண்டானது, என்னும் - என்று சொல்லுதற்குரிய, வேள்விக்குடி - திருவேள்விக்குடி யென்னுந் திருப்பதியில், அமர்ந்த - வீற்றிருக்கின்ற, வித்தகனே - ஞானசொரூபனே; சூழ்உற்றோர் - வலம் வந்தோர்கள், விண் எதிர்கொண்டு - சொர்க்கலோகத்தையடைந்து, இந்திரன் போல் மேவி - இந்திரன்போல அமைந்து, நெடுநாள் வாழப்பண் - நெடுநாள் வாழும்படி செய்கின்ற, எதிர்கொள்பாடி - திருவெதிர்கொள்பாடி யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, பரம்பொருளே - மேலான பொருளே; நண் - பொருந்திய, உவணம்சேர் இறைவன் - கருடவாகனத்தி லமைந்த இறைவனாகிய திருமால், மகிழ்ந்து வணங்கும் - மகிழ்ந்து வணங்குகின்ற, மணஞ்சேரி நீங்கா - திரு

52-வது வரிமுதல் 73-வது வரிவரையும் பத உரை:

மணஞ்சேரி யென்னுந் திருப்பதியை விட்டுப் பிரியாத, மகிழ்வே-களிப்பே; மணஞ்சேர்ந்து - (கலவைச் சந்தனத்தின்) மணம்பொருந்தி, வார் அட்ட-கச்சைக்கிழித்த, கொங்கை - தனங்களையுடைய, மலையாளொடும் - மலைமகளாகிய உமாதேவியொடும், கொறுக்கைவீரட்டம் - திருக்கொறுக்கைவீரட்டம் என்னுந் திருப்பதியில், மேவும் - எழுந்தருளின, வியன் நிறைவே - பரிபூரணமே; ஓர் அட்ட திக்கும் - ஒப்பற்ற எட்டுத் திசைகளிலும், கதிர்நாட்டி - ஒளிவிரித்து, சீர்கொள் - சிறப்பைக் கொண்ட, திருத்தொண்டர் - திருத்தொண்டரது, உள்ளம் ஒக்கும் - மனத்தை நிகர்க்கின்ற, கருப்பறியலூர்-திருக்கருப்பறியலூர் என்னுந் திருப்பதிக்கு, அரசே-வேந்தனே; மிக்க - மேலான, திருமா வளரும் - திருமாது வளருகின்ற, செந்தாமரை வளரும் - செந்தாமரை மலர்கள் மிகுந்திருக்கின்ற, செய் - வயல்கள்சூழ்ந்த, குரக்குக்காவளரும் - திருக்குரக்குக்காவென்னுந் திருப்பதியில் ஓங்குகின்ற, இன்பம் - இன்பத்தைத் தருகின்ற, கனசுகமே - பேரின்பமே; தாவும் மயல் - பரவுகின்ற காமமயக்கம், காழ்கொள் - வயிரங்கொண்ட, இருமனத்து-பெரிய மனத்தினிடத்து உள்ள, கார் இருள் - கரிய அஞ்ஞான இருளை, நீத்தோர் - நீக்கினவர்களாகிய ஞானிகள், மருவும் - சேர்கின்ற, வாழ்கொளிபுத்தூர் -திருவாழ்கொளிபுத்தூர் என்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, மணிச்சுடரே-மணிவிளக்கே; தாழ்வு அகற்றநண் - குடிகளது வறுமையை நீக்கவந்த, இ படிக்கு அரையர்-இந்தப்பூலோகத்திற்கு அரசரானவர்கள், நாள்தோறும் வாழ்த்துகின்ற - தினந்தோறும் புகழ்கின்ற, மண்ணிப்படிக்கரை - திருமண்ணிப்படிக்கரை யென்னுந்திருப்பதியில், வாழ் - வாழ்கின்ற, மங்கலமே - மங்கலப்பொருளே, விண்ணின் இடை - ஆகாயத்தின்கண், வாமம் ஆம் - அழகாகிய, புல்லி ஊர் - புறவிதழ்கள் பொருந்திய, மலர்ச்சோலை - பூஞ்சோலைகள், சூழ்ந்து இலங்கும் - சூழ்ந்து விளங்குகின்ற, ஓமாம் புலியூர் - திருவோமாம்புலியூர் என்னுந்திருப்பதியில், வாழ்-வாழ்கின்ற, * உத்தமமே - மேலானபொருளே; நேமம் ஆர்ந்த-நியமம் பொருந்திய, வான் நாட்டும் உள்ளோர் - விண்ணுலகத்தில், மருவுகின்றோர் - வாழ்வோராகிய தேவர்கள், போற்று - வணங்குகின்ற, திருக்கானாட்டு முள்ளூர் - திருக்கானாட்டு முள்ளூர் என்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, † கலைக்கடலே - கலைக்கடல் போல்பவனே; மேல் நாட்டு - ஆகாயத்தில், தேரை ஊர் - தேரைச் செலுத்துகின்ற, செங்கதிர் போல் - பாலசூரியன் போல, செம்மணிகள் நின்று இலங்கும் - மாணிக்கங்கள் நிலை பெற்று விளங்குகின்ற, நாரையூர் மேய - திருநாரையூர் என்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, ‡ நடுநிலையே-நடுநிலையையுடையபொருளே; பாரில்-பூமியில், உடம்பு ஊர்பவத்தை - உடம்பெடுக்கின்ற பிறவியை, ஒழித்தருளும்-நீக்கி யருளுகின்ற, மேன்மை-மேம்பாட்டையுடைய, கடம்பூர் வாழ் - திருக்கடம்பூர் என்னுந்திருப்பதியில் வாழ்கின்ற, என் இரண்டுகண்ணே - என்னிரண்டுகண்ணுக்கு நிகரானவனே; தடம் பொழிலில் - பெரிய சோலைகளில், கொந்து அணவும் - பூங்கொத்துக்கள் பொருந்திய, கார்குழலார் - மேகத்தை நிகர்த்த கூந்தலையுடைய மாதர்கள், கோலம் - அழகாகிய், மயில் போல் - மயில்கள்போல, உலவும் - உலாவுகின்ற, பந்தண நல்லூர் - திருப்பந்தணநல்லூர் என்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, பசுபதியே - சகல ஆன்மாக்களுக்குந்தலைவனே; கந்தம்மலர்-மணமுள்ள தாமரைமலரை ஆசனமாகவுடைய, § அஞ்சன் - பிரமதேவனது, ஊர்-ஊராகிய சத்தியலோகம், செய்த

* உத்தமம்-பிரகிருதியென்னும் இருளைக்கடந்தபொருள். † கலைகள்-வேதாகமமுதலிய கலைகள். ‡ நடுநிலை-ஐந்தொழிற்கும் பொதுவாய் இருக்கும் நிலை. § அஞ்சன்-ஹம்ஸன் என்னும் வடமொழித்திரிபு; இதற்கு அன்னத்தைவாகனமாகவுடையவன் என்பது பொருள்.

☞ 74-வது வரிமுதல் 95-வது வரிவரையும் பத உரை.

தவத்தால் - செய்த தவப்பேற்றால், அப்பேர் கொண்ட-அந்தப் பேரைக்கொண்ட. * கஞ்சனூர்வாழும்-திருக்கஞ்சனூரில் வாழ்கின்ற, என்றன் கண்மணியே - எனது கண்மணிபோலும் சிறந்தவரே; அம் சுகங்கள் - அழகிய கிளிகள், நாடி - விரும்பி வந்து, காவுள்ளே-சோலையினுள்ளே, நமச்சிவாயம் - ஸ்ரீபஞ்சாட்சரத்தை, புகலும்-உச்சரிக்கின்ற, கோடிக்கா மேவும் - திருக்கோடிக்கா வென்னும் திருப்பதியில் எழுந்தருளிய, குளிர்மதியே-குளிர்ந்த சந்திரனே; ஓடி - விரைந்து சென்று, கருநமது பிறவியானது, மங்கல் - ஒழிதலை, அக்குடியின் - அவ்விடத்துக்குடியிருப்பினால், காண்டும் என - காண்பேமென்று, ஓதும் - யாவரும் சொல்லுகின்ற, திருமங்கலக்குடியில் - திருமங்கலக்குடி யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, தேனே - தேன்போல்பவனே; தருமம் மனம் - தருமத்தையுடைய மனத்தை, தாள் மலரை மருவுவிப்போர் - திருவடிமலரிற் பொருந்தச் செய்பவர், வாழும் - வாழுகின்ற, பனந்தாளில் - திருப்பனந்தாளில், பால் உகந்த பாகே - பாலைவிரும்பினபாகே; வாய்பாடி - வாயினால் துதித்து, அங்கு சூழ்கினும் - அவ்விடத்தை வலம் வந்தாலும், தினம் - நாள்தோறும், தாளில் சூழ் - யாவரும் பாதத்தைவந்து சுற்றிக் கொள்ளுதற்குரிய, திரு ஆம் என்று - செல்வமுண்டாகு மென்று அறிந்து, உலகர் வாழ் - உலகத்தார் சென்று வாழ்கின்ற, திருவாய்ப்பாடி - திருவாய்ப்பாடி யென்னும் திருப்பதியில் எழுந்தருளிய, இன்பவாரிதியே - ஆனந்தக்கடலே; ஏழ் புவிக்குள் - ஏழுலகத்தினுள்ளும், மருவ - பொருந்தியிருத்தற்கு, வாய் - வாய்ப்பான, † ஞல்லூர்-நல்லவூரானது, ஈதே என - இதுதானென்று, வானவர் சேர் - தேவர்கள் சேர்கின்ற, சேய்ஞலூர் - திருச்சேய்ஞலூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளிய, இன்பச் செழுங்கனியே - இன்பத்தைத் தருகிற செழுமையாகிய கனியே; வாஞ்சையுறும் - இச்சையுறுகின்ற, சீவன் - சீவனானவன், குடியுற - குடியிருக்க, இ - இந்த, சீர்நகர் ஒன்றே என்னும்-மேன்மையாகிய நகரம் ஒன்றே அமையுமேன்று சொல்லுதற்குரிய, சீர் - சிறப்பையுடைய, தேவன்குடி - திருந்தேவன்குடி யென்னுந்திருப்பதியை, மகிழ்ந்த - விரும்பின, தெள்ளமுதே-தெளிவாகிய அமுதமே; ஓ இல் - நீங்குதலில்லாத, மயல் ஊர் மனம் போல்-காம மயக்கத்தையுடைய மனத்தைப்போல, வயலில்-வயல்களில், கயல் ஊர்-சேல்மீன்கள் தாவுகின்ற, வியலூர்-திருவியலூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளிய, சிவாநந்த வெற்பே - சிவானந்த மலையே; அயல்-பக்கத்திலுள்ள, ஆம்பல்-தாமரை மலரின், மட்டை - தேனை, ஊர் வண்டினங்கள்-தவழ்கின்ற வண்டுக்கூட்டங்கள், வாய்ந்து-அமைந்து, விருந்து கொள்ளும் - விருந்தாகக் கொண்டு உண்ணுகிற, கொட்டையூருள் - திருக்கொட்டையூரில், கிளரும் - விளங்குகின்ற, கோமளமே - மரகதமே; இட்டமுடன் - விருப்பத்துடன், என் ‡ நம்பர் என் நம்பர் என்று - எனது நம்பர் எனது நம்பர் என்று, அயன் மால் வாதுகொள - பிரமனும் திருமாலும் வாது செய்ய, இன்னம்பர் மேவிநின்ற-திருவின்னம்பர் என்னும் திருப்பதியையடைந்து நின்ற, என்உறவே-எனது உறவே; முன்நம்பும் - முற்காலத்தில் நம்புகின்ற, மாற்கும் - திருமாலுக்கும், புறம்பு இயலா - புறத்தே கிடைக்கப்பெறாத, வாய்மை - உண்மைப் பொருளை, அருள்செய்ய - அருளிச்செய்ய, உள்ளம் ஏற்கும் - மனத்தில் ஏற்றுக் கொண்ட, புறம்பியம்வாழ் - திருப்புறம்பியம் என்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, என் உயிரே - எனது உயிரே; மால் - பெரிய, கருவின்கண் - பிறவியினிடத்து, விசயம் - வெற்றியை, அங்கைக்கனிபோல் பெற - உள்ளங்கைக் கனிபோல் பெற்

* கஞ்சன்-தாமரைமலரை ஆசனமாகவுடையவன்.

† ஞல்லூர்-நல்லூரென்பதன் போலி. ‡ நம்பர்-சுகுணபூர்த்தியுள்ளவன்.

☞ 96-வது வரிமுதல் 116-வது வரிவரையும் பத உரை.

றுக்கொள்ள, தொண்டர் - அடியார்கள், எண் - நினைக்கின்ற, விசயமங்கையில் வாழ் - **திருவிசயமங்கை**யென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, என்குருவே - எனது குருமூர்த்தியே, மண் உலகில் வைகாஊர் - மண்ணுலகத்தில் இருக்கவொண்ணாதவூர், நம்பொருட்டான் வைகியதென்று - நம்பொருட்டாக வந்திருக்கிறதென்று, அன்பர்தொழும் - அன்பர்கள் வணங்குகின்ற, வைகாவூர் மேவிய - **திருவைகாவூர்** என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, என் வாழ்முதலே - என் வாழ்க்கைக்குக் காரணமானவனே; உய்யும்வகை - பிழைக்கும்படி, காத்தும் - இரட்சித்தும், படைத்துழ் - சிருஷ்டி செய்தும், கலைத்தும் - சங்கரித்தும், நிற்போர் - நிற்பவர்களாகிய திருமால் பிரமன் ருத்திரன் என்பவர்கள், நாள்தோறும் ஏத்தும் - தினந்தோறும் துதிக்கின்ற, *குரங்காட்டின் - **வட குரங்காடுதுறை** என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, என் நட்பே - எனது சிநேகமே; மாதழைத்த - மாமரத்தில் செழித்த, வண்பழம் - வளவிய கனிகள், நத்தின் - சங்குகளின், குவி - குவிந்த, வெள்வாயில் - வெண்மையாகிய வாயினிடத்து, தேன் - தேனை, வாக்கியிட - வார்க்க, உண் - (அவைகள்) உண்ணுகின்ற, பழனத்து - **திருப்பழனமென்னுந்** திருப்பதியில் எழுந்தருளிய, என்றன் உயிர்க்குயிரே - எனது உயிருக்குயிராயிருப்பவனே, பண்பு அகன்ற - நற்குணம் நீங்க, வெய்யாற்றில் நின்றவரை - தீநெறியில் நின்றவரை, மெய்யாற்றில் ஏற்று - உண்மைநெறியிற் செலுத்துகின்ற, ஐயாற்றில்மேவிய - **திருவையாறு** என்னுந் திருப்பதியிலெழுந்தருளிய, என் ஆதரவே - எனக்கு ஆதரவாயிருப்பவனே; பொய் ஆற்றி - பொய்யைத் தணித்து, மெய்த்தானம் நின்றோர் - உண்மைநிலையில் நின்றவர், வெளித்தானம் மேவு - சிதாகாயத்தையடைதற்குரிய, திருநெய்த்தானத்தின் அமர்ந்த - **திருநெய்த்தானம்** என்னுந்திருப்பதியிலெழுந்தருளிய, நித்தியமே - அழியாப்பொருளே; மைத்தகரும்புலி - கறுத்த கரும்புலியானது, ஊர்காலையொடும் - ஊரெருதுகளோடும், கண்ணோட்டம் கொள்ளும் - நட்புக்கொள்ளுதற்கிடமாகிய, பெரும்புலியூர்வாழ் - **திருப்பெரும்புலியூரில்** வாழ்கின்ற, கருணைப்பேறே - அருட்பேறே; பொன்னார் - இலக்குமியையும், கௌத்துவமும் - கௌஸ்துவமணியையும், பூண்டோன் - அணிந்தவனாகிய திருமால், விரும்பி - இச்சித்து, நிதம் - நாள்தோறும், புகழ்ந்து - தோத்திரஞ்செய்து, அருளை மன்னும் - அருளைப்பெறுதற்கிடமாகிய, மழபாடி - **திருமழபாடியி**லெழுந்தருளிய, வச்சிரமே - வயிரமே; துன்னுகின்ற நாய்க்கும் கடையேன் - அடைந்த நாயினும் இழிந்தவனாகிய அடியேனது, நவைதீர - குற்றங்கள் ஒழியும்படி, நல் கருணைவாய்க்கும் - நன்மையாகிய திருவருள் கிடைத்தற்குரிய, பழுவூர் - **திருப்பழுவூரி**லெழுந்தருளிய, மரகதமே - மரகதமணியே, † தேய் ‡ களங்கம் இல் - தேய்தலும் களங்கமுமில்லாத, வான் ஊர் மதிபோல் மணியால் - ஆகாயத்தில் தவழ்கின்ற சந்திரனையொத்த முத்துக்களின் ஒளியால், குமுதம் மலர் - அல்லிமலர்கின்ற, கானூர் - **திருக்கானூரில்**, உயர் - சிறந்துவிளங்குகின்ற, தங்கக்கட்டியே - பொற்கட்டியே; $ கோலம் - அழகிய, நானூறுதுறை கொண்ட - நானூறுதுறைகளைக்கொண்ட, கோவை அருள் - திருக்கோவையை அருள்செய்த, கோவை - திருவாதவூரடிகளை, மகிழ் - மகிழ்ந்தருளின, || ஆலந்துறையில் - **திருவாலந்துறை**

---

* குரங்காடு என்பது குரங்காட்டி னென நின்றது வேற்றுமைச் சந்தி. † தேய் என்பது விகுதிகுன்றிய முதனிலைத் தொழிற்பெயர். ‡ களங்கம் என்பது களங்கு என ஈறு தொகுத்தலாயிற்று. $ கோலத்துறை என்பது கோலந்துறை யென எதுகை நோக்கி விகாரமாயிற்று. || ஆலந்துறை என்பது அன்பிலாலந்துறை யென்னுந் திருப்பதி.

☞ 117-வது வரிமுதல் 138-வது வரிவரையும் பத உரை.

யென்னுந்திருப்பதியி லெழுந்தருளிய, அணிமுத்தே - அழகிய முத்தமே, நீலம் கொள் - நீலமலர்களைக் கொண்ட, தேம்துறையில் - மணமுள்ளதுறைகளில், அன்னம் மகிழ் - அன்னப்பறவைகள் மகிழ்ந்து வாழ்கின்ற, சேக்கைபல நிலவும் - பல கூடுகள் நிலைபெற்றுவிளங்குகின்ற, மாந்துறைவாழ் - திருமாந்துறையில்வாழ்கின்ற, மா - பெரிய, மாணிக்கமலையே - மாணிக்கக்குன்றே; ஏந்து அறிவு ஆம் - ஞானத்தைத்தாங்கியிருக்கிற, நூல்துறையில் நின்றவர்கள் - சாஸ்திரவழியில் நின்றவர்களாகிய ஞானிகள், நோக்கி - தரிசித்து, மகிழ்வு எய்து - மகிழ்ச்சியடைகின்ற, திருப்பாற்றுறையில் நின்ற - திருப்பாற்றுறை யென்னுந்திருப்பதியில் நிலைபெற்ற, பரஞ்சுடரே - பேரொளியே; தேன் ஐ காவுள் மலர்கள் - தேனையும் அழகையு முடைய சோலையிலுள்ள மலர்கள், நால் திசையும் - நான்கு திசைகளையும், தேம்கடல் என்று ஆக்குவிக்கும் - தேன் கடல்களாகச் செய்கிற, ஆனைக்கா - திருவானைக்கா என்னுந் திருப்பதியில், மேவி அமர் - பொருந்தியமர்ந்த, அற்புதமே - ஆச்சரியகரமான வடிவே; மானைப்போல் - மானினது நோக்கம்போன்ற, மை * ஞீலம் வாள்கண் - மையெழுதப்பெற்று நீலமலர்போன்ற ஒளியுள்ள கண்களையுடைய, மலராள் மருவு - கமலாஸனையாகிய இலக்குமி வாழ்கின்ற, திருப்பைஞ்ஞீலிமேவும் - திருப்பைஞ்ஞீலி யென்னுந் திருப்பதியி லெழுந்தருளிய, பரம்பரமே - மேலான பொருள்களெல்லாவற்றுள்ளும் மேலான பொருளே; எஞ்ஞான்றும் - எக்காலத்தும், † எச்சு இரா - ஏசவிராமல், மங்கலத்தோடு இன்பந்தரும் - மங்கலத்துடனே இன்பத்தையும் தருகின்ற, பாச்சிலாச்சிராமம்சேர் - திருப்பாச்சிலாச்சிராமம் என்னுந் திருப்பதியைச்சேர்ந்த, அருள் நிலையே - கிருபாநிலயமே, நீச்சு அறியாது - (உயிர்கள்) நீந்த அறியாமல், ஆங்கு ஓய் - அவ்விடத்து ஓய்ந்து கிடத்தற்குரிய, மலைபிறவி - வருத்துகின்ற பிறவியாகிய, ஆர்கலிக்கு - கடலுக்கு, ஓர் - ஒப்பற்ற, வார்கலம் ஆம் - பெரிய கப்பலாகிய, ஈங்கோய்மலை - திருவீங்கோய்மலை யென்னுந் திருப்பதியில், வாழ் - வாழ்கின்ற, இலஞ்சியமே - சுகுண மேருவே, ஓங்காது - உயர்வடையாமல், நாள்போக்கி நிற்கும் - நாள் கழித்து நிற்கிற, நவை உடையார் - குற்றமுடையவர், நாடு அரிது ஆம் - நோக்குதற்கரிதாகிய, வாட்போக்கி மேவுகின்ற - திருவாட்போக்கி யென்னுந் திருப்பதியிலெழுந்தருளிய, வள்ளலே - உதாரசீலனே; கோள்போக்கி . உமது குற்றங்களை நீக்கி, தம்பநெறிபோல் நில்லுங்கள் என - தூணினது நிலைபோல அசைவற்று நில்லுங்கள் என்று, பூவை சொல்லும் - நாகணவாய்ப்புட்கள் சொல்லுகின்ற, கடம்பந்துறை - திருக்கடம்பந்துறை என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, நிறைவே - பூரணப்பொருளே; மல்லலொடு - வளப்பத்தோடு, வாழ் - வாழ்கின்ற, உம்பர் ஆய்த்து உறை - மேலிடத்துறைகின்ற, வாள் மன்னவரும் - தேவராஜாக்களும், மன்னவரும் - பூலோகத்தரசர்களும், சூழும் - வலம் வருகின்ற, பராய்த்துறைவாழ் - திருப்பராய்த்துறை யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, தோன்றலே - பெரியோனே; கூழும் - உணவும், பல்நற்குடியும் - பலவாகிய நல்ல குடிகளும், ஓங்கு - உயர்ந்து, நலம்பெருகும் - நன்மை பெருகுதற்குரிய, மேன்மை - மேன்மையையுடைய, திருக்கற்குடி - திருக்கற்குடி யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, சந்தான கற்பகமே - சந்தான கற்பக விருட்சமே; சிற்சுகத்தா - ஞான சுகத்தைத் தருபவனே, பின் சநநம் இல்லா - பின்னே உண்டாவதாகிய பிறவியில்லாத, பெருமைதரும் - பெருமையைக் கொடுக்கின்ற, உறையூர் திருவுறையூரில், சற்சனர்சேர் - சாதுஜனங்கள் சேர்கின்ற, மூக்கீச்சரத்து - திருமூக்கீச்சரத்து எழுந்தருளிய, அணியே - ஆபரண

* ஞீலம்-நீலம் என்பதன் போலி. † ஏச்சு - நிந்தை.

☞ 139-வது வரிமுதல் 161-வது வரிவரையும் பத உரை.

விசேஷமே; மல்செய் - சிறுகின்ற, அராப்பள்ளி மேவுமவன் - சர்ப்பசயனத்தை யுடைய திருமால், நின்று வாழ்த்தும் - நிலைபெற்றுத் துதிக்கின்ற, சிராப்பள்ளி - **திருச்சிராப்பள்ளி** யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, ஞானத்தெளிவே - ஞானத்தேனே; இரா - இராக்காலத்தில் படுத்த, பள்ளிநின்று - சயனத்திலிருந்து, எழல் - உயிரோடு எழுதல், மெய் அன்று என் - உண்மை அல்லவென்று துணிந்து, உலகு வாழ்த்துகின்ற - உயர்ந்தோர் வாழ்த்துகின்ற, நன்று - நன்மையாகிய, எறும்பியூர் இலங்கும் - **திருவெறும்பியூரென்னுந்** திருப்பதியில் விளங்குகின்ற, நல்நெறியே - சன்மார்க்கமே; துன்று - நெருங்கிய, கயல்கண்ணார் - சேல் மீன்போலும் கண்களையுடையவராகிய மாதரது, நெடுங்கள்ளத்தை கட்டழித்த - பெரிய வஞ்ச வொழுக்கத்தைக் கட்டோடே அறுத்த, மெய்த்தவர்சூழ் - உண்மையாகிய தபோதனர் சூழ்கின்ற, தண் ஆர்—குளிர்ச்சிபொருந்திய, நெடுங்களம் - **திருநெடுங்களம்** என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, மெய்தாரகமே - உண்மையாகிய ஆதரவே, எண்ணார் - பகைவராகிய, தருக்கு ஆள் - செருக்குடையவர்களது, துப்பு அள்ளி - வலியைக்கெடுத்து, தகைகொண்டோர்-பெருமையையுடையோர், சூழும் - வலம்வருகின்ற, திருக்காட்டுப்பள்ளியில்வாழ் - **திருக்காட்டுப் பள்ளி** யென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, தேவே - தெய்வமே; மருகாட்டும் - மணத்தைத் தருகின்ற, நீலம் - நீலமலர்கள், பொழிற்குள் - சோலைக்குள்ளே, நிறை - நிறைந்த, தடங்கட்கு - தடாகங்களுக்கு, ஏர்காட்டும் - அழகைச் செய்கின்ற, ஆலம்பொழில் - **திருவாலம்பொழில்** என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, சிவயோகப்பயனே - சிவயோகத்தின் பயனாயிருப்பவனே; சீலம் நிறைவு ஆம் - ஒழுக்க நிறைவாகிய, துருத்திகொண்டு - துருத்தியினால், உள் அனல் எழுப்புவோர் - உள்ளே யிருக்கின்ற மூலாக்கினியை எழுப்புவோராகிய யோகிகள், புகழும் - புகழ்கின்ற, பூந்துருத்தி மேவும் - **திருப்பூந்துருத்தியில்** எழுந்தருளிய, சிவபுண்ணியமே - சிவபுண்ணிய வடிவே, காந்து உருவம் - ஒளி வீசுகின்ற உருவத்தையுடைய, தண்டி - தண்டத்தை யுடையவராகிய வைரவக் கடவுள், காசிக்கண் - காசிக்ஷேத்திரத்தில், ஊர் போற்றுந்தகை - ஊர்க்காவல் செய்யும் பெருமையை, செய்து - அருள்செய்து, கண்டியூர் வாழும் - **திருக்கண்டியூர்** என்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, களைகண்ணே - ஆதரவே; கொண்ட இயல்பின் - கொண்ட நல்நெறியினால், வேற்றுத்துறையுள் - வேறுவழியில், விராவாதவர் - கலவாதவர்களாகிய ஞானிகள், புகழும் - புகழ்கின்ற, சோற்றுத்துறையுள் - **திருச்சோற்றுத்துறை** யென்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, சுகவனமே - இன்பப்பெருக்கே; ஆற்றல் இல்லா - தணித்தல் இல்லாத, தீது - தீமைக்கிருப்பிடம், இக்குடி என்று - இந்தக்குடியென்று, செப்பப்படார் - சொல்லப்படாதவர்கள், மருவும் - வாழ்கின்ற, *வேதிக்குடி-**திருவேதிக்குடி** யென்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, இன்பவெள்ளமே - இன்பப்பெருக்கே; கோது இயலும் - குற்றம் பொருந்திய, வன்குடி - வலியகுடியிற் பிறந்து, திட்டை மருவார் - நிந்தையடையாதவர்களாகிய நல்லோர், மருவு - பொருந்துகின்ற, திருத்தென்குடித்திட்டை - **திருத்தென்குடித்திட்டை** யென்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, சிவபதமே - சிவபதவியே, நன்கு உடைய உள்ளம்-நன்மையையுடைய மனத்தை, மங்கைமார் மேல் உறுத்தாதவர்-மாதர்மீது ஊன்றாதவராகிய ஞானிகள், புகழும் - புகழ்கின்ற, புள்ளமங்கைவாழ்-**திருப்புள்ளமங்கை** என்னுந்திருப்பதியில் வாழ்கின்ற, பரமபோகமே-மேலான விளைவே; கள்ளம் இல் - வஞ்சகமில்லாத, அஞ்சு அக்கரப்பள்ளிதனில் -

* வேதிகுடி என்றது வேதிக்குடி யென விரித்தல் விகாரம்,

☞ 162-வது வரிமுதல் 182-வது வரிவரையும் பத உரை.

ஸ்ரீ பஞ்சாட்சரப் பள்ளிக்கூடத்தில், தாம்பயின்ற மைந்தர்கள் - தாம்பழகின மைந்தர்கள், சூழ் - சூழ்கின்ற, சக்கரப்பள்ளிதனில்-**திருச்சக்கரப்பள்ளி** யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, தண்ணளியே - அருள்வடிவே; மிக்க அருகா - மிகுந்த சமீபத்தில், ஊர்சூழ்ந்து - ஊர்கள் சூழப்பெற்று, அழகுபெற ஓங்கும் - அழகுண்டாக வோங்குகின்ற, கருகாவூர் - **திருக்கருகாவூர்** என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, இன்பக்கதியே - இன்பத்தைத்தருகின்ற முத்திவடிவே; முருகு ஆர்ந்த - மணம் பொருந்திய, சோலைத்துறையில் - சோலைவழிகளில், சுகம் - கிளிகள், சிவநூல் வாசிக்கும் - சிவநூல்களைவாசிக்கின்ற, பாலைத்துறையில் - **திருப்பாலை** யென்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, பரிமளமே - பரிமளமே; சீலத்தர் - ஞானவொழுக்கத்தையுடையாரது, சொல் ஊர் அடி - சொன்மாலைகள் அணியப்பெற்ற திருவடியை, அப்பர் - திருநாவுக்கரசருடைய, தூயமுடியின்மேல் வைத்த - பரிசுத்தமான முடியின் மீதுவைத்த, நல்லூர் அமர்ந்த **திருநல்லூர்** என்னுந்திருப்பதியில் அமர்ந்தருளிய, நடுநாயகமே - நடுநாயகமணியே; மல் ஆர்ந்த மா ஊர் - வளம் பொருந்திய குதிரைகளைக்கட்டின, இரவியின்-சூரியனது,பொன்வையம் அளவும்- பொற்றேர் இடறுகின்ற, சிகரி - கோபுரத்தையுடைய, ஆவூரில் உற்ற - **திருவாவூ**ரில் எழுந்தருளின, எங்கள் ஆண்டகையே - எங்களது பரமபுருஷனே; ஓவாது - இடையறாமல்.* சித்திமுற்ற- அட்டமாசித்திகளும் கைகூடும் படி, செழும் பொழிலில் - செழுமையாகிய சோலைகளில், பூவை - நாகணவாய்ப்புட்கள், யோகம்செய்யும் - யோகத்தைச் செய்கின்ற. சத்திமுற்றம் மேவும் - **திருச்சத்திமுற்ற** மென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, சதாசிவமே - சதாசிவமே; பத்தி யுற்றோர் - பத்தி செய்யுமவர்கள், முள்-முட்களையுடைய, தீ-நெருப்புப்பரப்புப் போன்ற, சுரத்தில் - பாலைநிலத்தில், முயலாவகை - போகாதவண்ணம், அருளும் - அருள் செய்கின்ற, பட்டீச்சுரத்து - **திருப்பட்டீச்சுர** மென்னுந்திருப்பதியி லெழுந்தருளிய, எம் பராபரமே - எமது பராபரமே, துட்டமயல்-கெடுதியாகிய காம மயக்க மென்கின்ற, தீங்கு - தீமையை, விழையார்தமை - விரும்பாதவரை, வான் சென்று அமர செய்விக்க - மேலானவிடத்திற் சென்று அமர்ந்திருக்கச் செய்விக்க, ஓங்கு - விளங்குகின்ற, பழையாறையில் - **திருப்பழையாறை** யென்னும் திருப்பதியில் எழுந்தருளிய, என் உள் உகப்பே - என் மனக்களிப்பே; பாங்குபெற ஆர்ந்த - அழகுபெற்றிருக்கின்ற, வடஇலையான் - ஆலிலையைத் துயிலிடமாகக் கொண்டவனாகிய திருமாலும், அன்னத்தான் - அன்னவாகனத்தையுடையவனாகிய பிரமனும், நிதம் - நாள்தோறும், போற்றி - வணங்கி, சார்ந்த - சேர்ந்திருக்கின்ற, வடதளிவாழ் - **திருவடதளி** யென்னுந் திருப்பதியில்வாழ்கின்ற, தற்பரமே - தற்பரமே; சேர்ந்த - பொருந்திய, மலம் சுழிகின்ற - மலப்பெருக்குச் சுழல்கின்ற, மனத்தர்க்கு -

* சித்தி-அட்டமாசித்திகள். அதாவது 1. அணிமா=சிறிய உயிர்களிலே பரமகட்டையான அணுரூபமாய்ப் புகுந்திருப்பது. 2. மகிமா=பிருதிவிமுதல் சிவமீறான முப்பத்தாறுதத்துவமும் உள்ளும் புறமும் நீங்காதிருந்து நிறையும் பெருமை. 3. இலகிமா=மேருமலைபோலக் கனமான தூலத்தை எடுத்தால் இலகுவாயிருப்பது. 4. கரிமா=பரமாணுப்போன்ற வடிவம் எடுத்தால் மேருமலைபோலிருப்பது. 5. பிராத்தி=பாதாளமிருந்து பிரமலோகம் போவதும், மீண்டும் பாதாளத்துக்கு வருவதும். 6. பிரகாமியம்=ஒருதேகத்திலிருந்து வேறொரு தேகத்தில் புகுதலும், ஆகாசத்தில் சஞ்சரித்தலும், இச்சித்தபோகமெல்லாம் தானினைத்தபடி அநுபவித்தலும். 7. ஈசத்துவம்=முத்தொழிலைச்செய்தும், சூரியன்முதலான கிரகங்களெல்லாம் தான்சொன்னபடி நடக்கச்செய்வதும். 8. வசித்துவம்=அசுரர், பக்ஷிகள், மிருகங்கள், பூதங்கள், மனிதர்கள், இந்திரன்முதலிய திக்குப்பாலகர்கள் இவர்களைத்தன்வசமாக்கிக்கொள்வது.

183-வது வரிமுதல் 206-வது வரிவரையும் பத உரை.

மனத்தினையுடையார்க்கு, அரிது ஆம் - அருமையாகிய, வலஞ்சுழி - திருவலஞ்சுழி யென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, பொன்மலையே - பொற்குன்றமே, நிலஞ் சுழியாது - நிலஉலகம் அழியாமல், ஓணத்தில் வந்தோன் - திருவோணநட்சத்திரத்தில் அவதரித்தவனாகிய விட்டுணு, உடன்றுதித்துவாழ் - உடனிருந்து தோத்திரஞ்செய்து வாழ்கின்ற, கும்பகோணத்தில் - திருக்கும்பகோணமென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, தெய்வக்குலக் கொழுந்தே - தேவர்குலக் கொழுந்தாயிருப்பவனே; மாண் உற்றோர்-பெருமையுடையோராகிய ஞானியர், காழ் * கோட்டம் - வயிரங்கொண்ட மனக்கோட்டமானது, நீங்க - நீங்கும்படி, கருதும்-நினைக்கின்ற, குடமூக்கில் - திருக்குடமூக்கென்னும் திருப்பதியில், கீழ் † கோட்டம் மேவும் - கீழ்க்கோட்டத்தில் எழுந்தருளிய, அன்பர் கேண்மையே - அன்பரது நட்பே; வாழ் கோட்டம் தேர் - நிலைபெற்றிருக்கிற கோயில் திருத்தேரானது, ஓணமட்டும் திகழ்-திருவோண நட்சத்திரத்தளவும் விளங்குகின்ற, குடந்தைமட்டும் அன்றி-குடந்தையளவேயல்லாமல், காரோணமட்டும் - காரோணத்தளவும், (திருக்குடந்தைக்காரோணம்) கமழ் - பரிமளிக்கின்ற, மலரே - பூவே, சீர்ஓங்கும் - மேன்மையோடு விளங்குகின்ற, யோகீச்சுரர் - யோகீஸ்வரர்கள், நின்று உவந்து வணங்கும் - நின்று மகிழ்ந்து வணங்குதற்குரிய, திருநாகீச்சுரம் ஓங்கும் - திருநாகீச்சுரமென்னுந்திருப்பதியில் விளங்குகின்ற, நம்கனிவே - எமது மன உருக்கமே; உள்ளம் - மனத்தில், ஓகை தேக்கும் - களிப்பு மிகுந்த, வரகுணன் ஆம் - வரகுணன் என்கிற, தென்னவன் கண் - பாண்டியனிடத்து, (வரகுணபாண்டியன்), சூழ்பழியை - வளைந்து கொண்டபாவத்தை, போக்கும் - போக்கியருளின, இடைமருதில்-திருவிடைமருதூர் என்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, பூரணமே-நிறைவே, நீக்கம் இல்லா - நீங்குதல் இல்லாத, நன்கு உரம் காணும் நடையோர்-நல்லஞான நெறியைக் கண்டநல்லஒழுக்கமுடையவர், அடைகின்ற - சேர்கின்ற, தென் குரங்காடுதுறை-திருத்தென்குரங்காடுதுறையில்எழுந்தருளிய,செம்மலே-பெரியோனே;புன்குரம்பை எல குடி புகுந்த-புல்லிய குடிலாகிய சரீரத்தில்குடிபுகுந்திருந்த, எம்அன்னோர்க்கு-எம்போல்வர்க்கு, உண்மைதரும்-உண்மைநிலையை யருள்செய்கின்ற, நீலக்குடி இலங்கும்-திருநீலக்குடி யென்னுந்திருப்பதியில் பிரகாசிக்கின்ற, நிட்களமே-நிட்களப்பொருளே; ஞாலத்து-உலகத்தில், நீள்தக்கோர் - பெரிய தகுதியையுடையோர், நாளும்-தினந்தோறும், நினைந்து எத்திடும் - நினைந்து தோத்திரஞ்செய்கின்ற, வைகல்மாடக்கோயிற்குள்-திருவைகல்மாடக்கோயிற்குள்ளேஎழுந்தருளிய, மதுரமே - இனிமைப்பொருளே; சீர்வல்ல தமிழ்ப்புலவர் - சிறப்புவல்ல தமிழ்ப்புலவர்கள், பாட - பாடும் பொருட்டு, மன்னிவணங்கு - நிலைபெற்று வணங்குகின்ற, திருநள்ளம் - திருநள்ளமென்னுந்திருப்பதியை, மகிழ் - விரும்பி எழுந்தருளின, இன்பம் - சுகத்தைத் தருகிற, நலம் - புதுமையான, வடிவே - உருவமே; இல்லம் மயல் - மனைவாழ்க்கையின் மயக்கமானது, ஆழம் பங்கு என்ன - ஆழமாகியபாகமென்று, அறிந்தோர் - அறிந்தவராகிய ஞானியர், செறிந்து எத்தும் - நெருங்கிநின்று துதிக்கின்ற, கோழம்பம் வாழ் - திருக்கோழம்பம் என்னுந்திருப்பதியில் வாழ்கின்ற, கருணைக் கொண்டலே - கிருபையாகிய மேகமே, வீழும் - தாழ்ந்த, பொய்தீரா வடு உடையார் - பொய் நீங்காத குற்றமுடையோர், சேர்தற்கு அரும்-அடைதற்கரிய, தெய்வம் - தெய்வத்தன்மை பொருந்திய, சீர் - சிறப்பையுடைய, ஆவடுதுறை - திருவாவாடுதுறை யென்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, எம் செல்வமே - எமதுபாக்கியமே, பேரா - நிலைபெயராத, கரு - பிறவித்தொடர்பை, திரு

* கோட்டம் - கோணல்　　† கோட்டம் - கோயில்.

207-வது வரிமுதல் 230-வது வரிவரையும பத உரை.

த்தி - திருத்திக்கொண்டு (வென்று), எத்தும் - துதிக்கின்ற, கருத்தர்க்கு - மனத்தையுடையார்க்கு, அருள்செய் - அருள் செய்கின்ற, திருத்துருத்தி - திருத்துருத்தியென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, இன்பச் செழிப்பே - இன்பத்தழைப்பே; வருத்தும் - வருத்துகின்ற, மயல் - மயக்கத்தில், நாளும் - தினந்தோறும், அழுந்து - அழுந்துதலாகிய, ஊர் நவை-பரவுகின்ற குற்றத்தை, அறுக்கும்-அறுக்கின்ற, அன்பர் - அன்பரது, உள்ளம் - உள்ளத்தில், நீளும் - நெடுங்காலம் எழுந்தருளிய, அழுந்தூர் - திருவழுந்தூர் என்னுந்திருப்பதியில், நிறை - நிறைந்திருக்கிற, தடமே - மலையே, வேள் இமையோர் - விருப்பமுள்ள தேவர்கள், தேமாமலர் சொரிந்து - கற்பகமரத்தின் மலர்களைத்தூவி, வாயூர வாழ்த்துகின்ற - வாயாரத்துதிக்கின்ற, மாயூரத்து - திருமாயூரமென்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, அனபர்மனோரதமே- அன்பரதுவிருப்பமே; தேயா-குறையாத, வளம் நகர்என்று-வளத்தையுடைய நகரமென்று, எவ்வுலகும்-எந்த உலகத்தாராலும், வாழ்த்தப்படும் - துதிக்கப்படுகின்ற, சீர் - சிறப்புப்பொருந்திய, விளநகர்வாழ் - திருவிளநகர் என்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, எம் கண்விருந்தே - எமது கண்களுக்கு விருந்தாயிருப்பவனே; இளமை - இளமைப்பருவத்தையும், செறி - நெருங்கிய, அல் ஊர் கூந்தல் - இருள் நிறைந்த கூந்தலையுமுடைய, திரு அனையார்-இலக்குமியொத்த மாதர்கள், ஆடும் - விளையாடுகின்ற, பறியலூர்வாழ் - திருப்பறியலூர் என்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, மெய் பரமே-உண்மையாகிய பரம்பொருளே; நெறிகொண்டு - நன்னெறியினால், அன்பு அள்ளி யோங்கும் - அன்புகொண்டு விளங்குகின்ற, அறிவுடையோர் - மெய்யுணர்வுடையோர், வாழ்த்தும் - துதிக்கின்ற, செம்பொன்பள்ளிவாழ் - திருச்செம்பொன்பள்ளி என்னுந் திருப்பதியில் வாசம் பண்ணுகின்ற, ஞானபோதமே - பேரறிவே; இன்பு உள்ளி - மோட்சஇன்பத்தை விரும்பி, தெளியார் - தெளிவுடையோர், போற்றி வணங்கி, திகழும் - விளங்குகின்ற, திருநன்னிப்பள்ளி - திருநன்னிப்பள்ளி யென்னுந் திருப்பதியில், ஆர்ந்து ஓங்கும் - நிறைந்து விளங்குகின்ற, பரசிவமே - மேலான சிவமே; எள் உறும் நோய் எய் - பழிக்கத்தக்க நோய்களைப்பொருந்தி, அவலம் - வீணாய்ப்போகிற, புரத்தை எண்ணுமல் - உடம்பை ஒரு பொருளாக மதிக்காமல், எண்ணுகின்றோர் - தியானிக்கின்றவர்கள், மேய - பொருந்திய, வலம்புரத்து - திருவலம்புரம் என்னுந் திருப்பதியில் அமர்ந்த, மேதகவே - மேன்மையாகிய பொருளே; தூயகொடி-பரிசுத்தமான கொடிகள், அங்கு ஆடு - அவ்விடத்து ஆடப்பெற்ற, கோபுரம் - கோபுரங்கள், வான் ஆற்று ஆடுகின்ற - ஆகாய கங்கையில் மூழ்கின்ற, தலைச்சங்காடு மேவும்-திருத்தலைச்சங்காடு என்னுந் திருப்பதியில் அமர்ந்திருக்கின்ற, சுயம்புவே-சுயம்புமூர்த்தியே; பொங்கு - மிகுந்த, இருள்கூறு - இருட்பகுதியை, திரு ஆக்கு ஊர் - செல்வத்தையுடைய வூர்களுக்கு, கொடுப்பனபோல் - கொடுப்பனவற்றைப் போல, சூழ்ந்து - வளைந்து, மதில்வீறு - மதில்கள் ஓங்கின, திருவாக்கூர் - திருவாக்கூர் என்னுந் திருப்பதியிலுள்ள, விளக்கமே - தீபமே, மாறு அகற்றி - விரோதமான தீமையை நீக்கி, நன்கு அடை - நன்மையைக்கொண்டிருக்கின்ற, ஊர்பற்பலவும் - பற்பல வூர்களும், நன்றி மறவாது எத்தும் - நன்றி மறவாமல் துதிக்கின்ற, தென் கடையூர் - திருத்தென்கடையூர் என்னுந் திருப்பதியில் அமர்ந்திருக்கிற, ஆனந்தத்தேறலே - இன்பத்தேனே; வன்மை இல்லா சொல்கடலி - வன்மையில்லாத சொன்மாலைகளைச் சாத்தி, மேலோர் துதித்தல் மேலோர் வாழ்த்துதல், ஒழியாது ஓங்கும் - இடையறுது விளங்குகின்ற, நல் - நன்மையைத் தருகின்ற, கடவூர்-திருக்கடவூர் என்னுந் திருப்பதியில் அமர்ந்த, வீரட்ட நாயகனே -

☞ 227-வது வரிமுதல் 250-வது வரிவரையும் பத உரை.

வீரட்ட நாதனே; வற்கடத்தும் - பஞ்சகாலத்திலும், வாட்டக்குடி - வாடுதலை யுடைய குடிகள், வாய்ப்பதே இல்லை யெனும் - கிடைப்பதே யில்லை என்று சொல்லுதற்குரிய, வேட்டக்குடிமேவும் - திருவேட்டக்குடி யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, மேலவனே - மேலோனே; நாட்டம் உற்ற - ஆராய்ச்சிபொருந்திய, வாக்கும் தெளிச்சு - வாக்கையும் தெளிவித்து, ஏர்-அழகுள்ள, இ மாதவத்தர்க்கு- இப்பெருந்தவத்தையுடையவர்க்கு, இன்பநலம்-முத்தி இன்பமாகிய நன்மையை, ஆக்கும் - உண்டாக்குகின்ற, தெளிச்சேரி - திருந்தெளிச்சேரி யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, அங்கணனே - கிருபைக்கண்ணனே, நீக்கும் கருமம்-ஒழித்தற்குரிய தீவினையாலெடுத்த, புரத்தில் கலவாது - உடம்போடு கூடிப்பிறவாமல், அருள்செய்-அருள்செய்கின்ற, தருமபுரம்செய்-திருந்தருமபுரமென்னும் திருப்பதி செய்த,தவமே-தவப்பயனே; இருமையும்(இம்மை மறுமை)இருமையிலும், எள் ஆற்றில் மேவாத - பழித்தற்குரிய தீநெறியிற் பொருந்தாத, ஏற்பு உடையோர்-தகுதியுடையோர், சூழ்ந்து இறைஞ்ச - சூழ்ந்து வணங்கும்படி, நள்ளாற்றில் மேவிய - திருநள்ளாறு என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, என் நல்துணையே - என்னது நல்லுதவியே; தெள் ஆற்றில் - தெளிவாகிய வழியில், நீள்தாறுகொண்டு - நீண்ட தாறுகளைக்கொண்டு, அரம்பை - வாழைமரங்கள், நின்று கவின்காட்டும் - நிலைபெற்று அழகைச் செய்கிற, கோட்டாறு மேவும் - திருக்கோட்டாறு என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, குளிர்துறையே - சாதுமார்க்கமே; கூட்டா கரு - கூட்டமாகிய பிறவியையுடைய, வம்பர்தம்மை கலவாத - வம்பர்களைச் சேராத, மேன்மை - மேன்மையையுடைய, திருவம்பர்-திருவம்பர் - என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, ஞானத்திரட்டே-ஞானக்கூட்டமே; ஒருவந்தம்-நிச்சயமாக, மாகாளங்கொள்ள-பெருநஞ்சையுண்டு இறக்கும்படி, மதனை துரத்துகின்ற-மன்மதனை ஓட்டுகின்ற,மாகாளத்து-திருமாகாளத்து எழுந்தருளிய, அன்பர்மனோலயமே-அன்பரது மனம் லயிக்குமிடமே; யோகுஆள-யோகத்தை ஆளவும், காயம்சூர்விட்டு கதிசேர- சரீரபயத்தை ஒழித்து முத்தியடையவும், வேட்டவர்-விரும்பினவர்களாகிய முமூக்ஷுக்கள், சூழ் - வலம் வருகின்ற, மீயச்சூர் - திருமீயச்சூர் என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, தண்ணென்னும் - குளிர்ச்சியைத் தருகிற, வெள்நெருப்பே - வெள்ளைநெருப்பே; மாயக்கள்ளம்-மாயவஞ்சனைக்கு, கோயில் - கோயிலாயுள்ள, நெஞ்சம் - மனத்தையுடைய, கயவர் - கீழ்மக்கள், மருவா - அணுகாத, இளங்கோயில்- திருவிளங்கோயில் என்னுந் திருப்பதியிலமர்ந்த, ஞான இனிப்பே - ஞான மதுரமே; வளங்கோவை - வளமாகிய கோவையை, நாடும் - யாவரும் விரும்புகின்ற, திலதம் - திலகம்போற் சிறந்த, நயப்புலவர் - நன்மையையுடைய அறிவுடையோர்கள், நாள்தோறும் பாடும் - தினந்தோறும் பாடுகின்ற, திலதைப்பதி-திருந்திலதை என்னுந்திருப்பதியில் உள்ள, நிதியே - நிக்ஷேபமே; ஆடும் மயில் - ஆடுகின்ற மயில்கள், காம்பு உரம்கொள் தோளியர்போல் - மூங்கிலின் அழகைக்கொண்ட தோள்களையுடைய மாதர்போல, காவில் பயில்கின்ற-சோலையில் வாழ்கின்ற, பாம்புரம்கொள்-திருப்பாம்புரம் என்னுந் திருப்பதியை யிடமாகக்கொண்ட, உண்மை-உண்மையாகிய, பரம்பொருளே - மேலான பொருளே; ஆம் - உண்டாகிய, புவனந்துன்னும் - பூலோகத்தில் நெருங்கியுள்ள, பெருங்குடிகள் - பெரிய குடிகள், சூழ்ந்து - வலஞ்செய்து, வளைந்து - பிரதட்சணஞ்செய்து, உவகைமன்னும் - மகிழ்ச்சியடைகின்ற, சிறுகுடி - திருச்சிறுகுடி யென்னுந் திருப்பதியிலுள்ள, ஆன்மார்த்தமே - ஆத்மார்த்தலிங்கமே; முன் - முற்காலத்தில், அரசும் - திருநாவுக்கரசரும், காழிமிழலையரும்-சீகாழியில் அவதரித்த பாலகராகிய திருஞானசம்பந்தரும், கண்டு

☞ 251 - வது வரிமுதல் 273-வது வரிவரையும் பத உரை.

தொழ - கண்டு வணங்க, காசு அளித்த - (அவர்களுக்கு) பொற்காசு அருள்செய்த, வீழி மிழலை - திருவீழிமிழலையில் எழுந்தருளிய, விராட்டுருவே - விராட்டுருவமே; ஊழிதோறும் - பிரளயந்தோறும், மன்னி - நிலைபெற்று, ஊர் - ஊர்தற்குரிய, மால் விடையாய் - மால்விடையையுடையவனே, வானவா - தேவனே, என்று தொழ - என்று வணங்கும்படி, வன்னியூர் வாழும் - திருவன்னியூர் என்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, மணிகண்டா - நீலமணிபோலும் கண்டத்தையுடையவனே; கருவலியின் திண்மை - பிறவி வலியின் உறுதியானது. இந்நிமிடம் சிந்துமென்று - இந்நிமிடத்திற்றானே அழிந்துபோமென்று, தேர்ந்தவர்கள் - தெளிந்தபுண்ணியர்கள், முந்தும் - முற்பட்டு வணங்குகின்ற, கருவிலிவாழ் - திருக்கருவிலி யென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, முக்கண்ணா-முக்கண்ணனே; மந்தணத்தை-பரம ரகசியத்தை, காணும் - காண்பதற்குரிய, அருந்துறை - அருமையாகிய வழி, இ - இந்த, காமர் தலம் என்று - அழகிய தலம் தான் என்று, எவரும் பேணும் - யாவரும் விரும்புகின்ற, பெருந்துறையில்-திருப்பெருந்துறையில் எழுந்தருளிய, பெம்மானே-பெருமானே; ஏனுடன் - பெருமையோடு, கா ஈட்டும் - சோலைகள் தருகின்ற, பெருநறை - பெருந்தேனானது, ஆறு என்ன - யாறுபோல, வயல் ஓடி - வயல்களிற் பாய்ந்து, நாட்டும் - பயிர்களை நிலைநிறுத்துகின்ற, பெருநறையூர் - திருப்பெருநறையூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளிய, நம்பனே - நம்பனே; காட்டும் பரிசின் - தன்னைத்தோற்றுவிக்கின்ற தன்மையினால், கரைப்பு உற்றோர் - மனங்கரையப் பெற்றவர்கள், பாங்கு பெற - முத்திநலத்தைப்பெறும்படி, ஓங்கும் - விளங்குகின்ற, $ அரிசிற்கரைப்புத்தூரானே - திருவரிசிற்கரைப்புத்தூர் என்னும் திருப்பதியி லெழுந்தருளியவனே; தரிசனத்து - தரிசனமாக, எக்காலும் - எக்காலத்தும். சிவபுரத்தைக் காதலித்தோர் தங்கள்-சுபகரமான திருமேனியை விரும்பினவர்களுடைய, துதிஏலும்-தோத்திரங்களை ஏற்கின்ற, சிவபுரத்தில்-திருச்சிவபுரமென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, எம்மானே-எமதுபெரியோனே; மாலும்-மயக்கமும், கொள்வெப்பும் - கொண்டவெப்பமும், கலைய - கலையும்படி, நல்லோர்-நல்லோர்கள், மெல்மதுரச் சொன்மாலை செய்யும் - மெல்லிய மதுரமாகியசொன் மாலைகளைச் சொல்லுகின்ற, கலய நல்லூர் - திருக்கலயநல்லூரில் எழுந்தருளிய, சின்மயனே - ஞான உருவனே; செப்பமுடன் ஓங்கும் - அழகோடு விளங்குகின்ற, திருத்தொண்டர் உள்குளிர - திருத்தொண்டரது மனம் குளிரும்படி, நல்லருளால் தாங்கும் - நன்மையாகிய அருளினால் தாங்குகின்ற, கருக்குழி வாழ்-திருக்கருக்குழியில் வாழ்கின்ற, சங்கரனே-சுகத்தைத்தருபவனே; ஆம் ககனம் தாம்-உண்டாகிய ஆகாயத்தில் தாவுகின்ற, * சீயத்தை - சிங்கத்தை, †வேங்கை - வேங்கையானது, தலையால் தடுக்கின்ற - தலையினால் தடைசெய்கின்ற, வாஞ்சியத்தில் மேவும் - திருவாஞ்சிய மென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, மறையோனே - வேதியனே; ஆஞ்சியிலாது - குறைவில்லாமல், இந்நிலத்தும் - இவ்வுலகத்திலும், வான்ஆதி எந்நிலத்தும் - சுவர்க்கலோகமுதலிய எவ்வுலகத்திலும், ஓங்கு - (புகழால்) விளங்குகிற, பெரு - பெருமைவாய்ந்த, நன்னிலத்துவாழ் - திருநன்னிலமென்கின்ற திருப்பதியில் வாழ்கின்ற, ஞான ‡ நாடகமே - ஞான நாடகத்தை யுடையவனே; மன்னும் - நிலைபெற்ற, மலர் - மலர்களில், வண்டு - வண்டுகளும், ஈ - ஈக்களும், சுரம்பாடி - பண்கள்பாடி, வார் மதுஉண்டு - ஒழுகுகின்ற தேனையுண்டு, ஊர்களிக்

$ அரிசொன்னதிக்கரை யென்பது - அரிசிற்கரை யென மருவியது. * சீயம் - சிங்க விராசி சீயம்-சியமானது செய்யுள்விகாரம். † வேங்கை - வேங்கைமரம்; (வேங்கைத்தலை - புலித்தலைபோலச் செய்யப்பட்ட உரு.) ‡ நாடகம் - கூத்து.

☞ 274-வது வரிமுதல் 291-வது வரிவரையும் பத உரை.

கும் - மனமகிழ்கின்ற, கொண்டீச்சுரத்து அமர்ந்த-திருக்கொண்டீச்சுரமென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, கோமானே - இறைவனே; உம்பர் - தேவர்கள், கண்டு - தரிசித்து, ஈச - ஈசனே, நண்பன் - தோழனாகிய, ஐ - அழகிய, ஊரன் - திருநாவலூரராகிய (சுந்தரமூர்த்திநாயனார்), புகழும்-புகழ்கின்ற, நம்ப-நம்பனே, என தொழ-என்றுசொல்லி வணங்க, தண்-குளிர்ச்சிபொருந்திய, பனையூர்மேவும் - திருப்பனையூர் என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, சடாதரனே - சடைமுடியைத் தரித்தோனே; பண்புடனே - தயாகுணத்தோடு, எற்குள் - எனக்குள்ளே, தியானம்கொண்டிருக்க - தியானஞ்செய்துகொண்டிருக்கும்படி, மகிழ்ந்து அளித்த - மகிழ்ந்து கிருபைசெய்த, விற்குடியின் வீரட்டம் - திருவிற்குடியின் வீரட்டத்தில், மேயவனே - எழுந்தருளினவனே; சொல்கொடிய-சொல்லுதற்கரிதாகிய, அன்பு-அன்புசெய்தலை, கல்லூர் - கற்றல்பொருந்திய, நெஞ்சில் - அறிஞரது மனதில், மருவும் - பொருந்துகின்ற, ஒரு - ஒப்பற்ற, தகைமை - பெருமையையுடைய, தென் புகலூர் வாழ் - அழகிய திருப்புகலூர் என்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, மகாதேவனே-தேவர்களுக்கெல்லாம் தேவனே; இன்பம் - இன்பத்தைத்தருகின்ற, மறை அர்த்தமா-வேதப்பொருளாக, நீக்கரிய ஆதாரமாகின்ற - ஒழித்தற்கரிய ஆதாரமாய் நிலைபெற்ற, வர்த்தமானேச்சரத்து - திருவர்த்தமானேச்சரமென்னுந் திருப்பதியில், வாய்ந்தவனே - பொருந்தியிருப்பவனே; மித்தை அற்ற-பொய்யில்லையாய் ஒழிந்த, காமனது - மன்மதனது, ஈசம்கெட - தலைமையழியும்படி, கண்பார்த்து அருள் செய்த-நெற்றிக்கண்ணினால் நோக்கி யருளின, ராமனதீசம் பெறும்-திருராமனதீச்சுரத்தை யிடமாகக் கொண்ட, நிராமயனே - நோயற்றவனே; தோம்உள்-குற்றத்தை நினைக்கின்ற, மயல்தூர் பறித்த-மயக்கமாகிய புதலைக்களைந்த, மனதில் விளைந்த - அறிஞரது மனதில் விளைந்த, பயற்றூர்- திருப்பயற்றூரிலெழுந்தருளிய, திசைஅம்பரனே - திசைகளாகிய ஆடைகளையுடையவனே; இயற்றும் - செய்யப்பட்ட; சீர் - சிறப்புப்பொருந்திய, ஆச்சிரமேவும் - ஆச்சிரமங்கள் அமைந்த, செங்காட்டங்குடியில் - திருச்செங்காட்டங்குடியில், நம் - நமது, கணபதீச்சுரம் - கணபதீச்சுரமென்னுந் திருப்பதியில், வாழும் - வாழ்கின்ற, சந்திரசேகரனே - சந்திரகண்டத்தை யணிந்ததிருமுடியை யுடையவனே; எச்சு அகல - பழிப்புநீங்க, * விண் மருவினோனை-சுவர்க்கத்தை யடைந்தவனாகிய செட்டிப்பிள்ளையை, விடம் நீக்க - பாம்புகடித்தவிஷத்தை யொழிக்க, நல்லருள்செய் - நன்மையாகிய அருளைச் செய்த, வள்-வளப்பம் பொருந்திய, மருகல் - திருமருகல் என்னுந் திருப்பதியில் எழுந்தருளின, மாணிக்க வண்ணனே - மாணிக்க நிறத்தை யுடையோனே; திண்மைகொண்ட - வலிமைகொண்ட, மாதமம்கை - பெரிதாகிய அஞ்ஞான விருளை வெறுத்த, உள்ளம்-அறிஞரது மனத்தை, மருவி பிரியாத-சேர்ந்து நீங்காத,

---

* விண்மருவினோனை விடம்நீக்கினவர் திருஞானசம்பந்தர் - வைப்பூர் என்னும் கிராமத்தில் த்ாமன்செட்டியாருக்குப் புத்திரிகள் ஏழுபேர்-அச்செட்டி தன் சகோதரியின் புத்திரருக்குத் தன் பெண்களில் ஒன்றைக்கொடுத்து விவாகம்செய்விக்கிறதாகச் சொல்லி பொருள் அபேக்ஷையினால் ஆறுபெண்களையும் வேறுசிலருக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டார். ஏழாவது புத்திரியையும் அம்மாதிரி வேறு ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுக்கும் உத்தேசத்தை அறிந்த இவள் தாய்தந்தையருக்குத் தெரியாமலே அத்தைமகனாகிய புருஷனுடன் சேர்ந்து வேற்றூருக்கு வரும்வழியில் பாம்புகடித்து இறந்துவிட்டான். இந்தப்பெண் இருயக்கத்தும் ஆதரவின்றி வருத்தப்படும் சமயத்தில் அங்கு எழுந்தருளிய திருஞானசம்பந்த சுவாமிகள் கிருபைகூர்ந்து விஷம் நீங்கும்பொருட்டு "சடையா யெனுமால்" என்னும் திருப்பதிகம் ஓதி அவனைப் பிழைப்பித்து அவனுக்கு அக்கன்னிகையை மணம் செய்து தந்தார்.

☞ 292-வது வரிமுதல் 315-வது வரிவரையும் பத உரை.

சாத்தமங்கை-திருச்சாத்தமங்கை யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, கங்கை-கங்கையணிந்த, சடாமுடியோய் - சடைமுடியை யுடையவனே; தூ தகைய - பரிசுத்தகுணத்தையுடைய, பாகை - சர்க்கரைப்பாகை, கார் என்னும் - நீர் என்று சொல்லுதற்குரிய, பணிமொழியார் - மென்மொழியை யுடையவராகிய அறிஞரது, வாழ்த்து - துதிகள், ஓவா - நீங்காத, நாகை காரோணம்-திருநாகைக்காரோணமென் னுந்திருப்பதியை, நயந்தோனே - விரும்பினவனே; ஓகை அற-மகிழ்ச்சி நீங்க, விக்கல் வருங்கால் - விக்கல் எழுகின்ற மரணகாலத்தில், விடாய்தீர்த்து - விடாய் ஒழித்து, உலகிடை - உலகத்தில், நீ சிக்கல்-இனி நீ அகப்படாதே, எனும் - என்று அருள் செய்கின்ற, சிக்கல் - திருச்சிக்கல் என்னுந் திருப்பதியில் எழுந்தருளின, திறலோனே - சர்வசக்தனே; மிக்க - மேலான, மின்னூர் - மாதரது, வாள் ஊர் தடங்கண் - வாள்போன்ற விசாலமான கண்களை; வயல்காட்டி ஓங்கும் - வயல்கள் காட்டி விளங்குகின்ற, கீழ்வேளூரில்-திருக்கீழ்வேளூர் என்னுந் திருப்பதியில் அமர்ந்தருளிய, செம்கண் விடையோனே - சிவந்த கண்களையுடைய இடபவாகனத்தை யுடையவனே; நீள் உவகை - பெரிய மகிழ்ச்சிதருகிற, பாஊர் இசையின் - பாடலோடு பொருந்திய பண்ணினும், பயன் சுவையின் - பாற்சுவையினும், பாங்கு உடைய - இனிமையை யுடைய, தேவூர் - திருந்தேவூர் என்னுந் திருப்பதியில், வளர் - ஓங்குகின்ற, தேவ தேவனே-தேவர்களுக்குத் தேவனே, பூவினிடை - பூலோகத்தில், இக்கூடல் - இந்தப்பிறவியை, மைந்த - மைந்தனே, இனி கூடல் என்று - இனிச் சேராதே யென்று, பள்ளிமுக்கூடல் - திருப்பள்ளிமுக்கூடல் என்னுந் திருப்பதியில், மேவி அமர்-எழுந்தருளியமர்ந்த, முன்னவனே-முன்னோனே; தக்க - தகுதியாகிய, நெடுந்தேர் ஊர் - நெடியதேர்கள் நடக்கிற, அணிவீதி - அழகிய தெருக்களையும், சீர் ஊர்மணிமாடம் - சிறப்புப் பொருந்திய இரத்தினமாடங்களையு முடைய, ஆரூரில் - திருவாரூரில் எழுந்தருளிய, எங்கள் அருமருந்தே - எங்களுக்கு அரியமருந்தாயிருப்பவனே; நீர் ஊர்ந்த - நீரோடு சேர்ந்த, கார் ஊர்பொழிலும் - மேகங்கள் தவழ்கின்ற சோலைகளும், கனி ஈந்து - கனிகளைக் கொடுத்து, இளைப்பு அகற்றும்-மெலிவைநீக்குகின்ற, ஆரூரறனெறி-திருவாரூரறனெறி என்னும் திருப்பதியில் எழுந்தருளிய, வேளாண்மையே - உபகாரசீலனே; ஏர் ஆர்ந்த-அழகுநிறைந்த, மண்மண்டலிகர்-மண்ணுலகத்தரசர்கள், மருவும்-பொருந்துகின்ற, ஆரூர் பரவையுள் * மண்டலி - திருவாரூர் பரவையுண்மண்டலி என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய. எம் உடைமையே - எமது செல்வமே; திண்மை - வலிமையுள்ள, களமர் மகிழ - கடைஞர்மகிழ, கடைசியர்பாடும் - கடைசியர் பாடுகின்ற, விளமர் கொளும் - திருவிளமர் என்னுந் திருப்பதியை இடமாகக்கொண்ட, எம்விருப்பே-எமதுவிருப்பமே; வளமை - வளமுள்ள, எருக்கு - எருக்கமலரும், அரவு - பாம்பும், ஈர் அம் - குளிர்ந்த நீராகிய கங்கையும், சேர்-பொருந்திய, எழில் - அழகாகிய, வேணி கொண்டு - சடாபாரத்தோடு, திருக்கரவீரம் சேர் - திருக்கரவீரம் என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, சிறப்பே - மேன்மையே; உருக்கவரு - மனத்தையுருக்கவருகின்ற, வேள் ஊர் - மன்மதன் நடத்துகின்ற, மா எல்லாம் - குதிரைகளாகிய கிளிகளெல்லாம், † மா ஏறும்-மாமரங்களில் ஏறுகின்ற, சோலை - சோலைசூழ்ந்த, பெருவேளூர் - திருப்பெருவேளூர் என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, இன்பப் பெருக்கே - சுகப்பெருக்கே; கருமை மிலை-கருநிறம் பொருந்திய, ஆலம் காட்டும் - விடத்தைக் காட்டுகின்ற, மிடற்றாய் என்று - கண்டத்தை யுடைய

* மண்டளி - மண்டலி யென்றது வேற்றுமைத்திரிபு.

† மா ஏறும் - அழகுமிகுந்த என்று கூறினும் அமையும்.

☞ 316-வது வரிமுதல் 341-வது வரிவரையும் பத உரை.

வனே என்று, எத்தும் - யாவரும் துதிக்கின்ற, தலையாலங்காட்டூர் - திருத்தலையாலங்காட்டூரில் எழுந்தருளிய, தகவே - தகுதியுடைப் பொருளே, நிலைகொள் - நிலை பெற்ற, தடம்வாயில் - பெரியவாயில்களில், வெண்மணிகள் - முத்துக்களை, சங்கங்கள் ஈனும் - சங்குகள் பெறுகின்ற, குடவாயில் - திருக்குடவாயிலில் எழுந்தருளிய, அன்பர்குறிப்பே - அன்பர் குறிக்கும் பொருளே; மடவாட்கு - உமாதேவியாகிய பெண்ணுக்கு, ஓர் கூறை - ஓர்பாகத்தை, உவந்து அளித்த - மகிழ்ந்தருளிச் செய்த, கோவே என்று - இறைவனே என்று, அன்பர் தொழ - அன்பர் வணங்க, சேறை - திருச்சேறை என்னுந் திருப்பதியில், உவந்து இருந்த - மகிழ்ந்து எழுந்தருளின, சிற்பரமே-சிற்பரமே; வேறுபடா-வேறுபடாத, பால் ஊர்நிலவின்-வெண்மை பொருந்திய நிலவைப்போல, பணிலங்கள்-சங்குகள், தண்கதிர் செய் - குளிர்ந்த ஒளியை வீசுகின்ற, நாலூரில்-திருநாலூர்என்னுந் திருப்பதியில், அன்பர் பெறும்நல்நயமே-அன்பர்பெறுதற்குரிய நன்மையாகிய மேலான பொருளே;மேல் ஊரும்-உடம்பின்மேல்வந்த, நோய்-நோயினால், உள்-மனதை,கரைசெய்யாத-கரைதலைச்செய்யாத (உருக்காத),நோன்மையோர்-பெருமையுடையோர், சூழ்ந்த-வலம் வருகின்ற, கடுவாய்க்கரையுள் - திருக்கடுவாய்க்கரை என்னுந்திருப்பதியில், மேவுகின்ற - எழுந்தருளின, வண்மையே - ஔதாரியமே; வாய்த்த - பொருந்திய, பெரும்பூகம் - பெரிய கமுகமரங்கள், தெங்கின் பிறங்க - தென்னமரங்கள் போல விளங்க, வளம்கொள்ளும் - வளத்தைக் கொண்ட, இரும்பூளை - திருவிரும்பூளை என்னுந் திருப்பதியில், மேவியிருந்தோய் - எழுந்தருளி யிருந்தவனே; விரும்பும் - விரும்புகின்ற, பெரு-பெரிய, விரதம் பாழி - விரதச்சிறப்புள்ள, விண்ணவர்கள் - தேவர்கள், எத்தும் - துதிக்கின்ற, அரதைப்பெரும்பாழி - திருவரதைப்பெரும்பாழி என்னுந்திருப்பதியில், ஆர்ந்தோய் - எழுந்தருளினவனே ; சரதத்தால் - உண்மையால், எதும் - யாதும், அவண் இவண் என்று எண்ணாதவர் - அவ்விடம் இவ்விடம் என்று நினையாதவர்களாகிய அறிஞர்கள், இறைஞ்சி ஓதும் - வணங்கித் துதிக்கின்ற, அவளிவணல்லூர் - அவளிவணல்லூர் என்னுந் திருப்பதியை, உடையோய் - உடையவனே; கோது அகன்ற - குற்றம் நீங்கின, நீட்டும் - நீண்ட, கருதி நியமத்தோர்க்கு - நினைவின் நியமத்தையுடையவர்க்கு, இன் அருளை நீட்டும் - இனிய அருளைப் பெருகுவிக்கின்ற, பரிதிநியமத்தோய்-திருப்பரிதிநியமம் என்னுந் திருப்பதியை யுடையவனே ; காட்டிய - எமக்குத்தன்னைக்காட்டின, நம் தேவன் ஊர் என்று - நமது தேவனதூர் என்று, திசைமுகன் - பிரமனும், மால் - திருமாலும், வாழ்த்துகின்ற - தோத்திரஞ்செய்கின்ற, பூவனூர் மேவும் - திருப்பூவனூரில் எழுந்தருளிய, புகழ் உடையோய் - புகழையுடையவனே; பூவுலகு ஆம் - பூலோகமாகிற, ஈங்கும் - இவ்விடத்தையும், பாதாள முதல் எவ்வுலகும் - பாதாளமுதலாகிய எந்தவுலகத்தையும், எஞ்ஞான்றும் தாங்கும் - எக்காலத்தும் தாங்குகின்ற, பாதாளேச்சுரத்து - திருப்பாதாளேச்சுரத்தில், அமர்ந்தோய்-அமர்ந்திருப்பவனே; ஓங்கு புத்திமான்கள் - உயர்ந்த அறிவுடையோர், அரில் ஓட்டி - குற்றத்தை நீக்கி, மகிழ்வோடு இருந்து எத்தும் - மகிழ்ச்சியோடு இருந்து துதிக்கின்ற, வான்களரில் வாழும் - திருவான்களர் என்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, மறைமுடிபே - வேதமுடிபே; மேன்மைதரும் - மேன்மையைத்தருகின்ற, மூற்று - பெரிய, ஏமம் வாய்ந்த - இந்திரியக்காவல் அமைந்த, முனிவர் - முனிவர்கள், தினம் பரவும் - நாள்தோறும் துதிக்கின்ற, சிற்றேமம் - திருச்சிற்றேமம் என்னுந் திருப்பதியில், வாய்ந்த - எழுந்தருளின, செழுங்கதிரே - செழுமையாகிய சூரியனே; எங்கும் - எவ்விடத்தும், கற்றவர்கள் உசாத்தானம்-கற்றோர்கள் உசாவுகின்ற இடங்களும்,

☞ 342-வது வரிமுதல் 364-வது வரிவரையும் பத உரை.

இருகழகம் - பெரிய ஆயுதம் பயிலிடங்களும், மன்றம்முதல் - பொதுவிடங்களும் முதலானவை, தங்கும் - பொருந்தியிருக்கின்ற, உசாத்தானம் - திருஉசாத்தானம் என்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருக்கிற, தனிமுதலே - ஒப்பற்ற பொருளே; பொங்கு-மிகுந்த, பவ அல்லல் இடும் - பிறவித்துன்பத்தினால் உண்டாக்கப்பட்ட, பரவு அநர்த்தம் - பரவிய அநர்த்தங்களை, அட்டு - தொலைத்து, ஒளிசெய்கின்ற - ஒளியைச்செய்கிற, திருமல்லலிடும் பாவனத்து - திருமல்லலிடும்பாவனமென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, மாட்சிமையே - பெருமையே; தொல்லை - பழமையாகிய, படிக்குள் - உலகத்தில், நோவாத பண்புடையோர் - துன்பமடையாமைக்குக் காரணமாகிய நற்குணமுடையோர், வாழ்த்தும் - வாழ்த்துகின்ற, கடிக்குளத்து - திருக்கடிக்குளமென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, அன்பர்களிப்பே-அன்பரது மகிழ்ச்சியே; கடிகுளத்தின் - மணம் பொருந்திய தடாகங்களின், வண்டு அலைக்க - வண்டுகள் கிண்ட, அலரின் - மலர்களினின்றும், தேன்வார்ந்து-தேன் ஒழுகி, தடம் ஆக்கும்-தடாகத்தையுண்டு பண்ணுகின்ற, தண்டலைக்குணீணெறி-திருந்தண்டலைக்குணீணெறி யென்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, சிந்தாமணியே - சிந்தாமணிக்கு நிகரானவனே; கொண்டல் இனம்-மேகக்கூட்டங்கள், மன்-நிலைபெற்ற, கோட்டு ஊர்-மரக்கொம்புகளில் தவழ்கின்ற, சோலைவளர்-சோலைகள்சூழ்ந்து வளராநின்ற, கோட்டுஊர்-சங்குகளால் தவழப்பெற்ற, தண்பழனம்-குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த, தென்கோட்டூர்-திருந்தென்கோட்டூரில்வாழ்கின்ற, தேவ * சிகாமணியே-தேவர்களுள் முதல்வனே; தென்கூட்டி-இராகங்களைச் சேர்த்துப் பாடிக்கொண்டு, போய்-சென்று, வண்டுஉறை தடமும்-வண்டுகள்வாழ்கின்றதடாகங்களும், பூம்பொழிலும்-பூஞ்சோலைகளும், சூழ்ந்து அமரும்-வளைந்து அமர்கின்ற, ஆய்வெண்டுறை - திருவாய்வெண்டுறை என்னுந் திருப்பதியில் அமர்ந்த, மாசிலாமணியே-குற்றமில்லாதரத்தினமே; தோய்வு உண்ட கள்ளம் - பொருந்திய கபடத்தையுடைய, பூதநிலைகண்டு-பூதமுதலியவற்றின் நிலைமையைக்கண்டு, உணர்வுகொண்டவர் - அறிவுடையோர், சூழ்-வலம்வருகின்ற, கொள்ளம்பூதூர்-திருக்கொள்ளம்பூதூரில் எழுந்தருளிய, † வான்குலமணியே - மேலானஉயர்ந்தஇரத்தினமே; வெள்ளிடைவான் - வெற்றிடமாகிய ஆகாயத்தில், வாம் - தாவுகின்ற, பேர் எழில் சூழ்ந்த - பெரிய மதில்சூழ்ந்த, மாண்பால் - பெருமையினால், திருநாமம் ஆம் - திருப்பேர் உண்டான, பேரெயில் - திருப்பேரெயில் என்னும் திருப்பதியில் எழுந்தருளிய, ஒப்பு இல்லா மணியே - நிகரற்ற இரத்தினமே; அன்பர் - அன்பரானவர், தாம் - தாம், பேரா - நிலைபேராத, வீட்டில் - முத்தியுலகத்தில், மேவச்செயும் - அடையச் செய்கின்ற, கொள்ளிக்காட்டில் அமர்ந்த - திருக்கொள்ளிக்காடு என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, என் - எனது, கண்காட்சியே - நேத்திரோற்சவமே; நீட்டும் ஒளி ஆம் - பேரொளியையுடைய, கூர் - கூர்மையாகிய, இலை - அச்சவடிவினையுடைய, வேலவன் ஆதியர் சூழ-முருகவேள் முதலியோர் சூழ்ந்திருக்க, தேங்கூரில்வாழ் - திருந்தேங்கூரில் வாழ்கின்ற, தேவசிங்கமே - தேவர்களுள் சிறந்தவனே; ஓங்கும் - உயர்ந்த, மலைவல்லிக்கு-மலையரையன் பெண்ணாகிய உமாதேவிக்கு, ஆதாரம் - ஆதாரமாகிய, மணிப்புய என்று - அழகிய தோளையுடையவனே என்று, அன்பர் தொழ-அன்பர்வணங்க, நெல்லிக்காவாழ்-திருநெல்லிக்காவில் வாழ்கின்ற, மெய் நியமமே-உண்மையாகிய நியமமே; எல் அல் கண்-பகல் இராக்களில், சேடு இயத்தான் - பெருமை பொருந்திய வாத்தியங்களோடு, சுரர் தெரிந்து வந்து ஏத்தும்-தேவர்கள் அறிந்து வந்து துதிக்கின்ற, நாட்டியத்தான்குடி-திருநாட்டியத்தான்

* சிகாமணி - முடிமணி. † வான்குலமணி - மாணிக்கம்.

☞ 365-வது வரிமுதல் 383-வது வரிவரையும் பத உரை:

**குடியில்,** வாழ் - வாழ்கின்ற, நல்லினமே - நல்லுறவே ; நாட்டும் - (அறமுதலிய பொருள்களை) நிலைநிறுத்துகிற, ஒருநூல் - ஒப்பற்ற முதனூலாகிய வேதத்தை, தாயில் - தாயைப்போல, அன்பர்தமை நோக்கி - அன்பர்களைப்பார்த்து, அருள் செய் - அருள் செய்த, திருக்காறுயில் - **திருக்காறயில்**-என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய, மேலோர் கடைப்பிடியே - மேலோர்களுடைய உறுதிப்பிடியே; வீறு ஆகும்-மேன்மையான, இன்று-இன்றைக்கா, பூர்வந் தொட்டு இருந்தது இவ்வூர் - தொன்றுதொட்டு இருந்தது இவ்வூர், என்ன-என்று சொல்லும்படி-உயர்-உயர்ந்த, கன்றாப்பூர் - **திருக்கன்றாப்பூ**ரில் வாழ்கின்ற, பஞ்சாக்கரப் பொருளே - ஐந்தெழுத்தின் உண்மைப் பொருளே; துன்று ஆசைவெய்ய வலிவலத்தை - மிகுந்த ஆசையின் கொடியவலியினுறுதியை, வீட்டி-அழித்து, அன்பர்க்கு-அன்பர்களுக்கு, இன்அருள் செய்-இனியஅருளைச்செய்கின்ற, துய்ய-பரிசுத்தமாகிய, வலிவலத்து - **திருவலிவல**மென்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, சொல்முடிபே-சொற்களின் முடிவாயிருப்பவனே; நையும் - வருந்துகின்ற, மனம் - மனத்திலுள்ள, மை-கரிய, சினத்தைவிட்டோர்-கோபத்தைவிட்டவர்களுடைய, மனத்தில்-மனத்தின்கண், சுவைகொடுத்து-இன்பத்தைக்கொடுத்து, கச்சினத்தினுள்-**திருக்கச்சினம்**என்னுந் திருப்பதியிலெழுந்தருளிய, கரையா-கரையாத, கற்கண்டே-கற்கண்டே; நெல்சுமக்க-நெல்லைச்சுமக்க, ஆள் இல்லைஎன்று-ஆள்களில்லையென்று, * ஆரூரனூர்துதிக்க-சுந்தரர்துதிக்க, தந்தருளும் - தந்தருளின, கோளிலியில் - **திருக்கோளிலி**யென்னுந் திருப்பதியிலெழுந்தருளின, அன்பர்குலம் கொள்உவப்பே - அன்பர்குலம்கொள்ளுகிற களிப்பே; நீள் உலகம் - பெரியஉலகத்தார், காய் - வெறுக்கத்தக்க, மூர்க்கர் எனும் - மூர்க்கரானாலும், கருதின் - நினைத்தால், கதிகொடுக்கும் - முத்தியைத்தருகிற, வாய்மூர்க்கு அமைந்த - **திருவாய்மூரில்** எழுந்தருளிய, மறைக்கொழுந்தே - வேத முடிபே; †நேயம் உண்ண தேடு - நெய்யையுண்ணத்தேடின, எலியை - எலியினை, மூவுலகும்-சுவர்க்க மத்திய பாதாளமாகிய மூன்றுலகத்தாரும், தேர்ந்து தொழ செய்தருளும் - தெளிந்து வணங்கும்படி செய்தருளின, ஈடு இல் - ஒப்பில்லாத, மறைக்காட்டில் - **திருமறைக்காட்டில்** எழுந்தருளின, என்றன் - எனது, எய்ப்பில் வைப்பே - இளைத்தகாலத்தில் உதவும் பொருளே; நாடும் என்னை-தியானிக்கின்ற என்னை, நின் அகத்து - உன் திருவுள்ளத்தில், யான் பள்ளிநேர்ந்தேனென்று - நான் சயனித்து இருந்தேன் என்று கொண்டு, ஆட்கொண்ட - என்னை அடிமை கொண்ட, தென்னகத்தியான்பள்ளி - **திருந்தென்னகத்தியான்பள்ளி**யில் எழுந்தருளிய, செம்பொன்னே - சிவந்தபொன்போல்பவனே; தொல் நெறியோர் - பழமையாகிய நன்னெறியையுடையவர், நாடி - தியானித்து, குழக - அழகனே, நலம் - முத்தியின்பத்தை, அருள் என்று - அருள் செய்யக்கடவையென்று, ஏத்துகின்ற - துதிக்கின்ற, கோடிக்குழகர் - **திருந்கோடிக்குழகர்** என்னுந் திருப்பதியில் அமர்ந்தருளிய, அருட்கோலமே - அருள்வடிவே; நீடுஉலகில் - பெரிய-உலகத்தின்கண், நாட்டும் புகழ் - நிலை நிறுத்தப்பட்ட புகழினையுடைய, ஈழநாட்டில் - ஈழதேசத்தில், பவம் இருளை - பிறவியாகிய இருளினை, வாட்டும் - அழிக்கின்ற, மா-

---

* சுந்தரர் தேவாரம் "நீளநினைந்தடி யேனுமை நித்தலும் கைதொழுவேன், வாளனகண் மடவா ரவள் வாடிவருந்தாமே, கோளிலி யெம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன், ஆளிலை யெம்பெருமா னவையட்டித் தரப்பணியே."

† ஒரு எலியானது சிவபிரான் திருக்கோயிலில் நெய்விளக்கு ஒளி மழுங்கும் சமயத்தில் அந்த நெய்யை உண்ணப் போக, இதன் மூக்குப்பட்டுத் திரிமேலெழுந்து பிரகாசித்தது. அதற்குச் சிவபிரான் மகிழ்ந்து அந்த எலிக்கு திரிலோகத்துக்கும் அதிபதியாக்கினர்.

☞ 384-வது வரிமுதல் 408-வது வரிவரையும் பத உரை.

பெரிய, திருக்கோணமலையாய் - **திருக்கோணமலையை** யுடையவனே; உலகில் -
உலகிலுள்ள, முன்னோர் - முன்னோர்கள், வேட்டு - விரும்பி, முது ஈச்சரமென்று-
பழமையாகிய தலைமையுடைய தென்று, வணங்கு - தொழுகின்ற, திருக்கேதீச்சர
த்தில்-**திருக்கேதீச்சர**மென்னுந்திருப்பதியில், கிளர்கின்றோய்-விளங்குகின்றவனே;
ஓதுகின்றோர்பால் - துதிக்கின்றவர்களிடத்து, அவாய்நிற்கும் - விரும்பிநிற்கின்ற,
பரையோடு - உமாதேவியோடு, வாழ் - வாழ்கின்ற, மதுரை ஆலவாய் - மதுரையி
லுள்ள **திருவாலவாயில்** எழுந்தருளிய, * சொக்கழகானந்தனே - சொக்கழகா
னந்தனே; சீலர்தமை - நல்லொழுக்க முள்ளவர்களை, ஊறு இல்லா கருணையால்-
அழிவற்ற கருணையால், காப்பன் என்று - காக்கக்கடவேனென்று, புகும் - பிரவே
சிக்கிற, ஆப்பனூர் - **திருவாப்பனூரில்**, மேவு - எழுந்தருளிய, சதானந்தமே -
இடையறாத இன்பமே; மா புலவர் - பேரறிவினையுடையவர், பரம் - மேலான,
ஞானகுன்றம் என - ஞானமலை என்று, நண்ணி - அடைந்து, மகிழ்கூர்ந்து - களி
ப்பு மிகுந்து, ஏத்த - துதிக்க, ஆன - தகுதியாகிய, பரம்குன்றம் - **திருப்பரங்குன்**
**றத்தில்** எழுந்தருளிய, இன்பானந்தமே - பேரின்பமே; வானவர்கோன் - தேவரா
ஜனாகிய இந்திரனும், தேம் - மணம்பொருந்திய, ஏடு - தாமரை மலரை, அகத்த
னொடு - இடமாகவுடையபிரமனொடு, சீதரனும் - திருமாலும், வாழ்த்தும் - துதிக்
கின்ற, சீர் - சிறப்புப் பொருந்திய, ஆமேடகத்து - **திருவாமேடகத்தில்** அமர்ந்தரு
ளின, அறிவானந்தமே-ஞானானந்தமே; பூமீதில்-பூமியின்மீது, நல் தவரும்-நல்ல
தவத்தினரும், கற்ற † நவசித்தரும் - கற்ற ஒன்பது சித்தர்களும், வாழ்த்தி உற்ற -
துதித்து அடைந்த, கொடுங்குன்றத்து - **திருக்கொடுங்குன்றத்தில்** எழுந்தருளிய,
எம் ஊதியமே - எமது லாபமே; முற்றுகதி - முடிவாகிய மோட்சம், இத்தூரம்
அன்றி - இந்தத்தூரமேயல்லாமல், இனித்தூரமில்லைஎன - இனித்தூரம் இல்லை
என்று, புத்தூர் வரும் - **திருப்புத்தூரிலே** எழுந்தருளின, அடியார் பூரிப்பே - அடி
யவரது களிப்பே; சித்து ஆய்ந்து - ஞானத்தினால் ஆராய்ந்து, நாம்-யாம், ஈசர்
ஆகும் - ஈச்சுரர்ஆதற்குரிய, நலம் தரும் என்று - நன்மையைத் தருமென்று, உம்
பர் தொழும் - தேவர்கள் வணங்குகின்ற, ராமீசம் - **திருவிராமீசம்** என்னுந்
திருப்பதியில், வாழ் - வாழ்கின்ற, சீவரத்தினமே - சீவமணியே; பூமீது - பூமியின்
மேல், நீள்தானைசூழும் - பெரிதாகிய சேனைகள் சூழப்பெற்ற, நிலமன்னர் - நில
வரசர்கள், வாழ்த்து - வாழ்த்துகின்ற, திருவாடானை - **திருவாடானை** என்னுந் திரு
ப்பதியில், மேவு - எழுந்தருளின, கருணாகரமே - கருணைக்கு ஆலயமாகவிருப்பவ
னே; சேடு ஆன-பெருமையையுடைய, பேர்-பெரிய, வான் ஆற்றை-ஆகாயகங்கை
யையும், மதியை - மூன்றாம்பிறைச்சந்திரனையும், முடிசூடும்-திருமுடியிற்சூடுகின்ற,
கானப்பேர்-**திருக்கானப்பேர்** என்னுந்திருப்பதியில் எழுந்தருளிய,ஆனந்தக்காளை
யே - இன்பக்காளையே; மோனர்உள்ளே - மோனநிலையையுடையவரது மனத்தி
னுள்ளே, பூவண்ணமும்-பூவினது நிறத்தினையும், பூமணமும் - பூவினது மணத்தி
னையும், போல-நிகர்த்த, அமர்ந்த - அமர்ந்திருக்கிற, திருப்பூவணத்தில் - **திருப்பூ**
**வணம்** என்னுந் திருப்பதியிலெழுந்தருளிய, ஆனந்தப்பொக்கிஷமே - இன்பக்கள
ஞ்சியமே; தீவண்ணத்தில் - நெருப்புருவத்தில், கண்சுழியல் என்று - கண்ணெச்சி
லென்று, கருணை அளித்து-கிருபையைச்செய்து, என் உள்ளம் சேர் -என்மனத்தை
ச்சேர்ந்த, தண் சுழியல்வாழ்-**திருத்தண் சுழியலில்** வாழ்கின்ற, சீவசாக்ஷியே - சீவ

* சொக்கழகநாதர் - சொக்கலிங்கர், சோமசுந்தரக் கடவுள்.

† நவசித்தர் = சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதா என்னும் ஒன்பதின்மர்.

☞ 409-வது வரிமுதல் 431-வது வரிவரையும் பத உரை.

சாக்ஷியாயிருப்பவனே; பண் செழிப்ப கற்றூல்-பண்கள் மிகும்படி கற்றுப்பாடினால், அங்கு - அப்பொழுதே, உண்மை கதிதரும் என்று - மெய்யாகிய முத்தியைத் தருமென்று, அற்றவர்சூழ்-பற்றற்றவர் வலம்வருகிற, குற்றாலத்து-திருக்குற்றாலத்திலெழுந்தருளின, அன்பர் குதுகலிப்பே - அன்பரது சந்தோஷமே; பொன்-அழகாகிய, நல்வேலி சூழ்ந்து-நல்லவேலி வளைந்து, நயன்பெறும் - பயன்பெற்ற, ஒள் - அழகாகிய, செஞ்சாலி - செஞ்சாலியென்கிற, நெல்வேலி - திருநெல்வேலியி லெழுந்தருளிய, உண்மை நிலயமே - உண்மையாகிய இடமே; வல் - வலிய, வேலை நஞ்சை-பாற்கடலிற்பிறந்த விஷத்தை, களத்து வைத்த - கண்டத்திலமைத்துக்கொண்ட, நாத என-இறைவனே யென்று, தொண்டர் தொழ-அடியவர் வணங்க, அஞ்சைக் களம்சேர் - திருவஞ்சைக்களம் என்னுந் திருப்பதியைச்சேர்ந்த, அருவுருவே - அருவுருவாயிருப்பவனே; நெஞ்சு அடக்கி - மனத்தைத்தடுத்து, ஆன்று நிறைந்தோர்க்கு-நற்குணங்களெல்லாம் நிறைந்திருப்பவர்க்கு, அருள்அளிக்கும் - அருளைச்செய்கிற, புக்கொளியூர்தோன்றும்-திருப்புக்கொளியூரில் தோன்றின, அவிநாசி-அவிநாசியிலெழுந்தருளின, சுயம்புவே - தானேயுண்டானவனே; சான்றவர்கள் தம்-மேலோர்களுடைய, உருகு அன்பு ஊனுள் - உருகுகிற அன்பையுடைய உடம்பினுள்ளே, தலம்போல வாழ்கின்ற - திருப்பதிபோல வாழ்கின்ற, எம் - எமது, முருகன்பூண்டி - திருமுருகன் பூண்டி யென்னுந் திருப்பதியிலெழுந்தருளிய, இருநிதியே - பெருஞ்செல்வமே; செம்மையும்-செவ்வையோடு, அம் குன்றாது ஓங்கும்-அழகு குறையாமலோங்குகிற, அணிகொள் - அழகைக்கொண்ட, கொடிமாடம் - கொடிகளையுடைய மாளிகைகளமைந்த, செங்குன்றூர்வாழும் - திருச்செங்குன்றூரில் வாழ்கிற, சஞ்சீவியே - சஞ்சீவியாயிருப்பவனே; தங்கும் - தங்குகிற, மன வஞ்சம் - மனவஞ்சனையை, ஆக்கு - உண்டாக்குகிற, ஊடல் - பிணக்கத்தை, விளையாதவர் - கொள்ளாதவர்கள், சூழும் - வலம்வருகிற, வெஞ்சமாக்கூடல் - திருவெஞ்சமாக்கூடல் என்னுந் திருப்பதியிலெழுந்தருளின, விரிசுடரே - பேரொளியே; துஞ்சல்என்னும் - இறப்பென்கிற, இன்னல் அகற்ற - துன்பத்தை யொழிக்கிற, இலங்கு - விளங்குகிற, பவானிக்கூடல் என்னும் - பவானிக்கூடலென்கிற, நணுவினிடை - திருநணுவென்னுந் திருப்பதியின்கண் எழுந்தருளின, இன்இசையே - இனிய இசையுருவாயிருப்பவனே; துன்னி - நெருங்கி, அருள்வேண்டிக்கொடு-அருளைப்பிரார்த்தித்துக்கொண்டு, முடியாமேன்மைபெறும் - முடியாத மேன்மை பெற்ற, மாதவர்சூழ் - பெருந்தவத்தினர் சூழ்கின்ற, பாண்டிக் கொடுமுடியில்-திருப்பாண்டிக்கொடுமுடியென்னுந்திருப்பதியிலெழுந்தருளின, பண்மயமே-பண்ணுருவே; தீண்டு அரிய-தொடுதற்கரிய, வெம் கரு ஊர் - கொடிதான கருப்பத்திற் சென்று பிறத்தற்கேதுவாகிய, வஞ்சவினை - வஞ்சகமானதொழில்களை, தீர்த்தவர்-நீக்கினவர்கள், சூழ்ந்த - வளைந்த, நம் - நமது, கருவூர் - திருக்கருவூரிலெழுந்தருளின, செய்யுள்நவரசமே - பாடல்களிலமைந்த * நவரசமே; தங்கு அளற்றின்-பொருந்திய சேற்றைப்போல, தீங்கு ஆர் - தீமையுள்ள, பிறதெய்வம் - அந்நிய தெய்வங்களாகிய, † தீங்குழியில் வீழ்ந்தவரை - நெருப்புக்குழியில் விழுந்தவர்களை, தாங்கா - பொறுக்காத, அரத்துறையில் - திருவரத்துறையிலெழுந்தருளிய, தாணுவே - பிரபுவே; பூ குழலார்-மலரையணிந்த கூந்தலையுடையவராகியமாதர், வீங்கு-மிகுந்திருக்கிற, ஆனை-யானைகள் கட்டின, மாடம் - மாளிகைகள், சேர் - சேர்ந்த, விண் என்று - சுவர்க்கலோகமென்று சொல்லப்பட்டு, அகல் - விஸ்தீர்ணமான,

---

* நவரசமாவது:— சிருங்காரம், வீரியம், பெருநகை, கருணை, ரவுத்ரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம்.   † தீக்குழி - தீங்குழி யென்றாயது விகாரம்.

☞ 432-வது வரிமுதல் 453-வது வரிவரையும் பத உரை.

கடந்தை - கடந்தையில், தூங்கானைமாடம் - திருத்தூங்கானைமாடத்தி லமர்ந்த, சுடர்க்கொழுந்தே - தீபச்சிகையே; நீங்காது - நீங்காமல், நீடு - நீண்ட, அலை-அலைகளையுடைய, யாற்று-ஆற்றுடனே,ஊர்நிழல்-பரவின நிழலும், மணிக்குன்று-மணிக்குன்றுகளும், ஓங்கு - உயர்ந்த, திருக்கூடலையாற்றூர் - திருக்கூடலையாற்றூரிலெழுந்தருளின, குணநிதியே - குணவைப்பே; நாடிய வான் - விரும்பத்தக்க ஆகாயத்தில் தவழ்கின்ற, அம்புலி ஊர் சோலை - சந்திரன் தவழ்கின்ற சோலைகளும், அணி வயல்கள் - அழகிய வயல்களும், ஓங்கு - மிக்கு விளங்குகிற, எருக்கத்தம்புலியூர் - திருவெருக்கத்தம்புலியூரி லெழுந்தருளின, வேத சமரசமே-வேதத்தின் சமரசநிலையே; நம்புவிடை - நம்பின இடபத்தை, ஆங்கு ஊர்ந்து உந்தினை - அவ்விடத்தில் ஏறிநடத்தினை, அருளாய் என்று - எமக்கும் அருள் செய்யக்கடவையென்று, அன்பர் - அன்பர்களால், தொழுது - வணங்கப்பட்டு, ஓங்கும் - விளங்குகிற, தினையூர்-திருத்தினையூரிலெழுந்தருளின, உமாபதியே - உமாநாயகனே; தீங்கு உறும்-தீமை பொருந்திய, ஒன்னார் புரத்தை - பகைவராது முப்புரத்தை, வெள் நகை தீயால் - வெள்ளிய சிரிப்பாகிய நெருப்பினால், அழித்தாய் என்று - கெடுத்தாயென்று, தொழ - யாவரும்வணங்கும்படி, சேர்புரத்தில் வாழ் - திருச்சேர்புரத்தில் வாழ்கின்ற, ஞானதீபமே - ஞானவிளக்கே; வார் - ஒழுகுகின்ற, கெடிலம் - கெடிலமென்னும் பெயரினால், செல் - நடக்கிற, யாறு-நதியானது, கை ஓங்கி - பக்கங்களில் ஓங்கி, * திலதவதியார்பரவும் - திலதவதியாரால் துதிக்கப்பட்டு, மன் - நிலைபெற்ற, அதிகைவீரட்டம் - திருவதிகைவீரட்டமென்னுந் திருப்பதியிலமர்ந்த, மாதவமே-பெருந்தவமே; பன் அரிது ஆம்-சொல்லுதற்கரிதாகிய, ஆவல் ஊர்-ஆசையையுடைய, எங்களுடை - எம்முடைய, ஆரூரன் ஆர் ஊர் ஆம் - சுந்தரர் வாழ்கின்ற ஊராகிய, நாவலூர் - திருநாவலூரிலெழுந்தருளிய, ஞானியர் உள் ஞாபகமே - ஞானியர் நினைக்கின்ற நினைப்பே; தேவு அகம் ஆம் - தெய்வங்களுக்கிடமாகிய, மன்றம் அமர்ந்த-பொதுவிடங்களமைந்த, வளம்போல் - வளமைபோல, திகழ்ந்த-விளங்கின, † முதுகுன்றம் அமர்ந்த - திருமுதுகுன்றத்தி லெழுந்தருளிய, அருட்கொள்கையே - அருள்நிறைந்த குணமே; அன்று - அந்நாளில், அகத்தில் - ஆயர்வீடுகளிலுள்ள, நல்வெண்ணெய் உண்டு ஒளித்த-நல்லவெண்ணெயைத் திருடியுண்டு ஒளித்துக்கொண்ட, நாரணன் - ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, வந்து ஏத்துகின்ற - வந்து தோத்திரம் பண்ணுகிற, நெல் வெண்ணெய் மேவு - திருநெல்வெண்ணெய் என்னுந்திருப்பதியிலெழுந்தருளிய, சிவநிட்டையே - சிவத்தியானமே ; சொல் வண்ணம் - சாத்திரவிதிப்படியே, நாவலர் - புலவர், போற்றி-வணங்கி, நலம்பெற-நன்மையடைய, ஓங்கு - விளங்குகிற, திருக்கோவலூர்வீரட்டம் - திருக்கோவலூர் வீரட்டத்தை, கொள் பரிசே - இடமாகக்கொண்ட தன்மையே; ஆவலர் - அன்பரானவர், மாதேவா - மகாதேவனே, இறைவா-இறைவனே, சிவனே-சிவபிரானே, என்னும் - என்று துதிக்கின்ற, முழக்கம் - முழக்கமானது, ஓவா - நீங்காத, அறையணி நல்லூர் - திருவறையணிநல்லூரி லெழுந்தருளின, உயர்வே - உயர்ந்த பொருளே; தாவா - கெடாத, ‡ கடை ஆற்றில் - கடை வழியில், அன்பர்தம்மை-அன்பரை, $ கல் ஆற்றில் நீக்கும் - கல்வழியினின்றும் நீக்குகின்ற, இடையாற்றில்

* திலதவதியார் என்னும் மாது திருநாவுக்கரசு சுவாமிகள் தமக்கை. சிவபத்தியிற்சிறந்த இம்மாது சமணத்திற்சென்ற தன் தம்பியாரின் சூலைநோயை நீக்கி சைவத்திற்சேர்ப்பிக்கச் சிவபெருமானை வேண்டினவர். † முதுகுன்றம் - பழமலை, அதாவது விருத்தாசலம். ‡ கடை ஆறு - கடைவழி, அதாவது மரணகாலத்திற் போகும்வழி. $ கல்வழி யென்பது யமலோகத்திற்குப் போகும்வழி.

☞ 454-வது வரிமுதல் 475-வது வரிவரையும் பத உரை.

வாழ் - திருவிடையாற்றில் வாழ்கின்ற, நல் இயல்பே - நல் இயற்கையே; * இடையாதுசொல் - பின்னிடாமல் எதிர்த்துப் பேசின, ஊரன் தன்னை - சுந்தரரை தொழும்பு கொள்ளும் - அடிமை கொண்ட, சீர்-சிறப்புப்பொருந்திய, வெண்ணெய் நல்லூர்-திருவெண்ணெய்நல்லூரில், அருட்டுறையில் - திருவருட்டுறை யென்னுந் திருப்பதியில் எழுந்தருளின, நற்பயனே - நல்லபேறே; மல் ஆர்ந்து - வளம் பொருந்தி, மாசு உந்து - குற்றத்தைக் கெடுக்கின்ற, உறையூர் மகிபன் முதல் - உறையூர்க்கரசனாகிய சோழன்முதலான, மூவரும் - (சேர சோழ பாண்டியர்களாகிய) மூவரசர்களும், சீர் - சிறப்பை, பேசும் - எடுத்துப் பேசுகின்ற, துறையூர் - திருத்துறையூரில் எழுந்தருளிய, பிறை சூடி - பிறைச்சந்திரனை, முடித்தவனே - முடியில் தரித்தவனே; நேசம் உற எற்று - அன்பைமிகுதியாக உயர்த்தாத, வடு கூர் - குற்றமிகுந்த, இதயத்தினர்க்கு - மனத்தையுடையவர்க்கு, என்றும்-எக்காலத்தும், தோற்று - காணப்படாத, வடுகூர் - திருவடுகூரில் எழுந்தருளிய, சயஞ்சுடரே - சயஞ்சோதியே; ஆற்ற - மிகுந்த, மயல் காணி - மையலுக்கு விளைநிலமாயிருக்கிற, குழி வீழ் - அல்குல்தடாகம் என்னும் குழியில்வீழ்கின்ற, கடையர்க்கு - இழிந்தவர்களுக்கு, காண்பு அரிய-காணுதற்கு அருமையான, மாணிக்குழிவாழ் - திருமாணிக்குழி என்னுந் திருப்பதியில் வாழ்கின்ற, மகத்துவமே - பெருமையே; மாண் உற்ற-மாட்சிமை பொருந்திய, பூ - மலர்களையுடைய, பாதிரி - பாதிரிமரம், கொன்றை - கொன்றைமரம், புன்னை-புன்னைமரம், முதல்-முதலானவை, சூழ்ந்து இலங்கும் - சூழ்ந்து விளங்குகின்ற, ஏர் - அழகாகிய, பாதிரிப்புலியூர் - திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளிய, எந்தலே - பெரியோனே; சீர்பொலிய-சிறப்பினால் விளங்க, பண்டு-முற்காலத்தில், ஈச்சுரன்-பரமசிவன், இப்பதியே விழைந்தது - இத்திருப்பதியே விரும்பியது, என்னும் - என்று யாவரும் சொல்லுதற்குரிய, முண்டீச்சுரத்தில் - திருமுண்டீச்சுரத்தில் எழுந்தருளிய, முழுமுதலே - முழுமுதற்பொருளே; பெண் தகையார் - பெண்மையிற் சிறந்தவர்களாகிய மாதர்கள், பன் - புகழ்தற்குரிய, ஏர் அம் காட்டு - மிக்க அழகைக்காட்டுகின்ற, ஊர் என்று - ஊரிதுவென்று, இருநிலத்தோர் - பெரிதாகிய நிலவுலகத்திலுள்ளோர், வாழ்த்துகின்ற - துதிக்கின்ற, சீர்-சிறப்புப் பொருந்திய, பனங்காட்டூர் - திருப்பனங்காட்டூரை, மகிழ் - விரும்பின, நிக்ஷேபமே - புதையலே; சூர் - சூரனெனவன், புடைத்தது ஆம் - புடைத்ததாகிய, மா - மா மரமானது, தூர் வீழ - வேரோடு அற்று விழும்படி, தடிந்தோன்-வெட்டினவராகிய முருகவேளும், கணேசனொடும் - கணபதியும் ஆகிய இவர்களோடும், ஆமாத்தூர்வாழ் - திருவாமாத்தூரில் வாழ்கின்ற, மெய் - உண்மையாகிய, அருட்பிழம்பே - அருட்செறிவே; யாம் எத்தும் - யாம் துதிக்கின்ற, உண்ணாமுலை ஆம்-உண்ணாமுலையாகிய, உமையோடு - உமாதேவியோடு, மேவு-கூடின, திருவண்ணாமலைவாழ் - திருவண்ணாமலையில் வாழ்கின்ற, அருள்சுடரே - அருள்விளக்கே; கண் ஆர்ந்த - பெருமைநிறைந்த, நாகம் - சுவர்க்கலோகத்தார், பராம் - துதிக்கின்ற, தொண்டைநாட்டில் - தொண்டைநாட்டிலே, உயர்-உயர்ந்த, காஞ்சிஏகம்பம் மேவும்-திருக்கச்சியேகம்பத்தில் எழுந்தருளிய, பேரின்பமே - பேரானந்தமே; ஆகும் - உண்டாகிய, தென்காற்று - தென்றற்காற்றானது, அள்ளி - வாரிக்கொண்டுவந்து, வள் பூ மணத்தை காட்டும் - வளமாகிய பூ மணத்தைக்காட்டுகின்ற, பொழில் -

* இடையாது சொல் என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருமணக்காலத்தில் பரமசிவம் தடுத்தாட்கொள்ளப் பிராமண வடிவுகொண்டுவந்து, சுந்தரன் தனக்கு அடிமையென்று முறியோலை காட்டியபோது, பரமசிவம் என்று தெரியாமல், சுந்தரர் மறுத்து "பித்தா பேயா" என எதிர்த்துப் பேசியது.

☞ 476-வது வரிமுதல் 498-வது வரிவரையும் பத உரை.

சோலைசூழ்ந்த, கச்சி-திருக்கச்சியிலுள்ள, மேற்றளிவாழ்-திருமேற்றளியில்எழுந்தருளின, ஆனந்த வீட்டு உறவே - இன்பவீட்டைத்தருகிற சுற்றமே; நாற்றம் - மணம் பொருந்திய, மலர் - மலர்களாகிய, பூ தண் - பொலிவும் குளிர்ச்சியுமுள்ள, தளி - கோயிலை, விரித்துப்புக்கு - மலர்த்திப்புகுந்து, இசைக்கும் - ஒலிக்கின்ற, சீர் - சிறப்புப் பொருந்திய, ஓணகாந்தன் தளி - திருஓணகாந்தன்தளியில் எழுந்தருளிய, அருட்பிரகாசமே - அருட்சோதியே; சேர்ந்தவர்க்கு - அடைந்தவர்க்கு, இங்கு - இவ்வுலகத்தில்; சற்றும்-சிறிதும், ஆபதம் இல்லாத-துன்பமில்லாத, அநேகதங்காபதம் சேர் - திருவநேகதங்காபதந்தை அடைந்தருளின, தயாநிதியே - தயைக்குப்பிறப்பிடமே; மங்காது-மழுங்காமல், மெச்சி - புகழ்ந்து, நெறிக்கு - நல்வழிக்கு, ஆர்வம் மேவி நின்றோர் சூழ்ந்த-அன்பு பொருந்தி யிருக்கின்றவர்கள் சூழ்ந்திருக்கின்ற, திருக்கச்சி - திருக்கச்சியில், நெறிக்காரைக்காடு - திருநெறிக்காரைக்காட்டில் எழுந்தருளின, இறையே - இறைவனே; முச்சகமும் - சொர்க்கமத்திய பாதாளமென்னும் மூன்றுலகங்களும், ஆயும்-ஆராய்கின்ற, குரங்கணின்முட்டம்-திருக்குரங்கணின்முட்டம் என்கிற, பெயர்கொண்டு - பெயரைக் கொண்டு, ஓங்கு புகழ் - உயர்ந்த புகழானது, எயும் - பொருந்தின, தலம் வாழ் - தலத்தில் வாழ்கின்ற, இயன்மொழியே - இலக்கணமமைந்த மொழியே; தோயும் - பொருந்திய, மனம் - மனமானது, * யோகு அறல் இல்லா - கூட்டத்தினின்றும் நீங்குதல் இல்லாத, தவத்தோர் - தவசிகள், உன்ன - நினைக்கும்படி, விளங்கு - விளங்குகின்ற, திருமாகறலில் - திருமாகறல் என்னுந்திருப்பதியில் எருந்தருளின, அன்பர் அபிமானமே - அன்பர்மீது அபிமானமுள்ளவனே; ஓகை இல்லா - மகிழ்ச்சியில்லாத, வீ - மரணமானது, தூரமா ஓட - தூரமாய் ஓடும்படி, மெய்த்தவர்கள்-உண்மையாகிய தவத்தோர்கள், சூழ்ந்த - வளைந்த, திருவோத்தூரில் - திருவோத்தூரில் எழுந்தருளிய, வேதாந்த உண்மையே - வேதமுடிவின் உண்மையே; பூத்தவிசின் ஆர்த்தான் - கமலாசனத்தில் வீற்றிருப்பவனாகிய பிரமனும், பனகத்தவன் - பாம்பின் மீது சயனித்திருப்பவனாகிய விஷ்ணுவும், இந்திரன் - இந்திரனும், புகழ் - புகழ்கின்ற, வன்பார்த்தான் பனங்காட்டூர் - திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளிய, பாக்கியமே - செல்வமே; பார்த்து - நோக்கி, உலகில் - உலகத்தில், இல்லம் என - யாம்பொருள் இலம் என்று, சென்று - பிறரிடத்துப்போய், இரவாதவர் - யாசிக்காதவர்கள், வாழ் - வாழ்கின்ற,வல்லம் - திருவல்லம் என்னுந் திருப்பதியை, மகிழ்-மகிழ்ந்த, அன்பர் வசித்துவமே-அன்பரைவசப்படுத்தும் பொருளே; சொல் அரிக்கு-புகழ்ந்த விஷ்ணுவுக்கு, கச்சியில் கால்பேறு - கச்சியில் காற்பயன், இவண் - இவ்விடத்தில், முக்காற்பேறு - முக்காற்பயன், என்னும் - என்று சொல்லுதற்குரிய, மாற்பேற்றின் - திருமாற்பேற்றில் எழுந்தருளின, அன்பர்-அன்பரது, மனோ பலமே - மன வலிவே; ஏற்புடை-தகுதியுடைய, வாய் ஊறல் - வாயூறுதலையுடைய அடியார் - அடியவர், உற தொழுது - மிகுதியாய் வணங்கி, மேவு - வாழ்கின்ற, திருவூறல் - திருவூறல் என்னுந்திருப்பதியில் எழுந்தருளிய, அழியா உவகையே - கெடாத சந்தோஷமே; மாறுபடு - மாறுபட்ட, தீது இலம்-தீமையும் இல்லேம், பயம் கோள் - பயத்தையும் துன்பத்தையும், தீர் என்று-ஒழிக்கக்கடவை யென்று, அடியர் - அடியவர், புகழ் ஓதும் - புகழை எடுத்துச் சொல்லுகின்ற, இலம்பயம் கோட்டூர் - திருவிலம்பயங்கோட்டூரில் எழுந்தருளிய, நலமே - நன்மையே; தீது உடைய - தீமையையுடைய, பொன் கோலம் ஆம் - பொன்மயமாகிய, எயிற்கு - மும்மதில்களையழித்தற்பொருட்டு,

* யோகம் - யோகு என்றது விகாரம்.

☞ 499 - வது வரிமுதல் 524-வது வரிவரையும் பத உரை.

* போர்க்கோலம் கொண்ட-போர்க்கோலத்தைக் கொண்டருளின, திருவிற்கோல மேவும்-திருவிற் கோலம் என்னும் திருப்பதியில் எழுந்தருளிய, பரமேட்டிமையே-மேலான பெருமையே; சொல்போரில் - வாக்குச்சண்டையில், ஓலம்காட்டும்-ஆரவாரத்தைக்காட்டின, பழையனூர் நீலி-பழையனூர்நீலியாகிய (காளியின்), வாது அடக்கும்-வாதை (ஊர்த்துவநடனஞ்செய்து) அடக்கின, ஆலங்காட்டில்-திருவாலங்காட்டில், சூழ் - எழுந்தருளின, அருள்மயமே - அருளுருவே; ஞாலம்சேர் - உலகிற்பொருந்திய, மாசு ஊர் அகற்றும் - காமம் குரோதம் மோகம் லோபம் மதம் மாற்சாரிய மென்னும் அறுவகைக்குற்றங்களையும் நீக்கின, மதி உடையோர்-பேரறிவினையுடையவர்களாகிய ஞானிகள், சூழ்ந்த - சூழ்ந்திருக்கிற, திருப்பாசூரில் - திருப்பாசூரி லெழுந்தருளின, உண்மை - மெய்யாகிய, பரத்துவமே-மேலான வஸ்துவே; தேசுஊரன் - ஒளியையுடைய சுந்தரர், கண்பார்க்கவேண்டும் எனக்கண்டு - கண்நோக்கம் வேண்டுமென்று சொல்லக்கண்டு, ஊன்று கோல் கொடுத்த-ஊன்றுகோலைக்கொடுத்தருளின, வெண்பாக்கத்து-திருவெண்பாக்கத்தில்-அன்பர்பெறும்-அன்பர் அடைகின்ற, வீறுப்பே-செருக்கே; பண்பார்க்கு-நற்குணமுடையவர்க்கு, நள் இப்பதியே - பொருந்திய இந்தத்தலமே, நலம் தரும் என்று - நன்மையைத் தருமென்று, அன்பர்புகும் - அன்பர் பிரவேசிக்கிற, கள்ளிற்பதி - திருக்கள்ளிற்பதியிலெழுந்தருளின, நம் கடப்பாடே - எமது நேர்மையே; எள்ளல் உறும்-பழிப்பைப்பொருந்திய, கோள் அத்தி நீக்கும் குணத்தோர்க்கு - கொள்கையையும் கொலையையும் ஒழித்த குணவான்களுக்கு, அருள் செய் - அருள்செய்த, திருக்காளத்தி-திருக்காளத்தியி லெழுந்தருளின, ஞானக்களஞ்சியமே-ஞானபொக்கிஷமே; வெற்றியூர் ஆளத்தா என்ன - வெற்றியாகிய ஊரையாளத்தருகவென்று பிரார்த்திக்க, வினையேன் வினைதவிர்த்த - வினையேனது துயரத்தை யொழித்தருளின, ஒற்றியூர் மேவிய - திருவொற்றியூரி லெழுந்தருளின, என் உள் அன்பே - என்மனத்தன்பே; தெற்றிகளில் - திண்ணைகளில், பொங்கு - விளங்குகிற, மணிக்கால்கள் - ரத்நஸ்தம்பங்கள், பொலம்செய் - அழகைச்செய்கிற, திருவொற்றிநகர் தங்கும் - திருவொற்றிநகரத்தில் தங்கின, சிவபோக சாரமே - சிவாநுபவக்கடலே; புங்கவர்கள் சேர்ந்து - தேவர்கள் கூடி, வலங் கொள்ளும்-வலம்செய்கிற, திருவொற்றியூர் கோயில்சார்ந்து - திருவொற்றியூர்க் கோயிலையடைந்து, மகிழ்-மகிழ்கின்ற, அமுத சாகரமே - அமிர்தக்கடலே; தேர்ந்து - தெளிந்து, உலகர் போற்றும்-உலகத்தார் வணங்குகிற, திருவொற்றியூர் பூங்கோயிற்குள் - திருவொற்றியூரிலுள்ள அழகாகிய கோயிலினுள்ளே யெழுந்தருளின, பெரியோர் சாற்றும்-பெரியோரால் சொல்லப்படுகிற, புகழ்-புகழையுடைய, வேதசாரமே-வேதச்சுவையே; ஊற்று உறும்-ஊற்றுப்போலசுரக்கின்ற, மெய்அன்புமிகும்-உண்மையாகிய அன்புமிகுந்த, தொண்டர்குழு-அடியார் கூட்டமானது, ஆயும் வலிதாயத்தில்-ஆராய்கின்ற திருவலிதாயத்தில் எழுந்தருளிய, இன்பம் மிகும்-இன்பமிகுகின்ற, ஞான இலக்கணமே - ஞானலக்ஷணமே; துன்பம்அற-துன்பமொழியும்பொருட்டு, எல்லை - எல்லையையுடைய, வாயிற்குள் மட்டும் - வாயிற்குள்ளேமட்டும், எகில் - போனால், வினை எகும் - நமது வினைகள் போகும், எனும் - என்று சொல்லுவதற்குரிய, முல்லைவாயிற்குள் - திருமுல்லைவாயிலில், வைத்த - ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற, முத்தி வித்தே - முத்திக்குக் காரணமாயிருப்பவனே; மல்லல் பெறு - வளம்பொருந்திய, † வேல்காட்டர் - அரசர்கள், ஏத்து - துதிக்கின்ற, திருவேற்காட்டில் மேவிய - திருவேற்காட்டில் எழுந்தருளிய,

* போர்க்கோலம் என்பது பரமசிவம் முப்புரத்தை சிரிப்பினால் எரித்தபோது கொண்ட யுத்தவேஷம். † வேற்காட்டர் - வேற்படையினைத் தாங்கியவர்கள் அதாவது அரசர்கள்.

☞ 525-வது வரிமுதல் 551-வது வரிவரையும் பத உரை.

முன்னூல் காட்டு - பழைய நூல்களாகிய காட்டில், உயர் - உயர்ந்த, வேத நுட்பமே - வேதத்தின் நுட்பமாகிய பொருளே; பால் காட்டும் - இடப்பாகத்தில் தோற்றப்படுகின்ற, ஆர்த்திபெற்ற - விருப்பத்தையுடைய, மாது - உமாதேவியானவள், மயிலாய் பூசித்து - மயிலுருவாய்ப் பூசைபண்ணி, ஆர் - பொருந்தியிருந்த, மயிலை - திருமயிலையில், கீர்த்திபெற்ற - புகழ்பெற்ற, நல் - நல்ல, வேதகீதமே - வேதகானமே; கார் திரண்டு வாவுகின்ற - மேகங்கள் திரண்டு தவழ்கின்ற, சோலை வளர் - சோலைகள் வளர்ந்த, வான்மியூர் தலத்தில் - திருவான்மியூர் என்னுந் திருப்பதியில், மேவுகின்ற - எழுந்தருளின, ஞானவிதரணமே - ஞானசௌந்தரியமே; தூவிமயில் - கலாபத்தையுடைய மயில்கள், ஆடும்பொழில் - ஆடுகின்ற சோலைகள் சூழ்ந்த, கச்சூர் ஆலக் கோயிற்குள் - திருக்கச்சூர்ஆலக் கோயிலில் எழுந்தருளிய, அன்பர் - அன்பரது, நீடும் - நீண்ட, கனம்-பெரிய, தூய நேயமே - பரிசுத்தமான நட்பே; ஈடு இல்லை என்னும் - சமானமில்லை என்று சொல்லுதற்குரிய, திருத்தொண்டர்-சிவனடியார்கள்; ஏத்தும்-துதிக்கின்ற, இடைச்சுரத்தில் - திருவிடைச்சுரத்தில், மன்னும் - நிலைபெற்ற, சிவானந்தவண்ணமே - சிவானந்தவடிவே; நல்நெறியோர்-நன்மார்க்கத்தையுடையவர், துன்னும் நெறிக்கு-அடைகின்ற முத்திவழிக்கு, ஓர் துணை ஆம்- ஒப்பற்றதுணையாகிய, தூய கழுக்குன்றினிடை-பரிசுத்தமான திருக்கழுக்குன்றத்தில், முன்னும் - முற்பட்டுத்தோன்றுகிற, அறிவானந்த மூர்த்தமே - ஞானானந்தவடிவே; துன்னுபொழில் - நெருங்கின சோலைகள், அம் - அழகாகச் சூழ்ந்து, மதுரம் - இனிமையாகிய, தேன்பொழியும் - தேனைப் பொழிகிற, அச்சிறுபாக்கத்து - திருவச்சிறுபாக்கத்தில் எழுந்தருளி, உலகர்தம் - உலகத்தாருடைய, மதம் - பலமதங்களையும், நீக்கும் - நீக்கியருளுகிற, ஞானசம்மதமே -ஞான விருப்பமே; எம்மதமும்சார்ந்தால் - எந்தமதத்தையடைந்தாலும், வினைநீக்கி - (அடைந்தவர்களுடைய) வினையை யொழித்து,தாங்கு-ஆதரிக்கிற, திருவக்கரையுள்-திருவக்கரையில், நேர்ந்தார் - வந்தடைந்தவர்க்கு, உபநிடத நிச்சயமே - உபநிடதங்களின் உண்மைப்பொருளாயிருப்பவனே; தேர்ந்தவர்கள் - தெளிந்தவர்கள், தத்தம்மதியால் - தத்தம் அறிவினால், சாரும் - அடைகின்ற, அரசிலியூர் - திருவரசிலியூரிலெழுந்தருளின, உத்தமம் - மேலான, மெய்ஞ்ஞான ஒழுக்கமே - மெய்ஞ்ஞானநெறியே; பத்தி உள்ளோர் - பக்தியுடையோர், எண்ணும்-நினைக்கிற, புகழ்கொள்-புகழைக் கொண்ட, இரும்பைமாகாளத்து - திருவிரும்பைமாகாளத்தில், நண்ணும்-எழுந்தருளின, சிவயோகநாட்டமே - சிவயோக நோக்கே; மண்ணகத்தில் - பூமியினிடத்தில், கோபலத்தில் காண்பு அரிய - ராஜபலத்தால் காண்பதற்கரிதாகிய, கோகரணம்-திருக்கோகரணத்தை, கோயில்கொண்ட - கோயிலாகக்கொண்டெழுந்தருளியிருக்கிற, மாபலத்து - பெரிய பயன்களுள்ளே, மாபலம்ஆம் - பெரிய பயனாகிய, மாபலமே - பெரும்பயனே; தாபம் இல்லா - வெம்மையில்லாத, பாகு இயல்சொல் - சர்க்கரைப்பாகுபோன்ற இன்சொல்லையுடைய, மங்கையொடும் - உமாதேவியோடும், பாங்கு ஆர் பருப்பதத்தில் - அழகுபொருந்திய ஸ்ரீசைலபர்வதத்தில், யோகியர்கள் ஏத்திட - யோகியர்கள் துதிக்க, வாழ் - வாழ்கிற, ஒப்புரவே - உபகாரசீலனே; போகிமுதல் - இந்திரன் முதலானவர்கள், பாடிஉற்ற-பாடியடைந்த, நீலப்பருப்பதத்தில் - நீலபர்வதத்தில், நல்லோர்கள் தேடிவைத்த-நல்லோர்கள் சம்பாதித்துவைத்த, தெய்வத்திலகமே- தெய்வத்திற்சிறந்தவஸ்துவே; நீடுபவம் தங்காத - பெரிய பாவங்கள் தங்காதொழிகின்ற, அநேக தங்காபதம் - அநேக தங்காபதம் என்னுந்திருப்பதியில்,சேர்ந்த-எழுந்தருளியிருக்கிற, நம்காதல் ஆன - எமது விருப்பத்து வடிவாகிய, நயப்பு உணர்வே - நல்ல ஞானமே; சிந்

☞ 552-வது வரிமுதல் 575-வது வரிவரையும் பத உரை.

*காது - தாழாமல், தண்நிறைந்து நின்றவர்தாம் சார் - குளிர்ந்த சாந்தநெறியில் நின்றோர் சேர்கின்ற, திருக்கேதாரத்தில் -* **திருக்கேதாரம்** *என்னுந் திருப்பதியில் எழுந்தருளின, பண்ணிறைந்த -பண்கள் நிரம்பின, * கீதப்பனுவலே-கீதரூபமாகிய நூலே; எண்நிறைந்த - மனோபீஷ்டங்கள் நிரம்பின, சான்றோர் வணங்கும் - பெரியோர் வணங்குகிற, நொடித்தான்மலையில்வாழ்கின்ற -* **திருநொடித்தான்மலையி** *லெழுந்தருளிய, தேன்தோய் - இனிமை நிறைந்த, அமுதம் செழுஞ்சுவையே - அமிர்தத்தின் செழுமையாகிய சுவையாயிருப்பவனே; வான் தோய்ந்த - சுவர்க்க லோகத்தில் வாழ்கின்ற, இந்திரரும் - இந்திரர்களும், நாரணரும் - நாரணர்களும், எண் இல் பிரமர்களும் - அளவற்ற பிரமர்களும், வந்து இறைஞ்சும் - வந்து வணங்குகின்ற, † வெள்ளிமலையானே - வெள்ளிமலையையுடையவனே; தந்திடும்-ஈன்றிட்ட, நல்தாய்க்கும் கிடையாத - நற்றாய்க்கும் இல்லாத, தண் அருள் கொண்டு-குளிர்ந்த அருளினால், அன்பர் உள்ளம் வாய்க்கும் - அன்பரது மனத்தில் எழுந்தருளிய, கைலைமலையானே-* **திருக்கைலைமலை***யையுடையவனே; தூய் குமரன் தந்தையே-பரிசுத்தமான ‡ குமரவேளுக்குத்தந்தையே; என் அருமைத்தந்தையே தாயே-எனது அருமையாகிய தந்தையே தாயே; என் சிந்தையே கோயில்கொண்ட - என் மனத்தையே கோயிலாகக்கொண்டருளிய, § தீர்த்தனே-தேவனே; சந்தம் மிகும்-அழகு மிகுந்த, எண் தோள் உடையாய் - எட்டுத்தோள்களையுடையானே; என்னை உடையாய் - என்னையுடையவனே; மார்பு அகத்தில் - மார்பினிடத்தில், வண்டு ஓலிடும் - வண்டுகள் சத்திக்கின்ற, கொன்றைமாலையாய் - கொன்றை மலர்மாலையையுடையவனே; தொண்டர் - அடியார்கள், விழி உண்ணற்கு - கண்ணாரக்கண்டனுபவித்தற்கு, எளியாய் - எளியனாயிருப்பவனே; உருத்திரன் மால் ஆதியர்தம் - உருத்திரன் திருமால் முதலியோருடைய, கண்ணின் - கண்களால், கனவிலும் - சொப்பனத்திலும், காண்பு அரியாய் - காணுதல் அருமையானவனே; மண் உலகில் - மண் உலகத்தில், என்போன்றவர்க்கும் - என்னைப்போல்வார்க்கும், இருள் நீக்கி - அஞ்ஞான இருட்டையொழித்து, இன்பு உதவும் - ஞான இன்பத்தைத்தருகின்ற, பொன்போன்ற மேனி - பொன்போன்ற திருமேனியையுடைய, புராதனனே - பழையோனே; மின்போன்ற செஞ்சடையாய்-மின்னற்கொடிபோல்கின்ற சிவந்த சடாபாரத்தையுடையவனே; மூவருக்கும்-பிர்ம்மவிஷ்ணுருத்திராதிகளாகிய மும்மூர்த்திகளுக்கும், தேவருக்கும் - மற்றதேவர்களுக்கும், யாவருக்கும்-மற்றெல்லோருக்கும், அஞ்சு அடையாவண்ணம் - அச்சம் உண்டாகாதபடி, அளிப்போனே - அருள்செய்பவனே; விஞ்சு உலகில் - மேலான உலகங்களிலுள்ள, எல்லார்க்கும் நல்லவனே - யாவருக்கும் நல்லவனாயிருப்பவனே; ¶ எல்லாம் செய்வல்லவனே - எல்லாவற்றையுஞ் செய்யவல்லவனே; எல்லார்க்கும் ஒன்றாய் இருப்பவனே-எல்லார்க்கும் ஒருநிகராயிருப்பவனே; தொல் ஊழி ஆர்ந்த-பழமையாகிய கற்பகாலத்தில் பொருந்திய, சராசரங்கள் எல்லாம் - சராசரப்பொருள்கள்யாவும், அடிநிழலில் - திருவடிநிழலின்கண், சேர்ந்து ஒடுங்க - சேர்ந்து அடங்கும்படி, மாநடனம் செய்வோனே - பெரியதிருநடனஞ் செய்வோனே; சார்ந்து - பொருந்தி, உலகில் - உலகத்தில், எத்தேவர் - எந்தத்தேவர்கள், மெய்த்தேவர் என்று - உண்மையாகிய தேவர்களென்று, உரைக்கப்பட்டவர்கள் - சொல்லப்பட்டார்களோ, அத்தேவர்க்கு எல்லாம்-அந்தத்தேவர்களுக்கெல்லாம், முன் ஆனோனே-முன்னானவனே;*

---

* கீதரூபமாகிய நூல் வேதம்; இதை எழுதாமறையென்றும் சொல்வார் பெரியோர். † வெள்ளிமலை - கைலாசம். ‡ குமரவேள் சுப்பிரமணியக்கடவுள். § தீர்த்தன் - பரிசுத்தன் எனினும்பொருந்தும். ¶ எல்லாம் செய்வல்லவன் - சர்வசக்தன்.

☞ 576-வது வரிமுதல் 599-வது வரிவரையும் பத உரை.

சத்து ஆன - சாரமான, வெண்மை முதல் - வெண்மை முதலான, ஐ வண்ணமும் மேவி - ஐந்து நிறங்களையும் அடைந்து, ஐந்து தேவர்களாய் - பிரமன், விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன் சதாசிவன் என்னும் ஐந்து தேவர்களாகி, திண்மை பெறும் - உறுதிபெற்ற, ஐந்தொழிலும் செய்வோனே - சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம் அநுக்கிரகமாய ஐந்தொழில்களையும் செய்பவனே; மண் முதல் ஆம் ஐந்தாய்- நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என ஐந்தாகி, இருசுடராய் - சூரியன், சந்திரன் என்னும் இரண்டு ஒளியுடைப்பொருள்களாகி, ஆன்மாவாய் - ஆன்மாவாகி, நாதமுடன் விந்து ஆகி - நாதத்தோடு விந்து ஆகி, எங்கும் விரிந்தோனே- எவ்விடத்தும் பரவியிருப்போனே; அந்தண - அந்தணனே; வெண் நீறு உடையாய் - திருவெண்ணீற்றையுடையவனே; . யாறு உடைய நீள் முடியாய் - கங்கையணிந்த நீண்ட சடைமுடியையுடையவனே; நேடு அரிய - யாவராலும் தேடுதற்கரிய, வீறு உடையாய் - மேன்மையையுடையவனே; நின்றனக்கு - உனக்கு, ஓர் விண்ணப்பம் - என்னால் செய்யப்படுவதாகிய ஒருவிண்ணப்பமுண்டு; (அதனை) மாறுபட எள்ளல் - மாறாக இகழாதே; அடியேன் - உன் அடியேனாகிய, எனக்குள் - எனக்குள்ளே, ஒளியாமல் - மறைக்காமல், உள்ளபடியே உரைக்கின்றேன் - உள்ளபடியே சொல்லுகின்றேன்; விள்ளுறும் யான்-சொல்லப்பட்ட நான், வன் சொல்லுடன் அன்றி - வன்மொழிகளுடன் அல்லாமல், வள்ளல் - உதாரனாகிய, உனது அன்பர் தமக்கு - உன் அன்பருக்கு, இன்சொலுடன் - இன்மொழியோடு, பணிந்து - வணங்கி, ஒன்று ஈந்தது இல்லை - ஒருபொருளைக் கொடுத்ததேயில்லை; புன்சொல் என்னும் - அற்பமாகிய சொல் என்கிற, பொய் உரைக்க என்றால் - பொய் சொல்ல என்றால், புடை எழுவேன் அன்றி - கைபுடைத்து எழுதலேயன்றி, ஒரு மெய் உரைக்க - ஒரு மெய்ம்மொழி சொல்ல, என்றும் விழைந்தது இல்லை - எக்காலத்தும் விரும்பினதில்லை; வையகத்தில் - உலகத்தில், * பொல்லா விரதத்தைப் போற்றி - பொல்லாத விரதத்தைப் போற்றி, உவந்து உண்பது அல்லாமல் - விரும்பி உண்பதல்லாமல், கொல்லா விரதத்தை - கொல்லாமையாகிய விரதத்தை, கொண்டது இல்லை - நான் பூண்டதில்லை; அல்லாதார் - பிறரது, வன்புகழை கேட்க - வலிய புகழைக் கேட்பதற்கு, மனம்கொண்டது அல்லாமல்-மனதில் நினைத்தது அல்லாமல், நின் புகழை கேட்க - உன்புகழைக்கேட்பதற்கு, நினைந்தது இல்லை - நினைத்தது இல்லை; வன்பு கொண்டு - வலிமைகொண்டு, இல்-இல்வாழ்க்கையில், நடிக்கும்-நடிக்கின்ற, நுண் இடையார்க்கு- நுட்பமாகிய இடையையுடைய மாதர்க்கு, ஏவல் புரிந்தேன் அல்லது - ஏவல் செய்தேன் அல்லாமல், உன் பொன் அடிக்கு-உனது அழகியதிருவடிக்கு, தொண்டு புரிந்தது இல்லை-தொண்டு செய்தது இல்லை; பன்னுகின்ற-சொல்லப்படுகின்ற, செக்கு உற்ற-செக்கில் அகப்படுகின்ற, எள் எனவே-எள்ளைப்போலவே, சிந்தை நசித்தேன் அல்லது-மனம்வருந்தினேன் அல்லது, முக்குற்றம்தன்னை - முக்குற்றத்தை, முறித்தது இல்லை-கெடுத்ததில்லை; துக்கம் மிகும்-துன்பம் மிகுதற்கு ஏதுவாகிய, தா இல் வலம்கொண்டு-கெடுதல் இல்லாத வலிமையைக்கொண்டு, சஞ்சரித்தேன் அல்லது- சஞ்சரித்தேன் அல்லாமல், நின் கோவில் வலம்கொள்ள-உன் திருக்கோயிலை வலம் வர, குறித்தது இல்லை-நினைத்தது இல்லை; பூவுலகில்-பூலோகத்தில், வல் நிதியோர் முன்-பெருஞ் செல்வருக்கு முன்னே, கூப்பி-கைகுவித்து, வாழ்த்தினேன் அன்றி- வாழ்த்தினேனல்லது, உன்றன்சன்னிதியில் - உன்துசன்னிதியில், கைகூப்பி - கைகுவித்து, தாழ்ந்தது இல்லை - பணிந்தது இல்லை; புல் நெறி - அற்பமாகிய தீநெ

* பொல்லாவிரதம் - கொலைமுதலியன செய்தலாகிய விரதம்.

599-வது வரிமுதல் 625-வது வரிவரையும் பத உரை.

றியைச் சேர்ந்த, மிண்டரோடு கூடி - வம்பரோடு சேர்ந்து, வியந்தது அல்லால் - சந்தோஷித்தது அல்லாமல், ஐயா - ஐயனே, நின் தொண்டரொடுங் கூடி - உன் அடியார்களோடும் சேர்ந்து, சூழ்ந்தது இல்லை-அவர்களைச் சூழ்ந்திருந்தது இல்லை; கண்டவரை-தன்னைவந்து கண்டவர்களை, கன்றும் முகம் கொண்டு-கோபித்த முகத்தைக்கொண்டு, கடுகடுத்துப் பார்ப்பது அல்லால் - கடுகடுத்துப்பார்ப்பதேயன்றி, என்றும் - எந்நாளும், முகமலர்ச்சி ஏற்றது இல்லை - முகமலர்ச்சிகொண்டதில்லை; நன்றிபெறும்-நன்மையைப்பெற்ற, நல் நெஞ்சர்-நல்ல மனத்தையுடையவர், உன்சீர் நவில - உன்பெருமையைச் சொல்ல, அது கேட்டு - அதைக்கேட்டு, கல் நெஞ்சை-என்கல்மனத்தை, சற்றும்-சிறிதும், கரைத்தது இல்லை-கரையச் செய்ததில்லை; பின் எஞ்சா-பிறகிடாத, பண் நீர்மைகொண்ட-பண்ணின்குணத்தைக்கொண்ட, தமிழ்ப் பாமாலையால் - தமிழ்ப்பாடலாகிய மாலைகளால், துதித்து - தோத்திரம்செய்து, கண்ணீர்கொண்டு-கண்களில் நீர்பெருக்கி, உன்பால் கனிந்தது இல்லை-உன்னிடத்துக் கனிவுசெய்ததில்லை; தண்ணீர்போல் - தண்ணீரைப்போல, நெஞ்சம் உருகி-மனமுருகி, நினைக்கும்-எண்ணுகின்ற, அன்பர்போல்-அன்பரைப்போல, என்னை-என்னை, நீ அஞ்சேல் என - நீஅஞ்சாதே யென்று சொல்லும்படி, நின்தாள் அடுத்தது இல்லை - உன்திருவடியைக் கிட்டினதில்லை; விஞ்சு உலகர் - மேலான உலகத்தார், மெய்யடியன் என்று உரைக்க - மெய்யடியானென்று சொல்லும்படி, வித்தக-ஞான உருவனே, நின்பொன் அடிக்கு-உனது அழகிய திருவடிக்கு, பொய்யடிமை வேடங்கள் பூண்டது உண்டு - பொய்யடிமையாகிய வேஷங்களைப்பூண்டதுண்டு; நைய-மனம்வருந்தும்படி, மிகு மையல்விளைக்கவந்த-மிகுந்த காம மயக்கத்தை யுண்டாக்கவந்த, மாதர்-ஸ்திரீகளுடைய, புணர்ச்சி என்னும் - கலவியென்கிற, வெப்ப வினைக்குழியில் வீழ்ந்தது உண்டு-கொடுந்தொழிலாகிய பள்ளத்தில் விழுந்ததுண்டு; தூய்யர்தமை - பரிசுத்தராகிய ஞானியரை, என்ஒன்றும் இல்லாது - யாதொரு காரணமுமில்லாமல், இயல்பாக - இயற்கையாக, பின் ஒன்றும் - பின்னே யொன்றும், முன் ஒன்றும் ஆக - முன்னே யொன்றுமாக, மொழிந்தது உண்டு - சொன்னதுண்டு; மன்னுகின்ற - நிலைபெற்ற, மானம் செய்யாது - மானத்தை மேற்கொள்ளாமல், மனம் நொந்து இரப்போர்க்கு - மனம்வருந்தி யாசிப்பவர்க்கு, தானம் செய்வாரை - தானம்பண்ணுகிறவர்களை, தடுத்ததுண்டு - தடை செய்ததுண்டு; ஈனம் இல்லா வாரம் உரையாது-தாழ்வில்லாத அன்பான வார்த்தைகளைச் சொல்லாமல், வழக்கினிடை - வழக்கினிடத்து, ஓரவாரம் உரைத்து - பக்ஷபாதமானவார்த்தைகளைச் சொல்லி, மலைந்தது உண்டு - போரிட்டதுண்டு; ஈரம்இல்லா நெஞ்சருடன் கூடி - அன்பில்லாத மனமுடையவரோடு சேர்ந்து, நேசம்செய்து - சிநேகம்பண்ணி, உன் அடியே-உனதுதிருவடியையே, தஞ்சம் என தாழாது-ஆதரவென்று வணங்காமல், தாழ்ந்தது உண்டு - தாழ்ந்ததுண்டு; எஞ்சல் இல்லா - குறைவில்லாத, தாய்அனையாய் - தாயை நிகர்த்தவனே, உன்றனது - உன்னுடைய, சந்நிதி நேர்வந்தும்-சந்நிதிக்எதிரே வந்தும், ஒருநேயமும் இல்லாது - சிறிதும் அன்பில்லாமல், * உதிபோல் - ஒதியமரம்போல, நின்றது உண்டு - நின்றதுண்டு; தீய வினைமாளா - தீவினை முடிவுபெறாத, கொடியமனம் - வன்மனத்தையுடைய, செல்வர் வாயிலில் போய் - செல்வரது முற்றத்திற்சென்று, கேளா-கேட்கப்படாத, சிவநிந்தை கேட்டதுண்டு - சிவநிந்தையைக்கேட்டதுண்டு; மீளாத - திரும்பாத, பொல்லா-கொடிய, புலையரைப்போல் - நீசரைப்போல, புண்ணியரை-புண்ணியவான்களை, வல்மதத்தால் - வலிய மதத்தினுல், சொல்லா வசை யெல்லாம் சொன்னது

* ஒதி - உதியென மரீஇயது.

☞ 626-வது வரிமுதல் 653-வது வரிவரையும் பத உரை.

உண்டு, சொல்லப்படாத வசவுகளெல்லாம் சொன்னதுண்டு; நல்லோரைபோற்ருது-நல்லோர்களை வணங்காமல், பொய் உடம்பைபோற்றி-பொய்யுடம்பைக் காப்பாற்றி, சிவபூசை ஆற்ருது-சிவபூசைசெய்யாமல், சோற்றுக்கு அலைந்தது உண்டு-சோற்றின்பொருட்டு திரிந்ததுண்டு; தேற்ருமல்-தெளியாமல், பத்தா-பத்தனே, ஈ என்று-கொடுவென்று, இங்கு இரப்போர்தமைக்கண்டு-இவிடம் யாசிப்பவர்களைக் கண்டு, கோபத்தால்-கோபத்தினல், நாய்போல் குரைத்ததுண்டு-நாயைப்போலக் குரைத்ததுண்டு; பாபத்தால்-பாபத்தினல், சிந்தை ஒன்று - மனமொன்று, வாக்கு ஒன்று-சொல்லொன்று, செய்கை ஒன்று ஆய்-செய்கையொன்ருகி, போகவிட்டு - போகவிடுத்து, எந்தை - எமது தந்தையே, நின்னை - உன்னை, ஏத்தாது இருந்தது உண்டு-துதியாதிருந்ததுண்டு; புந்தி - புத்தியைத்தருவதாகிய, இந்த சொல்லை கல் என்று - இந்தச் சொல்லைக் கற்கக்கடவை யென்று, நல்லோர் சொன்ன புத்திகேளாமல்-அறிவின்மிக்கவர்கள் சொன்ன புத்தியைக் கேட்காமல், எல்லைக்கல் ஒத்தே இருந்தது உண்டு - எல்லைக்கல்லை நிகர்த்து இருந்ததுண்டு; தொல்லைவினை - பழவினையானது, ஆழ்த்து-அழுத்துகின்ற, ஆமய உலகில் - நோயுருவாகிய உலகத்தில், அற்பமகிழ்ச்சியினல் - சிறு சந்தோஷத்தால், உன்னை வாழ்த்தாமல் மறந்தது உண்டு - உன்னைத் துதியாமல் மறந்ததுண்டு; தாழ்த்தாமல் - குறைவுபடுத்தாமல், பூணு-ஆபரணமாக, எலும்பு அணியாய் பூண்டோய் - எலும்பை யழகாகப் பூண்டவனே, நின்பொன் வடிவம் காணுது - உன்னுடைய பொன்னுருவைக் காணுமல், வீழ்நாள் கழித்தது உண்டு - பயனற்ற நாள்களைக் கழித்தது உண்டு; மாணுத - மாட்சிமைப்படாத, காடுபோல் - காடுபோன்ற, ஞாலம் - உலகத்தின், கடு நடையிலே - கொடிய வொழுக்கத்தில், இருகால் மாடுபோல் நின்று-இரண்டு கால்களையுடைய மாடுபோல நின்று, உழைத்து வாழ்ந்தது உண்டு - உழைத்துப் பிழைத்ததுண்டு; நாடு அகன்ற-நாடு விசாலித்த, கள்ளிவாய் ஓங்கு - கள்ளி இடங்கடோறும் செழிக்கின்ற, பெருங்காமம்-பெரிய காமமாகிய, கடுங்காட்டில்-கொடிய காட்டினிடத்தில், கொள்ளிவாய் பேய்போல் - கொள்ளிவாய்ப் பசாசுபோல, குதித்தது உண்டு - கூத்தாடியது உண்டு; ஒள்ளியரால்-ஞானவான்களால், எள்ளுண்ட-இகழப்பட்ட, மாயா இயல்பு உறு-மாயையின் காரியமாகிய, புன்கல்வி எல்லாம்-அற்ப கல்விகள் யாவும், கள் உண்ட பித்தனைப்போல் கற்றது உண்டு - கள்ளுக் குடித்த பைத்தியக்காரனைப்போலப் படித்ததுண்டு; நள் உலகில்-நடு உலகத்தில், சீர்-சிறப்புப்பொருந்திய, ஆசை எங்கும்-திசைகளெல்லாம், சொல் சென்றிடவேண்டும் என்னும் - சொல்லானது செல்லவேண்டுமென்கிற, பேராசை பேய்தான் பிடித்தது உண்டு - பெரியதாகிய ஆசை யென்கிற பசாசு பிடித்ததுண்டு; தீரா - ஒழியாத, என்சாதகமோ - என்பழக்கமோ, தீவினையின் சாதனையோ - தீவினையின் பழக்கமோ, நான் அறியேன் - நானறிந்திலேன்; பாதகம் என்ருல் - பாவமென்ருல், எனக்கு பால்சோறு - எனக்குப் பாற்சோற்றுக்குச் சமானமாகும்; தீது அகன்ற - தீமை யொழிந்த, தூய்மை-பரிசுத்தத்தன்மை, நன்று ஆம் என்கிற-நன்மையாமென்கிற, தொன்மையினர் - பெரியோரது, வாய்க்கு இனிய வாய்மை யென்ருல் - வாய்க்கு இனிய சொல்லென்ருல், என்னுடைய வாய்குமட்டும் - எனது வாய் குமட்டுகின்றது; காய்மைதரும் - கடினத்தன்மை பொருந்திய, கற்கு நிகர் ஆம் - கல்லுக்குச் சமானமாகிய, கடுஞ்சொல் அன்றி - கடுஞ்சொல்லே யல்லாமல், நல் - நன்மையாகிய, மதுரச்சொற்கும் எனக்கும் - இன்சொல்லுக்கும் எனக்கும், வெகுதூரம் - நெடுந்தூரமாயிருக்கின்றது; பொற்பு மிக நண்ணி - அழகுமிகப்பொருந்தி, உன்னைப்போற்றுகின்ற-உன்னைவணங்குகிற, நல்லோர்க்கு-

654-வது வரிமுதல் 678-வது வரிவரையும் பத உரை.

நல்லவர்களாகிய புண்ணியர்க்கு, இனிய - இனிதாகிய, சிவபுண்ணியம் என்றால் - சிவ புண்ணிய மென்றால், எனக்கு போராட்டம் - எனக்குப்போராட்டமாயிருக்கின்றது; அண்ணல் - பெருமையையுடைய, உன்னை - உன்னை, நாள் உனையாது ஏத்துகின்ற - நாள்கழியாமல் துதிக்கின்ற, நல்லோர்மேல்-நல்லவர்களின்மேலே, இல்லாத கோள் உரை என்றால் - இல்லாத கோள் சொல்லுதலென்றால், எனக்கு கொண்டாட்டம் - எனக்குப்பெருமகிழ்ச்சியாயிருக்கின்றது; நீள - மிகுதியாக, நின்னை நேசிக்கும் - உன்னை விரும்புதற்குரிய, நல்லநெறி ஆம் - நன்னெறியாகிய, * சிவாகமநூல் - சிவாகமங்களாகிய சாஸ்திரங்களை, வாசிக்க வென்றால் - படிக்க வென்றால், என்வாய்நோகும்-என்வாய்நோகின்றது; காசிக்கு - காசியைப்பார்க்கிலும், நீள்திக்கிலானாலும்-வெகுதூரமாகிய திசைகளிலானாலும், நேர்ந்து அறிவதல்லது-போய்ப்பார்ப்பதேயன்றி, வீண்வேடிக்கையென்றால் - உபயோகமற்றவேடிக்கையென்றால், விடுவதில்லை - விடுகிறதில்லை; நாடு அயலில்-நாட்டுக்குப் புறத்தில், வீறு ஆம் - மேன்மையாகிய, உனது விழாசெய்யினும் - உன்திருவிழாவைச் செய்தாலும், அவ்விடம் - அந்த இடமானது, ஆறாயிரம் காதம் ஆம் - ஆறாயிரங் காததூரமாயிருக்கின்றது; மாறு ஆன - பகையாகிய, போகம் என்றால் - விஷயபோகமென்றால், உள்ளம் மிக பூரிக்கும் அன்றி-மனம் மிகவும் சந்தோஷிப்பதேயல்லாமல், சிவயோகம் என்றால் - சிவயோகமென்றாலோ, என்னுடைய உள் நடுங்கும் - என் மனம் பயப்படுகின்றது; சோகமுடன் துள்ளல் ஒழிந்து - துக்கத்தோடு துள்ளுதலொழிந்து, என் நெஞ்சம் சோர்ந்து அழியுங்காலத்தில் - என் மனமயர்ந்தழியுங் காலத்தில், கள்ளம் என்றால் - திருட்டுத்தனமென்றாலோ, உள்ளே களித்து எழும்பும்-உள்ளே சந்தோஷங் கொண்டெழாநின்றது; அள்ளல்நெறிசெல் என்றாலன்றி-நரகவழியிற்போவென்றாலல்லாமல், சிவசிவாவென்று - சிவசிவாவென்று, ஒருகால் சொல் என்றால் - ஒருதரம் சொல் என்றால், என்றனக்கு - எனக்கு, துக்கம்வரும்-துக்கமுண்டாகும்; நல்லநெறி - நன்னெறியால், வாம்பலன் கொண்டோர்கள் - விரும்புதற்குரிய பயனைக்கொண்டவர்கள், மறந்தும் பெறா - மறந்தும் அடையாத, கொடிய சோம்பல் என்பது - கொடிய சோம்பலென்று சொல்லப்படுவது, என்னுடைய சொந்தம் - எனது சொந்தப்பொருளாகும்; எம்பலுடன் - களிப்போடு, இரக்கமென்பது - இரக்கமென்று சொல்லப்படுவது, எற்றோ - எத்தன்மைத்தோ, என்றனைக்கண்டு அஞ்சி - என்னைக்கண்டு பயந்து, என்னை உற்றோரையும் - என்னைச் சேர்ந்தோரையும், உடன் விட்டு ஓடும் - உடனே விட்டு ஓடிப்போம்; சற்றேனும் - சிறிதாயினும், ஆக்கமே சேராது - செல்வஞ் சேராமல், அற துரத்துகின்ற - மிகவும் துரத்துகின்ற, வெறுந் தூக்கமே-வெறுமையாகிய நித்திரையே, என்றனக்கு சோபனம் - எனக்குச் சோபனமாகும்; ஊக்க மிகும் - முயற்சி மிகுந்த, ஏறு உடையாய் - இடபத்தை யுடையவனே, நீறு அணியா - திருவெண்ணீறு தரிக்காத, ஈனர் மனையாகினும் - இழிந்தோர் வீடாகினும், வெண் சோறு கிடைத்தால் - வெள்ளைச் சோறு கிடைக்கப்பெற்றால், அதுவே சொர்க்கம் - அதுவே சுவர்க்கலோகமாம்; வீறுகின்ற - மிகுகின்ற, வாழ்வு உரைக்கும் - மோட்ச வாழ்வை எடுத்துச்சொல்லுகின்ற, நல்ல மனத்தர் தமை - நல்ல மனத்தையுடையவர்களை, எஞ்ஞான்றும் - எந்நாளும், தாழ்வு உரைத்தல் - தாழ்ச்சி பேசுதல், என்னுடைய சாதகம் - என்

* சிவாகமம் - 28:—காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்ரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலலிதம், சித்தம், சந்தான சருவோத்தமம், பரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம்.

☞ 679-வது வரிமுதல் 704-வது வரிவரையும் பத உரை.

னுடைய பிறவிக்குணமாகும்; வேள்வி செய்யும் - யாகஞ்செய்கின்ற, தொண்டர் தமை - அடியார்களை, துதியா - துதிக்காத, துட்டரைப்போல - கொடியர்களைப் போல, எப்பொழுதும் - எக்காலத்தும், சண்டை என்பது - சண்டையென்று சொல்லப்படுவது, என்றனக்கு - எனக்கு, தாய் தந்தை - மாதா பிதாக்களாகும்; கொண்ட - பொருந்திய, எழு தாது ஆட - * சப்த தாதுக்களும் ஆட, ஓங்கித் தலை யாட - உயர்ந்து தலையாட, வஞ்சரொடு-பாதகரோடு, வாதாடவென்றால் - வாது செய்யவென்றால், என் வாய் துடிக்கும் - என் வாய் பதைக்கும்; கோது ஆட - குற்றம் பொருந்த, சிந்தை திரிந்து உழலும் - மனம் வேறுபட்டு உழலுகின்ற, தீய ரைப்போல் - கொடியரைப்போல, நல் தரும நிந்தை என்பது-நல்ல தருமநிந்தை செய்தல் என்பது, என் பழைய நேசம் - என் பழைய நட்பாகும்; முந்த - முன்ன தாக, நின்னை எண் என்றால் அன்றி - உன்னை நினையென்றால் அல்லது, இடர் செய்திடும் - துன்பத்தைச் செய்கின்ற, சொடிய பெண் என்றால் - கொடிய பெண்ணென்று சொன்னால், தூக்கம் பிடியாது - தூக்கம் வாராது.; பெண்க ளுடன் - ஸ்திரீகளோடு, புல் என்றால் - பொருந்து என்றால், தேகம் புளகிக்கும் அன்றி-சரீரம் பூரிக்கும் அல்லாமல், விட்டு நில் என்றால் - பொருந்துதலை நீங்கி நில் என்று சொன்னால், என் கண்ணில்-என் கண்களில், நீர்அரும்பும்-நீர்ததும்பும்; புல் லர் என்ற பேர்க்கும் - நீசர் என்ற பேர்க்கும், விருப்பு எய்தாத - விருப்ப முண் டாகாத, பெண் பேய்கள் - பெண்பேய்களது, வெய்ய - கொடிதாகிய, சிறு நீர்க் குழியே-அற்பமாகியமூத்திரத்துவாரமே, யான் குளிக்கும்-நான் முழுகுகின்ற, நீர்ப் பொய்கை - நீர் நிறைந்த தடாகமாகும்; சீர் கரையின் ஏறு - சிறப்புப் பொருந் திய முத்திக்கரையில் ஏறுமல், பெண் - பெண்களுடைய, மாதர் - அழகிய, இடைக்குள் - இடைக்குள்ளே, அளிந்து - இரணமாகி, என்றும் - எந்நாளும், ஆறுப்புண்ணுக்கே - ஆறுத புண்ணுக்கே, நான் அடிமை - நான் அடிமையா யிருக்கிறேன்; தேறுத - தெளியாத, வெம் சலம் செய் - கொடிய சலனத்தை யுண்டாக்குகின்ற, மாயா விகாரத்தினல் வரும் - மாயா விகாரத்தினலுண் டாகின்ற, வீண் சஞ்சலம் எல்லாம் - வீணுகிய துக்கங்களெல்லாம், எனது சம்பந்தம் - என்னுடைய உறவாகும்; அஞ்செழுத்தை - ஸ்ரீ பஞ்சாட்சரத்தை, சேர்ந்தார்க்கு அருள் புரியும் - தம்மை யடைந்தவர்க்கு அருள் செய்கின்ற, நின் அடியர் தாமேயும் சார்ந்தால் - உனது அடியார் தாமேயாய் வந்து சேர்ந்தாலும், அது பெரிய சங்கட்டம் - அது பெரிய துன்பமாகும்; ஆர்ந்திடு மான் - மேய் கின்ற மானனது, காந்து விழி புலியை - எரிகின்ற கண்ணையுடைய புலியை, கண்டதுபோல் - பார்த்ததுபோல, நல்ல குணசாந்தம் - நல்ல சாந்த குணம், என்னைக்கண்டால் தலை சாய்க்கும்-என்னைப் பார்த்தவளவில் தலைவணங்கும்; ஆம் தகையோர் சேர - உண்டாகிய பெருமையுடையோர் கூட, மனத்தில் செறிவித் திடும் - மனத்திற் கொள்ளுதற்குரிய, புருட தீரம் - புருஷ தைரியமானது, என் னைக்கண்டால் சிரிக்கும்-என்னைப் பார்த்தால் நகைக்கும்; கோரமதைக் காணில் - கோர ரூபத்தைக் கண்டால், உலகில் - உலகத்தில், கருத்துடையோர் கொள்ளு கின்ற - நற்கருத்துடைய பெரியோர் அடைகின்ற, நாணம் - நாணமானது, என் னைக் கண்டு நாணும் - என்னைக்கண்டு வெட்கமடையும்; ஏண் - பெருமைபொருந் திய, உலகில் - உலகத்தில், ஞானம் கொள்ளா - ஞானத்தை யடையாத, எனது - என்னுடைய, நாமம் உரைத்தாலும் - பெயரைச் சொன்னலும், அபிமானம் - அபிமானமானது, பயம் கொண்டு மாய்ந்துவிடும் - அஞ்சி யிறந்துபோம்; ஆன -

* சப்த தாதுக்கள்:—இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல்.

☞ 705 - வது வரிமுதல் 729-வது வரிவரையும் பத உரை.

உண்டாகிய, உன்றன் கேண்மை - உனது அன்புள்ள, குலம் - மேன்மையாகிய, தொண்டர் - அடியார், கீர்த்திபெற கொண்ட ஆண்மைக்கு - கீர்த்தியடையப் பெற்ற ஆண்தன்மைக்கு, நான் என்றால் ஆகாது-நானென்றாலாகாது; வாண்மை பெறும் - ஒளிபெற்ற, ஐய - ஐயனே, நின் தாள் பூசிக்கும் - உன் திருவடியைப் பூசிக்கிற, அன்பர் உள்ளத்து அன்பிற்கும் - அன்பர் மனத்திலுள்ள அன்பிற்கும், பொய்யன் எனக்கும் - பொய்யனாகிய எனக்கும், பொருத்தம் இல்லை - ஒற்றுமையில்லை; வையகத்தோர் - உலகத்தார், இல் எனினும் - இல்லையாயினும், சும்மா - சும்மா, நீ-நீ, ஈகின்றேன் என்று - கொடுக்கிறேனென்று, ஒரு சொல் சொல் எனினும் - ஒருவார்த்தை சொல்லென்றாலும், சொல்ல துணிவு கொள்ளேன் - சொல்லத்துணியமாட்டேன்; நல்லை-நல்லவளாகிய நீ, எமக்கு ஈ என்பார் அன்றி - எங்களுக்கு கொடு என்பவரல்லது, அன்னை-தாயானவள், என் பயத்தால் - என்னுடைய பயத்தினால், நின் சோற்றில்-உன் சோற்றில், ஈ என்பதற்கும்-கொடு என்பதற்கும், இசையாள் - சம்மதியாள்; ஈ என்பார்க்கு - கொடு என்பார்க்கு, எண்ணும் சிலர் - மதித்தற்குரியவராகிய சிலர், மண் இடுவார் - மண்ணிடுவார்கள்; எனக்கு - எனக்கு, அந்த மண்ணும் கொடுக்க - அந்த மண்ணையும் கொடுப்பதற்கு, மனம் வாராது - மனம் இசையாது; அண்ணுறும்-பொருந்திய, என் இல்லை அடைந்து - என் வீட்டை யடைந்து, இரப்பவருக்கு - யாசிப்பவருக்கு, எப்போதும் - எப்பொழுதும், இல்லை என்பது - இல்லையென்று சொல்லுவது, என் வாய்க்கு இயல்பு - என் வாய்க்கு இயற்கையாகும்; தொல் உலகை ஆண்டாலும் - பழமையாகியஇந்த உலகத்தையாண்டபோதிலும், அன்றி-அல்லது, அயலார் - பிறர், புன் கீரைமணி பூண்டாலும் - அற்பமாகிய கீரைமணியைப் பூண்டிருந்தாலும், என் கண் பொறுக்காது-எனது கண் பொறுக்கமாட்டாது; நீண்ட-பெரிய, * எழு தீபம் உறுவோர்-சப்த தீவுகளிலிருப்பவர், †திசையோர்-அட்ட திக்குகளிலுள்ளவர், மற்று யாவர்க்கும் - மற்றெல்லார்க்கும், கோபமது - கோபமானது, நான் கொடுக்கில் உண்டு - நான் கொடுத்தாலுண்டு; ஆபத்தில் - ஆபத்காலத்தில், வீசம் கொடுத்து - வீசத்தைக் கொடுத்து, எட்டு வீசம் என - எட்டு வீசமென்று, பிறரை மோசம்செய்ய - பிறரை மோசம் செய்வதற்கு, நான் முதற்பாதம் - நான் முதற்பாதமாயிருக்கிறேன்; பாசம் உள்ளோர் - விருப்பமுள்ளவர்கள், கை குடைய எழுதி - கை நோவ எழுதி, கட்டிவைத்த - சேர்த்துவைத்த, இவ்வுலகப் பொய்க்கதையே - இவ்வுலகத்தின் பொய்க்கதைகளே, யான் படிக்கும் புத்தகங்கள் - நான் படிக்கிற புத்தகங்கள்; மெய்ப்படும் - உண்மை பொருந்திய, நின் மந்திரத்தை உச்சரியா - உன் மந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரிக்காத, வாய் உடையேன் - வாயை யுடையவன், என்போல - என்னைப்போல, தந்திரத்தில் - உபாயத்தில், கை தேர்ந்தவர் இல்லை - கை தேர்ந்தவர்களில்லை; எந்தை - எமதுபிதாவே, இனி-இனி, எது என்று உரைப்பேன்-யாதென்று சொல்லுவேன்; இருகடல்சூழ் வையகத்தில் - பெரிய கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில், சூது என்பது எல்லாம் - சூதென்று சொல்லப்படுவன யாவும், என்சுற்றம் - என் உறவாகும்; ஓதுகின்ற - சொல்லுகிற, நஞ்சம் எல்லாம் - விஷத்தை யெல்லாம், கூட்டி நவின்றிடினும் - சேர்த்துச்சொன்னாலும், ஒவ்வாத - ஒப்பாகாத, வஞ்சம் எல்லாம் - வஞ்சகங்

* சப்த தீவுகள்:—நாவல், இறலி, இசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு. † அஷ்ட திக்கும், அதற்குப் பாலகர்களும்:—கிழக்கு - இந்திரன்; தென்கிழக்கு - அக்கினி; தெற்கு - யமன்; தென்மேற்கு - நிருதி; மேற்கு-வருணன்; வடமேற்கு - வாயு; வடக்கு-குபேரன்; வடகிழக்கு - ஈசானன்.

☞ 730-வது வரிமுதல் 747-வது வரிவரையும் பத உரை.

களெல்லாம்,என்கைவசம்-என்கைக்குள் அடங்கினவையே; அஞ்சவரும்-அஞ்சும்படி வருகிற, வீண் அவம் ஆம்-வீணாய்ப்பயனில்லாதனவாகிய, வஞ்சவினைக்கு முதலாகி நின்ற-வஞ்சத்தொழில்களுக்குக் காரணமாய்நின்ற, ஆணவமே-அகங்காரமே, என் காணியாட்சியதாம்-என்காணியாட்சியாகும்; மாண் நிறைந்த-பெருமை நிறைந்த, நல் அறிவே - நல்ல அறிவே, என்னை நெடுநாள் பகைத்தது அன்றி - என்னைநெடு நாளாகப்பகைத்திருப்பதல்லாமல், மற்றை - அதற்கு வேறாகிய, புல்அறிவே - அற்பமான அறிவே, என் உள்பொருள்-எனது உட்பொருளாகும்; சொல்லவொண்ணா-சொல்லக்கூடாத,வேடருக்கும்கிட்டாத-வேடருக்கும்கிடையாத,வெம்குணத்தால்-கொடிய குணத்தால், இங்கு உழலும் மூடருக்குள் - இவ்வுலகத்தில் திரிகின்ற அறிவீனர்களுக்குள்ளே, யானே முதல்வன்-நானே முதன்மையானவன்; வீடு அடுத்த-முத்தியை விரும்பின, மேதையர்கள் - ஞானிகள், வேண்டா - விரும்பாத, விலங்கு ஆய் திரிகின்ற-மிருகம்போலத்திரிகிற, பேதையென்பது - பேதையென்று சொல்லப்படுவது, என் உரிமை பேர் - எனக்குரிய பெயராகும்; பேதம் உற ஓதுவது என் பற்பலவாய் - வேறுபாடுற்ற பலவிதங்களாய்ச் சொல்வதேன்? உற்ற தவத்தோர் நீத்த - மிகுந்த தவத்தோர் வெறுத்து நீக்கின, தீதுகள் எல்லாம்-தீமைகள் யாவும், எனது செல்வம் - என்னுடைய செல்வமாகும்; ஆதலினால் - ஆகையால், பேயினை ஒத்து-பேயை நிகர்த்து, இவ்வுலகில் - இந்தவுலகத்தில், பித்து ஆகின்ற - பைத்தியங்கொண்டுநின்ற, இந்த நாயினை - இந்த நாயினேனை, நீ ஆண்டிடுதல் - நீயாண்டருளுதல், நன்கு அன்றே ஆயினும்-நன்றல்லவேயாயினும், முன்-முன்னே, மண் ஆர் உயிர்களுக்கும் - மண்ணில் வாழ்கின்ற உயிர்களுக்காகவும், வானவர்க்கும் - தேவர்களுக்காகவும்,இரங்கி-இரக்கங்கொண்டு, உண்ணா-உண்ணப்படாத, * கொடு விடமும் உண்டனையே-கொடியநஞ்சையும் புசித்தனையே;எண்ணமல்-மதிக்காமல், † வேய் தவண வெற்பு எடுத்த-மூங்கிலடர்ந்த வெள்ளிமலையைத் தூக்கின, வெய்ய அரக்கன் தனக்கும்-கொடிய அரக்கனாகிய ராவணனுக்கும், வாய்த்த வரம் எல்லாம் வழங்கினையே - பொருந்திய வரங்களெல்லாவற்றையுங் கொடுத்தாயே; சாய்த்த - கோணிய, மன வீம்பு உடைய - மனவீம்புள்ள, வல்முனிவர் - வலிய முனிவர்களாகிய தாருகாவனத்திருடிகள், வேள்விசெய்துவிட்ட-யாகஞ்செய்துவிடுத்த, கொடும்

---

* கிருதயுகத்தில் தேவர்களும் அசுரர்களும் கூடி மந்தரமலையை மத்தாகவும், அடியில் தாங்குவதற்கு ஆதாரமாக விஷ்ணுமூர்த்தியின் அவதாரமாகிய கூர்மத்தைவைத்து, வாசுகியைக்கடைகயிறுபமைத்துப் பாற்கடலைக் கடைந்தார்கள்; அப்போது அந்தக்கடலில் முன்னே விடமுண்டாயிற்று; அதின்கொடுமைக்காற்றுமல் தேவர்முதலியோர் பிரார்த்திக்க, பரமசிவன் அவர்கள் பிரார்த்தனைக்குத்திருவுளமிரங்கி, அவ்விடத்தையுண்டு கண்டத்தில் நிறுத்திக்கொண்டார், அதின்பின்னே இலக்குமி, சந்திரன், கௌஸ்துபமணி, பாரிஜாதம், கற்பகம், காமதேனு, தந்வந்தரி முதலிய பொருள்கள் தோன்றி, முறையே அவ்வவற்றிற்குரிய விஷ்ணு மார்பு முதலிய இடங்களில் அமைந்திருந்தன என்பது.

† முற்காலத்தில் ராவணன் திக்குவிஜயஞ் செய்யப்புறப்பட்டு முதலில் குபேரனோடு போர்செய்து அவனை வென்று, அவனது புஷ்பக விமானத்தை அபகரித்துக்கொண்டு, அதன் மேலேறிக்கைலாய மார்க்கமாகப் போகும்போது, அந்த விமானம் கைலாயத்தினருகே யசையாமல் நின்றுவிட்டது; நின்றுவிட்டதற்குக் காரணம் சிவபெருமானது மகிமையென்று நந்திதேவராலறிந்துகொண்டு, என் விமானத்தைத்தடைசெய்த சிவனது மலையாகிய இந்தக்கைலாயத்தை வேரோடுபேர்த்தெறிந்துவிடுகிறேனென்று அதனையசைத்துத் தூக்கும்போது, சிவபெருமான் தம் காற்பெருவிரலால் அழுத்த, ராவணன் தோள்கள் நெரிந்து, மிகவும் வருந்தியழுதான்; அதைக் கண்ட சிவபெருமான் திருவுளமிரங்கி அவனை விடுவித்தருளினர். இவன் மலையின் கீழகப்பட்டு வருந்தி அழுத காரணத்தால் இவனுக்கு ராவணன் எனப்பெயராயிற்று.

☞ 748-வது வரிமுதல் 756-வது வரிவரையும் பத உரை.

* பாம்பை யெல்லாம்-கொடிய பாம்புகளையெல்லாம், தோளில்பரித்தனையே-தோளிலே தாங்கினையே; நாம் பெரியர்-யாம் பெரியோர், எஞ்சேம் என்று-தாழோமென்று, ஆணவத்தால் - அகங்காரத்தால், எற்ற-எதிர்த்த, † இருவரையும்-பிரம விட்டுணுக்கள் இருவரையும், அஞ்சேல் என்று - பயப்படாதீர்களென்று, ஆட்கொண்டருளினையே - ஆட்கொண்டருளினையே; துஞ்சு - இறந்த, பன்றி - பன்றியின், தோயா - முதிராத, குருளைகளின் - குட்டிகளுடைய, துன்பம் பொறுது - துன்பத்தைக்கண்டுபொறுக்காமல், அன்று-அக்காலத்தில், தாயாய்-தாயாகி, ‡ முலைப்பாலும் தந்தனையே-முலைப்பாலையும் ஊட்டினையே; வாய் இசைக்கு - பொருந்தின இசைபாடுதற்கு, பாண்டியன்முன் சொல்லிவந்த - பாண்டியனுக்கெதிரே சொல்லிவந்த, $ பாணன்பொருட்டு-பாணன்பொருட்டாக, அடிமைவேண்டி-அடிமைத்தொழிலை விரும்பி, விறகு எடுத்து விற்றனையே - விறகெடுத்து விற்றாயே; ஆண்டு ஒருநாள் - அவ்விடத்தொருகாலத்தில், வாய் முடியா - வாயினாற் சொல்லிமுடியாத,வந்திக்கு-(செம்மனச்செல்வி என்னும் பிட்டுவாணிச்சியாகிய) மலடிக்கு, ஓர் ஆள் ஆகி - ஒரு கூலியாளாகி, தூய்முடிமேல் - பரிசுத்தமாகிய திருமுடியின்மீது, மண்ணும் சுமந்த

---

* தாருகாவனத்திருடிகள், தம்மனைவியர் கற்பிற் சிறந்தவராயிருத்தல்பற்றிச் செருக்கடைந்திருந்ததையறிந்த சிவபெருமான்,அந்தரிஷிபத்தினிகளுடைய கற்பினிலையை யறிவித்து, அவ்விருடிகளுடைய செருக்கை யடக்கும்பொருட்டுப் பிக்ஷாடன வேஷம்பூண்டு, அவ்வனத்திற்செல்லக்கண்ட ரிஷிபத்தினிகள், சிவபெருமானது பேரழகுக்குத் தோற்றுத்தங்கற்புநிலை குலைந்தார்கள்; அது கண்ட இருடிகள், பெருமான் மீது கோபங்கொண்டு, இவனைக் கொல்ல வேண்டுமென்றெண்ணி, ஒரு அபிசாரஹோமம் செய்து, அதிற்றோன்றிய முயலகன், பாம்பு, மான் கன்று முதலியவற்றைப் பெருமான் மீதேவிவிட, அவற்றையெல்லாம் பெருமானானவர் தம்திருவடி முதலியவற்றா லடக்கியருளிப் பாம்பை ஆபரணமாகத் தம் திருமேனியில் அணிந்துகொண்டார் என்பது.

† முன்பொருகாலத்தில் பிரமவிஷ்ணுக்களிருவரும் நான்பெரியன் நான் பெரியன் என்று வாதிட்டபோது, அவர்களுடைய அகங்காரத்தையடக்கும் பொருட்டு, அவ்விருவருக்கும் நடுவே யொரு நெருப்புமலையாய் சிவபெருமான் வளர்ந்து நின்றார்; அப்போது அவ்விருவரும் இந்த நெருப்புமலையின் முடியடிகளைக்கண்டு வந்தவரே பெரியவர் என்று தமக்குள்ளே சமாதானமாக வொரு ஏற்பாடு செய்துகொண்டு அநேக கற்பகாலங்கள் தேடியுங்காணமல் மீண்டுவந்து வணங்கினார்களென்பது. இந்நெருப்புமலைதான் "திருவண்ணமலை".

‡ மதுராபுரியில், பிரகஸ்பதிபகவானது சாபத்தின்படி இளமையிலேயே தந்தையையும் தாயையும் இழந்த பன்னிரண்டு பன்றிக்குட்டிகள் படுகிற வருத்தத்தைச் சோமசுந்தரர் நோக்கிப் பெருங்கருணை கூர்ந்து, உடனே தாய்ப்பன்றி வடிவமெடுத்து, குட்டிகளுக்கு முலைகொடுத்துப்பாலூட்டி அவற்றைக் காத்தருளினர் என்பது.

$ வடதேசத்திலிருந்து அனேகம் ஜயவிருதுகளுடனே தனது மாணாக்கர் பலருடன் மதுரைக்கு வந்து, அவ்வரசனால் பலவாறு சன்மானிக்கப்பட்டு, அளவுக்குமிஞ்சின செருக்குக்கொண்டு திரிந்த ஏமநாத னென்பா னொருவீணைப்பாடகன் இருந்தான். அம்மதுரையில் ராஜஸம்ஸ்தானபாடகனாகிய பாணபத்திரன் என்பான் அவ் ஏமநாதனை வெல்லவிரும்பி,சோமசுந்தரக்கடவுளை வேண்ட பெருமான் ஒரு விறகு தலையனாகச் சென்று, ஏமநாதன் வீட்டையடைந்து, வீணையைமீட்டி, அதிற் சாதாரியென்னு மிராகத்தை அமைத்து வாசித்துக் கருவியும் கண்டமும் ஒக்க யாவரும் வியக்குமாறு பாடி, அவனை அன்றைக்கே நாணங்கொண்டு அஞ்சி ஓடிப்போம்படிச் செய்தனர் என்பது.

757-வது வரிமுதல் 763-வது வரிவரையும் பதஉரை.

னையே- * மண்ணையும் சுமந்தாயே; மாய்துயரம் ஆக-இறந்துபோதற்குரிய துன்பமடைந்து, அகம் சேர் - தம் இதயத்திற் சேர்ந்த, மாணிக்கவாசகருக்காய் - ஸ்ரீமந் மாணிக்கவாசகர்பொருட்டு, † குதிரைச்சேவகன்போல்-குதிரைச்சேவகன்போல, வீதிதனில் சென்றனையே - (மதுராபுரித்) தெருவிற்போயினையே; மா விசயன் - பெருமைபொருந்திய அர்ஜுனனது, ‡ வில் அடிக்கு - வில்லாலடித்த அடிக்கு, நெஞ்சம் விரும்பியது அல்லால் - மனமகிழ்ந்ததுமல்லாமல், எறிந்த - வீசிய, ¶ கல் அடிக்கும் - (சாக்கியநாயனாரது) கல்லடிக்கும், உள்ளம் களித்தனையே - மனமகிழ்ந்தனையே; மல்லல் உறும் - வளப்பம்பொருந்திய, § வில்வக்கிளை உதிர்த்த - வில்வக்கிளையை உதிர்த்த, வெய்ய முசுக்கலையை - கொடிய ஆண்குரங்கை, செல்வம் - செல்வப்பெருக்குள்ள, துரைமகனாய்ச்செய்தனையே - ராஜகுமாரனாகச்செய்தாயே; சொல் அகலின் - சொல்லப்பட்ட தகளியில்; நீளுகின்ற - மிகுந்த, நெய்அருந்த - நெய்யை யுண்ண, நேர் எலியை-உடன்பட்ட எலியை, மூவுலகும் ஆளுகின்ற-மூன்

---

* பாண்டிநாட்டில் மதுராபுரியிலே ஓர்காலத்தில் வைகையாறானது வாதவூரன் பொருட்டுப்பெருகி, அவ்வூரை யழிக்க, அவ்வூரிலுள்ளார்க்கு அந்நதியை யணைகோலும்படி அரசன் கட்டளையிட்டனன். அங்ஙனமே ஒவ்வொருவரும் அணைகோலிக்கொண்டு வரும்பொழுது சோமசுந்தரக்கடவுள் வந்தி யென்னும் பிட்டுவாணிச்சிக்கு வேலையாளாக அமர்ந்து, அவள்கொடுத்த உதிர்ந்த பிட்டினையே கூலியாகப் பெற்று உண்டு, அணைகோல மண் சுமந்தனர் என்பது.

† மாணிக்கவாசகர் அரிமர்த்தனபாண்டியனிடமிருந்து குதிரைவாங்கி வருவதாகச் சொல்லி, அவன் கொடுத்த பொன்னைப்பெற்றுத் திருப்பெருந்துறையிற் சென்று, கடவுள் திருப்பணிமுடித்து அங்குநின்றும் மதுரைக்குப்போய்ப் பாண்டியனிடத்தில் ஓர்நாள்குறித்து, அந்நாளில் குதிரை வருவதாகச்சொல்லினர். அவர் சொல்லியபடி அந்நாளில் குதிரைகள் வாராமையினால் பாண்டியன் கோபித்து வாதவூரரை வருத்த, உடனே சோமசுந்தரக்கடவுள் நரியைப் பரியாக்கி பாண்டியனிடத்தில் கொண்டுவந்து விலை கூறினர் என்பது.

‡ பாசுபதம் பெறத் தவநிலைநின்ற அருச்சுனனை அழிக்கத்துரியோதனனேவலாற் பன்றிவடிவாய் வந்த மூகாசுரன்மேல் வேடவடிவாய்வந்த சிவபெருமான் அம்பெய்ய, அது பிளக்குமுன்னே அருச்சுனன் அம்பொன்றெய்து வராகத்தை விழுத்த, அதுகாரணமாக அவ்விருவருக்கும் உண்டான போரில் பரமசிவம் எதிரியின் வில் நாணினை [illegible], பார்த்தன் அவ் விற்றடியால் கடவுளது முடியில் அடித்தவளவிலே, சிவபிரான் த[illegible]கோடு காட்சி கொடுத்து, அவன்வேண்டுகோளின்படி பாசுபதாஸ்திரத்தையும் வி[illegible] [illegible]ணி முதலியவற்றையும் கொடுத்தருளிப்போயினர் என்பது.

¶ திருச்சங்கமங்கையில் வேளாளர் குலத்திலுதித்த ஒருவர் பௌத்த மதத்தின் கிளையான சாக்கிய சமயத்திற் பிரவேசித்து, அது சற்சமயமன்றென்று தெளிந்து, பரமசிவனே பதியென்று அறிந்து, அச்சாக்கிய சமயவேஷத்தைத் துறவாமலே தினந்தோறும் சிவலிங்கத்தைத்தரிசனம் செய்தபின்பே போசனம் செய்யவேண்டுமென்று விரும்பிச் சமீபத்திலிருக்கிறவொருலிங்கத்தை நாடோறும் தவறாமல் தரிசித்து, அருகிற் கிடக்குங் கல்லை யெடுத்து அன்பினோடு அதன் மேலெறிந்து அருச்சித்துவர ஒருநாள் பரமசிவம் உமாதேவியாரோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றிக் காட்சி தந்து அச்சாக்கிய நாயனாரைத் தமது திருவடியிற் சேர்த்தருளினர் என்பது.

§ கந்தவிரதம் அனுட்டிக்கவேண்டிய ஓர்புண்ணிய தினத்தில் ஓர் கருங்குரங்கானது வில்வமரத்தின் மீதேறி, அதன் கிளையை அசைத்துக் குலுக்கியதால் அதிலிருந்து உதிர்ந்த வில்வதளங்கள் சிவலிங்கத்தின் மீது விழ, அதனையே பக்தி பூர்வகமாகத் தன்னை அருச்சித்தது போலத்திருவுள முகந்து, அதற்கு முசுகுந்தனென்னும் சக்கிரவர்த்தியாய்ப்பிறக்கும்படி அருள் செய்தார் என்பது.

764-வது வரிமுதல் 780-வது வரிவரையும் பத உரை.

றுலகங்களையும் ஆளுதற்குரிய, * மன்னவனாய் ஆக்கினையே-அரசனாகச்செய்தாயே; கோள் அகல - துன்பமொழிய, வாய்ச்சு-அடைந்து, அங்கு - அவ்விடத்தில், நூல் இழைத்த - நூலிழையையுண்டாக்கின, வாய்-வாயினையுடைய, † சிலம்பி தன்னை-சிலம்பிப்பூச்சியை, உயர் - உயர்ந்த, கோ-அரசனாகிய, செங்கட்சோழன் என கூட்டினையே-செங்கட்சோழனென்று யாவரும்சொல்லும்படிசெய்தாயே; எச்சு அறும்-பழியற்ற, நல் ஆறு அடுத்த - நல்லவழியைப்பொருந்தின, வாகீசர்க்கு - திருநாவுக்கரசருக்கு, ஆம் - உண்டாகிய, பசியைக்கண்டு - பசியைப்பார்த்து, ‡ கட்டுசோறு எடுத்து - கட்டமுதெடுத்து, பின்னே சுமந்தனையே - பின்னே சுமந்துபோயினையே; கூறுகின்ற - சொல்லுகின்ற, தொன்மைபெறும் - பழமைபெற்ற, சுந்தரர்க்கு-சுந்தர மூர்த்தி நாயனாருக்கு, தோழன் என்று-நண்பனென்று, பெண்பரவை - பெண்ணாகிய பரவைநாச்சியாரது, நல்லமனைக்கு-அழகியவீட்டுக்கு, ¶ தூது நடந்தனையே - தூதாகிச்சென்றனையே; நன்மைபெற - நன்மையையடைய, இற்று என்ன - இத்தன்மையவென்று சொல்லப்பட்டவற்றை, இற்று என்னா-இத்தன்மைத்தென்று திருவுளம்பற்றி,எத்தனையோபேர்கள் செய்த-எத்தனையோபேர்கள் பண்ணின,குற்றம்-பிழைகளை, குணமாகக்கொண்டனையே-குணமாகக் கொண்டாயே; § பற்று-அகப்பற்று புறப்பற்று என்னும் இருவகைப்பற்றினையுடைய, உலகில் - உலகத்தில், அன்புடைய தாயர்கள் - அன்புள்ள தாய்மார்கள், ஓர் ஆயிரம்பேர் ஆனாலும் - ஓர் ஆயிரம்பேராயினும், அன்பு உடையாய் - அன்புள்ளவனே, நின்னைப்போல் ஆவாரோ - உம்மைப்போலாவார்களோ; இன்பமுடன் - இன்பத்தோடு, ஈண்டவரும்-நெருங்க வருகின்ற, தந்தையர்கள் - பிதாக்கள்,எண் இலரேயாயினும் - எண்ணிறந்தவரே யானாலும், என் ஆண்டவனே - என்னை யாண்டருளினவனே, நின்னைப் போலாவாரோ - உன்னைப்போலாவார்களோ; பூண்தகை கொள் - பூண்ட அழகைக்கொண்ட, எண் உடைய - பெருமையையுடைய, நின்னை அன்றி - உன்னையல்லாமல், எந்தை பிரானே-எந்தந்தையாகிய உபகாரசீலனே, உன் ஆணை-உன்மீதுஆணைப்படி, எனக்கு உற்ற துணை - எனக்குப்பொருந்திய துணையாவார், யாரும்இல்லை - ஒருவரும் இல்லை; நாணம் உளன் ஆனேன்-நாணத்தை யுடையேனாகிய அடியேனது, பிழைகள் அனைத்தினையும்-எல்லாப்பிழைகளையும், ஐயா-ஐயனே, நீ தானே பொறுக்கத்தகும் - நீயேபொறுத்துக் கொள்ளத்தகும்; மேல் நோற்ற - முற்காலத்

---

* திருமறைக்காட்டில் சிவபெருமான் சந்நிதியில் ஏற்றியிருந்த நெய்விளக்கானது ஒளி மழுங்கி எரியும்தருணத்தில் அந்தவிளக்குத்தகழியிலுள்ளநெய்யை ஓர்எலி உண்டபோது அதன் மூக்குப்பட்டு அவ்விளக்குத்திரியானது மேலெழுந்து தூண்டுகோலால் தூண்டி விட்டது போல மிகவும் ஒளிவிட்டுப் பிரகாசித்தது. இதைக்கண்ட சிவபெருமான் திருவுளமகிழ்ந்து அதற்கு மாபலிச்சக்கிரவர்த்தியாய்ப் பிறக்கும்படி அருளிச்செய்தனர் என்பது.

† ஓர் சிலந்திப்பூச்சியானது ஓர் சிவலிங்கத்தின் மீது தனது நூலாம்படையால் குடைபோலச்சுற்றி நிழலைத்தந்தமைக்குப் பரமசிவம் திருவுளமிரங்கி, அதற்கு கோச்செங்கட்சோழனென்னும் அரசனாய்ப் பிறக்கும்படி அருள் செய்தனர் என்பது.

‡ திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பைஞ்ஞீலி என்னும் க்ஷேத்திரத்திற்குச் செல்லும்வழியில் பசிவருத்தத்தால் வாடுவதைக்கண்ட பரமசிவன் அவருக்குப் பொதிசோறு கொண்டு வந்து கொடுத்தனர் என்பது.

¶ திருவாரூரில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தனது அபிமானினியாயிருந்த பரவைநாச்சியாரின் பிணக்கு தீர்க்கப்பரமசிவம் நடுராத்திரியில் தூது சென்று அவளுக்கு இதவசனங்கள் சொல்லிச் சமாதானப்படுத்தி சுந்தரமூர்த்திசுவாமிகளோடு இணங்கவைத்தார் என்பது.

§. உயிர்ப்பற்று, பொருட்பற்று எனினும் பொருந்தும்.

☞ 781-வது வரிமுதல் 806-வது வரிவரையும் பதஉரை.

**துத் தவஞ்செய்த**, மால் தனுக்கும்-திருமாலுக்கும், **எட்டா**-எட்டவொண்ணுத, **மலர் கழலோய்** - தாமரை மலர்போன்ற திருவடியை யுடையவனே, **நீ என்னை**-நீ அடியேனை, **காட்டிக்கொடுக்கற்க**-காட்டிக் கொடாதே; **பால்**-பால்போன்ற, **தவளம்** - வெண்ணிறமுள்ள, **நந்தம்** - சங்குகள் உலாவுகின்ற, **கடல்**-கடல் சூழ்ந்த, **புவியில்**-பூமியில், **நான்** - அடியேன், **இன்னும்** - இன்னமும், **வல் பிறவி** - வலிய பிறவியாகிய, **பந்தம் கடல்** - பாசக்கடலில், **அழுந்தப்பண்ணற்க** - அழுந்தச் செய்யாதே; **முந்தைநெறி நின்று** - பழமையாகிய நன்னெறியில் நின்று, **உன்** - உனது, **பொன் தாள்**-பொன்போலும் அழகிய திருவடிகளை, **நினையாதார்**-நினைக்காதவர்களுடைய, **பாழ் மனையில்** - பாழ் வீடுகளில், **சென்று**-போய், **உடல் ஓம்பச்செய்யற்க**-உடம்பு வளர்க்கச்செய்யாதே; **நன்றே நின்று ஓங்கும்** - நன்மையே நிலைபெற்று விளங்குகிற, **நெறியோர்** - நன்னெறியையுடையவரது, **உள்ளத்து அமர்ந்தோய்**-மனத்தில் அமர்ந்திருப்பவனே, **என்றன்னை** - என்னை, **தீங்கு நெறியில் செலுத்தற்க**-தீமையாகிய வழியில் செலுத்தாதே; **ஈங்கு அடங்கி** - இவ்விடத்தில் ஒடுங்கி, **வாழி என வழுத்தினும்** - வாழ் யென்று வாழ்த்தினலும், **என் சொற்கு அடங்கா** - என் சொல்லுக்கு அடங்காத, **ஏழை மனத்தால்** - அறியாமையையுடைய மனத்தால், **இளைக்கின்றேன்**-மெலிகின்றேன்; **வாழும்**-தான் வாழ்கின்ற, **மரக்கோடு ஏறும்**-மரக்கொம்புகளில் ஏறுகின்ற, **பொல்லா குரங்கு எனவே** - பொல்லாத குரங்கு போலவே, **பொய்** - பொய்யாகிய, **உலகக்காடு ஏறும் நெஞ்சால்**-உலகமாகிய காட்டில் பிரவேசித்துத்திரிகின்ற மனத்தினுல், **கலங்குகின்றேன்** - கலங்காநின்றேன்; **பாடு ஏறும்**-பெருமை மிகுந்த, **உள்அறியா** - மனத்தினுல் அறியப்படாத, **மாயை என்னும்** - மாயையென்கிற, **உட்பகையால்** - உட்பகையினுல், **காமம் என்னும் கள்** - காமமென்கிறகள்ளை, **அறியாது உண்டு** - அறியாமல் குடித்து, **கவல்கின்றேன்** - கவலைப்படாநின்றேன்; **தெள்ளூறும்** - தெளிவு பொருந்திய, **என்கண் அனையாய்** - என்கண்ணையொத்தவனே, **நின் தாள் கமலங்களை** - உன்திருவடி மலர்களை, **வழுத்தா** - வழுத்தாத, **மண் அனையார் பால்போய்**-மண்ணையொத்தவரிடத்துச் சென்று, **மயங்குகின்றேன்** - மயங்காநின்றேன்; **திண்ணம் இல்லா** - உறுதி யில்லாத, **காதரவுஆம்**-அச்சமாகின்ற, **துன்பம்**-துன்பத்தைத்தருகின்ற, **கவலைகடல் வீழ்ந்து**-விசனக்கடலில் அழுந்தி, **ஆதரவு ஒன்று இன்றி**-ஆதரவு சிறிதும் இல்லாமல், **அலைகின்றேன்** - அலையாநின்றேன்; **ஓதும் மறை** - சொல்லப்படுகின்ற வேதப்பொருளையுணர்ந்த, **ஆத்தர் என்னும்** - ஆப்தர் என்கின்ற, **உன்றன் அடியார்தம்மை கண்டு** - உன்னடியார்களைப்பார்த்து, **நாத்திகஞ் சொல்வார்க்கு** - இல்லையென்று சொல்வோர்க்கு, **நடுங்குகின்றேன்** - நடுங்காநின்றேன்; **பாத்து உண்டு** - பகுத்துண்டு, **உய்வது அறியா உளத்தினேன்** - பிழைத்தல் அறியாத மனத்தினையுடையேன், **உய்யும்வகை** - பிழைக்கும் வகை, **செய்வது** - செய்யத்தகுவது, **அறியேன்** - அறியாதவனுய், **திகைக்கின்றேன்** - பரதவிக்கிறேன்; **சைவ நெறியுள்** - சைவ மார்க்கத்தில், **நிரம்பும்** - நிறைந்திருக்கிற, **நின்கருணை** - உன்னருளானது, **உண்டோ இல்லையோ என்று** - (என் மீது) உளதோ இலதோ என்று, **எண்ணி எண்ணி** - நினைத்து நினைத்து, **உள்ளம் இளைக்கின்றேன்** - மனம் மெலிகின்றேன்; **மண்ணின் இடை** - மண்ணுலகத்தில், **கொன் செய்கை கொண்ட** - யாவருக்கும் அச்சத்தை யுண்டாக்குகிற தொழிலையே மேற்கொண்ட, **கொடும் கூற்றன் குறுகில்** - கொடிய யமன் வந்தால், **அதற்கு** - அவன் வரவுக்கு, **என்செய்வோ மென்று எண்ணி** - என்னசெய்வோமென்று நினைத்து, **எய்க்கின்றேன்** - இளைக்கின்றேன்; **முன்செய்** * **வினை**

---

* **வினை - நல்வினை, தீவினை.**

807-வது வரிமுதல் 832-வது வரிவரையும் பத உரை.

ஆம் - முற்பிறப்பில் செய்த வினையாகிய, அறையா நோயால் - சொல்லப்படாத பிணியினால், அகம் மெலிவுற்று - மனமிளைத்து, ஐயோ - அந்தோ, நான் - அடியேன், தாமரையில் நீர் போல்-தாமரையிலை மேல் உள்ள நீர்போல, தயங்குகின்றேன் - சலனப்படுகின்றேன்; தாமம் முடி வள்ளல் - கொன்றைமலர் மாலையையணிந்த திருமுடியையுடைய உதாரசீலனாகிய சிவபெருமான், அருள் கொடுக்க - அருளைச்செய்ய, இன்னும் வந்திலனே என்ன - இன்னமும் வரவில்லையே யென்று, உள்ளமது - மனமானது, நீராய் - நீர்போல, உருகுகின்றேன் - உருகாநின்றேன்; எள்ளல் உறும் - இகழ்ச்சிபொருந்திய, மாலைபாய்ந்து - காமாலையென்னும் பிணியிற்சிக்கி, இன்னும் - இன்னமும், என்ன வந்திடுமோ என்று - என்ன நேரிடுமோ வென்று, நெஞ்சம் ஆலைபாய்ந்து - மனம் ஆலைபாய்ந்து, உள்ளம் அழிகின்றேன் - மனம் அழிகின்றேன்; ஞாலமிசை - பூமியின் மீது, கோள் - துன்பத்தைசசெய்கிற, பாரவாழ்க்கை-பெரிதாகிய இல்வாழ்க்கை யென்கிற, கொடுஞ்சிறையில் நின்று - கொடிய சிறையிலிருந்து, என்னை மீட்பார் இல்லாது - என்னை விடுவிப்பவர் இல்லாமல், விழிக்கின்றேன்-விழியாநின்றேன்; மீட்புஆகும்-மீட்சியென்கிற, ஆற்றில் ஒருகாலும்-ஆற்றிலேயொருகாலும், அடங்கா - அடங்காத, சமுசாரச்சேற்றில் ஒருகாலும் - சமுசாரமென்னும் சேற்றிலே யொருகாலும், வைத்து - வைத்து, தேய்கின்றேன் - இளையாநின்றேன்; தோற்றும் - காணப்படுகிற, மயல் பாகம் உறு - மயக்கமாகிய பாகத்தையுடைய, வாழ்க்கை என்னும்-இல்வாழ்க்கையென்கிற, பாலைவனத்து - பாலைவனத்தில், உன்-உனது, அருள்நீர் - அருளாகிய நீரின்மேல், தாகமது கொண்டு - தாகங்கொண்டு, தவிக்கின்றேன் - வருத்தமுறுகிறேன்; மோகமதில் போய்படும்-மோகத்திற்போய் அகப்படுகின்ற, ஓர் பஞ்சப்பொறியால் - ஒப்பற்ற * பஞ்சேந்திரியங்களால், வெம்பாம்பின் வாய்படும் - கொடிய பாம்பின் வாயில் அகப்பட்ட, ஓர் தேரையைப்போல் - ஒரு தவளையைப்போல், வாடுகின்றேன் - வாடாநின்றேன்; மாய்ப்பவரும் - கொல்லவருகின்ற, மீன்போலும் - மீனைநிகர்த்த, மாதர்விழியால் - மாதரது கண்களால், வலைப்பட்டமான்போலும் - வலையிற்சிக்கின மானைப்போலவும், சோர்ந்து மடங்குகின்றேன் - சோர்ந்து துவள்கின்றேன்; கான்போல - காடுபோல, வீற்றும்-வெவ்வேறு வகைப்பட்ட, உலகவிகார பிரளயத்தில் - லோகவிகாரமாகிய பிரளய வெள்ளத்தில், தோற்றும்-உண்டாகிற, சுழியுள் - சுழியுள்சிக்கி, சுழல்கின்றேன் - அலைகின்றேன்; ஆற்றவும் - மிகவும், இப்பாரில் - இந்தபூமியின் மீது, நான் - அடியேன், உன்மேல் அன்பு இலெனினும் - உன்மேல் அன்பிலேனாயினும், அன்பன் என - அன்பன் என்று கண்டோர் சொல்லும்படி, ஒப்பாரியேனும் உடையேன் - ஒப்பாரியாயினும் உடையவனாயிருக்கின்றேன்; தப்பு ஆய்ந்தமட்டு விடேன்-என் பிழைகளை ஆராய்ந்தமட்டிலே உன்னைவிடேன்; உன்தாள் மறக்கினும் - உன்திருவடியை மறந்தாலும், வெண்ணீற்று நெறி - திருவெண்ணீறு அணியும் சைவமார்க்கத்தை, விட்டுவிடேன்-விட்டுவிடமாட்டேன்; (ஆகையால்) என்றனை கைவிட்டுவிடேல் - என்னை கை நழுவவிட்டுவிடாதே; துட்டன் என - துட்டனென்று சொல்லி, மாலும் - திருமாலும், திசைமுகனும் - பிரமனும், வானவரும் - இந்திரன் முதலிய மற்றைத் தேவர்களும், வந்து தடுத்தாலும் - வந்து தடை செய்தாலும், சிறியேனைத்தள்ளி விடேல்-சிறியேனாகிய என்னைத்தள்ளிவிடாதே; சால்-நிரம்பின, உலகவாதனைகொண்டோன் என்று - உலகவாசனையை யுடையவனென்று, மற்று எவர் ஆனாலும் வந்து - வேறெவராயினும் வந்து, போதனை செய்தாலும் - போதித்தாலும், என்னைப்

* பஞ்சேந்திரியங்கள்:—மெய், வாய், கண், மூக்கு, செவியென்பன.

833-வது வரிமுதல் 834-வது வரிவரையும் பத உரை.

போக்கிவிடேல்-என்னை நீக்கிவிடாதே; நீ தயவு சூழ்ந்திடுக-நீ தயை செய்தருள்க; என்னையும்-(தொண்டனல்லாத) என்னையும், நின்தொண்டருடன் சேர்த்தருள்க-உன்தொண்டரோடு சேர்த்தருள்க; நின்தாள்மலர் - உன் திருவடியாகிய தாமரை மலர், வாழ்ந்திடுக - நீடூழிவாழ்க. ஓம்! சுபம்!! சுபம்!!!

திருச்சிற்றம்பலம்.

## விண்ணப்பக்கலி வெண்பா பதஉரை.

முற்றிற்று.

குறிப்பு.—இப்புத்தகம் 69-வது பக்கத்திலுள்ள வேற்காட்டர் என்னும் பதத்துக்கு வேலாயுதத்தைத் தாங்கிய சுப்பிரமணியக் கடவுள் என்று பொருள்கொள்க. ஏன்? திருவேற்காடு என்னும் பதி சுப்பிரமணியர் பூசித்ததலத்திலொன்றாதலின்.

---

# சாதனசதுஷ்டயம் என்பது என்ன?

1. நித்தியாநித்தியவஸ்து விவேகம்.
2. இகாமுத்திரார்த்த பலபோக விராகம்.
3. சமாதி ஷட்கசம்பத்தி.
4. முமுக்ஷுத்வம்.

என நான்கு விதங்களாம். அவற்றுள்:—

1. **நித்தியாநித்திய வஸ்து விவேகமாவது:**— நாம் பார்க்கிறவும் கேட்கிறவுமான எல்லாவற்றையும் சாஸ்திரோக்தமாக விசாரணைசெய்து அவற்றில் நித்தியமான வஸ்து எதுவென்று தெரிந்துகொண்டு நித்தியமில்லாத வஸ்துவினால் உண்டாகும் சத்திய (நிஜ) புத்தியைத் திருப்பிச்சத்தியமாயுள்ள நித்திய வஸ்துவிலேயே மனதை நிறுத்தலேயாம்.

2. **இகாமுத்திரார்த்த பலபோக விராகமாவது:**— மேற்சொன்ன நன்றான தைரிய நிர்ணயமுடையோன் பார்க்கிற இகலோகத்தினுடையவும், கேட்கிற பரலோகத்தினுடையவுமான போகங்கள் அநித்தியம் அசத்தியமென்றறிந்து அதில் மலமூத்திராதிகளைப் போலவும், வமன அசனத்தைப் போலவும் நிந்திக்கத்தக்கவைகளென்ற வைராக்கியத்தை யடைவதேயாம்.

3. **சமாதி ஷட்கசம்பத்தியாவது:**—தமம், சமம், உபரதி, திதீக்ஷை, சிரத்தை, சமாதானம் என ஆறுவித சோபானங்களாம்; அவற்றில், தமம் - பாஹ்யேந்திரிய நிக்கிரகம்; சமம் - ஆந்தரிந்திரிய நிக்கிரகம்; உபரதி - சகலத்தையும் பகவத் வியாபகமாகவே பார்ப்பது; திதீக்ஷை - சகலதுக்கங்களையும் விசாரணையால் விலக்கி, சரீரத்தை வருத்தப்படுத்துங்கால் பகவத்தியானத்தில் மனதை நிறுத்தித் துக்கத்தைப் பொறுத்துக்கொள்ளுதல்; சிரத்தை - வேத வாக்கியத்தில் நம்பிக்கையும், குருவாக்கியத்தில் விசுவாசமும் வைப்பது; சமாதானம் - குருஉபதேசித்த லக்ஷியத்தின் பிரகாரம் மனதை ஏகாக்கிர சித்தமாய் நிறுத்துவது.

4. **முமுக்ஷுத்வமாவது:**—இந்த ஜனனமரணரூபமான சம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுவதெப்படி? அது எவ்விதமாக எனக்கு நேரிடும்? என்கிற விசாரத்திலேயே மனது பலப்பட்டு இதர விஷயங்களில் மனது பின்னடைதல்.

மேற்சொன்ன சாதன சதுஷ்டயமுடையோர்களுக்கு (ஆத்ம) பிரம்மவித்தையைச் சொல்லவேண்டும்.

---

௳

சிவமயம்.

ஓம் சிவகணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# நெஞ்சறிவுறுத்தல்.

## காப்பு.

திருச்சிற்றம்பலம்.

### குறள் வெண்பா.

சீர்சான்ற முக்கட் சிவகளிற்றைச் சேர்ந்திடிலாம்
பேர்சான்ற வின்பம் பெரிது.

#### பதவுரை.

சீர் சான்ற - சிறப்பு மிகுந்த, முக்கண் - மூன்று கண்களையுடைய, சிவ களிற்றை - சிவ கணபதியை, சேர்ந்திடில் - ஒருவன் அடைந்தால், (அவனுக்கு) பேர் சான்ற - பிரபலம் நிறைந்த, பெரிது இன்பம் ஆம் - பெரிதாகிய இன்பம் உண்டாகும். (பெரிதாகிய இன்பம்-பேரின்பம்.) எ - று.

#### விரிவுரை.

சிவபெருமானுக்குப்போல விநாயகர்க்கும் மூன்று கண்களுண்மையால் முக்கட்சிவ களிறு என்றார். சீர்சானுதலாவது யாவராலும் ஒரு காரியந் தொடங்குங்கால் இவரை முந்தித் துதித்தலாகிய சிறப்புடைமை. சிவகளிற்றைச் சேர்ந்திடில் இன்பம் ஆம் என முடித்துக் கொள்க.

ஆறு முகத்தா னருளடையி னெல்லாப்
பேறு மிகத்தான்பெரிது.

#### பதவுரை.

ஆறுமுகத்தான்-ஆறுமுகங்களையுடையவனாகிய சுப்பிரமணியக்கடவுளின், அருள் அடையின்-அருளையொருவன் அடைந்தால், (அவனுக்கு) எல்லாப் பேறும் - எல்லாப்பேறுகளும், (பேறு - பயன்) மிகத்தான் பெரிது ஆம் - அதிக மிகுதியாகவுண்டாகும் எ - று.

#### விரிவுரை.

எல்லாப்பேறும் என்றது இம்மை மறுமைவீடு என்பவற்றை; ஆறுமுகத்தானருளடையின் எல்லாப்பேறும் ஆம் என முடித்துக்கொள்க.

திருச்சிற்றம்பலம்.

### கலி வெண்பா.

பொன்னூர் மலைபோற் பொலிவுற் றசையாம
லெந்நாளும் வாழியநீ யென்னெஞ்சே - பின்னுன (க)
இப்பிறப்பி னேடிங் கெழுபிறப்பு மன்றியெனை
யெப்பிறப்பும் விட்டகலா வென்னெஞ்சே - செப்பமுடன் (உ)

---

1. பொன்னூர்மலை - பொன்மலை, (மேருமலை.) பொலிவுற்று - பிரகாசித்து.

செவ்வொருசார் நின்று சிறியேன் கிளக்கின்ற
விவ்வொருசொற் கேட்டிடுக வென்னெஞ்சே - யெவ்வெவ் (௩)
உலகும் பரவு மொருமுதலா யெங்கு
மிலகுஞ் சிவமா யிறையாய் - விலகும் (௪)
உருவா யுருவி லுருவா யுருவு
ளருவா யருவி லருவா - யுருவாய் (௫)
நித்தியமாய் நிர்க்குணமாய் நிர்ச்சலமாய் நின்மலமாய்ச்
சத்தியமாய்ச் சத்துவமாய்த் தத்துவமாய் - முத்தியருள் (௬)
ஒன்றாய்ப் பலவா யுயிரா யுயிர்க்குயிராய்
நன்றாய் நவமாய் நடுநிலையாய் - நின்றோங்கும் (௭)
வேதமாய் வேதாந்த வித்தாய் விளங்குபர
நாதமாய் நாதாந்த நாயகமா - யோதுஞ் (௮)
செறிவாய்த் திறமாய்ச் சிதாகாச மாய்ச்சொல்
லறிவா யறிவு ளறிவாய் - நெறிமேவு (௯)
காலமாய்க் காலங் கடந்த கருத்தாய்நற்
சீலமாய்ச் சிற்பரமாய்ச் சின்மயமாய் - ஞாலம் (௧௦)
பொருந்தாப் பொருளாய்ப் பொருந்தும் பொருளாய்ப்
பெருந்தா ரகஞ்சூழ்ந்த பேறாய்த் - திருந்தாத (௧௧)
போக்கும் வரத்துமிலாப் பூரணமாய்ப் புண்ணியர்க
ளோக்குந் திறத்தெழுந்த நுண்ணுணர்வாய் - நீக்கமிலா (௧௨)
ஆதியா யாதிநடு வந்தமா யாங்ககன்ற
சோதியாய்ச் சோதியாச் சொற்பயனாய் - நீதியாய் (௧௩)
ஆங்கார நீக்கு மகார வுகாரமதா
யோங்கார மாயவற்றி னுட்பொருளாய்ப் - பாங்கான (௧௪)
சித்தமாய்ச் சித்தாந்த தேசாய்த் திகம்பரமாய்ச்
சத்தமாய்ச் சுத்த சதாநிலையாய் - வித்தமாய் (௧௫)

---

☞ அரும்பதவுரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

3. எழுபிறப்பு - ஏழுவகைப் பிறவிகள்; அவை தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன; அவற்றுள், தேவர்-இந்திரன் முதலானோர்; மக்கள்-மாநுடர்;விலங்கு - சிங்கம் புலி முதலாயின; புள் - கருடன் முதலாயின; ஊர்வன - பாம்புமுதலாயின; நீர்வாழ்வன - மீன்முதலாயின; தாவரம்-மலை மரம் முதலாயின. 4. அகலா-நீங்காத; செப்பம்-சீர்; 5. ஒருசார் - ஒருபக்கம்; கிளத்தல் - சொல்லுதல், 7. பரவுதல் - வழிபடுதல், வியாபித்தல்; எங்கும் - எவ்வுலகும், எவ்வுலகத்தாராலும், எவ்வுலகினும். 9. உருவு - உருவம், அருவு-அருவம், இவை முறையே வடிவுள்ளதும் வடிவில்லதும். 11. நித்தியம் - சாஸ்வதம்; நிர்க்குணம் - குணமில்லது; நிர்ச்சலம் - அசைவில்லது; நின்மலம் - களங்கமில்லது; 12. சத்தியம் - உண்மை; சத்துவம் - திடம்; தத்துவம் - சுபாவம். 14. நவம் - புதுமை; நடுநிலை - சமநிலை. 15. வேதாந்தவித்து - வேதமுடிவின் காரணம்; 16. நாதம் - சத்தம்; நாதாந்த நாயகம் - நாதமுடிவின் தலைமை. 17. செறிவு - அடர்ச்சி; திறம் - உறுதி; சிதாகாசம் - ஞானாகாயம். 19. காலம் - இறப்பு-நிகழ்வு - எதிர்வு என்னு மூன்றுகாலங்கள். 20, சீலம்-ஒழுக்கம்; சின்மயம் - ஞானவடிவு; சிற்பரம் - பிரமம். 22. பெருந்தாரகம் - பெரிய ஆதாரம். 23. பூரணம் - நிறைவு. 24. நுண்ணுணர்வு - நுட்பமாகிய அறிவு. 25. ஆதி நடு அந்தம் - முதல், இடை, கடை. 28. ஓங்காரம் - பிரணவம். 29. சித்தம் - ஆயத்தம்; தேசு - ஒளி; திகம்பரம்-திக்காடை (நிர்வாணம்). 30. சதாநிலை - எப்பொழுதுமுள்ளநிலை; வித்தம் - திரவியம்.

அண்டமா யண்டத் தணுவா யருளகண்டா
கண்டமா யானந்தா காரமதா - யண்டத்தின் (கசு)
அப்பாலா யிப்பாலா யண்மையாய்ச் சேய்மையதா
யெப்பாலா யெப்பாலு மில்லதுமாய்ச் - செப்பாலும் (கஎ)
நெஞ்சாலுங் காய நிலையாலு மந்நிலைக்கு
ளஞ்சாலுங் காண்டற் கரும்பதமா-யெஞ்சாப் (கஅ)
பரமாய் பகாப்பொருளாய்ப் பாலாய்ச் சுவையின்
றரமாய்ப் பரப்பிரமந் தானாய் - வரமாய (ககூ)
ஒன்பான் வடிவா யொளியெண் குணக்கடலா
யன்பா யகநிலையா யற்புதமா - யின்பமாய் (உ0)
அகமாய்ப் புறமா யகம்புறமாய் நீங்குஞ்
சகமாய்ச் சகமாயை தானாச் - சகமாயை (உக)
இல்லாதா யென்று மிருப்பதா யாதொன்றுங்
கொல்லாதார்க் கின்பங் கொடுப்பதா - யெல்லார்க்கும் (உஉ)
நண்ணுவதாய் நண்ணாதாய் நல்வினையா யல்வினையா
யெண்ணுவதாய் யெண்ணி னியலாதா - யெண்ணுகின்ற (உங)
வானாய் நிலனாய் வளியா யனலாய்நீர்
தானாய் வழிபடுநான் மூன்றானாய் - வானாதி (உச)
ஒன்றிடத்து மொன்றாதா யொன் றுவதா யானந்த
மன்றிடத்தி லென்றும் வதிவதா - யொன்றியதோர் (உரு)
ஐந்நிறமா யந்நிறத்தி னாமொளியா யவ்வொளிக்கு
ளைந்நிறமும் வேண்டா வியனிறமாய் - மூந்நிறத்திற் (உசு)
பூப்பதுவாய்க் காப்பதுவாய்ப் போக்குவதாய்த் தேக்குவதாய்
நீப்பதுவாய்த் தன்னு ணிறுத்துவதாய்ப் - பூப்பதின்றி (உஎ)

---

☞ அரும்பதவுரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

31. அண்டம்-உலகம்; அணு - நுண்பொருள்; அகண்டாகண்டம் - கண்டிக்கப்படாததும் கண்டிக்கப்படுவதும். 32. ஆநந்தாகாரம் - இன்ப உரு. 33. அண்மை - சமீபம்; சேய்மை - தூரம்; 34. செப்பு - வாக்கு. 35. நெஞ்சு - மனம்; காயம் - உடம்பு; 36. எஞ்சல்-குறைதல். 37. பரம் - மேலானபொருள்; பகாப்பொருள் - பிரிக்கப்படாதபொருள். 39. ஒன்பான் - ஒன்பது; எணகுணம்-எட்டுக்குணம்; அவை:—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன. 40. அகநிலை - உண்ணிலை; அற்புதம் - ஆச்சரியகரம். 41. அகம் - உள்; புறம் - வெளி, 42. சகம் - பிரபஞ்சம், சகம் என்பதற்குத் தோன்றியழியு மியல்புள்ளதென்பது பொருள். 44. யாதொன்றுங் கொல்லாதார் - கொல்லா விரதியர். 45. நண்ணுவது-அடையத்தகுவது; அல்வினை-அல்லாத வினை (தீவினை); 46. இயலாது-பொருந்தாது. 47. வான் - ஆகாயம்; நிலன் - பூமி; வளி - காற்று; அனல் - நெருப்பு. 49. ஒன்றுவது - பொருந்துவது; ஒன்றாது - பொருந்தாது; 50. ஆனந்தமன்று - இன்பசபை; வதிவது - தங்குவது; ஒன்றியது - பொருந்தியது. 51. ஐந்நிறம்-பஞ்சவர்ணம்; ஐந்தொழில்-அவை சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்பன. 52. மூந்நிறம்-முத்தொழில், 53. பூப்பது, காப்பது, போக்குவது, (பூப்பது - சிருட்டிப்பது, காப்பது - ரக்ஷிப்பது, போக்குவது - சங்கரிப்பது.) தேக்குவது - நிறைவிப்பது; 54, நீப்பது-நீக்குவது.

வாளா திருப்பதுவாய் வாதனா தீதமதாய்
நீளாது நீண்ட நிலையினதாய் - மீளாப் (உஅ)

பெரிதாய்ச் சிறிதாய்ப் பெரிதுஞ் சிறிது
மரிதா யரிதி லரிதாய்த்-துரிய (உகூ)

வெளியாய்ப் பரவெளியாய் மேவுபர விந்தி
னொளியாய்ச் சிவானந்த வூற்றாய்த் - தெளியாதி (௩0)

கற்பமாய்க் காணுஞ்சங் கற்ப விகற்பமாய்
நிற்பதா கார நிருவிகற்பாய்ப் - பொற்புடைய (௩க)

முச்சுடராய் முச்சுடர்க்கு முன்னொளியாய்ப் பின்னொளியா
யெச்சுடரும் போதா வியற்சுடரா - யச்சில் (௩உ)

நிறைவாய்க் குறைவாய் நிறைகுறை வில்லாதாய்
மறைவாய் வெளியாய் மனுவாய் - மறையாத (௩௩)

சச்சிதா னந்தமதாய்த் தன்னிகரொன் றில்லாதாய்
விச்சையா லெல்லாம் விரிப்பதுவாய் - மெச்சுகின்ற (௩௪)

யோகமா யோகியா யோகத் தெழுந்தசிவ
போகமாய்ப் போகியாய்ப் போகமுறு - மேகமாய்க் (௩௫)

கேவலமாய்ச் சுத்த சகலமாய்க் கீழ்ச்சகல
கேவலங்கள் சற்றுங் கிடையாதாய் - மாவலத்தில் (௩௬)

காட்சியாய்க் காண்பானாய்க் காணப் படுபொருளாய்
சூட்சியாய்ச் சூட்சியாற் றோய்வரிதாய் - மாட்சிபெறச் (௩எ)

செய்பவனாய்ச் செய்தொழிலாய்ச் செய்பொருளாய்ச் செய்தொழிலா
லுய்பவனா யுய்விக்கு முத்தமனாய் - மொய்கொள் (௩அ)

அதுவா யவளா யவனா யவையுங்
கதுவாது நின்ற கணிப்பாய்க் - கதுவாமல் (௩கூ)

ஐயந் திரிபோ டறியாமை விட்டகற்றிப்
பொய்யென்ப தொன்றும் பொருந்தாராய்ச் - செய்யென்ற (௪0)

ஓர்வினையி லின்பமுமற் றோர்வினையிற் றுன்பமுமாஞ்
சார்வினைவிட் டோங்குந் தகையினராய்ப் - பார்வினையில் (௪க)

---

அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

55, வாளாதிருப்பது - சும்மாவிருப்பது; வாதனாதீதம் - வாசனைக்கெட்டாதது. 58. துரியம்- துரியபதம், அதாவது மேலானபதம். 59. வெளி - ஆகாயம்; பரவெளி - மேலான ஆகாயம்; (சிதாகாயம்.) 61. சங்கல்பம் - எண்ணம்; விகற்பம் - வேறுபாடு; 62. நிருவிகற்பு - வேறுபாடில்லது; பொற்பு - அழகு. 63. முச்சுடர் - சூரியன்-சந்திரன்-அக்கினி. 64. இயற்சுடர்- சுபாவமாகிய ஒளி; அச்சு - உயிர். உடல். 66. மநு - மந்திரம். 67. சச்சிதானந்தம் - சத்து, சித்து, ஆநந்தம். 68. விச்சை - ஞானம். 69. சிவபோகம் - சிவாநுபவம். 70. போகி - அநுபவிப்பவன்; ஏகம் - ஒன்று. 71. கேவலம் - மறப்பு; சகலம் - நினைப்பு. 73. காட்சி, காண்பான், காணப்படுபொருள் - ஞானம், ஞாதுரு, ஞேயம்; 74. தோய்வு - பொருந்தல்; மாட்சி- மேன்மை, பெருமை. 75. செய்பவன் - கர்த்துரு; செய்தொழில் - கிரியை; செய்பொருள்- கர்மம், செய்யப்படுபொருள்; 76. மொய் - செறிவு. 78. கதுவுதல் - பற்றுதல்; கணிப்பு - மதிப்பு. 79. ஐயம் - குற்றியோமகனோ என்னும் சந்தேகம்; திரிபு - கயிற்றைப்பாம்பென்று பிரமித்தலாகிய விபரீத உணர்ச்சி.

ஓர்பால் வெறுப்புமற்றை யோர்பால் விருப்புமுறுஞ்
சார்பான் மயங்காத் தகையினராய்ச் - சார்பாய (சஉ)
ஓரிடத்திற் றண்மையுமற் ரோரிடத்தில் வெஞ்சினமும்
பாரிடத்திற் கொள்ளாப் பரிசினராய் - நீரிடத்தில் (சங)
தண்மைமிக ராதென்றுஞ் சாந்தம் பழுத்துயர்ந்த
வொண்மையுட னொன்றை யுணர்ந்தவராய் - வெண்மையிலா (சச)
ஒன்று மறிவி னுதயாதி யீறளவு
மென்று மிரண்டென்ப தில்லவராய் - மன்றவொளிர் (சரு)
அம்மூன்றி னுள்ளே யடுக்கிவரு மொன்றகன்ற
மும்மூன்றின் மூன்று முனிந்தவராய்த் - தம்மூன்றி (சசு)
வீடாது நின்றும் விரிந்தும் விகற்பநடை
நாடாது நான்கு நசித்தவரா - யூடாக (சஎ)
எஞ்சாம லஞ்சி னிடமாய் நடமாடு
மஞ்சாதி யஞ்சு மறுத்தவரா - யெஞ்சாமல் (சஅ)
ஈண்டாண் டருளு மிறையோர் தமையாறி
லாண்டாண்டு கண்டா றகன்றவரா - யீண்டாது (சகூ)
வாழியுற்ற வானோரும் வந்து தமக்கிரண்டோ
டேழியற்ற வேழு மிகந்தவரா - யூழியற்றக் (ருO)
கட்டிநின்றுட் சோதியொன்று காணத் தொடங்குகின்றோ
ரெட்டுகின்ற வெட்டின்மே லெய்தினராய்க் - கட்டுகின்ற (ருக)
தேன்றோய் கருணைச் சிவங்கலந்து தேக்குகின்ற
சான்றோர்த முள்ளந் தணவாதாய் - மான்றமலத் (ருஉ)

அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

84. தகையினர்-பெருமையுடையவர். 85. தண்மை-கிருபை; சினம்-கோபம்; 86. பரிசினர்-தன்மையர். 87. தண்மை - குளிர்ச்சி. சாந்தம் - சத்துவகுணம். பழுத்து - முதிர்ந்து. 88. ஒண்மை - மனவொருமை. ஒன்றை - தத்துவ ஞானத்தை. வெண்மை - அறியாமை. 89. உதயாதியீறு - சங்கற்பித்தல், சிந்தித்தல், மறத்தல். ஈறு - முடிவு 90. இரண்டென்ப தில்லவராய் - தனக்குவேறாக இரண்டாம்பொருள் இல்லாதவராகி. மன்ற ஒளிர் - (அஞ்ஞான பரியந்தம்) நிச்சயமாக விளங்குகின்ற. 91. அம்மூன்றினுள் - முன்சொல்லிய சங்கற்பமாதிய மூன்றனுள். அடுக்கி-தொடர்ந்து. 92. ஒன்றகன்ற மும்மூன்று-ஒன்றுநீக்கிய ஒன்பது-எட்டு; அதாவது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி ஆகிய எட்டுயோக உறுப்புக்கள்; மூன்று முனிந்தவர் - காமம், வெகுளி, மயக்கம் இவைகளை நீக்கினவர் 94. நாடாது-கருதாது. நான்கும் நசித்தவர்-அந்தக்கரணவிருத்தி நினைத்தல், சிந்தித்தல், நிச்சயித்தல், அகங்கரித்தல் நான்கினையும் ஆத்மாகாரமாகும்படி கெடச்செய்தவர்; 95. அஞ்சினிடமாய் நடமாடும்-பஞ்சேந்திரியங்கள் வாயிலாக உண்டாகிற. 96. அஞ்சாதி அஞ்சு-சப்தாதி ஐந்துவிஷயங்கள்; அறுத்தவர் - தமக்கில்லாதபடி செய்துகொண்டவர். எஞ்சாமல்-குறையாமல். 97. இறையோர்-விநாயகராதியோர். ஆறு - அதாவது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என ஆறு ஆதாரங்கள். அதற்கு தேவதைகள் விநாயகர், பிர்ம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவன். 98. அகன்றவர் - அப்பாற்பட்டவர்; ஈண்டாது - குறையாது. 99. வாழியுற்ற வானோர் - சர்வசம்ஹார காலபரியந்தம் வாழ்வைப்பொருந்திய தேவர்கள். 100. இரண்டோடேழு - ஒன்பது அதாவது, நவவித பக்தி. 102. எட்டு - அஷ்டமூர்த்தங்கள், நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா. 103. தேக்குதல்-நிறைதல்; 104. சான்றோர் - ஞானவைராக்கிய யாதிகளால்நிறைந்தவர்; தணத்தல் - நீங்குதல் ; மான்ற-மயக்கத்தைச்செய்கிற; மலம்-ஆணவம், மாயை, காமியம் என்னும் மும்மலங்கள்.

தாக்கொழிந்து தத்துவத்தின் சார்பாந் தனுவொழிந்து
வாக்கொழிந்து மாணு மனமொழிந்து- ஏக்கமுற (௫௩)
வாய்க்குஞ் சுகமொழிந்து மண்ணொழிந்து விண்ணொழிந்து
சாய்க்கு மிராப்பகலுந் தானொழிந்து - நீக்கொழிந்து (௫௪)
நானுமொழி யாதொழிந்து ஞானமொழி யாதொழிந்து
தானு மொழியாமற் றானொழிந்து - மோனநிலை (௫௫)
நிற்கும் பிரம நிரதிசயா னந்தமதாய்
நிற்கும் பரம நிருத்தனெவன் - றற்பரமாய் (௫௬)
நின்றா னெவனன்பர் நேயமனத் தேவிரைந்து
சென்றா னெவன்சர்வ தீர்த்தனெவன் - வன்றீமை (௫௭)
இல்லா னெவன்யார்க்கு மீச னெவன்யாவும்
வல்லா னெவனந்தி வண்ணனெவன் - * கல்லாலில் (௫௮)
சுட்டகன்ற ஞான சுகாதீதங் காட்டிமுற்றும்
விட்டகன்ற யோக விநோதனெவன் - மட்டகன்ற (௫௯)
அண்டங்க ளெல்லா மணுவி லடைத்தருளித்
திண்டங்கு மாறிருத்துஞ் சித்தனெவன் - பண்டங்கு (௬௦)
வீயாச் சிறுபெண் விளையாட்டி லண்டமெலாந்
தேயாது கூட்டுவிக்குஞ் சித்தனெவன் - ஆயாதும் (௬௧)
வேண்டாமை வேண்டுவது மேவாத சித்தர்தமைத்
தீண்டாது தீண்டுகின்ற சித்தனெவ - னீண்டோது (௬௨)
பற்றுருவாய்ப் பற்றாப் பரவணுவி னுள்விளங்குஞ்
சிற்றுருவா யுள்ளொளிக்குஞ் சித்தனெவன் - மற்றுருவின் (௬௩)
வையாது வைத்துலகை மாவிந் திரசாலஞ்
செய்யாது செய்விக்குஞ் சித்தனெவ - னையாமல் (௬௪)
அப்பிடைவைப் பாமுலகி லாருயிரை மாயையெனுஞ்
செப்பிடைவைத் தாட்டுகின்ற சித்தனெவ - னொப்புறவே (௬௫)

---

☞ **அரும்பத உரை** வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

105. தாக்கு-சார்பு; தனு-உடம்பு. 111. நிரதிசயானந்தம் - தனக்குமேற்பட்ட ஆநந்தமில்லாதது. 112. பரமநிருத்தன் -மேலான நடனஞ் செய்பவன். 114. சர்வதீர்த்தன்-எல்லாவகையாலும் பரிசுத்தன். 116. அந்திவண்ணன் - அந்திவானம்போன்ற செந்நிறமுள்ளவன். 117. சுட்டு - சுட்டிக்காட்டல்; 118. யோகவிநோதன் - யோகலீலையையுடையவன் அதாவது தக்ஷிணாமூர்த்தி அவசரம்; மட்டு-அளவு. 120. திண்டங்குமாறு-உறுதி பெறும்படி. 126. சிற்றுரு-சிறியவடிவு. 128. நையாமல் - வருந்தாமல். 129. அப்பிடைவைப்பாமுலகில்-கடலினிடையே வைக்கப்பட்டிருக்கிற உலகத்தில்;

* பிர்ம்மதேவனுடைய மானசபுத்திரர்களாகிய சனகன், சனந்தனன், சனற்குமாரன், சனற்சுஜாதன் என்னும் நால்வரும் தமக்கு அத்தியாத்மவித்தையை உபதேசிப்பவர் உண்டோவென்று ஆராய்ந்து பிர்ம்ம, விஷ்ணு, ருத்திரர்களிடம் சென்று தமது கருத்தை வெளியிட, அவர்கள் ஒவ்வொருவரும் இல்லறத்தாராயிருப்பதுபற்றித் தாங்கள் தகுதியுள்ளோரில்லேமென்று பின்னிட, சிவபெருமான் மாத்திரம் அவர்கள் கருத்துக்கிசைந்து, சந்நியாச ஆசிரமங்கொண்டு, வனத்திற்சென்று, கல்லாலின்நிழலின்கீழ் எழுந்தருளியிருந்து அவர்களுக்கு சொல்லாமற்சொல்லி உபதேசித்தார் என்பது.

நில்லாத காற்றை நிலையாக் கடத்தடைத்துச்
செல்லாது வைக்கின்ற சித்தனெவன் - பொல்லாத (௬௬)
வெம்பாம்பை மேலணிந்தோர்வெம்புற் றினுள்ளிருந்தே
செம்பாம்பை யாட்டுகின்ற சித்தனெவன் - நம்பாங்கர் (௬௭)
ஒண்கையிற்றா னொன்றின்றி யுண்ணின் றுயிர்களையூழ்த்
திண்கயிற்றா லாட்டுகின்ற சித்தனெவன் - வண்கையுடைத் (௬௮)
தானசைந்தான் மற்றைச் சகமசையு மென்றுமறை
தேனசையச் சொல்கின்ற சித்தனெவ - னூனமின்றிப் (௬௯)
பேர்த்துயிர்க ளெல்லாமோர் பெண்பிள்ளை யின்வசமாய்ச்
சேர்த்து வருவிக்குஞ் சித்தனெவன் - போர்த்துமிக (௭௦)
அல்விரவுங் காலை யகிலமெலாந் தன்பதத்தோர்
சில்விரலிற் சேர்க்கின்ற சித்தனெவன் - பல்வகையாய்க் (௭௧)
கைகலந்த வன்மைக் கருப்பா சயப்பையுட்
செய்கருவுக் கூட்டுவிக்குஞ் சித்தனெவ - னுய்கருவை (௭௨)
மெய்வைத்த வேர்வையினும் வீழ்நிலத்து மண்டத்துஞ்
செய்வித்தங் கூட்டுவிக்குஞ் சித்தனெவ - னுய்விக்கும் (௭௩)
வித்தொன்று மின்றி விளைவித் தருளளிக்குஞ்
சித்தென்றும் வல்லவொரு சித்தனெவன் - சத்துடனே (௭௪)
உற்பத்தி யாயுலகி லொன்பதுவாய்ப் பாவைகள்செய்
சிற்பத் தொழில்வல்ல சித்தனெவன் - பற்பலவாங் (௭௫)
காரா ழிகளைக் கரையின்றி யெல்லையிலாச்
சேரூழி நிற்கவைத்த சித்தனெவன் - பேராத (௭௬)
நீர்மே னெருப்பை நிலையுறவைத் தெவ்வுலகுஞ்
சீர்மே வுறச்செய்யுஞ் சித்தனெவன் - பாராதி (௭௭)
ஐந்திலைந்து நான்கொருமுன் றாமிரண்டொன் றாய்முறையே
சிந்தையுற நின்றருளுஞ் சித்தனெவன் - பந்தமுற (௭௮)
ஆண்பெண்ணாய்ப் பெண்ணா யண்மை தனைவானிற்
சேண்பண்ண வல்லவொரு சித்தனெவன் - மாண்பண்ணாப் (௭௯)
பேடாணாய்ப் பெண்ணாய்ப் பெண்ணாண் பெரும்பேடாய்ச்
சேடாகச் செய்யவல்ல சித்தனெவன்-சேடாய (௮௦)
வெண்மை கிழமாய்விருத்தமந்த வெண்மையதாய்த்
திண்மை பெறச்செய்யுஞ் சித்தனெவ - னொண்மையிலா (௮௧)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

131. நிலையாக்கடம்-நிலைக்காதகுடம் (உடம்பு) 133. வெம்புற்று-உடம்பு; 134. செம்பாம்பு - குண்டலிசத்தி; பாங்கர் - பக்கம் 136. வண்கை - கொடைக்கை. 139. ஓர் பெண்பிள்ளை - சத்தி. 141. அல்விரவுங்காலை - இருள்மூடுங்காலம் (சர்வசங்காரகாலம்). தன்பதத்து-தன்திருவடியில் 143 கருப்பாசயப்பை-கருப்பை. 149. ஒன்பதுவாய் - நவத்துவாரங்கள்; பாவை-பிரதிமை 150. சிற்பத்தொழில் - சித்திரவேலை; 151. காராழிகளை - கருங்கடல்களை; 152. ஊழி-கற்பகாலம். 155. ஐந்திலைந்துநான்கொருமூன்றாமிரண்டொன்று - முப்பத்தாறு தத்துவங்கள். 157. அண்மை - சமீபம்; 158. சேண் - தூரம்; மாண்பு அண்ணா-மாட்சிமைபொருந்தாத; 159. பேடு- அலி; 160. சேடு-அழகு. 161. வெண்மை - இளமை; விருத்தம் - கிழத்தன்மை; 162. திண்மை - உறுதி; ஒண்மை-ஒட்பம்; (அழகு.)

ஓட்டினைச்செம் பொன்னா யுயர்செம்பொன் னோடாகச்
சேட்டையறச் செய்கின்ற சித்தனெவன் - காட்டிலுறு (அஉ)
காஞ்சிரத்தைக் கற்பகமாய்க் கற்பகத்தைக் காஞ்சிரமாய்த்
தேஞ்சிவணைச் செய்கின்ற சித்தனெவன் - வாஞ்சையுற (அங)
நாரணன்சேய் நான்முகனாய் நான்முகன்சேய் நாரணனாய்ச்
சீரணவச் செய்யவல்ல சித்தனெவன் - பேரணவக் (அச)
கொம்மை பெறுங்கோடா கோடியண்ட மெல்லாமோர்
செம்மயிர்க்கா லுட்புகுத்துஞ் சித்தனெவன் - செம்மையிலா (அரு)
வெம்புலியை வெண்பால் விளைபசுவா யப்பசுவைச்
செம்புலியாய்ச் செய்யவல்ல சித்தனெவ - னம்புலியை (அசு)
அங்கதிரோன் செங்கதிரா யம்புலியாய்ப் பம்புகின்ற
செங்கதிரைச் செய்யவல்ல சித்தனெவன் - றுங்கமுறு (அஎ)
ஓரணுவோர் மாமலையா யோர்மா மலையதுவோர்
சீரணுவாய்ச் செய்யவல்ல சித்தனெவன் - வீரமுடன் (அஅ)
முன்னகையா நின்றதொரு * முப்புரத்தை யன்றொருகாற்
சின்னகையாற் றீமடுத்த சித்தனெவன் - முன்னயன்மால் (அகூ)
மற்றிருந்த வானவரும் வாய்ந்தசைக்கா வண்ணமொரு
சிற்றுரும்பை நாட்டிநின்ற சித்தனெவன் - மற்றவர்போல் (கூ0)
அல்லா யெனு மரியு முருக்திரனும்
செல்லா நெறிநின்ற சித்தனெவ - னொல்லாத (கூக)
கல்விற் சுவையாய்க் கனியிற் சுவையிலதாய்ச்
செல்லப் பணிக்கவல்ல சித்தனெவ - னல்லலறப் (கூஉ)
பார்க்கின்ற யாவர்கட்கும் பாவனா தீதனெனச்
சேர்க்கின்ற மெய்ஞ்ஞானச் சித்தனெவன் - மார்க்கங்கள் (கூங)
ஒன்றென்ற மேலவரை யொன்றென் றுரைத்தவர்பாற்
சென்றொன்றி நிற்கின்ற சித்தனெவ - னன்றொருநாள் (கூச)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

164. சேட்டை - தொழில். 165. காஞ்சிரம் - எட்டிமரம்; 166. தேஞ்சிவண - அழகு பொருந்த. 168. சீர் அணவ - சிறப்புப்பொருந்த; பேர்அணவ - பெருமை பொருந்த. 169. கொம்மை - திரட்சி. 173. அம் கதிர் - அழகிய சந்திரன்; செங்கதிர் - சூரியன் ; அம்புலி - சந்திரன; பம்புகின்ற - நெருங்குகின்ற; 174. துங்கம்-உயர்வு. 177. நகையா நின்றது - விளங்காநின்றது; முப்புரம் - திரிபுரம்; 178. சின்னகை-புன்சிரிப்பு; தீமடுத்த-நெருப்புக்கிரையாக்கிய. 180. சிற்றுரும்பு - அற்பமாகிய துரும்பு. 182. ஒல்லாத - கூடாத. 183. சுவை-ருசி; 184. பணிக்கவல்ல - நியமிக்கவல்ல; அல்லல் - துன்பம். 185. பாவனாதீதம் - நினைவுக்கெட்டாதது: 186. சேர்க்கின்ற - சிறக்கின்ற. 188. ஒன்றி நிற்கின்ற- பொருந்தி நிறகின்ற.

* திரிபுரம்:-இரும்பு, பொன், வெள்ளி இவற்றாலாகிய மதில்களையுடைய மூன்றுபட்டினங்கள்; வித்யுன்மாலி, தாரகாக்ஷன் கமலாக்ஷன் என்னு மூன்று அசுரர்கள்பிரமனைநோக்கி அரியதவம்செய்து, அப்பிரமன் தந்த வரத்தினால் திரிபுரத்தைப்பெற்றுப் பல அசுரர்களுடன் அந்திரிபுரத்துடன் நினைந்தவிடத்திற்குச் சென்று பிராணிகளுக்குக் கெடுதியுண்டாக்கிவர, தேவர்கள் அதனைப்பொறுக்கமாட்டாது சிவபிரானிடம் சென்று முறையிட்டார்கள். அப்பெருமான் அம்முறைக்கிரங்கி அத்தேவர்கள் சமைத்துத்தந்த தேரின்மேலேறிச் சென்று அத்திரிபுரத்தைச் சிரித்தழித்தனர் என்பது.

† கல்லானை தின்னக் கரும்பளித்துப் பாண்டியன்வீண்
செல்லா தளித்தமகா சித்தனெவன் - சொல்லாத (௯௫)

ஒன்றே யிரண்டேமே லொன்றிரண்டே யென்பவற்றுட்
சென்றே நடுநின்ற சித்தனெவன் - சென்றேறும் (௯௬)

அத்திரத்தை மென்மலரா யம்மலரை யத்திரமாய்ச்
சித்திரத்தைப் பேசுவிக்குஞ் சித்தனெவ - னெய்த்தலுத்துஞ் (௯௭)

சங்கமமே தாபரமாய்த் தாபரமே சங்கமமாய்ச்
செங்கையிடா தாற்றவல்ல சித்தனெவன் - றங்குகின்ற (௯௮)

சத்தெல்லா மாகிச் சயம்புவா யானந்தச்
சித்தெல்லாம் வல்லசிவ சித்தனெவன் - றத்தெல்லாம் (௯௯)

நீட்டாத நெஞ்ச நிலைத்தவர்க்குந் தன்னுண்மை
காட்டாது காட்டிநிற்குங் கள்வனெவன் - பாட்டோடு (௧00)

வண்டாலுங் கொன்றை மலரோ யெனமறைகள்
கண்டாலுங் காணாத கள்வனெவன் - றெண்டாக (௧0௧)

அள்ளஞ் செறியார்க்கே யன்றி யெறிவார்க்குக்
கள்ளஞ் செறியாத கள்வனெவ - னெள்ளலறக் (௧0௨)

கொண்டவெலாந் தன்பாற் கொடுக்குமவர் தம்மிடத்திற்
கண்டவெலாங் கொள்ளைகொளுங் கள்வனெவன்-கொண்டுளத்தில் (௧0௩)

தன்னையொளிக் கின்றோர்க டம்முளொளித் துள்ளவெலாங்
கன்னமிடக் கைவந்த கள்வனெவன் - மன்னுலகைச் (௧0௪)

சற்பனைசெய் கின்றதிரோ தானமெனுஞ் சத்தியினாற்
கற்பனைசெய் தேமயக்குங் கள்வனெவன் - முற்படுமித் (௧0௫)

தொண்டுலகி லுள்ளவுயிர் தோறுமொளித் தாற்றலெலாங்
கண்டுலவு கின்றதொரு கள்வனெவன் - விண்டகலா (௧0௬)

மண்மயக்கும் பொன்மயக்கு மாதர் மயக்குமெனுங்
கண்மயக்குங் காட்டிநிற்குங் கள்வனெவ - னுண்மயக்கு (௧0௭)

மாசு பறிக்கு மதியுடையோர் தம்முடைய
காசு பறிக்கின்ற கள்வனெவ - னேசகன்ற (௧0௮)

பெண்ணு லெவையும் பிறப்பித்து மற்றைநுதற்
கண்ணு லழிக்கின்ற கள்வனெவ - னெண்ணாது (௧0௯)

---

☞ அநுர்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

189. அளித்து - கொடுத்து. 193. அத்திரம் - அம்பு. 195. சங்கமம் - சரவுயிர்; தாபரம் - அசரவுயிர். 197. சயம்பு - தானேயுண்டானவன். 198. தத்து-ஆபத்து. 201. வண்டு ஆலும் - வண்டுகள் ஒலிக்கின்ற. 203. அள் அஞ்சு எறியார்க்கு-சப்தாதிவிஷயங்களில் வாரிக் கொண்டுபோகிற ஐம்பொறிகளை யெல்லாதவர்க்கு; 204. கள்ளஞ்செறியாத - ஒளிக்காத. 207. தன்னையொளிக்கின்றோர்கள் - தற்போதமிழந்தவர்கள். 209. சற்பனை - வஞ்சனை; திரோதானமென்னுஞ்சத்தி-உயிர்களைமயக்குகிற ஒருசத்திவிசேடம். 211. ஆற்றல் - செய்கை; 212. விண்டுஅகலா - விட்டுநீங்காத. 215. மாசு பறிக்கும் - குற்றத்தைக்கெடுக்கிற. 216. ஆசு-குற்றம். 218. நுதற்கண் - நெற்றிக்கண்.

† மதுராபுரியில் பரமசிவம் எல்லாம்வல்லசித்தராகி பாண்டியன் முன்றோன்றி கருங் கல்லினாற்செய்த யானைக்குக் கரும்புண்ணக் கொடுத்ததென்பது திருவிளையாடற்புராணம்.

நானென்று நிற்கி னடுவேயந் நானைத்
தானென்று நிற்குஞ் சதுரனெவன் - மானென்ற (௧௧௦)
மாயைதனைக் காட்டி மறைப்பித்தம் மாயையிற்றன்
சாயைதனைக் காட்டுஞ் சதுரனெவ - னேயமுடன் (௧௧௧)
நான்மறையு நான்முகனு நாரணனு நாடுதொறுந்
தான்மறையு மேன்மைச் சதுரனெவன் - வான்மறையா (௧௧௨)
முன்னை மறைக்கு முடிப்பொருளென் றுய்ப்பவர்க்குந்
தன்னை மறைக்குஞ் சதுரனெவ - னுன்னுகின்றோர் (௧௧௩)
சித்தத்திற் சுத்த சிதாகாச மென்றொருசிற்
சத்தத்திற் காட்டுஞ் சதுரனெவன் - முத்தரென (௧௧௪)
யாவ ரிருந்தா ரவர்காண வீற்றிருக்குந்
தேவர் புகழ்தலைமைத் தேவனெவன் - யாவர்களும் (௧௧௫)
இவ்வணத்த னிவ்விடத்த னிவ்வியல னென்றறியாச்
செவ்வணத்த னுந்தலைமைத் தேவனெவன் - மெய்வணத்தோர் (௧௧௬)
தாம்வாழ வண்ட சராசரங்க டாம்வாழ
நாம்வாழத் தன்னுரையா நான்மறைக - டாம்வாழச் (௧௧௭)
சாருருவி னல்லருளே சத்தியாய் மெய்யறிவின்
சீருருவே யோருருவாந் தேவனெவ - னீருருவு (௧௧௮)
மொன்றென் றுணர வுணர்த்தி யடியருளுஞ்
சென்றங் கமர்ந்தருளுந் தேவனெவ - னென்றென்றுந் (௧௧௯)
தற்சகச மென்றே சமயஞ் சமரசமாஞ்
சிற்சபையில் வாழ்கின்ற தேவனெவன் - பிற்படுமோர் (௧௨௦)
பொய்விட்டு மெய்ந்நெறியைப் போற்றித்தற் போதத்தைக்
கைவிட் டுணர்வே கடைப்பிடித்து - நெய்விட்ட (௧௨௧)
தீப்போற் கனலுஞ் செருக்கறவே செங்கமலப்
பூப்போலுந் தன்றாட் புணைபற்றிக் - காப்பாய (௧௨௨)
வெண்ணீ றணிந்து விதிர்விதிர்த்து மெய்பொடிப்பக்
கண்ணீ ரருவி கலந்தாடி - யுண்ணீர்மை (௧௨௩)
என்புருகி யுள்ளுருகி யின்பா ருயிருருகி
யன்புருகி யன்புருவ மாகிப்பின் - வன்பகன்று (௧௨௪)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

219. நானென்று நிற்றல் - அகங்கரித்து நிற்றல்; 220. மான் - மகதத்துவம். 222. சாயை - ஒளி (பிரதிபலநம்.) 225. மறைக்கு முடிப்பொருள்-வேதத்தின் சிரத்திலுள்ள பொருள், (வேதாந்தப்பொருள்.) 226. உன்னுகின்றோர் - நினைப்பவர். 227. சிதாகாசம் - ஞானகாசம்; 228. சிற்சத்தம் - ஞானமொழி; 231. இவ்வண்ணத்தன் - இவ்வுருவமுடையவன்; 232. செவ்வணத்தன்-செவ்விய உருவமுடையவன்; மெய்வணத்தோர்-மெய்யுணர்ச்சியுள்ளவர். 233, அண்டம்-உலகம்; சராசரங்கள்-இயங்கியற்பொருள் நிலையியற்பொருள் என்பவைகள்; 236. ஈருருவும் - இரண்டுருவங்களும், (ஜீவபரங்கள்.) 237. அடியருளும்-அடியவர்களுடைய உள்ளத்திலும். 240. சிற்சபை - ஞானசபை. 241. தற்போதம் - தானென்னுமுணர்வு; 242. கடைப்பிடித்தல் - உறுதியாகப்பற்றுதல்; 243. கனலும் - சுடுகின்ற; 244. புணை - தெப்பம். 245. விதிர்விதிர்த்தல்-நடுநடுங்கல்; மெய்பொடித்தல்-சரீரம் புளகித்தல். 247. என்பு - எலும்பு; 248. வன்பு - வன்மை, (கடினத்வம்.)

புண்ணியா திங்கட் புரிசடையாய் பொன்னிதழிக்
கண்ணியா வெங்கள் களைகண்ணே - யெண்ணியாங் (கஉரு)
கன்பர்க் கருளு மரசே யமுதேபே
ரின்பக் கடலே யெமதுறவே - மன்பெற்று (கஉசு)
மாற்றுரையாப் பொன்னே மணியேயெங் கண்மணியே
யேற்றுவந்த மெய்ப்பொருளே யென்றுநிதம் - போற்றிநின்றால் (கஉஎ)
உள்ளூறி யுள்ளத் துணர்வூறி யவ்வுணர்வி
னள்ளூறி யண்ணித் தமுதூறித் - தெள்ளூறும் (கஉஅ)
வான்யோற் பரவி மதிபோற் குளிர்ந்துயர்கோற்
றேன்போன் மதுரிக்குந் தேவனெவன் - வான்போனார் (கஉகூ)
மாண்கொடுக்குந் தெய்வ மடந்தையர்க்கு மங்கலப்பொன்
ஞாண்கொடுக்க நஞ்சுவந்த நாதனெவ - ஞாண்மலர்ப்பெய் (கங0)
தார்த்தியாய்த் தேவ ரரகரவென் றேத்தவட்ட
மூர்த்தியாய் நின்ற முதல்வனெவன் - சீர்த்திபெற (கஙக)
ஈண்டற் புதவடிவா யெத்தேவ ரேனுநின்று
காண்டற் கரிதாங் கணேசனெவன் - வேண்டுற்றுப் (கஙஉ)
பூமியெங்கும் வாழ்த்திப் புகழ்வார் விரும்புமிட்ட
காமியங்க ளீயுங் கணேசனெவ - ஞமியங்க (கஙங)
ளெண வருமிடையூ றெல்லா மகற்றியருள்
காண வெமக்கீயுங் கணேசனெவன் - மாணவரு (கஙச)
முந்த மறையின் முழுப்பொருளை நான்முகற்குத்
தந்த வருட்கடலாஞ் சாமியெவன் - றந்தமக்காம் (கஙரு)
வாதகற்றி யுண்மை மரபளித்து வஞ்சமலக்
கோதகற்று நெஞ்சக் குகேசனெவன் - நீதகற்றித் (கஙசு)
தங்குமுல கங்கள் சாயாமற் * செஞ்சடைமேற்
கங்கைதனைச் சேர்த்த கடவுளெவ - னெங்குறினுங் (கஙஎ)
கூம்பா நிலைமைக் குணத்தோர் தொழுகின்ற
பாம்பா பரணப் பரமனெவன் - கூம்பாது (கஙஅ)

---

அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

249. புண்ணியா - புண்ணியனே. திங்கள்புரிசடையாய் - சந்திரகண்டத்தையணிந்த கட்டப்பட்ட சடையையுடையவனே; 250. இதழிக்கண்ணியாய் - கொன்றைமலர் மாலையையுடையவனே, களைகண் - ஆதரவு. 256. அண்ணித்தல் - தித்தித்தல். 258. கோற்றேன் - கொம்புத்தேன். 259. மங்கலப்பொன்ஞாண் - மங்கலசூத்திரம். (தாலிக்கயிறு) 260. நஞ்சுவந்த - நஞ்சுண்ட, நாண்மலர் - புதுப்பூ, பெய்து - அருச்சித்து, 261. ஆர்த்தி - அன்பு, 262. அட்டமூர்த்தி - எட்டுரு: அவை நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்பன. சீர்த்தி - புகழ். 263. அற்புதவடிவு - ஆச்சரியகரமான ரூபம், 264. கணேசன் - கணநாதன்; 266. இயங்க-சஞ்சரிக்க (வாழ). 272. குகேசன் - அன்பரது இதயகமலத்தில் வாழ்பவன் 275. கூம்பாநிலைமை-குவியாத நிலைமை (கெடாத நிலைமை.)

* திலீபசக்கிரவர்த்தியின் குமாரனாகிய பகீரதன், பாதாளத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த கபில மகாமுனிவரின் கோபசிருட்டியினால் நீறாகின தனது மூதாதைகளாகிய சகரர்களுக்கு நற்கதி உண்டாகும்பொருட்டு கோகர்ணம் என்னும் தலத்தில் பெருந்தவஞ்செய்து வருவித்த ஆகாய கங்கையானது உலகங்களை அழிக்கவொண்ணாது பரமசிவம் தனது சடையின்ஓர் நுனியில் அடக்கியருளினாரென்பது.

போற்றுரைத்து நிற்கும் * புனிதன்மேல் வந்தகொடுங்
கூற்றுதைத்த செந்தாட் குழகனெவ - னூற்றலுறு (கஙகூ)

வையந் துதிக்கு மகாலிங்க மூர்த்திமுத
லையைந்து மூர்த்தியெனு மையனெவ - னையந்தீர் (கச0)

வல்லார்சொல் வண்ணமெந்த வண்ணமந்த வண்ணங்க
ளெல்லா முடைய விதத்தனெவ - னெல்லார்க்குந் (கசக)

தாந்தலைவ ராகத்தந் தாடொழுமெத் தேவர்க்கு
மாந்தலைமை யீந்தபர மார்த்தனெவன் - போந்துயிர்கள் (கசஉ)

எங்கெங் கிருந்துமனத் தியாது விழைந்தாலு
மங்கங் கிருந்தளிக்கு மண்ணலெவன் - புங்கமிகும் (கசங)

அண்ணற் றிருமலர்க்கை † யாழிபெறக் கண்ணிடந்த
கண்ணற் கருளியமுக் கண்ணனெவன் - மண்ணிடத்தில் (கசச)

ஓயாது சூன்முதிர்ந்த ‡ வோர்பெண் டனக்காகத்
தாயாகி வந்த தயாளனெவன் - சேயாக (கசரு)

---

அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

277. போற்றுரைத்து நிற்கும்புனிதன் - போற்றுந்தொழிலில் மனம்பதிந்துநின்ற பரிசுத்தன்; (மார்க்கண்டன்.) 278. குழகன்-கட்டழகன், 281. வண்ணம் - உருவம். 284. பரமார்த்தன்-மேலான பொருளாயுள்ளவன். 285. விழைதல்-விரும்புதல், 286. அளித்தல்-கொடுத்தல். 287. ஆழி - சக்கரம், கண்ணிடந்த-கண்ணைத்தோண்டின- 288. கண்ணன்-கிருஷ்ணமூர்த்தி. 289. சூன்முதிர்ந்த வோர்பெண் - திரிசிரபுரத்தில் சிவபத்தியிற் சிறந்த ஓர் மாது.

* மிருகண்டமுனியின் புத்திரராகிய மார்க்கண்டமுனிவர்க்கு படைப்புக்காலத்தில் பதினாறு வயதென்று ஏற்படுத்தப்பட்டது. இவர் சிவபெருமானிடத்தில் அதிக பக்தியுள்ளவராய் நாடோறும் பெருமானை சிவலிங்கரூபத்தில் பூசித்து வந்தார். ஓர் தினம் தனது ஆயுள்முடிவு காலமாகிய பதினாறுவதுவயது பூர்த்தியாகின்ற நாள் இன்று என அறிந்து, நித்திய வழக்கப்படி சிவலிங்கத்தைப் பூசித்துக்கொண்டிருக்கும்போது, காலதூதனாகிய யமன் தனது வாகனமாகிய எருமைக்கடாமீது ஏறிவந்து தனது பாசக்கயிற்றை வீச, மார்க்கண்டன் பயந்து சிவலிங்கத்தைக்கட்டித் தழுவிக்கொண்டார். யமன் இவரையும் சிவலிங்கத்தையும் சேர்த்து பாசக்கயிற்றால் கட்டியிழுக்கப் பரமேசுரன் கோபாவேசராய் அச்சிவலிங்கத்தினிடமாக விருந்தெழுந்து தனது திருவடியால் யமனை உதைத்து வீழ்த்தினார். இது திருக்கடவூர்மயானம் என்னும் க்ஷேத்திரத்தில் நடந்தது.

† விஷ்ணுவானவர் சிவபெருமானைத் தினந்தோறும் நூற்றெட்டு மலர்கொண்டு அருச்சனை செய்துகொண்டு வருநாளில் ஓர் தினம் ஓர் புஷ்பம் குறைந்தது. உடனே விஷ்ணு தனது கண்ணைப்பிடுங்கி அருச்சித்தார். பரமசிவம் ஆனந்தங்கொண்டு பக்திசிகாமணியாகிய விஷ்ணுவுக்கு சக்கரம் கொடுத்தருளினார் என்பது.

‡ திரிசிரபுரத்தில் சிவபக்தியிற் சிறந்த ஓர் மாது கருப்பவேதனை படும்போது அருகிருந்து உதவி செய்வார் ஒருவருமில்லாது வருத்தமுறுஞ்சமயத்தில், பரமசிவம் அவளது தாய்போல வந்து அருகிருந்து வேண்டிய உதவி செய்தார். சிலநாள் சென்று உண்மைத் தாயானவள் வர, பரமசிவம் மறைந்தார். அம்மாது இவ்வுண்மை தெரிந்து பரமசிவனைத் தியானித்தாள். ஆதலால் திரிசிரபுரத்திலுள்ள பரமசிவத்துக்குத் " தாயுமானவர் " என்று பேர்வழங்கும்.

வேற்பிடித்த * கண்ணப்பன் மேவுமெச்சில் வேண்டுமிதத்
தாற்பொசித்து நேர்ந்த தயாளனெவன் - † பாற்குடத்தைத் (கசசு)
தான் தந்தை யென்றெறிந்தோன் றாளெறிந்த தண்டிக்குத்
தான்றந்தை யான தயாளனெவன் - றன்கொண்டு (கசஎ)
நம்பு நறுங்கனியின் றன்விதையைத் தாள்பணிந்த
சம்பு முனிக்கீயுந் தயாளனெவ - னம்புவியில் (கசஅ)
ஆண்டவனென் றேத்தப்பொன் னம்பலத்தி லானந்தத்
தாண்டவஞ்செய் கின்ற தயாளனெவன் - காண்டகைய (கசகூ)
முத்துச் சிவிகையின்மேல் முன்காழி யோங்குமுழு
முத்தைத் தனிவைத்த முத்தனெவன் - பத்திபெறு (கருo)
நாவொன் றரசர்க்கு நாந்தருவே நல்லூரில்
வாவென்று வாய்மலர்ந்த வள்ளலெவன் - பூவொன்று (கருக)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

292. நேர்ந்த - அருள்செய்த. 293, தாளெறிந்ததண்டி - காலைவெட்டினதண்டி. (சண்டேசுரநாயனார்.) 296. சம்பு - நாவல், 295. நறுங்கனி - நல்லபழம். 299. காழியோங்குமுழு முத்து - திருஞானசம்பந்தசுவாமிகள். 301. நாவொன்றரசர் - வாகீசர், (திருநாவுக்கரசர்).

* ஸ்ரீகாளத்தியென்னும் க்ஷேத்திரத்திற்கடுத்த உடுப்பூரில் வேடர்குலத்திலுதித்த திண்ணனார் என்பவர் ஓர் நாள் ஒரு பன்றியைத் துரத்திக்கொண்டுபோக, அப்பன்றி அருகிருந்த மலையின்மீது சென்றது. திண்ணனார் பின்தொடர்ந்து அம்மலைக்குப்போக, அவ்விடத்தில் ஓர் சிவலிங்கத்தைக்கண்டு, அந்தோ புலி சிங்கம் முதலிய துஷ்டமிருகங்கள் இருக்கிற இக்கானகத்தில் தனியாயிருக்கிறீரே! தொந்தரை நேரிடுமேயென்று வருந்தி, அன்றுமுதல் அவர் சிவலிங்கத்தின்மீது பிராமணன் பூசித்துப்போன வில்வதளங்களைத் தன் செருப்புக்காலால்தள்ளி, வாயிற்கொண்டுவரும் ஜலத்தை அபிஷேகம்செய்து, தலைமேற்கொண்டுவந்த புஷ்பத்தைச்சாத்தி, பக்குவமாகச்சுட்ட பன்றியிறைச்சியைச் சுத்த மலைத்தேனில் தோய்த்துத் தான்ருசிபார்த்துப் பின்னர் கொடுக்கப் பரமசிவம் உண்டார். ஓர் தினம் இவரது பக்தியைப்பரிசோதிக்க ஓர் கண்ணிலிருந்து உதிரம் வரத் திண்ணனார் கண்டு, அதற்குவேண்டிய மலை மருந்துகள் எல்லாம் உபயோகித்தும் உதிரம்நிற்காததுகண்டு, ஊனுக்கு ஊனிடுதல் நல்லதுஎன்று தன்கண்ணை அம்பினால் பேர்த்து அப்ப உதிரம் நின்றுவிட்டது. மற்றொரு கண்ணிலும் முன்போலவே உதிரம் வர, மற்றொருகண்ணையும் பிடுங்கி அப்ப அம்பைப்பிரயோகிக்கும்போது பரமசிவம் கையைப் பிடித்துக்கொண்டு திண்ணனாருக்கு முத்திதந்தார். அதுமுதல் கண்ணப்பர் எனப்பேராயிற்று.

† திருச்சேய்ஞ்ஞலூரில் பிராமணகுலத்திலுதித்த விசாரசருமர் பசுமேய்க்கிறவர்கள் பசுவைச்சரிவரக் காப்பாற்றாது தொந்தரவு செய்வதைப்பார்த்து, தான் அப்பசுக்கூட்டங்களை நிழல்தங்கின இடங்களில் நிறுத்தியும்,சுத்தஜலமுள்ள இடத்தில் ஜலம் காட்டியும், பச்சைப்புல்லிருக்கும் தலத்தில் புல்காட்டியும் மேய்த்துவந்தார். பசுக்கள் முன்னிலும் பதின்மடங்கு புஷ்டி ஆகாரத்துடன் அதிகபாலையும் கொடுத்துவர எல்லோரும் சந்தோஷித்தார்கள். விசாரசருமர் பசுக்களை மேயவிட்டுத் தான் மண்ணினால் சிவலிங்கம்செய்து அதற்கு பசுக்களினிடமுள்ள பாலைக்கறந்து அபிடேகம் செய்வார், இதைக்கண்டசிலர்அப்பசுவின் சொந்தக்காரரிடம் சொல்லியும் அவர்கள் தங்களுக்கு அதிகமான பால் கொடுத்து வருவதினால் நம்பவில்லை. இவர் தந்தை கேள்வியுற்று உண்மையைப் பரிசோதிக்க ஓர்நாள் மரமறைவில் நின்று பார்த்துக்கொண்டிருக்க, இவர் வழக்கப்படி சிவலிங்கம் மண்ணினாற் பிடித்து, பசுக்கள் தானே கொடுத்த பாலைக் கொண்டு அபிஷேகம் செய்து தியானத்திலிருந்தார். அச்சமயத்தில் பிதா பெருந்தடிகொண்டு வந்து புத்திரனை அடிக்க இவர் கவனித்தாரில்லை. சிவலிங்கத்தைத் தடியால் அடிக்கக் கோபங்கொண்டு அத்தடியைப்பிடுங்கித் தந்தையைஅடித்தார்.உடனே பரமசிவம் பிரத்தியக்ஷமானார்.

நன்றொண்டர் சுந்தரரை நாந்தடுக்க வந்தமையால்
வன்றொண்ட னீயென்ற வள்ளலெவ - னன்றொண்டிற் (கருஉ)
காணிக்கை யாகக் கருத்தளித்தார் தம்மொழியை
மாணிக்க மென்றுரைத்த வள்ளலெவன் - றூணிற்குந் (கருங)
தன்னன்பர் தாம்வருந்திற் சற்றுந் தரியாது
மன்னன்ப ருள்ளளிக்கும் வள்ளலெவன்-முன்னன்பிற் (கருச)
சால்புடைய நல்லோர்க்குத் தண்ணருடந் தாட்கொளவோர்
மால்விடைமேல் வந்தருளும் வள்ளலெவன் - மான்முதலோர் (கருரு)
தாமலையா வண்ணந் தகையருளி யோங்கும்வெள்ளி
மாமலைவாழ் கின்றவருள் வள்ளலெவ - னுமவனே (கருசு)
நம்மைப் பணிகொண்டு நாரணனு நாடரிதாஞ்
செம்மைக் கதியருணந் தெய்வங்கா - ணெம்மையினும் (கருஎ)
நாடக் கிடைத்த னமக்கன்றி நான்முகற்குந்
தேடக் கிடையாநந் தெய்வங்கா - ணீடச்சீர் (கருஅ)
நல்வந் தனைசெய்யு நம்போல்வார்க் கோர்ஞானச்
செல்வந் தருநமது தெய்வங்காண் - சொல்வந்த (கருகூ)
எண்மைபெறு நாமுலகி லென்றும் பிறந்திறவாத்
திண்மை யளித்தருணந் தெய்வங்காண் - வண்மையுற (கசுO)
முப்பாழ் கடந்த முழுப்பாழுக் கப்பாலைச்
செப்பாது செப்புறுநந் தேசிகன்காண் - டப்பாது (கசுக)
தீரா விடும்பைத் திரிபென்ப தியாதொன்றுஞ்
சேரா நெறியருளுந் தேசிகன்கா - ணோராது (கசுஉ)
நித்தந் தெரியா நிலைமே வியநமது
சித்தந் தெளிவிக்குந் தேசிகன்காண் - பித்தரென (கசுங)
யாதொன்றுந் தேரா திருந்தநமக் கிவ்வுலகந்
தீதென் றறிவித்த தேசிகன்காண் - கோதின்றி (கசுச)
ஓசைபெறு கடல்சூ ழுற்ற வுலகினம்மை
யாசை யுடனீன்ற வப்பன்காண் - மாசுறவே (கசுரு)
வன்பாய் வளர்க்கின்ற மற்றையர் போலல்லாம
லன்பாய் நமைவளர்க்கு மப்பன்கா - ணின்பாக (கசுசு)
இப்பாரிற் சேயா ரிதய மலர்தம்மை
யப்பா வெனுநங்க ளப்பன்காண் - செப்பாமல் (கசுஎ)
எள்ளித் திரிந்தாலு * மிந்தாவென் றின்னமுத
மள்ளிக் கொடுக்குநம தப்பன்கா - ணுள்ளிக்கொண் (கசுஅ)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

305. காணிக்கையாகக் கருத்தளித்தார்-மாணிக்கவாசகர். 314. எம்மையினும் - எந்தப் பிறப்பிலும். 319. எண்மை - எளிமை. 321. முப்பாழ் கடந்த முழுப்பாழ் - மூலப்பிரகிருதி. அப்பாலை - அப்பாலுள்ள பிரமப்பொருளை. 322. செப்பாதுசெப்பல் - சொல்லாமற்சொல்லல் (கைகாட்டல்). 323. இடும்பை - துன்பம். 333. சேயார் - குழந்தைகள். 335. எள்ளல்- இகழ்தல். இந்தாவென்று - இதனைப்பெற்றுக்கொள்ளென்று. 336. உள்ளுதல்-நினைத்தல்.

* இந்தா என்பது மரூஉச்சொல்; இதனைத் தரப்பெற்றுக்கொள்ளென்னும் பொருட்டு; அல்லது இங்குவா என்னும் எளிமைக்கண் ஏவலுமாம்.

டின்றே யருள்வா யெனத்துதிக்கி லாங்குநமக்
கன்றே யருளுநம தப்பன்கா - ணன்றேமுன் (கசுகூ)
காதரவு செய்துநலங் கற்பித்துப் பின்பெரிய
வாதரவு செய்யுநங்க ளப்பன்காண் - கோதுறுமா (கஎ0)
வஞ்சமலத் தால்வருந்தி வாடுகின்ற நந்தமையே
யஞ்சலஞ்ச லென்றருளு மப்பன்காண் - டுஞ்சலெனும் (கஎக)
நச்சென்ற வாதனையை நாளுமெண்ணி நாமஞ்சு
மச்சங் கெடுத்தாண்ட வப்பன்கா - ணிச்சலுமிங் (கஎஉ)
கேயிரவு மெல்லு மெளியேம் பிழைத்தபிழை
யாயிரமுந் தான்பொறுக்கு மப்பன்காண் - சேயிரங்கா (கஎங)
முன்ன மெடுத்தணைத்து முத்தமிட்டுப் பாலருத்து
மன்னையினு மன்புடைய வப்பன்காண் - மன்னுலகில் (கஎச)
வன்மை யறப்பத்து மாதஞ் சுமந்துநமை
நன்மைதரப் பெற்ற நற்றாய்கா - ணிம்மைதனில் (கஎரு)
அன்றொருநா * ணம்பசிகண் டந்தோ தரியாது
நன்றிரவிற் சோறளித்த நற்றாய்கா - ணென்றுமருட் (கஎசு)
செம்மையிலாச்சிறிய தேவர்கள்பாற் சேர்க்காது
நம்மை வளர்க்கின்ற நற்றாய்காண் - சும்மையென (கஎஎ)
மூளும் பெருங்குற்ற முன்னிமேன் மேற்செயினு
நாளும் பொறுத்தருளு நற்றாய்காண் - மூளுகின்ற (கஎஅ)
வன்னெறியிற் சென்றாலும் வாவென் றழைத்துநமை
நன்னெறியிற் சேர்க்கின்ற நற்றாய்காண் - செந்நெறியின் (கஎகூ)
நாந்தேடா முன்ன நமைத்தேடிப் பின்புதனை
நாந்தேடச் செய்கின்ற நற்றாய்கா - ணந்தோறுங (கஅ0)
கால மறிந்தே கனிவோடு நல்லருட்பான்
ஞால மிசையளிக்கு நற்றாய்காண் - சாலவுறு (கஅக)
வெம்பிணியும் வேதனையும் வேசறிக்கை யுந்துயரு
நம்பசியுந் தீர்த்தருளு நற்றாய்கா - ணம்புவியில் (கஅஉ)
வெந்நீரி லாட்டிடிலெம் மெய்நோகு மென்றருளா
நன்னீரி லாட்டுகின்ற நற்றாய்கா - ணொந்நீரின் (கஅங)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

339. காதரவுசெய்தல் - அச்சுறுத்தல். 340. கோது - குற்றம்.
342. துஞ்சல் - இறத்தல். 344. நிச்சலும் - நாள்தோறும்.
345. எல் - பகல். 346. சேய் - குழந்தை. இரங்கல் - அழுதல். 354. சும்மை - சுமை.
363. வேசறிக்கை - துன்பம்.

* இந்நூலாசிரியர் சென்னையிலிருந்தபோது அடுத்த திருவொற்றியூருக்கு பிரதி சுக்கிரவாரம் அமாவாசை தினங்களில் சுவாமிதரிசனத்துக்குப் போவதுவழக்கம். ஓர்நாள் வழக்கப்படி போய்சுவாமிதரிசனம் செய்துகொண்டு அருகிருந்த வசந்த மண்டபத்தில் தனியே நிஷ்டை கூடியிருந்து பின் கண்விழிக்கப் பசி நோய் வருத்தத்தலைப்பட்டது. அஃதறிந்த பரமசிவம் அக்கோயில் குருக்கள்போல் வந்து இவருக்குப் பிரசாதம் தந்து பசியாற்றிப்போயினர் என்பது அக்காலத்தில் அவருடன் கூடியிருந்தவர்களால் சொல்லக் கேட்டது.

மேலாய் நமக்கு வியனுலகி லன்புடைய
நாலா யிரந்தாயி னற்றாய்கா - ணேலாது (கஅச)
வாடி யழுதாலெம் வருத்தந் தரியாது
நாடி யெடுத்தணைக்கு நற்றாய்கா - ணீடுலகில் (கஅரு)
தான்பாடக் கேட்டுத் தமியேன் களிக்குமுன்ன
நான்பாடக் கேட்டுவக்கு நற்றாய்காண் - வான்பாடும் (கஅசு)
ஞானமணஞ் செய்யருளா நங்கைதனைத் தந்துநமக்
கானமணஞ் செய்விக்கு மம்மான்காண் - டேனினொடும் (கஅஎ)
இன்பா லமுதாதி யேக்கமுற வின்னருள்கொண்
டன்பால் விருந்தளிக்கு மம்மான்காண் - வன்பாவ (கஅஅ)
வாழ்கடல்வீழ்ந் துள்ள மழுந்து நமையெடுத்துச்
சூழ்கரையி லேற்றுந் துணைவன்காண் - வீழ்குணத்தால் (கஅகூ)
இன்ப மெனைத்து மிதுவென் றறியாநந்
துன்பந் தொடைக்குந் துணைவன்காண் - வன்பவமாந் (ககூ0)
தீநெறியிற் சென்று தியங்குகின்ற நந்தமக்குத்
தூநெறியைக் காட்டுந் துணைவன்காண் - மாநிலத்தில் (ககூக)
இன்று தொட்டதன்றி யியற்கையாய் நந்தமக்குத்
தொன்றுதொட்டு வந்தவருட் சுற்றங்காண் - டொன்றுதொட்டே (ககூஉ)
ஆயுமுடற் கன்புடைத்தா மாருயிரிற் றன்சிறந்த
நேயம்வைத்த நம்முடைய நேசன்காண் - பேயரென (ககூங)
வாங்காது நாமே மறந்தாலு நம்மைவிட்டு
நீங்காத நம்முடைய நேசன்காண் - டீங்காக (ககூச)
ஈட்டுகின்ற வாபத்தி லிந்தா வெனவருளை
நீட்டுகின்ற நம்முடைய நேசன்காண் - கூட்டுலகிற் (ககூரு)
புல்லென்ற மாயையிடைப் போந்தோறு நம்மையிங்கு
நில்லென் றிருத்துகின்ற நேசன்காண் - சில்லென்றெ ,, (ககூசு)
உட்டேவுந் தன்னைமறந் துண்டாலு மற்றதற்கு
நிட்டூரஞ் செய்யாத நேசன்கா - ணட்டோர்ந்து (ககூஎ)
வஞ்சமது நாமெண்ணி வாழ்ந்தாலுந் தான்சிறிது
நெஞ்சிலது வையாத நேசன்கா - ணெஞ்சலிலாப் (ககூஅ)
பார்நின்ற நாங்கிடையாப் பண்டமெது வேண்டிடினு
நேர்நின் றளித்துவரு நேசன்கா - ணார்வமுடன் (ககூகூ)
ஆர்ந்தநமக் கிவ்விடத்து மவ்விடத்து மெவ்விடத்து
நேர்ந்தவுயிர் போற்கிடைத்த நேசன்காண் - சேர்ந்துமிகத் (உ00)
தாபஞ்செய் குற்றந் தரினும் பொறுப்பதன்றிக்
கோபஞ் செயாநமது கோமான்காண் - பாபமற (உ0க)

---

☞ அருப்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது

374. அம்மான் - மாமன். 385. ஆருயிர் - அரியவுயிர். 389. ஈட்டுதல் - சேர்த்தல்.
394. நட்டோர்ந்து - சிநேகித்துச்சென்று. 396. எஞ்சல் - குறைவு.
398. ஆர்வம் - அன்பு. 401 தாபஞ்செய்தல் - சுடுதல். 402. கோமான் - அரசன்.

விள்ளுமிறை நாமன்பு மேவலன்றி வேற்றரசர்
கொள்ளுமிறை வாங்காநங் கோமான்கா - ணுள்ளமுற (௨௦௨)
உண்டளிக்கு மூணுடைபூ ணூரா திகடானே
கொண்டுநமக் கிங்களிக்குங் கோமான்காண் - மண்டலத்தில் (௨௦௩)
ஒன்றுலு நீங்கா துகங்கள் பலபலவாய்ச்
சென்றாலுஞ் செல்லாநஞ் செல்வங்காண்-முன்றாவி (௨௦௪)
நாடிவைக்கு நல்லறிவோர் நாளுந் தவம்புரிந்து
தேடிவைத்த நம்முடைய செல்வங்காண் - மாடிருந்து (௨௦௫)
நாமெத் தனைநாளு நல்கிடினுந் தானுலவாச்
சேமித்த வைப்பின் றிரவியங்காண் - பூமிக்கண் (௨௦௬)
ஈங்குறினும் வானுதி யாங்குறினும் விட்டகலா
தோங்கருளா னம்மை யுடையவன்கா - ணங்கவன்றன் (௨௦௭)
கங்கைச் சடையழகுங் காதன்மிகு மச்சடைமேற்
றிங்கட் கொழுந்தின் றிருவழகுந் - திங்கடன்மேற் (௨௦௮)
சார்ந்திலங்குங் கொன்றை மலர்த்தாரழகு மத்தார்மே
லார்ந்திலங்கும் வண்டி னணியழகுந்-தேர்ந்தவர்க்கும் (௨௦௯)
நோக்கரிய நோக்கழகும் நோக்கார் நுதலழகும்
போக்கரிய நன்னுதலிற் பொட்டழகுந் - தேக்குதிரி (௨௧௦)
புண்டரத்தி னல்லழகும் பொன்னருடான் றன்னெழிலைக்
கண்டவர்பா லூற்றுகின்ற கண்ணழகுந் - தொண்டர்கடம் (௨௧௧)
நேசித்த நெஞ்சமலர் நீடு மணமுகந்த
நாசித் திருக்குமிழி னல்லழகுந் - தேசுற்ற (௨௧௨)
முல்லை முகையா முறுவலழகும் பவள
வெல்லை வளர்செவ் விதழழகு - நல்லவரைத் (௨௧௩)
தேவென்ற தீம்பாலிற் றேன்கலந்தாற் போலினிக்க
வாவென் றருளுமலர் வாயழகும் - பூவொன்றும் (௨௧௪)
கோன்பரவுஞ் சங்கக் குழையழகு மன்பர்மொழித்
தேன்பரவும் வள்ளைச் செவியழகு - நான்பரவி (௨௧௫)
வேட்டவையை நின்றாங்கு விண்ணப்பஞ் செய்யவது
கேட்டருளும் வார்செவியின் கேழழகு - நாட்டிலுயர் (௨௧௬)
சைவ முதலாய்த் தழைக்க வருள்சுரக்குந்
தெய்வ முகத்தின் றிருவழகுந் - தெய்வமுகத் (௨௧௭)
துள்ளங் குளிர வுயிர்குளிர மெய்குளிரக்
கொள்ளுங் கருணைக் குறிப்பழகு - முள்ளறிவின் (௨௧௮)

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

404. இறை-கப்பம் (திறை.) 410. மாடு-பக்கம். 411. நல்குதல்-கொடுத்தல்; உலவா - கெடாத, 412. சேமித்த - பத்திரப்படுத்தின. வைப்பு - புதையல்; 416. திங்கட்கொழுந்து-பிறைச்சந்திரன். 417. தார் - மாலை. 419. நோக்கு - பார்வை. நுதல் - நெற்றி. 425. முல்லைமுகை-முல்லையரும்பு. முறுவல்-பல். 426 இதழ்-அதரம். 429. பூவொன்றும் கோன் - பிரமன். 431. வேட்டவை - விரும்பினவை, 432. கேழ் - ஒளி.

எள்ளாத மேன்மையுல கெல்லாந் தழைப்பவொளிர்
தெள்ளா ரமுதச் சிரிப்பழகு - முள்ளோங்குஞ் (உகக)
சீல வருளின் றிறத்துக் கிலச்சினையா
நீல மணிமிடற்றி னீடழகு - மாலகற்றி (உஉ0)
வாழ்ந்தொளிரு மன்பர் மனம்போலும் வெண்ணீறு
சூழ்ந்தொளிகொண் டோங்குதிருத் தோளழகுந் - தாழ்ந்திலவாய்த் (உஉக)
தானோங்கு மண்டமெலாஞ் சத்தமுறக் கூவுமொரு
மானோங்குஞ் செங்கை மலரழகு - மூனோங்கும் (உஉஉ)
ஆணவத்தின் கூற்றை யழிக்க வொளிர்மழுவைக்
காணவைத்த செங்கமலக் கையழகு - நாணமுற்றே (உஉங)
எங்கும் பரிசுடைய வெம்போல்வா ரச்சமெலாம்
வாங்கு மபய மலரழகுந் - தீங்கடையாச் (உஉச)
சீர்வரவு மெல்லாச் சிறப்பும் பெறவுமருள்
சார்வரத வொண்கைத் தலத்தழகும் - பேரரவப் (உஉரு)
பூணிலங்க வெண்பொற் பொடியிலங்க வென்பணித்தார்
மாணிலங்க மேவுதிரு மார்பழகுஞ் - சேணிலத்தர் (உஉசு)
மேலுடுத்த வாடையெலாம் வெஃக வியாக்கிரமத்
தோலுடுத்த வொண்மருங்கிற் றன்னழகும் - பாலடுத்த (உஉஎ)
கேழ்க்கோல மேவுதிருக் கீளழகு மக்கீளின்
கீழ்க்கோ வணத்தின் கிளரழகுங் - கீட்கோலம் (உஉஅ)
ஒட்டிநின்ற மெய்யன்ப ருள்ள மெலாஞ்சேர்த்துக்
கட்டிநின்ற வீரக் கழலழகு - மெட்டிரண்டுஞ் (உஉகூ)
சித்திக்கும் யோகியர்தஞ் சிந்தைதனிற் றேன்போன்று
தித்திக்குஞ் சேவடியின் சீரழகுஞ் - சத்தித்து (உங0)
மல்வைத்த மாமறையு மாலயனுங் காண்பரிய
செல்வத் திருவடியின் சீரழகுஞ் - சொல்வைத்த (உஙக)
செம்மை மணிமலையைச் சேர்ந்த மரகதம்போ
லம்மையொரு பால்வாழ்ந் தருளழகு - மம்மர்மிகச் (உஙஉ)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

437. எள்ளாத-இகழாத. 439. இலச்சினை-அடையாளம், 440. மிடறு-கழுத்து. மால்-மயக்கம். 444. ஊன்-உடம்பு. 445. ஆணவத்தின்கூறு - அகங்காரத்தின் பங்கு.

447. பரிசு - தன்மை. 448. அபயமலர் - தாமரைமலர்போன்ற அபயஹஸ்தம். (அபய ஹஸ்தம் - அஞ்சாதேயென்றமைக்குங்கை).

450. வரதவொண்கை - அழகியவரதஹஸ்தம். (வரதஹஸ்தம் - ரக்ஷிக்குங்கை).

451. என்பணித்தார் - எலும்பினாற் செய்யப்பட்ட அழகியமாலை; 452. சேணிலத்தர் - விண்ணுலகத்தார் (தேவர்கள்). 453. வியாக்கிரமத்தோல் - புலித்தோல், 454. மருங்கு - அரை. பால் - பரிசுத்தம். 455. கேழ் - நிறம்; கோலம் - அழகு; கீள் - கீளுடை.

456. கீட்கோலம் - கீளுடையினழகு. 458. எட்டிரண்டு - அகார உகாரங்கள்.

461. மல்வைத்த - வளம்பொருந்திய சதுர்வித புருஷார்த்தங்களையும் பிரதிபாதிக்கிற, 462. சொல்வைத்த - புகழ்பொருந்திய.

463. செம்மைமணி - மாணிக்கம்; மரகதம் - பச்சைரத்நம்; 464. அம்மை - எல்லாச் சீவர்களுக்குந் தாயாகிய உமாதேவி; மம்மர் - மயக்கம், விருப்பம்,

சீர்த்திகழ் செம்பவளச் செம்மே னியினழகும்
பார்த்திருந்தா னம்முட் பசிபோங்காண் - டீர்த்தருளங் (உ௯௩)
கொண்டிருந்தான் பொன்மேனிக் கோலமதை நாந்தினமுங்
கண்டிருந்தா லல்லலெலாங் கட்டறுங்காண் - டொண்டடைந்து (உ௯௪)
பாட்டா லவன்புகழைப் பாடுகின்றோர் பக்கநின்று
கேட்டால் வினைகள்விடை கேட்குங்கா - ணீட்டாமல் (உ௯௫)
* ஒன்னார் புரம்பொடித்த வுத்தமனே யென்றொருகாற்
சொன்னா லுலகத் துயரறுங்கா - ணெந்நாளும் (உ௯௬)
பன்னுமுள்ளத் துள்ளாம் பரசிவமே யென்றொருகா
லுன்னுமுன்னந் தீமையெலா மோடுங்கா - ணன்னவன்றன் (உ௯௭)
ஆட்டியல்காற் பூமாட் டடையென்று லந்தோமுன்
னீட்டியகாற் பின்வாங்கி நிற்கின்று - யூட்டுமவன் (உ௯௮)
மாற்கடவு ளாமோர் மகவலறக் கண்டுதிருப்
பாற்கடலை யீந்தவருட் பான்மைதனை - நூற்கடலின் (உ௯௯)
மத்தியினீ கேட்டும் வணங்குகிலா யன்படையப்
புத்தியுளோர்க் கீதொன்றும் போதாதோ - முத்திநெறி (உ௪0)
மாணு வரக்கன் மலைக்கீ ழிருந்தேத்த
வாணாள் வயங்கியதோர் வண்மைதனை - நாணாளும் (உ௪௧)
நண்ணி யுரைத்து நயந்திலைநீ யன்புகொளப்
புண்ணியருக் கீதொன்றும் போதாதோ - புண்ணியராஞ் (உ௪உ)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

466. தீர்த்தர் - பரிசுத்தர்; (ஞானியர்). 468. தொண்டு - அடிமைத்தொழில்.

470. வினைகள் - இருவினைகள்; (நல்வினை, தீவினை.) விடைகேட்டல் - போய்வருகிறோமென்று உத்தரவுகேட்டல்.

471. ஒன்னார் - பகைவர்; புரம் - முப்புரம்; பொடித்தல் - நீறுக்குதல்.

474. உன்னுமுன்னம் - நினைக்குமுன்னே; 475. ஆட்டியல்காற்பூமாட்டு - நடனஞ்செய்யுமியல்பினையுடைய திருவடித்தாமரைமலரினிடத்தே. 476. ஊட்டுமவன் - உண்பிப்பவன்.

477. மாற்கடவுள்-திருமாலாகிய தேவன்; மகவு-குழந்தை, (உபமந்யு) இவர் கௌதமரிஷியின் புதல்வர்; இவர் குழந்தைப்பருவத்தில் ஒருநாள் பசியினால் வருந்தி யழுதபோது சிவபிரான் பாற்கடலையேவி இவரது பசியை நீக்கியருளினாரென்பது.

480. முத்திநெறி - மோக்ஷமார்க்கம்.

481. மாணாஅரக்கன் - பெருமையில்லாத அரக்கன் (ராவணன்). மலை - கயிலைமலை. 482. வாணாள் - ஆயுள். வண்மை - உதாரகுணம். 483 நயந்திலை - விரும்பினாயில்லை.

* தாருகாசுரனுடைய புதல்வராகிய கமலாக்ஷன், வித்யுன்மாலி, தாரகாக்ஷன் என்னுமூவரும் சிவபெருமானைக்குறித்துப் பெருந்தவஞ்செய்து அப்பெருமானது திருவருளால் இரும்பினாலும் வெள்ளியினாலும் பொன்னினாலும் செய்யப்பட்ட மூன்று ஜங்கமபட்டணங்களைப் பெற்று, (ஜங்கமபட்டனம் - சஞ்சரிக்கிறபட்டணம்) உலகங்களையெல்லாம் பாழாக்கிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது விஷ்ணுமூர்த்தியானவர் ஒருபாஷண்ட அவதாரமெடுத்து, நாரதரைத் தனக்குச்சீடனாக்கிக்கொண்டு இந்தத்திரிபுராசுரர்களுக்கும் இவருடைய குடிகளுக்கும் சிவபெருமானிடத்திலுள்ள பக்தி நீங்குதற்குரிய விஷயங்களைப் போதித்தலும், இவர்களும் இவருடைய குடிகளும் சிவத்துவேஷிகளானார்கள். ஆகவே, சிவபெருமான் இவர்கள்மீது கோபங்கொண்டு இவர்களுடைய புரங்களையும் இவர்களையும் நீறுசெய்தனர்; இவர்கள் மரணமடைந்தபிறகு பிரமத கணங்களோடு சேர்ந்தார்களென்பது. இது ஒருவிதம்,

* சுந்தரர்க்குக் கச்சூரிற் றோழமையைத் தான்றெரிக்க
வந்திரப்புச் சோறளித்த வுண்மைதனை - முந்தகத்திற் (உசங)
பேதமறக் கேட்டும் பிறழ்ந்தனையே யன்படையப்
போதமுளோர்க் கீதொன்றும் போதாதோ - போதவுநெய் (உசச)
† அங்கோ ரெலிதா னருந்தவக ணூண்டவதைச்
செங்கோல னுக்கியவுச் சீர்த்திதனை - யிங்கோதச் (உசரு)
சந்ததநீ கேட்டுமவன் றுணினையா யன்படையப்
புந்தியுளோர்க் கீதொன்றும் போதாதோ - முந்தவரு (உசசு)
நற்றுணையென் றேத்துமந்த நாவரசர்க் கன்றுகடற்
‡ கற்றுணையோர் தெப்பமெனக் காட்டியதை - யிற்றெனநீ (உசஎ)
மாவுலகிற் கேட்டும் வணங்குகிலா யன்படையப்
பூவுலகர்க் கீதொன்றும் போதாதோ - தாவுநுதற் (உசஅ)
கண்சுமந்தா னன்பன் கலங்கா வகைவைகை
§ மண்சுமந்தா னென்றுரைக்கும் வாய்மைதனைப் - பண்புடையோர் (உசக)
மாணவுரைப் பக்கேட்டும் வாய்ந்தேத்தாய் மெய்யன்பு
பூணவென்று வீதொன்றும் போதாதோ - நீணரகத் (உருo)
தீங்குறுமா || பாதகத்தைத் தீர்த்தோர் மறையவனைப்
பாங்கடையச் செய்தவருட் பண்பதனை - யீங்குலகர் (உருக)
துங்கமுற வுரைத்துஞ் சூழ்கின் றிலையன்பு
பொங்கவென்று வீதொன்றும் போதாதோ - தங்கியவிப் (உருஉ)
பாரறியாத் தாயாகிப் பன்றிக் குருளைகட்கு
வூரறியநன் முலைப் பாலூட்டியதைச் - சீரறிவோர் (உருங)
சொல்லிநின்றூர் கேட்டுந் துதிக்கின் றிலையன்பு
புல்லவென்று வீதொன்றும் போதாதோ - நல்லதிருப் (உருச)

---

☞ அநுர்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

485. கச்சூர் - திருக்கச்சூர்; தோழமை - நட்பு; தெரிக்கவந்து - தெரிவிக்கவந்து.

486. இரப்புச்சோறு - யாசித்தசோறு. 488. போதம் - அறிவு; போதவும் - மிகவும்; 490. சீர்த்தி-பெருமை; 492. புந்தி - புத்தி. 494. கற்றுணை - கற்றூணை, 496. நுதற்கண் சுமந்தான் - சிவபெருமான். 497. அன்பன் - திருவாதவூரர் (மாணிக்கவாசகர்). 498. வாய்மை - சொல். 502. அருட்பண்பு - அருட்குணம். 504. பொங்குதல் - மிகுதல்.

* † இதன் விபரம் 81-வது பக்கத்திற் கூறியிருக்கிறதைக் கவனிக்க.

‡ சமணர்கள் திருநாவுக்கரசு சுவாமிகளுக்குப் பலவித தொந்தரவு செய்தும், பரமசிவ கடாக்ஷத்தால் ஒன்றும் அவரைத் துன்பம் செய்யாதிருக்க, கல்தூணில் கட்டி கடலில் விட்டார்கள். அப்பொழுது மருணீக்கியாரென்னும் அப்பர்சுவாமிகள் "சொற்றுணைவேதியன்" என்னும் பதிகம் பாடக் கட்டுகள் எல்லாம் நீங்கிக் கற்றூண் தெப்பமாக மிதந்தது.

§ மதுரையில் வந்தி யென்னும் பிட்டு வாணிச்சிக்காக நடந்தது; 80 - வது பக்கத்தில் விரிவெழுதியதைக் காண்க.

|| மதுரையில் ஓர்பிராமணன் தனது குலாசாரத் தொழிலை விட்டு பஞ்சமாபாதகத்துக்கு மேற்பட்ட மகாபாதகங்கள் செய்து பிர்மஹத்தியால் உருவழிந்து வருத்தமடைந்திருக்கப் பரமசிவம் அவனது மகாபாதகங்களை நீக்கி முத்திதந்தார் என்பது திருவிளையாடல்.

பாதமலர் வருந்தப் பாணன்றனக் காளாய்க்
கோதில்விற கேற்றுவிலை கூறியதை - நீதியுளோர் (௨௫௫)
சாற்றிநின்றார் கேட்டுமவன் றாணிணையாய் மெய்யன்பிற்
போற்ற வென்றா லீதொன்றும் போதாதோ - போற்றுகின்ற (௨௫௬)
* ஆடுங் கரியு மணிலுங் குரங்குமன்பு
தேடுஞ் சிலம்பியொடு சிற்றெறும்பு - நீடுகின்ற (௨௫௭)
பாம்புஞ் சிவார்ச்சனைதான் பண்ணியதென் றாற்பூசை
யோம்புவதற் கியார்தா னுவவாதார் - சோம்புறுநீ (௨௫௮)
வன்பென்ப தெல்லா மறுத்தவன்றாட் பூசிக்கு
† மன்பென்ப தியாதோ வறியாயே - யன்புடனே (௨௫௯)
செஞ்சடைகொ ணம்பெருமான் சீர்கேட் டிரையருந்தா
தஞ்சடக்கி யோக மமர்ந்துலகின் - வஞ்சமற (௨௬0)
‡ நாரையே முத்தியின்ப நாடியதென் றான்மற்றை
யாரையே நாடாதா ரென்றுரைப்பே - னீரமிலாய் (௨௬௧)
நீயோ சிறிது நினைந்திலையவ் வின்பமென்னை
யேயோநின் றன்மை யிருந்தவித - மோயாத (௨௬௨)
அன்புடையா ரியாரினும்பே ரன்புடையா னம்பெருமா
னின்புடையா னித்த நிகழ்த்துகின்றே - னுன்புடையோர் (௨௬௩)
அன்பவன்மேற் கொண்ட தறியேன் புறச்சமயத்
தின்புடையா ரேனு மிணங்குவரே - யன்புடனே (௨௬௪)
தாவென்றா னல்லருளிந் தாவென்பா னம்பெருமா
னாவுன்பா லோதி யலுக்கின்றே - னீவன்பால் (௨௬௫)
நின்றா யலதவனை நேர்ந்துநினை யாய்பித்த
ரென்றாலு மென்சொற் கிணங்குவரே - குன்றாது (௨௬௬)
§ பித்தா வெனினும் பிறப்பறுப்பா னம்முடையா
|| னத்தோ வுனக்கீ தறைகின்றேன் - சற்றேனுங் (௨௬௭)
கேள்வியிலார் போலதனைக் கேளாய் கெடுகின்றாய்
வேள்வியிலார் கூட்டம் விழைகின்றாய் - வேள்வியென்ற (௨௬௮)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

516 பூசையோம்பல் - பூசைசெய்தல்; உவவாதார் - விரும்பாதவர்.

520. அஞ்சடக்கி - ஐம்பொறிகளையடக்கி; ஐம்பொறிகளாவன - மெய், வாய், கண், மூக்கு, செவியென்பன. அடக்குதலாவது-இப்பொறிகளைந்தும் தமக்குரிய விடயங்களிற் செல்லாது தடுத்தல்; இவற்றிற்கு விடயங்களாவன முறையே பரிசம், ரசம், ரூபம், கந்தம், சப்தம் என்பன. 522 ஈரம் - அன்பு.

526. நின்புடை - உன்னிடத்தில் (உனக்கு). 534. அத்தோ - அந்தோ (இரக்கக்குறிப்புச்சொல்). 536. வேள்வி-உபகாரம் (ஈகை). விழைதல் - விரும்பல்.

* யானை, அணில், குரங்கு, சிலம்பி, சிற்றெறும்பு, பாம்பு சிவபூசைசெய்து முத்திபெற்றன. † வன்பு - வலிமை;

‡ நாரைக்கு முத்திதந்தது, திருவிளையாடலிற் காண்க.

§ பித்தா எனக்கூறிய சுந்தரமூர்த்திசுவாமிகளைத் தடுத்தாட்கொண்டு பிறப்பறுத்தது போல். || அந்தோ - என்பது அத்தோவென வலித்தல்.

வேலைவருங் காலொளித்து மேவுகின்றாய் நின்றலைக்கங்
கோலைவருங் காலெங் கொளிப்பாயோ - மாலையுறும் (உகூக)
இப்பார் வெறும்பூ விதுநயவே லென்றுனக்குச்
செப்பா முனம்விரைந்து செல்கின்றா - யப்பாழிற் (உஎ0)
செல்லாதே சைவநெறி செல்லென்றா லென்னுடனுஞ்
சொல்லாது போய்மயக்கந் தோய்கின்றாய் - பொல்லாத (உஎக)
* அஞ்சருந்தென் றாலமுதி னார்கின்றாய் விட்டிடென்றா
னஞ்சருந்தென் றாற்போ னலிகின்றாய் - வஞ்சகத்தில் (உஎஉ)
ஓடுகின்றாய் மீளாம லுன்னிச்சை யின்வழியே
யாடுகின்றாய் மற்றங் கயர்கின்றாய் - நீடுலகைச் (உஎங)
சூழ்கின்றாய் வேறொன்றிற் சுற்றுகின்றாய் மற்றொன்றில்
வீழ்கின்றாய் மேலொன்றின் மீள்கின்றாய் - தாழ்வொன்றே (உஎச)
ஈகின்றாய் வன்னெறியி லென்னை வலதழிக்கப்
போகின்றாய் மீட்டும் புகுகின்றா - யோகின்றி (உஎரு)
ஒன்றைமறக் கின்றாய்மற் றொன்றைநினைக் கின்றாயென்
னன்றைமறைக் கின்றாய் நலிகின்றாய் - வென்றிபெறுஞ் (உஎசு)
சேவிற் பரமன்றாள் சேரென்றான் மற்றொருசார்
மேவிப் பலவாய் விரிகின்றாய் - பாவித்துக் (உஎஎ)
குன்றுமுனக் கனந்தங் கோடிதெண்ட னிட்டாலு
மொன்று மிரங்கா யுழல்கின்றாய் - நன்றாகக் (உஎஅ)
கல்லென்பே னுன்னைக் கரணங் கலந்தறியாக்
கல்லென்றா லென்சொற் கடவாதே - புல்லநினை (உஎகூ)
வல்லிரும்பென் பேனந்த வல்லிரும்பேற் கூடத்திற்
கொல்லன் குறிப்பைவிட்டுக் கோணாதே - யல்லலெலாங் (உஅ0)
கூட்டுகின்ற வன்மைக் குரங்கென்பே னக்குரங்கே
லாட்டுகின்றோன் சொல்வழிவிட் டாடாதே - நீட்டுலகர் (உஅக)
ஏசுகின்ற பேயென்பே னெப்பேயு மஞ்செழுத்தைப்
பேசுகின்றோர் தம்மைப் பிடியாதே - கூசகிற்பக் (உஅஉ)
கண்டோரைக் கவ்வுங் கடுஞ்சுணங்க னென்பனது
கொண்டோரைக் கண்டாற் குலையாதே - யண்டார்க்கும்* (உஅங)

---

☞ **அருப்பத உரை** வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

537. நின்றலைக்கு - உன்தலைக்கு (உன்னிடத்துக்கு). 538. ஓலை - யமனோலை; மாலை - மயக்கத்தை. 539. வெறும்பூ - வெறுமையானபூமி; நயவேல் - விரும்பாதே.

543. அஞ்சருந்தென்றால் - சப்தாதிவிஷயங்கள் ஐந்தனையும் நுகர்வாயென்றுசொன்னால்; அமுதின் - அமிர்தம்போல, ஆர்கின்றாய் - நுகர்கின்றாய். 544. நலிதல் - வருந்துதல்

549. வலதழித்தல் - வலியழித்தல். 553 சேவிற்பரமன் - இடப வாகனத்திலேறுகிற மேலோன். 557. கரணம்-அந்தக்கரணங்கள். அவை:—மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. 559. கூடம் - சம்மட்டி. 565. சுணங்கன் - நாய், 566. அண்டார் - பகைவர்.

* ஐந்து என்பது அஞ்சு என மருவிற்று. இது தொகைக்குறிப்புச்சொல்; சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றமென்னும் ஐந்தாசைகளைக்குறித்து நின்றது.

பூவி லடங்காப் புலியென்பே னப்புலியு
மேவில் வயப்பட்டா லெதிராதே - நோவியற்றி (உஅச)
வீறுகின்ற மும்மதமால் வெற்பென்பே னுங்கதுவு
* மேறுகின்றோன் சொல்வழிவிட் டேருதே - சீறுகின்ற (உஅரு)
† வென்னடைசேர் மற்றை விலங்கென்பே னவ்விலங்கு
மன்னவன்சேர் நாட்டில் வழங்காதே - நின்னையினி (உஅசு)
என்னென்பே னென்மொழியை யேற்றனையேன் மாற்றுயர்ந்த
பொன்னென்பே னென்வழியிற் போந்திலையே - கொன்னுறநீ (உஅஎ)
போம்வழியும் பொய்நீ புரிவதுவும் பொய்யதனு
லாம்விளைவும் பொய்நின் னறிவும்பொய் - தோம்விளைக்கும் (உஅஅ)
நின்னுடலும் பொய்யிங்கு நின்றவமும் பொய்நிலையா
நின்னிலையும் பொய்யன்றி நீயும்பொய் - யென்னிலிவண் (உஅகூ)
ஏதுமுணர்ந் திலையே யிம்மாய வாழ்க்கையெனும்
வாதி லிழுத்தென்னை மயக்கினையே - தீதுறுநீ (உகூ0)
வன்னோர் ‡ விடங்காணின் வன்பெயரின் முன்பொருகீற்
றென்னே யறியாம லிட்டழைத்தேன் - கொன்னேநீ (உகூக)
நோவதொழியா நொறிற்காம வெப்பினிடை
யாவ தறியா தழுந்தினையே - மேவுமதில் (உகூஉ)
உள்ளெரிய மேலா முணர்வுங் கருகவுட
னள்ளெரிய நட்பி னலம்வெதும்ப - விள்வதின்றி (உகூங)
வாடிப் பிலஞ்சென்று வான்சென் றொளித்தாலுந்
தேடிச் சுடுங்கொடிய தீகண்டா - யோடியங்கு (உகூச)
பேர்ந்தா லலது பெருங்காமத் தீநின்னைச்
சேர்ந்தாரை யுஞ்சுடுஞ்செந் தீகண்டாய் - சார்ந்தாங்கு (உகூரு)
சந்தீ யெனவருவார் தம்மைச் சுடுங்காமஞ்
செந்தீ யையுஞ்சுடுமோர் தீகண்டாய் - வந்தீங்கு (உகூசு)
மண்ணிற் றனைக்காணு வண்ண நினைத்தாலு
நண்ணித் தலைக்கேறு நஞ்சங்கா - ணெண்ணற்ற (உகூஎ)
போருறுமுட் காமப் புதுமயக்க நின்னுடைய
பேரறிவைக் கொள்ளைகொளும் பித்தங்காண் - சோரறிவிற் (உகூஅ)
கள்ளடைக்குங் காமக் கடுமயக்க மெய்ந்நெறிக்கோர்
முள்ளடைக்கும் பொல்லா முரண்கண்டா - யள்ளலுற (உகூகூ)

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

567. பூவில் - பூமியில்; 568. ஏ-அம்பு. 569 மும்மதமால்வெற்பு - மும்மதத்தையுடைய பெரியமலை, (யானை). மும்மதம் - கர்ணமதம், கபோலமதம், கோசமதம்.

571. வென்னடை - வெல்லுகின்ற நடை; விலங்கு - மிருகம். 576. தோம் - குற்றம்;

581. நொறில் - விரைவு. 586. நள் - நடு. 587. பிலம் - பாதாளம்.

591. சந்து - தூது. 598. முரண் - தப்புவழி. அள்ளல் - ஒருநரகவிசேடம்.

* ஏறுதல் என்பது ஈண்டொழுக்கத்தின்மேனின்றது.

† கொடுநடையெனப் பொருள்கொள்ளின் வெந்நடையெனப்போது நகரமாக்கிக்கொள்க.

‡ விடம் - நஞ்சு: இதற்குமுன் ஒருகீற்று என்பது [ெ] கொம்பு=நெஞ்சு.

ஏதமெலாந் தன்னு ளிடுங்காமம் பாதகத்தின்
பேதமெலா மொன்றிப் பிறப்பிடங்கா ணாதலினால் (௩௦௦)
வெம்மான் மடந்தையரை மேவவொணா தாங்கவர்க
டம்மாசை யின்னுந் தவிர்த்திலையே - யிம்மாய (௩௦௧)
மன்ற வணங்கினர்செவ் வாய்மடவார் பேதையர்க
ளென்றகொடுஞ் சொற்பொருளை யெண்ணிலையே - தொன்றுலகிற் (௩௦௨)
பெண்ணென் றுரைப்பிற் பிறப்பேழு மாந்துயர
மெண்ணென்ற நல்லோர்சொ லெண்ணிலையே - பெண்ணிங்கு (௩௦௩)
மாமாத் திரையின் வருத்தனமென் றெண்ணினையந்
நாமார்த்த மாசையென நாடிலையே - யாமார்த்தம் (௩௦௪)
மந்திரத்தும் பூசை மரபினுமற் றெவ்விதமாந்
தந்திரத்துஞ் சாயாச் சழக்கன்றோ - மந்திரத்திற் (௩௦௫)
பேய்பிடித்தாற் றீர்ந்திடுமிப் பெண்பேய் விடாதேசெந்
நாய்பிடித்தாற் போலுமென்று நாடிலையே - யாய்விலுன்றன் (௩௦௬)
ஏழைமையென் னென்பே னிவர்மயக்கம் வன்னரகின்
றோழமையென் றந்தோ துணிந்திலையே - யூழமைந்த (௩௦௭)
காரிருளிற் செல்லக் கலங்குகின்றாய் மாதர்குழற்
பேரிருளிற் செல்வதனைப் பேர்த்திலையே - பாரிடையோர் (௩௦௮)
எண்வா ளெனிலஞ்சி யேகுகின்றா யேந்திழையார்
கண்வா ளறுப்பக் கனிந்தனையே - மண்வாழும் (௩௦௯)
ஓரானை யைக்கண்டா லோடுகின்றாய் மாதர்முலை
யீரானை யைக்கண் டிசைந்தனையே - சீரான (௩௧௦)
வெற்பென்றா லேற விரைந்தறியாய் மாதர்முலை
வெற்பென்றா லேற விரைந்தனையே - பொற்பொன்றுஞ் (௩௧௧)
சிங்கமென்றால் வாடித் தியங்குகின்றாய் மாதரிடைச்
சிங்கமெனிற் காணத் திரும்பினையே - யிங்குசிறு (௩௧௨)
பாம்பென்றா லோடிப் பதுங்குகின்றாய் மாதரல்குற்
பாம்பென்றாற் சற்றும் பயந்திலையே - யாம்பண்டைக் (௩௧௩)
கீழ்க்கடலி லாடென்றாற் கேட்கிலைநீ மாதரல்குற்
பாழ்க்கடலிற் கேளாது பாய்ந்தனையே - கீழ்க்கதுவுங் (௩௧௪)
கல்லென்றாற் பின்னிடுவாய் காரிகையார் காற்சிலம்பு
கல்லென்றான் மேலெழும்பக் கற்றனையே - யல்லளகம் (௩௧௫)

---

☞ அநும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

599. ஏதம் - குற்றம். 601. வெம்மால் மடந்தையர் - கொடியமயக்கத்தையுண்டாக்குகிற மாதர். 607. மாமாத்திரையின்வருத்தனம் - அழகியமாத்திரைவருத்தனம்; இது ஒரு அலங்காரம்; இதற்குப்பொருள் மாத்திரைமிகுதல், அதாவது பெண் என்பது பேண் என்றாகிறது. 608. நாமார்த்தம் - பெயரின்பொருள். 610. சழக்கு - குற்றம்.

620. முலை ஈரானை - தனங்களாகிய இரண்டுயானைகள்.

621. வெற்பு - மலை. 622. பொற்பு - அழகு. ஒன்றுதல் - பொருந்துதல்.

625. அல்குல் - நிதம்பம், (பெண்குறி). 628. கதுவுதல் - பற்றுதல்

630. கல்லென்றால் - கல்லென்று ஒலித்தால்; அல் - இருள்.

மையோ கருமென் மணலோவென் பாய்மாறி
யையோ நரைப்ப தறிந்திலையோ - பொய்யோதி (௬௧௬)
ஒண்பிறையே யொண்ணுதலென் றுன்னுகின்று யுள்ளெலும்பாம்
வெண்பிறையென் றேயதனை விண்டிலையே - கண்புருவம் (௬௧௭)
வில்லென்றாய் வெண்மயிராய் மேவி யுதிர்ந்திடுங்காற்
சொல்லென்றாற் சொல்லத் துணியாயே - வல்லம்பிற் (௬௧௮)
கட்கு வளையென்றாயக் கண்ணீ ருலர்ந்துமிக
வுட்குழியும் போதி லுரைப்பாயே - கட்குலவு (௬௧௯)
மெய்க்குமிழே நாசியென வெஃகினையால் வெண்மலத்தா
லுய்க்குமிழுஞ் சீந்த லுளதேயோ - வெய்த்தலிலா (௬௨0)
வள்ளையென்றாய் வார்காது வள்ளை தனக் குட்புழையோ
டுள்ளுநரம் பின்புனைவு முண்டேயோ - வெள்ளைநகை (௬௨௧)
முல்லையென்றாய் முல்லை முறித்தொருகோற் கொண்டுகுத
மொல்லை யழுக்கெடுப்ப துண்டேயோ - நல்லதொரு (௬௨௨)
கொவ்வையென விதழைக் கொள்ளுகின்றாய் மேற்குழம்புஞ்
செவ்வை யிரத்தமெனத் தேர்ந்திலையே - செவ்வியகண் (௬௨௩)
ணாடி யெனக்கவுட்கே யாசைவைத்தாய் மேற்செழுந்தோல்
வாடியக்கா லென்னுரைக்க மாட்டுவையே - கூடியதோர் (௬௨௪)
அந்த மதிமுகமென் றாடுகின்று யேழ்துளைக
ளந்தமதிக் குண்டதனை யெண்ணிலையே - நந்தெனவே (௬௨௫)
கண்டமட்டுங் கூறினையக் கண்டமட்டு மன்றியுடல்
கொண்டமட்டு மற்றதன்மெய்க் கூறன்றோ - விண்டவற்றைத் (௬௨௬)
தோளென் றுரைத்துத் துடிக்கின்று யவ்வேய்க்கு
மூளொன்று வெள்ளெலும்பின் மூட்டுண்டே - நாளொன்றுஞ் (௬௨௭)
செங்காந்த ளங்கையெனச் செப்புகின்று யம்மலர்க்குப்
பொங்காகப் பல்விரலின் பூட்டுண்டே - மங்காத (௬௨௮)
செவ்விளநீர் கொங்கையெனச் செப்பினைவல் லூன்றடிப்பிங்
கெவ்விளநீர்க் குண்டதனை யெண்ணிலையே - செவ்வைபெறுஞ் (௬௨௯)
செப்பென் றனைமுலையைச் சீசீ சிலந்தியது
துப்பென் றவர்க்கியாது சொல்லுதியே - வப்பிறுகச் (௬௩0)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

632. அளகம் - கூந்தல். பொய்யோதி - பொய்சொல்வி.
633. ஒண்ணுதல் - அழகியநெற்றி, உன்னுகின்றாய் - நினைக்கின்றாய்.
637. குவளை - நீலமலர், 639. வெஃகினை - விரும்பினை.
641. புழை - துவாரம், 642. புனைவு - சம்பந்தம், நகை - பல்.
643. முல்லை - முல்லையரும்பு, கோல் - கொம்பு, 644. ஒல்லை - விரைவு.
646. செவ்வை - செந்நிறம், 647. கவுள் - கன்னம்;
649. மதி - பூர்ணசந்திரன், 650. நந்து - சங்கு, 652. விண்டு - மூங்கில்.
653. வேய் - மூங்கில்; 657. செங்காந்தள் - செங்காந்தட்பூ.
657. ஊன் - மாமிசம்; தடிப்பு - பருமை,
659. சிலந்தி - பரு; 660. வப்பு - வம்பு, (கச்சு). வம்பு-வப்பென விகாரமாயிற்று.

சூழ்ந்தமுலை மொட்டென்றே துள்ளுகின்றாய் கீழ்த்துவண்டு
வீழ்ந்தமுலைக் கென்ன விளம்புதியே - தாழ்ந்தவவை (௫௫௧)
மண்கட்டும் பந்தெனவே வாழ்ந்தாய் முதிர்ந்துடையாப்
புண்கட்டி யென்பவர்வாய்ப் பொத்துவையே - திண்கட்டும் (௫௫௨)
அந்நீர்க் குரும்பை யவையென்றாய் மேலெழும்புஞ்
செந்நீர்ப் புடைப்பென்பார் தேர்ந்திலையே - யந்நீரார் (௫௫௩)
கண்ணீர் தரும்பருவாய்க் கட்டுரைப்பார் சான்றாக
வெண்ணீர் வரல்கண்டும் வெட்கிலையே - தண்ணீர்மைச் (௫௫௪)
சாடியென்பாய் நீயயலோர் தாதுக் கடத்திடுமேன்
மூடியென்பார் மற்றவர்வாய் மூடுதியோ - மோடதனை (௫௫௫)
ஆலிலையே யென்பா யடர்குடரோ டீருளொடுந்
தோலிலையே யாலிலைக்கென் சொல்லுதியே - நூலிடைதான் (௫௫௬)
உண்டோ விலையோவென் றுட்புகழ்வாய் கைதொட்டுக்
கண்டோர் பூட் டுண்டென்பார் கண்டிலையே - விண்டோங்கும் (௫௫௭)
ஆழ்கடலென் பாய்மடவா ரல்குலினைச் சிற்சிலர்கள்
பாழ்ங்கிணறென் பாரதனைப் பார்த்திலையே-தாழ்ங்கொடிஞ்சித்
தேராழி யென்பாயச் சீர்க்குழியை யன்றுசிறு (௫௫௮)
நீராழி யென்பவர்க்கென் னேருதியே - யாறாப்புண் (௫௫௯)
ணீர்வழியை யாசை நிலையென்றாய் வன்மலந்தான்
சோர்வழியை யென்னென்று சொல்லுதியே - சார்முடைதான் (௫௬0)
ஆறாச் சிலைநீர்கா னாறு யொழுக்கிடவும்
வீறாப்புண் ணென்று விடுத்திலையே - யூறாக்கி (௫௬௧)
மூலை யெறும்புடனீ மொய்ப்பதஞ்சி மற்றதன்மேற்
சீலையிடக் கண்டுந் தெரிந்திலையே - மேலையுறு (௫௬௨)
மேநரக மென்றால் விதிர்ப்புறுநீ மாதரல்குற்
கோநரக மென்றாற் குலைந்திலையே - யூனமிதைக் (௫௬௩)
கண்டா னமதாசை கைவிடுவ ரென்றதனைத்
தண்டா தொளித்திடவுஞ் சார்ந்தனையே - யண்டாது (௫௬௪)
போக விடாயாகிப் புலம்புகின்றாய் மற்றதன்பான்
மாதவிடா யுண்டான் மதித்திலையே - மாதரவர் (௫௬௫)
தங்குறங்கை மெல்லரம்பைத் தண்டென்றாய் தண்ணேன்றி
வெங்குறங்கின் மேவுங்கால் விள்ளுதியே - நன்கிலவாய் (௫௬௬)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

661. மொட்டு-தாமரையரும்பு அல்லது கோங்கரும்பு. 664. பொத்துதல் - மூடுதல்.
665. குரும்பை - தென்னங்குரும்பை, 666. செந்நீர்ப்புடைப்பு - இரத்தக்குமிழி.
667. சான்று - சாட்சி. 668. வெண்ணீர் - பால்.
669. தாதுக்கடம் - இருப்புக்குடம், 670. மோடு - வயிறு. 671. ஈரல் என்பது ஈருள் எனமரீஇயது. 674. பூட்டு - உடற்பொருத்து.
677. தேராழி - தேர்ச்சக்கரம், 678. நேர்தல்-விடைசொல்லுதல்.
680. முடை - புலால்நாற்றம். 681. கானாறு - காட்டாறு. 685. விதிர்ப்புறல் - நடுங்குதல். 689. போத - மிகுதியாக. 691. குறங்கு - தொடை; அரம்பைத்தண்டு - வாழைத்தண்டு.

எய்ந்த முழந்தாளவரா லென்றாய் புலால்சிறிதே
வாய்ந்து வொரற்றோற்கு மதித்திலையே - சேந்தவடி (நசஎ)
தண்டா மரையென்றாய் தன்மை விளர்ப்படைந்தால்
வெண்டா மரையென்று மேவுதியோ - வண்டாரா (நசஅ)
மேனாட்டுஞ் சண்பகமே மேனியென்றாய் தீயிடுங்காற்
றீநாற்றஞ் சண்பகத்திற் றேர்ந்தனையோ - வானாட்டு (நசகூ)
மின்றேர் வடிவென்றாய் மேனி யுரைத்தவுளீ
தொன்றே யொருபுடையா யொத்ததுகா - ணென்றாச்சொல் (நடுo)
வேள்வா கனமென்றாய் வெய்யநமன் விட்டிடுந்தூ
தாள்வா கனமென்றா லாகாதோ - வேளானேன் (நடுக)
காகளமா யின்குரலைக் கட்டுரைத்தாய் காலனென்போன்
காகளமென் பார்க்கென் கழறுதியே - நாகளவுஞ் (நடுஉ)
சாயைமயி லென்றே தருக்குகின்றாய் சார் பிரம
சாயையஃ தென்பார்க்கென் சாற்றுதியே - சேயமலர் (நடுங)
அன்னநடை யென்பா யஃதன் றருந்துகின்ற
வன்னநடை யென்பார்க்கென் னாற்றுதியே - யன்னவரை (நடுச)
ஓரோ வியமென்பா யோவியமே லாங்கெழுபத்
தீரா யிரநாடி யாண்டுடைத்தே - பாரார்ந்த (நடுரு)
முன்னுமலர்க் கொம்பென்பாய் மூன்றொடரைக் கோடியெனத்
துன்னு முரோமத் துவாரமுண்டே - யின்னமுதாற் (நடுசா)
செய்தவடி வென்பாயச் செய்கைமெய்யே னீயவர்கள்
வைதிடினு மற்றதனை வையாயே - பொய்தவிராய் (நடுஎ)
ஒள்ளிழையார் தம்முருவோ ருண்கரும்பென் றாய்சிறிது
கிள்ளியெடுத் தாலிரத்தங் கீழ்வருமே - கொள்ளுமவர் (நடுஅ)
ஈடில்பெயர் நல்லா ரெனநயந்தாய் நாய்ப்பெயர்தான்
கேடில்பெருஞ் சூரனென்பர் கேட்டிலையோ - நாடிலவர் (நடுகூ)
மெல்லியலா ரென்பாய் மிகுகருப்ப வேதனையை
வல்லியலார் யார்பொறுக்க வல்லார்காண் - வில்லியல்பூண் (நசூo)
வேய்ந்தா லவர்மேல் விழுகின்றாய் வெந்தீயிற்
பாய்ந்தாலு மாங்கோர் பலனுண்டே - வேய்ந்தாங்கு (நசூக)
சென்றா லவர்பின்னர்ச் செல்கின்றாய் வெம்புலிப்பின்
சென்றாலு மாங்கோர் திறனுண்டே - சென்றாங்கு (நசூஉ)

---

அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

694. சேந்த - சிவந்த. 695. விளர்ப்பு-வெளுப்பு. 699. மின் - மின்னற்கொடி, வடிவு-உருவம். 700. ஒருபுடையாய் ஒத்தல் - ஒருவகையானொத்தல், அதாவது தோன்றியுடனே மறைதலாகிய நிலையின்மை. 701. வேள்வாகனம் - மன்மதன்வாகனம் (கிளி).

702. 703. வேளானேன்காகளம்-மன்மதனது ஊதுகொம்பு (குயில்). 704. கழறுதல்-சொல்லுதல், நாகு - இளமை. 705. சாயை - சாயல், பிரமசாயை - பிரமகத்தி. 708. அன்னவர் - அத்தன்மையர். 709. ஓவியம் - சித்திரப்பாவை. 711. மலர்க்கொம்பு - பூங்கொடி.

720. வில்இயல்பூண் - ஒளிபொருந்திய ஆபரணம். 721. வேய்தல் - பூணுதல்.

நின்றா லவர்பின்னர் நிற்கின்றாய் கண்மூடி
நின்றாலு மாங்கோர் நிலையுண்டே - யொன்றாது (௩௬௩)
கண்டா லவருடம்பைக் கட்டுகின்றாய் கல்லணைத்துக்
கொண்டாலு மாங்கோர் குணமுண்டே - பெண்டானர் (௩௬௪)
வைதாலுந் தொண்டு வலித்தாய் பிணத்தொண்டு
செய்தாலு மாங்கோர் சிறப்புளதே - கைதாவி (௩௬௫)
மெய்த்தாவுஞ் செந்தோன் மினுக்கான் மயங்கினைநீ
செத்தாலு மாங்கோர் சிறப்புளதே - வைத்தாடும் (௩௬௬)
மஞ்சண் மினுக்கான் மயங்கினைநீ மற்றொழிந்து
துஞ்சினு மாங்கோர் சுகமுளதே - வஞ்சியரைப் (௩௬௭)
பார்த்தாடி யோடிப் படர்கின்றாய் வெந்நரகைப்
பார்த்தாலு மாங்கோர் பலனுண்டே - சேர்த்தார்கைத் (௩௬௮)
தொட்டாற் களித்துச் சுகிக்கின்றாய் வன்பூதந்
தொட்டாலு மாங்கோர் துணையுண்டே - நட்டாலுந் (௩௬௯)
தெவ்வின் மடவாரைத் திளைக்கின்றாய் தீவிடத்தை
வவ்வுகினு மாங்கோர் மதியுண்டே - செவ்விதழ்நீர் (௩௭0)
உண்டான் மகிழ்வாய்நீ யொண்சிறுவர் தஞ்சிறுநீ
ருண்டாலு மாங்கோ ருரனுண்டே - கண்டாகக் (௩௭௧)
கவ்வுகின்றா யவ்விதழைக் கார்மதுகம் வேம்பிவற்றைக்
கவ்வுகினு மாங்கோர் கதியுண்டே - யவ்விளையர் (௩௭௨)
மென்றீயு மிச்சில் விழைகின்றாய் நீவெறும்வாய்
மென்றாலு மாங்கோர் விளைவுண்டே - முன்றானை (௩௭௩)
பட்டான் மகிழ்வு பதித்தாய் பதைக்கவம்பு
பட்டாலு மாங்கோர் பலனுண்டே - கிட்டாமெய் (௩௭௪)
தீண்டிடிலுள் ளோங்கிச் சிரிக்கின்றாய் செந்தேண்முன்
றீண்டிடினு மாங்கோர் திறனுண்டே - வேண்டியவர் (௩௭௫)
வாய்க்கிடயா தானுமொன்று வாங்குகின்றாய் மற்றதையோர்
நாய்க்கிடினு மாங்கோர்நலனுண்டே - தாக்கவர்க்காய்த் (௩௭௬)
தேட்டாண்மை செய்வாயத் தேட்டாண்மை யைத்தெருவிற்
போட்டாலு மாங்கோர் புகழுண்டே - வாட்டாரை (௩௭௭)

---

அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

727. கட்டுதல் - தழுவுதல்; 729. வலித்தாய் - வலாத்காரமாய். 734. துஞ்சுகினும் - இறந்தாலும். 738. நட்டாலும் - சிநேகித்தாலும். 739. தெவ்வின்மடவார் - பகைவருடைய மனைவியர்; திளைத்தல் - அநுபவித்தல்.

740. செவ்விதழ்நீர் - செவந்த இதழினதுநீர், (செவந்த அதராம்ருதம்). 741. சிறுநீர் - மூத்திரம், 742. உரன் - வலி; கண்டாக - கற்கண்டுபோல.

743. மதுகம் - எட்டிமரம். 744. அவ்விளையர் - அந்த இளம்பெண்கள். 745. மென்றீயு மெச்சில்விழைகின்றாய் - மென்றுகொடுக்கிற எச்சிலைவிரும்புகிறாய்.

751. வாய்க்கிட - வாயிற்போட. 753. தேட்டாண்மை - பொருள்சம்பாதிக்குந்திறமை; வாயல் - வழி. 754. வாட்டாரைகொண்டார் - வாள்போலுங் கண்களையுடையமாதர்.

கொண்டா ருடனுணவு கொள்கின்றாய் குக்கனுட
னுண்டாலு மாங்கோ ருறவுண்டே - மிண்டாகும் (௩௭௮)
இங்கிவர்வாய்ப் பாகிலையை யேற்கின்றாய் புன்மலத்தை
நுங்கினுமாங் கோர்கன் னெறிலுண்டே - மங்கையர்தம் (௩௭௯)
எத்தா மனைகாத் திருக்கின் றாயிமமது
காத்தாலு மாங்கோர் கனமுண்டே - பூத்தாழ்வோர் (௩௮0)
காட்டாக் குரல்கேட்பாய் கர்த்தபத்தின் பாழ்ங்குரலைக்
கேட்டாலு மாங்கோர் கிளருண்டே - கோட்டாவி (௩௮௧)
ஆழ்ந்தாரு டன்வாழ வாதரித்தா யாழ்ங்கடலில்
வீழ்ந்தாலு மாங்கோர் விரகுண்டே - வீழ்ந்தாருள் (௩௮௨)
வீட்டான் முலையுமெதிர் வீட்டான் முகமுமுறக்
காட்டாகின் றார்கண்டுங் காய்ந்திலையே - கூட்டாட்குச் (௩௮௩)
செய்கை யிடும்படிதன் சீமான் றனதுபணப்
பைகை யிடல்கண்டும் பயந்திலையே - சைகையது (௩௮௪)
கையா லொருசிலர்க்குங் கண்ணா லொருசிலர்க்குஞ்
செய்யா மயக்குகின்றார் தேர்ந்திலையே - யெய்யாமல் (௩௮௫)
ஈறிகந்த விவ்வகையா யிம்மடவார் செய்கையெலாங்
கூறுவனே லம்ம குடர்குழம்புங் - கூறுமிவர் (௩௮௬)
வாயொருபாற் பேச மனமொருபாற் செல்லவுட
லாயொருபாற் செய்ய வழிவார்கா - ணுயவிவர் (௩௮௭)
நன்றறியார் தீதேநயப்பார் சிவதலத்திற்
சென்றறியார் பேய்க்கே சிறப்பெடுப்பா - ரின்றிவரை (௩௮௮)
வஞ்சமென்கோ வெவ்வினையாம் வல்லியமென் கோபவத்தின்
புஞ்சமென்கோ மாநரக பூமியென்கோ - வஞ்சுறுமீர் (௩௮௯)
வாளென்கோ வாய்க்கடங்கா மாயமென்கோ மண்முடிவு
நாளென்கோ வெய்ய நமனென்கோ - கோளென்கோ (௩௯0)
சாலமென்கோ வானிந்திர சாலமென்கோ வீறால
காலமென்கோ நின்பொல்லாக் காலமென்கோ - ஞாலமதிற் (௩௯௧)
பெண்ணென்றால் யோகப் பெரியோர் நடுங்குவரேன்
மண்ணின்றார் யார்நடுங்க மாட்டார்காண் - பெண்ணென்றாற் (௩௯௨)

---

☞ அநுப்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

755. குக்கன் - நாய். 757. பாகிலை - பாக்குவெற்றிலை, 758. நுங்கினும்-விழுங்கினும். நெறில் - அடக்கம். 759. ஈமம் - மயானம் (சுடுகாடு) 760. பூத்தாழ்வோர் - பூமியில்தாழ்ந்தவர். 761 கர்த்தபம் - கழுதை. 762. கிளர் - உற்சாகம். கோட்டாவி = கோள்தாவி - துன்பத்தைவிரும்பி. 763. ஆதரித்தல் - அபேட்சித்தல், 764. விரகு - உபாயம். 765. உள்வீட்டான் - உள்வீட்டுக்காரனுக்கு, எதிர்வீட்டான் எதிர்வீட்டுக்காரனுக்கு. 767. செய்கை-வேலை; தன்சீமான் - தன்நாயகன்.

768. கையிடல் - கைவைத்தல், 770. செய்யா-செய்து, 771. ஈறுஇகந்த-முடிவில்லாத, 772. அம்ம - அசைச்சொல். குடர்குழம்பும் - குடல் கலங்கும். 775. நயப்பார்-விரும்புவார். 777. வல்லியம் - புலி. பவம் - பாவம். 778. புஞ்சம்-திரள். 779. மண்முடிவுநாள்-உலகம் அழியுங்காலம். 780. கோள் - துன்பம். 781. வீறு ஆலகாலம் - மேலான ஆலகாலவிடம்; 782. ஞாலம் - உலகு.

பேயு மிரங்குமென்பாய் பேயொன்றோ தாம்பயந்த
சேயு மிரங்குமவர் தீமைக்கே - யாயுஞ்செம் (௩௯௩)
பொன்னாற் றுகிலாற் புனையா விடிலவர்மெய்
யென்னாகு மற்றிதைநீ யெண்ணிலையே - யின்னாமைக் (௩௯௪)
கொத்தென்ற வம்மடவார் கூட்ட மெழுமைக்கும்
வித்தென் றறிந்துமதை விட்டிலையே - தொத்தென்று (௩௯௫)
பாச வினைக்குட் படுத்துறுமப் பாவையர்மே
லாசையுனக் கெவ்வா றடைந்ததுவே - நேசமிலாய் (௩௯௬)
நின்னாசை யென்னென்பே னெய்வீழ் நெருப்பெனவே
பொன்னாசை மேன்மேலும் பொங்கினையே - பொன்னாசை (௩௯௭)
வைத்திழந்து வீணே வயிறெரிந்து மண்ணுலகி
லெத்தனைபேர் நின்கண் ணெதிர்நின்றார் - தத்துகின்ற (௩௯௮)
பொன்னுடையார் துன்பப் புணரியொன்றே யல்லதுமற்
றென்னுடையார் கண்டிங் கிருந்தனையே - பொன்னிருந்தால் (௩௯௯)
ஆற்றன்மிகு தாயுமறி யாவகையால் வைத்திடவோ
ரேற்றவிடம் வேண்டுமதற் கென்செய்வா - யேற்றவிடம் (௪00)
வாய்த்தாலு மாங்கதனை வைத்தவிடங் காட்டாம
லேய்த்தாற் சிவசிவமற் றென்செய்வா - யேய்க்காது (௪0௧)
நின்றாலும் பின்னதுதா னீடுங் கரியான
தென்றா லரகரமற் றென்செய்வாய் - நன்றாக (௪0௨)
ஒன்றொருசார் நில்லென்றா லோடுகின்ற நீயதனை
யென்றும் புரப்பதனுக் கென்செய்வாய் - வென்றியொடு (௪0௩)
பேர்த்துப் புரட்டிப் பெருஞ்சினத்தான் மாற்றலர்க
ளீர்த்தும் பறிக்கிலதற் கென்செய்வாய் - பேர்த்தெடுக்கக் (௪0௪)
கைபுகுத்துங் காலுட் கருங்குளவி செங்குளவி
யெய்புகுத்தக் கொட்டிடின்மற் றென்செய்வாய் - பொய்புகுத்தும் (௪0௫)
பொன்காவற் பூதமது போயெடுக்கும் போதுமறித்
தென்காவ லென்றான்மற் றென்செய்வாய் - பொன்காவல் (௪0௬)
வீறுங்கா லாணவமாம் வெங்கூளி நின்றலைமே
லேறுங்காண் மற்றதனுக் கென்செய்வாய் - மாறுஞ்சீர் (௪0௭)
உன்னேயம் வேண்டி யுலோப மெனுங்குறும்ப
னின்னே வருவனதற் கென்செய்வாய் - முன்னேதும் (௪0௮)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

785. சேய் - குழந்தை. பயந்த - பெற்ற. 787. துகில் - ஆடை. புனையாவிடில் - அலங்கரியாவிட்டால். மெய் - உடம்பு. 786. இன்னாமை - துன்பம்.

789. கூட்டம் - புணர்ச்சி; எழுமை - ஏழ்வகைப்பிறப்பு; அவை தேவர் மக்கள் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்பன. 790. வித்து - காரணம். தொத்து - தொத்து வியாதி. 797. புணரி - கடல். 800. புரப்பது - காப்பாற்றுவது. வென்றி - வெற்றி.

807. மாற்றலர்கள் - பகைவர்கள் 808. ஈர்த்து - இழுத்து. 809. கைபுகுத்துங்கால் - கை நுழைக்கும்போது. 810. எய்புகுத்த - கடுகடுக்க 813. வெங்கூளி - கொடிய பசாசு.

815. நேயம் - சிநேகம். குறும்பன் - சிற்றரசன்.

இல்லா நமக்குண்டோ வில்லையோ வென்னுநல
மெல்லா மழியுமதற் கென்செய்வாய் - நில்லாமல் (௪௦௯)
ஆய்ந்தோர் சிலநாளி லாயிரம்பேர் பக்கலது
பாய்ந்தோடிப் போவதுநீ பார்த்திலையே - யாய்ந்தோர்சொல் (௪௧௦)
* கூத்தாட் டவைசேர் குழாம்விளிந்தாற் போலுமென்ற
சீர்த்தாட் குறண்மொழியுந் தேர்ந்திலையே - பேர்த்தோடும் (௪௧௧)
நாட்கொல்லி யென்று னடுங்குகின்றாய் நாளறியா
வாட்கொல்லி யென்பரிதை யாய்ந்திலையே - தீழ்க்கொல்லைப் (௪௧௨)
பச்சிலையாற் பொன்னைப் படைப்பாரேன் மற்றதன்மே
லிச்சையுனக் கெவ்வா றிருந்ததுவே - யிச்சையிலார் (௪௧௩)
இட்டமலம் பட்டவிட மெல்லாம்பொன் னாமென்று
விட்டமதை விட்டற் கிசைந்திலையே - முட்டகற்றப் (௪௧௪)
பொன்னடப்ப தன்றியது போனகமே யாதியவா
யென்னடுத்த தொன்றுமிதை யெண்ணிலையே - யிந்நிலத்தில் (௪௧௫)
நீண்மயக்கம் பொன்முன் னிலையா யுலகியலாம்
வீண்மயக்க மென்றதனை விட்டிலையே - நீண்வலயத் (௪௧௬)
திச்செல்வ மின்றி யியலாதேற் சிற்றுயிர்க
ளெச்செல்வங் கொண்டிங் கிருந்தனவே - வெச்சென்ற (௪௧௭)
மண்ணாசை கொண்டனைநீ மண்ணாளு மன்னரெலா
மண்ணா லழிதன் மதித்திலையே - யெண்ணாது (௪௧௮)
மண்கொண்டார் மாண்டார்தம் மாய்ந்தவுடல் வைக்கவயன்
மண்கொண்டார் தம்மிருப்பில் வைத்திலரே - திண்கொண்ட (௪௧௯)
விண்ணேகுங் காலங்கு வேண்டுமென வீண்டுபிடி
மண்ணேனுங் கொண்டேக வல்லாரோ - மண்ணேயம் (௪௨௦)
என்னதென்றான் முன்னொருவ னென்னதென்றான் பின்னொருவ
னின்னதுநீ கேட்டிங் கிருந்திலையே - மன்னுலகிற் (௪௨௧)
கண்காணி யாய்நீயே காணியல்லாய் நீயிருந்த
மண்காணி யென்று மதித்தனையே - கண்காண (௪௨௨)
மண்காணி வேண்டி வருந்துகின்றாய் நீமேலை
விண்காணி வேண்டல் வியப்பன்றே - யெண்காண (௪௨௩)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

821. கூத்தாட்டவை- கூத்தாடுகிறசபை. குழாம் - கூட்டம். விளிந்தாற்போலும் - நீங்கினாற்போலும். 823. நாட்கொல்லி - யமன். 824. ஆட்கொல்லி - பொன். 828. விட்டதற்கு - விடுதற்கு. முட்டு - தடை.

829. போனகம் - சோறு. 831. உலகியல் - உலகநடை, 832. நீண்வலயம்-பெரியபூமண்டலம். 834. வெச்சென்ற - வெப்பமான. 835. மதித்திலை - எண்ணிலை.

843. கண்காணி - மேல்விசாரணைக்காரன்.

*. "கூத்தாட்டவைக்குழாத் தற்றேபெருஞ் செல்வம் - போக்குமது விளிந்தற்று" என்பது குறள் அதாவது ஒருவனிடத்தே பெரிய செல்வம் வருதல் கூத்தாடும் சபையினிடத்தே வருகின்ற கூட்டம் போலவும் அச்செல்வம் போதல் கூத்தாட்டு முடிவில் கூட்டம் போதல்போலவும். ஆதலால் செல்வம் ஒருவரிடத்தும் நிலைபெற்றிராது என்பது.

அந்தரத்தி னின்றுய்நீ யந்தோ நினைவிடமண்
ணந்தரத்தி னின்ற தறிந்திலையே - தந்திரத்தின் (௪௨௪)
மண்கொடுப்பே னென்றுரைக்கில் வைவார் சிறுவர்களு
மண்கொடுக்கி னீதான் மகிழ்ந்தனையே - வண்கொடுக்கும் (௪௨௫)
வீடென்றேன் மற்றதைமண் வீடென்றே நீநினைந்தாய்
வீடென்ற சொற்பொருளை விண்டிலையே - நாடொன்றும் (௪௨௬)
மண்ணான் மரத்தால் வனைகின்ற வீடனைத்துங்
கண்ணாரக் கட்டழிதல் கண்டிலையோ - மண்ணான (௪௨௭)
மேல்வீடு மங்குடைய வேந்தர்களு மேல்வீட்டப்
பால்வீடும் பாழாதல் பார்த்திலையோ - மேல்வீட்டில் (௪௨௮)
ஏறுவினை யென்பா யியமன் கடாமிசைவந்
தேறுவனே யுன்னாசை யென்னாமோ - கூறிடுமிம் (௪௨௯)
மண்ணளித்த வேதியனு மண்விருப்பங் கொள்ளானே
லெண்ணமுனக் கெவ்வா றிருந்ததுவே - மண்ணிடத்தில் (௪௩௰)
ஆகாத் துரும்பிடத்து மாசைவைத்தா யென்னிலுன்ற
னேகாப் பெருங்காம மென்சொல்கேன் - போகாத (௪௩௧)
பாபக் கடற்கோர் படகெடலாம் பாழ்வெகுளிக்
கோபக் கடலிற் குளித்தனையே - தாபமுறச் (௪௩௨)
* செல்லாவிடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீயதென்ற தெண்ணிலையே - மல்லல்பெறத் (௪௩௩)
† தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க வென்றதனைப்
பொன்னைப்போற் போற்றிப் புகழ்ந்திலையே - துன்னி (௪௩௪)
‡ அகழ்வாரைத் தாங்கு நிலம்போல வென்னுந்
திகழ்வாய் மையுநீ தெளியா - யிகழ்வாரை (௪௩௫)

---

☞ அநும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

847. அந்தரம் - ஆகாயம். 853. வனைதல்-செய்தல். 854. கட்டழிதல் - கட்டுக்குலைதல். 859. மண்ணளித்தவேதியன்-பிரமன்; 863. வெகுளி - சினம். 864. குளித்தல் - மூழ்குதல். தாபம் - வெப்பம்.

866. மல்லல் - வளம், 868. துன்னி - நெருங்கி. 869. அகழ்வார் - தோண்டுவோர்.

870. வாய்மை - சொல்.

* "செல்லாவிடத்துச்சினந்தீதுசெல்லிடத்து மில்லதனிற்றீயபிற" என்பது குறள். அதாவது ஒருவனுடைய கோபமானது தன்னின் மேற்பட்ட வலியார்மேல் செலுத்தின் அது தனக்கே தீதாகமுடியும்; எளியார்மேல் செலுத்தின் இம்மையிலே பழியும் மறுமையிலே பாவத்தையும் தரும். ஆதலால் கோபம் வலியவர் எளியவர் யாவரிடத்தும் ஆகாது என்பது.

‡ "தன்னைத்தான்காக்கிற் சினங்காக்ககாவாக்காற்-றன்னையேகொல்லுஞ்சினம்" என்பது குறள். அதாவது தன்னைத்தான் துன்பம் அடையாமல் காக்க ஒருவன் நினைத்தானாகில் தன் மனதிலே கோபம்வராமல் காக்கவேண்டும். அவ்வாறு காவானாயின் அந்தக் கோபமானது தன்னையேகெடுக்கும். ஆதலால் கோபத்தை நீக்கவேண்டும் என்பது.

† "அகழ்வாரைத்தாங்கு நிலம்போலத்தம்மை யிகழ்வார்ப்பொறுத்தறலை" என்பது குறள். அதாவது தன்னை வெட்டுவோரைக் கீழேவிழாமல் சுமப்பதாகிய நிலம்போலத் தமக்குத் தீங்குசெய்வோரைப் பொறுத்தல் முதன்மையான அறம். ஆதலால் பொறுமைவேண்டுவது அவசியம் என்பது.

எவ்வண்ண நம்மை யிகழ்வா ரறிவோமென்
றிவ்வண்ண மென்னைவெளி யிட்டனையே - தெவ்வென்ன (௪௩௬)
ஓரா வெகுளி யுடையான் றவமடையான்
றீராவென் பாரதுவுந் தேர்ந்திலையே - பேராகின் (௪௩௭)
வெவ்வினைக்கீ டாகவரன் வெம்மைபுரி வானென்று
லிவ்வெகுளி யார்மாட் டிருத்துவதே - செவ்வையிலாய் (௪௩௮)
ஏய்ந்தனையன் போரிடத்தி லின்னமை செய்தவரைக்
காய்ந்தனை மற் றென்னபலன் கண்டனையே - வாய்ந்தறிவோர் (௪௩௯)
எல்லா நலமு மிஃதேயென் றேத்துகின்ற
கொல்லா நலஞ்சிறிதுங் கொண்டிலையே - பொல்லாத (௪௪௦)
வன்போ டிருக்கு மதியிலி நீ மன்னுயிர்க்க
ணன்போ டிரக்க மடைந்திலையே - யின்போங்கு (௪௪௧)
தூய்மையென்ப தெல்லாந் துணையா யணைவதுதான்
வாய்மையென்ப தொன்றே மதித்திலையே - தூய்மையிலாய் (௪௪௨)
மானொருகை யேந்திநின்ற வள்ளலன்பர் தங்களுளே
நானொருவ னென்று நடித்தனையே - யானமற்றைப் (௪௪௩)
பாதகங்க ளெல்லாம் பழகிப் பழகியதிற்
சாதகஞ்செய் வோரிற் றலைநின்றாய் - பாதகத்தில் (௪௪௪)
ஓயா விகார வுணர்ச்சியினா லிவ்வுலக
மாயா விகார மகிழ்ந்தனையே - சாயாது (௪௪௫)
நீயிளமை மெய்யாய் நினைந்தாய் நினைப்பெற்ற
தாயிளமை யெத்தனைநாட் டங்கியதே - யாயிளமை (௪௪௬)
மெய்கொடுத்த தென்பாய் விருத்தர்கட்கு நின்போல்வார்
கைகொடுத்துப் போவதனைக் கண்டிலையே மெய்கொடுத்த (௪௪௭)
கூனொடுங்கைக் கோலூன்றிக் குந்தி நடைதளர்ந்து
கானடுங்க நிற்பவரைக் கண்டிலையோ - வூனொடுங்க (௪௪௮)
ஐயநட வென்றே யரும்புதல்வர் முன்செலப்பின்
பைய நடப்பவரைப் பார்த்திலையோ - வெய்யநமன் (௪௪௯)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

872. தெவ் - பகைவன். 873. ஓராவெகுளி - ஆராயப்படாத கோபம். 875. வெவ்வினை - கொடியபாபம், ஈடாக - தகுதியாக, வெம்மைபுரிவான் - தண்டிப்பான். 876. யார்மாட்டு - எவரிடத்தில்

877. ஏய்ந்தனை - பொருந்தினாய், அன்போரிடத்தில் - அன்பினரிடத்தில், இன்னமை - துன்பம். 878. காய்ந்தனை - கோபித்தாய்.

880. கொல்லா நலம்-ஒருயிரையும் கொல்லாமையாலுண்டாகும் புண்ணியம்.

882. இன்பு ஓங்கு - இன்பம் மிகுகின்ற. 883. தூய்மை - பரிசுத்தம். 884. வாய்மை - உண்மை. 885. மான்ஒருகை ஏந்திநின்றவள்ளல் அன்பர் தங்களுள்ளே - மானையொருகையில் தாங்கிநின்ற பரமோதாரனாகிய சிவபெருமானது அன்பர்களுக்குள்ளே (சிவனடியார்களுள்ளே). 887. பாதகம் - பாபம். 888 சாதகஞ்செய்வோர் - பழகுவோர்.

888. தலைநின்றாய் - முதல்வனாகின்றாய் 893. விருத்தர் - கிழவர். 896. ஊன்-சரீரம். 897. ஐய - அப்பா, 898. வெய்யநமன்நாடு - எமலோகம்.

நாடழைக்கச் சேனநரி நாயழைக்க நாறுசுடு
காடழைக்க மூத்துநின்றோர்க் கண்டிலையோ - பீடடைந்த (௪௯௦)
மெய்யுலர்ந்து நீரின் விழியுலர்ந்து வாயுலர்ந்து
கையுலர்ந்து நிற்பவரைக் கண்டிலையோ - மெய்யுலர்ந்துஞ் (௪௯௧)
சாகான் கிழவன் றளர்கின்றா னென்றிவணீ
யோகாளஞ் செய்தவனை யோர்ந்திலையோ - வாகாத (௪௯௨)
கண்டமிது பொல்லாக் கடுநோ யெனுங்குமர
கண்டமிஃ தென்பவரைக் கண்டிலையோ - கொண்டவுடல் (௪௯௩)
குட்டமுறக் கைகால் குறுக்குமிது பொல்லாத
குட்டமென நோவார் குறித்திலையோ - துட்டவினை (௪௯௪)
மாலையினுங் காலையினு மத்தியினுங் குத்தமிடு
சூலையென நோவாரைச் சூழ்ந்திலையோ - சாலவுமித் (௪௯௫)
தேக மதுநலியச் செய்யுங்கா ணுய்வரிதா
மேகமிஃ தென்பாரை மேவிலையோ - தாகமுறச் (௪௯௬)
சித்தநோய் பெய்கின்ற சீதநோய் வாதமொடு
பித்தநோய் கொண்டவர்பாற் பேர்ந்திலையோ - மெத்தரிய (௪௯௭)
கைப்பிணியுங் காற்பிணியுங் கட்பிணியோ டெண்ணரிய
மெய்ப்பிணியுங் கொண்டவரை விண்டிலையோ - வெய்ப்புடைய (௪௯௮)
முட்டூறுங் கைகான் முடங்கன் முதலாய
வெட்டூறுங் கொண்டவரை யெண்ணிலையோ - தட்டூறிங் (௪௯௯)
கெண்ணற்ற துண்டே லிளமை யொருபொருளா
யெண்ணப் படுமோவென் றெண்ணிலையே - யெண்ணத்திற் (௫௦௦)
பொய்யென் றறவோர் புலம்புறவு மிவ்வுடம்பை
மெய்யென்று பொய்ம்மயக்க மேவினையே - கைநின்று (௫௦௧)
கூகா வெனமடவார் கூடி யழல்கண்டு
நீகாதல் வைத்து நிகழ்ந்தனையே - மாகாதல் (௫௦௨)
பெண்டிருந்து மாழ்கப் பிணங்கொண்டு செல்வாரைக்
கண்டிருந்து மந்தோ கலங்கிலையே - பண்டிருந்த (௫௦௩)
ஊரார் பிணத்தி னுடன்சென்று நாமீண்டு
நீராடல் சற்று நினைந்திலையே - சீராக (௫௦௪)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

899. சேனம் - பருந்து. 900. பீடு - பெருமை. 904. ஓகாளஞ்செய்தவனை - அருவருத்தவனை. 905. கண்டம் - ஆபத்து (தத்து). 906. குமரகண்டம்-ஓர்நோய். 907. குட்டம்-குறுக்கம். 908. குட்டம் - தொழுநோய் (குஷ்டம்).

909. மத்தியினும் - மத்தியானகாலத்திலும். 910. சூலை - ஓர்நோய். 912. மேகம் - ஓர்நோய். 913. சித்தநோய் - குலைநோய்.

915. கைப்பிணி - கைநோவு. காற்பிணி - கால்நோவு கட்பிணி - நேத்திரரோகம் (கண்ணோவு). 916. எய்ப்புடைய - இளைத்தலையுடைய 917. முட்டூறும் - முட்டுண்டகாயமும்;
918. வெட்டூறும் - வெட்டுப்பட்டகாயமும். தட்டூறு - நேர்கின்றதுன்பம்.

921. அறவோர் - துறவினர். 922. கைநின்று - வரிசையாகநின்று. 924. மாகாதல் - பெரிய ஆசை. 925. பெண்டு - மனைவி. மாழ்க - மயங்க.

இன்றிருந்தார் நாளைக் கிருப்பதுபொய் யென்றறவோர்
நன்றிருந்த வார்த்தையுநீ நாடிலையே - யொன்றி (சசுரு)
* உறங்குவது போலுமென்ற வொண்குறளின் வாய்மை
மறங்கருதி யந்தோ மறந்தாய் - கறங்கின் (சசுசு)
† நெருந லுளனொருவ னென்னு நெடுஞ்சொன்
மருவுங் குறட்பா மறந்தாய் - தெருவில் (சசுஎ)
இறந்தார் பிறந்தா ரிறந்தா ரெனுஞ்சொன்
மறந்தாய் மறந்தாய் மறந்தா - யிறந்தார் (சசுஅ)
பறையோசை யண்டம் படீரென் றொலிக்க
மறையோசை யன்றே மறந்தா - யிறையோன் (சசுகூ)
புலனைந்து மென்றருளும் பொன்மொழியை மாயா
மலமொன்றி யந்தோ மறந்தாய் - நிலனொன்றி (சஎ0)
விக்கு ளெழநீர் விடுமினென வயலோர்
நெக்குருக லந்தோ நினைந்திலையே - மிக்கனலில் (சஎக)
நெய்விடல்போ லுற்றவர்கண் ணீர்விட் டழவுயிர்பன்
மெய்விடலுங் கண்டனைநீ விண்டிலையே - செய்வினையின் (சஎஉ)
வாள்கழியச் செங்கதிரோன் வான்கழிய நம்முடைய
நாள்கழிதற் கந்தோ நடுங்கிலையே - கோள்கழியும் (சஎஙு)
நாழிகையோர் நாளாக நாடினையே நாளையொரு
நாழிகையா யெண்ணி நலிந்திலையே - நாழிகைமுன் (சஎச)
நின்றா ரிருந்தார் நிலைகுலைய வீழ்ந்துயிர்தான்
சென்றா ரெனக்கேட்டுந் தேர்ந்திலையே - பின்றாது (சஎரு)

---

☞ அநுபத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

931. குறளின்வாய்மை - திருக்குறளின்வாக்கியம். 932. மறம் - பாவம். கறங்கின் - காற்றாடிபோல். 933. நெருநல் - நேற்று. 934. குறட்பா - திருக்குறளின்பாடல்.

937. பறையோசை - பிணப்பறையின் ஒலி. அண்டம் - ஆகாயம். 939. புலனைந்தும் - சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் ஐந்துவிடயங்கள். பொன்மொழி-திருவார்த்தை.

940. மாயாமலம் ஒன்றி - மாயாமலத்திற்பொருந்தி. 941. விக்குள் - விக்கல். நீர்விடுமின்-நீர்வாருங்கள். அயலோர் - பக்கத்திலிருப்போர். 942. நெக்குருகல் - மனம்நெகிழ்ந்து இரங்குதல்.

943. பன் - சொல்லப்பட்ட. 944. மெய்விடலும்-சரீரத்தைவிட்டு நீங்குதலையும். விண்டிலை - சொன்னாயில்லை. செய்வினையின் - செய்யப்பட்டகருமங்களின்.

945. வாள் - ஒளி. செங்கதிரோன் - சிவந்தகிரணங்களையுடையவன் (சூரியன்). வான் - ஆகாயம். 946. நாள் - ஆயுள். கோள் - துன்பம். 948. நலிந்திலை - வருந்தினாயில்லை.
950. பின்றாது - பின்னிடாமல்.

* "உறங்குவதுபோலும் சாக்காடுறங்கி - விழிப்பதுபோலும்பிறப்பு" என்பது குறள். அதாவது ஒருவனுக்கு மரணம்வருதல் தூக்கம்வருதல்போலும்; அதன்பின்னே பிறப்புவருதல் தூங்கி விழிப்பதுபோலும். ஆதலால் தோற்றமுடையவையெல்லாம் நிலைபெறாத தன்மையவாம் என்பது.

† "நெருநலுளனொருவனின்றில்லையென்னும்-பெருமையுடைத்திவ்வுலகு" என்பது குறள். அதாவது இந்த உலகம் ஒருவன் நேற்றைக்குப் பிறந்திருந்தான் அவனே இன்றைக்கு இறந்துபோயினானென்று சொல்லும் நிலையாமையையுடையது என்பது.

தொட்டா ருணவுடனே தும்மினா ரம்மவுயிர
விட்டா ரெனக்கேட்டும் வெட்கிலையே - தட்டாமல் (சஎசு)
உண்டார் படுத்தா ருறங்கினார் பேருறக்கங்
கொண்டா ரெனக்கேட்டுங் கூசிலையே - வண்டாரார் (சஎஎ)
நேற்று மணம்புரிந்தார் நீறானா ரின்றென்று
சாற்றுவது கேட்டுந் தணந்திலையே - வீற்றுறுதேர் (சஎஅ)
ஊர்ந்தார் தெருவி லுலாப்போந்தார் வானுலகஞ்
சேர்ந்தா ரெனக்கேட்டுந் தேர்ந்திலையே - சேர்ந்தாங்கு (சஎகூ)
என்னே யிருந்தா ரிருமினா ரீண்டிறந்தா
ரன்னே யெனக்கேட்டு மாய்ந்திலையே - கொன்னே (சஅ0)
மருவுங் கருப்பைக்குள் வாய்ந்தே முதிராக்
கருவும் பிதிர்ந்துதிரக் கண்டாய் - கருவொன் (சஅக)
றொடுந்திங்க ளையைந்தி லொவ்வொன்றி லந்தோ
கெடுகின்ற தென்றதுவுங் கேட்டாய் - படுமிந் (சஅஉ)
நிலைமுற்ற யோனி நெருக்கி லுயிர்போய்ப்
பலனற்று வீழ்ந்ததுவும் பார்த்தாய் - பலனுற்றே (சஅங)
காவென்று வீழ்ந்தக் கணமே பிணமாகக்
கோவென் றழுவார் குறித்திலையோ - நோவின்றிப் (சஅச)
பாலனென்றே யன்னைமுலைப் பாலருந்துங் காலையிலே
கால னுயிர்குடிக்கக் கண்டிலையோ - மேலுவந்து (சஅரு)
பெற்றார் மகிழ்வெய்தப் பேசி விளையாடுங்கா
லற்றாவி போவ தறிந்திலையோ - கற்றாயப் (சஅசு)
பள்ளியிடுங் காலவனைப் பார நமன்வாயி
லள்ளியிடுந் தீமை யறிந்திலையோ - பள்ளியிடுங் (சஅஎ)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

951. தொட்டார் உண்ண - தொட்டு உண்ண.

952. தட்டாமல் - தடைபடாமல். 954. பேருறக்கம்கொண்டார்-பெருந்தூக்கம்கொண்டார் (இறந்தார்) வண்தாரார் - வளமான பூமாலைகளையணிந்தவர்.

955. மணம்புரிந்தார் - விவாகஞ்செய்தார். நீறு ஆனார் - சாம்பலானார். 956. சாற்றுவது-சொல்லுவதை. தணந்திலை - நீங்கினாயில்லை. வீற்றுறுதேர் - பெருமைபொருந்தியதேரை

957. ஊர்ந்தார் - நடத்தினவர். உலாப்போந்தார் - உலா வந்தவர். வான்உலகம்-விண்ணுலகத்தை. 958 தேர்ந்திலை - தெளிந்தாயில்லை. சேர்ந்து ஆங்கு - சேர்ந்து அவ்விடத்தில்.

961. கருப்பை - கருப்பமாகியபை (கருப்பாசயப்பை). வாய்ந்து - பொருந்தி. முதிராக் கரு-முதிராதகருப்பம். 962. பிதிர்ந்து உதிர-சிதைந்துவெளிப்பட. கருவொன்றொடு - கருப்பமானது ஒருமாசமுதல்.

963. திங்கள் ஐயைந்தில் - மாசம்பத்தில் (பத்துமாசங்களில்); ஒவ்வொன்றில்-ஒவ்வொருமாசத்திலும். 964. படும் இந்நிலைமுற்ற - துன்பப்படுகின்ற இந்த நிலையானதுமுடிய.

965. யோனிநெருக்கில் - யோனித்துவாரநெருக்கத்தால் 968. குறித்திலை - நினைத்தாயில்லை. 969. முலைப்பாலருந்துங்காலையிலே - முலைப்பாலுண்ணுங்காலத்தில்.

972. அற்று ஆவிபோவது - நீங்கி உயிர்போவதை (உயிர்நீங்கிப்போவதை); கற்று ஆய - நூல்களைக்கற்று ஆராயும்பொருட்டு

973. பள்ளியிடுங்கால் - பள்ளிக்கூடத்தில் வைக்குங்காலத்தில். பார நமன் - பெரிய எமன், 974. வாயில் அள்ளியிடுந்தீமை - வாயில்வாரிபோட்டுக்கொள்ளுகிறதீமையை.

காளைப் பருவமதிற் கண்டா ரிரங்கிடவவ்
வாளைச் சமன்கொள்வ தாய்ந்திலையோ - வேளைமண (௪௮௮)
மாப்பிள்ளை யாகி மணமுடிக்கு மன்றவனை
சாப்பிள்ளை யாதலெண்ணிச் சார்ந்திலையே - மேற்பிள்ளை (௪௮௯)
மாடைமேற் பெண்டுடனில் வாழுங்காற் புற்பலர்தாம்
பாடைமேற் சேர்தலினைப் பார்த்திலையோ - வீடலிஃ (௪௯௦)
திக்கணமோ மேல்வந் திடுங்கணமோ வன்றிமற்றை
யெக்கணமோ வென்றார்நீ யெண்ணிலையே - தொக்குறுதோற் (௪௯௧)
கூடென்கோ விவ்வுடம்பைக் கோள்வினைநீ ரோட்டில்விட்ட
வேடென்கோ நீர்மே லெழுத்தென்கோ - காடென்கோ (௪௯௨)
பாழென்கோ வொன்பதுவாய்ப் பாவையென்கோ வன்பிறவி
யேழென்கோ கன்மமதற் கீடென்கோ - தாழ்மண்ணிற் (௪௯௩)
பாண்டமென்கோ வெஞ்சரக்குப் பையென்கோ பாழ்ங்கரும
காண்டமென்கோ வாணவத்தின் கட்டென்கோ - கோண்டகையர் (௪௯௪)
மெய்யென்கோ மாய வினைவென்கோ மின்னென்கோ
பொய்யென்கோ மாயப் பொடியென்கோ - மெய்யென்ற (௪௯௫)
மங்கலத்தை மங்கலத்தால் வாஞ்சித் தனருலக
ரங்கவற்றை யெண்ணு தலைந்தனையே - தங்குலகின் (௪௯௬)
மற்றிதனை யோம்பி வளர்க்க வுழன்றனைநீ
கற்றதனை யெங்கே கவிழ்த்தனையே - யற்றவரை (௪௯௭)
இக்கட் டவிழ்த்திங் கெரிமூட் டெனக்கேட்டும்
முக்கட்டுந் தேட முயன்றனையே - யிக்கட்டு (௪௯௮)
மண்பட்டு வெந்தீ மரம்பட் டிடக்கண்டும்
வெண்பட் டுடுக்க விரைந்தனையே - பண்பட்ட (௪௯௯)
ஐயா வரைநா ணவிழுமெனக் கேட்டுநின்று
மெய்யா பரணத்தின் மேவினையே - யெய்யாமல் (௫௦௦)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

976. அவ்வாளை - அந்தஆளை (அந்தமனிதனை). சமன் - யமன். காளைப்பருவம் - யவ்வன பருவம். வேள்ஐ - மன்மதன்போன்ற அழகினையுடைய.

977. மணமாப்பிள்ளை - மணஞ்செய்வதற்குரிய மாப்பிள்ளை. மணமுடிக்கும் அன்று - விவாகமுடிக்குமன்றைக்கு. 978. சாப்பிள்ளையாதல் - செத்தபிள்ளையாதலை.

979. மேற்பிள்ளைமாடைமேல் - மேலாகிய சிறுமாடத்தின்மீது, பெண்டுடன் - மனையாளோடு. 980. பாடை - சவாசனம். (பிணத்துக்குரிய ஆசனம்). சேர்தலினை - சேர்வதை. வீடல் இஃது - உயிர்விடுதலாகிய இந்தச்செய்தி.

982. தோற்கூடு - தோலாற்செய்த பை. 983. கோள்வினை - துன்பஞ்செய்கின்றவினை. நீரோட்டில் - நீரோட்டத்தில். 985. ஒன்பதுவாய்ப்பாவை - நவத்துவாரங்களையுடையபிரதிமை.

986. மண்ணிற்பாண்டம் - மண்ணினாற்செய்தபாண்டம். மாயப்பொடி - சொக்குப்பொடி. 991. மங்கலத்தை - மங்கலவழக்குச்சொல்லை. வாஞ்சித்தனர் - விரும்பினார், உலகர் - உலகத்தார். 993. ஓம்பி - காப்பாற்றி. 994. அற்றவரை - இறந்தவரை.

995. இக்கட்டவிழ்த்து - இந்தக்கட்டினையவிழ்த்து. எரிமூட்டு - தீமூட்டு. 996. முக்கட்டு - மூன்றுகட்டு. (தலைப்பாகை, உத்தரீயம் (அங்கவஸ்திரம்), அரையிலுடுக்கும் ஆடை). இக்கட்டு - இந்த மூன்றுகட்டுகளும். 998. மண்பட்டு - மண்ணுண்டு, 999. அரைநாண விழும் - அரைநாண்கயிற்றை அவிழுங்கள். 1000. எய்யாமல் - இளைக்காமல்.

காதிற் கடுக்கன் கழற்றுமெனக் கேட்டுநின்று
மேதிற் பணியினிடத் தெய்தினையே - தாதிற்குத் (௫0க)
துற்கந்த மாகச் சுடுங்கான் முகர்ந்திருந்தும்
நற்கந்தத் தின்பா நடந்தனையே - புற்கென்ற (௫0உ)
வன்சுவைத்தீ நாற்ற மலமாய் வரல்கண்டு
மின்சுவைப்பா லெய்தி யிருந்தனையே - முன்சுவைத்துப் (௫0ங)
பாறுண்ட காட்டிற் பலர்வெந் திடக்கண்டுஞ்
சோறுண் டிருக்கத் துணிந்தனையே - மாறுண்டு (௫0ச)
கூம்புலகம் பொய்யெனநான் கூவுகின்றேன் கேட்டமிகு
சோம்பலுடன் றூக்கந் தொடர்ந்தனையே - யாம்பலனோர் (௫0௫)
நல்வாழ்வை யெண்ணி நயந்தோர் நயவாத
வில்வாழ்வை மெய்யென் றிருந்தனையே - சொல்லாவி (௫0சு)
ஈன்றோன் றனைநாளு மெண்ணுமை லிவ்வுடம்பை
யீன்றோரை யீன்றோரென் றெண்ணினையே - யீன்றோர்கள் (௫0எ)
நொந்தா லுடனின்று நோவார் வினைப்பகைதான்
வந்தா லதுநீக்க வல்லாரோ - வந்தாடல் (௫0அ)
உற்றசிறூர் நம்மடையா தோட்டுகிற்பார் தென்றிசைவாழ்
மற்றவன்வந் தாற்றடுக்க வல்லாரோ - சிற்றுணவை (௫0கூ)
ஈங்கென்றால் வாங்கி யிடுவா ரருளமுதம்
வாங்கென்றால் வாங்கியிட வல்லாரோ - தீங்ககற்றத் (௫க0)
தூண்டா மனையாதிச் சுற்றமெலாஞ் சுற்றியிட
நீண்டா யவர்நன் னெறித்துணையோ - மாண்டாற்பின் (௫கக)
கூடி யழத்துணையாய்க் கூடுவார் வன்னரகில்
வாடியழும் போது வருவாரோ - நீடியநீ (௫கஉ)
இச்சீவர் தன்றுணையோ வீங்கிவர்க ணின்றுணையோ
சிச்சீ யிதென்ன திறங்கண்டா - யிச்சீவர் (௫கங)
நின்னைவைத்து முன்சென்று னீசெய்வ தென்னவர்முன்
னின்னிலத்தி னீசென்று லென்செய்வர் - நின்னியல்பின் (௫கச)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1002. மேதில்பணி - அயலாகிய ஆபரணம். தாதிற்கு - நாசிக்கு.

1003. துர்க்கந்தம் - கெட்டவாசனை. சுடுங்கால் - சுடுகிறகாலத்தில். முகர்ந்திருந்தும் - மோந்திருந்தும். 1004, நற்கந்தம் - நல்லவாசனை. புற்கென்ற - தாழ்வான.

1005. வன்சுவைதீநாற்றம் - கெட்டசுவையும் வெடிநாற்றமுமமைந்த.

1007. பாறுஉண்டகாட்டில் - பருந்துகளுண்ட சுடுகாட்டில். 1008. மாறுண்டு - மாறுபட்டு. 1009. கூம்புலகம் - குவிகின்றஉலகம். (அழிகின்றவுலகம்)

1011. நல்வாழ்வையெண்ணி - நன்மையாகிய பேரின்பவாழ்க்கையை நினைத்து.

1011. நயந்தோர் - விரும்பினவராகிய ஞானியர், நயவாத - விரும்பாத. 1012 சொல் ஆவி ஈன்றோன்தனை - சொல்லப்பட்ட உயிர்களைப்படைத்தவனாகிய கடவுளை.

1013. இவ்வுடம்பை ஈன்றோரை - இவ்வுடம்பைப்பெற்றவர்களை. (தாய்தந்தையரை).

1016. வந்து ஆடல் உற்றசிறூர் - வந்துவிளையாடுதலைப்பொருந்தின சிறுவர்கள்.

1017. நம் அடையாது - நம்மைச்சேராமல். தென்றிசைவாழ்மன்றவன் - தென்றிசையில் வாழ்கின்றயமன்.

எத்தனைதா யெத்தனைபே ரெத்தனையூ ரெத்தனைவாழ்
வெத்தனையோ தேக மெடுத்தனையே - யத்தனைக்கும் (௫௪௫)
அவ்வவ் விடங்கடொறு மவ்வவரை யாண்டாண்டிங்
கெவ்வெவ் விதத்தா லிழந்தனையோ - வவ்விதத்தில் (௫௪௬)
ஒன்றேனு நன்று யுணர்ந்திருத்தி யேயிவரை
யின்றே துறத்தற் கிசையாயோ - நின்றோரில் (௫௪௭)
தாயார் மனையார் தனயரார் தம்மவரார்
நீயா ரிதனை நினைந்திலையே - சேயேநில் (௫௪௮)
எங்குவரே யென்று யியமன்வரி னின்னுயிரை
வாங்கிமுடி யிட்டகத்தில் வைப்பாரோ - நீங்கியிவன் (௫௪௯)
உன்றந்தை தன்றனக்கிங் கோர்தந்தை நாடுவனீ
யென்றந்தை யென்றுரைப்ப தெவ்வாறே - சென்றபின்னின் (௫௫௦)
தனமனையாண் மற்றொருவன் றன்மனையா ளாவளெனி
லென்மனையா ளென்பதுநீ யெவ்வணமே - நன்மைபெறு (௫௫௧)
நட்பமைந்த நன்னெறிநீ நாடா வகைதடுக்கு
முட்பகைவ ரென்றிவரை யோர்ந்திலையே - நட்புடையாய் (௫௫௨)
எம்மான் படைத்தவுயி ரித்தனைக்குட் சில்லுயிர்பா
லிம்மா லடைந்ததுநீ யென்னினைந்தோ - வம்மாறில் (௫௫௩)
எம்பந்த மேநினைக்கிங் கில்லையென்றான் மற்றையவர்
தம்பந்த மெவ்வாறு தங்கியதே - சம்பந்தர் (௫௫௪)
அற்றவருக் கற்றசிவ னுமெனுமப் பொன்மொழியை
மற்றைமொழி போன்று மறந்தனையே - சிற்றுயிர்க்குக் (௫௫௫)
கற்பனையிற் காய்ப்புளதாய்க் காட்டும் பிரபஞ்சக்
கற்பனையை மெய்யென்று கண்டனையே - பற்பலவாந் (௫௫௬)
தூரியத்திற் றோன்றொலிபோற் றோன்றிக் கெடுமாயா
காரியத்தை மெய்யெனநீ கண்டனையே - சீரியற்றும் (௫௫௭)
ஆடகத்திற் பித்தளையை யாவித் திடுங்கபட
நாடகத்தை மெய்யென்று நம்பினையே - நீடகத்திற் (௫௫௮)
காயவித்தை யாலக் கடவு ளியற்றுமிந்த
மாயவித்தை மெய்யெனநீ வாழ்ந்தனையே - வாயவித்தை (௫௫௯)

---

☞ அநம்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1034. துறத்தற்கு - விடுதற்கு. 1035. தனயர் — புத்திரர். தம்மவர் - உறவினர்.

1036. சேய் - பிள்ளை. 1037. ஏங்குவர் - அழுவார். 1038. முடியிட்டு - முடிபோட்டு, (முடிந்து); அகத்தில்வைப்பாரோ - வீட்டில் வைப்பார்களோ.

1044. உட்பகைவர்-மனத்திற்பகையுடையார்; அன்றி உள்ளேயிருந்துகொண்டு கெடுதி செய்பவர். நட்பு உடைபாய் - சிநேகமுடையவனே. 1045. சில்லுயிர்பால் - சிலஉயிர்களிடத்து, 1046 இம்மால் - இந்தமயக்கத்தை (மால்-ஆசையெனினுமாம்), அம்மாறுஇல் - அழகு நீங்குதலில்லாத. 1047. எம்பந்தம் - எமதுபாசம். 1048. அவர்தம்பந்தம் - அவர்களுடைய பாசம். 1049. பொன்மொழி - திருவாக்கு. 1057. கற்பனை - பொய்.

1053. தூரியத்தில் - வாத்தியத்தில். மாயாகாரியம் - மாயையினாலாகிய பிரபஞ்சம்.

1055. ஆடகத்தில் - பொன்னினிடத்தில். (ஆடகம் - பொன்), ஆவித்திடும் - ஆரோபித்துக்காட்டுகின்ற.

இப்படக மாயை யிருட்டமமே யென்னுமொரு
முப்படகத் துள்ளே முயங்கினையே - யொப்பிறைவன் (ருடO)
ஆனவொளி யிற்பரையா மாதபத்தி னுற்றோன்றுங்
கானலினை நீராய்க் களித்தனையே - யானகிரி (ருடக)
யாசத்தி யென்றிடுமோ ரம்மைவிளை யாட்டெனுமிப்
பாசத்தி னுள்ளே படர்ந்தனையே - நேசத்திற் (ருடஉ)
பொய்யென்றுண் மெய்யிற் புரும்பால லீலைதனை
மெய்யென்று வீணில் விரிந்தனையே - பொய்யென்று (ருடங)
மீட்டுநின்ற லீலா விநோத மெனுங்கதையைக்
கேட்டுநின்று மந்தோ கிளர்ந்தனையே - யீட்டிநின்ற (ருடச)
காலத்தை வீணிற் கழிக்கும் படிமேக
சாலத்தை மெய்யாய்த் தருக்கினையே - சாலத்திற் (ருடரு)
கண்மையகன் றோங்குமந்த காரத்திற் செம்மாப்புற்
றுண்மையொன்றுங் காணா துழன்றனையே - வண்மையிலாய் (ருடசு)
இங்குநினைப் பெரியோ ரென்னினைப்பா ரேமாப்பிற்
கங்குலினைப் பகலாய்க் கண்டனையே - தங்குறுமித் (ருடஎ)
தேகாதி பொய்யெனவே தேர்ந்தா ருரைக்கவுநீ
மோகாதிக் குள்ளே முயல்கின்றாய் - யோகோ நுங் (ருடஅ)
கோமுடிக்கட் டிப்பற்றிக் கொண்டதென்றான் மற்றதற்குப்
பூமுடிக்கத் தேடுகின்றோர் போன்றனையே - மாமுடிக்கும் (ருடகூ)
வாழ்வுநிலை யன்றிமைப்பின் மாறுகின்ற தென்றுரைத்தும்
வீழ்வுகொடு வாளா விழுகின்றாய் - தாழ்வுறநும் (ருசO)
விண்டுறுங்கை வீடனலால் வேகின்ற தென்னவுட்போ
யுண்டுறங்கு கின்றோரை யொத்தனையே - தொண்டுலகங் (ருசக)
கானமுயற் கொம்பாய்க் கழிகின்ற தென்கின்றே
னீநயமுற் றந்தோ நிகழ்கின்றாய் - யானநும்மூர் (ருசஉ)

---

அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1065. கபடநாடகத்தை - வஞ்சகமாகிய நடனத்தை. நீடு அகத்திற்கு ஆயவித்தையாய்-பெரிதாகிய தன் திருவுளத்தில் சங்கற்பித்த சங்கற்பத்தால்.

1058. வாய் அவித்தை - பொருந்தின அஞ்ஞானம். 1059. இப்படகம் - இந்த கலகரூபமாகிய. இருள் தமம் - மிக்கவிருள். 1060. முப்படகம் - மூன்றுமறைப்பு; அவை மான், ஆங்காரம், மூலப்பகுதி. 1061. ஒளியில் - சூரியனில் தோன்றுகின்ற பரை ஆம் ஆதபத்தினால் - பராசத்தியாகிய கிரணத்தினால்; (ஆதபம் - வெயில்).

1062. கானல் - கானலினை (கானல்ஜலத்தை). 1063. கிரியாசத்தி - ஓர்சத்திவிசேடம்; (எல்லாம்செய்யவல்லசத்தி) 1065. பால லீலை - இளமைப்பருவத்து விளையாட்டு.

1068. ஈட்டி - சம்பாதித்து. 1069. மேகசாலம் - மேகக்கூட்டம்.
1071. செம்மாப்பு - இறுமாப்பு. 1073. ஏமாப்பு - இறுமாப்பு.

1075.தேகாதி உடம்புமுதலியன. அவை தனுகரணபுவனபோகங்கள். 1076. மோகாதி-மோகமுதலியன; அவை:—காம, குரோத, லோப, மத, மாற்சரியங்கள்.

1077. கோமுடி - சிறந்தமுடி. மாமுடிக்கும் - திருமகள் கொடுக்கின்ற.

1079. வாழ்வு - செல்வம். இமைப்பில் - நொடிப்பொழுதில். 1080 வீழ்வு - விருப்பம். வாளா - சும்மா. 1081. விண்டு உறும்கைவீடு-மூங்கில்களால் செய்யப்பட்டகையமைந்தவீடு;

வெள்ளத்தி னுண்முழுகி விட்டதென்றுற் சென்றுகடை
கொள்ளத் திரிபவர்போற் கூடினையே - கொள்ளவிங்கு (௫௪௩)
கண்டனவெல் லாநிலையாக் கைதவமென் கின்றேனீ
கொண்டவைமுற் சேரக் குறிக்கின்று - யுண்டழிக்க (௫௪௪)
ஊழிவெள்ளம் வந்ததென்று லுண்பதற்கு மாடுதற்கு
மூழிநன்னீ ரோவென்பா ரொத்தனையே - யேழியற்றுந் (௫௪௫)
தற்புவனம் போகந் தனுகரண மென்கின்ற
சொற்பனத்தி லந்தோ துவன்றினையே - பற்பகலும் (௫௪௬)
உண்டனவே யுண்கின்று யோர்ந்தனவே யோர்கின்றாய்
கண்டனவே கண்டு களிக்கின்றாய் - கொண்டனவே (௫௪௭)
கொண்டியங்கு கின்றாய் குறித்தனவே பிற்குறித்துப்
பண்டறியார் போலப் படர்கின்றாய் - பண்டறிந்து (௫௪௮)
சொல்லாடி நின்றனவே சொல்கின்றாய் மற்றிதனை
நல்லோர்கள் கண்டா னகையாரோ - செல்லான (௫௪௯)
காலம்போ லிங்குநிகழ் காலமுங்காண் கின்றியெதிர்
காலமற்று மத்திரமேற் காண்குவையோ-சாலவுமுன் (௫௫௦)
போதுசெலா முன்னமனு பூதியைநீ நாடாமல்
யாதுபய னெண்ணி யினைகின்றாய் - தீதுசெயும் (௫௫௧)
வீணவத்தை யெல்லாம் விளைக்குந் திறன்மூல
வாணவத்தி னாலே யழிந்தனையே - யாணவத்தில் (௫௫௨)
நீயா ரெனவறியாய் நின்னெதிரி னின்றவரை
நீயா ரெனவினவி நீண்டனையே - யோயாமல் (௫௫௩)
ஊனின்ற வொன்றி னுளவறியா யந்தோநீ
நானென்று சொல்லி நலிந்தனையே - நானென்று (௫௫௪)
சொல்லுதியோ சொல்லாயோ துவ்வாமை பெற்றொருநீ
யல்லலுறுங் காலத் தறைகண்டா - யல்லவெல்லாம் (௫௫௫)
நீயிங்கே நானங்கே நிற்கநடு வேகுதித்தா
னீயெங்கே நானெங்கே நின்றறிகா - ணீயிங்கு (௫௫௬)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவுசெய்திருக்கிறது.

1085. கடைகொள்ள - கடைவியாபாரஞ்செய்ய. 1087. கைதவம்-பொய். 1088. உண்டழிக்க - மூடியழிக்க. 1089. ஆடுதற்கும் - மூழ்குதற்கும். 1090. ஊழி - பிரளயகாலம்: கடல். ஏழ் இயற்றும் - ஏழாகச்செய்யப்பட்ட. 1091. தற்புவனம் - அந்தவுலகங்கள்; போகம் - அவற்றிலுள்ள அனுபவங்கள் தனு - உடம்பு. கரணம் - அந்தக்கரணங்கள் அவை மனம் புத்தி சித்தம் அகங்காரம். 1092. துவன்றினை - அகப்பட்டாய்.

1098. செல்லானகாலம் - இறந்தகாலம் (கழிந்தகாலம்); நிகழ்காலம் - வர்த்தமானகாலம்;(நடக்கின்றகாலம்). எதிர்காலம் - (இனிவரப்போகிறகால). அத்திரம் - நிலையாமை.

1101. உன்போது செலாமுன்னம் - உன்பொழுது போகாதற்குமுன்னே, (பொழுது - ஆயுள்). அநுபூதி - சிவாநுபவம் 1102. இனைகின்றாய் - வருந்துகின்றாய்

1103. திறன் - வலிமை. 1104. மூலஆணவம் - மூலஅகங்காரம். (பிரகிருதி).

1107. ஊன் நின்ற ஒன்றின் - உடம்பில் நிலைபெற்ற ஒருபொருளினது. உளவு - ரகசியம்.

1109. துவ்வாமை - அநுபவியாமை. 1110. அல்லல் - துன்பம். அறை - சொல்.

ஒன்றெடுக்கச் சென்றுமற்றை யொன்றெடுக்கக் காண்கின்றே
னின்றடுத்த நீயெங்கிருந்தனையே - மன்றடுத்த (ருருஎ)
தாளா தரித்தேநின் றன்னைமறந் துய்யாது
வாளா மதத்தின் மலிகின்றாய் - கேளாயிச் (ருருஅ)
சார்பிலொன்று விட்டொழிந்தாற் சாலமகிழ் கிற்பேனுன்
சோர்புகொண்டு நீதான் றயர்கின்றாய் - சார்புபெருந் (ருருகூ)
தூவென்று நானிவணஞ் சும்மா விருந்தாலும்
வாவென் றெனையும் வலிக்கின்றாய் - யோவுன்றன் (ருசு0)
சூழ்ச்சியறி யேனீ சுழல்கின்ற போதெல்லாஞ்
சூழ்ச்சியிலே நானுஞ் சுழல்கின்றே - னீட்சியினீ (ருசுக)
காலசைத்தால் யானுங் கடிதிற் றலையசைப்பேன்
மாலசைத்த நின்புணர்ப்பின் வாறெதுவோ - வாலுமண்டக் (ருசுஉ)
கூவத்தில் யானோர் குடநீ கயிற்றோடு
மேவற் கொளுமேழை யென்கேனோ - பாவத்திற் (ருசுங)
சுற்றுண்ட நீகடலிற் றோன்றுசுழி யாகவதி
லெற்றுண்ட நான்றிரண மென்கேனோ - பற்றிடுநீ (ருசுச)
சங்கற்ப மாஞ்சூறை தானாக நானொடு
மங்கட்சருகென் றறைகேனோ - பொங்குற்ற (ருசுரு)
சேலைவிரா யோர்தறியிற் செல்குழைநீ பின்றொடரு
நூலிழைநா னென்று நவல்கேனோ - மாலிடுநீ (ருசுசு)
துள்ளுறுப்பின் மட்பகைஞன் சுற்றாழி யாகவதி
னுள்ளுறுப்பே நானென் றுரைக்கேனோ - வெள்ளுறுநீ (ருசுஎ)
பாழலைவா னேகும் பருந்தாக வப்பருந்தி
னீழலைநா னென்று நினைகேனோ - நீழலுறா (ருசுஅ)
நின்வசநா னென்றுலகு நிந்தைமொழி கின்றதலா
லென்வசநீ யென்ப திலைகண்டாய் - யென்வசநீ (ருசுகூ)
ஆனா லெளியேனுக் காகாப் பொருளுளவோ
வானோர் வந்து வணங்காரோ - வானமல் (ருஎ0)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1114. மன்று அடுத்ததாள் - பொன்னம்பலத்தில் பொருந்தின திருவடி.

1115. ஆதரித்தல் - விரும்புதல். உய்யாது - பிழைக்காமல். 1117. சார்பு - சம்பந்தம். (ஆதரவு) 1119. தூஎன்று - ஆதரவென்று. இவணம் - இப்படி. 1121. சூழ்ச்சி - உபாயம்.

1123. கடிதில் - விரைவில். 1124. மால்அசைத்த - பெருமைபொருந்திய. புணர்ப்பு - உபாயம். ஆலும் - அசைகின்ற. 1125. அண்டக்கூவம் - உலகமாகியகிணறு. 1126 ஏழை - அறிவிலி. 1128. எற்றுண்ட - எறியப்பட்ட. திரணம் - துரும்பு. 1129. சூறை-சுழற்காற்று.

1131. சேலைவிராய் - புடவைநெய்கிற. தறி - நெய்யுந்தறி; குழை - குழாய். 1132. நவில்கேனோ - சொல்வேனோ. மாலிடும் - மயக்கத்தைச்செய்கிற.

1133. உறுப்பின் - கருவியையுடைய. மட்பகைஞன் - குயவன் ஆழி - சக்கரம். 1134. எள்ளுறும் - இகழப்பட்ட. 1135. பாழலைவான் - பாழாயலையும்பொருட்டு.

1140. வானோடர் - விண்ணுலகத்தார் (தேவர்). ஆனமல் - நீங்காமல்.

எண்ணுதற்கும் பேசுதற்கு மெட்டாப் பரஞ்சோதிக்
கண்ணுதலு மங்கைக் கனியன்றோ - வெண்ணுமிடத் (௫௭௧)
தென்செய்வே னோர்கணமு மென்சொல்வழி நில்லாமற்
கொன்செய்வே னென்று குதிக்கின்றாய் - வன்செய்யுஞ் (௫௭௨)
சிந்தோடு மோர்வடவைத் தீயுங் கரத்தடைப்ப
ரந்தோ வுனையா ரடக்குவரே - வந்தோடுங் (௫௭௩)
கச்சோத மென்னக் கதிரோன் றனையெடுப்ப
ரச்சோ வுனையா ரடக்குவரே - வைச்சோங்கு (௫௭௪)
மூவுலகுஞ் சேர்த்தொருதம் முன்றானை யின்முடிவ
ராவுனையு மிங்கா ரடக்குவரே - மேவுபல (௫௭௫)
தேசமென்றுங் காலமென்றுந் திக்கென்றும் பற்பலவாம்
வாசமென்று மவ்வவ் வழக்கென்று - மாசுடைய (௫௭௬)
போகமென்று மற்றைப் புலனென்றும் பொய்யகலா
யோகமென்றும் பற்பலவாம் யூகமென்று - மேகமென்றும் (௫௭௭)
வானென்று முந்நீர் மலையென்று மண்ணென்று
மூனென்று மற்றை யுறவென்று - மேனின்ற (௫௭௮)
சாதியென்றும் வாழ்வென்றுந் தாழ்வென்று மிவ்வுலக
நீதியென்றுங் கன்ம நெறியென்று - மோதரிய (௫௭௯)
அண்டமென்று மண்டத் தசைவு மசைவுமிலாப்
பண்டமென்றுஞ் சொல்பவெலாம் பன்முகங்கள் - கொண்டிருந்த (௫௮0)
உன்னினைவி னுள்ளே யுதித்திட் டலைவிசிற்ப
வென்னினைவு கொண்டோமற் றிவ்வுலக - ரெங்கவையுந் (௫௮௧)
தந்தோ னவனே சதுமுகனுண் டென்பார்க
ளந்தோநின் செய்கை யறியாரே - யந்தோநான் (௫௮௨)
ஆமென்றான் மற்றதனை யல்லவென்பா யல்லவென்றா
லாமென்பா யென்னை யலைக்கின்றாய் - நாமன்பாய் (௫௮௩)
என்றும் பிறந்திறவா வின்ப மடைதுமென்றா
னன்றென் றொருப்படுவாய் நண்ணுங்கா - றொன்றெனவே (௫௮௪)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1142. கண்ணுதலும் - நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானும். அங்கைக்கனி - உள்ளங்கை நெல்லிக்கனி. இதனைக்கரதலாமலகம் என்பர் வடநூலார்.

1144. கொன் - அச்சம். 1145. சிந்து - கடல். வடவைத்தீ - வடவாமுகாக்கினி. இது கடல்; தன்னெல்லைகடவாதிருக்கும்படி படைப்புக்காலத்தி லமைக்கப்பட்டது. இது பெட்டைக்குதிரை வடிவுள்ளது. 1147. கரத்து அடைப்பர் - கையிலடக்குவார்கள். கச்சோதம் - மின்மினிப்பூச்சி. இதனைக்கத்யோதம் என்பர் வடநூலார். கதிரோன் - சூரியன்.

1148. அச்சோ - அதிசயவிடைச்சொல். 1153. புலன் - சத்தாதிவிடயங்கள். 1154. யூகம் – வகுப்பு. ஏகம் - ஒன்று. 1155. வான் - ஆகாயம்; முந்நீர் - ஆற்றுநீர், வேற்றுநீர், ஊற்றுநீர் என்னும் மூன்றுநீரையுடையது. முன்னீர் என்றிதனையெழுதிஎல்லாநீருக்கு முற்பட்டநீர்என்றுரைப்பாருமுளர்; அன்றியும் முந்நீர் என்பது படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முக்குணமுடையது எனவுங் கூறுவர். முந்நீர் - குணம் அது இக்குமுத்தொழில் எனப் பொருள்படும். 1160. பண்டம் - பொருள். 1162. எங்கவையும் - எந்தப்பொருள்களையும். 1168. ஒருப்படுதல் - சம்மதித்தல். தொன்றெனவே பழையபடியே.

செல்கிற்பாய் செல்லாச் சிறுநடையிற் றீமையெலா
நல்கிற்பா யென்னே நின்னட்புடைமை - சொல்கிற்பில் (௫௮௫)
ஆவதுவு நின்னா லழிவதுநின் னாலெனயா
னோவதுவுங் கண்டயலி னேக்கினையே - தாவுமெனக் (௫௮௬)
காணவலம் பெண்ணவல மாகும் பொருளவல
மூணவலம் முற்றுரோ ரேவலம் - பூணவலம் (௫௮௭)
ஊனவல மன்றியுமென் னுற்றதுணை யாநீயுந்
தானவல மென்றாலென் சாற்றுவதே - நானிவணம் (௫௮௮)
இன்பமெது கண்டேமா லிச்சையெலாந் துன்பமதிற்
றுன்பம் பிறப்பென்றே சோர்கின்றேன் - வன்புடைய (௫௮௯)
இப்பிறவித் துன்பத்தி னுந்திதியிற் றுன்பமது
செப்பரிதா மென்றே திகைக்கின்றேன் - செப்பிறப்பின் (௫௯௦)
ஓயாத துன்ப முரைக்க வுடம்பெல்லாம்
வாயாகி னும்போத மாட்டாதே - வேயேநாம் (௫௯௧)
செய்வதென்னோ வென்று தியங்குகின்றே னிவ்வணநா
னைவதெல்லாங் கண்டு நடந்தனையே - கைவருமிவ் (௫௯௨)
வில்லிக் குடமுடைந்தா லியார்தாமென் றுன்னுடன்யான்
சொல்லித் திரிந்துமெனைச் சூழ்ந்திலையே - வல்லியமன் (௫௯௩)
நாளையோ வின்றோ நடக்கின்ற நாட்களிலெவ்
வேளையோ தூது விடிலவர்கள் - கேளையோ (௫௯௪)
நல்லோ மெனினு நடவார் நடவார்நாஞ்
செல்லோ மெனினுமது செல்லாதே - வல்லீர்யாம் (௫௯௫)
இன்சொலினோ மின்றிங் கிருந்துவரு வோமெனயா
மென்சொலினு மச்சொலெலா மேலாதே - மன்சொலுடைத் (௫௯௬)
தாமரையோன் மான்முதலோர் தாமறையா ராயிலன்று
நாமறைவோ மென்ற னடவாதே - நாமிவணம் (௫௯௭)
அந்நாள் வருமுன்ன ராதி யருளடையு
நன்னா ளடைதற்கு நாடுதுங்கா - ணென்னாநின் (௫௯௮)
றோதுகின்றேன் கேட்டு முறார்போன் றுலகியலிற்
போதுகின்றா யாது புரிகிற்பேன் - நீதுநன்றோ (௫௯௯)
டேற்றவடி நாளுறவா யென்னைவிட்டுத் தாமதமா
நேற்றையுற வோடுறவு நேர்ந்தனையே - சாற்றுமந்த் (௬௦௦)
தாமதமே யோரவித்தைத் தாமதமே யாவரணந்
தாமதமே மோக சமுத்திரங்காண் - டாமதமென் (௬௦௧)
றையோ வொருநீ யதனோடு கூடினையாற்
பொய்யோநா மென்று புகன்றதுவே - கையாமல் (௬௦௨)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1173. அவலம் - வீண். 1179. திதி - வாழுங்காலம். இதனைஸ்த்திதியென்பர் வடநூலார். 1182. போதமாட்டாது-பற்றாது. வேயே-பேதையே. 1184. கை வரும்-கை வசமான. 1185. இல்லிக்குடம்-துவாரங்களையுடையகுடம். 1193. தாமரையோன் பிரமன், மால்-விஷ்ணு. அறையர்-சொல்லர். 1197. உலகியல் - உலகநடை. 1199. அடிநாளுறவு - ஆதிநாளுறவு. 1201. ஆவரணம் - மறைப்பு (தடை) அவித்தை - அஞ்ஞானம். 1204. கையாமல் - வெறுக்காமல்.

ஒன்னலர்போற் கூடுவா ரோடொருநீ கூடுங்கா
லென்னைநினை யாயென்சொ லெண்ணுதியே - பன்னுறுநின் (௬0௩)
தீதெல்லா நானுதி சேடர்பலராய்ப்பிரமன்
போதெல்லாஞ் சொல்லிடினும் போதாதே - யாதலினால் (௬0௪)
வைகின்றேன் வாழ்த்தாய் மதித்தொருநீ செய்வதெல்லாஞ்
செய்கின்றா யீதோர் திறமன்றே - யுய்கிற்பான் (௬0௫)
வாடுகின்றே னின்னை மதித்தொருநா னீமலத்தை
நாடுகின்றா யீதோர் நலமன்றே - கூடுகின்ற (௬0௬)
ஈண்டோ ரணுவா யிருந்தநீ யெண்டிசைபோ
னீண்டா யிஃதோர் நெறியன்றே - வேண்டாநீ (௬0௭)
மற்றவர்போ லன்றே மனனேநின் வண்புகழை
முற்றுமிவ ணூர்தான் மொழிவாரே - சுற்றிமனந் (௬0௮)
தானடங்கி னெல்லாச் சகமு மடங்குமொரு
மானடங்கொள் பாத மலர்வாய்க்கும் - வானடங்க (௬0௯)
எல்லா நலமு மிதனு லெனமறைக
ளெல்லாநின் சீரே யெடுத்தியம்பு - மெல்லார்க்கு (௬௧0)
மாகமங்கொண் டுற்ற மனோலயமே வான்கதியென்
றாகமங்க ளின்சீ ரறைந்திடுங்கா - ணுகுமிந்த (௬௧௧)
நன்மை பெறுமேன்மை நண்ணியநீ நின்னுடைய
தன்மைவிட லந்தோ சதுரலவிப் - புன்மையெலாம் (௬௧௨)
விட்டொழித்து நான்மொழியு மெய்ச்சுகத்தை நண்ணுதிநீ
யிட்டழைத்த வச்சுகந்தான் யாதென்னிற் - கட்டழித்த (௬௧௩)
வேடஞ் சுகமென்றும் மெய்யுணர்வை யின்றிநின்ற
மூடஞ் சுகமென்று முன்பலவாங் - தோடஞ்செய் (௬௧௪)
போகஞ் சுகமென்றும் போகந் தருங்கரும
யோகஞ் சுகமென்று முண்டிலையென் - றாகஞ்செய் (௬௧௫)
போதஞ் சுகமென்றும் பொன்றல்சுக மென்றும் விந்து
நாதஞ் சுகமென்று நாம்பொருளென் - றோதலஃ (௬௧௬)
தொன்றே சுகமென்று முட்கண் டிருக்குமந்த
நன்றே சுகமென்று நாம்புறத்திற்-சென்றேகண் (௬௧௭)

---

அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1205. ஒன்னலர் - பகைவர். 1206. பன்னுறு - சொல்லுதற்குரிய. 1207. பிரமன்போதெல்லாம் - பிரமனது ஆயுள்முழுதும். 1210. உய்கிற்பான் - உய்யும்பொருட்டு. 1211. மலத்தை - மும்மலத்தை; (ஆணவம் மாயை காமியம் என்னும் மும்மல சம்பந்தத்தை.)

1218. மால் நடங்கொள் பாதமலர்வாய்க்கும் - பெருமைபொருந்திய நடனத்தைச் செய்கின்ற பாத தாமரை மலர் கிடைக்கும்; (சிவபெருமானது திருவடிகிடைக்கும்.)

1221. மாகமம்கொண்டு - பெரிதாகிய பொறுமையைக்கொண்டு; (கமம்-உபசாந்தம்; இது க்ஷமம் என்னும் வடசொற்றிரிபு.) மனோலயம் - மனவொடுக்கம். 1224. சதுரல - சாதுரியமல்ல. புன்மை - தாழ்வு. 1226. கட்டழித்த - கட்டுக்குலைத்த. 1227. வேடம் - வேஷம். 1228. மூடம்-மூடத்தனம். 1229. கருமபோகம்-கிரியாயோகம். 1231. போதம் - அறிவு. பொன்றல் - இறத்தல், விந்துநாதம் - சுக்கில சுரோணிதங்கள்;

டாற்றல் சுகமென்று மன்பறியாச் சூனியமே
யேற்ற சுகமென்று மிவ்வண்ண - மேற்றபடி (சுகஅ)
வெல்லுகின்றோர் போன்று விரிநீ ருலகிடையே
சொல்லுகின்றோர் சொல்லுஞ் சுகமன்று - சொல்லுகின்ற (சுககூ)
வானாதி தத்துவங்கண் மாய்த்தாண் டுறுகின்ற
நானாதி மூன்றிலொன்று நாடாம - லானாமை (சுஉ0)
எள்ளும் பகலு மிரவுமிலா வோரிடத்தி
லுள்ளும் புறம்பு மொருபடித்தாய் - வள்ளலென (சுஉக)
வாழும் பரசிவத்தின் வன்னிவெப்பம் போலமுற்றுஞ்
சூழுஞ் சுகமே சுகங்கண்டாய் - சூழ்வதனுக் (சுஉஉ)
கெவ்வா றிருந்தா லியலு மெனிலம்ம
லிவ்வா றிருந்தா லியலாதாற் - செவ்வாற்றிற் (சுஉங)
பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டுமது
பற்றற்றா லன்றிப் பலியாதாற் - பற்றற்றல் (சுஉச)
வேதனையா லீங்கு விரியுஞ் சகப்பழக்க
வாதனைபோய் நீங்கிலன்றி வாராதால் - வாதனையும் (சுஉரு)
ஈனமந்தோ விவ்வுலக மென்றருளை நாடுகின்ற
ஞானம்வந்தா லன்றி நலியாதால் - ஞானமது (சுஉசு)
போகமுற்றும் பொய்யெனவே போத மனித்தியவி
வேகமுற்றா லன்றி விளங்காதா - லாகவஃ (சுஉஎ)
தெண்ணவந்தாற் போலுமிவ னுற்றுவிசா ரித்திடுமோ
ரெண்ணம்வந்தா லன்றி யிசையாதா - லெண்ணமது (சுஉஅ)
பங்கமடைந் தாரவையைப் பாராது சாதுக்கள்
சங்கமடைந் தாலன்றிச் சாராதா - லிங்கதனால் (சுஉகூ)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1235. ஆற்றல்-செய்தல். சூனியம் - பாழ். 1237. விரிநீர் - விரிந்த நீர் சூழ்ந்த (விரிநீர்-கடல்) 1239. வான் ஆதி தத்துவங்கள் - ஆகாயமுதலிய தத்துவங்கள்; மாய்த்து - கெடுத்து; ஆண்டு உறுகின்ற நான் - அவ்விடத்துச்சேடித்து நின்ற நான், (ஆன்மா.) 1240. ஆதிமூன்றில் ஒன்று-முதன்மையாகிய முப்பொருள்களில் ஒன்று. (மூன்றில் ஒன்று-பதிபசுபாசம் என்னும் முப்பொருள்களில் ஒன்றாகியது - ஆன்மா.) நாடாமல் - எதிரிட்டுநோக்காமல்; ஆனாமை - நீங்காமல்.

1241. எள்ளும் - இகழப்பட்ட, வள்ளல் - பரமோதாரன். 1243. வன்னி வெப்பம் போல-அக்கினியும் அதன் உஷ்ணமும் போல; (வன்னிவெப்பம்போல என்றது பரசிவத்தில் நின்றும் பிரியாது ஒன்றுபட்டிருத்தல்.)

1246. செவ்வாற்றில் - செந்நெறியில் (செவ்வையான மார்க்கத்தில்); 1247. பற்று அற்றான் பற்றினை - எல்லாப் பற்றுக்களும் அற்றவனாகிய சிவபெருமானது பற்றை; (பற்று-ஆதரவு.) 1248. பற்றுஅற்றால் அன்றி - இருவகைப்பற்றுக்களும் அற்றால் அல்லது; (இருவகைப்பற்றுக்களாவன:—அகப்பற்றுப் புறப்பற்று என்பன; அகப்பற்று - நானெனல்; புறப்பற்று-எனதெனல்.)

1253. அனித்திய விவேகம் - காணப்படு பொருள்களெல்லாம் நிலையில்லனவென்று அறியும் அறிவு. 1257. பங்கம் அடைந்தார் அவை - தாழ்வுள்ளவரது சபை; சாதுக்கள் - சாந்தகுணமுள்ளவர்கள். 1258. சங்கம் - கூட்டம்.

வீழ்முகத்த ராகிநிதம் வெண்ணீ றணிந்தறியாப்
பாழ்முகத்தோர் தம்பாற் படர்ந்துறையேல் - பாழ்முகத்திற் (௬௩௦)
பேயாட வுள்ளறியாப் பித்தாட நின்னுடனே
வாயாடு வோர்பான் மருவிநில்லே - னீயாடிப் (௬௩௧)
பேதித் திடவும் பிறழ்ந்திடவு நின்னுடனே
வாதித் திடுவோர்பால் வாய்ந்துறையேல் - சாதித்துச் (௬௩௨)
சைவமெங்கே வெண்ணீற்றின் சார்பெங்கே மெய்யான
தெய்வமெங்கே யென்பவரைச் சேர்ந்துறையே - லுய்வதெங்கே (௬௩௩)
நீராச் சிவநிந்தை செய்துசிறு தேவர்களை
நேராய்ப் பிதற்றுவர்பா னேர்ந்துறையே - லோராமல் (௬௩௪)
எள்ளென்றுந் தெய்வமென்ப தில்லையிது தெளிந்து
கொள்ளென்றுந் துள்ளுகின்றோர் கூட்ட முறே-னள்ளென்று (௬௩௫)
நாமென்றும் நம்மையன்றி நண்ணும்பிரமமில்லை
யாமென்றுஞ் சொல்பவர்பா லார்ந்துறையே - லூமொன்ற (௬௩௬)
எல்லா வறிவு மெமதறிவே யென்றுரைக்கும்
பொல்லா வலக்காரர் பொய்யுகவேல் - புல்லாக (௬௩௭)
அற்பமே மற்றவெலா மாயிலழி யாக்காய
கற்பமே வத்துவென்பார் கண்ணடையேல் - சிற்சிலவாஞ் (௬௩௮)
சித்திகளே வத்துவென்போர்ச் சேர்ந்துறையேல் பன்மாயா
சத்திகளே வத்துவென்போர் சார்படையேல் - பொத்தியவிச் (௬௩௯)
சன்மமே தோற்றுந் தரமாந் திரமனித்த
கன்மமே வத்துவென்போர் கண்ணுறையேல்-கன்மமிகு (௬௪௦)
மாகங் கதியென்பார் மாட்டுறையேல் பல்போக
யோகம் பொருளென்பா ரூடுறையே - லேகங்கொள் (௬௪௧)

---

☞ அருப்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1259. வீழ்முகத்தராகி-விரும்பப்பட்டமுகத்தையுடையவராகி. 1260. படர்ந்து உறையேல் - போய்தங்காதே. 1264. வாதித்திடுவோர் - தர்க்கவாதஞ்செய்வோர். 1268. ஓராமல் - ஆராயாமல்.

1269. எள் என்றும் - இகழ்ச்சியென்றும்; 1270. நள்என்றும் - நடுவேபொருந்திய. 1272. ஆர்ந்துறையேல் - கூடி வசிக்காதே. 1274. வலக்காரர் - வலியவர். உகவேல் - விரும்பாதே. 1275.ஆயில்-ஆராய்ந்தால்; காயகற்பம்-சரீரத்தை நெடுநாள் நிலைத்திருக்கச் செய்வதாகிய ஓர் மூலிகை. 1276. வத்து - பொருள்; கண்அடையேல் - கண்ணுக்கு எதிர்ப்படாதே.

1277. சித்திகள் - அட்டமாசித்திகள். அவை அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. இவற்றுள் ஆன்மாவைப் போல நுண்பொருள்ஆதல் அணிமாவென்றும், அணுவடிவு பெரியவடிவாய்க்காணப்படுதல் மகிமாவென்றும்; தன்னுடல் துண்டிக்கப்படாததாய் துண்டிக்கப்படுமவற்றை உருவவல்லவனாதல் கரிமா என்றும், இலேச இருத்தல் லகிமா என்றும், வேண்டுமவற்றை அடைதல் பிராப்தி என்றும், நிறையுள்ளவனாதல் பிரகாமியம் என்றும், (நிறை-சுகுணபூரணம்) ஆளுதலையுடையனாதல் ஈசத்துவம் என்றும், எல்லாந்தன்வசமாக்கிக்கொள்ளுதல் வசித்துவம் என்றும் சொல்லப்படும்.

1278. மாயாசக்திகள் - மாயையின்காரியமாகிய சத்திகள். இந்தச்சக்திகளின்தொகை ஆறுகோடி என்பர். 1279. அநித்தகன்மம் - நிலையிலாக்கருமம். 1281. மாகம் - விண்ணுலகம். கதி-மோட்சம், 1282. ஏகம்கொள் - ஒன்று என்னும் எண்ணைக்கொண்ட,

மண்ணென்பார் வானென்பார் வாய்முச் சுடரென்பார்
பெண்ணென்பார் மற்றவர்தம் பேருரையேன் - மண்ணின்பால் (௬௪௨)
மன்னுரையாச் சில்லோர் மரந்தெய்வ மென்பார்மற்
றென்னுரையா ரீண்டவர்பா லெய்தியிடேன் - மன்னலங்கள் (௬௪௩)
பூத்தாற் சிறுவர்களும் பூசா பலமென்பர்
தேற்றார் சிவபூசை செய்யாராய்ப் - பூத்தாவி (௬௪௪)
வீறுகின்ற பூசையிலென் வீணென்று வீண்பாழ்வாய்க்
கூறுகின்ற பேயர்கள்பாற் கூடியுறேன் - மாறுகின்ற (௬௪௫)
நீட்கோலவாழ்க்கையெலா நீத்திடுவான் பொன்னறைக்குத்
தாட்கோ லிடுவாரைச் சார்ந்துறையே - னீட்கோல (௬௪௬)
மெய்யொழுக்கத் தார்போல் வெளிநின் றகத்தொழியாப்
பொய்யொழுக்கத் தார்பாற் பொருந்தியுறேல் - பொய்யொழுக்கிற் (௬௪௭)
பொய்ந்நூல் பதறிப் புலம்புகின்ற பித்தர்கள்பா
லந்நூல் விரும்பி யடைந்தலையேல் - கைந்நேர்ந்து (௬௪௮)
கோடாநு கோடி கொடுத்தாலுஞ் சைவநெறி
நாடா தவரவையை நண்ணியிடேல் - கோடாது (௬௪௯)
கொல்லா விரதமது கொள்ளாரைக் காணிலொரு
புல்லாக வெண்ணிப் புறம்பொழிக - வெல்லாமும் (௬௫0)
ஆகநவில் கின்றதென்னம் மையனுக்கன் பில்லாரை
நீகனவி லேனு நினையற்க - வேகனடிக் (௬௫௧)
கன்பே வடிவா யருளே வுயிராய்ப்பே
ரின்பே வுணவா யிசைந்தாரு - மன்பாகிக் (௬௫௨)
கண்டிகையே பூணிற் கலவையே வெண்ணீறாய்க்
கொண்டி கவாச்சார்பு குறித்தாருந் - தொண்டனே (௬௫௩)
வாய்மலரான் மாலை வகுத்தலொடு நம்மிறைக்குத்
தூய்மலரான் மாலை தொடுப்பாருஞ் - சார்மலரோன் (௬௫௪)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1283. முச்சுடர் - மூன்றுஒளியுடைப் பொருள்கள்; அவை சூரியன் சந்திரன் அக்கினி. 1287. பூசாபலம் - பூசைசெய்ததினால் உண்டாகும் பயன். 1288. பூத்தாவி - மலர்களை யெட்டிப்பறித்து.

1289. வீறுகின்ற-மிகுகின்ற. 1291. கோலம் வாழ்க்கை-அழகியவாழ்வு. நீத்திடுவான்-ஒழிக்கும்பொருட்டு. பொன் அறை-பொன்னுள்ள அறைவீடு; (பொக்கிஷம்). 1292. தாட்கோல்-தாழ்க்கோல்; (தாழ்ப்பாள்). 1297. சைவநெறி - சைவமார்க்கம்; நாடாதவர் அவை - விரும்பாதவரது சபை; 1298. நண்ணியிடேல் - அடைந்திடாதே; கோடாது - கோணாமல்.

1299. கொல்லாவிரதம் - ஒருயிரையும் கொல்லாமையாகிய விரதம்.

1300—1301. எல்லாமும் ஆக நவில்கின்றது-எல்லாப்பொருள்களுமாகச் சொல்லுவது.

1302. ஏகன்அடிக்கு - ஒப்பற்றவனாகிய சிவபெருமானது திருவடிக்கு. 1305. கண்டிகை-கண்டத்திலணியும் உருத்திராக்கமாலை; 1306. இகவா - எல்லை கடவாத; சார்பு-பற்று. 1307. வாய்மலரால் மாலைவகுத்தல் - வாசாகயிங்கரியஞ் செய்தல், அதாவது பாடல்களால் தோத்திரஞ்செய்தல். 1308. சார்மலரோன் - நிறமமைந்த தாமரைமலரை ஆசநமாகவுடைய பிரமன்.

ஏர்நந்த னப்பணிகண் டிச்சையுற நம்மிறைக்குச்
சீர்நந்த னப்பணிகள் செய்வோரு - நார்நந்தாத் (௬௫௫)
தீயின்மெழு காய்ச்சிந்தை சேர்ந்துருகி நம்மிறைவாழ்
கோயின்மெழு காநின்ற கொள்கையரு - மேயினரைத் (௬௫௬)
தாயில் வளர்க்குந் தயவுடைய நம்பெருமான்
கோயில் விளக்குங் குணத்தோருந் - தூயவருள் (௬௫௭)
இன்புடனே தீபமுத லெல்லாச் சரியைகளு
மன்புடனே செய்தங் கமர்வாரு - மன்புடனே (௬௫௮)
அண்ணியமே லன்பர்க் கமுதீத லாதிசிவ
புண்ணியமே நாளும் புரிவோரும் - புண்ணியமாந் (௬௫௯)
தேனே யமுதேசிவமே சிவமேயெம்
மானேயென் றேத்தி மகிழ்வாரும் - வானனை (௬௬0)
மன்னே யருட்கடலே மாணிக்க மேயெங்க
ளன்னேயென் றுன்னி யமர்வோரு - நன்னேயப் (௬௬௧)
பண்ணீர் மொழியாற் பரிந்தேத்தி யானந்தக்
கண்ணீர்கொண் டுள்ளங் களிப்போரு - முண்ணீரிற் (௬௬௨)
பண்டுகண்டுங் காணப் பரிசினராய்ப் பொன்மேனி
கண்டுகண்டு நாளுங் களிப்போருந் - தொண்டடையும் (௬௬௩)
பொற்பதிக மென்றெண்ணிப் போற்றியொரு மூவர்களின்
சொற்பதிகங் கொண்டு துதிப்போருஞ் - சொற்பனத்தும் (௬௬௪)
மாசகத்திற் சேர்க்காத மாணிக்க மென்றதிரு
வாசகத்தை வாயான் மலர்வோரும் - வாசகத்தின் (௬௬௫)
மன்னிசைப்பான் மேலோர் வகுத்தேத்தி நின்றதிரு
வின்னிசைப்பா வாதி யிசைப்போரு - மன்னிசைப்பின் (௬௬௬)
நல்வாழ் வருளுகின்ற நம்பெருமான் மான்மியங்கள்
சொல்வோருங் கேட்டுத் தொழுவோருஞ் - சொல்வாய்ந்த (௬௬௭)
தாதாவென் றன்புடனே சாமகீ தங்கண்முதல்
வேதாக மங்கள் விரிப்போரும் - வேதாந்தஞ் (௬௬௮)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1309. ஏர் - அழகு, ஏர் நந்தன் - அழகிய சங்கத்தையுடையவிஷ்ணு. நந்தனப்பணி - திருநந்தவனத் தொண்டு; இச்சையுற - விரும்ப; நந்தநப்பணிகள் - நந்தவன கைங்கர்யம்; நார்நந்தா - அன்புகுறையாத;

1312. மேயினரை - வந்தவர்களை. 1315. எல்லாச் சரியைகளும்-எல்லாத்தொழில்களும்;

1317. அண்ணிய - வந்தடைந்த; அமுதீதலாதி - உணவுகொடுத்தல் முதலிய;

1322. உன்னி - நினைந்து; நல்நேயம் - சிறந்த அன்போடுகூடிய; 1323. பண்ணீர் மொழியால் - இசையின் தன்மை யமைந்த சொற்களால்; பரிந்து ஏத்தி - விரும்பித்துதித்து.

1325. பரிசினராய் - நன்மையுடையவராகி; 1327. பொற்பு - அழகு. மூவர்களின் சொற்பதிகம் - மூவர்தேவாரப்பதிகங்கள். மூவராவார் - சம்பந்தர், அப்பர், சுந்தரர்.

1329. மாசகத்தில் சேர்க்காத - பெரிய பிரபஞ்ச வாசனையில் சேர்க்காத; குற்றத்தை மனத்தில் சேர்க்காத எனவுமாம். 1330. வாசகத்தின் - சொற்களின்.

1331. மன் இசைப்பால் - மிகுதியாகிய இசை தொடுத்தலால். 1332. திருவின் இசைப்பாவாதி - இனியதிரு விசைப்பா முதலிய. 1333. நல்வாழ்வு-சிறந்தசெல்வம்; மான்மியங்கள் - மகத்துவங்கள். (பெருமைகள்.) 1336. வேதாந்தம் - வேதமுடிவு. (உபநிடதப்பொருள்.)

சேர்ந்தோர்க் கருளுஞ் சிவமே பொருளென்று
தேர்ந்தே சிவபூசை செய்வோரு - மார்ந்தேத்தி (௬௬௯)
நன்னெஞ்சே கோயிலென நம்பெருமான் றன்னைவைத்து
மன்னுஞ் சிவநேயம் வாய்ந்தோரு - முன்னயன்றன் (௬௭0)
அஞ்செழுத்தெல் லாங்கேட்கி லஞ்செழுத்தா மெம்பெருமா
னஞ்செழுத்தா லர்ச்சித் தமர்வோரு - மஞ்செனவே (௬௭௧)
விஞ்சும் பொறியின் விடயமெலா நம்பெருமான்
செஞ்சுந் தரப்பதத்திற் சேர்த்தோரும் - வஞ்சஞ்செய் (௬௭௨)
பொய்வே தனைநீக்கும் புண்ணியன்பாற் றம்முயிரை
நைவே தனமாக்கு நல்லோருஞ் - செய்வேலை (௬௭௩)
நீட நடத்தலொடு நிற்றன்முத னம்பெருமா
னாட லடித்தியான மார்ந்தோரும் - வாடலறத் (௬௭௪)
தூய நனவிற் சுழுத்தியொடு நம்பெருமா
னேயநிகழ்த்து நெறியோரு - மாயமுறு (௬௭௫)
மானதுவாய் நின்ற வயநீக்கித் தானமுற்றுத்
தானதுவாய் நிற்குந் தகையோரும் - வானமதில் (௬௭௬)
வானங்கண் டாடு மயில்போன்று நம்பெருமான்
றானங்கண் டாடுந் தவத்தோரு - மோனமொடு (௬௭௭)
தாழ்சடையு நீறுஞ் சரிகோவ ணக்கீளும்
வாழ்சிவமுங் கொண்டு வதிவோரு - மாழ்நிலைய (௬௭௮)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1340. முன் அயன்தன் - பழையோனாகிய பிரமனது. 1341. அஞ்சு எழுத்து எல்லாம் கேட்கில் - அஞ்சுதற்குரிய எழுத்துக்களெல்லாம் கேள்விப்பட்டால்; அஞ்சு எழுத்து ஆம் - அஞ்சும்படியான எழுத்துக்களாகின்ற; 1342. அஞ்சு எழுத்தால் - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தால்.

1342.—1343. அஞ்சு எனவே விஞ்சும் பொறியின் விடயம் எல்லாம் - அஞ்சு என்று சொல்லும்படியாக மேலான ஐம்பொறியின் விஷயங்கள் யாவும்; (பொறி - ஐம்பொறிகள்; அவை மெய், வாய், கண், மூக்குச் செவி என்பன. விடயம்-ஐந்து விடயங்கள்; அவை பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தம் என்பன.

1345. புண்ணியன் - தரும ரூபியான சிவபெருமான். 1346. நைவேதனம்-நிவேதனம்; (நிவேதநஞ்செய்தற்குரிய பொருள்.) 1348. ஆடல் அடி - நடனபாதம். வாடல் அற - வாட்டம் நீங்க.

1349. நனவில்-சாக்கிராவஸ்தையில்; சுழுத்தி - சுழுத்தி அவஸ்தையில்; சாக்கிராவஸ்தை யாவது ஆன்மா இருபத்துநான்கு தத்துவங்களோடு புருவமத்தியில் அமர்ந்திருக்கும் அவசரம். சுழுத்தியாவது பிராணவாயு சித்தம் என்பவற்றோடு ஆன்மா இருதயத்தில் அமர்ந்திருக்கும் அவசரம்.

1351. மானதுவாய்நின்ற - மகத்தத்துவமாய்நின்ற; வயம் நீக்கி - வசத்தை யொழித்து; தான் அற்று - தானென்பது ஒழிந்து. 1352. தான் அதுவாய்நிற்கும் - ஆன்மாவாகிய தான் பரமான்மாவாகிய பிரமப்பொருளாகி நிற்கின்ற. வானமதில் - ஆகாயத்தில்.

1353. வான் அம் கண்டு - மேகத்தின் அழகைக்கண்டு. நம்பெருமான் தானம் - எம்பெருமானது நிலை. 1355. தாழ்சடை - நீண்டசடை; (தொங்குகின்றசடை.) 1356. வாழ்சிவம்-வாழ்க்கைக்கேதுவான மங்களகரம். வதிவோரும்-வாழ்வோரும். ஆழ்நிலைய-ஆழ்ந்தநிலையையுடைய.

வாரியலை போன்றசுத்த மாயையினு லாம்பூத
காரியங்க ளாதியெல்லாங் கண்டொழித்து - ஊரியங்கத் (௬௭௯)
தஞ்சந் தருமலரோன் றத்துவமாம் பூதங்க
ளஞ்சும் பொறியஞ்சு மஞ்சறிவு - மஞ்செனுமோர் (௬௮௦)
வாக்குமுத லஞ்சுமற்று மாலோன்றன் றத்துவமா
மூக்குங் கலைமுதலா மோரேழு - நீக்கியப்பால் (௬௮௧)
மேவி விளங்குசுத்த வித்தைமுத லாதமட்டுந்
தாவி வயங்குசுத்த தத்துவத்தின் - மேவியகன் (௬௮௨)
றப்பா லருள்கண் டருளாற் றமைத்தாங்கண்
டப்பாற் பரவெளிகண் டப்பாலுக் - கப்பாலும் (௬௮௩)
நீராச் சுயமாய்ச் சிதானந்த மாமொளியைப்
பாரா விருந்த படியிருந்து - பேராது (௬௮௪)
கண்டதுவென் றொன்றுங் கலவாது தாங்கலந்து
கொண்டசிவ யோகியராங் கொற்றவரு - மண்டரிய (௬௮௫)
சத்துவத்திற் சத்துவமே தம்முருவாய்க் கொண்டுபர
தத்துவத்தி னிற்குந் தகவோரு - மத்துவத்தில் (௬௮௬)
தீதுஞ் சுகமுஞ் சிவன்செயலென் றெண்ணிவந்த
யாதுஞ் சமமா விருப்போருங் - கோதுபடக் (௬௮௭)
கூறுங் குறியுங் குணமுங் குலமுமடி
யீறுங் கடையு மிகந்தோரும் - கூறுகின்ற (௬௮௮)
சேந்தி னடைந்தவெலாஞ் சீரணிக்கச் சேர்சித்த
சாந்தி யுடனே சரிப்போருஞ் - சாந்திபெறத் (௬௮௯)
தம்மையுறுஞ் சித்தெவையுந் தாமுவத்தல் செய்யாமற்
செம்மையுடன் வாழுந் திறலோரு - மெம்மையினும் (௬௯௦)

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1357. வாரி அலை - கடலின் அலை. 1358. பூதகாரியங்கள் ஆதியெல்லாம் - பூதகாரியங்கள் முதலான எல்லாப்பொருள்களும். (அவை நாமரூபாதிகளாகக்காணப்படுகின்ற பிரபஞ்ச முதலியவெல்லாம்.) 1359. தஞ்சம் தரும் - ஆதரவையுண்டாக்குகின்ற. மலரோன் தத்துவம் ஆம் - பிரமதத்துவங்களாகிய. 1360. பூதங்களைந்தும் - பஞ்சபூதங்களும். (பஞ்சபூதங்களாவன:—பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன.) பொறி ஐஞ்சும் - ஐம்பொறிகளும். (ஐம்பொறிகளாவன:—மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.) அஞ்சறிவும் - அப்பொறிகளால் அறியப்படுகின்ற விடயங்களைந்தும். (விடயங்கள் ஐந்தாவன:—பரிசம், ரசம், ரூபம், கந்தம், சத்தம் என்பன.

1363. சுத்தவித்தை - சிவதத்துவமைந்திலொன்று. தத்துவம் ஐந்தாவன - சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்பன. இவற்றுள் ஞானமதிகரித்து கிரியைகுறைந்திருப்பது சுத்தவித்தையென்றும், ஞானம் குறைந்து கிரியைஉயர்ந்திருப்பது ஈச்சுரமென்றும், ஞானமும்கிரியையும் ஒத்திருப்பது சாதாக்கியமென்றும், கிரியை நாடல் சத்தியென்றும், ஞானம் நாடல் சிவமென்றும் சொல்லப்படும்.

1370. அண்டு அரிய - கிட்டுதற்கரிய. 1372. அத்துவத்தில் - இரண்டுமொன்றுயிருக்கும் நிலையில்; 1374. கோது - குற்றம். 1376. இகந்தோரும் - கடந்தோரும். 1377. சேந்தின் - செந்நெறியால். சீரணிக்க - சமிக்க. 1378. சரிப்போரும் - சஞ்சரிப்போரும். 1379. சித்து - அற்புதங்கள். 1380. திறலோரும் - தீரரும். எம்மையினும் - எப்பிறப்பினும்.

ஆராமை யோங்கு மவாக்கடனீர் மான்குளம்பி
னீராக நீந்தி நிலைத்தோருஞ் - சேராது (சுகக)
தம்பொருளைக் கண்டே சதானந்த வீட்டினிடைச்
செம்பொருளைச் சார்ந்த திறத்தோரு - மண்பொருள் போய்த் (சுகஉ)
தாய ரெனமாதர் தம்மையெண்ணிப் பாலர்பித்தர்
பேயரென நண்ணும் பெரியோரு - மீயதனின் (சுகங)
எய்ப்பரிசா மோர்திரண மெவ்வுலகுஞ் செய்தளிக்க
மெய்ப்பரிசாஞ் செய்யவல்ல வித்தகரு - மெய்ப்படவே (சுகச)
யாவு மறிந்து மறியார்போன் றெப்பொழுதுஞ்
சாவும் பிறப்புந் தவிர்ந்தோரு - மோவலின்றி (சுகரு)
வைதிடினும் வாழ்கவென வாழ்த்தி யுபசாரஞ்
செய்திடினுந் தன்மை திறம்பாரு - மெய்வகையில் (சுகசா)
தேறு வுலகஞ் சிவமயமாய்க் கண்டெங்கு
மேறு திழியா திருப்போரு - மாறாது (சுகஎ)
போனந்தான் கொண்டு முடிந்தவிடத் தோங்குபர
மானந்தா தீதத் தமர்ந்தோருந் - தானந்தாச் (சுகஅ)
சாதுக்க ளாமவர்தஞ் சங்க மகத்துவத்தைச்
சாதுக்க ளன்றியெவர் தாமறிவார் - நீதுக்க (சுகக)
நீங்கியன்னோர் சங்கத்தி னின்றுமகிழ்ந் தேத்திநித
மாங்கவர்தாட் குற்றேவ லாய்ந்தியற்றி - யோங்குசிவ (எ00)
பஞ்சா க்ஷரத்தைப் பகருளே நாவாக
வெஞ்சாப் பரிவுடனே யெண்ணியருட் - செஞ்சோதித் (எ0க)
தாதொன்று தும்பைமுடித் தாணுவடி யொன்றிமற்றை
யாதொன்று நோக்கா தமைந்திடுக - தீதென்ற (எ0உ)
பாழ்வாழ்வு நீங்கப் பதிவாழ்வி லெஞ்ஞான்றும்
வாழ்வாயென் னோடு மகிழ்ந்து. (எ0ங)

திருச்சிற்றம்பலம்.

## நெஞ்சறிவுறுத்தல் அரும்பத உரையுடன் முற்றிற்று.

---

☞ அரும்பத உரை வரி கணக்கின்படி பிரிவு செய்திருக்கிறது.

1381. ஆராமை - தெவிட்டாமை. அவாக்கடல் - ஆசையாகியகடல். மான்குளம்பின்நீர் - மான் குளப்படியில் நிற்கும் நீர்.

1383. சதானந்த வீட்டினிடை - இடையறாதஇன்பவீட்டின்கண். 1384. செம்பொருள்-செவ்வையாகிய பிரமப்பொருள். 1386. ஈயதனில் - ஈயைப்பார்க்கினும். 1387. எய்ப்பரிசாம் ஓர்திரணம் - மெல்லிய தன்மையையுடைய ஒருதுரும்பு; செய்து அளிக்க - படைத்துக் காக்க. 1388. மெய்ப்பரிசம் செய்யவல்ல - உண்மையாகப்பரிசிக்கவல்ல; (பரிசித்தல் - தடவுதல்.) வித்தகர் - ஞானியர். 1389 எய்ப்பு அட - மெலிவை வெல்ல. 1390. ஓவல் இன்றி - நீங்குதல் இல்லாமல்; (இடையறாமல்.) 1392. தன்மைதிறம்பார் - குணங்கெடாதவர். 1393. தேறு-தெளியாத. 1394. ஏறுது இழியாது - ஏறாமல் இறங்காமல். 1396. பரமானந்த அதீதம் - மேலான இன்பமுடிவு; தாம் நந்தா - தாம் அழியாத. 1399. சங்கம் - கூட்டம். 1400. குற்றேவல்-சிறுதொண்டு. 1402. தாது ஒன்று - மகரந்தம் பொருந்திய. தும்பை - தும்பைமலர்மாலையை யணிந்த தாணு - சிவபெருமான். ஒன்றி - அடைந்து. 1405. பதிவாழ்வு - சிவபெருமானது இடமாகிய சிவலோகவாழ்வு. எஞ்ஞான்றும் - எந்நாளும்.

உ

சிவமயம்.

ஓம் சிவகணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# நெஞ்சறிவுறுத்தல் வசனம்.

☞ இஃது திரிசிரபுரம் மஹாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் மாணாக்கரும், பெங்களூர் அருட்பெருஞ்சோதி சபை, பாளையங்கோட்டை சைவ சமயாபிவிர்த்தி சபை இவைகளின் ஸ்தாபகருமான மஹாவித்துவான்-சித்தாந்த ரத்நாகரம், அரன்வாயல் - **வேங்கடசுப்புப்பிள்ளை** அவர்களால் தொகுக்கப்பட்டது.

## காப்பு.

நெஞ்சறிவுறுத்தற்கு நேர்கத்தியரூபம்
எஞ்சலறவேயிங் கியற்றுதற்கு - மஞ்செனவே
இன்னேயருள்பொழிவா னென்குருவிராமலிங்கன்
றன்னே ரருட்பிரகாசன்.

திருச்சிற்றம்பலம்.

என்னெஞ்சமே! மகாமேருவாகிய பொன்மலைபோலப் பிரகாசித்து நீ எக்காலத்துஞ் சலியாமல் வாழக்கடவாய். இவ்வுலகின்கண் பல சனனங்களெடுத் திளைத்தபின்னர் யான் எடுத்த இம்மனிதப்பிறவியிலும், இதனோடு சேர்த்தெண்ணப்படும் எழுவகைப்பிறவியிலும், இவையன்றி எண்பத்து நான் கிலக்கம் பேதமாகவிரிந்த எல்லாப் பிறவியிலும் என்னைவிட்டுப் பிரியாம லிருக்கின்ற என்னெஞ்சமே! நீ பிற விடயங்களிற் சாராமல் ஒருபக்கத்தி னின்று சிறியேன் சொல்லுகின்ற இந்த ஒருசொல்லைக் கேட்பாயாக.

எல்லா உலகத்தவரும் வழிபடுகின்ற ஒப்பற்ற முதற்பொருளாகியும், எவ்விடத்தும் வியாபிக்குஞ் சிவமாகியும், பதிப்பொருளாகியும், உருவாகியும், அவ்வுருவினுள் உருவமுடையதாகியும், உருவினுள் அருவமாகியும், அவ்வருவினுள் அருவமுடையதாகியும், என்றும்உள்ளதாகியும், குணரகிதமாகியும், அசைவற்றதாகியும், மலமற்றதாகியும், சத்தியமாகியும், சத்தியுடையதாகியும், உண்மை வடிவினதாகியும், மோட்ச வீட்டைத்தருகின்ற ஏகவத்துவாகியும், பலவடிவுடையதாகியும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னப்பட்ட மூவகை யாருயிர்வர்க்கமாகியும், அவ்வுயிர்களுக்குயிராகியும், நன்மைகளெல்லாமாகியும், புதுமைகளெல்லாமாகியும், உயர்வு தாழ்வுகள் நோக்காத சமநிலையுள்ளதாகியும், அனாதியாக நிலைபெற்று விளங்கும் வேதங்களாகியும், வேதமுடிவின் காரணமாகியும், பரநாதமாகியும், நாதமுடிவில் விளங்கும் நாயகமாகியும், சொல்லும் பொருளுமாகிய இருகூற்றுப்பிரபஞ்சத் தொகுதிகளாற் பேசப் பெற்ற நிறைவாகியும், தளர்வற்ற உறுதியாகியும், ஞானாகாசமாகியும், தத்துவங்களிற் பிரித்து வேறாகச்சொல்லப்படும் அறிவாகியும், அறிவுள் நின்றுணர்த்

தும் அறிவாகியும், இறப்பு நிகழ்வு எதிர்வு என்னு மூன்று காலங்களாகியும், காலதத்துவத்தைக்கடந்த பொருளாகியும், ஒழுக்கங்களெல்லாமாகியும், சிற்பரமாகியும், சின்மயமாகியும், பிரபஞ்சத்தோடு கூடுவதுங் கூடாததுமான பொருளாகியும், யாவருக்கும் பெரிய ஆதாரமாக அகத்தும் புறத்தும் சூழ்ந்துள்ள ஆன்மலாபமாகியும், இறத்தலும்பிறத்தலுமின்றித் திரிபுபடாதுள்ள பூரணப்பொருளாகியும், சுத்தான்மாக்கள் அகமுகமாக நோக்குந்திறத்தி லுதிக்கின்ற நுட்ப அறிவாகியும், எங்கும் பிரிவறநின்ற ஆதி வத்துவாகியும், முதலு நடுவுங் கடையுமாகியும், அம்மூன்றுந் தனக்கில்லாத சோதியாகியும், சோதனையிலடங்கா வொருமொழிப்பொருளாகியும், நீதிநெறியாகியும், சீவர்களின் ஆங்காரத்தை யறுக்கும் அகார உகார அக்கர சொரூபமாகியும், ஓம் என்னும் பிரணவமாகியும், அம்மூன்றினுட் பொருளாகியும், அழகமைந்த சுபாவ சித்தமாகியும், சித்தாந்தத்து விளங்கும் ஞானப்பிரகாசமாகியும், நிர்வாண சொரூபமாகியும், நாதப்பிரபஞ்சமாகியும், எப்பொழுதும் அழிவின்றியுள்ள சுத்தநிலையாகியும், ஞானச்செல்வமாகியும், பெரிய அண்டங்களாகியும், அவ்வண்டத்திற் சிறிய அணுவாகியும், அருளாகிய அகண்ட வெளியில் அகண்டப்பொருளாகியும், ஆனந்தசொரூபமாகியும், அண்டத்தைக்கடந்த மேற்புற வெல்லையாகியும், கீழ்ப்புறவெல்லையாகியும், சமீபமாகியும், தூரமாகியும், எல்லாப் பக்கங்களாகியும், எந்தப்பக்கங்களு மில்லாததாகியும், மனவாக்குக் காயமென்னுந் திரிகரணங்களாலும் அவற்றிலுள்ள ஐயறிவுகளாலும் உணர்வதற்கரிய பதவியாகியும், குறைவில்லாப் பரம்பொருளாகியும், பகுக்கப்படாப் பொருளாகியும், இனிக்கின்ற பால்போல்வதாகியும், சுவையின் தரங்களாகியும், பரப்பிரம வத்துவாகியும், மேன்மையுடைய பிரமன், விண்டு, உருத்திரன், மகேசன், சதாசிவன், விந்து, நாதம், சத்தி, சிவம் என்னும் ஒன்பது வடிவங்க ளுடையதாகியும், தன்வயத்தனுதல் முதலாக வரம்பிலின்பமுடைமையீறாகவுள்ள எண்வகைக் குணசாகரமாகியும், அன்புருவமாகியும், ஆன்மாவின் உண்ணிலையாகியும், அதிசயப்பொருளாகியும், இன்பப்பொருளாகியும், அகம்புறம் அகப்புறம் புறப்புறமாகியும், ஒடுங்குதற்குரிய சகமாகியும், சகத்தோற்றத்திற்கு முதற்காரணமாகிய மாயையாகியும், சகமாயை கடந்ததாகியும், என்றும் மாயையோடு கூடியிருப்பதாகியும், யாதோருயிரையுங் கொல்லாத விரதியர்க் கின்பந்தருவதாகியும், யாவர்க்கும் அடையத்தக்க பொருளாகியும், அடைவதற்கரிய பொருளாகியும், நல்வினை தீவினைகளாகியும், தியானிக்கப்படும் பொருளாகியும், தியானத்தைக்கடந்த பொருளாகியும், பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சமகா பூதங்களாகியும், வணக்கஞ்செய்யும் யானும் தானுமாகியும், ஆகாயமுதலிய பஞ்சபூதங்களுட் பொருந்துவதும் பொருந்தாதது மாகியும், ஆனந்தமாகிய சுகவெளியில் என்றும் வசிப்பதாகியும், பொன்மை வெண்மை செம்மை கருமை பசுமை என்னும் பஞ்சவண்ண முள்ளதாகியும், அவ்வைந்து வண்ணங்களிற் கலந்த வொளியாகியும், அந்த ஒளிக்குள் எந்த ஒளியையும் விரும்பாதுள்ள இயற்கையொளியாகியும், பொன்மை, வெண்மை, செம்மை யென்னு மூவண்ணத்தின் சிருட்டி திதி சங்காரங்களைச் செய்வதாகியும், மகேச சதாசிவர்களாற் சீவர்கட்குப் பாச நிறைவித்துப்பின் போக்குதலாகிய திரோபவ அனுக்கிரகங்களைச் செய்வதாகியும், தன் அருண்மேனியில் தமருகமேந்திய திருக்கையினுல் சிருட்டியையும், அபயகரத்தினுல் திதியையும், மழுவேந்து திருக்கையினுல் சங்காரத்தையும், ஊன்றியதிருவடியால் திரோபவத்தையும், தூக்கியதிருவடியால் அனு

க்கிரகத்தையும் நிலைபெறவைத்துப்பஞ்ச கிருத்திய நடத்துவதாகியும், இவ்வைந்தொழிலு நடைபெற நடத்துகையிலுந் தானெனத் தோன்றாத நிர்விகாரப்பொருளாகியும், வாதனைக்கெட்டாததாகியும், நீளாமலெங்கு நீண்டிருக்கின்ற சர்வ வியாபக நிலையுள்ளதாகியும், அளப்போர் மீள்வதற்கியலாத மகத்தாகியும், அணுவாகியும், பெருமையுஞ் சிறுமையுந் தன்னிடத்திலில்லாததாகியும், அடைதற்கரிய பொருளினு மரியதாகியும், தூரிய வெளியாகியும், பரவெளியாகியும், பரவிந்துவின் பிரகாசமாகியும், சிவானந்தவூறலாகியும், தெளியப்பெற்றவுலகமுடிவின் ஆதிகற்பகாலமாகியும், சங்கற்பவிகற்பங்களாகியும், நிருவிகற்பாகாரமாக நிற்பதாகியும், அழகுடைய சோமசூரியாக்கினியென்னு மூன்று சுடர்களாகியும், முச்சுடர்களுந்தோன்றுதற்கு முன்னும் பின்னும் உள்ளவொளியாகியும், எந்தச்சுடர்களும் நிகராகாமல் இயற்கையாகவுள்ள பரஞ்சுடராகியும், சீவதேகங்களில் நிறைவாகியும், குறைவாகியும், நிறைவுங்குறைவுமில்லாததாகியும், இரகசியப் பொருளாகியும், யாவர்க்கும் விளங்குவதாகியும், மந்திரசொரூபியாகியும், அழியாத சச்சிதானந்தமாகியும், தனக்குவமிக்கும் பொருளில்லாததாகியும், ஞானமாய் நின்றெல்லாப் பொருளையும் வெளிப்படுத்துவதாகியும், வியக்கின்ற சிவயோகமாகியும், சிவயோகியாகியும், சிவயோகத்துதிக்கின்ற சிவபோகமாகியும், சிவபோகியாகியும், சிவபோகத்தை யன்பருக்குதவும் ஏக வத்துவாகியும், கேவல சகல சுத்தங்களென்னு மூவித அவத்தைகளாகியும், கீழ்மையுள்ளகேவலசகலங்கள்சிறிதேனுந்தன்கணில்லாததாகியும், காட்சியென்னு ஞானமும், காண்பான் என்னும் ஞாதுருவும், காணப்படுபொருள்என்னு ஞேயமுமாகியும்.அறிஞர்செய்யுமெய்ப் பொருளாராய்ச்சியாகியும், ஆராய்ச்சியாற் புணர வரியதாகியும், மேன்மைபெற வொருதொழிலைச் செய்கின்ற கர்த்துருவாகியும், செய்யுந்தொழிலாகிய கிரியையாகியும், செயப்படுபொருளாகியகர்மமாகியும், செய்யப்பட்டதொழிலால் உயிர்வாழ்வோனுகியும், உயிரை வாழ்விக்கும் உத்தம புருடனுகியும், நிறைவுற்ற அவனுகியும், அவளாகியும், அதுவாகியும், அவையுந்தொடர்ந்து பற்றுதற்கரிய மதிப்பினையுடையதாகியும், சந்தேக விபரீத அஞ்ஞானங்கள் பற்றாமல் விட்டொழித்துப் பொய்யாகிய விடயவிச்சை யெட்டினையுஞ் சிந்தையிற் பொருந்தாதவராகியும், தாம் செய்யுமோர் தொழிலால் விளையுஞ் சுகமும் மற்றோர் தொழிலால் விளையுந் துக்கமுமாகிய பற்றற்று விளங்குங் குணமுடைய்வராகியும், உலகிற் செய்யப்படுந் தொழில்களில் ஒரு தொழிற்கண் வெறுப்பும் பிறிதொரு தொழிற்கண் விருப்பு மதிகரிக்கின்ற அகச்சார்பு புறச்சார்புகளான் மயங்காப் பெருமையினையுடையவராகியும், உலகிற்பற்றுள்ளதாகிய வொரு பொருளின்கண் குளிர்ந்தகிருபையும், பிறிதொருபொருளின்கண் வெவ்விய கோபமுங்கொள்ளாத் தன்மையுடையவராகியும்,நீரின்கண்ணுள்ள குளிர்ச்சியுநிகராதென்னும்படிசத்துவகுணமுதிர்ந்த தெள்ளுணர்வுடன்ஒன்றுகிய தத்துவாதீதப்பொருளை யுணர்ந்தவராகியும், அஞ்ஞானமின்றிப் பொருந்திய அறிவின்கண் சங்கற்பித்தல் சிந்தித்தல் மறத்தல்களாகிய ஆதிமத்தியாந்த பரியந்தம் பதிப்பொருள் ஒன்றன்றி இரண்டுள்ளனவென்னு முணர்வில்லாதவராகியும், நிச்சயமாக விளங்குகின்ற சங்கற்பமாதி மூன்றினுள் அடுக்கிவரும் ஒன்று நீங்கிய ஒன்பது - அதாவது இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதியாகிய அஷ்டாங்கயோகப் பயிற்சியாற் காமம், வெகுளி, மயக்கமென்னு முக்குற்றங்களைக்கடிந்தவராகியும், நினைத்தலும்,சிந்தித்தலும்,நிச்சயித்தலும், அகங்கரித்தலுஞ் செய்கின்ற மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னு நான்கு அந்தக்கர

ணங்களும் விகற்பநடையைக் கருதாமல் இறந்து ஆன்மவிசாரத்தி லழுந்தி நின்று பரஞான விருத்தியுறப்பெற்றவராகியும், மெய் வாய் கண் மூக்குச்செவிகளாகிய வைம்பொறிகளினிடமாக நடமாடி, ஐம்புலன்களாகிய சத்த பரிசரூப ரசகந்தங்களை நுகரவரும் ஐந்தாசைகளை யறுத்தவராகியும், இவ்வுலகில் உணர்ச்சி குன்றாமல் தம்மை யடிமைகொண்டருளுங்கடவுளராகிய விநாயகரை மூலாதாரத்திலும், பிரமதேவரைச் சுவாதிட்டானத்திலும், விட்டுணுமூர்த்தியை மணிபூரகத்திலும், உருத்திரமூர்த்தியை அநாகதத்திலும், மகேச்சுரரை விசுத்தியிலும், சதாசிவரை ஆஞ்ஞையிலும் தரிசித்து அப்பாலுள்ள நிராதார மீதானத்தி னிற்பவராகியும், போகானுபவம் பெரிதுடைய தேவர்களும் தம்மை யெதிர்கொண்டு வணங்கி, ஆசனத்திருத்தி, திருவடிகளை நறுநீராற்கழுவி, பன்மலர்களாலருச்சித்து, தூபங்கொடுத்து, தீபங்காட்டி, முகமனுரையாற் புகழ்ந்து, இன்னடிசிலூட்டி யுபசரிக்கு மொன்பதுவகைப் புண்ணிய கிருத்தியங்களைச்செய்யும்படி யேழு பவசாகரங்களைக்கடந்தவராகியும், இடைகலை பிங்கலை என்னும் சந்திர சூரியகலைகளை யோகநூல் விதித்தபடி முறையாக மாறி மாறிப் பூரக கும்பகங்களைச்செய்து, பிராணவாயுவைத் தடுத்துநின்று, ஞான நேத்திரத்தாற் பரஞ்சோதியைக் காண முயலும்பெரியோர் தாவுகின்ற நிலம் நீர் தீ வாயு ஆகாயம் சூரியன் சந்திரன் ஆன்மா என்னும் அட்டமூர்த்தங்களுக்கு மேலாகிய பரவெளியை யடைந்தவருமாய்த் தேன்போலினிக்குங் கருணையுடைய சுத்த சிவத்தோடு கலந்து சருவ வியாபகராய் விளங்குஞ் சான்றோரிதயாலயத்தினின்றும் பிரியாதவராகியும், மயக்கத்தைச் செய்கின்ற ஆணவ காமிய மாயையென்னு மும்மலங்களின் தாக்கு ஒழிந்து, தொண்ணூற்றாறு தத்துவங்களின் பற்றுக்கோடாகிய காய்மும் வாக்கும் பெருமையுறுத மனமுமொழிந்து, எங்கும்படி வாய்ப்பதாகிய சிற்றின்ப சுகமும், இவை தோன்றுகின்ற மண்ணுலக விண்ணுலகத் தோற்றங்களு மொழிந்து, இராப்பகலாகிய கேவல சகலங்களொழிந்து, நேதிசெய்தவிடத்தி னின்றதொழிந்து, நான் என்னுங் காண்பானும் ஞானமென்னுங் காட்சியும் தான் என்னுங் காணப்படுபொருளு மொழியாம லொழிந்து, மவுனநிலையின்கண்ணே நிலைபெற்றிருக்குந் தன்னிகரில்லாத நிரதிசயானந்த வடிவினை யுடையனாகி நிற்கும் மேலான ஞானநிருத்தம் புரிவோன் எவன்? அண்டபிண்டங்களின் அகத்தும் புறத்தும் அகப்புறத்தும் புறப்புறத்துங் கலந்து நின்ற பேரருட்சோதியாய் விளங்குந் தற்பரன் எவன்?

அன்பராது பத்திநிறைந்த சித்தாம்புயத்தில் அவரவர் பாவிக்கின்ற பாவாகாரமுடையவனாய் விரைந்துசெல்பவன் எவன்? நீராடுவோரைப் புனிதமாக்கத்தக்க கங்காநதி முதலாகிய தீர்த்தங்களனைத்து மானோன் எவன்? வலியுடைய பாவமென்ப தொன்றுந் தன்னை யணுகுதலில்லான் எவன்? தேவரையுஞ் சீவரையு மாள்கின்ற வீசன் எவன்? செய்தற்கரியவாகிய செயல்கள் எல்லாம் கருவிகளினுதவிவேண்டாது சங்கற்பமாத்திரத்தால் எளிதிற் செய்யவல்லான் எவன்? அந்திக்காலத்துத்தோன்றும் செவ்வானம்போலுஞ் செவ்வண்ணமுடைய பெருமான் எவன்?

ஸ்ரீகைலாசகிரியிற் கல்லாலவிருக்ஷத்தி னீழலிலெழுந்தருளிப் பிரமதேவனுடைய மானச புத்திரர்களாகிய சனகன், சனந்தனன், சனற்குமாரன், சனற்சுஜாதன் என்னு நால்வர்க்கும் அவரால் வேண்டப்பட்ட திரிபதார்த்தங்களின் இலக்கணங்களை யுபதேசித்து, முன்னிலைச்சுட்டு நீங்கிய பரஞானனு

பவ நிலைக்கட்பெறுஞ் சுகாதீதப்பெருவாழ்வினைச் சின்முத்திரைதரித்த திருக் கைமலரால் வழங்கி வாழ்வித்த பற்றற்ற விநோத மாதவ யோகியாய் விளையாடி வீற்றிருந்தோன் எவன் ?

அளவில்லாத அண்டகோடி முழுதும் சிறிய அணுவிற்றோன்றும்வண்ணம் அடைத்தருளி, அவை வன்மையுடையனவாய் அவ்விடத்தி னிலைபெற்றிருக்க இருத்தவல்ல சித்துவிளையாட்டுடையான் எவன் ? அனாதியில் அழிவில்லாச் சிறுகன்னிபோலத் திருவுருக்கொண்டருளிய கிரியாசத்தியம்மையார் ஞானத் திருவிளையாட்டிற்றோற்றி நிலைபெறும்படி அண்டகோடிகளை அழியாமற் கூட்டுவிக்கும் சித்துவிளையாட்டுடையோன் எவன் ? இகபரபோகப் பொருள்களில் யாதொன்றும் வெறுத்தலும் விரும்புதலுஞ் செய்யாத சித்தமுடைய சீவன்முத்தர்களைப் பரிசியாமற் பரிசிக்கின்ற சித்தன் எவன் ? உருவம் பற்றியதாகத் தோன்றாத பரமாணுவினுட் பிரகாசிக்குஞ் சிறிய அணுவாகி, யங்கே யொளித்திருக்கின்ற சித்தன் எவன் ?

உலகமுழுது மநித்தியவடிவத்தோடு நிலைபேறுடையனவாய்த் தோன்றாது தோன்றும்படி வையாது வைத்தருளும் இந்திரஜாலவித்தையைச் செய்யாமற் செய்கின்ற சித்தனெவன் ? சப்த மகாசமுத்திரங்கள் சூழ்ந்துநிற்க அவற்றின் மத்தியில் வைக்கப்பட்டதாகிய பூமண்டலத்தில் சீவகோடிகளை மகா மாயையாகிய குடத்தில் வைத்தாட்டுகின்ற சித்தன் எவன் ?

நிலையில்லாத சரீரங்களாகிய மட்குடத்திலே நிலைபெற்று நிற்கமாட்டாத வாயுவையடைத்து நியமித்த கால வளவு நீங்காது நிலைத்திருக்க வைக்கின்ற சித்தன் எவன் ? வெவ்விய பாம்புகளை யாபரணமாகத் திருமேனியிற் பூண்டு வெவ்விய புற்றினையொத்திருக்கும் சரீரத்துள் வசித்து மூலாதாரத்திலுள்ள செம்பாம்பாகிய குண்டலிசத்தியை யாட்டுகின்ற சித்தன் எவன் ? தன் ஒளியுடைய திருக்கைம்மலரில் ஒன்றும் பற்றாதவனாகி ஆன்மாக்கடோறு நின்று, அவரவர் பலசன்மங்களிற்செய்த புண்ணிய பாவங்களாகிற வலிய கயிற்றாற் கட்டி, அவர்களை யாட்டும் சூத்திரதாரியாயுள்ள சித்தன் எவன் ? வள்ளலாயுள்ள தான் அசைவானாயின், அவன் சங்கற்பத்தின் வழித்தாக உலகமுழுதும் அசைந்தாடுமென்று வேதங்கள் செந்தேன்போ லினிக்கின்ற வார்த்தைகளாற் பேசப்பெற்ற சித்தன் எவன் ?

சகல சீவர்களையும் அவரவர் செய்த புண்ணிய பாவகர்மங்களின் பலன்களாகிய இன்பப்போகமும் துன்பப்போகமு மனுபவிக்கும்படி வகுத்த எழுவகைத்தோற்றங்களுக்குரிய சரீரங்களிலிருத்தி,அவை நாசமடையுங்காலத்திற் பாச க்ஷயமுண்டாமளவும் வெவ்வேறு சரீரங்களிற்புகுத்துமாறு சங்காரத்தொழிலால் அவர்களை அவரவர்பெற்ற தனுவினின்று நீக்கி, புனருற்பவத்தளவும் பெண்பிள்ளையாகிய மாயையிடையொடுக்கி, இளைப்பாற்றுவித்துப் பின்னர் உலகத்தில் தோற்றமுடையவராக வருவிக்குஞ் சித்தன் எவன் ? யாதொரு பொருளுந் தோன்றாதொடுங்க அந்தகார மூடுகின்ற சர்வசங்காரகாலத்திற் சொல்லும் பொருளுமாகிய பிரபஞ்சத்தொகுதி முழுதுந் தனது திருவடியின் சில விரல்களில் ஒடுங்க வொடுக்குகின்ற சித்தன் எவன் ?

பலவகைப்பட்ட வொழுங்கொடுகூடிய வன்மையுடைய கர்ப்பாசயப்பையினுள்ளே தங்கி வளர்கின்ற கருவுக்கு நல்லமுதூட்டுகின்ற சித்தன் எவன் ? சரீரத்தினின்று அரும்பும் வேர்வையினும், விதைகளடங்கிய நிலத்தினும், முட்டையினும் கருவை யமையச்செய்து அக்கருவுக் கமுதூட்டுஞ் சித்தன் எவன்?

விளையும் பலன்கட்குக் காரணமாகிய விதையொன்று மில்லாமற் பலன்களை விளைவித்துச் சீவர்கட்கு வழங்குகின்ற சித்துவிளையாடல் எக்காலத்து முள்ள சித்தனெவன்? அழிவிலதாகிய உள்பொருள் எனப்படுஞ் சத்துடன் வெளிப்பட்டு, சித்திலக்கணம் புலனும்படி யுலகின்கண்ணே நேத்திரமிரண்டு, செவியிரண்டு, நாசித்துவாரமிரண்டு, வாயொன்று, பாயுரு உபத்தம் இரண்டாக நவத்துவாரங்களுடைய பாவைகளைச் செய்கின்ற சிற்பத்தொழிலில் வல்லவனாகிய சித்தன் எவன்?

பலபலவான கருங்கடல்கள் பிரவாகரூபமாய்ப் பூமியின்மேல் வாராத வகை தடைசெய்யுங் கரைகளின்றி அளவில்லாத கற்பகாலமாகத் தன் ஆணையிலமைந்து நிற்கவைத்த சித்தனெவன்? தன் ஆணையைக்கடவாத மகாசமுத்திரங்களின்மீது வடவானலமென்னும் பெருநெருப்பை நிலைபெற வைத்துப் பூவுலக முழுவதும் அழிவின்றி நீடூழி நிற்குஞ் சீருடையதாகச் செய்கின்ற சித்தன் எவன்?

பிருதி தத்துவமுதல் நாத தத்துவ மீறாக ஆன்ம தத்துவம் இருபத்துநான்கும் வித்தியா தத்துவ மேழும் சுத்த தத்துவம் ஐந்து முட்பட வெண்ணப்படும் முப்பத்தாறு தத்துவங்களையு மான்ம வருக்க முய்யும்படி சங்கற்பித்து நின்று தோற்றுவிக்குஞ் சித்தன் எவன்? கண்டவர் இச்சிக்கும்படி ஆண்வடிவைப் பெண்வடிவாகவும், பெண்வடிவை யாண்வடிவாகவுமாற்றிச் சமீபத்தலத்தை வானுலகம்போல நெடுந்தூரத்திலுள்ளதாக அற்புதச்சித்தாடவல்ல வொரு சித்தன் எவன்?

பெருமையில்லாத அலியை யாணாகவும்பெண்ணாகவும், பெண்ணை யாணாகவும் அலியாகவும், ஒருபாலை மற்றொருபாலாகவுமாற்றி யழகுறச்செய்யவல்ல சித்தன் எவன்? இளமைப்பருவத்தை விருத்தப்பருவமாகவும், விருத்தப்பருவத்தை யிளமைப்பருவமாகவு முறுதிபெறமாற்றி விளையாடல்செய்யும் சித்தன் எவன்? காந்தியில்லாத வோட்டினைச் செம்பொன்னாகவும், செம்பொன்னை யோடாகவுஞ் சங்கற்பத்தால் வேதிக்கவல்ல சித்தனெவன்?

காட்டிலுள்ள எட்டிமரத்தைச் சொர்க்கலோகத்துள்ள கற்பதருவாகவும், கற்பதருவை யெட்டிமரமாகவும் இனிமைபொருந்தச் செய்யவல்ல சித்தன் எவன்? நான்கு முகமுடைய பிரமதேவனை நாரணற்குப் புதல்வனாகவும், நாரணனை நான்முகக்கடவுட்குப் புதல்வனாகவும் செய்யவல்ல சித்தன் எவன்? பெருமைபொருந்தத் திரண்டுள்ள கோடாகோடி அண்டங்களை யெல்லாஞ் சிவந்த தனது திருமேனியிலுள்ள வோர் உரோமத்துவாரத் துட்புகப் புகுத்துகின்ற செயற்கரிய செய்யவல்ல சித்தன் எவன்?

நீதியறியாக் கொடிய புலியினை வெண்பால் விளைக்கின்ற பசுவாகவும், பசுவைச் செந்நிறம்படைத்த புலியாகவும் படைக்கவல்ல சித்தன் எவன்? சந்திரனை அழகிய செங்கிரணம் வீசுகின்ற சூரியனாகவும், பூமண்டலத்தினும் பெரிதாக விரிந்த சூரியனைச் சந்திரனாகவும் சிருட்டிக்க வல்ல சித்தன் எவன்? உயர்வற்ற வோர் அணுவை யொருபெரிய மலையாகவும், ஒரு பெரிய மலையினை நுண்ணியதோர் சிற்றணுவாகவும் படைக்கவல்ல சித்தன் எவன்?

பண்டைக்காலத்துச் சிவபிரானை நோக்கித் தவம்புரிந்து பெற்ற வரத்தினால் வித்யுன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னு மூவர்களும் தமது பகைவர்களை வெற்றிகொள்ள வெண்ணிய பொழுதெல்லாம் அவரூரை யழிக்கும் பொருட்டு மேலெழும்பிச் சென்றிறங்கும் வன்மையுற்ற இரும்பு, பொன்,

வெள்ளியினலாய மும்மதில்களையுடைய முப்புரங்களையழிக்கும்படி தேவர்கள் பிரார்த்தித்தவண்ணஞ் சென்று, தன்னெடு போந்த தேவருள்ள நினைவைக் கண்டு சிரித்த வளவில் வெளிப்பட்ட நெருப்பினலழித்தருளிய சித்தன் எவன்?

முன்னொருகாலத்துப் பிரமனுந் திருமாலும் இந்திரன் முதலிய தேவர்களும் அசுரரோடு போர்பொருது மிகவிளைத்ததை நோக்கித் திருவுள்ள மிரங்கிய ஸ்ரீபார்வதிதேவியார் வேண்டுகோளின்படி சுரருக்கு வெற்றியுண்டாகச் சங்கற்பிக்க, அவ்வருள்வலத்தால் அசுரரை மாய்த்துச் சமரில் ஜெயமடைந்த சுரர்கள் தமது தோள்வலியால் வென்றதாக நினைந்து கருவித்துத் தம்மைத் தாம் புகழ்ந்துகொண்டிருந்த அவைக்களத்தில் இயக்கவடிவங்கொண்டுநின்று, "இதனை யசைக்கவல்லவர் யாவரோ அவர்தாம் அசுரரை ஜெயித்தவராவார்" என்று திருவாய்மலர்ந்தருளி, அயனுதி யமரர்களெல்லாரும் தம் வல்லமையால் அசைக்க முடியாதென்று தருக்கிழந்து நிற்க வோர் சிறுதுரும்பைத் தரையினட்டிய சித்தன் எவன்?

இந்திரன் முதலிய வும்பரைப்போலாது மேம்பாடுடைய பிரமனுந் திருமாலும் உருத்திரமூர்த்தியுந் தொடர்ந்துணரவொண்ணுத துரியாதீதப்பொருளாய் நின்ற சித்தன் எவன்? பிறரால் சுவையுடைத்தாகச் செய்ய முடியாத கல்லிற் சுவையுண்டாகவும், கனியிற் சுவையின்றுகவும் பணித்தருளவல்ல சித்தன் எவன்? சனனமரணத் துன்பங்கணீங்க உண்முகமாக நோக்குகின்ற எவ்வெவர்க்கும் பாவனுதீதனுகச் சிறந்துநிற்கின்ற மெய்ஞ்ஞானசித்தன் எவன்? சமயங்கள் பலவு மொருபரம்பொருளையே நாடிநிற்றலால் அவை தம்மிற் சமமாவனவென்னுஞ் சமரச நோக்குடைய பெரியோரைத் தன்னை நிகர்த்தவரென்று திருவாய்மலர்ந்தருளி அவர் உள்ளத்திற் சென்று பொருந்தி நிற்கின்ற சித்தன் எவன்?

மதுராபுரியில் எல்லாம்வல்ல சித்தராகிப் பாண்டிய மகாராஜன் முன் தோன்றி, அவனும் பிறருங் கண்டதிசயிக்கக் கல்லானை தின்னக் கரும்பினை யருத்தி, அம்மன்னர்பிரான் வீணே பவசாகரத்தி லமிழாது சிவலோகப் பெருவாழ்வடைய அருளுக்களித்த மகாசித்தன் எவன்? தனக்கிரண்டாம்பொருளில்லாத பரம்பொருள் ஒன்றே யென்றும், உயிர்வேறு பரம்வேறுள்ளன வாகலின் உள்பொருள் இரண்டேயென்றும், ஒன்றுகாமலும் இரண்டாகாமலும் ஒன்று மிரண்டு மின்றுகாமலு நிற்றலிற் பொருள் ஒன்றே யிரண்டே யென்றுங் கூறுகின்ற கேவலாத்துவித, துவித, சுத்தாத்துவித நெறியின்கட்சென்று நடுவில் நிற்கின்ற சித்தன் எவன்?

பாசுபதாத்திரம் பெறும்படி தவம்புரிந்த அருச்சுனன் தவநிலையைச் சோதிக்க வேடுவ வேடங்கொண்டநாளின் மூண்ட வெம்போரில், அருச்சுனனேவத் தன்மேற்பாய்ந்து தைத்தபாணத்தை மெல்லிய மலராக விழைந்தும், பிரமனுதி யும்பர்கள் ஏவுதலால் யோகநிலை குலைந்து கண்விழிக்கும்படி மன்மதன் எய்த மலரைப் பாணமாகக்கொண்டு முனிந்துநின்று, சுவரிற்றீட்டப்பட்டிருந்த திருமாலின் சித்திரவுருவம் சிவமே பொருளென்றுரைக்கப் பேசுவித்த சித்தன் எவன்? சனனமெடுத்திளைத்த சங்கமம் எனப்படுஞ் சரவுயிர்கள் தாவரமெனப்படும் அசரவுயிர்களாகவும், அவ்வசரவுயிர்கள் சரவுயிர்களாகவுஞ் செங்கையாற் செய்யாமல் சங்கற்பத்தினுற் செய்யவல்ல சித்தன் எவன்?

சராசரங்களிற் றங்கிநிரம்பிய சத்தெல்லாமாகியும், தானே தோன்றிய சுயம்புவாகியு நின்று, ஆனந்தச் சித்துவிளையாடல் செய்யுவல்ல சிவ சித்தன்

எவன்? ஆபத்து விபத்துகள் தலைநீட்டாது மனோலயம்பெற்ற மாதவருக்கும் தனது உண்மை வெளிப்படக்காட்டாது காட்டி நிற்குங் கள்வன் எவன்?

வண்டுகள் பாட்டிசைத்தொலிக்கப்பெற்ற கொன்றைமலர்மாலிகை பூண்டவனேயெனத் துதித்து வேதங்கள் தனது திருமுன்னின்று தரிசித்தாலும் தரிசனைக்கு அதீதனாய்த் திருவுரு மறைத்து நிற்குங் கள்வன் எவன்? தம்மை அடிமைகளாக்கிச் சப்தாதிவிடயங்களில் வாரிக்கொண்டு செல்கிற ஐம்பொறிகளையும் வெல்லாதவர்க்கு மறைத்து நின்று மற்றவைகளை வெல்வார்க்கு மறையாது வெளிப்படுகின்ற கள்வன் எவன்?

இகழ்வின்றித் தமக்கே யுரியனவாகக்கொண்ட பொருள்யாவுந் தன்னிடத்திற் சமர்ப்பித்து நிற்கும் அடியார்களிடத்துக் காணப்பட்ட உடல் பொருளாவியாகுமுடைமைகள் முழுதும் சருவசுதந்தரத்துடன் கொள்ளையிடுகின்ற கள்வன் எவன்? தன்னைத் தமது மனத்துத்தியானப்பொருளாக்கித் தற்போதமிழந்து நிற்கின்ற மெய்யடியார் தம்முட் கரந்து நின்று, அவருடைமைகளைக் களவாடுதலிற் கைதேர்ந்த கள்வன் எவன்?

அனாதி நித்தமாயுள்ள உலகத்தின் மன்னுயிர்த்தொகுதி தன்னையுணராது வஞ்சிக்கின்ற திரோதானசத்தியினால் உள்ளதுபோற்றோன்றி யில்லதாகமறைகின்ற கற்பனைசெய்து மயக்குகின்ற கள்வன் எவன்? அனாதி நித்தவுலகிலுள்ள உயிர்தோறு மொளித்துத் தன்னுண்மையை அவ்வுயிர்கள் காணாவண்ண மிருக்கத் தன் சமர்த்தினை யெல்லாங்காட்டி யுள்ளத்தே யுலவுகின்ற கள்வன் எவன்?

உயிர்களை விட்டு நீங்காத மண்ணாசை பொன்னாசை பெண்ணாசையாகிய மூன்று மயக்கங்களென்னுங் கண் மயக்கங்காட்டித் தன்னை அவ்வுயிர்களுணராது மயக்கிக் கரந்துநிற்குங் கள்வன் எவன்? உள்ளத்தை மயக்குகின்ற காமம் வெகுளி மயக்க மென்னு முக்குற்றங்களையுங் களைகின்ற அறிவுடையோர் தம்முடைய பொன் முதலாகிய பொருள்களைக் களவாடுங் கள்வன் எவன்?

குற்றமற்ற இடப்பாக மங்கையால் எப்பொருளையும் படைத்தருளி,அவை முழுதுந் தனது நெற்றிக்கண்ணா லழிக்கின்ற கள்வன் எவன்? சின்னாளும் பல்பிணியுஞ் சிற்றுணர்வுஞ் சுதந்தர வீனமுமுடைய தமது சிறுமையை யெண்ணாமற் சகமுதல்வன் நானென்று தருக்குற்று நிற்கில், அங்ஙன் நிற்பவர் மத்தியில் அந்த நான் வெட்கமுறப் பதிப்பொருள் தான் என்று தோன்றி நிற்குஞ் சதுரன் எவன்?

மான் என்னப்பட்ட அசுத்த மாயையைத் தனுகரண புவனபோகங்களாகத் தோற்றுவித்து, அம்மாயையால் உயிர்கள் தன்னை யுணராது மறைப்பித்துத் தன் ஒளியை யதனுட் காட்டுகின்ற சதுரன் எவன்?

நான்கு வேதங்களும், நான்முகத்தேவனும், நாராயணமூர்த்தியும் அன்புகொண்டு தேடுந்தோறுந் தான் மறைந்து வெளிப்படாத மேம்பாடுடைய சதுரன் எவன்? பெருமைகுன்றாப் பழமையாயுள்ள இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களின் முடிமீதமர்ந்த பொருளீதென ஆராய்பவர்க்குந் தன்னுருவைக் காட்டாது மறைக்கின்ற சதுரன் எவன்?

தியானிக்கு மன்பரது சிந்தையிற் தோன்றித் தனது சொரூபம் சுத்த ஞானாகாய மென்றொரு ஞானமொழியா லுணர்த்தியருளுஞ் சதுரன் எவன்? எவர் சீவன்முத்தர் பரமுத்தராக வுள்ளவரோ அப்பெரியார் சேவிக்க, ஞான சிங்காதனத்தில் வீற்றிருக்கின்ற தேவகோடிகளாற் புகழப்பட்ட தலைமையுடைய தேவன் எவன்? இன்னநிறமுடையான், இன்னதலவாசத்தான், இன்

னருணமுடையான் என யாவராலு முணரப்படாத அழகிய வண்ணமுடைய னாகிய தலைமையுடைய தேவன் எவன் ?

சத்திய ஞானசொரூப சித்தர்கள் தாம்வாழவும், அண்டங்களிலுள்ள சராசரவுயிர்கள் வாழவும், நாம் அனைவரும் வாழவும், தன்னுற்றிருவாய்மலர்ந்தருளிச் செய்யப்பட்ட வேதங்கணான்கும் வாழவுந் தான் பெற்ற திருமேனியைத் தந்த திருவருளே சத்தியாக மெய்யறிவின் சிறந்த வுருவமே தன் ஒப்பற்ற திருவுருவமாகக் கொண்டுள்ள தேவன் எவன் ? சிவபர சொரூபங்களிரண்டுமொன்றைவிட்டொன்றகலாத அநன்னியமானவொன்றென்றுணரஉணர்த்தி, அடியாருள்ளக்கோயிலிற் குருவடிவோடு சென்று வீற்றிருக்கின்ற தேவன் எவன்?

எக்காலத்துந் தனக்குச் சுகசமா யமைந்துள்ள திருக்கோயிலென்று கொண்டு சமயநெறிக்குஞ் சமரசநெறிக்கும் பொதுவாகிய சிற்சபையில் வாழாநின்றதேவன் எவன்? கீழ்ப்படுகின்ற பொய்ச்சமய நெறியைவிட்டு மெய்ச்சமய நெறியை யோம்பி, தானென மேலெழும் உணர்வைநீக்கி, மெய்யுணர்வையே யுறுதியாகப்பிடித்து, நெய் சொரியப்பெற்ற அக்கினிபோற் சொலித்துச் சுடுகின்ற அகங்காரக்கிரந்தி நசிக்கத் தாமரைமலர்போன்ற தனது திருவடித் தெப்பத்தைப்பற்றி இரட்சையாகிய திருவெண்ணீற்றை விதிப்படி யணிந்து, நடுநடுங்கி, மெய்யில் வேர்வையரும்ப, ஆனந்தக்கண்ணீர் அருவிகலந்தோட, உள்ளியல்பு தோன்ற என்பு நெகிழ்ந்துருகியும், மனங்கசிந்துருகியும், இன்ப நிறைந்த உயிருருகியும், அன்புருகியும், அன்பே யோர்வடிவமாகப் பொருந்தி, கடினவிதயநீங்கி, புண்ணியசொரூபா ! சந்திரகண்ட மணிந்த கட்டப்பட்ட செஞ்சடையாய் ! பொன்னென விளங்குங் கொன்றைமாலையாய் ! எங்கட் காதரவாயுள்ளாய் ! நினைத்தபடி அன்பருக்கருளும் அரசே ! அமுதமே ! பேரின்ப சமுத்திரமே! எங்கட்கு உறவே! மாற்றுரைக்க முடியாதுயர்ந்த பசும் பொன்னே ! மாணிக்கமணியே ! எங்கண்மணியே! தரும வெள்விடையாகிய வூர்தியை விரும்பிய மெய்ப்பொருளே! யென்று நிதமுந் தோத்திரம் புரிந்து நின்றால், அப்பொழுதே யுள்ளூறியும், அவ்வுள்ளத்துணர்வூறியும், அவ்வுணர்வினிரம்பியூறியுந் தித்திக்கும் அமுதூறித் தெண்ணீர் சுரக்கும் முகில்போற் பரந்து, சந்திரனைப்போற் குளிர்ந்து, உயர்வுடைய கொம்புத்தேன்போல் இனிக்குந் தேவன் எவன் ? திருப்பாற்கடலைக் கடைந்த காலையில் முன்னர்த்தோன்றி விண்ணளவு மெழுந்த ஆலகாலத்தின் வெம்மையாற் றகிக்கப் பட்டிறந்த தேவர் உயிர்பெற்றெழு மாட்சிமையைக் கொடுக்கின்ற மங்கல சூத்திரத்தைத் தேவமாதர்க்குக் கொடுக்கும்படி அக்கொடிய நஞ்சினை யமுதுசெய்தருளிய நாதன் எவன் ?

தேவர்கள் அன்பினால் அன்றுபூத்த மலர்களைத்தூவி அர அர வென்று முழக்கஞ் செய்து தோத்திரித்து வழிபட, அட்டமூர்த்தியாக நின்ற முதல்வன் எவன் ? புகழ்பெறும்படி இவ்வுலகில் அதிசயவடிவுடையவனாகி யெத்தகைய தேவராயினு முன்னின்றுகாண்பதற்கரியபொருளான கணேசமூர்த்தி எவன்? தன் அருட்கருணையை யாசித்துப் பூவுலகமெங்குந் தன்னை வாழ்த்திப் புகழ்கின்றவர் விரும்பிய காமியங்களை யருளாநின்ற கணேசமூர்த்தி யெவன் ? வலியுடையனவா யெதிர்க்கு மிடையூறு முழுதும் விலக்கி யாம் உயிர் வாழும்படி தனது திருவருளைத் தரிசிப்பித் தெமக்கு வழங்குங் கணேசமூர்த்தி எவன்?

மாட்சிமையுடைய சிவபெருமானும் வேதத்தின் முப்பொருளைக் கேட்க விரும்பி முந்தி நிற்க, அவ்வரும்பொருளைப் பிரமதேவனுக் குபதேசித்த கரு

ணைக்கடலாகிய சாமியெவன்? அடியராயினோர் தத்தமக்காகின்ற தருக்கங்களையகற்றி, தனது மரபுக்குரிய உண்மை ஞானத்தை யுபதேசித்து, வஞ்சத்தினையுடைய ஆணவ காமிய மாயைகளின் குற்றங்களை யறுத்தருளியவர் இதயக்கோயிலுள் வசிக்கும் குகேசன் எவன்? பகீரதன் செய்த பெருந்தவத்தால் வருவித்த ஆகாய கங்கையால் உலகங்கள் அழியாமற் காத்துத் தீமையகற்றி அதனைத் தனது செஞ்சடைமீது சேர்த்தணிந்த கடவுள் எவன்?

எவ்விடத்திருக்கப் பெறினுஞ் சுருங்கா நிலைமையுடைய சற்குணத்தோர் வணங்குகின்ற பாம்பாபரணந்தரித்த பரமன் எவன்? உள்ளன்பு குறையாது தோத்திரஞ்செய்து வழிபட்ட புண்ணியராகிய மார்க்கண்ட முனிவர்மேற் சினந்துவந்த கொடிய காலனையுதைத்த சேவடியுடைய குழகன் (கட்டழகன்) எவன்? உலகம் புகழ்கின்ற முடிவிலாற்றலுடைய மகாலிங்கமூர்த்திமுதல் சந்திரசேகரர், அர்த்தநாரீசர், நடராசர், கலியாணசுந்தரர், பிட்சாடனர், இடபவாகனர், காமதகனர் காலகாலர், திரிபுராந்தகர், கங்காதரர், தந்தியுரியர், யாகசங்காரர், திருமாலிடப்பாகர், கிராதவடிவர், கங்காளநாதர், தண்டீசப்ரசாதர், திருநீலகண்டர், சக்கரதானேஸ்வரர், சோமாக்கந்தர், கணேசானுக்கிரகர், ஏகபாதருத்திரர், சுகாசனர், ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி, அணைத்தெழுந்த நாயகர் ஈறாக இருபத்தைந்து மூர்த்தமுடையவனென்னும் ஐயன் எவன்?

சந்தேக நீங்கிய வல்லவர் சொல்லுகின்ற வடிவங்கள் எவையோ அவையெல்லாமுடைய இதத்தன் (புண்ணியன்) எவன்? சீவர்கள் தேவர்கள் யாவர்க்கும் தாம் தலைவராகும்படி தனது திருவடிகளை வணங்குகின்ற எத்தேவருக்கு மேலாகிய தலைமையைக் கொடுத்தருளும் பரமார்த்தன் (உன்னதப்பொருளாகவுள்ளவன்) எவன்? சீவர்கள் வினைப்போகந்துய்க்க எந்தத் தனுகரணங்களைப்பெற்று, எந்தப்புவனங்களிலிருந்து, எந்தப்பொருளை யனுபவிக்கச் சிந்தித்து வாஞ்சித்தாலும், அவர் இருக்குமிடத்திலிருந்து வாஞ்சித்தவைகளை வழங்கும் அண்ணல் (பெருமையுடையவன்) எவன்?

மிக்கபெருமையுடைய தாமரைக்கைத்தலந்தாங்கிய சக்கராயுதம் பெறும்பொருட்டுத் திருவீழிமிழலையையடைந்து, அங்குள்ள சிவலிங்கப்பெருமானைத் தினந்தோறும் ஆயிரம் தாமரைப்பூக்கொண்டருச்சிக்கையில், ஒருமலர் குறைய, அங்ஙனே தனது கண்மலரை இடந்து திருவடியிற் சாத்தக்கண்டு, திருவுள்ளமகிழ்ந்து விஷ்ணுமூர்த்திக்குச்சக்கரம் வழங்கிச் சக்கரதானவரதன் எனப்பெயர்பெற்ற முக்கண்ணன் எவன்?

திரிசிராப்பள்ளி யென்னுஞ் சிவதலத்திற் சிவபக்தியிற் சிறந்த வோர்மாது கருப்ப வேதனை படுஞ்சமயத்திற் றன்னருகிலிருந்து உதவி புரிவா ரொருவருமிலரேயெனத் தளர்வுறக்கண்டு,அவள் மனந்தளராமல் ஈன்றெடுத்த தாய்போலுருக்கொண்டு சென்றுபகரித்துத் தாயுமான தயாளன் எவன்?

திருக்காளத்தி கிரிக்கடுத்த உடுப்பூரில் வேடுவர் குலத்திலவதரித்த திண்ணனார் என்னும் இயற்பெயர்பெற்ற முருகப்பிரான்போல் வேலேந்திய செங்கைக் கண்ணப்பநாயனார் பண்டைத்தவத்தாற் குடுமித்தேவருக்காட்பட்டு வழிபுரிந்த அன்பின் மிகுதியாற் சிவலிங்கப்பெருமானுக்குச் சமைத்த ஊனமுதம் இன்சுவையுடைத்தோவெனச் சுவை கண்டுணர, முன்னர்த்தாமெச்சில் செய்து பின்னர் நிவேதிக்க, அதனை விரும்பிய நன்மையுடையதாகப்பூசித்து, நாட்களோராறில் முத்தியை யளித்த தயாளன் எவன்?

திருச்சேய்ஞ்ஞலூரிலே, பிராமண குலத்திலே அவதரித்த விசாரசருமர் என்பவர் ஆவினத்தின்மேல்வைத்த அன்பின்மிகுதியால் தம்மூரவர் பசுக்களைத் தாம் காட்டிற் கொண்டு சென்று மேய்த்துவர வனுமதிபெற்று மேய்த்துவரு நாளில், அவர் அங்குச்செய்த சிவலிங்கபூசைக்கு இன்றியமையாத அபிடேகத் திற்குப்பசுக்கள் தாமே மடிசுரந்து சொரிந்து நிரப்பிய பாற்குடத்தைக் கண்ட அவருடைய பிதாவானவர் கோபித்துப் பாற்குடத்தைத் தாளால் இடற, அச் சிவாபராதத்தைச் சகிக்கலாற்றாது, தந்தைதாளை மழுப்படையெறிந்து துணித்தருள, அவ்வருஞ்செயலையுவந்து, தானே யத்தொண்டருக்குத் தந்தையாகி, அவரைத்தொண்டர்க்கு நாயகராக்கி, அவர் அரசியற்ற ஓர் அண்டமும், தன் திருக்கோயில்கடோறுந் தனிப்பொற்கோயிலும், தனக்கு நிவேதிக்கப்பட்ட போனகமும், திருமுடித்தாமமும் அவர்க்குப் பரிசு வழங்கி யுயர்த்திய தயாளன் எவன் ?

நன்மணம் வீசுஞ் சம்புநாவற் கனியின்விதையைச் சிவலிங்கமெனப் பாவித்து மெய்யன்பினுற் பூசித்துத் திருவடி வணங்கிய சம்புமுனிவருக்கு வீட்டுப்பேற்றை வழங்கிய தயாளன் எவன் ? ஆண்டவனுவான் இவனேயென்று உலகத்தோர் தோத்திரித்து வழிபடப் பொன்னம்பலத்தில் ஆனந்தத்திருக் கூத்தாடுகின்ற தயாளன் எவன் ? சீகாழியில் அவதரித்த முழுமுத்தினையொத்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுரை யுலகத்தோர் தரிசிக்கும்படி அழகிய முத்துச்சிவிகையி லேற்றிவைத்த முத்தன் எவன் ?

சிவபக்தி நிரம்பப்பெற்ற திருநாவுக்கரசர் சத்திமுற்றம் என்னுஞ் சிவதலத்திற் சென்று சிவபெருமானைத்துதித்த சமயத்தில், எமன் தம்மைக்கடைநாளிற் பற்றிக் குமைப்பதன்முன்னர் "பூவாரடிச்சுவடென்மேற் பொறித்துவை" யெனப் பிரார்த்திக்க, நீ நல்லூர்க்கு வா, அங்கே நின்னெண்ணத்தை முடித்தருள்வேம் என்று திருவாய்மலர்ந்தருளிய வள்ளல் எவன் ?

கைலையங்கிரியினின் றனுப்பப்பட்டுப் பூவுலகில் அவதரித்த நல்ல தொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனுரை நோக்கி, "நாம் உனது திருமணத்தில் உன்னைத் தடுத்தாட்கொள்ள வந்தமையால் நீ யெனக்கு 'வன்றெண்டன்' என்றருளிய வள்ளல் எவன் ?

நன்மையைத் தருகின்ற சொற்றெண்டிற்குத் தனது கருத்தைக் காணிக்கையாகக்கொடுத்த திருவாதவூரடிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவாசகச் சுருதியை மாணிக்கமென்று வியந்துரைத்த வள்ளல் எவன்? திருவடியையடையும்பொருட்டு மேற்கொண்ட தவமுயற்சியினிற்குந் தன்னடியார் மனம்வருந்திற் சிறிதுஞ் சகியாது, அவர் உள்ளக்கருத்தை யுணர்ந்து அளித்தருளும் வள்ளல் எவன் ?

தன்னைத்தியானிக்கும் அன்புடன் குணமாட்சிமையுடைய நல்லோர்க்குக் குளிர்ந்த கருணையை வழங்கி யாட்கொள்ளும்பொருட்டு ஒப்பற்ற மால்விடையூர்ந்து, காட்சிதரவந்தருளும் வள்ளல் எவன் ? திருமால் முதலாகிய தேவர்கள் தரிசன நிமித்தம் அலையாத வண்ண மன்புகாட்டி யுயர்ந்த வெள்ளிமாமலையில் ஸ்ரீகண்டருத்திரராக வாழ்கின்ற கிருபை மிக்க வள்ளல் எவன் ?

'அவ்வள்ளலாயுள்ளவனே நம்மைத்தொண்டுகொண்டு நாராயணமூர்த்தியும் நாடுதற்கரிய பெருமையுள்ள முத்தியின்பத்தைத் தருகின்ற நமது தெய்வமாம். (அவனே) எப்பிறவியினுங் கருதக்கிடைப்பது நமக்கேயன்றிப் பிரமதேவனுக்குந் தேடினுங் கிடைத்தற்கரிய நமது தெய்வமாம். (அவனே)நீண்ட சிறப்பினை

யுடைய நல்ல வந்தனை செய்கின்ற நம்மையொத்த அடியார்க்கு நிகரில்லா ஞானச்செல்வந்தருகின்ற நமது தெய்வமாம்.

(அவனே) பிறராற் சொல்லப்படும் எளிமையுடைய நாம் மண்ணுலகில் என்றும் பிறந்திறவா வுறுதியையளித்தருளும் நமது தெய்வமாம். (அவனே) சகப்பாழ் சீவப்பாழ் பரப்பாழ் என்னு முப்பாழுந்தாண்டி, அவ்விடத்துள்ள முழுப்பாழாகிய பிரகிருதிக்கப்பாற்பட்ட பரம ராசியப்பொருளைப் புகழ்பெற நமக்குச் சொல்லாமற் சொல்லியருளும் நமது பரமாசாரியனும். (அவனே) நீங்காத துன்பத்தையுடைய வேறுபாடியாதொன்றும் அடையாத ஞானநெறியைப் பிசகின்றி நமக்கு உபதேசிக்கும் பரமாசாரியனும். (அவனே) பதிபசுபாச விலக்கணந்தெரியா துழல்கின்ற அஞ்ஞான நிலையுற்றிருந்த நமது சித்தந் தெளிய நாடோறுந் தெளிவிக்கு நமது பரமாசாரியனும். (அவனே) உயிர்க்குறுதி பயப்பனவாகிய அறம் பொருள் இன்பம் வீடெனப்படு நால்வகைப் புருடார்த்தங்களுள் யாதொன்று முணராமற் பித்தர்போலறிவுமயங்கிக் கிடந்த நமக்கு இப்பிரபஞ்சச் சிற்றின்பப்போகம் தீமையுடையதென்றறிவித்த பரமாசாரியனும்.

(அவனே) வீசுகின்ற அலைகளால் ஓசைபெற்ற கடல் சூழ்ந்த வுலகிற் குற்றமின்றி யாசையுடன்நம்மைப்பெற்றெடுத்த அப்பனும். (அவனே) குற்றங்கள் மக்களிடத்துப் பொருந்தவிட்டு அவற்றைக் களையாமலன்பின்றி வளர்க்கின்ற மற்றைய உலகத்தந்தையர்போலல்லாமல் அன்போடு நம்மை வளர்க்கும் அப்பனும். (அவனே) இன்பமுண்டாக இவ்வுலகத்து மன்னுயிர்களாகிய குழவிகள் இதயமகிழ்ந்து, "அம்மையப்பா"வென்றழைக்கின்ற நமது அப்பனும். அவனது புகழை நாம் துதியாமல் இகழ்ந்து திரிந்தாலும் அது குறித்துத் தன் வண்மையை யொளிக்காமல் இதனைப்பெற்றுக்கொள் என்று தனது கருணைத்திருவமுதை நாம் உண்ண அள்ளிக்கொடுக்கும்(அவனே) நமது அப்பனும். (அவனே) வேண்டுவதொன்றை யெண்ணிக்கொண்டு, இத்தினமே யெமக்கருள்வாயென்று துதிசெய்யில், அத்தினமே நமக்கருள்கின்ற நமது அப்பனும். (அவனே) நாம் துன்மார்க்க நெறியினின்று பாவகருமங்களைச் செய்யும்போது நம்மைமிகவும் மறக்கருணையால் அச்சுறுத்தித் திருத்திச் சன்மார்க்க நெறியினிற்கும்படி அறக்கருணைகாட்டி இதோபதேசஞ்செய்யும் நம்முடைய அப்பனும். (அவனே) குற்றமுற்றதும் மிகவும் உயிர்களை வஞ்சிப்பதுமாகிய மும்மல வலியால் அஞ்ஞானமேலிட்டுப் பல பிறவிகளெடுத்துத் துன்பமடைந்து வாடுகின்ற நம்மை அஞ்சாதீர் அஞ்சாதீர் என்று அபயமளிக்கின்ற நமது அப்பனும்.

(அவனே) விடத்தையொப்பதாகிய மரணமென்னும் வாதனையைத்தினந்தோறு நினைந்து, நாம் அஞ்சும் அச்சத்தை யறுத்து, நம்மை யடிமைகொண்ட அப்பனும். (அவனே) இவ்வுலகில் இரவும் பகலும் அறிவிலிகளாகிய நாம் இயற்றும் குற்றங்களாயிரமும் பொறுத்து நமக்கருள் செய்கின்ற நமது அப்பனும். (அவனே) தான் பெற்றகுழந்தை பசியால் வருந்தி அழாமுன்னர்க் கைகளாலெடுத்து, மார்பில் அணைத்து முத்தமிட்டு,முலைப்பாலூட்டுந் தாயினும் பேரன்புடைய நமது அப்பனும்.

(அவனே) நமக்கு நன்மையைத் தரும்படி நம்மையுலகின்கண் தனதுசரீர வலிகெடப் பத்துமாதங்கள் சுமந்து பெற்றெடுத்த நல்ல தாய்காண். (அவனே) இப்பிறப்பில் அன்றோர் தினத்தில் நாம் அடைந்த பசிநோயைக்கண்டு, அந்தோ! சகியாமல் நமக்கு நிசிவேளையில் உணவளித்துப்பசிவருத்தத்தை மாற்

றிய நல்லதாய்காண். (அவனே) எக்காலத்தும் மருள்வடிவும் மருளூட்டமும் பெற்றுச்சிறிதும் அருளூட்டமும் அருட்பெருமையு மில்லாத சிறு தேவர்கள் வகுத்த சிறு நெறியிற் சேர்க்காமல் நம்மைத்தனது பெருநெறியிற் சேர்த்து, அருட்பேற்றினுக்குரியவராக வளர்க்கின்ற நல்ல தாய்காண்.

(அவனே) நம்மை மேலேறவொட்டாது கீழ்ச்சனனங்களிற் புகுத்தி, நரகத்தில் அமிழ்த்தவல்ல தலைமேல் வைக்கப்பட்ட சுமையைப்போல அதிகரித்துப்பெருகுகின்ற பஞ்சமகாபாதகங்களை நாம் நினைந்து செய்தபோதினும், தனது பெருங்கருணையால் அவற்றைத்தன் திருவுளத்திற்கொண்டு கோபியாமல் மன்னித்து, நமக்கும் அருள் வழங்குகின்ற நல்ல தாய்காண்.

(அவனே) தீமைகள் அதிகரிக்கின்ற துன்மார்க்கத்தில் நாம் சென்றாலும், அறியாமையாற்புக்க அந்நெறியினால் துன்புறுவோம் என விரங்கி, நம்மிடத்து வைத்த தனிப்பெருங்கருணையால் இங்கு வருகவென்றழைத்து நம்மைத்தன் அருளடைதற்குரிய சன்மார்க்க நெறியிற் சேர்த்தருளுகின்ற நல்ல தாய்காண்.

(அவனே) நம்மையுடையன், நம்மைநீங்கா வுறவினன், நமது துணைவன், நமது பெருங்காவலன் என்றுணர்ந்து தன்னைச் சிரத்தையுடனே நாம் தேடு தன் முன்னம் தன்கருணையால் நம்மைத் தேடியடைந்து, தனது அருமையும் பெருமையும் உபகார குணமும் நாம் உணர வுணர்த்திப் பின்னர்த் தான் கரந்து, தன்னை நாம் தேடும்படி செய்கின்ற நல்லதாய்காண்.

(அவனே) உலகத்தில் இகபரபோகங்களில் வெறுப்பும், திருவருளில் விருப்பும் நமக்குண்டாகுந்தோறும் கர்ம மலபரிபாக காலங்கண்டு தயவுடன் நறிய திருவருட்பாலை யூட்டுகின்ற நல்லதாய்காண். (அவனே) நமது சனன மரண நோய்களையும், அவற்றால் பலவாறு விளைகின்ற வேதனைகளையும், அவற்றால் நேரிடுகின்ற தளர்வுகளையும், துன்பங்களையும், இவற்றைப் பரிகரிக்கு நிமித்தம் துணையாக விரும்புகின்ற பொருள்களையடைவதன்கண் உண்டாகும் ஆசைகளையும் நீக்கி நமக்கருளுகின்ற நல்ல தாய்காண்.

(அவனே) இவ்வுலகின்கண், தாம் பெற்றெடுத்த மக்களை வளர்க்குங்காலைக் குளிர்ந்தநீரில் ஸ்நானம்செய்விக்கிற்சீதளத்தாற்சுரமுதலியநோய்காணுமென்றஞ்சி, வெந்நீரிலாட்டுந்தாயர் கொள்கைக்குமாறாக, நம்மை வெந்நீரிலாட்டினால் உடம்பு நோகுமென்று தயவோடு மலமாசு ஒழியும்படி திருவருளாகிய தண்புனலிலாட்டி வளர்க்கின்ற நல்ல தாய்காண்.

(அவனே) எத்தன்மையாலுஞ் சிறந்தோனா யிவ்வுலகில் நம்மிடத்துத் தயவுபாராட்டுகின்ற நாலாயிரந்தாயர் ஒருருக் கொண்டாற்போல நமக்குற்ற நல்ல தாய்காண்.

(அவனே) பசியாலழுகின்ற சிசுவைப்போலப் பிறவித்துயராலும், இலம்பாட்டாலும், வேண்டப்பட்டதொரு பொருள் அடையாமையாலும், இவை போன்ற கவலைகளாலுஞ் சகிப்பின்றி யாம் அகமும் முகமும் வாட்டமடைந்து அழுவோமாயின், எம் வருத்தங் கண்டு தரியாது, எம்மைத்தேடிக் கைகளாரவெடுத்து மார்பில் அணைக்கின்ற நல்ல தாய்காண். (அவனே) தனது திருவாய் மலர்ந்துபாட யான்கேட்டு மகிழ்வதன்முன் மைந்தர் மழலைச்சொற்கேட்டு மகிழுந் தாய்போல, யான் செந்தமிழ் மொழியிற் பாடித்துதிக்க என்பாடல் கேட்டு மகிழ்ந்தருளும் நல்லதாய்காண். (அவனே) வானுலகத்தோர் புகழ்ந்து பாடும் பரஞானப் புணர்ப்பினைச் செய்யுந் திருவருட்சத்தியைப் பதிவித்து

நமக்கினிதாகிய அருண்மணஞ் செய்விக்கும் அம்மான்காண். (அவனே) தேனும், பாலும், அமிர்தமும், முக்கனியுங், கற்கண்டும், சீனிச்சருக்கரையும், யாம் நிகராகமாட்டோ மென்றேங்கும்படி மதுரிக்கின்ற இனிய அருளைக் கொண்டு, பேரன்பால் நம்மை அருண்மணக்கோலங் கண்டபின்னர் விருந்து செய்து மகிழ்விக்கும் நமது அம்மான்காண். (அவனே) வலிய ஆழமுடைய பாவக்கடலுண் மூழ்கி, உள்ளமானது வருந்தப்பெற்ற நம்மைக் கைகளா லெடுத்துச் சூழ்ந்த முத்தியாகிய கரையிலேற்ற வல்ல துணைவன் காண். (அவனே) பெற்ற பதார்த்தங்களைச் சிறிதாக்கிப் பெறுதவற்றில் இச்சையைப் படைக்கின்ற ஆசையால், துக்கமயமாகிய சிற்றின்ப சுகத்தையே சுகமென்று கருதி, பேரின்ப சுகம் இன்ன தன்மையுள்ள தென்று நினையளவுந் தெரியாத நம்முடைய துன்பங்களைப் போக்கியருளுந் துணைவன்காண். (அவனே) கொடிய பாவங்களை மென்மேலும் விளைவிக்குந் தீய மார்க்கங்களில் நடந்து, நீங்குமாறு தெரியாமல் உள்ளகப்பட்டு மயங்கித் தியங்குகின்ற நமக்குச் சுத்த சன்மார்க்க நெறியைக்காட்டி யருளுந்துணைவன்காண்.

(அவனே) இப்பெரிய உலகில் இன்று வந்த செயற்கை யுறவென்பதின்றி இயற்கை யுறவாகி,நமக்கு அளவிறந்த அனாதிகாலமாக நாம் புகுந்த உயர்திணை அஃறிணை யோனிபேதங்களில் நம்மொடு புகுந்தும், அவற்றினின்று நீங்குங் காலங்களில் நீங்கியும், நம்மை விட்டுப்பிரிவின்றி நம்மொடு வாழ்ந்தருளும் அருட் சுற்றங்காண். (அவனே) பிறக்கத்தொடங்கிய அனாதிகால முதலாகப் பெற்ற வுடம்பைத்தான் என்றே கருதி யபிமானிக்கும் உயிரினுஞ் சிறந்து நேயம் பாராட்டும் நம்முடைய நேசன்காண். (அவனே) நாம் அவன் திருவுருவை யுள்ளத்தில் வைத்துத் தியானிக்காது பேய்கோட்பட்டவர்போலச் சுவாதீனமதியிழந்து மறந்தாலும் நம்மைத் தினைப்போதும் விட்டுப்பிரியாத நம்முடைய நேசன்காண்,(அவனே)நமக்குத் தீமையைவிளைவிக்கும் ஆபத்துநேரிடும் வேளையில் இந்தா வென்று கைநீட்டிக் கருணைநிதி வழங்குகின்ற நம்முடைய நேசன்காண். (அவனே)நாமரூபப் பிரபஞ்சத்திற் புன்மையுடைய மாயையின் மயக்கத்தின் மூழ்கி மோகநெறியிற் செல்லுந்தோறும் நம்மை 'இங்குநில்' என்று நிறுத்தி அருணெறியிலிருத்துகின்ற நேசன்காண்.

(அவனே) சில்லெனக்குளிரும் அருளமுதை யுள்ளத்தின்கட் சொரிகின்ற கருணைநிதிபோன்ற தன்னை மறந்து நாம் உண்டாலும், அதற்காக மனத்தாப மடையாத நேசன்காண். (அவனே) சிநேகித்துச்சென்று நாம் வஞ்சனையை யெண்ணி வாழ்ந்தாலும் ஒரு சிறிதுந் தான் தன் திருவுள்ளத்தி லடைத்து வையாத நேசன்காண். (அவனே) குறைவில்லாப் பிரபஞ்சத்தில் வாழ்கின்ற நாம் ஈண்டு பெறுதற்கரிய பொருள் யாதுவேண்டினும் நமக்கு முன்னின்று வழங்குகின்ற நேசன்காண்.(அவனே)அன்பொடு பொருந்தும் நமக்கு இம்மண்ணுலகிலும் அவ்விண்ணுலகிலும், மற்றெவ்வுலகிலும் உடலுடனொற்றுமையுற்ற உயிர்போற் கிடைத்த நேசன்காண்.

(அவனே) அக்கினிபோலத் தபிக்கத்தக்க குற்றங்களை நாம் சிற்றினைத் தொடுகூடிநின்று பலகாற்செய்யினும் பொறுத்தருளிக் கோபஞ்செய்யா நமது வேந்தன்காண். (அவனே) பாவங்கள் நிர்மூலமாக நாம் புகழ்கின்ற கடவுள், அடிமைகளாகிய நம்மிடத்து அன்பையே திறையாக விரும்பிக்கொள்வதன்றி, வேற்றரசர்போலப் பொற்காசுமுதலிய பொருள்களைத் திறை வாங்காத நமது வேந்தன்காண். (அவனே) நம் விளை யினளவாக நமக்கு அளிக்கின்ற வுணவை

யும், உடையையும், அணியையும், பதி முதலான பொருள்களையும் நம்மோடிருந்தனுபவியாம லனுபவித்து, அவற்றைக் குருவாகி யடிமைகொள்ளுங்காலேயிற் காணிக்கையாகத் தரக்கொண்டு மீட்டும் சுதந்தரமறக் கைக்கொள்ள நமக்குக்கொடுக்கும் வேந்தன்காண்.

(அவனே) பூமண்டலத்தின்கண் கள்வராலும், பகைவராலும் கவரப்படாமலும், கடலாலும் தீயாலும் காற்றாலும் அழிக்கப்படாமலும், குறைதலும் வளர்தலுமின்றி ஒருகாலத்துள்ளது மற்றொருகாலத்தில்லது மாகாமல், ஊழிகள் பலபல கழிந்தாலும்கழியாமல் எடுக்கவெடுக்க வோங்கிநிலைபெற்றுநிற்கும் நித்தியமாயுள்ள நமது செல்வங்காண். (அவனே) நம்மனோர் கைப்பற்றி யனுபவிக்கும்படி அரிய பொருள்களை யாராய்ந்து சேகரித்துவைக்கும் நல்லறிவினையுடையோர் தமது ஜீவதசையில் தவம்புரிந்து தேடிவைத்த நம்முடைய செல்வங்காண்.

(அவனே) பக்கத்திருந்து நாம் அளவில்லாத நெடுங்காலம் அளவில்லாத அடியார்களுக் கெடுத்து வழங்கினுங் கெடுதலில்லாமற் சேமித்து வைக்கப் பெற்ற நிட்சேபத்திரவியங்காண். (அவனே) நாம் இப்பூலோகத்திருந்தாலும், சொர்க்கலோக முதலிய பதவிகளிலிருந்தாலும் நம்மைவிட்டு நீங்குதலின்றி, ஒப்புயர்வற்ற தனது கருணையால் நம்மை யுடைமைப்பொருளாகக்கொண்டுள்ள நம் உடையவன்காண்.

அப்பெருமானுடைய கங்கைதரித்த சடாமகுடத்தினழகும், விருப்பமிக்க அந்தச்சடாமகுடத்தின்மேற் சூடியுள்ள சந்திரகண்டத்தின் சிறந்த வழகும், சந்திரகண்டத்தின்மேற் சேர்ந்து விளங்குகின்ற கொன்றைமலர்மாலையினழகும், அந்த மாலையின்மேன் மொய்த்து விளங்கும் வரிசைபெற்ற வண்டுகளினழகும், அவன் பெருமைகளை நன்றாகவுணர்ந்தவர்களாலும் தமது மனக்கண்ணாற் பார்ப்பதற்கரிய பார்வையினழகும், ஞானநேத்திரமாகிய நடுநாட்டம் விளங்கு நெற்றியினழகும், அழிவற்ற கண்ணுதன்மேலிட்ட திலதத்தினழகும், அந்நுதலின்கண் விளங்கும் திருவெண்ணீற்றுத்திரிபுண்டரத்தின் இனிய வழகும், தன் அழகைத் தரிசித்தவரிடத்திற் பொன்போன்ற கருணையைச் சொரிகின்ற சந்திராதித்தராகிய மலர்க்கண்களின் அழகும், தொண்டர்களாயினோருடைய சிவநேச நிறைந்த உள்ளத்தாமரையின் சுகந்தத்தினை மோக்குங் குணமிக்க நாசிகளாகிய சிறந்த குமிழின் இனிய அழகும், வெள்ளியதேசுநிறைந்த முல்லையரும்பையொத்த திருநகையினழகும், அத்திருநகையளவிலமைந்துள்ள செம்பவளம்போன்ற திருவதரத்தின் அழகும், நற்குண நற்செயலுடைய அன்பர்களை மதுரமுள்ள பாலொடு தேன் கலந்ததுபோலினிக்குங் கருணைமொழி யீதென்றுரைக்க நம்பால் வருகவென்றுரைத்தருளும் மலர்போன்ற செவ்வாயினழகும், செந்தாமரை மலர்மேல் வசிக்கும் பிரமதேவன் புகழ்கின்ற சங்கினாற் செய்யப்பெற்றணிந்துள்ள காதணியாகிய குண்டலத்தினழகும், மெய்யன்பர் துதிக்கின்ற தேன்போலினிக்கு மொழிகள் புகுகின்ற வள்ளைக்கொடி நிகர்த்த திருச்செவியின் அழகும், அடியேன் தோத்திரம் புரிந்து திருமுன்பு நின்று, வேண்டும் குறைகளை முறையிட, எனது விண்ணப்பத்தைக் கேட்டருளும் நீண்ட திருச்செவியின் ஒளியழகும், பூமியின்கணுள்ளபலகோடி சமயநெறிகளினு முயர்ந்த சைவசமயநெறி முதன்மையுடையதா யெவ்விடத்துந் தழைத்தோங்கக் கருணைசுரக்கின்ற தெய்வத்தாமரை மலர்ந்தன்ன திருமுகமண்டலத்தின் திருவழகும், கண்டோர் மனங்குளிரவும் உயிர் குளிரவும் உடல் குளிரவுந் தெய்வத் திருமுகத்தாமரைகொண்ட கருணைக்குறிப்பினழ

கும், உள்ளத்துணர்வினால் இகழப்படாத மேன்மை யுலகமெங்குந் தழைய விளங்குகின்ற நிறைந்த தெள்ளமுதமன்ன சிரிப்பின் அழகும்,திருவுள்ளத்தின் மேன்மேலும் பெருகுகின்ற வொழுக்கமுள்ள கருணையின் மாட்சிமையைக் காட்ட அமைந்த அடையாளமாகிய திருநீலகண்டத்தின் பேரழகும், பிரபஞ்ச மயக்கத்தை நீக்கி, மெய்ந்நெறியினின்று வாழ்ந்து விளங்கும் மெய்யடியார் பரிசுத்த மனம்போன்ற புனிதத்திருவெண்ணீறு பூசப்பட்டு, இயற்கைச்செவ்வொளியினோடு செயற்கை நிலவொளியைக்கொண்டு, பொன்மலைபோனிமிர்ந்துள்ள திருத்தோள்களினழகும், கீழ்மையில்லாது மேன்மைபெற்ற வண்டங்களெல்லாம் ஒலி வியாபிக்கக் கூவுகின்ற ஒரு மான்கன்று தங்கப்பெற்ற செந்தாமரைத் திருக்கைமலரினழகும், ஆன்மாக்கட்குச் சரீரங்கள் தோன்றுதற்குக் காரணமாகிய ஆணவ மலத்தின்பங்கை யழிக்கும்பொருட்டாக வொளிர்கின்ற மழுவை யுலகமெல்லாங் காணும்படி தரித்த செங்கமலம்போன்ற திருக்கையின் அழகும், நற்குண நற்செயல்களில்லாமையால், அவையுடைய நல்லவரைக்கண்டு வெட்கமடைந்து எங்குந் தன்மையுடைய வெம்மையொத்தவர்களடையும் பயங்களையெல்லாந் தீர்க்க அமைத்த அபயத்திருக்கைமலரினழகும்,நாசரகிதமான செல்வத்தின் வரவையும்,எல்லாச்சிறப்புக்களையும் அடையும்படி அன்பருக்கு வழங்குங் கருணை பொருந்திய வொள்ளிய வரதத்திருக்கைமலரினழகும், பெரிய பாம்பாபரணம் விளங்கவும்,அழகிய திருவெண்ணீறு விளங்கவும், அழகிய என்புமாலையின் பெருமை விளங்கவும் பொருந்திய மார்பின் திருவழகும், தேவர்கள் தம்மேனியிலுடுக்கின்ற பீதாம்பர முதலாகிய ஆடைகள் யாவும் ஆசைப்படத் திருமருங்கில் உடுக்கப்பெற்ற புலித்தோலுடையினிரம்பிய அழகும், பரிசுத்தமடைந்துள்ள வொளியி னழகுபொருந்திய திருக்கீளழகும், அந்தக்கீளின் கீழாகப்புனைந்த சிறந்த கோவணத்தின் அழகும், கீழங்கத்தில் அழகுபொருந்தி நிற்பதாய் மெய்யடியவர் இருதயமெல்லாஞ் சேர்த்துக் கட்டப்பட்டு விளங்கும் வீரக்கழலின் அழகும், எட்டும் இரண்டும் ஒருருவாக அமைந்த சிவலிங்கத்தின்கண் சிவ சாக்ஷாத்காரஞ் சித்திக்கப்பெற்ற யோகியருடைய சித்தத்திலே செந்தேன்போலினிக்கின்ற சேவடித்தாமரை மலரின் சீர்பொருந்திய அழகும், சொல்வளமும், பொருள் வளமும், மிகுத்த வேதங்களும், திருமாலும் பிரமனும் பன்னெடுங்காலந் தேடியுங் காண்பதற்கரிதென நீண்டு நீண்டு வளர்ந்த சித்திமுத்திச் செல்வங்களையுடைய திருவடியின் சீர்பொருந்திய வழகும், கீர்த்தியமைந்த செந்நிறமுடைய மாணிக்க மலையினைக்கூடிய பசிய நிறமுள்ள மரகத மலைபோல ஸ்ரீஉமாதேவியார் ஒப்பற்ற வாமபாகத்தில் வாழ்ந்தருளாநிற்கும் அழகும், கண்டவர்க்கு மையல் அதிகரிக்கச் செய்யுங் கீர்த்திவிளங்குஞ் செம்பவளம்போலுஞ் சிவந்த திருமேனியின்ழகும் பார்த்திருக்கப்பெற்றால் நம்முள் மென்மேலெழுகின்ற பசி நீங்குங்காண்.

இதுமட்டோ! பரிசுத்த ஆன்மாக்களின் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டிருந்த எம்பெருமானுடைய திருமேனியினழகை நாம் தினந்தோறுந் தரிசித்தபடி யிருக்கப்பெற்றால் நம்மைவிட்டு நீங்காதனவாகிய எல்லாச்ஜனன மரணங்களின் திண்மைநீங்குங்காண். இதுமட்டோ! அவன் உவக்குங் ஏகத்தொண்டுசொற்றொண்டுகள்செய்து பாவினங்களால் அவனது மெய்ப்புகழைப் பாடுகின்றோர் பக்கத்திருந்து நாம் சிரவணஞ் செய்யப்பெற்றால், நம்முடைய கரும மலமானது “யான் தங்களை வாதியாமற் சொல்லக் கட்டளையிட்டருளும்” என்று உத்தரங் கேட்குங்காண்.

இதுமட்டோ! பகைவராகிய முப்புரங்களையும் சிறுநகைத்தீயா லெரித்து நீறாக்கிய புண்ணிய சொரூபாவென்று ஒருதரம் சொல்லப்பெற்றால் நம்மை வருத்துகின்ற மாயப்பிரபஞ்ச வாழ்க்கைத் துயரங்கள் விட்டொழியுங்காண். இதுமட்டோ! எப்போதும் அவன் புகழையே சொல்லாநிற்கும் அன்புடைய உள்ளத்தின் உட்பொருளாகிய பரமசிவமேயென வொருதரந் தியானிக்கு முன்பே நம்மைவிட்டகலாது பற்றிநின்ற பாதகங்களெல்லாம் தரித்து நில்லாமல் ஓடுங்காண். அத்தகைய பெருமான் ஞானநடம் புரியுந் திருவடித்தாமரை மலரின் மருங்கு நீ அடைவாயென்று நான் கூறினால், அங்ஙனம் செய்வேனெனச் சம்மதித்து, அவன்பாற் செல்ல முன்வைத்து நீட்டிய காலைப்பெயர்த்து வைத்து நடவாமற் பின்னாகப்பெயர்த்து வைத்து, அந்தோ! வாளாநிற்கின்றனை. (நெஞ்சே! இஃது என்கொல்.)

எல்லா உயிர்கட்கும் உணவளித்துக் காக்குங் காவற்கடவுளாகிய திருநெடுமாலும், வியாக்கிரபாத முனிவருக்குப் புத்திரராகிய உபமன்னியரும் பிரார்த்தித்து நிற்கக்கண்டு, அவ்விருவருக்கும் முறையே திருப்பள்ளித்தானமாகவும், பசியைத்தணிக்கும் இன்னமுதாகவும் வழங்கிய அருட்பண்பைப் பலகடல்போற் பரந்த வேதாகமபுராணேதிகாசங்களின் மத்தியில் முழங்கக்கேட்டும் அவனைப் பத்தியொடும் புத்தியொடும் பணிகின்றாயில்லை. எம்பெருமான் திருவடியில் அன்பைப் பெறுதற்குப் புத்தியுள்ளோர்க்கு அவன் அருள்வண்மையை யுணர்த்துவதாகிய இச்செயல் ஒன்றும் போதாதோ?

மோட்சநெறியின்கண் மாட்சிமையுறாத இலங்கையர்கோனாகிய இராவணன் தன்பதிக்குப் பெயர்த்துக்கொண்டு செல்லவெண்ணித் திருக்கைலாயமலையினைப் பேர்க்க, அக்காலை எம்பெருமான் திருத்தாள் பெருவிரலானூன்றத் தனது இருபது தோளும் நெறியப்பெற்று, மலையின்கீழகப்பட்டு வருந்தி, வாகீசமுனிவர் கருணையால் அவன் செவியிற் படும்படி "சாமகீதப்பிரியா" வென்றுதுதிசெய்துகொண்டு கிரிப்பிரதக்ஷிணம் செய்தவமயம் செப்புதல்கேட்டுச் சாமவேதத்தை யாழிற்பாடித்துதிக்க, அவ்வரக்கர் கோமானுக்கும் பகைவரை வெல்லும் வாட்படையும், மூன்றரைக்கோடி நாளும் வழங்கிய வண்மையை நாடோறும் உன் பக்கத்திருந்து உபதேசித்து வந்தும், நீ விரும்பி யேற்றுக்கொள்கின்றனையல்லை; புண்ணியபுருடர்கள் சிவபக்தி யடைவதற்கு இந்நெறி யொன்றும் போதாதோ? புண்ணியராகிய சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தாம் தோழராக நின்ற வுரிமையை யுலகத்தாருக்கறிவிக்கத் திருக்கச்சூரில் வேதியராகத் தோன்றித் தமது வன்றொண்டர்க்குப் பசிக்களை யகற்றப் பிட்சையமுது மனைதொறுஞ் சென்றேற்றுக் கொண்டுவந்தளித்து உண்பித்த வண்மையை நீ என்னுடன் அபேதியாக நின்று கேட்டும் என்மொழிவழி நில்லாமற் பிறழ்ந்து நின்றனை.

அறிவுடையோர்க்குச் சிவபத்தி யடைவதற்கு யான்கூறும் இதோபதேசமொன்றுமே போதாதோ? எம்பெருமான் திருச்சந்நிதியிலெரிந்த விளக்குத்தகழியில்நெய்யருந்தியஎலியின்மூக்குத்தூண்டுதலால்திரிதூண்டப்பெற்று, ஒளியதிகரிக்க வெரிந்தமைக்காக மகிழ்ந்து, தன் பெருங்கருணையால் உலகமெல்லாந் தன்னாணை செல்லச் செங்கோல் செலுத்திய மாபலிச்சக்கரவர்த்தியாக்கிய சீர்த்தியை யிங்கு உனக்குப் பலகாலெடுத்துக்கூற வெப்போதுங் கேட்டும், அப்பெருந்தகையின் திருவடியைத் தியானிக்காதிருந்தனை; சிவபக்தியடையப் புத்திமான்களுக்கு இஃதொன்றும் போதாதோ?

அனாதிகாலந் தொட்டு நம்முடன் முன்னின்றருளும் "நற்றுணையாவது நமச்சிவாயம்" என்று துதித்து நின்ற திருநாவுக்கரையருக்கு, அவர்காலத்திருந்த சமணர்கள் அவர் பத்தியைச்சோதிக்க அவரைக்கல்லொடு சேர்த்துப் பிணைத்துக் கடலிலெறிந்தாராக, அக்கற்றுணையே யோர் தெப்பமெனக் கொண்டு கடலைக்கடந்து கரையேறக் கருணைசெய்த நம் சிவபிரான் அருட்டிறம் இத்தன்மையதென்று இப்பெரிய உலகிடை நீசொல்லக்கேட்டிருந்தும், அவன் திருவடியைப் பணிகின்றிலை; பூலோகத்தார்க்குச் சிவபத்தியடைய இவ்வுண்மைச் சிவானுக்கிரகம் ஒன்றும் போதாதோ ?

திருநுதலிற்கண்சுமந்த சிவபெருமான் தம்முடைய மெய்யன்பராகிய மாணிக்கவாசகர், பாண்டியனாற்பரிபவமுற்றுச் சித்தங்கலங்காமல் மதுரை மாநகர்மேல் வையைநதி பெருகிவரப் பணித்தருளி, பிட்டுவாணிச்சியாகிய வந்திக்குக் கூலியாளாகி, அவள்கொடுத்த பிட்டுண்டு, மண்சுமந்தருளினார் என்றுரைக்கும் உண்மையைக் குணவாளர் பெருமையுறச் சொல்வது கேட்டும் அன்பு பூண்டு திருவடியைத் துதிக்கின்றனையல்லை; சத்தியபத்தி பூண்டிருக்க வேண்டுமாயின் இவ்வற்புத விளையாடலொன்றும் போதாதோ ?

இரௌரவ முதலாகிய நரகங்களின் தீமைகளை யுறுவிப்பதாகிய மகா பாதகத்தைச்செய்த வேதியனை மாதீர்த்தத்திலாட்டி மாசகற்றிப் புனிதனாக்கி யுய்வித்த சிவபிரானது அருட்பண்பை யிவ்வுலகத்தார் இதயசுத்தியுண்டாகும்படி புகழ்ந்துரைத்தும் நீயாராய்ந்தறிகிலை; சிவபத்தியில் முதிரவேண்டுமாயின் இவ்வற்புதத் திருவிளையாடல் ஒன்றும் போதாதோ ?

இப்பாருலகத்தார் தமது சுட்டுணர்வாற் சுட்டியுணர்தற்கரியதாய்ப் பன்றிபோல் வடிவுகொண்டு,தாயிழந்து சுழன்றுமெலிந்த பன்றிக்குட்டிகட்கு, ஊரினுள்ளாரறிய முலைப்பாலூட்டியருளிய செயலைச் சிறந்த அறிஞர்கள்சொல்கின்றது கேட்டும் நீ துதிக்கின்றாயல்லை; சிவநேசம் பூண்டிருக்க வேண்டுமாயின் இவ்வற்புதத் திருவிளையாடலொன்றும் போதாதோ ?

பிறவிப்பிணிக்கு நல்ல மருந்தாகிய திருவடித்தாமரைகள் வருந்த, மதுராபுரிவீதிகளி னடந்து சென்று, பாணபத்திரனுக்கோரடிமையாளாகி, அவனை வீணாகானத்தில் வெற்றிகொள்ளக்கருதிப் பாண்டியன் சமுகமடைந்து, பல பரிசுபெற்றுத் தருக்கியிருந்த வேற்றூர்ப் பாணனாகிய ஏமநாதனை வெல்லும் பொருட்டு விறகு திருமுடியிற்சுமந்து, கேட்போர் கொள்ளாதபடி விலைகூறிக் கொண்டே ஏமநாதன் தங்கியிருந்த மனையையடைந்து.தன்னைப்பாணன்பாற் கற்ற சீடனென்றுவிளம்பி, யாழ்தடவி, இனிய கீதங்கள்பாடி, அவன் கேட்டுப் பெரு வியப்படைந்து,அஞ்சியோடச்செய்ததனை நீதிமான்கள் சாற்றுவதுகேட்டும் அச்சிவபிரான் திருவடிகளை நினைகின்றிலை; மெய்ப்பத்தியுடன் சிவனை வழிபட வேண்டுமாயின் இத்திருவிளையாடலைச் சிந்திப்பதொன்றும் போதாதோ ? துதிக்கப்பெற்ற யானையும், அணிலும், குரங்கும், அன்புநெறியைத் தேடிய சிற்றெறும்பும், நீண்டபாம்பும் சிவார்ச்சனை செய்தனவென்றால், சிவ பூசை செய்தற்கு எவர் விரும்பாதவர் ?

சோம்பரடைந்துள்ள நீ நின்வன்மைத்தன்மை முழுதுமறுத்து, நம்பரமேசன் திருவடியைப்பூசிக்கும் அன்புஎன்பது யாதோஅதை யறியமாட்டாய். சிவந்த சடைமுடிகொண்ட நம்பெருமான் அருட்புகழைக் கேட்டுச் சீவகாருணியமடைந்து, தனக்கு உணவென மச்சமாதியைப் பிடித்தருந்தாமல், ஐந்து உணர்வுகளையும் ஐம்புலன்களின்மேற்செல்லாவண்ணமடக்கி, யோகநெறியி

லேகின்று, பிரபஞ்ச மயக்கமறத் திருவடிக்கண்வைத்தஅன்புநீங்காது,நாரைப்புள் முத்தியின்பம் பெற்றதென்றால், யாவர் பிறரை அம்முத்திப்பேற்றை நாடாதவர் என்று கூறுவேன்.

அன்பில்லாத மனமே! அத்தகைய வின்பத்தை நீயோ சிறிது மெண்ணுகின்றிலை. நின் இயல்பு இருந்தவா றென்னையோ! ஓயாத அன்பு உடையார் எல்லாரினும் பேரன்பு படைத்தவன் நமது பெருமான்; அன்றியும் பேரின்பமுடையான்; இவ்வுண்மையைத் தினந்தோறு முனக்குக்கூறுகின்றேன். உன்னிடத்தில் அச்சிவபிரான்மேல் அன்புகொண்டமை சிறிதும் யான் அறியேன். என் சொல்லுக்குப் புறச்சமய நெறியாரேனும் இணங்காநிற்பர். நம்பெருமான் அன்புடனே அருட்செல்வம் உதவுகவென்று பிரார்த்தித்தால் இந்தாவென்று வழங்குவான். ஆ! உன்னிடம் இவ்வுண்மையை அறிவித்து அலுக்கின்றேன்.

நீ உள்ளக்கடுமையொடு கூடி நின்றாயல்லது, அன்பொடுகூடி அவனை நினையமாட்டாய். பித்தரே யாயினும் கேட்போர் என் சொல்லுக்கிணங்கி நிற்பார். அன்பு குறையாது பித்தாவென்று நாம் அழைத்தாலும் நம் உடையவன், பிறப்பை யறுத்தெறிவான்; அந்தோ! நான் உனக்கிதனைச் சொல்லுகின்றேன். சிறிதேனும் காதில்லாச் செவிடர்போல அதனைக்கேளாது கெடுகின்றாய்; ஐவகைப்பட்ட வேள்வி செய்யாதவர் கூட்டத்தை விரும்புகின்றாய்; ஞானயாகஞ் செய்யும்வேலை நேரிடுஞ் சமயத்தில் ஒளித்திருப்பாய்; நின்தலைகொண்டுசெல்லத் தூதர்கள் எமனோலை கொண்டுவரும்போதில் நீ யெங்கொளிப்பாய்? மயக்கத்தையுற்ற இந்தப்பிரபஞ்சம் மணமில்லா மலர்போல்வது; இதனை விரும்பாதொழியென் றுனக்குச்சொல்லுதன்முன்னரே விரைந்து போகின்றாய்.

அந்தப்பாழுலகிற் செல்லற்க, சைவசமய சன்மார்க்க நெறியிற் செல்க, என்றால் என்னோடும் உன்போக்கினை யுரையாதுபோய் மயக்கத்தில் வீழ்ந்து பொருந்துகின்றாய்; உயிர்க்குப் பொல்லாங்கு விளைவிப்பனவாகிய வைம்புலவிடயங்களை யனுபவிப்பாயாக வென்று சொல்லின் அவற்றை அமுதநிகரென மதித்து அனுபவிக்கின்றனை; அவ்விடயானுபவத்தை யொழித்திடுக வென்று சொல்லின்,விடத்தினை யுண்டிடென்றாற்போல வருந்துகின்றனை.உன்னை வஞ்சிக்கு மயக்கநெறியில் ஓடுகின்றனை; திரும்பிவருவதின்றி உன் ஆசையின் வழியெல்லாம் போந்து விளையாடுகின்றனை; அவ்விடத்தே தளர்கின்றனை; நீண்டவுலகினைச் சூழ்ந்து வருகின்றனை; அதனைவிட்டுப் பிறிதொரு நெறியிற் சுற்றுகின்றனை; அதனைவிட்டு மற்றொன்றில் வீழ்கின்றனை;அதனைவிட்டு வேறொரு நெறியில் திரும்புகின்றனை; எனக்குத் தாழ்வு ஒன்றையே தருகின்றனை; அருளற்ற மார்க்கத்தினின்று என்னை வலதழிக்கப்போகின்றனை; மீட்டும் வேறோர் நெறியிற் புகுகின்றனை; யோகமார்க்கத்தி னிற்பதின்றி யொருபொருளை மறக்கின்றனை;பிறிதொருபொருளை நினைக்கின்றனை; யான்செய்தநன்றியைமறந்து வருந்துகின்றனை; இடபவாகனமூர்கின்ற பரமேச்சுரன் திருவடிகளைச் சிந்தனை செய்யென்றுகூறின், வேற்றொரிடத்தினைப் பொருந்திப் பலவகைச் சங்கற்பவடிவுகொண்டு விரிகின்றனை; சங்கற்பங்கள் பலபல செய்து இயல்பு குன்றிய வுனக்கு நான் அனந்தங்கோடி நமஸ்காரங்கள் செய்யினும் ஒரு சிறிதும் இரங்காமல் உழல்கின்றனை.

யான் இத்தகைய வுன்னை மிகவும் அக்கினியில் உருகாத கல்லென்றே துணிவேன். நீ அந்தக்கரணங்களின் கலப்பில்லாத கல்லென்றுகூறின், அஃது என் சொல்வழியே நிற்பதன்றிக் கடந்து செல்லாது. உன்னை வலிய இரும்

பென்று சொல்லத்துணிவேன், அந்த வலிய இரும்பேயென்னில், அஃது உலைக் கூடத்தில் கொல்லன் குறிப்பைவிட்டுக் கோணுமல் அவன் வைத்த விடத்தே கிடக்கும். (நெஞ்சே!) நீ என் சொல்லைக் கடத்தலாலும் என் குறிப்பைவிட்டுக் கோணி நிற்றலாலும் கல்லுமன்று, இரும்புமன்று.

நெஞ்சே! உன்னை யெல்லாத்துன்பங்களையுஞ் சேர்க்கின்ற குரங்கென்று சொல்லத்துணிவேன். குரங்கோ வென்னில் ஆட்டுகின்றேன் சொல் வழியைவிட்டு ஆடாது. நீ அங்ஙனம் என் வழியினின் றாடாமையால் குரங்குமன்று. உன்னை நீண்ட வுலகத்தோர் இகழ்கின்ற பேயென்று பேசத்துணிவேன்; எப்படிப்பட்ட பேயும் ஸ்ரீ பஞ்சாக்ஷரஜபம் செய்கின்றவர்களைப் பிடிக்க மாட்டாது. ஆகலின் நெஞ்சே நீ பேயுமன்று.

உன்னைக்கண்டோர் கூசி விலக வாயினுற் கவ்வுங் கடிய நாய் என்றுரைக்கத்துணிவேன்; நீ நாய் என்னில், அஃது தன்னை விரும்பிக்கொண்டவர்களைக் கண்டாற் குலைக்காது. அக்குணம் உன்னிடத்தில்லாமையால் நெஞ்சே! நீ நாயுமன்று.

உன்னைப் பூமியில் நெருங்கிச் செல்கின்ற யார்க்கும் அடங்கா வீரத்தன்மை படைத்த புலியென்று சொல்லத்துணிவேன்; அப்புலியும் வில்லாளிகள் எறிகின்ற பாணத்தினுல் சௌரியமிழந்து கைவசப்பட்டால் மீட்டும் எதிர்த்து நில்லாது. அங்ஙனம் வசப்படாமையால் நெஞ்சே நீ புலியுமன்று.

உன்னை யெனக்கு வருத்தத்தை யுண்டுபண்ணு மும்மதமுடைய யானையென்று சொல்லத்துணிவேன்; அஃது ஏறி நடத்தும் பாகன் சொல்வழியைக் கடந்தேறிச்செல்லாது. அக்குணம் உன்னிடத்தில்லாமையால் நெஞ்சே! நீ மும்மதமுடைய யானையுமன்று.

உன்னை வெல்லு நடைகொண்டு சீறுகின்ற பிறவிலங்கென்று சொல்லத்துணிவேன்; அவ்விலங்கும் பயிர்களை யழிப்பதனுற் கொல்லக்கருதி மிருக வேட்டை யாடுகின்ற மன்னவன் செங்கோல் செய்யு நாட்டிற் சீவித்திராவாம். அங்ஙனமே என்னுல் அழிக்கப்படாமல் என் ஆட்சிக்குரிய இவ்வங்கதேசத்தில் நெஞ்சே! நீ சஞ்சரித்திருப்பதனுல் விலங்குமன்று. ஆதலால், உன்னை யினி யென்னென்று சொல்லத்துணிவேன்; என் இதோபதேசங்களை யங்கீகரித்துச் சன்மார்க்கத்தில் நடப்பாயென்னில் மாற்றுயர்ந்த பொன்னை யொப்பாகுவாயென்பேன். நெஞ்சே! நீ யென்சொல்வழி நின்று நடக்கின்றிலாய்.

நீ பலகாலும் என் சொல்வழியிலமைந்து நடவாது செல்கின்ற நெறியும் பொய்; நீ செய்கின்ற செய்கையும் பொய், அந்தச் செய்கையால் விளையும் பலனும் பொய்; உன்னுடைய விடயஞானமும் பொய்; குற்றத்தை விளைக்கும் உன்னுடைய சூக்கும ரூபமும் பொய்; இவ்விடத்து நீ செய்யும் காமியத் தவமும் பொய்; ஓரிடத்தும் நிலைபெற்றிராமல் எங்குஞ் சஞ்சரிக்கின்ற உனது நிலையும் பொய்; நீயும் ஒரு பொய்ப்பொருளாகின்று யென்றால், இவற்றுளொன்றும் நீ உணராமல் இந்த அநித்தியப்பிரபஞ்ச வாழ்க்கையாகிய வாரிதி விழுத்து என்னை மயங்கச்செய்தனை. நெஞ்சே! தீக்குணமுள்ள நீ வன்மையுடைய நஞ்சுகாண். நஞ்சு என்னப்பட்ட உனது பெயர்க்கு முன்னர் ஒரு கொம்பு (ெ) இட்டு நெஞ்சென்று அழைத்தேன்.

துன்பமானது நீங்காமல் உள்ளடங்கி சிறக்கப்பெற்ற காமமாகிய வெப்பத்தில் உண்டாகும் பயன் இன்னதென்றறியாமல் அழுந்தினேன். அந்த வெப்

பத்தில் உள்ளெரிய, மேலாகிய உள்ளுணர்வு கருக, உடலினடுவெரிய, நம்மிருவர்க்கும் உள்ள சினேகத்தின் நன்மையானது வெதும்ப, விட்டு நீங்குதலின்றி வாட்டமடைந்து,பாதாள லோகத்திற்கும் விண்ணுலகத்திற்குஞ் சென்றொளித்தாலும், அங்கும் நம்மைத் தேடியணைந்து சுடுவதாதலால் வெவ்விய காமம் கொடிய அக்கினியென்றுணர்க. அதனைவிட்டு விலகியோடினால் நீ உய்திபெறுவாய். அதனை விடாது பற்றிநிற்கில், அஃது உன்னையும் உன்னைச் சேர்ந்தாரையும் சுடுகின்ற செந்தீயென்றுணர்க; இன்பத்தைத் தருகின்ற தீயென்று சேர்ந்து எதிர்படுவோர்களைச் சுடுகின்ற காமமானது அக்கினி பகவானையுஞ் சுடுகின்றவோர் தீயென்றுணர்க; இவ்வுலகில் உருவுடைய பொருளாகித் தோன்றாததன்றோ காமம் என எண்ணினாலும், எண்ணிய வளவிலே தலைக்கேறத்தக்க கொடிய விடமென்று நோக்குக.

அளவில்லாப் போராட்டமுற்ற புதிய காம மயக்கமானது உன்னுடைய பேரறிவைக் கொள்ளையிடுகின்ற பித்தமென்று நோக்குக. இதுவேயன்றித் தளர்ந்த உணர்வில் விடய விச்சையாகிய மதுவை நிரப்பி வைக்கின்ற கடுங் காம மயக்கமானது உண்மைச்சன்மார்க்கநெறியில் புகாவண்ணம் நம்மைத் தடுக்கும்படி முள்வேலியைச்சூழ வடைக்கின்ற பொல்லாத பகையென்று நோக்குக.

தன்னை விரும்பினோர் நரகத்தில் வீழத்தக்கதாக எல்லாக் குற்றங்களையும் தன்னுள் வைத்திருப்பதாகிய காமமானது பாதகத்தின் பலவகைப் பேதங்களுங் கூடிப்பிறக்கும் இடமாமென நோக்குக. ஆதலால் வெவ்விய மயக்கத்திற்குக் காரணமாகிய மாதரை இச்சித்தல் கூடாது. நீ இன்னும் அம்மாதராசையை நீக்கினையல்லை. இந்தப் பொய்ம்மயக்கம் பொய்யென்றே வெளியாக, மாதரை * அணங்கினர், † செவ்வாய்மடவார், ‡ பேதையர்களென்ற கொடிய சொற்களின் பொருளை மதித்துணர்கின்றிலை. இப்பழையவுலகில், பெண்ணென்றுசொன்னால் ஏழுபிறவியிலுந் துயரமுண்டாம்; எண்ணிப்பார் என்ற நல்லோர் உறுதிமொழியை மதித்துணர்கின்றிலை.

பெண் என்பதை அழகிய § மாத்திரைவருத்தனம் என்னும் அலங்காரமாக நினைந்தனை. அதனால், பெண் என்பது பேண் என்று ஒருமாத்திரையதிகரித்து நின்றது. இம்மாத்திரை வருத்தனத்தால் பெண் என்னும் பெயரின் பொருள் ஆசையென்று நீ ஆராய்ந்தறிகிலை. இவ்வாசையானது எவ்வகைப்பட்ட மந்திரோச்சாரணத்தாலும், பூசைகளின் முறைமையாலும், தந்திரங்களாலும் போக்கப்படாத குற்றமன்றோ ?

மந்திரோச்சாரணத்தா லொருவரைப்பிடித்த பேய் விலகிநிற்கும்; இப் பெண்ணாசையாகிய பேய் ஒருவரைப் பிடித்தால், மந்திரத்தால் அது விலகுவதில்லை; செந்நாய் கவ்விப் பிடித்தாற்போல்வதென்று ஆராய்ந்தறிகின்றிலை. துன்பந்தருவதைச் சுகந்தருவதென வுணரும் ஆராய்ச்சியில்லாத உன்னுடைய அறிவீனத்தை யென்னென்று சொல்வேன்; இம்மாதர் மயக்கமானது, அந்தோ ! கொடிய நரகங்களிலுன்னைத் தள்ளுஞ் சினேகமென்று நிச்சயிக்கின்றாயல்லை பழைமையாக வமைந்த கரிய இருளிலே நடந்துபோதற்குக் கலக்

---

* அணங்கினர் - நோயுடையார். † செவ்வாய்மடவார் - சிவந்த வாயினையுடைய ஸ்ரீகள். ‡ பேதையர் - அறிவில்லார். § மாத்திரைவருத்தனம் - மாத்திரை அதிகரித்தல்.

கமடைகின்றனை ; மாதர் கூந்தலின் பெரிய அந்தகாரத்தினுள்ளே நுழைந்துபோதலை விடுத்தாயில்லை.

உலகிலே யெதிர்ப்படுவோர் ஒருவர் கையின் மதிக்கத்தக்க வாள் உள்ளதென்றவளவில் யாதானுந் தீங்கு நேரிடுமெனப் பயந்து எதிர்ப்படாதொதுங்கிப்போகின்றனை ; மாதர்களுடைய கண்ணாகிய வாள் உன் உள்ளுறுதியையறுக்க, அதனை யஞ்சாமல் அவர்களுக்காக உள்ளுருகி நிற்கின்றாய். பூவுலகில் வாழ்கின்ற யானை யொன்றைக் காணில், இது கொம்பாற் குத்திக் கொல்லுமென்றோடுகின்றாய் ; மாதர்களது இரண்டு தனங்களாகிய யானைகளைக் கண்டால், இவை நம்வயிராகத்தை யகற்றிக் காமப்படுகுழியில் வீழ்த்திக் கொல்லாமற் கொல்லுமென்றஞ்சியோடாமல் நெருங்கி, யவற்றின் வசப்படுகின்றாய். செங்குத்தான மலையைக் காணில் அதன்மேலேறுதற்கு விரைந்தறியாய் ; மாதர் முலைகளாகிய மலைகளைக்காணில், இவற்றின்மேலேறினால் காமப்படுகுழியில்வீழ்ந்திடர்பட நேரிடுமென்றஞ்சாமல் ஏறுதற்குத் துரிதப்படுகின்றாய்.

அழகுபொருந்திய சிங்கம் எதிரே நிற்கின்றதெனில் வாட்டமடைந்து கலங்குகின்றாய் ; மாதர் இடையாகிய சிங்கமெதிர்படுவதென்னில் வாடிக்கலங்கி யஞ்சாமல் அதனைக்காணும் இச்சைகொண்டு திரும்புகின்றாய். இவ்விடத்தில் ஒரு சிறு பாம்பு காணக்கிடைத்தால் கடிக்குமென்று பயந்து ஓடி யொளிப்பாய் ; மாதர்கள் அல்குலாகிய பாம்பென்னில், அதன் கொடுவிடந்தலைக்கேறிக் கொல்லுங் குணத்ததெனச் சிறிதும் பயப்படாதிருக்கின்றாய். யாம் உன்னைக் கீழ்ச்சமுத்திரத்திற்படிந்து நீராடுகவென்றுசொல்லில், எம் சொல்லுக்கிணங்கி நீராடமாட்டாய் ; இத்தன்மையுற்ற நீ மாதர் கடிதடமாகிய பாழ்ங்கடலின் மூழ்கி யாடுதற்கெம்மைக் கேளாது பாய்ந்து சென்றாய்.

தரைமேனடக்கும்போது காலிற்படுங் கல்லென்று சொன்னாற் பின்னிட்டுநிற்பாய் ; மாதர் காலிலணிந்த சிலம்பு கல்லென்று சத்தித்தால் அச்சிலம்பணிந்த மாதரைக்காணும்படி மேலெழுந்து செல்லப்படித்திருக்கின்றாய். இவ்வளவிலேனும் அமைந்திராமல் (நெஞ்சே !) மாதர் உரிய கூந்தல் தன்னிருண்ட தன்மையால் கார்மேகமோ அல்லது மெல்லிய கருமணலோவென்று உவமை கூறுவாய்; ஐயோ! அது தன் கருமைமாறி நரையால் வெளுப்பதைக்கண்டிலையோ ?

பொய்பேசி, அழகிய நெற்றியானது ஒள்ளிய மதிப்பிறையென்றெண்ணுகின்றாய் ; நீ உவமித்த வெண்பிறை உள்ளெலும்பன்றி வேறில்லாமை கண்டாயினும் வருணித்தலை விடுகின்றாயல்லை. கண்மேல் விளங்கும் புருவமானது மன்மதன் வில்லை யொக்குமென உவமிப்பாய் ; அப்புருவத்திற் கருமயிர் வெண்மயிராக நரைத்து உதிர்ந்திடும்போது அதனை வில்லென்று சொல்லென்றால் நீ சொல்லத்துணிவாயோ ? விரைந்துபாயும் அம்புபோன்ற கண்ணைக்குவளைமலர் என உவமிப்பாய் ; அந்தக் கண்ணினீர்வற்றிக் குழிந்துதோன்றும்போதில் அங்ஙனம் உரைப்பாயோ ?

அவயவங்கட்குரிய இடம் விளங்குஞ் சரீரத்திலே நாசியானது குமிழொக்குமென விரும்புவாய் ; ஆயின் வெண்மலமாகிய சளியொழுகுந்தோறும், அந்தக் குமிழ் சளியைப்போக்கச் சிந்துதலுமுள்ளதோ ? நீண்டகாதினை யிளைப்பறியா வள்ளைத்தண்டென்று நிகர்செப்புவாய் ; ஆயின் அவ்வள்ளைக்கு உட்டுவாரமும் உள்நரம்பின் அலங்கரிப்பும் உளவோ ? அம்மாதர் வெண் பற்களை

முல்லையரும்பென்று நிகர் கூறுவாய்; ஆயின் அந்த முல்லையை யொரு கோலொடித்துக்கொண்டு அழுக்ககீற்றிச் சுத்திசெய்வதுமுள்ளதோ?

அவர் அதரத்தை நன்றுபழுத்த கோவைக்கனியென உவமித்துச் சொல்வாய்; அவ்வதரம் தன்மேற் குழம்பிய செவந்த இரத்தத்தால் அங்ஙனந்தோன்றுமென உணர்ந்தாயில்லை. அவர் கன்னத்தைக் கண்டு அழகிய கண்ணாடி நிகரெனக்கூறி அதன்மேலாசைவைத்தாய்; ஆயின் மேற்பூரித்துள்ள செழுந்தோல் வாடி வதங்கினால் அப்போதில் என்னுரைக்கமாட்டுவாய்? அவர் முகமானது அழகிய சந்திரனையொத்து விளங்குவதென்று கூறுவாய்; எந்த சந்திரனுக்கு அவர் முகத்திலுள்ளனபோல எழ் துவாரங்களுளவென்பதை யோசிக்கின்றாயில்லை.

அவர் கண்டமட்டும் வெண்சங்கம் என உவமை கூறுவாய்; அந்தக்கண்டமட்டுமே யன்றி யுடலின் பரிமாணங்கொண்டமட்டும் அவ்வுடலின் அங்கிசமுடையதன்றோ? அவர்தோட்குப் பசுமூங்கிலை இணைகூறி மகிழ்ந்து துடிக்கின்றாய்; தோளிலுள்ளதுபோல அந்த மூங்கிற்கு அதிகரித்துச்கூடிய வெள்ளெலும்பின் மூட்டு உள்ளதாமோ? அவர் செங்கை செங்காந்தண்மலர் ஒக்குமென்கின்றாய்; அந்த மலர்க்குப் பல விரல்களின் பூட்டும் உள்ளதோ? அவர் கொங்கை செவ்விளநீர்க்கு நிகரெனச் செப்புவாய்; உலகில் எந்த இளநீர்க்குத் தசையின் தடிப்பு உண்டென வெண்ணுதிருக்கின்றாய். அவர் கொங்கை செம்பொற்குடத்தையொக்கும் என்றனை; அது பொற்குடமன்று, சீ சீ உதிரக்கட்டிகாண்; அதனையோர்பொருளெனக் கொள்ளாது துப்பு (காறியுமிழ்) என்று நிந்திப்பவர்க்கு நீ யாது விடையளிப்பாய்?

அவர் கச்சணிந்திறுகிய முலைக்குத் தாமரையல்லது கோங்கின் அரும்பு நிகராகுமென்று துள்ளுகின்றாய்; ஆயின் மிகவே துவண்டு கீழ்வீழ்ந்த முலைக்கு நிகர் யாது கூறுவாய்? தாழ்ந்த வியல்புடைய அக்கொங்கைகளை மண்ணுலகர் கட்டும் பந்துக்கு நிகரென்று மகிழ்ந்து வாழ்ந்தாய்; அக்கொங்கைகள் பழுத்து உடையாத புண்கட்டியென்று இகழ்ந்து கூறும் அறிஞர்கள் வாயை மூடவல்லாயோ? வன்மையுடைய அழகிய தெங்கின்குரும்பை அம்முலையென்றிசைப்பாய்; அறிஞர்கள் அதனை மார்பின்மேற் றடித்தெழும்பிய இரத்தத்தின் குமிழிஎனச்சொல்வார்; அம்மொழி மெய்யோ பொய்யோவென ஆராய்கின்றிலை.

அழகிய சான்றோர் மாதர் கொங்கையானது கண்பெற்று நீர்சிந்தும் பருவென்று உறுதியாகச் சொல்வார்கள்; அவர் மொழிக்குச் சாட்சியாக அம்முலைக்கண்ணில் வெண்ணீராகிய பால்வருவதுகண்டும் வெட்கமடைகின்றிலை; நீ மாதர்கொங்கையைக் குளிர்ச்சியுடைய கும்பம் என்றுரையாடுவாய்; அறிவுடைய மற்றையர் சப்ததாதுக்களால், இரும்பு முதலிய லோகத்தாற்செய்யப்பெற்ற குடத்துக்கு மேன்மூடி போல்வதென்பார்; அவர் வாயை நீ மூடவல்லாயோ?

அவர் வயிறு ஆலிலைக்குச் சமமானதென்பாய்; ஆலிலைக்கு நெருங்கிய குடர்களும் ஈரலும் மேற்றோலும் இல்லாமையால் உன் உவமைபொருந்தாது. பின்னர் வேறெதனை யுவமை கூறுவாய். மாதர் நூல்போலு நுண்ணிடையை அது உண்டோ இல்லையோவென்று சந்தேகித்து, உள்பொருளாகவேனும் இல்பொருளாகவேனுந் துணிவு பிறவாமல்,ஐயவிடையென்றே யுள்ளத்திற் புகழ்ந்து நிற்பாய்; அவ்விடையைக் கையாற்றொட்டுப் பார்த்தவர் அவ்விடத்தில்

தாண்மூலமும் இடையுங்கூடுவதற்கமைத்த எலும்பின் பூட்டு அல்லது பொருத்து உண்டென்பார்; அதை நீ தெரிட்டுக்கண்டதில்லையோ? அவர் அல்குலை ஆழ்ந்த சமுத்திர நிகராகுமென்று சொல்வாய்; அதனைச் சில சில அறிஞர்கள் பாழ்ங்கிணறென்பார்கள்; நீ யதனை மதித்துப்பார்க்கின்றிலை; இஃதன்றியும், சீ வடிகின்ற குழியாகிய அல்குலைத் தாழ்ந்த மொட்டினையுடைய தேரின்சக்கரமென்பாய்; அஃதன்று; மூத்திரக்கடல் என்று இகழ்ந்துரைப்பவர்க்கு நீ யாது விடையளிப்பாய்?.

இஃதன்றியும், செந்நீரும் சிறுநீரும் சுரோணிதமும் பாய்கின்ற வழியை நீ ஆசைநிலையென்று சொல்வாய்; அங்ஙனமாயின் மலம் கழிகின்ற குதத்தை யாதென்று சொல்வாய்? புலால்நாற்றம் நீங்காது, இரணமாறாது, கசிகின்ற சிலைநீர் காட்டாறுபோலப் பெருகியொழுகிக் கொண்டிருக்கவும், வெறுக்கத்தக்க புண் இதுவென்று நீ துணிந்து ஆசையை யொழிக்கின்றிலை! வீட்டு மூலைகளிலுள்ள எறும்பும் ஈயும் அல்குன்முடைநாற்றத்தை விரும்பி மொய்த்துப் புண்ணாக்குமென்று பயந்து, அதனைப்பிறர் காணாது மறைக்க மேலே சீலை உடுப்பது கண்டும் உண்மை யிது.வெனத்தெரிந்திலாய்!

பாவஞ்செய்வோர் மறுமையிலடையு நரகமென்று சொல்லினால், அதன்கண்ணுள்ள அசுகங்களைக் கேட்டுணர்ந்து நடுங்குவாய்; அத்தகைய நீ நரகத்தில்தலைமைபெற்ற மாதர் அல்குலாகிய நரகமென்றால் உள்ளம் குலைந்திலாய். பழுதுள்ள இவ்வல்குலைக் கண்டால் ஆடவர் நம்மேல் வைத்த ஆசையை முழுதும் விட்டொழிப்பாரென்றெண்ணி, அதனை யொளித்து நிற்பது கண்டும், நீ அவர்தம்மேல் ஆசை கொண்டனையே! சிவபோகத்தைப் பொருந்தாது மாதர் போகத்தில் மிக இச்சையடைந்து புலம்புகின்றாய்; அம்மாதர் அல்குலில் ஒழுகுகின்ற மாதவிடாயுண்டென்று மதித்திலையே!

மாதர்களுடைய தொடையை மெல்லிய வாழைத்தண்டெனப் புகழ்கின்றாய்; அவர் கிழப்பருவத்தில் தமது கையிற்கோல் பிடித்து,நிலமேலூன்றி,மார்பானது தம் வெவ்விய தொடையிற் பொருந்தக் குனிந்து நடக்குங்கால் அங்ஙனம் புகழ்ந்து சொல்வாயோ? இனிமை யிலவாகப் பொருந்திய முழந்தாட்களை வரான்மீனென்று உவமிப்பாய்; வரால்மீன் தன்னிடத்துச் சிறிதே யூனிருக்கப்பெற்று நிகராகாமையை நீ மதித்திலாய்; அவர் செவந்த பாதங்களைக்க்குளிர்ச்சியுடைய செந்தாமரைமலர் என்று புகழ்ந்தாய்; செவ்விரத்தம் வற்றி அவ்வடிகள் வெளுக்கப்பெற்றால் அப்போது வெண்டாமரை யொக்குமென விரும்பிப் புகழ்வாயோ!.

அவர் மேனியானது வண்டுண்ணாத மேன்மையுடைத்தென்று அறிஞர்களால் காட்டப்பட்ட சண்பகமலர்போலும் பரிமளங்கமழ்வதென்று புகழ்ந்தாய்; அவர் மேனியைத்தீயாற்றகிக்கும்போது வீசுந் தீநாற்றம் சண்பகத்தில் அறிந்தனையோ? அவர்வடிவு வானத் தொளிரு மின்போல்வ தென்று புகழ்ந்தாய்; மேலே நீ மாதர் அங்கத்தின் அவயவங்கட்கிணைகாட்டிய எல்லாவற்றுள்ளும் இஃது தோன்றிமறையு நிலையுண்மையால் ஒருவகையாக வொத்துள்ளது.

அம்மாதர்கள் மனத்துடனொற்றுமையுறாத வாய்ச்சொற்கள் மன்மதன் வாகனமாகிய கிளியின் மதுர வாசக மெனப் பாராட்டினாய்; அவ்வாசகத்தை யமதூதர்களூர்ந்துவரும் வாகன மென்றாற் பொருந்தாதோ? மடவார் இன்குரலோசையை மன்மதனது ஊதுகொம்பு எனப்பட்ட குயில் நிகாரம்

என்று உறுதிமொழியாடிப் புகழ்ந்தாய்; அவர் குரலோசை யமனுடைய ஊது கொம்பு என்றுரைக்கும் அறிவுடையோர்க்கென்ன விடைகூறுவாய்.இளமை யுற்ற அவர்சாயை மயிலுக்கிணையென்று சாற்றி மகிழ்கின்றாய்; அஃது மயிலன்னதன்று, பிரமசாயை என்பவர்க்கு நீ யாது மொழிவாய்?

செந்தாமரைமேல் அமரும் அன்னநடையொப்பது மாதர் நடையென்று கூறுவாய்; அஃதுஅன்று. அவர் உண்கின்ற அன்னத்தாலாகிய நடையென்று சொல்பவர்க்கு நீ யாது உத்தரஞ் சொல்வாய்? மங்கையரைச் சித்திரப் பாவை யொப்பாரென்று புகழ்வாய்; சித்திரப்பாவையென்னில், அதனிடத்து மங்கையர் உடலிலுள்ளது போல, எழுபத்தீராயிரம் நாடியாண்டுள்ளது? மகளீர் அன்புடன் உலகத்தார் நினைக்கும் பூங்கொம்புபோல்வாரென்று புகழ்வாய்; அப்பூங்கொம்பில், மகளீர் உடற்கணுள்ளது போல, மூன்றரைக்கோடி யுரோமத்துவார முண்டோ? அவர் வடிவம் இனிய அமுதாற் செய்யப்பட்டதென்று பகர்வாய்; அச்செய்கை நிசமாயில், அவர்கள் உன்னை வைதாலும் நீ அவர் வடிவை யிகழாயன்றோ? பொய்யைத்தவிராத நெஞ்சே! ஒள்ளிய பல பணிகள்பூண்ட மாதர்கள் உருவம் கரும்பு நிகரென்று புகழ்வாய்; சிறிது அவர் உருவைக் கிள்ளியெடுத்தால் கீழே யிரத்தம் வடியுமன்றோ?

அம்மாதர் பெயர் 'நல்லார்' எனப்படுவதென்று நயந்து பாராட்டுவாய்; இதில் வியப்பு என்? நாயின் பெயர் கெடுதலில்லாத பெரிய 'சூரன்' என்று உரைப்பர்; இதனை நீ கேட்டதில்லையோ? மாதர் மெல்லியலார் என்று புகல்வாய்; அவர் மெல்லிய சாயலுங் குணமும் நடையு முடையவராயின்; அவராற் பொறுக்கப்படும் மிக்க கருப்பவேதனையை வல்லியலார் யாவர் சகிக்க வல்லார்? (மாதர் மெல்லியலார் என்று உபசாரமாகக் கூறினும் கருப்பவேதனையைச் சகித்திருத்தலின் அவரினும் வல்லியலார் பிறர் இலர் ஆதலால் நீ கூறுதல் பொய்ம்மொழி யென்பது கருத்து.)

அம்மாதர் ஒளிபொருந்திய ஆபரணம் பூண்பாரெனில், அப்பூணணிந்ததனால் உண்டாகிய அழகின் மயங்கி, அவரை யாலிங்கனஞ்செய்ய அவர்மேல் வீழ்கின்றாய்; அவர்மேல் வீழ்தல்விட்டு வெந்தீயிலே பாய்ந்தாலும் அங்கு அதனால் ஒரு பலனுண்டாம். அவர் ஆடையாபரணாதிகளால் அலங்கரிக்கப்பெற்றவராய் மாளிகை யகத்தும் புறத்து நடைகொண்டு செல்வாரேயாயின்,சிந்திக்க வேண்டியவற்றைச்சிந்திப்பதொழிந்து, அவர்பின் அவர் ஏவலரைப்போலச் செல்லாநிற்பாய்; அங்ஙனஞ் செல்லுகை நீங்கி, வெவ்விய புலியின்பின் செல்வாயெனில் அங்கு அதனால் ஒரு குணம் உண்டாம்; அம்மாது நடந்து போயொருபானின்றால் நீ அவர் பின்னர் சென்று நிற்கின்றாய்; அங்ஙனம் மோகித்து நிற்பது நீங்கிக் கண் மூடி நின்றபோதினும் அங்கு அதனால் ஒரு நிலையுள்ளதாம்.

அவரைக்கண்டாற் பிறிதொரு சிந்தனையும் பொருந்தி நில்லாமல் அவர் உடம்பைக்கட்டித்தழுவுகின்றாய்; அங்ஙனம் அவருடம்பைக்கட்டித்தழுவுதலை விட்டுக் கல்லைக்கட்டித்தழுவினாலும் அங்கு அதனால் ஒரு குணமுள்ளதாம். பெண்டுகளாயினோர் உன்னை இகழ்ந்தபோதிலும், அவர் விரும்பாதிருக்கையில், அவர்தயவைப்பெற வலிதிற் றொண்டுபுரிவாய்; இவர்க்கு அங்ஙனம் தொண்டு செய்வதிலும் பிணத்தொண்டு செய்வாயென்னில், அங்கு அதனால் தாழ்ந்தோர் உயர்ந்தோர் நன்கு மதிக்குஞ் சிறப்பு உள்ளதாகும்.

நீராடும் ஒழுக்கமுற்ற சரீரத்திற் பற்றிய செவந்த தோலின் மினுக்கால் நீ மயங்கினை; அங்ஙன மயங்குதலினீங்கி,உயிர்மாண்டொழிவாயெனில் அதனால் அங்கு ஒரு சிறப்புள்ளதாம். பசுமை நிறமும் பரிமளமுந் தன்னிடத்திலங்கப் பெற்ற மஞ்சளரைத்து மெய் முழுதும் பூசிப்பொன்னிறங்காட்டி மாதர் மினுக்க, அதனால் நீ மயக்கமடைந்தனை; அங்ஙனம் மயங்காதொழிந்து நீ சாவாயெனில் அதனால் மறுமையின்கண் உனக்குச்சுகம் வாய்ப்பதுண்டாம்.

மாதரைப் பார்க்கில், மகிழ்ச்சியாலசைந்தாடியோடிப் பல வடிவுகொண்டு திரிகின்றாய்; கோர நரகங்களைப்பார்த்தாலும் அந்நரகில் கிடந்து வருந்துவோரைப் பார்த்து, நாம் இனி யாதொரு தீமையுஞ் செய்யாது நன்னெறி நின்றொழுகவேண்டுமென நன்மதி தோன்றுதலாகிய பலன் வாய்க்கும். மாதர்கள் உன்னைத் தம்மருகிற் சேர்த்துக் கைகளால் தீண்டுவாராயின் சந்தோஷித்துச் சுகிக்கின்றாய்; அதனிலும் உன்னை வலியுடைய பூதம் தொடுமாயின் அதனால் அங்கொரு பக்கத்துணை வாய்த்ததாகும்.

உன்னைச்சினேகித்தாலும், உன் போதத்தையும் பொருளையும் சத்துவத்தையும் அழிக்கும் பகைவரைப்போன்ற மடவாரைக்கூடிச் சிற்றின்பத்தையனுபவிக்கின்றாய்; இவ்வனுபவத்தைவிட்டுத் தீய விடத்தை வாரியுண்டாலும் அதனால் அங்கொரு போதமுள்ளதாம். அம்மாதரது செவந்த இதழமுதத்தைப் பானம்செய்தான் மகிழ்வாய்; அதனைவிட்டுச் சிறுவர்கள் சிறுநீரையுண்டாலும் அங்கு அதனால் ஒரு திடனுண்டாம். அவர் இதழைக் கற்கண்டென்று கவ்வுகின்றாய்; அதனைவிட்டுக் கரிய எட்டியையும் வேம்பினையும் கவ்வி, அவற்றின் இலை காய் கனி முதலியவற்றை யுண்டாலும் அதனால் அங்கு ஒருபலன் விளையாநிற்கும். அந்தக்கட்டிளமையுடைய மடவார் தம் வாயிலிட்டு மென்று தாம் நுகர்ந்து கொடுக்கும் கனி முதலிய சிற்றுண்டிகளும் எச்சிற்றம்பலமுமாகிய மிச்சிலை நீ விரும்பி யுண்ணுகின்றாய்; அங்ஙனஞ் செய்தல் விட்டு, நீ வெறும் வாய் மென்றாலும் அதனால் அங்கொரு நன்மை விளையாநிற்கும்.

அம்மாதர் உடுக்குஞ் சேலையின் முன்றானை யுன்மேற்பட்டான் மகிழ்ச்சியிலழுந்துகின்றாய்; இம்மகிழ்ச்சியி லழுந்திப் பின் துன்புறுவிக்குமதனைப்பார்க்கிலும்,அம்பு உன்மேற்பட்டாலும் அதனால் உன்னுடல் முன்னர்ப் பதைக்கும்படிசெய்து, பின்னர் விளைவிக்கும் சுகமாகிய பலனுள்ளதாம். அம்மாதர் உன்பால் நெருங்கி யுன்னைத் தீண்டுவாராயின், உட்பூரித்துச் சிரிக்கின்றாய்; அதனைப் பார்க்கிலுஞ் செந்தேள் உன்னைத்தீண்டுமாயின் அங்கோர் குணம் அதனால் விளையாநிற்கும்.

நன்றி யுணர்வறியாத மாதர் வாய்க்கு வழங்கச் சிற்றுண்டி யாதேனுமொன்றுவிரும்பி வாங்குகின்றாய்; அது செய்யாதொழிந்து, அச்சிற்றுண்டியை யொருநாய்க்கு வழங்குவாயெனில், அந்நாய் உன்னைக்காணும்போதெல்லாம் நன்றி யுணர்வு பாராட்டி, யுன்னைச்சூழ்ந்து வாலைக்குழைத்து நின்று நட்புக்காட்டித் தொடருந்துணையாகின்ற நன்மை விளையாநிற்கும். குடும்பப்போராட்டமிடுகின்ற அம்மாதரைப் பாலிப்பதுகுறித்துப் பொருள் சம்பாதிப்பாய்; அந்தச் சம்பாதனைப் பொருளை வீதியிலெறிந்து விட்டாலும் வறியோர்கள் கண்டு கைக்கொண்டு சீவித்துப் புகழ்வதாகிய வோர் பெரும்புகழ் விளையாநிற்கும்.

வாள்போலுங் கண்ணுடைய மாதருடனிருந்து உண்டி யருந்துகின்றாய்; அங்ஙனஞ் செய்வது தவிர்ந்து, நாயுடனிருந்து புசித்தால், அதனால் அங்கு

ஒரு பிரிவரிய உறவு விளையாநிற்கும். இவ்விடத்துப் பிழைபாடுள்ளதென இம் மாதர் வாயின் மென்று தரும் எச்சிற்றம்பலம் இனியதென்று நின் வாயிலேற்றுத் தின்னுகின்றாய்; அங்ஙனஞ்செய்யாமற் புல்லிதாகிய மலத்தையெடுத்து விழுங்குகினு மவ்விடத்தில் ஒரு நல்ல இந்திரிய அடக்கம் விளையாநிற்கும். மங்கையரைத்தோத்திரம் பண்ணிக்கொண்டு அவர் வாழு மாளிகையைக் காத்திருக்கின்றாய்; அதனாலுனக்குப் பலன் யாது? அத்தொழிலைவிட்டுச் சுடுகாட்டைக் காத்தாலும் அதனால் அவ்விடத்திலொரு மேன்மை விளையாநிற்கும். பூமியில் வாழ்வோர் காட்டுதற்கரிய மாதர்குரலோசை இனிதெனக்கேட்பாய்; அவ்வோசையைக் கேட்பதனிலும், கழுதையின் இன்பமற்ற குரற்பேரொலியைக் கேட்டாலும் அங்கே அதனைச் சுப சகுனமென வெண்ணும் நினைவில் உற்சாகம் விளையாநிற்கும்.

தீமையைப்பற்றி மாயையிலழுந்திய மாதருடனிருந்து வாழ விரும்பினாய்; இதனை விட்டு ஆழ்ந்த கடலிலே வீழ்ந்தாலும் அங்கு அதனாலோர் உணர்வு விளையாநிற்கும். மடவார் மையலுறுத்தும் வகையும் பலவுள. அவர்மேலிச்சை வைத்த உள்வீட்டுக்காரன் காண முலையையும்,எதிர்வீட்டுக்காரன் காண முகத்தையு மிகக்காட்டாநின்றார்; நெஞ்சே! நீ அவர் மாய நடையைக்கண்டும் அவர்மேலிச்சையை வெறுத்தாயில்லை.

தன்னை மணந்த நாயகன் இருக்கவும், தனது சோர நாயகனைத் தன்னிடத்துக் கூட்டுவிக்க உடன்படுந் தூதுக்கு வேலையிடும் பொருட்டாக அவனது பணப்பையிற் கையிட்டு வஞ்சித்துப் பொருள் கவரும் மாதர்செயலைக்கண்டும், அவர் நட்பை விரும்புவதிற் பயமடையாதிருக்கின்றனை. ஒரு சில காமுகர்க்குக் கையாலும், வேறு சில காமுகர்க்குக் கண்ணாலும் சைகைசெய்து அவர் மயக்குகின்றார்; நீ அவர் தந்திர நடையை அறிகின்றிலை.

யான் தளர்வின்றி முடிவில்லாத இவ்வகைப்பட்ட மாதர் செய்கைகளையெல்லாம் சொல்வேனாயின் கேட்டவளவிலே குடல்கலங்கும்; இம்மாதர் ஒருபால் வாய் பேசவும், ஒருபால் மனம் போகவும், ஒருபால் உடல் தொழிலைச் செய்யவுமாக நின்று மாயவித்தை காட்டி நாசமடைவார்; இத்தகையராகிய இவர் புண்ணியமே செய்தறியார்; பாவமே செய்வதை விரும்புவார்; சிவதலங்களிற்சென்று தரிசனஞ் செய்தறியார்; பேய்களெனப்படுஞ் சிறு தெய்வங்களுக்கே திருவிழாச் செய்வார். இவரை இன்று நான் வஞ்ச மென்கேனோ! கொடிய வினையாகிய புலியென்கேனோ! பாவங்களின் திரட்சியென்கேனோ! பெரிய நரகபூமியென்கேனோ! பயப்படத்தக்க வாட்படையென்கேனோ! வாயாற்சொல்ல முடியாத மாய மென்கேனோ! ஊழிக்கால மென்கேனோ! கொடிய அந்தகனென்கேனோ!கோளே வடிவமானதென்கேனோ!சாலமென்கேனோ! பெரிய இந்திரசால மென்கேனோ! பெருமையுள்ள ஆலகாலமென்கேனோ! உனது பொல்லாக்கால மென்கேனோ! உலகின்கண் பெண் என்ற அளவில் யோகநெறி நிற்கும் பெரியோர் நடுங்குவாரென்னில், மண்மேல் வாழ்வோர் யாவர் உள்ள நடுங்கமாட்டார்?

பெண் என்று சொன்னாற்பேயும் அவர்பால் மனமிரங்குமென்று கூறுவாய்; நன்றுகூறினாய்; பேய் ஒன்றுதானோ? அவர் பெற்ற மக்களும் அவர்செய்யும் பாவங்களை யெண்ணி, “இவர் உய்தி பெறுவதெக்காலம்” என்று மனமிரங்காநிற்பர். சிறந்த செம்பொற்பூடணங்களாலும், பட்டாடைகளாலும், அலங்கரியாவிடில் அவர் வடிவம் என்ன அழகுடையதாம்? இதனை நீ யெண்

ணிணாயில்லை; துன்பக்கொத்தென்னு மங்கையர் கூட்ட மெழுவகைப் பிறவிக்கும் வித்தென்று நீ யுணர்ந்தும் அவர்மேல் வைத்த ஆசையை யொழிக்கின்றாயில்லை.

நம்மை அடிமைகளாகப் பாச வினைக்குட்படுத்தும் அந்த மாதர்மேல் உனக்கு ஆசை யெவ்வாறடைந்தது? நெடுநாளாக உன்னோடு பழகிய வென்மேல் அன்பில்லாத நெஞ்சமே! உன்னுடைய ஆசை யாதென்பேன்? நெய் வீழ்ந்த நெருப்பு மென்மேலதிகரித்தெழுதல்போல மென்மேலும் பொன்னாசை அதிகரிக்கப்பெற்றனை. பொன்மேல் ஆசைவைத்து அதனைப்பாதுகாத்தும், பூமியிற் சேமித்துப் புதைத்துவைத்தும், கள்வர் பகைவர் முதலாயினோர் கவர்ந்து கொள்ள இழந்தும், அதனால் வீணே வயிறெரியப்பெற்றும் எத்தனைபேர் இந்த மண்ணுலகில் உனது கண்ணெதிரே வறியராய் நின்றார்.

ஓரிடத்தினின்று வேறோரிடத்துக்குச் சகடக்கால்போலவுருண்டு செல்லுகின்ற செல்வத்தையுடையவர்கள் துன்பக்கடலொன்றையே யுடையாரல்லது வேறாக என்ன இன்ப சுகமுடையார்? நீ இதனைக் கண்டிருக்கின்றாயன்றோ? உன்னிடத்திலே பொன் உள்ளதாயின் அறிவாற்றல் மிக்க மாதாவும் உணராமல் அதனைப் பத்திரப்படுத்தி வைக்கத்தக்க வோரிடம் வேண்டும்; நீ அதற்கு யாது செய்வாய்?

தகுந்த இடம் கிடைத்தாலும் அதனைப் பத்திரப்படுத்தி வைத்த விடம் உனக்குக் காணாமல் மறையப் பிறரேனும் அல்லது பொன்காக்கும் பூதமேனும் மறைக்குமாயின், சிவ சிவ நீ என்ன செய்யக்கடவாய்? அங்ஙனஞ் சேமித்துவைத்த வைப்புத்திரவியமானது உன் கண்ணுக்குத் தோன்றாமல் உன்னை வஞ்சித்து மறையாது வைத்த விடத்திலிருந்தாலும், பின் அது கரியாக வுரு மாறினால் அர அர நீ யாது செய்வாய்? சேட்டையறப் பொருந்திய வோரிடத்திலே நிலைத்து நில்லென்றுனக்குச் சொன்னால், என் சொற்கிணங்காமல் எங்கும் வாயுபோல விரைந்தோடுகின்ற நீ உனது வைப்புத் திரவியத்தைப் பிறர் கைக்கொள்ளாமற் பாதுகாத்தற்கு யாது செய்வாய்? நீ சேமித்த திரவியத்தை யுனதுபகைவர்கள் ஜெயமுடனே பேர்த்துப் புரட்டி யிழுத்துப் பெருங்கோபத்தாற் பறித்துக்கொள்வாரேல் யாது செய்வாய்? உனது பகைவர் கைக்கொள்ளுமுன் நீ யதனைப் பேர்த்தெடுக்கக் கையைப்புகுத்தும்போது அதனுள்ளிருந்து கருங்குளவியும், செங்குளவியும் கடுகடுக்கக் கொட்டுமானால் நீயாது செய்வாய்?

பொய்ந்நெறியிற் புகுத்தவல்ல உனது பொன்னைப் பூதமானது காத்திருந்து நீ யெடுக்கும்போது தடுத்து, இப்பொன் எனதுகாவலுக்குட்பட்டது, நான் நீ யெடுக்கவிடமாட்டேனென்றால், யாது செய்வாய்? பொன்னைக் காக்குங் காவல்வேலை யதிகரிக்கும்போது, "பெருஞ்செல்வ முடையோம், எமக்கு நிகர் யார்" என்று செருக்குற்று நிற்கிற ஆணவமாகிய கொடியசூளி, (பசாசு) யானது உன் தலைமேலேறி வீற்றிருக்கும்; அதனைத்துரத்துதற்கென் செய்வாய்? ஓரிடத்தி னிலைபெற்றிராத செல்வமுடைய வுனது சினேகத்தைத விரும்பி உலோபகுணமென்கிற குறும்பன் இப்போதே யுன்னிடம்வருவானெனில், நீ அதற்கு யாது செய்வாய்?

அவன் சினேகத்தால், முன்னே சிறிதும் உலோப குணமில்லாத நம்மிடத்தில் உண்டோ இல்லையோவென்று சந்தேகிக்கக்கூடிய நல்லஉபகாரகுண

மெல்லாம் அழிந்துவிடும். அதற்கு நீ யாதுசெய்வாய்? செல்வமானது ஓரிடத்து நிலையாக நில்லாமல் நல்வினைப்போக மனுபவிக்க வேற்பட்ட காலத்தை யாராய்ந்து ஒரு சிலநாட்களில் மாறி மாறி யாயிரம் பேரிடத்துச் சென்று சென்று நின்று நின்று நீங்குவதை நீ பார்த்தாயில்லை.

ஒருவனிடத்தே பெரிய செல்வம் வருதலும் போதலும் கூத்தாடுஞ் சபையின்கட் பிரசைகள் கூடுவதும், அக்கூத்தாட்டு முடிவில் அப்பிரசைகளின்கூட்டம் நீங்குவதும் ஒக்குமெனக்கலைஞான முழுது முணர்ந்த திருவள்ளுவதேவர் திருவாய்மலர்ந்தருளிய சிறப்பினையுடைய "கூத்தாட்டவைக்குழாத்தற்றே பெருஞ் செல்வம், போக்குமது விளிந்தற்று" என்னும் ஈரடியாகிய திருக்குறள் வெண்பாவை யாராய்கின்றிலை.

உடலினின்றும் உயிரைப்பிரித்து விட்டோட்டுகின்ற யமதருமன் என்றால், அவன் கோரவடிவைப் பார்ப்பதன்முன்பே நடுங்குகின்றாய்; அந்த யமனைப் போலவே நமதுஇளமை முதலிய பருவத்தைக்கருதாமல் இச்சைப்பட்டுஉடையவரைக் கொல்லும்படி பிறரைத்தூண்டி நிற்பதனால் "ஆட்கொல்லி" யென்றே பொன்னைப் பெயரிட்டழைப்பர்; இதை நீ யாராய்ந்துணர்கிலாய். பள்ள நிலத்துத்தோட்டங்களிலுள்ள பசுமூலிகைகளாற் பெரியோர் பொன்னை யுண்டாக்கித் தருவர் எனில், எளிதிற் செய்யப்படும் பொன்னின்மேல் எவ்வாறு உனக்கு இச்சையுண்டாகியது? ஆசையற்ற பெரியோர் விசர்ச்சனம் செய்த மலம் பட்டவிடமெல்லாம் பொன்னாகுமெனில், இதன்மேல் வைத்த இச்சையை நீ விடுதற்கிசைகின்றாயில்லையே!

நமது குறையை நீக்கப் பொன்வழங்குவதல்லது நமக்கு உண்ணும்உணவு முதலியனவாக எவ்விடயத்தில் அடுத்துள்ளது? இதை யொருசிறிதும் நீ எண்ணினாயில்லையே! பொன் முன்னிலையாகவுள்ள உலகின் குணமாகிய நீண்ட மயக்கம் வீணான மயக்கமென்று, நீ பொன்னாசையை விட்டிலாய். இந்த வட்டமாகிய நிலவுலகில் இந்தச்செல்வம் இல்லாமல் சீவர்களின் உயிர் வாழ்க்கை நடவாதெனில், மனிதரல்லாத ஏனைய சிற்றுயிர்கள் எந்தச்செல்வத்தைத் தமக்காதரவாகக் கொண்டு வசிக்கின்றன? இப்பொன்னாசையோடு வெம்மையுடைத்தான மண்ணாசையு நீ படைத்தாய். மண்ணுலகையாளுகின்ற அரசர்கள் எல்லாரும் ஒருவர் ஆளுந்தேசத்தை மற்றொருவர் இச்சித்துச் சண்டையிட்டு மண்ணாசை காரணமாகவே மாண்டு போகின்றார்; இதனை நீ மதித்தறிகின்றாயில்லை.

நிலையாமையை நினையாமல் தம் வலியாற் பிறர் பூமியைத் தமதாக்கிக் கொண்டவர் இறந்தாராக, அவர் பிணத்தைப்புதைக்க வேறொருவர் பூமியை வாங்கினாரன்றி, அவ்விறந்தவர் காணியிற் புதைத்திலார். திண்ணிய விண்ணுலகிற்செல்லுங்காலையில், அவ்வுலகில் தாம் அனுபவிக்கவேண்டுமென்று ஒரு பிடிமண்ணாகிலும் கொண்டு செல்ல வல்லாரோ? மண்ணாசையால் முன்வந்த ஒருவன் என்னுடைய காணி இது வென்றான்; அவனுக்குப்பின்வந்த வொருவன் என் காணி இதுவென்றான்; இங்ஙனங் கூறுவது நீ கேட்டிருக்கவில்லையோ? இவ்வுலகில் நீயே ஒரு பூமியின்மேல் விசாரணைக்காரனாக விருந்தும் அப்பூமிக்கு உரியவனாகாதிருந்தும், நீ குடியிருந்த மண் எனது காணி (உரிமைப் பொருள்) என்று மதித்தனையே!

கண்ணாற் காணும்படி மண்காணி விரும்பி அதுபெறுதற்காக முயன்று வருந்துகின்றாய்; அங்ஙனமே நீ மேனிலமாகிய விண்காணி விரும்புதல்

ஆச்சரியமன்று. மதித்துணரில் நீ அந்தரத்திலிருக்கின்றாய்; உன்னைவிட நீ விரும்பிய மண் அந்தரத்தி னின்றதை யறிந்திலையோ! யாரேனுந் தந்திரமாகத்தமக்கு 'மண்கொடுப்பேன்' என்று சொன்னால்,அதைக்கேட்டுச்சிறுவர்களும் நிந்தியாநிற்பர்; மண்கொடுக்கில் நீயோ மகிழ்வாய் போலும்.

வளப்பத்தைத்தரும் வீடு (மோட்சம்) என்று நான் கூறினேன்; வீடு என்றதை நீ மண் வீடென்று நினைந்தாய்; வீடு என்னும் சொல்லின் பொருளைக் கண்டு பிரபஞ்ச மயக்கத்தை விட்டனையல்லை.நாட்டின்கட் பொருந்தியவான, மண்ணாலு மரத்தாலுங் கட்டப்படும் வீடுகள் முழுதும் கட்டழிந்து போதலைக் கண்ணாரக் கண்டிலையோ? மண்ணாற் சமைக்கப்பட்ட உப்பரிகையுள்ள மாளிகைகளும், அவற்றையுடைய வேந்தர்களும், ஒருநிலை முதலாக ஏழு எட்டு மேனிலைகளையுடையவீடுகளும் பாழ்பட்டொழிந்தமை நீ பார்க்கவில்லையோ? மேனிலையுடைய வீட்டில் உப்பரிகையின்மேல் யானேறுவேன் என்று சொல்வாய்; நீ கூறுஞ்சமயத்தில் எமன் கடாமிசை யேறி யுன்முன் வருவானேயானால் உன்னாசை யாதாக முடியும்?

சொல்லப்பட்ட இந்த மண்ணுலகத்தைப் படைத்தருளிய பிரமதேவனும் மண்ணாசை கொள்ளானெனில்,உனக்கு இம்மண்ணாசை யெவ்வாறு உண்டாகியது? இம்மண்ணுலகில் ஒன்றுக்கும் பற்றாத சிறு துரும்பினிடத்து நீ ஆசை வைத்தாயெனில் உன்னுடைய தீராத பேராசை எவ்வளவினதென்று நான் சொல்வேன்?அறிஞர்கள் சென்றணுகாத பாவமாகிய சமுத்திரத்திற்கு மிக்க ஆழமுள்ளதொரு கடலாகிய வெகுளிக்கிடஞ்செய்யும் கோபமாகிய சமுத்திரத்துண்மூழ்வாயாயின் அதுதனக்கே தீங்காக முடியும்; எளியவர்மேற் செலுத்தின் இம்மையிற் பழியையும், மறுமையிற் பாவத்தையும் தரும் எனத்திருவள்ளுவதேவர் திருவாய்மலர்ந்தருளிய "செல்லாவிடத்துச் சினந்தீது செல்லிடத்து,மில்லதனிற்றீய பிற" என்னுங்குறட்பாவை நீ நினைக்கின்றிலையே!

துன்பமானது தன்னைத்தான் அடையாமற் காக்க வொருவனினைந்தானாகில் தன்மனதிலே கோபம் வராமற் காக்கக்கடவன்; அவ்வாறு காவானாயின் அந்தக்கோபம் தன்னையே கெடுக்கும் என்று திருவள்ளுவதேவர் "தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்றன்னையே கொல்லுஞ் சினம்" என்னுங் குறட்பாவைப் பொன்னைப் போலக்காத்துப்புகழ்ந்தாயில்லையே!தன்னை வெட்டுவோரைக்கீழ்விழாமற்சுமப்பதாகிய நிலத்தைப்போலத்தனக்குத்தீங்கு செய்வோரைக்கோபியாதுபொறுத்தல்,முதன்மையான அறம் எனப்பொருள்படும்"அகழ்வாரைத்தாங்கு நிலம்போலத்தம்மை,யிகழ்வார்ப்பொறுத்தறலை" என்ற திருக்குறள் வெண்பாவின் மொழியப்பெற்ற உண்மை நீ தெளிந்து உணராதிருக்கின்றனை.

நம்மை நிந்திப்பவரை நோக்கி இவர் நம்மை எப்படி நிந்திப்பார் பார்ப்போம் என்றிந்தப்பிரகாரம் கோபித்து, அடங்கியிருக்கும் என்னை வெளியிலிழுத்துவிட்டனையே!பகைவனைப்போலத் தன்னையிகழ்ந்த பிறர்மேல் யோசியாமற் கொள்ளப்படும் வெகுளியுடையவன் சிறிதும் தவத்தின் பயனையடையமாட்டான் என்று பெரியோர் கூறுவார்;அவ்வுலகர் மூதுரையையும் நீ தெரிந்தாயில்லையே! (நெஞ்சே!)நீசெய்யுங் கொடிய பாவமாகிய கோபத்துக்குத்தகுதியாக நமது கர்த்தாவாகிய சிவபெருமான் அருளாது கோபஞ்செய்துதண்டிப்பாரெனில் இந்தக் கோபத்தை யெவரிடத்தில் வைக்கக்கூடும்? (ஒருவரையுங் கோபித்தல் கூடாது என்றபடி.) மன்னுயிரைத் தன்னுயிர்போலக் கருதுஞ்

சமதிருட்டியில்லாத நெஞ்சமே! உனக்குஇனியவை செய்தாரிடத்தில் அன்பு பொருந்தினாய், தீங்குசெய்தவரைக் கோபித்தாய்; இதனால் நீ என்ன பலன் கண்டனை? அறிவுடையோர் எல்லாப்புண்ணியங்களும் இதுவேயென அன்பு கொண்டு புகழ்கின்ற கொல்லாமை (ஒருயிரையும் இம்சியாதிருத்தல்) யாகிய புண்ணியத்தைச் சிறிதாயினுங் கைக்கொண்டு நடக்கின்றாயில்லையே! பொல்லாத கடுமையோடிருக்கும் அவிவேகியாகிய நீ மன்னுயிர்களிடத்தில்அன்பும் காருணியமும் அடைந்தாயில்லையே!

இன்பம் பெருகுகின்ற அகச்சுத்தி புறச்சுத்தி முதலாயின வெல்லாம் துணையாகச் சேரப்பெற்றது சத்தியம் (உண்மை) என்பதொன்றேயாம். இதனை நீ மதித்துக்கைக்கொண்டிலையே! இதயசுத்தியில்லாத நெஞ்சே! ஒரு திருக்கையிலே மானைத்தாங்கி நிற்குஞ் சிவபிரானிடத்துப் பத்தி புரியுந் திருத்தொண்டர் கூட்டத்துள் நானும் ஒருவனென்று பிறர்மதிக்க நடித்தனையே! யான் இவ்விடத்துக்கூறாத வெல்லாப்பாதகங்களிலும் பழகிப் பழகி அப்பாதகங்களிலே சதா பழகுவோருக்குள் முதல்வனாகின்றாய்! பாதகத்தில் விளைகின்ற இடைவிடாத விகார உணர்ச்சியினால் இப்பிரபஞ்ச மாயையின் விகாரங்களிலழுந்தி மகிழ்ந்தனையே! இளமைப்பருவம் என்றும் நிலையாக விருக்குமென்று நீ உறுதியாக எண்ணினாய்; உன்னைப்பெற்ற மாதாவின் இளமை எத்தனைநாள் நிலைத்திருந்தது? இளமைப்பருவம் என்றுமுளதாகக் கொடுக்கப்பட்டதென்று நீ சொல்கின்றாய்; உன்னையொத்த காளையர் கிழவர்கட்குக்கைகொடுத்து நடத்திப்போவதைப்பார்த்திலையோ?

தேகத்திலுண்டாகிய கூனோடு கையிற்பிடித்த கோலை நிலத்திலூன்றிக் கீழே குந்திக்குந்தி நடைதளர்ந்து கால்கள் நடுங்க நிற்பவரை நீ பார்த்ததில்லையோ? உடம்பு தசைவற்றி மெலிவுற, ஐயா! நடந்துவருகவென்று தம் அருமைப்புதல்வர் முன்னே நடத்திக் கொண்டுசெல்ல, அவர்பின் மெல்ல நடந்துபோகின்ற தந்தையரைப்பார்த்ததில்லையோ?

எமலோகம் வாருமென்றழைக்கவும், தமக்கு விருந்தூட்ட வாருமென்று பருந்துகளும் நரிகளும் அழைக்கவும்,பிணநாற்றம் வீசுஞ் சுடுகாடு வாருமென்றழைக்கவும்,மரணத்தை யெதிர்நோக்கி வயோதிகமடைந்திருப்பவரை நீபார்த்த தில்லையோ? பெருமையுடைய சரீரம் உலர்ந்தும், ஒளிக்காதாரமாகிய நீரையுடைய விழியுலர்ந்தும், வாயுலர்ந்தும், கைகள் தசையற வுலர்ந்தும் மரணத்தை யெதிர்நோக்கி நிற்பவரை நீ பார்த்த தில்லையோ?

சரீரத்தின்றசை வற்றியொடுங்கியும் இந்தக்கிழவன் சாகாதவனாகியின்னுந் தளர்ந்திருக்கின்றானென்று நீ இங்கே அருவருத்தவனில்லையை யெண்ணி உணர்வதில்லையோ? இது உயிர்வாழ்க்கைப் பொருந்தாத கண்டம் (ஆபத்து), பொல்லாத கடுநோய் என்னுங் குமரகண்டவலி இது என்று கூறும் நோயாளரை நீ பார்த்ததில்லையோ? தாம் பெற்ற சரீரத்திற் றொழுநோய் பற்றவும், கைகளும் கால்களுங் குறுகக்குறைக்கின்றவிது பொல்லாதகுட்டநோயென்று வருந்துகின்றவரை நீ பார்த்ததில்லையோ?

இது கொடிய வினைப்பயன்; காலையினும், மத்தியானத்தினும், மாலையினும் உடற்பாரிசங்களினும் அடிவயிற்றிலும் மார்பிலும்முதுகிலும் குத்துதலைச்செய்யுஞ் சூலைநோயென்று வருந்துவோர்களைக்குறித்து நீ யோசிப்பதில்லையோ? தேகத்தை மிகவும் துன்புறச்செய்யும் தன்மையுள்ளது; இதினின்றும் நீங்கிப்பிழைத்தற்கரிதாகிய கொடிய மேகரோகம் இதுவென்பவரை யடுத்து

நீ பார்த்ததில்லையோ? மென்மேலுந்தாகத்தைத்தருவதாய், மனத்தில் துன்பத்தைச்சொரிவதாயுள்ள சீதத்தின் மிகுதியால் விளையுஞ் சன்னிமுதலிய சீத நோய்களும், வாதநோய்களும், பித்த நோய்களுங்கொண்டு வருந்துவோரிடத்துச்சென்று அன்னோர் நிலைமையைக்கண்டதில்லையோ?

வன்மை மிகுந்த கைந்நோய், காலோய், கண்ணோயுடனெண்ணில்லாத சரீர சாட்டியங்களுங்கொண்ட நோயாளரைக்கண்டு,*இவர் இன்ன இன்ன நோயாளர்என நீ சொன்னதில்லையோ? அல்லது அவரைவிட்டு நீங்கினதில்லையோ? தேகம் இளைத்தலையுடைய முட்டுக்காயமும், கைமுடக்கம், கால் முடக்க முதலாகிய முடக்கமும், குறளும், கூனும், ஊமையும், செவிடும், குருடும், உறுப்பு மயக்கமும், உறுப்பில் பிண்டமு மீருகவுள்ள எட்டு வகை யிடையூறுகளைக்கொண்டு வருந்துவோரைக் குறித்து நீ யெண்ணிய தில்லையோ?

இவ்வுடலோடு கூடிவாழும் பிரபஞ்ச வாழ்க்கையில் நேரிடுகின்ற இடையூறுகள் எண்ணில்லாதன வுளவென்றால், இளமைப்பருவம் ஒருபொருளாக வைத்தெண்ணப்படுமோ வென்று நீயெண்ணவில்லையே! துறவற நெறியினின்ற பெரியோர் தங்கள் நினைவில் இவ்வுடம்பு அநித்தியமென்று புலம்பாநிற்கவும், நீ யிதனை நித்திய பதார்த்தமென்றெண்ணிப் பொய்ம்மயக்கமடைந்தனையே! இச்சரீரம் இறந்தகாலத்துப்பிணத்தின் இருபக்கத்தும் வரிசையாக நின்று கூகா வென்று மாதர் மக்கள் கூடி யலறியழுதல்கண்டும், நீ பொய்யுடலில் ஆசைவைத்து நடந்தனையே! மிக்க வாசையுடைய மனையாள் வீட்டிலிருந்து நாயகன் பிரிவையாற்றாது வருந்தப் பிணத்தைப்பாடையிலேற்றிக் கொண்டுபோவாரைக்கண்டிருந்தும் அந்தோ! நீ உள்ளங் கலங்கினதில்லையே.

பழமையாக வாசஞ்செய்திருந்த வூரார் தமது பிணங்களை யிடுகாட்டுக்கு எடுத்துச் செல்லுங்காலையில், நாமும் உடன் சென்று, வீட்டுக்குத் திரும்பி வந்து நீராடுதலை நீ சிறிதாயினு நினைந்தாயில்லையே! நோய் முதலிய இடையூறுகளின்றி இன்றிருந்தவர் நாளைக்கிருப்பது பொய்யென்று பெரியோர் வாய்மலர்ந்த நன்மையுண்டாகிய வார்த்தையை நீ யாராய்தலில்லையே!

ஒருவனுக்கு நித்திரை வருதல்போலும் மரணம் வருதலென்றும், விழிப்பு வருதல் போலும் பிறப்பு வருதலென்றும், திருவள்ளுவதேவர் திருவாய்மலர்ந்தருளிய "உறங்குவது போலுஞ் சாக்காடுறங்கி, விழிப்பதுபோலும் பிறப்பு" என்ற வொள்ளிய குறட்பாவின் உண்மையை, அந்தோ! பாவ நெறியைக் கருதி நீ மறந்தனை. காற்றசையும்போது சுழன்று, அசைவற்றபோது கீழ்விழுங் காற்றாடி போல "நெருநலுள னொருவனின்றில்லை யென்னும், பெருமையுடைத்திவ்வுலகு" என்னும் உறுதிமொழியாகிய குறட்பாவின் பொருளை மறந்தாய்.

தெருவின்கண் வருவார் போவார் உரையாடுகின்ற இறந்தார் பிறந்தார், பிறந்தார் இறந்தார் என்னும் வாசகத்தை நீ மறந்தாய், மறந்தாய், மறந்தாய்; பிணப்பறையின் ஒலி படீரென அண்டத்தில் ஒலிக்கக்கேட்டும், பிரபஞ்ச வாழ்கை அநித்தியமென முழங்கும் வேதத்தொனியை யன்றே மறந்தனை; சைவ சமயாசாரியர் நால்வருண் முதல்வராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்தருளிய.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட்டைமேலுந்தி,
யலமந்தபோதாக வஞ்சேலென்றருள் செய்வானமருங் கோயில்,

வலம்வந்த மடவார்கணடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே."

என்னும் பொன்னையொக்குங் கட்டுரையை ஆணவ காமிய மாயாமலங்களிற் பொருந்தி, அந்தோ! நீ மறந்தனை. தரைமேற் படுக்கையிற் கிடக்கையில் மரணத்தினெல்லை நெருங்கியதனுல்,விக்குள் தோன்ற, அது அடங்கி உயிர் உடலிற்றரித்திருக்கும் வண்ணம் நீர் உள்ளே புகும்படி வாருங்களென்று உற்றார்க்குக்கூறி, இறப்பவர் பக்கத்தினின்று அயலோர் உள்ள நெகிழ்ந்துருகுவதனையும் அந்தோ! நீ நினைகின்றிலை. அக்கினியில் மிகுதியாக நெய் சொரிவது போல மனக்கவலைத் தீ யதிகரிக்கக் கண்ணீர் சொரிந்து, சுற்றத்தார் புலம்பி யழாநிற்க, உடலினின்று பிராண னீங்குவது கண்டிருந்து நீ தேகாபிமானத்தை விட்டொழிந்தாயில்லை.

தன் ஒளி கழியச் செவந்த கிரணங்களையுடைய சூரியன் கழிய, அவனோடு நம்முடைய பூர்வார்ச்சித கர்மபலன்களை யனுபவிக்கும்படி கொடுக்கப்பட்ட இம்மனித சரீரத்திற்குள்ள ஆயுளாகிய நாட்க ளொன்றன்பி னொன்றாகக் கழிவதற்காக ஐயோ! நீ நடுங்கினாயில்லையே! துன்பமற்ற நாழிகை யொன்றை யொரு நாளாக நாடினு யல்லது நாள் ஒன்றை நாழிகை போலும் விரைந்து கழிவதாக வெண்ணி வருந்தினு யில்லையே! ஒரு நாழிகைப்போதின்முன் சீவதசையுள்ளவராக நின்றார், வீற்றிருந்தார், நிலைகெட்டுக் கீழே விழுந்தார்; பின் இறந்து பட்டாரென்று பிறர் சொல்லக் கேட்டுந் தெளிவுற்றாயில்லையே! பின்னிடாமல். உணவை யருந்தும்படி கையினுல் தொட்டார், உடனே தும்மினார், அம்ம! உயிர்விட்டார், இஃதென்கொல்? என்று பிறர் சொல்லக் கேட்டும் நிலையில்லாப்பொருளை நிலையுள்ள பொருளாக நீ எண்ணியிருந்த உனது மதியீனத்தை யெண்ணி வெட்க மடைகின்றா யில்லையே!

தடைசெய்யாமல் அன்னமுண்டார், படுத்தார், உறங்கினார், அந்நிலையே பெருந்தூக்கம்(மரணம்) அடைந்தவராயினர் என்று பிறர் சொல்லுவது கேட்டும், நித்தியப்பொருளை நாடா வுனது மதியீனத்தைக்குறித்து நாணுகின்றாயில்லையே! நேற்றைப்பொழுதிலே மணமாலை பூண்டவராய் மணம்புரிந்திருந்தார்; இவர் இன்று மாண்டார்; இவர் தகிக்கப்பட்டமையின் நீறாயினார் என்று பிறர் சொல்லுவது கேட்டும் தேகப்பற்றை விட்டும் பிரிகின்றா யில்லையே!

பெருமை மிக்க தேரேறி நடத்தித் தெருவிலே பவனி வந்தார்; வந்தவர் மண்ணுலக வாழ்வை நீங்கி வானுலகவாழ்வை யடைந்தார் என்று பிறர் கூறக் கேட்டும் தெளிவுற்றா யில்லையே! வெளியே சென்று திரும்பி வீடுவந்து சேர்ந்தார், இருந்தார், இருமினார், இங்கே மாண்டார், இஃது என்ன ஆச்சரியம்? அன்னே! யென்று பிறர் கூறுவது கேட்டும் நிலைமையை யாராய்கின்றாயில்லையே!

தாயர் கருப்பைக்குட்பொருந்திய கருவானது பத்து மாதங்கள் நிறைவதற்கு முன்னே சிதைந்து உதிர்தலை நீ பார்த்திருக்கின்றாய். பத்து மாதம் வரையில் முதல்மாத முதலாக வொவ்வொரு மாதத்திலும் கரு முதிர்வதன் முன்னரே சிதைகின்ற தென்பதையு நீ கேள்விப்பட்டாய். இஃதன்றிக் கரு முதிர்ந்து மகவாய்ப்பிறக்குங்காலையில் யோனித்துவார நெருக்கிலகப்பட்டுப் பிராண னீங்கிப் பலனின்றிக்கீழே வீழ்ந்ததையும் பார்த்திருக்கின்றாய்.

பலனுற்ற சிசுவாகித்தரைமேல் காவென்று அலறி விழுந்த அந்தக்கணத்திலேதானே யிறந்து பிணமாகக்கண்ட வுறவினர் சூழ்ந்து கோ வென்னும் தொனி யெழ அழுவதனைக் குறித்த தில்லையோ? யாதொரு துன்பமு மின்றி வளர்கின்ற பாலனாகித்தாயின் முலைப்பாலுண்கிற காலையில், எமன் அந்தப் பாலன் உயிரைக் கவர்ந்து போவது நீ கண்டதில்லையோ ?

தாய்தந்தையர் மகிழ்ச்சி யடையும்படி வேய்குழலினும் யாழினு மினிய மழலைச் சொற்களைப்பேசி விளையாடும் பருவத்திலே மைந்தர் உயிர் மாய்வது நீ யறிந்ததில்லையோ ? கல்வி கற்றுத் தத்துவ நூலுணர்ச்சியான் மெய்ப்பொருளையாராய்ந்தறிவதன்பொருட்டுத்தந்தை பள்ளியின் வைக்கும்போது, அப்பள்ளியில் அட்சராப்பியாசஞ் செய்யத்தொடங்கிய மைந்தனைப் பெரிய யமதருமன் தன்வாயில் தனக்கிரையாக அள்ளியிடுகின்ற தீமையை நீ யறிந்ததில்லையோ ?

கற்கவேண்டிய கல்வியைக்கற்றுக் கல்வியறிவு நிரம்பிப் பள்ளியைவிட்டு நீங்கும் காளைப்பருவத்திலே, அந்தக்குமாரனைக் கண்டோர் கவலைகொள்ளும்படி யமராசன் பிடித்துப்போவதனை நீ யாராய்தலில்லையோ ? மணம்புரிய நியமித்த முகூர்த்த வேளையில் மாப்பிள்ளையாகி மணவறையிலிருந்து மணமுடித்த வத்தினத்திலே யவன் இறந்து சாப்பிள்ளையாவதை நினைந்து மெய்யுணர்வு அடைந்தா யில்லையே !

இஃதன்றியும், மனையாளுடனும், மக்களுடனும், பொன் முதலாகிய பொருளுடனுங்கூடி,இல்வாழ்க்கை நெறியில் வாழுங்காலத்திற் பல பல மனிதர் உயிர்நீங்கிப் பிணங்களாகி,இடுகாட்டுக்குச்செல்லப் பாடையின்மேற் சேர்வதை நீ பார்த்ததில்லையோ ? இறத்தலாகிய இச்செய்தி நேரிடுதல் இக்கணத்திலோ, இனிவருங் கணத்திலோ, அல்லது வேறெந்தக்கணத்திலோ வென அறிஞர் கூறுநிற்கவும்,நீ யாக்கை நிலையாமையை யெண்ணுகின்றா யில்லையே! இவ்வுடம்பைச் சப்த தாதுக்களா லாக்கப்பட்ட தோற்பை யென்பேனோ? அல்லது துன்பஞ் செய்கின்ற இருவினையாகிய நீரோட்டத்தில்விட்ட ஏடு என்பேனோ? அல்லது நீர்மேல் எழுதப்பட்ட எழுத்தென்பேனோ? காடு என்பேனோ? பாழ் என்பேனோ? ஒன்பது வாயிலுடைய பிரதிமை யென்பேனோ? வலிய பிறவிகள் எழுடையதொன்றென்பேனோ? புண்ணிய பாப கர்மங்களுக்கு உவமையாயுள்ள தென்பேனோ? கீழ்மையுள்ள மண்ணாற் செய்யப்பட்ட பாண்ட மென்பேனோ ? வெவ்விய சரக்குப்பை யென்பேனோ ? பாழாகிய கருமங்களிட்டு வைக்குஞ் செப்பென்பேனோ ? ஆணவ மலத்தினது திரட்சி யென்பேனோ ? குணக்கேடர்க்கு உள்பொருளாகத் தோன்றுகின்ற மெய் யென்பேனோ? மாயத்தில் விளைந்த விளைவென்பேனோ ? தோன்றி மறையும் மின்னல் என்பேனோ ? மெய்போலத் தோன்றுகிற பொய்யென்பேனோ ? மயக்குகின்ற சொக்குப்பொடி யென்பேனோ ?

மெய் (உடம்பு) என்ற மங்கல வழக்குச் சொல்லை மங்கலமுடையதாகக் கொண்டு உலகத்தார் விரும்பினார்கள்; நீ அவற்றை யெண்ணாமற் றிரிந்தனை; இவ்வுலகில் இவ்வுடம்பைப் பாதுகாத்து வளர்க்கும்பொருட்டு நீ யுழன்றனை. கற்ற கல்வி நூலுணர்வை நீ யெங்கே கவிழ்த்தாய் ? இறந்தவரை இடுகாட்டுக்குக் கொண்டுபோய் இந்தக்கட்டினை யவிழ்த்துவிட்டு, அவருடலிற் றீயைமூட்டுங்களென்று பிறர் கூறக்கேட்டும், தலையிலும் மார்பிலும் அரை

யிலும்உடுத்துந் தலைப்பாகை, உத்தரீயம், அரையாடையாகிய மூன்று கட்டைகளையுந் தேட யத்தனப்படுகின்றாயே!

இம்மூன்று கட்டுகளும் மண்ணுண்டு, பிணத்தைச் சுடும்படி மேலேயடுக்கப்பட்ட மரங்களில் வெவ்விய அக்கினிபட்டு அதை நீற்றக்கண்டும், அரையில் வெள்ளிய பட்டாடை யுடுக்க அவசரப்பட்டனையே! சவத்தைத் தகனஞ்செய்யும் காலையில், அனுபவமுடைய ஐயா! அரைஞாண்கயிற்றை யவிழுங்கள் எனக் கேட்டிருந்தும், சரீரத்திற்பூணும் ஆபரணத்தில் விருப்பம் வைத்து நின்றாயே! காதிற்பூட்டப்பட்ட கடுக்கனைக் கழற்றுங்களெனக் கேட்டிருந்தும் இளைக்காமல் அயலார் பூண்ட ஆபரணங்களில் இச்சை யடைகின்றாயே!

சவத்தைச் சுடுகின்றபோது சத்த தாதுக்கள் எரிந்து வீசுகின்ற துர்க்கந்தத்தை நாசியான் முகர்ந்தறிந்தும், சுகந்தமுடைய திரவியங்களின்மேல் இச்சையடைகின்றாயே! உணர்கின்ற உணவுமுதலாயின வெல்லாம் கொடுஞ்சுவைத் தீ நாற்றமுடைய மலமாக வெளிப்படுதல் கண்டும், இனிய சுவையையுடைய பால் முதலியவற்றில் இச்சை யடைகின்றாயே! சவத்தின் தசையைசசுவைத்துப் பருந்துகள் இரையுண்ட இடுகாட்டில் பல மனிதர்களின் பிரேதந் தினந்தோறும் வேவது கண்டிருந்தும் நீ சோற்றினை யுண்டிருக்கத் துணிந்தாயே!

நிலையாக வுள்ளதுபோலத் தோன்றி நிலையில்லதாக மாறுபட்டழிகின்ற உலகம் அநித்தியமானதென்று நான் கூவிக்கூவி யுரைத்திடக்கேட்டிருந்தும் நீ தவநெறியினிற்க முயலாமற் சோம்பலுந் தூக்கமு மடைந்திருக்கின்றாயே! ஆன்ம லாபமாகிய வொப்பற்ற நல்ல பேரின்ப வாழ்வை யடையச் சிந்தித்து விரும்பிய பெரியோர் இச்சியாத இல்லறவாழ்வை நித்தியவாழ்வென நீ யெண்ணினாயே!

சொல்லப்பட்ட உயிராகிய நம்மைப்பெற்ற பிதாவாகிய பரமபதியைச் சிந்தனை செய்வதின்றி, இந்த மாயா தனுவைப்பெற்ற தாய் தந்தையர்களைத் தாய் தந்தையர் என நீ யெண்ணினாயே! இம்மல வுடலைப்பெற்ற தாய்தந்தையர் நாம் உள்ளத்தில் வியாகுல மடைந்தால் அவரும் வியாகுல மடைவார்; இருவினையாகிய பகை நம்மை யெதிர்த்து வந்தால் அதை விலக்க வல்லமை யுடைய ராவாரோ?

இவ்வுலகிற் பிறந்து விளையாடுதலைப் பொருந்திய நமது சிறுவர்கள் நம்மைப் பகைவர் முதலாயினோர் தாக்க வந்தால் துரத்த வல்லராவார்; தென்றிசைக் கதிபனாகிய யமதருமன் எதிர்த்து வரின் அவன் வராமல் தடுக்கும் வல்லமை யுடையராவரோ? இவ்வுலகில் நாம் உண்பதற்குச் சிற்றுண்டியென்றால் வாங்கியளிப்பார்; அருளாகிய இன்னமுதம் வாங்கிக்கொடுங்களென்று கேட்கில், அதனை வாங்கி வழங்கும் வல்லமை யுடையராவரோ?

புனிதமடையும்பொருட்டுப் "பொல்லாங்கென்பவை யெல்லாந்தவிர்" எனத்தூண்டி யறிவுச்சுடர் கொளுத்தாத மனைவி முதலாகிய சுற்றத்தார் புடைசூழ விறுமாந்து நிற்பாய்; அந்த சுற்றத்தார் உனது நல்வழிக்குற்ற துணைவா ராவாரோ? நாம் இவ்வுடலினின்று நீங்கிய பின்னர் சுற்றத்தார் துக்கித்து ஒருவரோடொருவர் துணையாகக்கூடி நின்று புலம்புவார் அல்லது, நாம் செய்த தீவினை காரணமாக யமதருமன் இரவுரவமாதி நரகில் நம்மை வீழ்த்த, நாம் அங்குள்ள வேதனைகளைத் தாங்க முடியாமல் வாடிப்புலம்ப

நேரிடில், அங்கே அத்துன்பத்தினின்றும் நம்மை விலக்கி யுய்விக்கும்படி துணையாக வருவாரோ? ௬

(நெஞ்சே!) அகங்காரத்தினால் நீண்ட நீ இந்தச் சீவர்க்குத் துணை யாகுவையோ? இவ்விடத்தில் இவர்தாம் உனக்குத் துணையாவரோ? சீச்சீ! இதென்ன அறிவீனங்காண். உனது சுற்றத்தார் என்னும் இந்தச் சீவர்கள் உன்னை இகலோகத்தில் இருக்கவைத்து, நீ செல்வதன்முன் அவர்கள் பரலோக யாத்திரை செய்வாராயின் நீ யாது செய்வாய்? அவர்கள் செல்வ வற்கு முன்னரே நீ பரலோகயாத்திரை செய்வையாயின் அவர்என்செய்வார்? உன்னுடைய புண்ணிய பாப கருமங்களால், உன்னைப்பெற்ற தாயர் எத்தனை? நீயடைந்த நாமதேயங்கள் எத்தனை? நீ சஞ்சரித்து வாழ்ந்த புவனம் எத்தனை? நீ யடைந்த வாழ்வுகளின் பேதம் எத்தனை? நீ யெடுத்த தேகங்கள் எத்தனை? இவை யளவிட்டுச் சொல்ல முடியுமோ? அத்தனைக்கும் அந்த அந்த இடங்களிலெல்லாம் அந்த அந்த தாயர் தந்தையர் மக்கள் முதலாயின சுற்றத்தாருடன் அங்கங்கே கூடியிருந்து, பின்னர் எவ்வெவ் வகைகளால் அவரவர்களை நீ பிரிந்தனையோ? அந்த அந்த வகைகளுள் ஒன் றையாயினும் நீ நன்றாக வுணர்ந்திருப்பாயெனில், இந்தத் தமர்களை நீ துறந்து விடுதற்கித்தனமே இணங்க மாட்டாயோ? உன்னைச்சூழ்ந்து நிற்ப வருள் தாயாகியுள்ளாள் யார்? மனையவளாகி யுள்ளவள் யார்? புத்திர ராயி னோர் யார்? தம்மவராகிய சுற்றத்தார் யார்? நீயார்? என்பதை நினைந்தாயில் லையே! பிள்ளையாகிய நான் தாய் முதலாயினோரை விட்டுப்பிரிந்தால், அவர் மனமேங்கி நிற்பாரென்று சொல்வாய்; இயமன் கடைநாளில் உன்னுயிரைக் கொண்டுபோக வருவானானால்,அப்போது அவர் உன்னுயிரை யமன்கொண்டு போகாவண்ணந் தடுத்து, அவனிடத்தினின்றும் வாங்கி அதனைச் சீலையின் முடிந்து பிறர்கைப்பற்றாமல் பத்திரப்படுத்தி வீட்டில் வைத்துக் காப்பாரோ?

உனது தந்தையாயினோன் இகலோக வாழ்வை விட்டுத் தனக்கு வேறொரு தந்தையை நாடிச்செல்வான்; இங்ஙனமாதலின், நீ ஒருவனை யென் தந்தையென்று சொல்வதெவ்வாறு? உன் மனைவியானவள் (பரபுருட கமனத்தால்) வேறொருவனுக்குரிய மனையாள் ஆகுவளானால், நீ யொருத்தி யையென் மனையாள் என்று சொல்வது எவ்வண்ணம்? நன்மை யடையத் தக்க நண்புபொருந்திய சன்மார்க்கநெறியை நீ விரும்பாவண்ணந் தடுக்கின்ற உட்பகைவர் என்று இச்சுற்றத்தவரை நினைக்கின்றாயில்லையே!

தோழமையுடைய நெஞ்சே! எம்மை யுடைய கடவுள் படைத்த அளவில்லாத சீவகோடிகளுக்குள் சில சீவராகிய சுற்றத்தார்மேல் இந்த ஆசையை யடைந்தது நீ யெதை நினைந்தோ? அழகு நீங்காத எம்முடைய உறவே யுனக்கில்லையாக முடியுமென்றால், நமக்குப் புறம்பாக வுள்ள பிறர் உறவு உனக்கு எவ்வண்ணம் பொருந்தியது? திருஞான சம்பந்தமூர்த்தி நாய னார் திருவாய்மலர்ந்தருளிய "அற்றவர்க்கற்றசிவனுறைகின்ற வாலவாயாவது மிதுவே" என்னும் பொன்போன்ற அருண்மொழியைப்பிரசாமானிய வாசகம் போல வெண்ணி மறந்தாயே! சிறிய வுணர்வினை யுடைய மன்னுயிர்த்தொகு திக்குக் கல்லாற் செய்யப்பட்ட பனைமரத்திற் காய்க்குலைகள் காய்த்தது போலத் தோன்றச்சிற்பர் கற்பித்த கற்பனை நிகராக மாயையாகத்தோற்றும் பிரபஞ்சத்துள்ள பொய்த்தோற்றங்களை நீ உண்மையெனப் பார்த்தனையே! பல பல பறைகளிலுண்டாகும் ஒலிபோல மாயையாகிய காரணத்திலே

தோன்றி யழிகின்ற காரியமாகிய பிரபஞ்சத்தோற்றத்தை நீ மெய்யென்று பார்க்கின்றாயே !

சிறப்பினைச் செய்கின்ற பொன்னினிடத்திற் பித்தளையை யாரோ பித்துக் காட்டுகின்ற கபடநாடக வித்தையை யுண்மை யுள்ளதென்று நம்புகின்றாயே! பல பல சங்கற்பத்தால் விரிந்த வுன்னுள்ளே வெறுக்கத்தக்க அஞ்ஞானத்தினால், அந்தக் கடவுள் செய்கின்ற மாய வித்தையை உண்மை யுள்ளதென்று நினைத்து நீ வாழ்கின்றாயே ! ஆன்மாவிற்கு அருண்ஞானமுந் தன் சொரூபமுந் தோன்றாது மறைக்கப்பொருந்திய மான், அகங்காரம், மூலப்பகுதி என்னும் மூன்று திரை மறைப்பினுள்ளே அவற்றைத்தழுவி யிருக்கின்றாயே!உலகத்தார் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இறைவனாகிய ஞான சூரியனிடத்தி னீங்காத அபின்னையாகிய பராசத்தியென்னும் வெயிலினாலே தோன்றுகின்ற பிரபஞ்சமாகிய கானலை நீராகக்கண்டு சந்தோடமுற்றாயே ! உலகந்தோன்றுதற்குத் துணைக்காரணமான கிரியாசத்தி யென்னப்பட்ட அம்மையார் அருள் விளையாட்டென்னும் பாச பந்தத்தினுள்ளே நடக்கின்றனையே !

பொய்யுற விதுவென அறிவுடையோர் எண்ணுந் தேகத்தி லடைகின்ற இளமைப்பருவத்து விளையாட்டை மெய்யென நினைந்து, வீணாகப் பல பல சங்கற்ப வடிவெடுத்து விரிந்தனையே ! பொய்யையே யெக்காலத்துஞ் சம்பாதித்து நின்ற இலீலாவினோதமென்கின்ற கட்டுக்கதையை நீ கேட்டிருந்தும் ஐயோ ! இளமைப்பருவ விளையாட்டில் உற்சாக மடைந்தாயே ! ஓர் உடம்பிலிருந்து, இன்பத்துன்பப் போகங்களை யனுபவிக்கும்படி வினையினளவாகச் சேரப்பெற்ற ஆயுளாகிய காலத்தை வீணிலே போக்கும்படிவெறுவெளியிலே தோன்றிக்கூடி மறைகின்ற மேகக்கூட்டம்போலத் தோன்றி மறைவதாகிய உலக வாழ்வை மெய்வாழ்வென மதித்து அகங்கரித்தாயே !

கண்ணோட்ட நீங்கியதா யிந்திரசாலம்போலப் பொய்யாகிய அஞ்ஞான அந்தகார வாழ்வி லிறுமாப்படைந்து, உண்மையாயுள்ள பதிவாழ்வைக்கண்டு அனுபவிக்க முடியாமல் உழல்கின்றாயே ! நற்குணமில்லாத நெஞ்சே ! உன்னுடைய இறுமாப்பினாலே இரவை யிரவென்றுணராமல் மயங்கிப் பகலென்று காண்கின்றாயே! இவ்வுலகிற் பெரியராயினோர் உன்னை யென்ன பொருளென்று நினைப்பார் ?

உள்பொருள்போலத் தோன்றுகிற தனு கரண புவன போகங்களெல்லாம் பொய்யென்று அறிவான் மிக்கோர் கூறாநிற்கவும், ஐயோ ! நீ மோகத்தை விளைவிக்கும் காமக் குரோத லோப மோக மத மாற்சரியங்களிலே நுழைந்து கெட யத்தனிக்கின்றாய். ஓ! ஓ!! உங்கள் சிறந்த தலையிலே அக்கினி பற்றியதென்றால் அதனை யவிக்க முயலாமல் அந்தக் குடுமித்தலையிற் பூமாலை முடிக்கத் தேடுகின்றோர்களைப் போன்றுள்ளாயே ! இகலோகப் பெருமை படைத்த வாழ்வு நிலையுள்ளதன்று; இமைப்பொழுதின் மாறுபடுந் தன்மை யுடையது என்று கூறியும் இவ்வாழ்விலே யிச்சையடைந்து சும்மா விழுகின்றாய்.

மூங்கில்களாற் செய்யப்பட்ட கையமைந்த உங்கள் வீடு உங்கள் கேடு அடையும்படி தீப்பற்றி யெரிகின்றதென்று சொல்லவும், அதனை யவிக்க முயலாமல்,அதனுட்சிக்கி இறக்கும்படி யுள்ளேபோய் உண்டியருந்தி நித்திரை செய்கின்ற அவிவேகிகளை யொத்தாயே ! அனாதியாயுள்ள பிரபஞ்சமானது

காட்டின்கணுள்ள முயற்கொம்புபோல இல்பொருளாகக் கழிவது என்று நான் சொல்லாநிற்கவும், அந்தோ! அதில் இச்சை வைத்து நடக்கின்றாயே. உங்கள் பதி சலப்பிரவாகத்தில் முழுகி யழிந்துவிட்டதென்று சொல்லின், அப்பதியினுள்ளே போய்க் கடையில் தமக்கு வேண்டும் பொருளை வாங்கும் பொருட்டுத் திரிபவர்களைப்போல நீயுங் கூடினையே! இவ்வுலகிற் கண்ணாற் காணப்பட்ட பொருள்களெல்லாம் பொருளென மதிக்கலாகா நிலையாமை யுடைய பொய்ப்பொருளென நான் சொல்லாநிற்கவு நீ யவற்றைப் பொருளென மதித்து, அவற்றொடு கூடிநிற்கக் குறிக்கின்றாய்.

உலகங்களை யெல்லாம் உண்டு நாசஞ்செய்ய யுக முடிவிற்கு ஜலப்பிரளயம் வந்ததென்று சொல்லின், நாம் உண்பதற்கும் நானஞ்செய்வதற்கு மினியதாகப் பூமியிலுள்ள நல்ல நீரோவென்று கேட்பவரை நீ யொத்திருக்கின்றாயே! மேலேழுலகம் கீழேழுலகம் எனப்படைக்கப்பட்ட புவனமும் அவற்றிலிருந்தனுபவிக்கும் சுக துக்கானுபவங்களும், சரீரங்களும், அந்தக்கரணங்களுமென்கிற சொப்பனத்தில் அந்தோ! நீ அகப்பட்டாயே.

பல நாளிலும் உண்டவற்றையே வெறுப்பின்றி யுண்கின்றாய்; எண்ணிய காரியங்களையே யெண்ணுகின்றாய்; பார்த்த பொருள்களையே பார்த்து மகிழ்கின்றாய்; உனக்கு உரிய பொருள்களாகக் கைக்கொண்டவற்றையே மீட்டு மீட்டுங் கைக்கொண்டு நடக்கின்றாய்; உனது சங்கற்பத்தின் முன்னர் நினைத்தவற்றையே பின்னும் நினைத்துத் தமது பழமையை யறியாதவர்களைப் போலச் செல்லுகின்றாய்.

முன்னர் அறிந்து சொல்லிநின்றவற்றையே சொல்லுகின்றாய்; இவ்வண்ணமுள்ள உன் தன்மையைப் பரிசுத்த ஆன்மாக்களாகிய நல்லோர்கள் காணிற் சிரிக்கமாட்டாரோ? இறந்த காலத்தைப்போல நிகழ் காலத்தையுங் காண்கின்றாய்; அவ்வாறு திரமாக நின்று நீ எதிர்காலத்தை முற்றுங் காண வல்லாயோ? நீ உன் ஆயுள் மிகவும் ஒழியாமுன்னம் ஞானானுபூதியை யடைய வெண்ணாமல் என்ன பலனையடைய நினைத்து வருந்துகின்றாய்.

துன்பத்தைச் செய்யும் வீணான அவத்தைகளை யெல்லாம் விளைக்கும் வல்லமையுடைய மூலவிருளாகிய ஆணவத்தினாலே நீ அழிந்தாயே! உன்னை நீயும், தன்னைப்பிறரும் அறியாமல் மயங்க மூடிநிற்கின்ற ஆணவத்தினாலே நீ யார் என்று அறியமாட்டாதவனாய், உன்னெதிரினின்றவரை நோக்கி நீ யார் என்று வினவி அகங்கரித்தாயே! எப்பொழுதினும் உயிருடன் பிரிதலின்றி யிவ்வுடம்பின்கட் பொருந்தி வாழ்கின்ற வொரு பரம்பொருளை யுணர்வதற்கான உபாய மறியமாட்டாய்; அந்தோ! நீ நான் நான் என்று அகங்கரித்துத் துன்புறுகின்றாயே.

உண்டி யின்மையால் உண்ணாமைபெற்று நீ துன்பமடைகின்ற காலத்திலே நான் நான் என்று அகங்கரித்துச் சொல்வாயோ? அல்லது சொல்லமாட்டாயோ? நெஞ்சே! சொல்வாயாக. இவையெல்லாம் அல்ல; நெஞ்சே! நீ யிவ்வுலகச்சிற்றின்பத்தை யடையுநெறியிலும் நான் அவ்வுலகப் பேரின்பத்தை யடையு நெறியிலு நிற்கவும், என்னை மேலேற வொட்டாது தடை செய்ய, நடுவே நீ யொரு சங்கற்ப வடிவடைந்து தோன்றுவாயேல், நீ யெங்குள்ளாய்? நான் எங்குள்ளேன்? என்பதைச் சற்றே நின்றறிவாய். இவ்விடத்து நீ யொருபொருளை யெடுக்கும்படி சென்று, அதனை மறந்து

வேறொன்றை யெடுப்பதை யான் காண்கின்றேன்; இன்று என்னிடத்தே யடுத்த நீ யெங்கே யிருந்தனை? திருச்சிற்றம்பலத்தே நின்று சதா ஆனந்த நிருத்தஞ் செய்யுந்திருவடிகளை விரும்பி உன்னை மறந்து, அருள்பெற்றுப் பிழைக்காமல், வீணே யகங்காரத்தில் விருத்தி யடைகின்றாய்; நான் சொல்வது கேட்கக்கடவாய். இந்தப் பற்றுக்களி லொருபற்றை விட்டு நீங்குவாயெனில் யான் மிகவும் மகிழாநிற்பேன்; நீ தான் என்சொற்களை மறந்து துயரப்படுகின்றாய். அகப்பற்று புறப்பற்றுக்களாகிய இரண்டும் பெரும்பகையென்று நான் இவ்வண்ணம் ஒன்றிலுஞ்சேராமல் சும்மாவிருந்தாலும்என்னை வாவென்று உன்னோடு வலித்துக்கொள்கின்றாய்; ஒகோ! உனது தந்திரத்தையான்அறியேன்; நீ விடயங்களிலே சுழல்கின்றவேளைகளெல்லாம் நானும் உன் தந்திரத்திலே சுழலாநிற்கின்றேன். விரிந்த உன் சங்கற்பத்தினாலே நீ யெங்கேனும் சென்று சஞ்சரிக்க காலையசைத்தாயேல், யானும் விரைவாக உன்னோடு செல்வதற்குச் சம்மதிப்பது போலத் தலையசைப்பேன்; பெருமைமிக்க உனது தந்திரந்தான் எத்தகைத்தென்பேன்? அசைகின்ற அண்டமாகிய கிணற்றில் யான் ஒரு குடம்போல வுள்ளேன்; நீ கயிற்றினால் வெளியில் விரைந்து வரப்பிடித்தேற்றுகின்ற பெண்போலுள்ளாயென்று கூறுவேனோ?

பாவநெறியாற் சூழப்பட்டுள்ள நீ சனன சமுத்திரத்திலே தோன்றுகின்ற சுழியாக, அதிலகப்பட்டு எறியப்பட்ட நான் திரணம்(துரும்பு) என்று சொல்கேனோ? சார்புகளைப் பற்றுகின்ற நீ தான் சங்கற்பமாகிய சூறாவளி (சுழற்காற்று) யாக, அவ்விடத்தில் அதில் அலைகின்ற சருகு நான் என்று சொல்கேனோ? நெய்யுந்தறியிற் பரவியுள்ள சேலையினூடு மிகவு நுழைந்து செல்கின்ற குழை நீயாக, அக்குழையின் பின் தொடர்ந்து செல்கின்ற நூலிழை நான் என்று சொல்கேனோ? மயக்கத்தைச் செய்கின்ற நீ துள்ளுங் கருவியையுடைய குயவன் குடம் வனைதற்காகச் சுற்றுகின்ற சக்கரமாக, அதன் உள்ளுறுப்பே நான் என்று சொல்கேனோ?

இகழ்ச்சி யடைகின்ற நீ வீணாக அலையும்பொருட்டு விண்மிசை யேகும் பருந்தாக, அப்பருந்துடன் செல்லும் நீழலை நான் என்று நினைப்பேனோ? பேரின்ப சுகத்தைத் தருகின்ற திருவடி நிழலிலே தங்காத உன்னுடைய வசத்திலே நான் உள்ளேனென்று உலகர் நிந்தை கூறுவதல்லது, நீ யென்வசத்திலே யுள்ளாயென்பது இல்லைகாண். நீ என்வசமாக நிற்பாயாகில், எளியேனாகிய வெனக்குக் கைகூடாப் பொருள்களும் உள்ளனவோ! விண்ணுலக வாசிகளாகிய தேவர்கள் நம்மிடம் வந்து நம்மை வணங்கமாட்டாரோ? நீ யென் வசப்பட்டா யெனில், மனத்தாற் சிந்திப்பதற்கும் வாக்காற் பேசுதற்கும் எட்டாத பரஞ்சோதியாகிய சிவபெருமானும் பிரிவின்றி உள்ளங்கை நெல்லிக்கனி போலப் பிரத்தியட்சமாக விளங்குவா ரன்றோ?

உன் அடங்காமையைக் குறித்து நான் சிந்திக்குமிடத்தில் என்செய்வேன்? நீ யொருகணப்போதும் யான்சொல்லும் சன்மார்க்க நெறியின்கண் அமைந்திராமல் அச்சத்தை விளைப்பேனென்று குதிக்கின்றாய். வலிமையுடைய சமுத்திரத்துடன், வடவாநலம் என்னும் தீயையுங் கையில் (குறுமுனி போல்வார்) அடைப்பார்கள்; அந்தோ! அடங்காத வுன்னை யடக்கவல்லார் யார்? மின்மினிப்பூச்சியென்று சூரியனையுங் கையாலெடுப்பவருளர்; அச்சோ! உன்னை யடக்கவல்லார் யார்?

அனுதியாக நிலையுள்ளதாக நிறுத்தப்பட்டு விளங்கும் சொர்க்க மத்திய பாதாளமென்னு மூன்று உலகங்களேயும் ஒன்ருகத்தாம் உடுக்கும் ஆடையின் முன்ருனையிலே சேர்ந்து முடிய வல்லாருள்ளார்; ஆ! கட்டில் அடங்கா வுன்னையும் இங்கு அடக்கவல்லார் யார்?

பலவாகப் பொருந்திய தேசங்களென்றும், காலங்களென்றும், கிழக்கு முதலாகிய திசைகளென்றும், பலபலவாகிய வாசங்களென்றும், அவ்வவற்றிற் குரிய வழக்கங்களென்றும், குற்றமுடைய போகங்களென்றும், அவற்றிற் குரிய சத்தாதி விடயங்களென்றும், பொய்விட்டு நீங்காத யோகமென்றும், அவற்றிற்குரிய பலபல வகுப்புகளென்றும், ஏகவத்து வென்றும், ஆகாயமென் றும், கடலென்றும், மலையென்றும், மண்ணென்றும், உடல்களென்றும், அவற் றிற்குரிய உறவுகளென்றும், மேலாகநின்ற சாதிகளென்றும், வாழ்வுதாழ்வு களென்றும், இந்தவுலகத்து நீதிமார்க்கமென்றும், செய்யத்தக்க கரும மார்க் கமென்றும், சொல்லுதற்கரிய அண்டங்களென்றும், அவ்வண்டங்களில் அசைவதும் அசைவற்றதுமான சங்கம தாவரங்களென்றும் சொல்லப்பட்ட வை முழுதும் பல சங்கற்ப ரூபங்கொண்டிருந்த உனது நினைவினுள்ளே தோன்றி யுலவாநிற்ப, இம்மண்ணுலகத்தார், எந்த நினைவைக்கொண்டோ, சதுமுகன் என்பான் எவனே வொருவன் எல்லாப் பொருளையும் படைத்தா னென்று கூறுநிற்பார். அந்தோ! அன்னோர் உன் செய்கை யறியமாட்டா தவரே காண்.

அந்தோ! நான் இது செய்யத்தக்க கருமம் ஆம் என்ருல், நீ யென் சொல்லி லமைந்து நில்லாமல், அல்லவென்று மறுத்துக்கூறுவாய்; அல்ல வென்று நான் கூறினல், அது ஆம் என மறுத்து என்னை அலைக்கின்ருய். அன்பாக நாம் இவ்வுலகில் என்றும் பிறந்தும் இறந்தும் வருந்தாத பேரின்ப வாழ்வை யடைவோமென்று சொன்னல், அந்தக்கணத்தில் நல்லது என்று சம்மதித்து என்னுடன் ஒற்றுமையடைந்து நிற்பாய்; அதனையடையப் புகும் போதில், என்னுடன்கூடி நில்லாமற் பழையபடியே பலவிடயங்களை நாடிச் செல்லத்தகாத சிறுமையைத்தரும் ஒழுக்கங்களிற் சென்று தீமைகளை யெல் லாம் உண்டாக்குவாய்; உனது சினேகமுடைமையை யான் என்னென்று கூறுவேன்?

சொல்லுமிடத்து, முயற்சிக்கின்ற கருமங்கள் சித்தியாவதுமுன்னல், கைகூடாதொழிவது முன்னுலென்றுகூறி நான் உன்னைக்குறித்து வருந்து வதுங்கண்டு, நமக்கன்னியமான விடயங்களிற் கவனஞ் செலுத்தினையே! உறவெனப் பற்றுகின்ற வெனக்கு, ஆணுவாரும் அவலம், பெண்ணுவாரும் அவ லம், உதவியாகும் பொருளும் அவலம், ஊணுவதும் அவலம், உற்ருரும் அவ லம், ஊராரும் அவலம், பூணுவதும் அவலம், உடம்பாவதும் அவலம், எனக் குற்ற துணையாகிய நீதானும் * அவலம் ஆயினுயென்ருல் கூறத்தக்கதுயாது?

இவ்வண்ணமாக நான், இன்பமுடைய பொருளென எதனைக் கண் டேம்? ஆசையெல்லாந் துன்பம், அதனிலுந் துன்பமாவது சனனம் என்றே தளர்கின்றேன். தாயர் கருப்பையினுட்டங்கி வளருங்காலும், கரு முதிர்ந்து பிறக்குங் காலும் உண்டாகிற பிறவித்துன்பத்தினும், பாதுகாத்தலின்கணுண் உண்டாகுந் துன்பம் சொல்லற்கரியதென்று நான் திகைக்கின்றேன். மரண

---

* அவலம் - வீண் அல்லது துன்பந்தருவது.

காலத்தில் உண்டாகும் ஒய்வற்ற துன்பங்களைச் சொல்லவென்றால் உடம்பெல்லாம் வாயாகப்பெற்றாலும் போதாதே. ஏ! ஏ! நாம் செயற்பாலது யாது என்று தியங்குகின்றேன்; இங்ஙனம் நான் வருந்துவ தெல்லாம் கண்டும் உன்னிச்சைவழி நீ நடந்தனையே!

நமக்குக்கிடைத்துள்ள இம்மனித சரீரமாகிய நவத்துவாரமுடைய மட்குடம் உடைந்தால் யாது நேரிடுவதென நான் உன்னுடன் சொல்லித்திரிந்துமென்னைச் சூழ்ந்து தொடர்கின்றா யில்லையே! பராக்கிரமமுடைய யமன் நாளையே வருவனோ, இன்றே வருவனோ, நடைபெறு நாட்களில் எவ்வேளையிலே வருவனோ அறிகிலேன். ஐயோ! யான் சொல்வதுகேள். யமன் நம்மைப்பிடித்துத் தன்முன் வரும்படி தூதர்களையேவினால், நாம் நற்குண நற்செய்கை யுடையோமென்று சொல்லி இரந்தாலும், அவர்கள் நம்மைக் கொண்டு செல்வது தவிர்ந்து நடவார், நடவார்; நாம் அவருடன் செல்லோமென்று எதிர்த்து வாதிட்டாலும் அது நடவாது. வல்லமையுடையீர்! யாம் யாவரிடத்தும் எக்காலத்தும் அவர் மகிழப்பேசும் இன்சொல்லினை யுடையோம், இப்பகல் இங்கிருந்து நாளைவருவோம் என யாம் என்ன இதமுள்ள வாசகங்களைக்கூறி அத்தூதுவரை இரந்து மன்றாடினும், அவ்வார்த்தைகளெல்லாம் ஏற்புடையனவாகா. மிகுந்த கீர்த்தியுடைய பங்கயாசனத்தேவனாகிய பிரமனும், திருநெடுமால் முதலாய தேவர்களும் எமதூதரிடம் அவ்வாறு சொல்லமாட்டாராயின் மரணகாலத்தில் நாம் அவ்வாறு சொல்வோமென்றல் நடவாது. ஆதலின், நெஞ்சே! அக்கடைநாள் வருவதன்முன்னர், ஆதிபகவனாகிய சிவபெருமான் திருவருளைப் பெறுதற்குரிய நல்ல நாள் அடைதற்கு நாடுவோம்காண் என்று உன்முன்னின்று சொல்கின்றேன். என் சொற்களை நீ கேட்டும் கேளாதவர்போல உலகநடையிலே செல்கின்றாய்; இதற்கு நான் யாது செய்வேன்?

இன்பதுன்பங்களை யனுபவித்தலின்கண் உன்னுடன்கூடி யுனக்குப் பொருத்தமுள்ள ஆதிநாளுறவாகிய என்னைவிட்டு நேற்றைப் பொழுதிற் கிடைத்த தாமதகுணம் என்னும் உறவினோடு உறவு கலந்தனையே! சொல்லப்பட்ட அந்தத் தாமதகுணந்தானே ஓர் அவித்தை; தாமதமே, அறிவை மறைக்கும் மறைப்பு; தாமதமே மோக சமுத்திரங்காண். ஐயோ! நீ தாமதமென்ற அந்தத் தீக்குணத்தோடு கூடினாயென்று நாம் புகன்றது பொய்யோ?

வெறுப்படையாமல் சத்துருக்கள்போல உன்னைக் கூடுவாருடன் நீ கூடும்போது என்னை நினைப்பதுமில்லாய்; என்சொல்லை யெண்ணுவதுஞ் செய்யாய்; சொல்லப்பட்ட வுனது தீமைகளெல்லாவற்றையும் நான் பல ஆதிசேடர் உருக்கொண்டு பிரமனுடைய கற்பம் ஆதிதொடங்கி அந்தமட்டும் சொன்னால் அந்தக்கால எல்லைக்குள் என்னால் சொல்லியடங்குமோ? அடங்காது. ஆதலால், நெஞ்சே! யான் உன் தீய நடையைக்கண்டு இகழ்கின்றேன். என்வசைமொழிகளை வாழ்த்தாக நீ மதித்து நினைத்தவாறெல்லாம் செய்கின்றாய்; இது ஓர் சதுர் அன்று.

ஆன்மலாப மடைந்து பிழைக்கும்பொருட்டாக வுன்னை மதித்து நான் வருந்துகின்றேன்; நீ யென் வருத்தத்தைச் சிறிதும் எண்ணாமல் மாயாமலங்களை யிச்சிக்கின்றாய்; இஃது உனக்கு நன்மைவிளைக்கு நெறியன்று. என்னொடு கூடுகின்ற இவ்விடத்தில் ஒரு அணுவைப்போலிருந்த நீ யெட்டுத்திசைகள்போல விரிந்துநீண்டனை; இஃது நீ உய்தற்கனுகூலமானநெறியன்று.

நெஞ்சே! என்னையும் உன்னையும் அழித்தற்கேதுவான உனது துர்க்குணங்களையும் துர்ச்செயல்களையும் துன்மார்க்க வொழுக்கங்களையும் விட்டொழி. நீ பிறரைப்போற் சாமானியனன்று; உனது பெரும்புகழை முற்று முணர்ந்து சொல்லவல்லார் இவ்வுலகத்தில் யாவர் உள்ளார்? விடயாகாரமாய்ப் பிரபஞ்சத்திற் சுழல்கின்ற மனமானது தான் அடங்கினால், அங்கே அதனோடு விவகாரப் பிரபஞ்சத்தோற்றங்களும் அடங்கும்; அந்நிலையிலே யொப்பற்ற பெருமையுடைய ஞானநடனஞ்செய்யுஞ் சிவபெருமான் திருவடித்தாமரைமலரும் கிடைக்கும். வானுலக வின்பமுதலாக எல்லாத்தேவரும் வாழ்கின்ற பதமுத்தி யின்பங்களும் கிடைப்பது மனம் ஒடுங்கிய நிலையிற்றானென்று வேதங்களெல்லாம் நின்புகழையே பாராட்டுகின்றன. சன்மார்க்க நெறியினிற்கும் எல்லார்க்கும் பெருமை பொருந்திய நிறைவினைக் கொண்டுள்ள மனோலயமே மேலாகிய பேரின்ப வீடென்று சிவாகமங்கள் உன் சிறப்பினையே யெடுத்துப் பேசுகின்றனகாண். இவ்வாறாகிய நன்மைபெற்ற மேன்மைபொருந்திய நீ உன்னுடைய குணத்தைக் கைவிடுதல், அந்தோ! சதுர் அன்று.(சதுர்-பராக்கிரமம்.)இந்த வீணங்களையெல்லாம் அறவொழித்து நான் சொல்கின்ற நித்தியசுகத்தை நீ அடைக.

நெஞ்சே! உனது துன்மார்க்க நடை முழுதும் அறநீக்கி நான் சொல்கின்ற நித்தியசுகத்தை நீ அடையக்கடவாய்; அந்தப்பெருமையுற்ற நித்தியசுகம் எது வென்பையாயின் சொல்லுவன் கேள். பந்தங்களை நாசஞ்செய்த துறவிகள் பூணும் ஞானவேடம் சுகமெனவும், நித்தியவத்து விவேகமில்லாது நிற்கும் அஞ்ஞானத்தின் இருப்பிடமாகிய சுழுத்தியவஸ்தை சுகமெனவும், பல பல எண்ணத்தகுந்த குற்றங்களை விளக்கின்ற மாதர் சையோக முதலாகிய சிற்றின்பப்போகங்கள் சுகமெனவும், அத்தகைய போகங்களைத் தருவதாகிய கருமயோக மார்க்கம் சுகமெனவும், அபிமானத்தால் சரீரம் உள்ளதாகவும், அபிமான நீக்கத்தால் இல்லதாகவும் செய்கின்ற அறிவாக நிற்பது சுகமெனவும், சரீரபந்தம் இறக்கப்பெறுதல் சுகமெனவும், விந்துவு நாதமும் சுகமெனவும், நம்மைவிட்டுப் பிறிதொரு பொருளின்று, நாமே அந்தப் பரம்பொருள் என்று சொல்லும் சொல்லளவிலே நிற்பது ஒன்றே சுகமெனவும், ஞானநேத்திரத்தால் உண்ணோக்கி நிற்பதாகிய அந்த நன்னெறியே சுகமெனவும், உண்ணோக்கம் விட்டு நாம் வெளியிற்போய் மெய்ப்பொருளைக்கண்டு சித்தியைப்பெற தவமியற்றுதல் சுகமெனவும், யாதொரு பொருளின்மேலும் பற்றின்றி நிற்பதாகிய சூன்யநிலையே சுகமெனவும் இவ்வண்ணம் சமயத்துக்குப் பொருந்தியவாறு சொல்லிச் சமய வாதிகளை வெல்லுகின்றவர்கள்போலக் கடல்சூழ்ந்த வுலகின்கண் பலவாகச் சொல்லுகின்றவர்கள் சொல்லும் சுகம் சுகமன்று.

ஆகாயமாதியாகச் சொல்லுகின்ற தத்துவங்கள் தொண்ணூற்றாறும் சடமெனக்கண்டு, அவை பொருள் அல்லவெனக்கழித்து, ஆணவ மாயை கருமமென்னும் மும்மலங்களுள் ஒன்றையு நாடாமல், மெய்யுணர்வை நீங்காது நின்று, இகழத்தக்க சகலாவத்தையாகிய பகலும், கேவலாவத்தையாகிய இரவுமில்லாத வொப்பற்ற திருவருளாகிய தாரகத்தில் அகமும் புறமும் ஒருதன்மையதாக, நெருப்பும் அதன் வெப்பமும்போல, வேண்டுவார் வேண்டும்பொருளை வரையாது கொடுத்தருளும் திருவருட்பிரகாச வள்ளலென வாழாநிற்கும் பரசிவத்தின் பரிபூரணானந்தம் எனப்படும் பேரின்ப சுகமே சுகமாவதெனத் தெளிவாயாக.

ஆன்மாக்களின் உள்ளும்புறமுஞ் சூழ்வதாகிய பரிபூரணானந்த வாழ்வை நாம் எவ்வாறிருந்தால் அடைவது கூடும் என்பாயேல், அம்ம! நீ இப்போதிருக்கின்றதுபோலச் சகப்பற்றுடையையாக இருக்கில் அடைய வொண்ணாது. யான் கூறுகின்ற சுகத்தை நெஞ்சே! நீ பெறவேண்டுமெனில், செவ்வையாகிய நெறியிலே திருவள்ளுவதேவர் "பற்றுக பற்றற்றான் பற்றினை யப் பற்றைப்,பற்றுக பற்றுவிடற்கு" எனக்கூறியவாறு, எல்லாப்பொருள்களையும் பற்றி நின்றும் பற்றில்லாத கடவுளாலே சொல்லப்பட்ட முத்திநெறியைக் கடைப்பிடித்தல் வேண்டும்; அம்முத்திநெறியைப் பற்றுதலானது சகப்பற்று நீங்கினாலன்றி வாய்ப்பதரிது.

பற்றறுதலாகிய நிராசையும் ஒருவனுக்கு இவ்வுலகிலே வேதனையாற் பலபலவாக விரிகின்ற சகப்பழக்க வாதனை முழுதும் நீங்கினாலல்லது வாராது. சகப்பழக்க வாதனை தானும் எங்ஙனம் நசிக்குமென்னில், இவ்வுலக நடை அந்தோ! மிக இழிவினையுடையதென்று திருவருளை விரும்புகின்ற ஞானம் அடையப்பெற்றாலன்றி நசியாது.

ஞானந்தானும் இம்மை மறுமைகளின் போகங்கள் முழுதும் பொய்யென்று உணர்கின்ற அநித்திய வஸ்து விவேகம் உதிக்கப்பெற்றா லல்லது விளங்கமாட்டாது. அந்த அநித்தியவஸ்து விவேகந்தானும், பசித்தபோது விரைந்து ஊண் அருந்த வருவதுபோல, இவ்விடத்தில் அலைவற்றிருந்து நித்தியவஸ்து யாது என்று விசாரித்திடும் எண்ணம் ஒன்று அடைந்தா லல்லது வந்து கூடமாட்டாது.

அந்த விசாரணை செய்கின்ற எண்ணந்தானும், ஞானபங்கமடைந்த அசாதுக்கள் கூடுகின்ற சபையைப்பாராமல் சாதுக்கள் சங்கத்தையடைந்தா லல்லது அடையமாட்டாது.அந்தக்காரணத்தால் இவ்வுலகின்கண் நெஞ்சே! அதோமுகத்தினையுடையவராகி, நாள்தோறும் திருவெண்ணீற்றைப் புனைந்தறியாத பாழ்முகத்தை யுடையோரிடம்சென்று, அவருடன் தங்குதல் ஒழிக. தமது வெண்ணீறு புனைந்தறியாத பாழ்முகத்திலே பேய் நிருத்தம் செய்ய, தம் உள்ளத்திலே தம்மையும் தலைவனையும் உணராத அஞ்ஞானமாகிய பித்தம் அதிகரிக்க, உன்னுடன் வாயாடும் வம்பரிடமடைந்து நிற்றல் ஒழிக. நீ யொருமனதாக நில்லாமல் எண்ணியவாறெல்லாம் தம்முடன் உரையாடிப் பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவும் பேதித்துணரவும், சன்மார்க்க நெறியினின்று பிறழ்ந்திடவும், உன்னோடு வாதிக்கின்றவருடன் பொருந்தி வசித்தலை யொழிக. தாம் கற்றுணர்ந்த தருக்க சாத்திர வுணர்ச்சியால் தங்கள் மதமும்,அனுட்டானங்களும் உண்மையுள்ளனவென்று சாதித்துச் சைவசமயநெறி யெங்குள்ளது? திருவெண்ணீற்றின் சார்பு எங்குள்ளது? உண்மையான தெய்வம் எங்குள்ளது? கூறும் என்று பேசித்திரிகின்ற புறச்சமயத்தவருடன்கூடி வசித்தலையொழிக. நீ இவருடன்கூடி வசிப்பையாயின் எவ்வண்ணம் உய்குவாய்? நெஞ்சே! இன்னுங்கேள். எவ்வுலகிற் சென்றாலும், எப்பிறவி யெடுத்தாலும் தம்மைவிட்டு நீங்காத மகாபாதகமாகிய சிவநிந்தை செய்து, சிறுதேவர் நாமங்களை யுச்சரித்து, அவர் சிறுபுகழ்களைப் பிதற்றுகின்றவர்களிடத்து நீ கூடி யுறைவதொழிக. தோன்றி யொடுங்கும் உலகத்தைத் தோற்றி யொடுக்கும் முதல்வன் ஒருவனுளனென்றும், அவனது தடத்த விலக்கணம் சொரூபலக்கணம் இவையென்றும், அவற்றைக் கரதலாமலகம்போல வுணர்த்துவன வேதாகமநூல்களென்றும் ஆராய்ந்து

உண்மை உணராமல் எள்ளத்தனையும் தெய்வம் என்பதில்லையென்றும், இதனைத் தெளிந்துகொள்ளென்றும் கூறித் துள்ளுகின்ற நாத்திகர் கூட்டத்தை அடையற்க.

எல்லாச்சமயத்தவரும் விரும்பும் அத்துவிதப்பொருள் நாம் என்றும், நம்மையன்றிப் பிரமம் வேறாக இலதாமென்றும் சொல்லுகின்ற அகம் பிரமவாதிகளிடத்துப் பொருந்தி யுறைவதொழிக. எல்லாச்சீவர்களுடைய அறிவுகளுந்தாம் ஒன்றாக எமதறிவேயென்று சொல்லும் பொல்லா வலக்காரர் பொய்ம்மொழிகளை மெய்ம்மொழியென விரும்பிக்கொள்ளற்க. ஆராயுமிடத்தில் எல்லாச்சித்திகளும் திரணம்போல அற்பமேயாம்; என்றும் உடலிறவாதிருக்க வுண்கின்ற காயகற்பமே பொருளென்பாரிடத்தில் அடையற்க. சில சில கருமசித்திகளும், யோகசித்திகளுமே பொருளென்பவரைச்சேர்ந்து வசிப்பதொழிக. பலவாகிய மாயா வினோதங்களைச் செய்கின்ற சத்திகளே பொருளென்று சொல்பவரிடத்தை அடைவதை நீங்குக. சத்த தாதுக்களால் மூடப்பெற்ற இந்தச் சன்மமே பல சீவர்களைச்சிருட்டிக்குந் தரமுடையதாம். திரமாகவுள்ள கர்மமே பரம்பொருளென்று கூறுவாரொடு கூடி யுறையற்க. கருமானுபவ மிகுந்துள்ள சொர்க்கலோகம் பேரின்ப வீடென்பவர் மாட்டுச் சேரற்க. தற்போத மிழவாமற் றம்மாற்செய்யப்படும் யோகமே பொருளென்பவரோடு கலந்து வாசஞ்செய்யற்க.

ஏகம் என்னப்பட்ட வத்துவாவது பிருதிவி என்பாரும், அது ஆகாயமென்பாரும், அது சோம சூரிய அக்கினியாகிய மூன்று சுடர்களேயா மென்பாரும், அது பெண்ணுருக்கொண்ட சத்தியென்பாருமாகிய அன்னவர் பேரைச் சொல்லாதொழிக. இந்த மண்ணுலகத்திற் சிலபேர் நிலைபெற்ற வாசகமாக மரத்தைத்தெய்வமென்று கூறுவர்; இங்ஙனங் கூறினோர் எதுதான் அடாதமொழியைக் கூறமாட்டார்? இங்கே யித்தன்மை யுடையவரிடத்தில் அடையாது நீங்குக. மிகவாக நன்மைகள் தோன்றுமாயின் சிறுவர்களும் யாம் செய்த பூசையால் வரும் பயனென்று சொல்லா நிற்பார்.

சிவபூசையின் மான்மியம் இத்தகையதென்று தெளியாரும், அதனைச் செய்யாருமாகித் தோன்றி விளங்குகின்ற பூசையினாற் பயன்யாது ? காலம் வீணிற் போக்குவதாகிய வியர்த்தமென்று பயனற்ற பாழ்வாயாற் கூறுகின்ற பேய்போல்வாருடன்கூடி யிருத்தலைத்தவிர்க. கருமத்தினளவாக வுயர்ந்தும் தாழ்ந்தும், பெருகியுங் குறைந்தும், மாறிவரு மியல்பினையுடைய பந்தத்துக்குரிய தேகாதிப் பிரபஞ்சவாழ்க்கை முழுதும் அநித்தியமெனக் கூறிக்கொண்டு சர்வசங்க பரித்தியாகம் செய்தலின் பொருட்டாகத் திரவிய சாலையுட் பிறர் நுழைந்து களவு செய்யாதபடி தாட்கோல் இடுகின்ற தன்மையுடையவர்களை யடைந்து, அவரோடு வசித்தனீங்குக.

உடலிற் புனைந்த பலவேடங்களால் மெய்யொழுக்க முடையார்போலப் புறத்திற் காட்டி நின்று, தம் உள்ளத்திற் பற்றொழியாத பொய்யொழுக்க முடையாரிடத்துப் பொருந்தியிராது நீங்குக. பொய்யொழுக்கத்தினின்று தம்மைப்பொருளுண்மை தெரிய வினவுவோர்க்கு விரைவாகப் பொய்ந்நூற்களிற் சொல்லும் பொய்ப்பொருளை யுபதேசிக்கும் பித்தர்களிடத்திலே அவர் கற்ற அந்த நூல்களை யுணர விரும்பி அடைந்து அலையற்க.

மனசிற் கோணாது இணங்கித் தமது கைகளால் கோடி நிதி வழங்கினும் சைவ சன்மார்க்க நெறியை நாடாதவர்கள் இருக்கும் சங்கத்தை நீ சென்று

அடையற்க. மனங்கோணாமல் ஓர் உயிரையும் இம்சைசெய்யாத கொல்லா விரதத்தைக் கைக்கொள்ளாதவரைக் காண்பையாயின் அவரைத் திரணம் போல்வாரென மதித்துப் புறம்பே நீங்குக. மேலே சொல்லப்பட்ட இவை யெல்லாம் சிவாகமம் போதிக்கின்றதெனத்தெளிந்து, நம்முடைய உயிர்த் தந்தையாகிய பரசிவத்துக்கு அன்பு படையாதவர்களை நீ கனவினிலாயினு நினையாதொழிக.

ஏகனாகிய சிவபெருமான் திருவடிக்குச் செய்கின்ற அன்பே தமது வடிவமாகவும், அவ்வடிவினுள் சீவகாருணியமாகிய அருளே உயிராகவும், பேரின்ப அனுபவமே உணவாகவுங்கொண்டிருப்போரும்; அன்பின் உருவமுடையவராய்க் கண்டிகையென்னும் அக்கமணிமாலையே பொன்னாற்செய்த ஆபரணமாகப்பூண்டும், நல்ல மணமுள்ள சாந்தாகத் திருவெண்ணீற்றையே பூசியும், தம்முயிரைவிட்டு நீங்காதமர்கின்ற பரஞ்சுடரையே சார்பாகச் சிந்தனையிற் குறிகொண்டிருப்போரும்; நம்முடைய தலைவராகிய சிவபிரானுக்கு அடிமை பூண்டு தமது வாக்கினாற்றுதிக்கின்ற சொன்மலர்களாற் செந்தமிழ்ப்பாமாலை யியற்றுதலாகிய சொற்றொண்டுடன், தூய்மை மிக்க நறிய மலர்களால் மாலை தொடுத்தணியும் கைத்தொண்டு புரிவாரும்; பங்கயாதனனாகிய பிரமதேவனும் அழகிய நந்தவனத்தொண்டை நோக்கி யாசைப்படும்படி நம்முடைய தலைவருக்குத் திருநந்தவனத் திருத்தொண்டுகள் செய்வோரும்; தீயிலுருகுகின்ற மெழுகுபோலக் குறைவில்லாத அன்பான் மனமுருகப்பெற்று, நமது தலைவர்வாழ்ந்தருளுந் திருக்கோயிலை மெழுகுகின்ற கொள்கையுடையவரும்; அடைக்கலம்புகுந்து தொண்டுபூண்ட அடியார்களைத் தாய்போல் அன்பு காட்டி வளர்க்கின்ற தயவினையுடைய நமதுபெருமான் வீற்றிருந்தருளுந் திருக்கோயிலை விளக்குங் குணமுடையவர்களும்; தூய்மையுள்ள அருளுடன் இன்பமுமுடையவராய்த்திருவிளக்கேற்றுதல்முதலாகவுள்ள எல்லாச்சரியைகளையும் அன்புடன் செய்து அமர்கின்றவர்களும்; அன்புடையவராய் மேன்மைபொருந்திய சிவனடியார்களுக்கு இன்னமுது அருத்தன் முதலாகவுள்ள சிவபுண்ணியங்களையே நாள்தோறும் செய்வோரும்; புண்ணிய வடிவமுடைய செந்தேனேயென்றும், அமுதமேயென்றும், சிவமேயென்றும், எம்மானே யென்றுந் தோத்திரம்புரிந்து மகிழ்ச்சி யடைவோரும்; சிதாகாச வடிவரான தலைவரே! கருணைக்கடலாக வுள்ளவரே! யென்றும், மாணிக்கமணியே! யென்றும், எமது தாயாகவுள்ளவரே! யென்றுந் தியானித்துச் சிவநேசத்தில் அமர்வோரும்; பண்ணிறைந்த நீர்மையுமுடைய சிவநேச மிக்க சொற்களாற் கனிந்து துதித்து ஆனந்தக்கண்ணீர் சிந்தி மனதிற் களிக்கின்றவர்களும்; தங்கள் அகமுக நோக்கத்திற் பண்டே தந் தலைவரைக்கண்டிருந்தும் காணாத தன்மையர்போல அவர் பொன்போல் விளங்குந் திருமேனியைப் பலகாலுந் தரிசித்துத் தரிசித்துத் தினந்தின மகிழ்கின்றோர்களும்; திருத்தொண்டு நெறியை யடைதற்குரிய அழகு அதிகமாக வாய்ந்துள்ளதென நினைந்து வணங்கித் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் முதலிய சைவசமய குரவர் மூவரும் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களைக்கொண்டு சிவபெருமானைத் துதிப்போரும்;

கனவின்கண்ணுந் தன்னிடத்துக் குற்றத்தைச் சேர்க்காது விளங்கு மாணிக்கமணியென்று சிவபெருமான் அன்பொடு திருவாய்மலர்ந்தழைக்கப் பெற்ற பெருமையையுடைய திருவாதவூரடிகள் அருளிச்செய்த திருவாசகச் சுருதியை யோதித் தமது வாயால் துதிப்போரும்; சொன்னோக்கும் பொரு

ஞேக்குந் தொடைநோக்கும் பொருந்தியிருத்தலால் அறிவின் மிக்கோரால் ஒன்பதாந்திருமுறையென வகுக்கப்பெற்ற திருவிசைப்பாவுடன் திருமந்திரமாகிய பத்தாந்திருமுறையும், பதினோராந்திருமுறையுமாகிய நற்றமிழ்த்துதிகளால் எம்பெருமானைத் துதிப்போரும்;

துதிப்பவர்க்கு நல்ல வாழ்வை வழங்காநிற்கு நம்பெருமான் அருட்புகழை இன்னிசையினோடு பாடித்துதிப்போரும், அத்துதிகளைக்கேட்டு வணங்குவோரும்; கீர்த்திமிகப்படைத்த வள்ளலாயுள்ளானேயென்று மெய்யன்புடன் சாமகீதம் முதலாகவுள்ள வேதங்களாலும் ஆகமங்களாலும் வித்தாரமாகத் தோத்திரம் புரிவோரும்; வேதமுடியாகிய உபநிடதங்கள் எடுத்துக்கூறுஞ் சுத்தசன்மார்க்க ஞானத்தை யடைந்தோர்க் கனுக்கிரகஞ்செய்யுஞ் சிவமே மெய்யாகிய பதிப்பொருளென்று தெளிந்து சிவபூசை செய்வோரும்; நமது தலைவராகிய சிவபெருமான் எழுந்தருளுந் திருக்கோயிலாகத் தமது நெஞ்சத்தை வகுத்து வைத்துப் பெருகுகின்ற சிவநேசம் பெற்றிருப்போரும்;

பூரணவுருவம்பெற்றுச் சிசுவாகி வெளிப்படுவதன் முன்னரே பிரமன் கருவில் யாவரும் அஞ்சும்படி யெழுதிய பிரமலிபி எனப்பட்ட தலையெழுத்துக்களெல்லாம் கேட்டவுடன் தாம் பயப்படும் எழுத்துக்களாகின்ற நமது சிவபெருமானது ஸ்ரீபஞ்சாக்கரங்களை யுச்சரித்துப் பல நல்ல மலர்களைத் திருவடியிற்றூவி யருச்சனைசெய்யும் சற்புத்திரமார்க்கத்தோரும்;

சூரியனை மறைக்கும் மேகம்போல ஆன்மப்பிரகாசந் தோன்றாமல் அதிகரித்து மறைக்கும் கண் முதலிய ஐம்பொறிகளுக்கும் விடயங்களாகிய சத்த பரிச ரூப ரச கந்தங்களை யெல்லாம் நம்பெருமானுடைய சிவந்த அழகிய திருவடியிற் சேர்க்கின்றோரும்; தம்மை வஞ்சிக்கின்ற அநித்திய மாயை முதலிய மலங்களால் விளையும் வேதனைகளை விலக்குகின்ற புண்ணிய சொரூபியாகிய சிவபெருமானிடத்துத் தம் உயிரை நைவேத்தியமாகச் சமர்ப்பிக்கு நல்லவர்களும்; தாம் செய்கின்ற தொழில்களிலே நடக்கும்போதும் நிற்கும்போதும், ஓடல் இருத்தல் முதலிய செயல்களை யுடையவராகும்போதும் நம்பெருமானுடைய ஞானநாடகம் புரியுந் திருவடித்தியானத்தில் அமர்வோரும்; சனனமரணங்களா லுண்டாகுங் கவலைக ணீங்கச் சுத்த நனவிற் சுழுத்தியாகிய சாக்கிராதீதத்திலே நின்று நமது சிவபெருமானுடைய நேயத்தை நிகழ்த்தாது நிகழ்த்து நெறியினையுடையோரும்;

மாயமிக்க அசுத்தமாயா தனுவுடன் அதுவாகி அம்மாயையின் வசத்தினின்றது நீங்கித் தான் என்பதாகிய தற்போதம் இழந்து, சிவமாக நிற்குந் தகைமையுடையோரும்; ஆகாயத்திலே மேகசாலத்தைக்கண்டு நிருத்த மிடுகின்ற மயில்போல நம்பெருமான் அமர்ந்தருளும் தானமாகிய துரியாதீத நிலையைக்கண்டுஆனந்தக்கூத்தாடுந் தவமுடையோரும்; மவுனநிலையையடைந்து, திருமுதுகிற்றாழ்கின்ற நீண்டசடையையும், திருமேனி முழுதும் பூசப்பெற்ற வெண்ணீறும், கீட்கோவண வுடையுமாகிய சுந்தரவேடம்பூண்டு தவநெறியில் வசிக்கு முனிவோரும்;

ஆழமிகவுடைய சமுத்திரத்தில் எழுகின்ற அலைகள்போன்ற அசுத்த மாயையினுற் றோன்றுகின்ற ஐம்பூதமாதி தத்துவங்களாகிய காரியங்களை யெல்லாந் தமக்கன்னியமாகக்கண்டு விலக்கி, உயிர்கள் அசைந்து சஞ்சரிக்க இடந்தரும் பிரமன் தத்துவமெனப்பட்ட பூதங்கள் அஞ்சும், பொறிகள் அஞ்

சும்,புலன்கள் அஞ்சும், வாக்கு முதலாகவுள்ள கன்மேந்திரியங்கள் அஞ்சும் நீக்கி,மாயோன் தத்துவமெனப்பட்ட கலைமுதலாகிய வேழுதத்துவங்களையுங் களைந்து, சுத்தவித்தை முதலாக நாத தத்துவமீறாகவுள்ள சுத்த தத்துவங்களைக்கூடி,அவையும் சடமெனவிட்டு,அவற்றின்மேல் விளங்குந் திருவருளைத் தரிசித்து, அவ்வருளாலே தம்மைத்தாம் தரிசித்து, அதற்கப்பாலுள்ள பரவெளியைத்தெரிசித்து,அதற்கப்பாலைக்கப்பாலு நீங்காச்சுயமாகிய சிதானந்தமாம் அருட்பெருஞ் சோதியைப் பாராது பார்த்து, அசைவற்றிருந்தபடியேயிருந்து, அந்நிலையிற் பேராமல், ஞானக்கண்ணாற்கண்டது அதுவென்று சுட்டியுணராது, கலவாமலே கலந்துகொண்ட ஐக்கியநிலையுடைய சிவராசயோகமுடையோரும்; தீக்குணங்கள் நெருங்குதற்கரிய சத்துவத்திற் சத்துவமே தங்கள் வடிவமாகக்கொண்டு பரதத்துவத்தினிற்குந் தகவுடையோரும்; இவ்விரண்டெனப்பட்ட துவந்துவமாகிய துக்கமும் சுகமும் சிவன் செய்தருளும் பஞ்சகிருத்திய நாடகச்செயலால் வருவன வென்றெண்ணித் தாம்அனுபவிக்கவந்து பொருந்தின யாவையும் சமமாகக்கண்டு வெறுத்தலும் விரும்புதலும் செய்யாதிருப்போரும்; குற்றமுண்டாகக்கூறுந் தம் பெயரையும், குணங்களையும், பிறந்த குலத்தையும், ஆதியந்தங்களையும், வாசமாளிகையையும் நீங்கிய துறவிகளும்; தம்மை யடைந்த கருமானுபவங்க ளெல்லாம் பாழ்படப் பெருமையுடைய சேந்துவைபோலச் சித்தசாந்தியுடன் சஞ்சரிக்கின்றவர்களும்;சித்தசாந்தியை யடையும்பொருட்டுத் தம்மை வந்தடைகின்ற சித்துகள் எவையுந் தாம் விரும்பாமல், துறவறச்செம்மையோடு கூடிவாழுந் திறலுடையோரும்; எப்பிறவியினு நிரம்பாத இயல்பினையுடைய ஆசையாகிய பெரிய சமுத்திர சலத்தை மான்குளம்பினிற்கு நீர்போல் அற்பமாக மதித்து நீந்தி,நிராசையாகிய நிலையிலே நிலைத்திருப்போரும்; புறச்சார்பாகப்படைத்துள்ள தமதென்றபிமானித்த மனைவிமக்கள் முதலான பொருள்களைக்கண்டு சேராது நீங்கி, சதானந்த வீட்டினிடைச் செம்பொருளாகிய சுத்தசிவத்தை யடைந்த திறத்தினையுடையோரும்; மண்ணாசை பொன்னாசை நீங்கி, மாதர்களைத் தாயர்போல நினைந்து, பாலர்போலவும் பித்தர்போலவும் பேயர்போலவு முலகிற் பொருந்திவாழும் பெரியோரும்; ஈயைப்போல் மெலிந்த தன்மையுடைய வோர் சிறுதுரும்பு புவனகோடிகள் படைத்துக் காக்கும் வண்ணம் அதனைத் தம்மெய்யாற் பரிசிக்க வல்லவராகிய ஞானசித்தர்களும்; உண்மையாகவே எவ்வுலகினு நிகழுஞ் செயல்களைத் தமது ஞானக்கண்ணாற் கண்டுணர்ந்தும், உணராதவரைப்போல எக்காலத்தும் பிறப்பும் இறப்புந் தவிர்ந்து நிற்போரும்; இடைவிடாமல் தம்மை நிந்தித்தபோதிலும், வாழ்கவென்று பலபலவாழ்த்தி யுபசாரஞ்செய்தபோதினும் தமதுதன்மை திறம்பாதிருப்போரும் ; மெய்யுணரும் வகையினால் சித்தந்தெளிந்து, அவன் அவள் அதுவெனச் சுட்டியுணரும் பிரபஞ்ச முழுதும் சிவமயமாகக்கண்டு, எவ்விடத்திலும் சீவச்செயல் விளங்கத் தற்போதத்துடன் ஏறாமலும் இறங்காமலும் இருப்போரும்; தம்மைவிட்டுப் பெயராத மோனநிலையைக்கொண்டு வாதனைகள் மாண்டவிடத்திலே விளங்கும் பரமானந்தாதீதத்திலே அமர்ந்தோரும்; ஆகிய இன்னோர் தாம் குறைவுபடாப் பெருமையுடைய சாதுக்கள் என்னப்படுவார். அவர்தமது சங்கத்தின் மகத்துவத்தைச் சாதுக்களல்லது வேறெவர் தாம் அறியவல்லார்.

நெஞ்சே ! நீ பிரபஞ்சத் துக்கத்தினின்று நீங்கி அந்தச்சாதுக்கள் சங்கத்திற் கூடிநின்று களித்து, அவர்களைத் துதித்து, தினந்தோறும் அச்சாதுக்க

ளுடைய திருவடிக்குற்றேவல்களைத் தெரிந்து செய்து, உயர்வுடைய சிவபஞ்சாக்கரத்தை யருளுவாற் செபியாமற் செபித்துத் தணியாத பேரன்புடனே தியானித்து, அருட்கிரணபானுபோல ஒளிரும் தாதுகலந்த தும்பைமாலை முடித்த செஞ்சடைமுடியினைத்தாங்கிய சிவபிரானுடைய திருவடி நீழலிற் பொருந்தி, நமக்கன்னியமாகவுள்ள வேறெந்தப்பொருளையு நோக்கிச் செல்லாது அந்நிலையின்கண்ணே அமைந்திடுக. நீங்குடைய தென்ற பிரபஞ்சப் பாழ்வாழ்வு நின்னைவிட்டு நீங்குக; எந்தக்காலத்தும் பதிவாழ்விலே யென்னுடன் கூடிச் சுகானுபவியாக மகிழ்ந்து வாழ்வாயாக. ஓம்! சுபம்! சுபம்!

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ இராமலிங்க பரம குரவே நமஃ.

## நெஞ்சறிவுறுத்தல் வசனம்

முற்றிற்று.

## அறிவுள்ளோர்க்கு ஓர் விண்ணப்பம்.

திருவருட்பாவில் நெஞ்சறிவுறுத்தலாகிய பாகத்துக்கு முதலில் அரும்பத உரை எழுதியிருந்தும், அதனுட் பொதிந்துள்ள உண்மையான பொருள் விளக்கம் எம்போன்றவர்களுக்கு எளிதில் விளங்குவது கூடாமையாதலால் அதனை மஹா வித்வான் - திரிசிரபுரம்-மீனுட்சிசுந்தரம் பிள்ளைஅவர்கள் மாணுக்கரும், பெங்களூர் அருட்பெருஞ்சோதிசபை ஸ்தாபகரும், மஹாவித்துவான்-சித்தாந்தரத்நாகரம், ஸ்ரீலஸ்ரீ அரன்வாயல் - வேங்கடசுப்புபிள்ளை அவர்களைக்கொண்டு வசனரூபமாக இங்கு மீண்டும் விரிவாக எழுதத்துணிந்தது அன்பர்கள் எல்லோருடைய மனதையும் சந்தோஷப்படுத்துமென்பது எமது கோரிக்கை. இவ்வசனம் கல்லார்முதல் கற்றோரீருக வுள்ள எல்லோரும் எளிதில் வாசித்தறிய எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. அறிவுள்ளவர்கள் குணம் கொண்டு குற்றம் பொறுக்க.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை நம்மைஆதரிக்க.

உ
சிவமயம்.
சிவகணபதிதுணை.
திருச்சிற்றம்பலம்.

# சிவநேசவெண்பா.

## காப்பு.

### நேரிசைவெண்பா.

### விநாயகர் துதி.

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே - மன்னவனே
சிற்பரனே யைங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்றாள் சரண்.

*(அ-ரை) முன்னவன்-எல்லாப்பொருள்களுக்கும்முற்பட்டவன். முத்திநலம் சொன்னவன்-முத்தியின் நன்மையைச் சொல்லியருளினவன். தூமெய் சுகத்தவன்-பரிசுத்தமாகிய உண்மையின்பத்தைத்தருபவன். சிற்பரன்-ஞானபரன் (அறிவுருவாகிய மேலோன்.) ஐங்கரன் - ஐந்து கைகளை யுடையவன். செஞ்சடை அம் சேகரன் - சிவந்த சடாபாரத்தையுடைய அழகிய திருமுடியையுடையவன். தற்பரன் - அந்தமேலோன். (தனக்குத்தானே மேன்மை யடைந்திருப்பவன்.) சரண் - அடைக்கலம்.

†(வி-ரை) "முத்திநலஞ் சொன்னவனே" என்பது மகளிரிடத்து அனுபவிக்கின்ற சிற்றின்பமே முத்தியென்னும் உலகாயதன் முத்தியும், பஞ்சகந்தம் அறுவதே முத்தி யென்னும் புத்தன்முத்தியும், திரிகுணமுமடங்குவதே முத்தியென்னும் சாங்கிய, வைசேடிகர் முத்தியும், கருமநாசமே முத்தி யென்னும் அருகன் முத்தியும், மலங்களினீக்கமே முத்தியென்னும் பேதவாதி, பாசுபதவாதிகள் முத்தியும், சாகாவரம் பெறுவதே முத்தியென்னும் கர்மயோகிகள் முத்தியும், எல்லாவற்றையும் விவேகித்தறிவதே முத்தியென்னு மாயாவாதி முதலியோர் முத்தியும், பசுத்துவ நாசமே முத்தியென்னும் பாற்கரியன் முத்தியும், அட்டமா சித்தி பெறுவதே முத்தியென்னும் சித்தர்கள் முத்தியும், கல்லுப்போற் செயலற்றுக்கிடப்பதே முத்தியென்னும் நியாயவாதி பிரபாகரன் முத்தியும்,முத்தியல்லவென்று மறுத்து, மும்மலங்களையு நீக்கி, ஆன்மா திருவருளைப்பெற்றுப்பேரின்ப வீட்டிலுறுவதே முத்தி யென்றருளிச் செய்தவன். எ - று, (க)

### சுப்பிரமணியர் துதி.

வீறுடையாய் வேலுடையாய் வெற்புடையாய் விண்ணுடையாய்
நீறுடையாய் நேயர்கடந் நெஞ்சுடையாய் - கூறு
முதல்வாவோ ராறு முகவாமுக் கண்ணன்
புதல்வாநின் றாளெம் புகல்.

(அ-ரை) வீறு-மேன்மை. வெற்பு-மலை. விண்-மேலுலகம். நேயர்கள்-அன்பர்கள். புகல்-புகுமிடம் (அடைக்கலம்).

(வி-ரை) "ஆறுமுகவா" என்றது ஆதிசத்தி - பராசத்தி - இச்சாசத்தி-ஞானசத்தி - கிரியாசத்தி-குண்டலிசத்தியாகிய ஆறுசத்திகளும் ஆறு திருமுகமாகப்பெற்றவனே என்பதாம்.(உ)

---

*(அ-ரை)=அரும்பதவுரை. † (வி-ரை)=விசேஷஉரை.

## நூல்.

1. சீர்சான்ற வேதச் செழும்பொருளே சிற்சொருபப்
பேர்சான்ற வுண்மைப் பிரமமே - நேர்சான்றோர்
நாடும் பரசிவமே நாயேனுக் கன்புநின்பா
னீடும் படிநீ நிகழ்த்து.

(அ-ரை) சீர்சான்ற-சிறப்பு நிறைந்த. சிற்சொருபம்-ஞானவுருவம். பேர்சான்ற - பிரபல மிகுந்த. நேர்சான்றோர் - செந்நெறியால் மேம்பட்டோர். நாடும்-தியானிக்கிற. நாயேனுக்கு-நாயை நிகர்த்த எனக்கு. நீடும்படி - பெருகும்படி. நிகழ்த்து - ஒருபாயம் சொல்லியருள்.

(வி-ரை)"பிரமமே" என்றது வேதாந்தத்தில் விளங்குகின்ற சுத்தபிரமத்தை; "பரசிவமே." என்றது - ஆகமாந்தப்பொருளாக விளங்கும் சுத்த சிவத்தை ; பிரமம் வேறெனவும் சிவம் வேறெனவும் வாதிக்கு மதவாதிகள் கொள்கையை மறுத்து, பிரமமாவதும் சிவமாவதும் ஒன்றே யென்பதுணர்த்தப் பிரமமெயென்றும், சிவமேயென்றுங் கூறினர். (க)

2. நினைப்பித்தா நித்தா நிமலா வெனநீ
நினைப்பித்தா லேழை நினைப்பே - னினைப்பின்
மறப்பித்த லியானு மறப்பே னெவையும்
பிறப்பித்தா யென்னுலென் பேசு.

(அ-ரை) நித்தா - அழியாதிருப்பவனே. நிமலா-மலரகிதனே. நினைப்பித்தால்-நினைக்கும்படி பண்ணினுல்.

(வி-ரை) "நினைப்பித்தானினைப்பேன், மறப்பித்தால் மறப்பேன்"—என்றமை உயிர்கள் தாம்தாம் செய்த வினைகளின் பயனை யனுபவித்தற்கான தொழில் செய்ய நினைப்பித்தலும், அவ்வனுபவ நீக்கத்திலே மறப்பித்தலும் முதல்வன் ஆணையால் நிகழ்கின்றமை விளக்கிய வாறும் "என்னுலென் பேசு" என்றது உயிர்கள் பரதந்திரர் அல்லது சுதந்தர வினராக நிற்கு முண்மை புணர்த்தியவாறும். (உ)

3. உருவா யுருவி லுருவாகி யோங்கி
யருவா யருவி லருவா - யொருவாம
னின்றாயே நின்ற நினைக்காண்ப தெவ்வாறே
வென்றாயே யென்றந்தை யே.

(அ-ரை) ஒருவாமல் - நீங்காமல்.

(வி-ரை)"ஒருவாமனின்று"யென்பது.—எத்தனுவிலும்,எக்கரணத்திலும்,எப்புவனத்திலும், எப்போகானுபவத்திலும், எக்காலத்திலும், எவ் வவத்தையினும், எப்பருவத்திலும் பெத்த முத்திகளிரண்டினும் எட்டுணையும் வேருக நீங்காமல் உடனுக உயிர்களினின்ற அத்துவிதக் கலப்பாம்.—'என்றாயே, என்றந்தையே," என்றதனுல் இறைவன் உயிர்களுக்கு அம்மை யப்பனுர் நின்றுபசரித்தலை புணர்த்தியவாறும் என்க. (ங)

4. வெஞ்சஞ் சலமா விகார மெனும்பேய்க்கு
நெஞ்சம் பறிகொடுத்து நிற்கின்றே - னஞ்சலென
வெண்டோ ளிறையே யெனையடிமை கொள்ளமன
முண்டோ விலையோ வுரை.

(அ-ரை) வெம் சஞ்சலம் - கொடிய சலநம்.

(வி-ரை)"சஞ்சலவிகாரப்பேய்க்கு, நெஞ்சம் பறிகொடுத்து நிற்கின்றேன்"என்றது பேயின் வசப்பட்ட மனத்தைத் தன் வசப்படுத்தல் வேண்டுமென இரந்தனர்; பேயோடாடியாகிய பரசிவன் தன் கருணையால் ஓர் இமைப்போதில் அடக்கியாளுதல் கூடுமாகலின். (ச)

5. அப்பாலுன் சித்த மறியே னெனக்கம்மை
யப்பாநின் றுளன்றி யார்கண்டா - யிப்பாரிற்

சாதியுரு வாக்குந் தளையவிழ்த்துத் தன்மயமாஞ்
சோதியுரு வாக்குந் துணை.

(அ-ரை) சாதியுரு - ஆண்சாதி, பெண்சாதி. தளை-கூட்டு. தன்மயம்-அந்தப் பிரமமயம். சோதியுரு - ஒளிவடிவு.

(வி-ரை) சாதியுருவாக்குந் தளை என்றது - கருமத்தின் அளவாகத்தோன்றிய சாதிபேதங் களும், நாறு வடிவங்களும் பொருந்தி யுயிர்களுற்ற பக்தம் அல்லது பெத்த நிலை. (ரு)

6. பேரறிவாற் கண்டும் பெரியோ ரறியாரேல்
யாரறிவார் யானே வறிகிற்பேன் - சீர்கொள்
வெளியாய் வெளிக்குள் வெளியா யொளிக்கு
ளொளியாகி நின்ற வுனை.

(அ-ரை) அறியாரேல் - அறியமாட்டாராகுல்.

(வி-ரை) "யாரறிவார்" - என்றது="இல்லா-அருவாகி நின்றுனை யாரறிவார் தானே, யுரு வாகித்தோன்றுனேனுற்று" என்னுஞ் சிவஞானபோதத்திருவெண்பாவின் மெய்ப்பொருளை யும், அவனருளால் அறிவிக்க அறியும் உண்மையும், உயிர்கள் சுதந்தரித்து அறியமாட்டாமை யும், இறைவன் சுட்டுணர்விற்கெட்டாமையு முணர்த்தியவாறும். (சு)

7. வந்தித்தேன் பிட்டுகந்த வள்ளலே நின்னடியான்
சிந்தித்தே னென்றல் சிரிப்பன்றே - பந்தத்தாஞ்
சிந்துசிந்திப் பித்தெனது சிந்தையுணின் பொன்னருளே
வந்துசிந்திப் பித்தன் மறந்து.

(அ-ரை) வந்தி - மலடி, (செம்மனச்செல்வியென்னும் பிட்டுவாணிச்சி). தேன்-இனிமை. உகந்த - விரும்பின. பந்தத்தாம் - பிறவிக்கட்டாகிய. சிந்து - கடல். சிந்திப்பித்து - சிந்தும் படிசெய்து, (வற்றச்செய்து). சிந்திப்பித்தல் - நினைக்கப்பண்ணுதல்.

(வி-ரை) "நின்பொன்னருளே வந்து சிந்திப்பித்தல் மறந்து, நின்அடியான் சிந்தித்தேன் என் றல் சிரிப்பன்றே" வென்றது=உயிர்கள் திருவடியைச் சிந்திக்கவொட்டாது மறப்பித்துத் தடையாக நிற்கும் ஆணவ மலத்தை நீக்கியருளும் இறைவன் கருணையை மறத்தலும், சிவன் செயலைப் பிற்படுத்திச் சீவச்செயலை முற்படுத்துவதும் அறிஞர் நகையாடற்கிடந்தரும் என்ப துணர்த்தியவாறும், (எ)

8. தேனென்ற வின்சொற் றெரிந்துநினைப் பாடுகின்றே
னானென் றுரைத்த னகையன்றே - வானின்ற
வொண்பொருணீ யுள்ள முவந்தருளா லின்சொல்லும்
வண்பொருளு மீதன் மறந்து.

(அ-ரை) வான் நின்ற - மேன்மைநிலைபெற்ற, ஒண்பொருள் - மேலானபொருளாகிய, உள் ளம் உவந்து - திருவுளமகிழ்ந்து. வண்பொருளும் - வளமான அர்த்தமும். ஈதல் - கொடுத்தல்.

(வி-ரை) "தேனென்ற வின்சொற்றெரிந்து நினைப்பாடுகின்றேனானென் றுரைத்தனகையன் றே" வென்றது-திருநாவுக்கரசு நாயனார் திருவாய்மலர்ந்தருளிய—"பாட்டுவித்தாலாரொரு வர் பாடாதாரே" என்ற தேவாரத் திருவிருத்தப்பொருளைத்தழுவித் தற்போத நீக்கத்தை விளக்கி, இறைவன் அருளால் இன்சொல்லும் வண்பொருளும் ஈவதை யுணர்த்துவதாம். (இவ்வுண்மைகண்டுதான் அறிஞர்கள் இந்நூற்குத் திருவருட்பாவெனப்பேரிட்டனர்") என்ப.

9. அண்டங்க ளோவவற்றி னப்பாலோ விப்பாலோ
பண்டங்க ளோசிற் பரவெளியோ - கண்டங்க
ளெம்பெருமா னீத்தவர்தம் மெய்யுளமோ தையலொடு
மெம்பெருமா னீவா ழிடம்.

(அ-ரை) அண்டங்கள் - உலகங்கள். பண்டங்கள்-பொருள்கள். சிற்பரவெளி-மேலான ஞானகாயம். நீத்தவர்-விட்டவர் (இருவகைப்பற்றுக்களையும் விட்டவர்கள்). தையல்-உமா

தேவியார். தையல் என்பதற்கு - கைபுனையப்பட்டவள் என்பதுபொருள். கைபுனைதல் - அலங்கரித்தல்.

(வி-ரை) "தையலொடு மெம்பெருமானீவாழிடம்" = என்றதனால் "அருளுண்டாமீசற்கது சத்தியன்றே" யென்னும் உண்மையும், அருள் சிவத்தையும், சிவம் அருளையும் விட்டு நீங்காமையும் உணர்த்தியவாறாயிற்று. (௯)

10. பூதமெங்கே மற்றைப் புலனெங்கே பல்லுயிரின்
பேதமெங்கே யண்டமெனும் பேரெங்கே - நாதமெங்கே
மன்வடிவ மெங்கே மறையெங்கே வான்பொருணீ
பொன்வடிவங் கொள்ளாத போது.

(அ-ரை) பேதம் - வேறுபாடு. பொன்வடிவம் - பொன்னுருவம், அழகியதிருவுருவம்.

(வி-ரை) "வான்பொருணீ" யென்றது = அகளமா யாருமறிவதற்கரியநிலை. "பொன்வடிவம்" என்றது = உயிர்கண்மேல் இறைவன்வைத்த பொருளாற் சகளமாய் வந்தருளு நிலை. (௧0)

11. பேருருவோ சோதிப் பிழம்பாகுஞ் சின்மயத்தின்
சீருருவோ தேவர் திருவுருவம் - நேருருவிற்
சால்புறச்சே ரண்ட சராசரங்க ளெல்லாநுங்
கால்விரற்பா னின்றோங்குங் கால்.

(அ-ரை) சோதிப்பிழம்பு - ஒளித்திரள், சால்பு உற - நிறைய, அண்ட சராசரங்கள்-உலகங்களும் அவற்றிலுள்ள சராசர ஜீவராசிகளும், கால் விரல் பால் - கால் விரலினிடத்தில்.

(வி-ரை) "அண்டசராசரங்களெல்லாநுங் கால்விரற்பானின்றோங்குங்கால்" என்றது அண்டங்களனைத்தையும் ஆசனமாக்கி, அதன்மேல் வீற்றிருந்து அருட்செங்கோலோச்சி அண்டாசனத்தேவர் பிரானாய்ச் சிவபெருமான் விளங்கும் உண்மை விளக்கியவாறும். (௧௧)

12. இன்றோ பகலோ விரவோ வருநாளி
லென்றோ வறியே னெளியேனே - மன்றோங்குந்
தாயனையாய் நின்னருளாந் தண்ணமுத முண்டுவந்து
நாயனையேன் வாழ்கின்ற நாள்.

(அ-ரை) மன்று - சபை. (பொற்சபை).

(வி-ரை) அருளாந்தண்ணமுதம் = குளிர்ந்த அருளாகிய அமுதம்; அதனை யுண்டார் பசியையும், இளைப்பையும், மூப்பையும், நரைதிரைகளையும், மரணத்தையும் கடந்து மகிழ்ந்திருப்பது உண்மையாதலின் - "உண்டுவந்து நாயனையேன் வாழ்கின்றநாள்" என்றார். (௧௨)

13. மண்ணாசை வெற்பே மறிகடலே பொன்னாசை
பெண்ணாசை யொன்றேயென் பேராசை - நண்ணாசை
விட்டார் புகழும் விடையாய்நான் பொய்யாசைப்
பட்டால் வருமே பதம்.

(அ-ரை) வெற்பு - மலை. ஆசைவிட்டார் - ஆசையை யொழித்தவர், குற்றத்தை யொழித்தவர். விடையாய் - இடப வாகனத்தையுடைய சிவபிரானே.

(வி-ரை) மண்ணாசை.........வருமேபதம் - என்றது = "ஆராவியற்கை யவாநீப்பி னந்நிலையே, பேராவியற்கை தரும்" என்னும் பெருநாவலர் பொய்யாமொழிப்பொருளைவிளக்கி, சாயுச்சியநிலை யடைதற்காக நிராசையைத் தருதல்வேண்டும் எனப் பிரார்த்தித்தவாறும். (௧௩)

14. தந்தையா யென்னுடைய தாயாய்த் தகைசான்ற
சிந்தையா யென்னருமைத் தேசிகனாய் - முந்தையாய்
நீடு மறைமுதலாய் நின்றாயென் னேநெஞ்சம்
வாடுமெனை யாட்கொள்ளா வாறு.

(அ-ரை) தகைசான்ற - பெருமை நிறைந்த.

(வி-ரை) "தந்தையாய்........ஆட்கொள்ளாவாறு என்னே" என்றது சிவபெருமானே சொற்பிரபஞ்சமும் பொருட்பிரபஞ்சமுந்தோற்றி முதல்வனாய் நிற்கு முண்மையும், அவன் திருவடிக்கே யாட்படவேண்டுமென்னு முண்மையும் விளக்கித் தன்னை யாட்கொள்ளத் திருவருளை யிரந்தமையை யுணர்த்துகின்றதென்க. (கச)

15\. ஊட்டுகின்ற வல்வினையா முட்கயிற்ரு லுள்ளிருந்தே
யாட்டுகின்ற நீதா னறிந்திலையோ - வாட்டுகின்ற
வஞ்சுபல வேடர்க் கறிவைப் பறிகொடுத்தென்
னெஞ்சு புலர்ந் தேங்கு நிலை.

(அ-ரை) அஞ்சு பல வேடர் - பலத்தையுடைய ஐந்து வேடர். (ஐம்பொறிகள்). நெஞ்சு புலர்தல் - நெஞ்சுலர்தல்.

(வி-ரை) "கயிற்ருலாட்டுகின்ற நீ தான்" என்றது. இறைவன் சூத்திரதாரியாதலையும், உயிர்கள் நாடகப்பாவைகளாதலையும்; அறிந்திலையோ வென்றது = இறைவன் முற்றுணர்வால் சீவர்களின் நிலைகளையும் நினைவு செயல்களையும் உணருந்தன்மையையும் விளக்குவனவாம். (கரு)

16\. ஆமோ வலவோ வறியேன் சிறியேனுன்
ருமோ தரனுஞ் சதுமுகனுந் - தாமே
யடியா தரிக்கு மரசேநின் னேவ
லடியார்குற் றேவலடி யன்.

(அ-ரை) தாமோதரன் - விஷ்ணு. சதுமுகன்-பிரமன். அடி ஆதரிக்கும்-உன் திருவடியை விரும்புகின்ற.

(வி-ரை) "நின்னேவ லடியார்குற் றேவலடியன், ஆமோ வலவோ வறியேன் சிறியேன்" என்றதனால் சிவபிரான் அடியார்க்கு அடியராதல் வேண்டும் என வறிவுறுத்துமுண்மையும் "அன்பரொடுமரீஇ, மாலறநேய மலிந்தவர் வேடமும்.........அரனெனத்தொழுமே" என்னும் சிவஞானபோதத்துப் பன்னிரண்டாஞ் சூத்திரப்பொருளை யுள்ளத்திலிருத்தும் ஆவசிகமும் வெளியிட்டவாருமம். (கசு)

17\. உன்ருலெனக்காவ துண்டதுநீ கண்டதுவே
யென்ரு லுனக்காவ தேதுளது - சொன்ருல்யான்
றந்தார்வத் தோடுந்த லைமேற்கொண் டுய்கிற்பே
னெந்தாயிங் கொன்றுமறி யேன்.

(அ-ரை) ஆர்வத்தோடும் - அன்புடனே. உய்கிற்பேன் - பிழைப்பேன்.

(வி-ரை) "உன்ருலெனக்காவதுண்டு" என்றதனுற் சிவபெருமான் அருள்வண்மையும்; "என்ருலுனக்காவதேது" என்றதனுல் சீவர்கள் உபகரிக்கப்படுமுறைமையும் உய்விக்க வுய்யு முறைமையும் உணர்த்தியவாருமம். (கஎ)

18\. சென்றுரைப்பார் சொல்லிற் சிறியான் பயமறியா
னென்றுரைப்பா ராங்கதுமற் றென்னளவே - மன்றகத்தோ
யஞ்சேல் விழியாரை யந்தகனென் பார்மொழியை
யஞ்சேன் சிறிது மறிந்து.

(அ-ரை) மன்றகத்தோய் - பொற்சபையாகிய இடத்தை யுடையவனே. அம் சேல் விழியாரை - அழகிய சேல்மீன்போலும் கண்களையுடைய மாதரை, அந்தகன் - யமன்

(வி-ரை) "அஞ்சேல் விழியாரை யந்தகன் என்பார் மொழியை யஞ்சேன் சிறிதும்" என்றதனுல், மாதரை யுயிருண்ணும் யமன் என்றே பயப்படுதல்வேண்டுமென்று நெஞ்சுக்கறிவுறுத்தினர். 'மாதரை மாய்வருங் கூற்றமென்றுன்னக், காதலதாகிய காமங்கழிந்திடும்" எனத் திருமூலநாயனுரும் அறிவுறுத்தியவாறுணர்க. (கஅ)

19\. எந்தாய்நின் னன்பர்தமக் கின்னமுத மிட்டேத்திச்
சிந்தா நலமொன்றுஞ் செய்தறியே - னந்தாச்

சுவருண்ட மண்போலுஞ் சோறுண்டேன் மண்ணி
லெவருண் டெனைப்போ லியம்பு.

(அ-ரை) எந்தாய் - என் தந்தையே. இன் அமுதம் - இனிதாகிய அன்னம். சிந்தாநலம்- கெடாத நன்மை. நந்தா - அழியாத.

(வி-ரை) "எவருண்டெனைப்போலியம்பு" என்றதனால் அடியார்க்கு இன்னமுதூட்டி யுபசரிக்குஞ் சிவபுண்ணியஞ் செய்யாமைக்கிரங்கிய இரக்கமும், தாழ்வெனுந் தன்மையும் விளக்கி, அத்திருப்பணிக்காளாக்கும் வண்ணம் சிவபிரான் அருளை வேண்டலும் விளக்கினார். இவ்வுண்மை யுணராத சிலர் வள்ளலார் அகங்கரித்தாரென்ப. (கசு)

20. உப்பிருந்த வோடோ வொதியோ வுலாப்பிணமோ
வெப்பிருந்த காடோ வினைச்சுமையோ - செப்பறியேன்
கண்ணப்ப ருக்குக் கனியனையாய் நிற்பணியா
துண்ணப் பருக்கு முடம்பு.

(அ-ரை) உலாப்பிணம் - நடைப்பிணம். வெப்பு - வெப்பம். கண்ணப்பர் - கண்ணப்ப நாயனார்; (கண்ணைத்தோண்டிச் சிவபெருமான் கண்ணுக்குப் பிரதியாக அப்பினவர்). நிற்பணியாது - உன்னை வணங்காமல்.

(வி-ரை) "நிற்பணியாதுண்ணப் பருக்கு முடம்பு" என்றதனால் இறைவனுகிய சிவபிரான் திருவடியை வணங்காமலும், தியானிக்காமலும், பூசிக்காமலும், பசிதணிய உண்டியருந்துவது தவறுடைத்தெனவும், அஃது முதல்வன் உபகாரத்தை மறத்தலுமாமென்றும் அறிவுறுத்தி, அங்ஙனம் மறந்து, உண்பார் பருத்த உடம்பை ஓடோ? ஒதியோ? பிணமோ? காடோ? வினைச்சுமையோ? என்று இகழ்ந்து "நன்றி மறப்பது நன்றன்று"; "உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னுங் கட்டுரைகளை விளக்கியவாறும். (உo)

21. ஏலார் மனைதொறும்போ யேற்றெலும்புந் தேயநெடுங்
காலாய்த் திரிந்துழலுங் கால்கண்டாய் - மாலாய்த்
தொண்டே வலஞ்செய்கழற் றோன்றலே நின்கோயிற்
கண்டே வலஞ்செய்யாக் கால்.

(அ-ரை) ஏலார் - தகாதவர். மாலாதி - விஷ்ணுமுதலானவர். தொண்டு ஏவல் அம்செய்- பணிவிடை யேவல்களை அழகாகச் செய்கிற, கழல் - பாதங்கள். தோன்றலே - பெரியோனே, வலம் செய்யா கால் - பிரதக்ஷிணம் வராத கால்.

(வி-ரை) 'நின் கோயிற் கண்டேவலஞ் செய்யாக்கால்" என்றது "கோலக் கோபுரக் கோகரணஞ்சூழாக்கால்களாற் பயன் என்" என்னும் அறிஞர் மொழியைத் தழுவிச் சிவாலயத்தை வலஞ்செய்யாக்கால்களை யிகழ்ந்து நின்றும், வலஞ் செய்வதனாற் பயனுண்டென்றும், அப்பயனாவது—" சத்தியார் கோயிலிடம் வலஞ் சாதித்தால், மத்தியானத்தில் வாக்கியங் கேட்கலாம், தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படுஞ், சத்தியஞ் சொன்னேஞ் சதாநந்தியாணையே" என்பதாமென்றும் உண்மையை விளக்கியவாறும். (உக)

22. ஏசும் பிறர்மனையி லேங்கவவ ரீயுமரைக்
காசும் பெறவிரிக்குங் கைகண்டாய் - மாசுந்த
விண்டுஞ் சிரங்குனிக்கும் வித்தகனே நின்றலத்தைக்
கண்டுஞ் சிரங்குவியாக் கை.

(அ-ரை) மாசு உந்த - குற்றமொழிய. விண்டும் - விஷ்ணுவும். சிரம் குனிக்கும் - தலைவளைத்து வணங்குகிற, சிரம் குவியா கை - தலைமேற்குவித்து அஞ்சலி பண்ணாத கை.

(வி-ரை) சிரங்குவியாக்கை = இஃது ஏகாங்க நமஸ்காரம். இது செய்யார்கையே, ஏலார் மனைதொறும்போய் ஏங்கிநிற்க அவர்கொடுக்கும் அரைக்காசும்பெற விரிக்குங்கையென விகழ்ந்தமையால், ஏற்க வழங்கினோர் திருக்கையே சிவபெருமானை யஞ்சலிசெய்த கையென அதன் பெருமையும், அஞ்சலித்தலினும் பயனும் விளங்கியவாறு காண்க. (உஉ)

23. வெங்கோடை யாதபத்தின் வீழ்நீர் வறந்துலர்ந்து
மங்கோடை யாதல் வழக்கன்றே - வெங்கோநின்
சீர்சிந்தாச் சேவடியின் சீர்கேட்டு மானந்த
நீர்சிந்தா வன்கண் ணிலை.

(அ-ரை) ஆதபம் - வெயில். (சூரிய கிரணம்). வறந்து - வறண்டு. எங்கோ - எம்மிறைவனே. சீர்சிந்தா - சிறப்புக் குறையாத. மங்கு ஓடை - நீர் வற்றின வோடை.

(வி-ரை) "நீர் சிந்தா வன்கண்ணிலை மங்கோடையாதல்" என இகழ்ந்தமையானே "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழார்வலர், புன்கணீர் பூசறரும்" என்பதையும், அன்பில்லாவழி ஆனந்தக்கண்ணீர் சிந்துதலின்றென்பதையுங் குறித்து விளக்கி அன்பின்மையை இகழ்ந்தாராயினர். (௨௩)

24. வாயன்றேல் வெம்மலஞ்செல் வாயன்றேன் மாநரக
வாயன்றேல் வல்வெறிநாய் வாயென்பாந் - தாயென்றே
ஆழ்த்தாதா வேத்து முடையாய் சிவவென்றே
வாழ்த்தாதார் நாற்றப்பாழ் வாய்.

(அ-ரை) வாய் அன்றேல்-வாய் அல்லவாயின், வெம்மலம் செல்வாய் அன்றேல்-கொடிய மலம் ஒழுகுகின்ற வாயல்லவாயின், மா நரகவாய் அன்றேல் - பெரிய நரகவா யல்லவாயின். வல் வெறி நாய் வாய் என்பாம் - வலிய வெறிகொண்ட நாயின்வாய் என்று சொல்லுவோம். ஊழ் - முறைப்படி. தாதா - பிரமன், ஏத்தும் - துதிக்கின்ற.

(வி-ரை) "சிவவென்றே வாழ்த்தாதார் நாற்றப்பாழ்வாய்" சிவநாமோச்சாரணஞ் செய்யாதவர்வாய் மலவாய், நரகவாய், வெறிநாய் வாய் என்றிகழ்ந்தமையானே அவர் தீவினை யாளரென இகழ்ந்து, அவர் தீவினை நீங்கவேண்டுமேல் சிவநாம சங்கீர்த்தனஞ் செய்தல் வேண்டுமென அறிவுறுத்தியவாறும்; திருமூலநாயனாரும்—"சிவ சிவ வென்கிலர் தீவினையாளர், சிவ சிவ வென்றிடத் தீவினை மாளும், சிவ சிவ வென்பவர் தேவருமாவர், சிவ சிவ வென்றிடச் சிவகதி சேர்வரே." எனப் பணித்தருளியவாறுணர்க. (௨௪)

25. வீட்டா ரிறைநீ விடைமேல் வரும்பவனி
காட்டா தடைத்த கதவன்றே - நாட்டாதி
நல்லத் துளையா நதிச்சடையா யென்னுஞ்சீர்
செல்லத் துளையாச் செவி.

(அ-ரை) வீட்டு ஆர் இறை நீ - முத்தியுலகத்திலிருக்கிற இறைவனாகிய நீ, விடை - இடப வாகனம். நாட்டு ஆதி - நிலைபெற்ற முதற்பொருள். நல்லத்து உளையாம் - திருநல்லத்து இருப்பவனாகிய, நதிச்சடையாய் - கங்கைச் சடையனே. சொல்ல - புக. துளையா - தொளைக்கப்படாத.

(வி-ரை) "சீர்செல்லத்துளையாச்செவி" யென்றதனானே இறைவன் புகழைக்கேட்டு மகிழாதசெவி "கேட்பினுங் கேளாத்தகையவே" என்றிகழ்ந்து, சிவசரித்திரங்களையும், சிவாகமங்களையும் ஆன்றோர்வாய்க்கேட்டுணர்தற்கே செவிகள் படைக்கப்பட்டனவென்று அறிவுறுத்தியது காண்க. (௨௫)

26. புல்லங் கணநீர்ப் புழையென்கோ புற்றென்கோ
சொல்லும் பசுமட் டுளையென்கோ - சொல்லுஞ்சீர்
வீயாத பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தி னல்லிசைதான்
றோயாத நாசித் துளை.

(அ-ரை) புல் அங்கணம் நீர்புழை-இழிந்தமுற்றத்தின் நீர்த்தொளை. அதாவது சலதாரை. பசுமண்துளை - பச்சைமண்ணிற்செய்த துவாரம். வீயாத - அழியாத. பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தின் - மெல்லின எழுத்தால் ஆக்கப்பட்ட பிஞ்ஞகன்என்னும் சிவபிரானது திருநாமத்தின், தோயாத - கந்திக்காத. நாசித்துளை - நாசியாகிய துவாரம்.

(வி-ரை) மெல்லினத்தி னல்லிசைதான் தோயாத நாசித்துளை - ஞ ண ந ம ன வென்னும் மெல்லினவெழுத்துக்களின் நல்லிசைபொருந்தாத நாசித்துளையென்பது. பிஞ்ஞகன் - என்னும் சிவநாமத்தில், இடை நின்ற ஞகாரத்தினிசை பொருந்தாத நாசித்துளை. அங்கணநீர்ப்புழை - புற்று. மட்டுளைநிகரென இகழ்ந்தனர். (௨௬)

27. தோற்றமிலாக் கண்ணுஞ் சுவையுணரா நாவுநிகழ்
நாற்ற மறியாத நாசியுமோர் - மாற்றமுந்தான்
கேளாச் செவியுங்கோள் கீழ்முகமே நீற்றணிதான்
மூளாது பாழ்த்த முகம்.

(அ-ரை) மாற்றம் - புகழ்ச்சொல். நீற்றணி - விபூதியின் அழகு. மூளாது - மிகுந்திராமல். பாழ்த்த - பாழான. கீழ்முகமே - அதோ முகமே. (குதம்).

(வி-ரை) பாழ்த்த முகம் - வெண்ணீறணியாத சூனியமுகம். அதுகீழ்முகமே - அதாவது அதோ முகமாம். யானை, குதிரை, எருது முதலிய விலங்குகளின் கீழ்நோக்கிய முகம்போல்வது. "நீறில்லா நெற்றி பாழ்"என ஔவையார் கூறியதுங்காண்க. காட்சியற்ற கண்ணும்,சுவையற்ற நாவும், கந்தமுகவா நாசியும், சொற்கேளாச் செவியும் படைத்த கீழ்முகமே எனத்தேற்றேகார மீற்றிலிட்டுக்கூறினமையால், திருநீற்றணிபெறாத முகம் ஊர்த்துவ முகமன்றென இகழ்ந்தமை யுணர்க. (௨௭)

28. மான்றா முலக வழக்கின் படிமதித்து
மூன்றா வகிர்ந்தே முடைநாற - வூன்றா
மலக்கூடை யேற்றுகினு மாணாதே தென்பாற்
றலக்கூடற் றாழாத் தலை.

(அ-ரை) மான்று ஆம் - மயங்கியிருக்கின்ற. மூன்றா வகிர்ந்து-மூன்றாகப்பிளந்து. முடைநாற - முடைநாற்றம்வீச. ஊன்றா - நிலைபெற்று. மாணாதே - மாட்சிமைப்படாதே.

(வி-ரை) தென்பாற்றலக்கூடல் - தென்னாட்டு விளங்கும், நான்மாடக்கூடல், திருவாலவாய் முதலிய பேர்கொண்ட மதுராபுரியென்னும் சிவக்ஷேத்திரம். தாழாத்தலை - வணங்காத்தலை. (௨௮)

29. கல்லென்கோ நீரடைக்குங் கல்லென்கோ கான்கொள்கருங்
கல்லென்கோ காழ்வயிரக் கல்லென்கோ - சொல்லென்கோ
வின்றா லெனிலோ வெடுத்தாளெம் மீன்றாணேர்
நின்றா ணினையாத நெஞ்சு.

(அ-ரை) கான்கொள் - காட்டிலுள்ள. காழ் - உறுதியாகிய. சொல்-சொல்வாயாக. என்கோ - என் இறைவனே. இன்றால் எனிலோ - இல்லையென்றாலோ. எடுத்து ஆள் - கைதூக்கி ஆளக்கடவன். எம் ஈன்றாள்நேர் - எம்மைப்பெற்ற தாய்க்கு நிகரான. நின்தாள் - உன்திருவடியை.

(வி-ரை) எடுத்து ஆள் எம் ஈன்றாள் நேர் நின்தாள் - எம்மை மும்மல கூபத்திலமிழாத வண்ணம் தூக்கியெடுத்து ஆட்படுத்தவேண்டுமெனப் பிரார்த்தித்த அளவிலே, தாய்போற் கருணைகூர்ந்து,தூக்கி முத்திக்கரையில் விடுத்தருளவல்ல தேவர் குஞ்சிதத் திருவடி. இத்தகைய திருவடியை நினைந்து உருகாத திண்மையுடைய நெஞ்சை "வயிரக்கல்லென்கோ" என விகழ்ந்தனர். (௨௯)

30. சொல்லுகின்ற வுள்ளுயிரைச் சோர்வுற் றிடக்குளிர்ந்து
கொல்லுகின்ற நஞ்சிற் கொடிதன்றோ - வொல்லுமன்றத்
தெம்மானின் றாட்கமல மெண்ணாது பாழ்வயிற்றிற்
சும்மா வடைக்கின்ற சோறு.

(அ-ரை) ஒல்லும்-தகுதியான. மன்றத்து-பொன்னம்பலத்திலுள்ள எம்மான்-எம்பெருமானே. நஞ்சின் கொடிதன்றோ-விஷத்தைப்பார்க்கிலும் கொடியதல்லவோ.

(வி-ரை) தாட்கமலமெண்ணுது - திருவடிக்கமலத்தை இதயத்திற் சிந்திக்காமல். சும்மா வடைக்கின்ற சோறு - விலாப்புடைக்க அளவுக்கதிகமாக உண்ணுகின்ற சோறு. இது விடத்தினுங்கொடியதாய் உடலுக்கு நன்மை செய்யாது தீமையையே செய்தலின் "நஞ்சிற்கொடிதன்றே" என்றார். திருவடித்தியானஞ்செய்வோர் நித்திரை விலக்கிச் சமாதிநிலை கைகூட முயலாநிற்பர். அதற்காக வுணவைச் சுருக்கி யுண்டு பிண்டஞ் சுருங்க நாடுவார். "பிண்டஞ் சுருங்கிற் பிராணனிலைபெறும், உண்டி சுருங்கினுபாயம் பலவுள" என்றார் திருமூலர். (ஙo)

31. சோர்படைத்துச் சோறென்றாற் றொண்டைவிக்கிக் கொண்டுநெடு
மார்படைத்துச் சாவுகினு மாநன்றே - சீர்படைக்க
வெண்ணுவா ரெண்ணு மிறைவாநின் றாளேத்தா
துண்ணுவா ருண்ணு மிடத்து.

(அ-ரை) சோர்பு - தளர்வு. சீர் படைக்க எண்ணுவார் - சிறப்படைய நினைப்பவர்; (ஞானிகள்.)

(வி-ரை) சீர் என்பது அருட்செல்வம். தாளேத்தா துண்ணுவார் - திருவடியை வழிபட மறந்து உண்பவர். "உண்ணுமிடத்து மார்படைத்துச் சாவுகினு மா நன்று" என்றது, அவ ரால் உலகினர் ஆத்திகராவதின்றி நாத்திகராகி நலிகுவர் என்பதும், அவர் பூமிக்குப் பாரம் ஆதலும் நோக்கி யென்க. (ஙக)

32. ஓகோ கொடிதே யுறும்புலைய ரில்லினிடத்
தேகோ வதைத்துண் செயலன்றே - வாகோர்தம்
வாழ்மனையிற் செல்லாது வள்ளனினை யேத்தாதார்
பாழ்மனையிற் சென்றுண் பது.

(அ-ரை) உறும் புலையர் - மிகுந்த நீசர். (சக்கிலியர், பறையர்.) கோ வதைத்து - பசுக் கொலைசெய்து. வாகோர் - நாகரிகர்.

(வி-ரை) வாகோர் என்பது மல பரிபாகத்தாற் சித்தந்தெளிந்த பெரியோர். வேண்டுவ வேண்டியாங்கு அன்பர்க்கு வழங்குவான் இறைவனாதலின் வள்ளல் என்றார். தன்னை நினையாக் காலத்தும் இவ்வுயிர்க்கு இது வேண்டும்பொருள் என வுணர்ந்தீயு முதல்வனைத்துதியார் வாழ்கின்ற பாழ்மனை புலையர் இல்லத்தை நிகருமென்றும், அவர்மனையிலுண்பது புலையரில்லில் கோவதைசெய் துண்பதொக்குமென்றும் கூறியது நன்றிகொன்றவர் மகாபாதகரென்பதும், அவர் இல்லிலுண்பது நரகிற்காளாக்கு மென்பது நோக்கி யென்க. (ஙஉ)

33. வீயுமிடு காட்டகத்துள் வேம்பிணத்தின் வெந்தசையைப்
பேயுடனுண் ணவுண்ணும் பேறன்றே - தோயுமய
னீங்கவருள் செய்வோய்வெண் ணீறணியார் தீமனையி
லாங்கவரோ டுண்ணு மது.

(அ-ரை) வீயும் - இறக்கின்ற. இடுகாட்டகத்துள் - சுடுகாட்டில். வேம்பிணம் - வேகும் பிணம். வெம்தசை - சுடுசதை. பேறு - பயன்.

(வி-ரை) வெண்ணீறணியார் தீமனையில் அவரோடுண்பது பேயுடனிருந் துண்ணுவ தொக்குமென்றதும், உண்ணும் உணவு வேகின்ற பிணத்தின் வெந்தசையை யொக்குமென்றதும் என்னையோவெனின், அங்ஙனம் உண்பார் பெருநெறித் தேவினைப் பேணுது சிறுநெறித் தேவரைப் பேணியொழுக நேரிடுமென்பதையும், சித்தசுத்திக் கேதுவாகாத பாப உணவாகு மென்பதையு நோக்கி யென்க. (ஙங)

34. கண்குழைந்து வாடுங் கடுநரகின் பேருரைக்கி
லொண் குழந்தை யேனுமுலை யுண்ணுதா - றண்குழைய
பூண்டாதார் கொன்றைப் புரிசடையோய் நின்புகழை
வேண்டாதார் வீழ்ந்து விரைந்து.

(அ-ரை) தண்குழைய - குளிர்ந்த குழையையுடையவனே. பூண் தாது ஆர் கொன்றை- பூணுகின்ற மகரந்தம் பொருந்திய கொன்றைமலர் மாலையை யணிந்த. புரிசடையோய் - கட்டப்பட்ட சடையை யுடையவனே.

(வி-ரை) நின்புகழை வேண்டாதார் - உனது புகழை விரும்பி வழுத்தாதவர். வீழ்ந்து வாட்டத்தை யடையுங் கடுநரகின் பேர்சொல்லக் கேட்டால் சிறிய குழந்தையேனு முலைப்பா லுண்ணுதென்றது, நரகின் கொடிய வேதனைகளையும், அறிவுடையோர் அவற்றைக் கேட்டு மனதிலச்சமுடையோராய்ச் சிவன்ருள் வழிபடவேண்டுமென்பதையு நோக்கி யுரைத்ததென்க.

35. கண்ணுதலே நின்ருள் கருதாரை நேசிக்க
வெண்ணுதலே செய்யேன்மற் றெண்ணுவனேன் - மண்ணுலகி
லாமிடத்து நின்னடியார்க் காசையுரைத் தில்லையென்பார்
போமிடத்திற் போவேன் புலர்ந்து.

(அ-ரை) கண்ணுதலே - நெற்றிக்கண்ணையுடையவனே. கருதாரை - நினைக்காதவரை. நின் அடியார்க்கு ஆசையுரைத்து இல்லை என்பார் போம் இடம் என்றது நரகமாகிய இடம்.

(வி-ரை) ஆம் இடத்து - தங்கட்கொரு கருமபலன் கைகூடும் இடத்தில். அடியார்க்கு ஆசை யுரைத்தில்லை யென்பார் - அடியார் விரும்பியதோர் பொருளை யாம் கொடுப்போ மென ஆசைவார்த்தைகளை யுரைத்து பிறகு இல்லையென வஞ்சிப்பவர்; போமிடத்து - செல்லு மிடமாகிய நரகத்துள். (௩௫)

36. அங்கணனே நின்னடிக்கோ ரன்பிலரைச் சார்ந்தோர்தம்
வங்கணமே வைப்பதினுன் வைத்தேனே - லங்கணத்தி
னீர்போ லெனது நிலைகெடுக நிற்பழிசொற்
ருர்போ லழிக தளர்ந்து.

(அ-ரை) அங்கணனே - அழகிய கிருபைக்கண்ணனே. வங்கணம் - சினேகம். வைத்தேனேல் - வைப்பேனுயின். அங்கணத்தின் நீர்போல்-சலதாரை நீர்போல. நிற்பழி சொற்ருர் போல் - உன்னைப்பழி சொன்னவர்போல.

(வி-ரை) அங்கணன் - அடியாரை யருளாநோக்கும் அழகிய கண்ணுடையவனுகிய சிவன். அன்பிலரை - சிவநேசமில்லாதவரை; சார்ந்தோர்தம் வங்கணம் - அவர்க்கு உறவாக அல்லது மித்திர ராகச் சேர்ந்தவர் நட்பு. வைப்பதில்-பூமியின்கண், அல்லது வைப்புத்திரவியம் போல. நான் வைத்தேனேல் என் நிலை அங்கணத்தினீர்போற் கெடுக வென்றதும், நிற்பழி சொற்ருர்போலழிக தளர்ந்தென்றதும்,நல்லோர் அருவருக்கத்தக்க அசுத்த நடையுடையனுய்ச் சிவநிந்தை புரிவார் அழிவுறுதல்போல உய்வின்றிக் கெடுவேனெனக்கூறிச் சாதுக்கள் சங்கத் திலே தன்னை யெப்போதும் வைத்து வாழ்வித்தருளவேண்டுமெனச் சிவபிரான் சந்நிதியின் முறையிட்டு விண்ணப்பித்ததென்க. (௩௬)

37. பூவைவிட்டுப் புல்லெடுப்பார் போலுன் றிருப்பாதத்
தேவைவிட்டு வெம்பிறவித் தேவர்களைக் - கோவையிட்டுக்
கூவுவார் மற்றவரைக் கூடியிடேன் கூடுவனே
லோவுவா ராவ னுனை.

(அ-ரை) திருப்பாதத்து ஏவைவிட்டு - திருவடித்தொண்டைவிட்டு. ஓவுவார் ஆவல் உனை-உன்னை நீங்கினவர்கள்போலாவேன்.

(வி-ரை) பூவை விட்டு - மலர்களைக்கைக்கொள்ளாது எறிந்து. புல்லெடுப்பார் - திரணத்தைக் கைக்கொள்வோர். திருப்பாதத்தேவைவிட்டு - திருவடியைச்சாரும் இச்சையைநீக்கி. வெம் பிறவித் தேவர்களை-வெவ்விய சன்மங்களையுடைய சிறுதேவர்களை. கோவையிட்டு - பூமாலை பாமாலைகள் சாத்தி; கூவுவார் - தோத்திரிப்பார். மற்றவரை-அத்தன்மையுடையவரை. கூடியிடேன் - கூடி நேசியேன். கூடுவனேல் - நேசிப்பேனுயின். உன்னை யோவுவா ராவல் - உன்னைக் கைவிட்டவனுவேன். புறச்சமயத்தேவர் வழி பாட்டை நீக்கிப் பெருந்தேவர் வழி

பாட்டை யுணர்த்தினர் இக்கவியாலென்க. ஆவல் என்பதனை எதிர்காலத்தன்மை யொருமை வினைமுற்றாகக் கொள்க. (ஙௗ)

38. யாதோ கனற்கண் யமதூதர் காய்ச்சுகருந்
தாதோ தழற்பிழம்போ தானறியேன் - மீதோங்கு
நாட்டாதார் கொன்றை நதிச்சடையோ யஞ்செழுத்தை
நாட்டாதார் வாய்க்கு நலம்.

(அ-ரை) கனல் கண் - நெருப்புக்கண். காய்ச்சு கருந் தாது - உலையிலிட்டுக் காய்ச்சப் பட்ட இரும்பு. தழற் பிழம்பு-நெருப்புத்திரள். நாள் தாது ஆர்-புதிய மகரந்தம் பொருந்திய. நாட்டாதர் - பதியாதவருடைய.

(வி-ரை) அஞ்செழுத்தை நாத்தழும்பேறப்பயிலாதார் வாய்க்கு வாய்க்கும் நன்மை யெங்கணும் கிடையாது; கிடைப்பது யமதூதர் நரகத்திலே காய்ச்சி யுருக்கும் இரும்போ அல்லது தழற்பிழம்போ என்றதனால், மறவாது சபம் புரிவார்க்கு உள்ளூறும் இன்னருளமுத நுகர்தல் கிடைப்பதாமெனெ உண்மை வெளியிட்டார் என்க. நாவானது சொல்லுந்தோறும் இன்னமுது ஊறிப் பெருகச்சுவைத்துப் பருகிய காரணத்தால் "நான்மறப்பினுஞ் சொல்லு நா நமச்சிவாயவே" என்றார் வன்றொண்டர் பெருமானார். (ங அ)

39. என்னெஞ்சோர் கோயி லெனக்கொண்டோய் நின்னினையார்
தன்னெஞ்சோ கல்லாமச் சாம்பிணத்தார் - வன்னெஞ்சிற்
சார்ந்தவர்க்கு மற்றவரைத் தாநோக்கி வார்த்தைசொல
நேர்ந்தவர்க்குங் கல்லாகு நெஞ்சு.

(அ-ரை) நின் நினையார் - உன்னை நினைக்காதவர்.

(வி-ரை) என்னுள்ளங்கோயிலாகக்கொண்டவனே! உன்னை நினையார் மனங்கல்லாகும்; அவரது வன்னெஞ்சினினைக்கப்பட்டார்க்கும், அங்ஙனம் நினைக்கப்பட்டாரைப் பார்த்து வார்த்தையாடவுடன்பட்டார்க்கும் மனங்கல்லாகும் என்றதென்னெனின் சிவநேசமில்லார் மனமும், அவரைச்சேர்ந்தார் முதலியோர் மனமும், பாவமேலீட்டால் அன்பின் வடிவா யுருகாத்தன்மை படைத்து நிற்றலைக்கருதியதென்க. நிலத்தினியல்பினால் நன்னீரும் தன்மைகெடுதல்போல, அசாதுக்களாயினோர் சங்கத்தினால் தாமும் அவர் தன்மையுடையவராவார் என்பது இதனால் உணர்த்தப்பட்டது. (ஙக)

40. வெள்ளமுதுந் தேனும் வியன்கரும்பு முக்கனியி
னுள்ளமுதுந் தெள்ளமுது மொவ்வாதாற் - கள்ளமிலா
நின்னன்பர் தம்புகழி னீண்மதுரந் தன்னையினி
யென்னென்ப தையா வியம்பு.

(அ-ரை) வெள் அமுது - வெண்ணிறத்தையுடைய அமிர்தம் (பால்). வியன் - பெருமையுள்ள. முக்கனியின் உள்ளமுது - முக்கனியினுள்ளே யிருக்கின்ற சாறு. முக்கனிகளாவன - வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனி என்பன. தெள்ளமுது-தெளிந்த தேவருண்ணும் அமிர்தம்.

(வி-ரை) களங்க நீங்கிச் சிவகதி நாடினோர் சிவனடியார் ஆகலின், கள்ளமிலா நின்னன்பர் என்றார். சிவ வாக்கியரும், "கள்ளமுள்ள மேயிருக்கக் கடந்தஞான மோதுவீர், கள்ளமுள் ளறுத்தபோது கதியிதன்றிக் காண்கிலீர்" எனச்சிவ வேடத்தார்க்கு அறிவுறுத்தியது காண்க. (சo)

41. பண்ணுலுன் சீரினைச்சம் பந்தர்சொல வெள்ளெலும்பு
பெண்ணான தென்பார் பெரிதன்றே - யண்ணலச்
சைவவடி வானான சம்பந்தர் சீருரைக்கிற்
றெய்வவடி வாஞ்சாம்பர் சேர்ந்து.

(அ-ரை) பண்ணால்-பண்களோடு காட்டின பாடலால். உன் சீரினை-உன் புகழை. வெள்ளெலும்பு பெண்ணானது-வெள்ளிய எலும்பு பெண்ணுருவானது. (திருமயிலையில் அங்கம் பூம்பாவையானது). சாம்பர் - சாம்பல்.

(வி-ரை) பண்ணால் - பண்ணிறைந்த மதுரத்தமிழ்ப் பாமாலையால். வெள்ளெலும்பு பெண்ணானதோர் வியப்பன்று; திருஞான சம்பந்தர் திருப்புகழையோதினால் சாம்பரும் தெய்வ வடிவாமென்றது அடியார் பெருமை அளவிட முடியாதென்றுணர்த்தியதென்க. (௪௧)

42. எங்கோவே யான்புகலி யெம்பெருமான் றன்மணத்தி
லங்கோர் பொருட்சுமையா ளானேனே - லிங்கேநின்
றாள்வருந்த வேண்டேன் றடைபட்டே னாதலினிந்
நாள்வருந்த வேண்டுகின்றே னான்.

(அ-ரை) புகலி எம்பெருமான் - சீகாழியி லவதரித்த திருஞானசம்பந்தர். பொருட்சுமை ஆளானேனேல் - பொருளைச்சுமக்கின்ற ஆளாயிருந்திருப்பேனானால் தாள் - திருவடியை. வருந்த வேண்டேன் - பிரார்த்திக்க விரும்பேன்.

(வி-ரை) பொருட்சுமையாள் - பண்டச்சுமையைச் சுமக்குங் கூலியாள். திருஞான சம்பந்தர் திருமணத்தில் யான் கூலியாளாகவேனும் தொண்டுசெய்யப் பிறந்திருப்பேனாகில், இன்று உன் திருவடியை யடையும்படி வருந்தவேண்டுவதில்லை என்றதென்னெனில், அத்திரு மணநாளில் அணைந்தோர் முத்தியைப்பெற வழங்கிய பெருமையை யுணர்த்தற்கென்க. (௪௨)

43. பூவுக் கரையரும்வான் புங்கவரும் போற்றுதிரு
நாவுக் கரையரெனு நன்னுமை - மேவுற்ற
தொண்டர்க்கு நீகட்டுச் சோறெடுத்தா யென்றறிந்தோ
தொண்டர்க்குத் தொண்டனென்பார் சொல்.

(அ-ரை) வான் புங்கவர் - விண்ணுலகத்திலுள்ள தேவர்கள்.

(வி-ரை) திருப்பைஞ்ஞீலி என்னும் க்ஷேத்திரத்திற்குப் போகும் வழியில் பரமசிவம் திருநாவுக்கரசருக்குப் பொதிசோறு கொண்டுவந்துகொடுத்தாராதலால் "தொண்டர்க்கு நீ கட்டுச் சோறெடுத்தாய்" என்றார். பூவுக்கரையர் - பங்கயாதனத்தில் வீற்றிருக்கும் பிரமதேவர் அல்லது மண்ணுலகிற்கரசர். (௪௩)

44. எம்பரவை யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனார்
தம்பரவை வீட்டுத் தலைக்கடையாய் - வம்பணையாய்
வாயிற் படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே
மாயப்பெயர் நீண்ட மால்.

(அ-ரை) எம்பர - எமது பரனே. ஐயோ-அந்தோ. மண் இடந்து-பூமியைத் தோண்டி. வம்பு அணை - வாசனைபொருந்தியஅணை. (அணை-சயநம்.)

(வி-ரை) மாயப் பெயர் நீண்ட மால் - மாயனென்னும் பெயருடைய நெடுமால். "வம்பணையாய் வாயிற்படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே, ஐயோ! மண்ணிடந்தலைந்தான்" என்ப திரசுகத்தைக் காட்டி, அங்ஙனம் நெடுமால வடிவெடுத்துச் சுந்திரமூர்த்தி நாயனார்க்குரியை பாகிய பரவை வீட்டுத் தலைக்கடையி லமர்ந்திருப்பனேல், மண்ணகழ்ந்து பாதலம்சென்று வருந்தாமலே பரவைநாயகியா ரூடல் தீர்க்கத் தூது நடந்து, வாயிற்படிகடந்த எம்மான் திருவடியைத் தரிசித்திருக்கக்கூடும் என விளக்கிப் பரமேச்சுரன் 'அடியார்க் கெளியன் அமரர்க் கரியன்' என்னும் உண்மையை யுணர்த்துகின்றது. 'எம்பர' எ-து அண்மை விளி. (௪௪)

45. நண்ணித் தலையா னடக்கின்றே மென்பதெங்கண்
மண்ணிற் பழைய வழக்கங்காண் - பண்ணிற்சொ
லம்மையார் வாமத்தோ யாயினைமுன் காரைக்கா
லம்மையார் போனடந்தா ரார்.

(அ-ரை) பண்ணிற்சொல் - பண்போலச் சொல்லையுடைய. அம்மையார் - உமாதேவியார். வாமத்தோய் - இடப்பாகத்தை யுடையவனே.

(வி-ரை) தலையா னடக்கின்றே மென்பது சொல்வழக்கு. உலகிற் சொல்வழக்கு அங்ஙனமாகவே நில்லாது, அது செய்தற்கு அரியதொன்றாயினும் அதனைச் செய்துகாட்டிச் "செயற்கரிய செய்வார் பெரியர்" என்னுங்கட்டுரைக்கோர் இலக்கியமாக நின்றார் புனிதவதியாராகலின் "காரைக்காலம்மையார் போனடந்தா ரார்" எனப்புகழ்ந் துரைத்தனர். (சரு)

46. வேத முடிவோ விளங்கா கமமுடிவோ
நாத முடிவோ நவில்கண்டாய் - வாதமுறு
மாசகர்க்கு ணில்லா மணிச்சுடரே மாணிக்க
வாசகர்க்கு நீயுரைத்த வாறு.

(அ-ரை) நவில் - சொல்லுவாய். வாதம் உறும் - தர்க்க வாதத்தைச் செய்கிற, மாசு அகர்க்குள் - குற்றமுள்ள மனத்தை யுடையவர்க்குள்ளே.

(வி-ரை) மாணிக்கவாசகர்க்கு - மாணிக்கமணிபோற் சிறந்த மதுரமொழியாணியன்ற திருவாசகச்சுருதி திருவாய்மலர்ந்தருளிய வாதவூரடிகட்கு. நீ யுரைத்தவாறு-நீ அனுக்கிரகித்த ஞானோபதேசம். (சசு)

47. ஆர்கொண்டார் சேய்க்கறியிட் டாரே சிறுத்தொண்டப்
பேர்கொண்டா ராயிடிலெம் பெம்மானே - யோர்தொண்டே
நாய்க்குங் கடைப்பட்ட நாங்களென்பே மெங்கண்முடை
வாய்க்கிங் கிஃதோர் வழக்கு.

(அ-ரை) சேய்க்கறி-பிள்ளைக்கறி. முடைவாய் - புலால் நாற்றம்பொருந்திய வாய்.

(வி-ரை) சேய்க்கறியிட்டாரே-சிவபெருமானுக்குப் பிள்ளைக்கறியமுது படைத்தருளிய செயற்கரிய வன்றொண்டைச்செய்த பெருந்தொண்டரே; சிறுத்தொண்டரென்னும் பேர் கொண்டவராயிடில், யாங்கள் செய்வதுந் தொண்டோ, யாங்களுந் தொண்டரெனப்பேசப் படுவேமோ என்பார் " ஓர்தொண்டே நாய்க்குங் கடைப்பட்ட நாங்களென்பேம்" எனக் கூறினர். (சஎ)

48. கோள்கொண்ட நஞ்சங் குடியேனோ கூர்கொண்ட
வாள்கொண்டு வீசி மடியேனோ - கீள்கொண்ட
வங்கோவ ணத்தழகா வம்பலவா நின்புகழை
யிங்கோதி வாழ்த்தாத யான்.

(அ-ரை) கோள்-துன்பம். கீள்கொண்ட - கீளுடையாகக்கொண்ட. அம் கோவணத்து அழகா - அழகிய கோவணத்தையுடைய அழகனே.

(வி-ரை) கோள்கொண்ட நஞ்சம் - தீங்குடைய விடம். இறையோன் புகழைப்பாடி வாழ்த்தாத யான் இருத்தலினும் இறத்தல் இனிதென்பார் "நின்புகழை யிங்கோதி வாழ்த்தாத யான் நஞ்சங் குடியேனோ? வாள்கொண்டுவீசி மடியேனோ? வென்றார். (சஅ)

49. ஆயாக் கொடியேனுக் கன்புடையாய் நீயருளிங்
கீயாக் குறையே யிலைகண்டாய் - மாயாற்கும்
விள்ளாத் திருவடிக்கீழ் விண்ணப்பம் யான்செய்து
கொள்ளாக் குறையே குறை.

(அ-ரை) ஆயா - ஆராயாத. மாயாற்கும் - விஷ்ணுவுக்கும். மாயற்கு என்பது மாயாற்கு என நீட்டல் விகாரமாயிற்று.

(வி-ரை) "அருளிங் கீயாக் குறையே யிலை" என்றது "வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்டமுழுதுந் தருவோய் நீ" என்ற திருவாசகச் சுருதிக்கிணங்கச் சிவபிரான் எக்காலத்தும் அடுத்து வணங்கும் அடியார்க்கு வழங்கும் வள்ளலாதலின். பிரார்த்தனைசெய்யாத குறையால்

நீ யருள்கிலை யென்பார் "திருவடிக்கீழ் விண்ணப்பம் யான் செய்துகொள்ளாக்குறையே குறை" யென்றருளினர். (சகூ)

50. பெற்றிடுதாய் போல்வதுநின் பெற்றியென்பேன் பிள்ளையது
மற்றழுதாற் கேட்டும் வராதங்கே - சற்றிருக்கப்
பெற்றாள் பொறுப்பள் பிரானீ பொறுக்கினுநின்
பொற்றாள் பொறுவெம் புலம்பு.

(அ-ரை) புலம்பு - புலம்பல்.

(வி-ரை) பிரான் - பிரானே! இஃது அண்மை விளி. நீ தாயொப்பாயென்பேன்-தாயோ பிள்ளை பசியாலழக்கேட்டும் நன்கு யழுதபின் செல்ல லாமெனப் பொறுத்திருப்பள். அத் தாய்போல எமது அழுகையைக்கேட்டிரங்காது நீ பொறுப்பினு நின்பொன்போன்ற அல்லது அழகிய திருவடி சகித்திராதெனக் கூறியதனுனே அடியார்க் கிரங்குந் தன்மையிலதாயினும் பேரன்பு படைத்தது பெருமான் திருவருள் என வியந்தமை காண்க. (ரு0)

51. பொன்போற் பொறுமையுளார் புந்திவிடாய் நீயென்பா
ரென்போற் பொறுமையுளார் யார்கண்டாய் - புன்போக
வல்லாம் படிசினங்கொண் டாணவஞ்செய் யின்னுமை
யெல்லாம் பொறுக்கின்றேன் யான்.

(அ-ரை) புன்போக அல் ஆம்படி - அற்பமாகிய போகமென்கிற அந்தகாரம் மூடிக் கொள்ளும்படி. இன்னுமை - துன்பம்.

(வி-ரை) பொறுமையுளார் - பிறர்செய்த பிழைகளை மன்னிக்கும் பொறுமை யுடையார். பொன்போற் பொறுமை - தட்டான் பணிசெய்வதற்காகத் தனக்குச்செய்கின்ற தீமைகளாகிய அனலிலிட்டு உருக்குவதும், ஆயுதத்தால் அடித்தலும் நீட்டுதலும், வளைத்தலும், பொறுக்கின்றதாதலின் பொறுமைக்கு அதனை உவமையாக்கினர்.

ஆணவஞ் செய்யின்னுமை - ஆணவமலம் செய்கின்ற தீமைகள். அவையாவன:—ஆன்ம போதமகன்று தன்னை விகற்பித்துத் தனக்கு நிகர் ஒருவருமில்லையென எண்ணும்விகற்பமும், யாதொன்றையும் சங்கற்பித்து நிற்கின்ற கற்பமும், யாதொன்றுக்குங் கோபித்து விரோதிக்கிற குரோதமும், யாதொன்றுக்கும் ஆசைப்படுகிற மோகமும், யாதோ ருயிரையுங் கொல்லுகின்ற கொலையும், யாதேனுந் துன்பம் வரின் அதற்காக வருந்தும் அருறும், ஒன்றைச்சொல்லுமிடத்துஞ் செய்யுமிடத்தும் அகங்கரித்து நிற்றலாகிய மதமும், யாதொன்றுக்குஞ் சிரித்துக் கொண்டு திரிகிறதாகிய நகையும் என எண்வகையின. ஆணவமலம்செய்யும் இத்துணைப்பிழைகளை யான் பொறுக்கின்றேன் என்றதனுல் பொன்போற் பொறுமையுள்ளாரது புந்தியினீங்காதமர்ந்தருளு நீ யென்புந்தியின்கண்ணும், பெருமானே! அமர்ந்து விளங்கவேண்டுமென வேண்டினர் என்க. (ருக)

52. முன்மணத்திற் சுந்தரரை முன்வலுவிற் கொண்டதுபோ
லென்மணத்தி னீவந் திடாவிடினு - நின்கணத்தி
லொன்று மொருகணம்வந் துற்றழைக்கிற் செய்ததன்றி
யின்று மொருமணஞ் செய் வேன்.

(அ-ரை) வலுவிற்கொண்டது - வலிந்து வந்து வாதிட்டுத் தடுத்தாட்கொண்டமை நின்கணம் - நினது சிவகணத்தார்.

(வி-ரை) சிவபெருமான் தன்னைத்தடுத்தாட்கொள்ளச் சுந்தரமூர்த்திநாயனர் திருமணத்தில் வேதியருருக்கொண்டு வந்ததுபோல வாராவிடினும், சிவகணத்தவருள் ஒருவர் வீந்து தடுத்தாட்கொள்வதுண்டெனின் அதனுற் குறிக்கொள்ளப்படுவதும், வீட்டுப்பேற்றை யடைவதும் திண்ணமாக முடிதலின், முன்னர் ஒருதாரத்தை மணம்செய்ததன்றி இன்றுமொரு மணஞ் செய்யேன் என்றார். (ருஉ)

53. செய்யா ரழலேநின் செம்மேனி யென்னினுமென்
னய்யாநின் கால்பிடித்தற் கஞ்சேன்காண் - மெய்யாவிஞ்

ஞான்றுகண்டு நான்மகிழ நந்தொண்ட னென்றெனையு
மேன்றுகொண் டாற்போது மெனக்கு.

(அ-ரை) செய்யார் அழல் - செந்நிறம் பொருந்திய நெருப்பு. இஞ்ஞான்று - இந்நாள். ஏன்று கொண்டால் - ஏற்றுக்கொண்டால்.

(வி-ரை) ஐயா - என் ஐயனே; எனையும் - என்றதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை; நந்தொண்டனென-நமக்கோர் அடியான் இவன் என; போதும் எனக்கு - எனக்குத் திருத்தியைத்தருவதாம். பெருமான் செந்தழலன்ன செம்மேனி தீண்டாத் திருமேனியாயினும், அதனைத்தீண்டுவார் உடல் தகிக்கப்படுமேனும், அவன் தொண்டனாக வேற்றுக்கொள்ளப்படுதல் பெரும்பேறாதலின் அதுவேண்டி ஐயா! நின் கால்பிடித்தற்கஞ்சேன் என்றார். (௫௩)

54. என்பாலோ வென்பா விராதோடு கின்றமனத்
தின்பாலோ வம்மனத்தைச் சேர்மாயை - தன்பாலோ
யார்பாற் பிழையுளதோ யானறியே னென்னம்மை
யோர்பாற் கொளநின்றோ யோது.

(அ-ரை) என்பாலோ-என்னிடத்திலோ, என் அம்மை ஓர்பால் கொள நின்றோய் - என் தாயாகிய உமாதேவி ஒரு பாகத்தைக் கொள்ளும்படி நின்றவனே.

(வி-ரை) என்னம்மை என்றது திருவருளுருவாகிய பராசத்தியை. ஓர்பாற் கொள நின்றோய் - ஒப்பற்ற இடப்பாகத்தைத் தனக்குரித்தாகக்கொள்ள வழங்குகின்ற வரதனே. மாயை விளையாட்டின் மனமயங்கி யொருவழி நில்லாதோடுகின்றமையாலும், அதனாற்பிழை யியற்றப்படுதலாலும், உயிர் அதன்பின் சென்று நிற்றலானும் பிழைசெய்வது யாரோ? மனமோ? மாயையோ? வென்பார் "யார்பாற் பிழையுளதோ" வென்றார். யான் அறியேன்-சுதந்திர வறிவால் உணர்கிலேன். "அறிவித்தாலன்றி யறியா வுளங்கள்" என்றது சிவஞானபோதம். (௫௪)

55. நாணவத்தி னேன்றனையோ நாயேனை மூடிநின்ற
வாணவத்தை யோநா னறியேனே - வீணவத்திற்
றீங்குடையா னென்னவிவண் செய்பிழையை நோக்கியருட்
பாங்குடையாய் தண்டிப் பது.

(அ-ரை) நாண்அவத்தினேன்தனையோ-நாணும்படியான வீண் காரியங்களையுடையவனாகிய என்னையோ. தண்டிப்பது - சிக்ஷிப்பது.

(வி-ரை) மூடிநின்ற ஆணவத்தை-ஆன்மாவைத் தன்னையும் தலைவனையும் உணராத வண்ணம் செம்பிற்களிம்புபோல மூடித்தனது வடிவத்தையும் காட்டாது நிற்கும் மூலமலத்தை. ஓகாரம் இரண்டும் வினா. (௫௫)

56. எச்சம் பெறுமுலகோ ரெட்டிமர மானாலும்
பச்சென் றிருக்கப் பகர்வார்காண் - வெச்சென்ற
நஞ்சனையேன் குற்றமெலா நாடாது நாதவெனை
யஞ்சனையே லென்பா யமர்ந்து.

(அ-ரை) எச்சம்பெறும் உலகு - தாழ்வை யுடைய உலகம். எச்சம்-சந்ததி. உலகோர்- உயர்ந்தோர்.

(வி-ரை) நச்சுமரம் - எட்டிமரம். நஞ்சனையேன்-விடத்தை நிகர்வேன் அதாவது கொடியேன். அஞ்சனையேல்-அஞ்சல், நையேல் எனப்பிரித்துப்பயப்படாதே வருந்தாதே யெனப் பொருளுரைத்துக்கொள்க. என்பாய் - என்று பணித்தருள்க. (௫௬)

57. கற்றறியே னின்னடிச்சீர் கற்றார் கழகத்தி
லுற்றறியே னுண்மை யுணர்ந்தறியேன் - சிற்றறிவேன்
வன்செய்வே னேர்விழியார் மையலினேன் மாதேவா
வென்செய்வே னின்னருளின் றேல்.

(அ-ரை) கழகத்தில் - கூட்டத்தில்.வன்செய் வேல் நேர்விழியார் - வலிமையுடைய வேற்படைபோன்ற கூரிய கண்களையுடைய மாதர். நின் அருள் இன்றேல்-உன் அருள் இல்லையானால்.

(வி-ரை) நின்னடிச்சீர் என்பது திருவடிப்பெருமை.கற்றூர் கழகத்தில் - கற்றல் கேட்டலாற் சிறந்த பெரியோர் சபையிடத்து. உண்மை - பதிப்பொருளாகிய பரிபூரண சிவத்தை யுணர்கின்ற மெய்யுணர்வு. சிற்றறிவேன் - அறிவித்தாலறியுங் கிஞ்சிக்ஞன். மையலினேன் - மயக்கமுடையேன். என்னசெய்வே னின்னருளின்றேல் - உன்னருள் எனக்குக் கிடைப்பதில்லையாயின் யான் என்செய்வேன் வீட்டுப்பேற்றினைத் தருவது திருவருளாதலின் அதனைப் பெருமைக்கு இரங்கினூர். "அருளான் மனமறுக்கலாம்" என்றும், "ஈசன் அருளே பிறப்பறுப்பதானுல் - அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்" என்றும் பிறர் கூறினமை காண்க. (ருஎ)

58. மெய்தா னுடையோர் விரும்புகின்ற நின்னருளென்
செய்தால் வருமோ தெரியேனே - பொய்தாவு
நெஞ்சினேன் மன்று ணிருத்தா நினைக்கேட்க
வஞ்சினே னன்பின்மை யால்.

(அ-ரை) பொய்தாவும் நெஞ்சினேன் - பொய்யைவிரும்புகின்ற மனத்தையுடையவனுகிய நான். மன்றுள் நிருத்தா - பொன்னம்பலத்தில் நடனஞ்செய்வோனே.

(வி-ரை) நின் அருள் - உனது கருணை. என்செய்தால் வருமோ என்றது பெறுதலின் கணுள்ள அருமை குறித்தென்க. மன்றுணிருத்தா - தில்லைவெளியிற் றிருநடம்புரிவோனே. அருளைப்பெறுதற்கு உபாயம் யாது? கூறியருளுக வென்று விண்ணப்பம் செய்ய அன்புடைமை யாவசிகமாதலின் " நினைக்கேட்க அஞ்சினேன் அன்பின்மையால்"என்றூர். (ருஅ)

59. மாதேவா வோவா மருந்தேவா மாமணியிப்
போதேவா வென்றே புலம்புற்றே - னீதாவா
யானுலுன் சித்த மறியே னுடம்பொழிந்து
போனுலென் செய்வேன் புகல்.

(அ-ரை) ஓவா-நீங்காத. மருந்தே-தேவாமிர்தமே. நீ தாவாயானுல்-நீ-விரும்பாயானுல், புகல்-சொல்லுக.

(வி-ரை) உடம்பொழிந்து போனுல் - இம்மானிடதேகம் இறக்குமாயின், என் செய்வேன் புகல் என்றது "இப்பிறவி தப்பினுலெப்பிறவி வாய்க்குமோ" என்பதையும், இவ்வுடலுள்ளபோதே பெற்றுக்கொள்ள வேண்டிய அருளைப்பெருமையையும் குறித்து இரங்கியதென்க " யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன் " என்றூர் திருவாதவூரடிகள். (ருகூ)

60. கொன்செய்தாற் கேற்றிடுமென் குற்றமெலா மையவெனை
யென்செய்தாற் றீர்ந்திடுமோ யானறியேன் - முன்செய்தோய்
நின்பாலெ னைக்கொடுத்தே னீசெய்க வன்றியினி
யென்பாற் செயலொன் றிலை

(அ-ரை) கொன்செய்தாற்கு - அச்சத்தை விளைப்பதாகிய உயிர்க்கொலை முதலாகிய பஞ்ச மகா பாதகங்களைச்செய்த வொருவனுக்கு. ஏற்றிடும் - பொருத்தமுடையனவாகும். என்குற்றமெல்லாம் - யான்செய்த பிழைகள் முழுவதும். (வி-ரை) நின்பால் எனைக்கொடுத்தேன்-நீ யென்னை யுடையானுகலின் உன்னுடைமையாக என்னுடலையும், பொருளையும் உயிரையுஞ்சமர்ப்பித்தேன். என்பாற்செயல் இலை, எனக்கெனவோர் செயலும் இல்லை, என்றதனுனே எலாம் இறைவன்றன் செயல் என்பது குறிப்பாகப் பெறப்பட்டது. "நஞ்செயலற்றிந்த நாமற்றபின்னுதன் றன்செய லூனே யென்றுந் தீபற" என்றது திருவுந்தியார். (சூo)

61. எண்ணிலெளி யேன்றவிர வெல்லா வுயிர்களுநின்
றண்ணிலகுந் தாணீழல் சார்ந்திடுங்காண் - மண்ணில்வருந்

தீங்கென்ற வெல்லாமென் சிந்தையிசைந் துற்றணமற்
ருங்கொன்று மில்லாமையால்.

(அ-ரை) எண்ணில் - ஆலோசிக்குமிடத்து. தண் இலகும் - குளிர்ச்சிபொருந்திய.

(வி-ரை) தண் இலகும் தாள் நீழல் - பிறவி வெப்பத்தையாற்றுங் குளிர்ச்சியுடன் விளங்குந் திருவடி நீழல். எல்லா உயிர்களுஞ் சார்ந்திடுங்காண் எளியேன்றவிர வென்றதனுனே பேரின்பமயமாகிய திருவடியிணை யான் என்றடைவேன் என விரங்கி முறையிட்டவாறும். திருவடிநீழலின் பெருமையை "மாசில்வீணையு மாலைமதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும்போன்றதே. யீசனெந்தை யிணையடிநீழலே" என்ற திருநாவுக்கரையர் திருவாக்கானுணர்க. (சுக)

62. தாரம்விற்றுஞ் சேய்விற்றுந் தன்னைவிற்றும் பொய்யாத
வாரம்வைத்தான் முன்னிங்கோர் மன்னனென்பர் - நாரம்வைத்த
வேணிப் பிரானதுதான் மெய்யாமே லன்றெனைநீ
யேணிற் பிறப்பித்த தில்.

(அ-ரை) வாரம் - அன்பு. நாரம்வைத்த - கங்கையைவைத்த. (நாரம் - நீர்). ஏணில்- பெருமையாக.

(வி-ரை) பொய்யாத வாரம்வைத்தான் - சத்தியவாசகம் பேசுவதில் அன்புவைத்த அரிச்சந்திரன். நாரம்வைத்த - கங்கையைத்தரித்த. வேணிப்பிரான் - சடையையுடைய தம்பிரான். அன்று - அரிச்சந்திரன் அரசுபுரிந்த காலத்தில் எனை - அடியேனை. ஏண் இல் - கன்ம வலியினையுடைய இல்லறநெறியில். பிறப்பித்தல் - தோற்றுவித்தல். இல் - இல்லாததென். அம்மன்னவன் தாரமும் சேயும் உயிர்பெற்றெழ அவன் விசுவாமித்திரனது சோதனைகளை வென்று, நின் தரிசனஞ் செய்யப்பெற்றான். அன்றே யானும், சனித்திருப்பேனெனில் பெருமான் அருட்காட்சி கிடைத்திருக்கும் என்று விண்ணப்பித்தவாறும். (சுஉ)

63. உள்ளொன்ற நின்னடிக்கன் புற்றறியே னென்னுளத்தின்
வெள்ளென்ற வன்மை விளங்காதோ - நள்ளொன்ற
வச்சங்கொண் டேனைநினக் கன்பனென்பர் வேழத்தி
னெச்சங்கண் டாற்போல வே.

(அ-ரை) உள் ஒன்ற - மனம்பொருந்த. நள் ஒன்ற - நடுவுநிலைமை பொருந்த. வேழத்தின் எச்சம் - யானையின் எச்சில்.

(வி-ரை.) வெள்ளென்ற வன்மை - அன்பின்மையால் நெஞ்சுருகாத கடினத்தன்மை. நள் ஒன்ற - நட்புப்பொருந்த, அச்சங்கொண்டேனை-சனன மரணங்களை யெண்ணி, உயிர்களிடத்துப் பாராட்டத்தக்க காருண்ய முதலிய நற்குணங்களில்லாமையால் பயங்கொண்ட என்னை. வேழத்தின் எச்சம் - யானைக்கன்று. (சுரு)

64. நீத்தாடுஞ் செஞ்சடையாய் நீள்வேடங் கட்டிவஞ்சக்
கூத்தாடு கின்றேனைக் கொண்டுசிலர் - கூத்தாநின்
பத்தனென்ப ரென்னே பகல்வேடத் தார்க்குமிங்கு
வித்தமிலா நாயேற்கும் வேறு.

(அ-ரை) நீத்து ஆடும் - நீத்தம் ஆடும்(கங்கையைத்தரித்த). வித்தம் - அறிவு.

(வி-ரை.) நீத்து - பிரவாக ரூபமான கங்கை. நீத்தம் என்பது நீத்து எனக்குறைந்தது இடைக்குறை. (சுச)

65. அன்புடையா ரின்சொல் லமுதேறு நின்செவிக்கே
யின்புடையா யென்பொய்யு மேற்குங்கொ - றன்புடையேன்
பொய்யுடையே னாயினுநின் பொன்னருளை வேண்டுமொரு
மெய்யுடையே னென்கோ விரைந்து.

(வி-ரை) இன்சொல் அமுது - தோத்திரம்செய்யும் இனியசொற்களாகிய அமுது. (சுரு)

66. என்னு ருயிர்க்குயிரா மெம்பெருமா னின்பதத்தை
யுன்னு ருயிர்க்குறுதி யுண்டோதான் - பொன்னுகத்
தார்க்குஞ் சதுமுகர்க்குந் தானத்த வர்க்குமற்றை
யார்க்கும் புகலுன் னருள்

(அ-ரை) நின்பதத்தை - உன் திருவடியை. உன்னார் - நினையாதவர். பொன் ஆகத்தார் - திருமகளை மார்பிலே யுடையவராகிய விஷ்ணு. தானத்தவர் - இந்திரன் முதலிய சுவர்க்கலோகத்தார். (தேவர்கள்). புகல் - சொல்லாய்.

(வி-ரை) சதுமுகர் - நான்கு முகங்களையுடைய பிரமதேவர்கள். உயிர்க்கு உறுதியாகிய இகபரபோகங்களும், அழியாமுத்தியின்பமும் மாதேவர் திருவடித்தியானஞ் செய்யார்க்குக் கிடைப்பதரிதாகலின் "நின்பதத்தை யுன்னாருயிர்க் குறுதியுண்டோ தான்" என்றார். (சுசு)

67. வெள்ளைப் பிறையணிந்த வேணிப் பிரானேநான்
பிள்ளைப் பிராயத்திற் பெற்றுளை - யெள்ளப்
பொறுத்தாளத் தாயிற் பொறுப்புடையோய் நீதான்
வெறுத்தா லினியென்செய் வேன்.

(அ-ரை) வேணி - சடை. பிரான் - உபகார சீலன். எள்ள - இகழ. அத்தாயின் - அந்தத் தாயைப்பார்க்கினும்.

(வி-ரை) வெள்ளைப்பிறையணிந்தவேணி - வெண்மைபொருந்திய சந்திரகண்டம் அல்லது பிள்ளைமதியைத்தரித்தசடை; இஃது ஞானகலை. அன்பர்கள் செய்யும் பிழைகளைப் பாராட்டாமையால் தாயினும் பொறுப்புடையோயென்றது. நீதான் வெறுத்தால் இனி யென்செய் வேன் என்பது - யான்செய்யும் பிழையைக்கண்டு என்னைக்கோபித்தாயெனில் வேறு எனக்குத் துணையாவார் யார் என விண்ணப்பம் செய்தமை. "வேந்தன்சீறி னுந்துணையில்லை" யென்றது ஔவையார் நீதிமொழி. (சுஎ)

68. ஆயிரமன் றேநூறு மன்றையீ ரைந்தன்றே
ஆயிரம்பே ரெந்தையெழுத் தைந்தேகாண் - நீயிரவு
மெல்லு நினைத்தியென வேத்துகினு மெந்தாய் வீண்
செல்லுமன மென்செய்கேன் செப்பு.

(அ-ரை) ஐயீரைந்து - ஐம்பது. எல்லும் - பகலும்.

(வி-ரை) ஆயிரம்பேர் எந்தை - ஆயிரநாமங்களையுடைய எனதுபிதா. எழுத்தைந்தேகாண் - ஸ்ரீபஞ்சாட்சரமேகாண். (சுஅ)

69. வஞ்சந் தருங்காம வாழ்க்கையிடைச் சிக்கியவென்
னெஞ்சந் திருத்தி நிலைத்திலையே - யெஞ்சங்
கரனே மழுக்கொள் கரனே யரனே
வரனே சிதம்பரனே வந்து.

(அ-ரை) சிக்கிய - அகப்பட்ட. எம் சங்கரனே - எமது சங்கரனே. (சம் + கரன் = சுகத்தைக் கொடுப்பவன்) வரனே-மேன்மையுடையவனே.

(வி-ரை) காமவாழ்க்கை - எவ்வளவு காலம் இன்பங்கள் அனுபவித்தாலும் ஆராத வாசைக்கிடமாகிய இச் சகவாழ்க்கை. (சுகூ)

70. தாழ்விக்கும் வஞ்சச் சகமா லொழித்தென்னை
வாழ்விக்கு நல்ல மருந்தென்கோ - வீழ்விக்கு
மீங்கான மாயை யிகந்தோர்க் கருள்வோய் நின்
பாங்கான செம்பொற் பதம்.

(அ-ரை) சக மால் - பிரபஞ்ச மயக்கம். இகந்தோர் - கடந்தவர்.

(வி-ரை) "தாழ்விக்கும் வஞ்சச்சகமால்" என்றது ஒருவன் தவநெறியான்மேம்பாடடையாது, கீழாகிய சனனங்களிற் புகுத்தித் தாழ்வடையும்படி யறிவைமயக்கும் வஞ்சமுடைமை பற்றியென்க. செம்பொற்பதம் - செம்பொன்பொன்ற திருவடி. இது பிறவிப்பிணி நீக்கி நல்வாழ்வருளும் மருந்தாகலின் "வாழ்விக்குநல்லமருந்தென்கோ" வென்றார். "உன்னுமுளைதைய மிலதுணர்வா யோவாது, மன்னுபவந் தீர்க்கு மருந்து" என்றது திருவருட்பயன். (எ0)

71. ஏசொலிக்கு மானிடனு யேன்பிறந்தேன் றொண்டர்கடந்
தூசொலிப்பான் கல்லாகத் தோன்றிலனே - தூசொலிப்பான்
கல்லாகத் தோன்றுவனேற் காளகண்டா நாயேனுக்
கெல்லா நலமுமுள தே.

(அ-ரை) ஏசு ஒலிக்கும் - நிந்தனை பொருந்திய. தொண்டர்கள்தம் தூசு ஒலிப்பான் - தொண்டர்களுடைய ஆடையை வெளுப்பவனாகிய வண்ணான்.

(வி-ரை) ஏசு ஒலிக்கு - யாவராலும் இவன் துன்மார்க்கனென இகழ்ந்துகூறும் வார்த்தைக்கு. தூசு ஒலிப்பான் கல் - அழுக்குவஸ்திரங்கள் வெளுக்க வெளுக்குங் கல். (எக)

72. குற்றம் பலசெயினுங் கோபஞ் செய்யாதவருட்
சிற்றம் பலமுறையுஞ் சிற்பரனே - வெற்றம்பற்
பொய்விட்டா லன்றிப் புரந்தருளே னென்றெனை நீ
கைவிட்டாலென்செய்கேன் காண்.

(அ-ரை) வெற்றம்பல்பொய் - வெறுமையாகிய நிந்தைக்குரிய பொய்யொழுக்கம். புரந்தருளேன் - காத்தருளேன்.

(வி-ரை) சிற்றம்பலம் - சிறு + அம்பலம் அதாவது சிற்சபை. வெறு அம்பல்-வெற்றம்பல் - வெறுமையாகிய பழிமொழி. (எஉ)

73. தீக்குணத்தார் யாவருமென் சீடரெனி லென்னுடைய
தீக்குணத்தி னெல்லையெவர் தேர்கிற்பா - ரூக்கமிகு
நல்லோர் களிக்கு நதிச்சடையோ யெற்கருளி
லெல்லார்க்கு மையுறவா மே.

(அ-ரை) ஊக்கம் - மனவெழுச்சி (உற்சாகம்). ஐயுறவு - சந்தேகம். அல்லது சங்கைக்கிடம்.

74. இன்படையான் றன்புடையா னென்றேழை யேன்றலைமே
லன்புடையாய் நீயமைப்பித் தாயிதற்கு - வன்படையா
தெவ்வண்ண நின்னெஞ் சிசைந்ததோ வந்நாளி
லிவ்வண்ண மென்றறிகி லேன்.

(அ-ரை) தன்புடை - தன்னிடத்தில்.

(வி-ரை) இன்பு அடையான் - இம்மையில் இன்ப வாழ்வினை யடையான். துன்பு உடையான் - துன்பப்போக வனுபவமேயுடையான். ஏழையேன் தலைமேல் - எளியேன் தலையில். நீ யமைப்பித்தாய்- நீ பிரமனால் எழுதுவித்தாய். உயிர்கட்கு இமையளவும் உபகாரமன்றி, யபகாரம் செய்ய உடன்படாத தேவர் திருவுள்ளக் கருணைக்கு இதுபொருந்துவதோ வென்பார் "நின்னெஞ்சிசைந்ததோ" என்றார். (எச)

75. எய்ப்பிறப்பொன் றில்லாதோ வென்பிறப்பி னேழ்மடங்கோர்
பேய்ப்பிறப்பே நல்ல பிறப்பந்தோ - வாய்ப்புலகம்
வஞ்சமெனத் தேக மறைத்தடிமண் வையாம
லஞ்சிநின்னே டாடு மது.

(அ-ரை) ஏய்ப்பிறப்பு - பொருந்தின பிறவி.

(வி-ரை) மனிதப்பிறவி யெப்பிறவியினும் உயர்வுடையதாயினும், "புருடர்வடிவானதே யல்லாது கனவினும், புருடார்த்த மேதுமறியேன்" என்ற பெரியார் திருவாக்குக்கிணங்கப்

புருடார்த்தங்களாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்னப்பட்டநான்கினுள்ளும் முன் மூன்றையும் அறிந்து பெற்று அனுபவித்துப் பந்தத்துக்கேதுவென விட்டொழித்துப் பின் பற்றக்கடவதாகிய வீட்டுப்பேற்றினைக்குறித்து முயலாமல் இருக்கின்றவென்பிறப்பினும், உலகம் வஞ்சமென்றுணர்ந்து தேகத்தைமறைத்து, பூமியிற் கால்வைக்கப்பயப்பட்டுப் பெருமானுடன் நடமாடும் பேயே புணர்வுடையதாகத் தோன்றலின் "என்பிறப்பின் ஏழ்மடங்கோர் பேய்ப்பிறப்பே நல்ல பிறப்பு" என்றனர். காரைக்காலம்மையாரும் இக்கருத்துடையராய்ப் பேய்வடிவம் தனக்கு வேண்டுமெனச் சிவபெருமானைப் பிரார்த்தித்து அருளப் பெற்றமை காண்க. (எரு)

76. கோடும் பிறைச்சடையோய் கோளுங் குறும்புஞ்சாக்
காடும் பிணிமூப்புங் காணர்கா - ணீடுநினைக்
கண்டா ரடிப்பொடியைக் கண்டார் திருவடியைக்
கண்டார் வடிவுகண்டார் கள்.

(அ-ரை) கோடும் - வளைந்த. கோள்-துன்பம். குறும்பு - தீமை. சாக்காடு - இறப்பு. வேதன் - பிரமன். வானோர் - தேவர். கோலம் - அழகு.

(வி-ரை) நினைக்கண்டார் - உன்னைத் தரிசித்தவர்; அடிப்பொடியை - திருவடியிற்பட்ட தூளை; கண்டார் திருவடியை - தரிசித்தவர் திருவடியை. கண்டார்வடிவு - தரிசித்தவர் திருமேனியைக் கண்டார்கள் - தரிசித்த அடியார்கள். கோளும் - மலங்களால் வருந்தீமையும்; குறும்பும் - ஐம்புலவேடர் செய்கின்ற சேட்டைகளும்; சாக்காடும் - மரணமும்; பிணி நோயும்; மூப்பும்-வயோதிகமும்; காணர்-அடையார் என்க. அடியாரைத் தரிசித்தவர் பெறும் பேறுகள் கூறப்பட்டன. பரமனைச்சேவித்தவர், திருவடிப்பொடியைக் கண்டவர், திருவடியைக்கண்டவரது திருமேனி கண்டவர் பெறும்பேறு இவையாயின் பரமனை ஞானநேத்திரத்தாற்கண்ட மாதவர் பெறும்பே றிவ்வளவினதென்று கூறல் அருமையினு மருமை யுடைத்தென்க. (எசு)

77. மாலெங்கே வேதனுயர் வாழ்வெங்கே யிந்திரன்செங்
கோலெங்கே வானோர் குடியெங்கே - கோலஞ்சேர்
அண்டமெங்கே யவ்வவ் வரும்பொருளெங் கேநினது
கண்டமங்கே நீலமுறாக் கால்.

(அ-ரை) அண்டம் - உலகு. கண்டம் - கழுத்து. நீலம் உறாக்கால் - நீலநிறத்தையடையாதிருந்தால்; (நஞ்சுண்டு கறுக்காதிருந்தால்).

(வி-ரை) இத்திருவெண்பா திருநீலகண்டத்தின் சிறப்பை வெளியிட்டது. சிவபிரான் திருக்கண்டம் பாற்கடலினின்றெழுந்த கொடிய ஆலத்தை யமுதுசெய்தருளிய காரணத்தாற் திருநீலகண்டமாகிக் கருணையின் எல்லையை விளக்குகின்றது. இஃது விசுத்திதான நிலைமை. இத்தானத்தின் மகேசர் வீற்றிருந்தருளுவர். அனுபவிகள் அந்நிலையின்கண் காண்பது காரிருள். "கண்டங்கறுத்த கருத்தறிவாரில்லை" என்றது திருமந்திரம். (எஎ)

78. எவ்வேளை யோவருங்கூற் றெம்பாலென் றெண்ணுகின்ற
வவ்வேளை தோறு மழுங்குற்றேன் - செவ்வேளை
மிக்களித்தோய் நின்கழற்கால் வீரத்தை யெண்ணுதொறு
மெக்களித்து வாழ்கின்றேன் யான்.

(அ-ரை) கூற்று - யமன். எம்பால் - எம்மிடத்தில். அழுங்குற்றேன் - வருந்தினேன். செவ்வேளை - முருகக்கடவுளை. எக்களித்து - மிகமகிழ்ந்து.

(வி-ரை) நின்கழற்கால் வீரத்தை - தேவரீரது வீரக்கழலணிந்த திருவடிகளின் பராக்கிரமத்தை. எமதருமனை யுதைத்துக்கொன்று மார்க்கண்டருக் கருளிய வண்மையுடைய தாதலாலும், அதனை நினைக்குந்தோறும் எமபயம் ஒழிதலானும் 'எக்களித்து வாழ்கின்றேன் யான்' என்றார். (எஅ)

79. துற்சங்கத் தோர்கணமுந் தோயாது நின்னடியர்
சற்சங்கத் தென்றனைநீ தான்கூட்டி - நற்சங்கக்
காப்பான் புகழுன் கழற்புகழைக் கேட்பித்துக்
காப்பா யிஃதென் கருத்து.

(அ-ரை) கணம் - க்ஷணம். தோயாது - சேராமல். நல்சங்கம் காப்பான் - அழகாகிய பஞ்ச சன்னியமென்னும் சங்கத்தை யுடையவனைக் காக்குந் தொழிலையுடைய விட்டுணு. கழற் புகழ் - திருவடியின் பெருமை. (எகூ)

80. என்னமுதே முக்க ணிறையே நிறைஞான
வின்னமுதே நின்னடியை யேத்துகின்றோர் - பொன்னடிக்கே
காதலுற்றுத் தொண்டுசெயக் காதல்கொண்டே னெற்கருணீ
காதலுற்றுச் செய்தல் கடன்

(அ-ரை) காதலுற்று - ஆசையுடையவனாய். எற்கு - எனக்கு.

(வி-ரை) இத்திருவெண்பாவால், தொண்டர்க்குத்தொண்டராம் புண்ணியங்கைகூடப் பெற்றால், அக்கணத்தே யெல்லா நலனுஞ் சித்திக்குமென்னுங் கருத்தால் வள்ளலார் "நின்னடியையேத்துகின்றோர் பொன்னடிக்கே காதலுற்றுத்தொண்டுசெயக் காதல்கொண்டேன்" என்றார். "அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலைதானேவந் தெய்தும்பராபரமே" என்று தாயுமானசுவாமிகள் அருளியவாறும் காண்க. (அ0)

81. ஆரா வமுதே யருட்கடலே நாயேன்றன்
பேராத வஞ்சப் பிழைநோக்கி - யாரேனு
நின்போல்வா ரில்லாதோய் நீயே புறம்பழித்தா
லென்போல்வா ரென்சொல்லா ரீங்கு.

(அ-ரை) புறம்பழித்தால் - புறங்கூறினால்.

(வி-ரை) நின்போல்வார் - நின்னையொப்பார்; இல்லாதோய் - இல்லாதவனே; நீயே யென்பதில், ஏ - பிரிநிலைப்பொருளது. புறம்பழித்தால்-புறங்கூறியிகழ்ந்தால், அடியார் குற்றமுங் குணமாகக்கொண்டருளு நீ யிகழ்வது தகுமோ வென்பார் "என்போல்வார் என் சொல்லாரீங்கு" என்றார். (அக)

82. மெய்யாக நின்னைவிட வேறோர் துணையில்லே
னையா வதுநீ யறிந்ததுகாண் - பொய்யான
தீதுசெய்வே னன்பிழையைச் சித்தங் குறித்திடில்யான்
யாதுசெய்வே னந்தோ வினி.

(அ-ரை) சித்தம் - மனம். குறித்திடில் - நினைத்தால்.

(வி-ரை) "நின்னைவிடவேறோர் துணையில்லேன்" என்றது உடலுக்குத் துணைபோலச் சூழ்ந்துள்ள தமராயினோர் கடைநாளிற் கைவிட்டகல்வதுபோல நீங்காமல் உயிர் திருவடியடையுங்காறும் அடைந்த பின்னும் அதனோடுள்ள நற்றுணையாவது நோக்கியென்க. "நற்றுணையாவது நமச்சிவாயவே" யென்றார் திருநாவுக்கரையர். (அஉ)

83. திண்ண மறியாச் சிறியே னுளத்திருக்கு
மெண்ண மறிந்தா யிரங்குகிலா - யண்ணலுன்பா
னித்த மிரங்காவென் னெஞ்சமர்ந்த தாலோநின்
சித்த மிரங்காச் செயல்.

(அ-ரை) திண்ணம் - உறுதிப்பொருள்.

(வி-ரை) அண்ணல் - தலைவா. இது - அண்மைவிளி. உன்பால் - உன்னிடத்தில். நித்தம்- தினந்தோறும். இரங்கா - உன் அருளைப்பெறும்படி அன்புசெய் தருகாத. என்னெஞ்சு-என் மனத்தில், அமர்ந்ததாலோ - நீ யெழுந்தருளினமையாலோ. நின் சித்தம்-உனது திருவுள்ளம்.

இரங்காச்செயல் - கருணைகூருதவாறு. உருகாத்தன்மையுடைய என்னெஞ்சில் நீ அமர்ந்த காரணத்தால், உனக்கும் என்னளவில் இரங்காதிருக்கும் வன்னெஞ்சமடைந்ததோ வென்று காரணத்தையும் காரியத்தையும் எடுத்துக்கூறுவதினால், இது "முறையில் உயர்வுநவிற்சியணி" என்னும் அலங்காரம். (அங)

84. கொன்னஞ்சேன் றன்பிழையைக் கூர்ந்துற்று நானினைக்கி
லென்னெஞ்சே யென்னை யெரிக்குங்காண் - மன்னுஞ்சீ
ரெந்தாய்நின் சித்தத்திற் கேதாமோ நானறியேன்
சிந்தா குலனென்செய் வேன்.

(அ-ரை) கொல் நஞ்சேன் தன் - கொல்லுகின்ற நஞ்சையொத்தவனாகிய எனது. கூர்ந்துற்று - நட்பமாய். எரிக்கும் - சுடும். சிந்தாகுலன் - மனக்கிலேசத்தையுடையேன். (அச)

85. நின்னன்பர் தம்பா னிறுத்துதியோ வன்றியெனைப்
பொன்னன்பர் தம்பாற் புணர்த்துதியோ - பொன்னன்பர்
வைவமே யென்னும் வறியே னறியேனென்
றெய்வமே நின்றன் செயல்.

(அ-ரை) பொன் அன்பர் தம்பால் - பொன்னாசை யுள்ளவர்களிடத்தில். வைவம் - வைவோம். வறியேன் - வறுமையுடையேன்.

(வி-ரை) நின் அன்பர்-நின் அடியார்; பொன் அன்பர்-பொன்னிச்சை படைத்த செல்வர்; என்னை யுன்னடியர்பால் நிறுத்துவையோ, அல்லது செல்வர்களிடத்துப் புணர்த்துவையோ யானறியேன் தெய்வமே நின்றன்செயல் என்றது சுதந்தரமற நிற்றலை விளக்குகின்றது. (அரு)

86. என்சிறுமை நோக்கா தெனக்கருளல் வேண்டுமென்றே
நின்சிறுமை நோக்கியிங்கு நிற்கின்றே - னென்பெரும
யாதோநின் சித்த மறியே னடியேற்கெப்
போதோ வருள்வாய் புகல்.

(அ-ரை) சிறுமை - தாழ்வு. நோக்காது - பாராமல். பெரும - பெருமானே. புகல் - சொல்லு.

(வி-ரை) என்சிறுமை-ஆணவ மாயா கரும மலங்களின் சம்பந்தத்தால் ஆன்மசிற்சத்தி விளக்கங்குன்றியதும், ஞானமறைவுற்றதும், தன்னை அவற்றோடு ஒன்றாகக்கண்டு நிற்பதுமாம். தரமில்லாமையை நோக்காமல், உன் அருட்பெருமையையும், என்னைத்திருத்தி யாட்கொள்ள வல்லபம் உன்னிடத்தில் உள்ளமையும் நோக்கி யருளவேண்டுமென்பார் "என்சிறுமை நோக்காதெனக் கருளல்வேண்டுமென்றே நின்பெருமைநோக்கி யிங்கு நிற்கின்றேன்" என்றனர். ()

87. எந்தாயென் குற்றமெலா மெண்ணுங்கா லுண்ணடுங்கி
நொந்தா குலத்தி னுழைகின்றேன் - சிந்தாத
காள மகிழ்நின் களக்கருணை யெண்ணுதொறு
மீளமகிழ் கின்றேன் விரைந்து.

(அ-ரை) எந்தாய் - எமதுதந்தையே. உள் நடுங்கி - மனங்கலங்கி. நொந்து-வருந்தி. ஆகுலத்தில் - விசனத்தில்.

(வி-ரை) நுழைகின்றேன், மகிழ்கின்றேன் என்னும் வினைப்பய னிலைகளுக்கு யான் என்பது தோன்றா எழுவாய். காளம் - கடலிலெழுந்த விடம். களம் - கண்டம். கருணை - அருள் அதாவது திருநீலகண்டத்தின் அருட்பெருமை; அதனை யெண்ணுந்தோறும், அறிந்தும் அறியாதும் செய்த பிழைகளைக் கண்டு பயந்த பயம் நீங்க அபயமளித்துக் காக்குமென்பதின் மகிழ்வுதோன்றுதலால் மகிழ்கின்றேன் என்றார். (அஎ)

88. எள்ளலே யென்னினுமோ ரேத்துதலாய்க் கொண்டருளெம்
வள்ளலே யென்றனைநீ வாழ்வித்தா - றள்ளலே

வேண்டுமென யாரே விளம்புவார் நின்னடியார்
காண்டுமெனச் சூழ்வார் களித்து.

(அ-ரை) எள்ளல் - இகழுதல். ஏத்துதல் - துதித்தல். காண்டும் - காண்போம்.

(வி-ரை) எள்ளலே - எனது சிறுமையைக்குறித்து இகழாதே. என்னினும்-என்று கூறினும்; ஓர் ஏத்துதலாய் - அதனைத் தன்னைத்துதிக்குந் துதிமொழியாக; கொண்டு - ஒப்புக்கொண்டு; அருள் - கருணைசெய்கின்ற எம் வள்ளலே - எமது வள்ளலாயுள்ளவனே. (நீ யென்னை வாழ்வித்தால்) தள்ளலேவேண்டும் என - என்னை நீக்கவேண்டுமென்று. யாரே விளம்புவார்- யாவர் எதிர்நின்று தடுத்துக்கூறவல்லார்? யாரே - என்பதிலுள்ள ஏ வினாப்பொருளது.

89. வேணிக்க மேவைத்த வெற்பே விலையில்லா
மாணிக்க மேகருணை மாகடலே - மாணிக்கு
முன்பொற் கிழியளித்த முத்தேயென் னாருயிர்க்கு
நின்பொற்கழலேநிலை.

(அ-ரை) வேணி கம்மேவைத்த - சடாபாரத்தில் கங்கையைத்தரித்த. மாணிக்கு - பிரமசாரிக்கு (தருமியென்னும் பிராமணனுக்கு) பொற்கிழியளித்த - பொன்முடிப்புக்கொடுத்த. (பொன்முடிப்பை சல்கம் என்பர் வடநூலார்).தருமிக்குப்பொற்கிழியளித்த கதையைத் திருவிளையாடற் புராணத்திற் காண்க. (அகூ)

90. முத்தேவர் போற்று முதற்றேவ நின்னையன்றி
யெத்தேவர் சற்றே யெடுத்துரைநீ - பித்தேன்செய்
குற்றமெலா மிங்கோர் குணமாகக் கொண்டென்னை
யற்றமிலா தாள்கின் றவர்.

(அ-ரை) முத்தேவர் - பிரம விஷ்ணு ருத்திரராகிய மூன்றுதேவர், பித்தேன்-பைத்தியங்கொண்ட நான். அற்றம் - சோர்வு.

(வி-ரை) முத்தேவர் - சிருட்டி திதி சங்காரஞ்செய்யும் பிரமவிட்டுணு உருத்திரர்கள். முதற்றேவ - அம்மூவர்க்கும் தலைவனாய் அவரைத்தோற்றியும் காத்தும் சங்கரித்தும் நிற்கிற முதன்மையுடைய மகாதேவனே? பித்தேன் - பிரபஞ்சமயக்கமுடையேனாகிய யான். செய்குற்றம் எல்லாம் - செய்தனவும், செய்கின்றனவும், செய்வனவுமான வெல்லாக் குற்றங்களையும். இது வினைத்தொகை. அற்றமிலாது-முடிவு இல்லாமல்; நீடூழ-நீண்டகாலம்வசிக்க. ஆள்கின்றவர் - அடிமைகொண்டு ஆளாநிற்பவர். நின்னையன்றி எத்தேவர் சற்றே யெடுத்துரை நீ என்றது வேறுதேவர் ஒருவருமிலர் என விளக்கியவாறென்க. எத்தேவர் என்பது-புறவினா.

91. கங்கைச் சடையாய்முக் கண்ணுடையாய் கட்செவியா
மங்கச்சுடையா யருளுடையாய் - மங்கைக்
கொருகூ றளித்தா யுனைத்தொழுமிந் நாயே
னிருகூ றளித்தே னிடர்க்கு.

(அ-ரை) கட்செவியாம் - பாம்பாகிய, அம் கச்சு உடையாய் அழகிய கச்சையுடையவனே. இருகூறு அளித்தேன் இடர்க்கு-துன்பத்திற்கு இரண்டுபாகம் கொடுத்துவிட்டேன்; அதாவது என்னை முழுதும் துன்பத்திற்கே கொடுத்துவிட்டேன் என்றபடி.

(வி-ரை, கட்செவியாம் - கண்ணே காதாகப்படைத்த பாம்பு; அம்கச்சு-அழகிய அரையில் தரித்த கச்சாக; உடையாய் - உடையவனே! மங்கைக்கு - அருட்சக்தியாகிய ஸ்ரீஉமாதேவியார்க்கு.ஒருகூறு-வாமபாகமாகிய ஒருபாகத்தை. அளித்தாய் - வழங்கினை. நாயேன்-நாய்போலும் இழிந்தேனாகிய அடியேன்; இடர்க்கு-துன்பத்தினுக்கு; இருகூறு - என்னுடலில் வலப்பாகம் இடப்பாகமாகிய இரண்டுபாகங்களையும். அளித்தேன்-கொடுத்தேன், என்றதனால் "தலையாற்பலியிரந்துந் தன்னுடலிற்பாதி, மலைமகளுக்கீந்தவரதன்" என்ற கவிப்பொருளை

விளக்கிய வண்மையினுல் நீ யொப்பில்லாதவனே. உன்னேவணங் ... ம் யான் துன்பத்துக்கு இரு கூறும் அளித்த வண்மையுடையேன்; ஆகலின் பெரியேன் எ ... பெருமான் வழங்கும் பேரின்பவாழ்வுக்கு ஏங்கி யதனைப் பெ ... த் தன்னை யிழித்துக்கூறிப் ... மைக்காக இரங்குமாற்றைக் குறிப்பாக வுணர்த்தினர் என்க. (கூக)

92. பேசத் தெரியேன் பிழையறியேன் பேது ... றினும்
கூசத் தெரியேன் குணமறியே - னேச ... 
கொள்ளுவா ருன்னடிமைக் கூட்டத்த ... த்திற்
ரெள்ளுவார் கண்டா யெனே. ... ரல்லாதா

(அ-ரை) பேதுறினும் - மதிமயங்கினுலும். அடி ... மைக்கூட்டத்தார்-அன்பர்கூட்டத்தார். அல்லாதார் - அவரல்லாதவர்; (அன்பரல்லாதவர்). எ ... ளுவார் - இகழ்வார்.

(வி-ரை) பேசத்தெரியேன் - பெரியோரிடத்தி ... பணிவுடனுரையாட அறியேன்; பிழையறியேன் - குற்றத்தைக் குற்றமென்று உணரமாட் ... டன். பேதுறினும் - இவ்வண்ணம் அறியாமை மேலிட்டு மயங்கினுலும்; கூசத்தெரியே ... - அதுகுறித்து நாணமடைய அறியேன். குணம் அறியேன்- நற்குணம் இன்னதென அறி ... ன்; (ஆனபோதிலும்) எனே - அடியேனே; நேசத்தின் - சிவநேசமும் அடியார் நேசமும் சி ... து உடைமையால்; உன்னடிமைக் கூட்டத்தார்-உனது திருத்தொண்டுக்குரிய கூட்டத்தார் ... கொள்ளுவார்-இவனும்-ஒரு அடியானெனக் கொள்ளுவார்; அல்லாதார் - உனது தொண்ட ... அல்லாதவர்; எள்ளுவார் - என்னையிகழ்வார். கண்டாய் - என்பது முன்னிலை யசைச்சொல் ... இதன்கருத்தாவது உனது மெய்த்தொண்டராயினுேர் என்பிழைகளையும் அறியாமையை ... குறியாமல், யான்செய்யுஞ் சொற்றெண்டால் என்னையும் ஓர் அடியான் என அங்கீகரிப்ப ... அவர் அங்கீகரிப்பதனுல், சிவனே ! நீ யென்னை யங்கீகரித்தற்குத் தடையில்லை, உனக்குத் ... தொண்டரல்லாதார் என்னை யிகழ்வாராயின் எனக் கதனுல் வரும் தாழ்வு சிறிதும் இல்லை எ ... பதாம். (கூஉ)

93. ஊணே யுடையேமெ ... றுட்கருதி வெட்கமிலேன்
வீணேநன் ஞளை வி ... ன்றேன் - காணேனின்
செம்பாத மேயென் ... ந் தீராப் பொருளென்று
நம்பாத நாயடியே ... ன்.

(அ-ரை) ஊண் - உணவு.

(வி-ரை) வெட்கமிலேன் ... தது - உணவாதிகளைக்குறித்துச் சிந்தியாமலும், வேறொரு பற்றில்லாமலும், திருவடிப்பற் ... பற்றாக வுடைமையால், அதனைப் பெறுதற்கே வாணளை வீணாக்காமல் உயர்ந்த தவ ... நெறியினிற்போர்முன், திருவடிப்பேற்றிற்கான தவஞ்செய்யாத வயிறுவளர்க்க உண் ... ள்ளேன் என்று நாளைப் போக்குதலை நினைந்து, நாணமை நோக்கியுரைத்த தென்க. (கூங)

94. சிவமே சிவ ...
நவமே தவ ... னச் செல்வமே யன்பர்
வடிவுற்ற ... , நலமே - நவமாம்
படிவுற்ற ... வநின் மாக்கருணை யன்றோ
... வன்னுட் பயன்.

(அ-ரை) சிவமே ... ங்களகரமே. நவமே - புதுமையே. படிவுற்று - படிந்த.

(வி-ரை) படிவு ... , மானிடதேகம்பெற்ற. படிவம் என்பதில் அம் தொக்கது. என் உட்பயன்-எனது ஆ ... லாபமாவது நின் மாக்கருணை - உனது திருவருட்பேறு, அல்லவோ?- அன்றோ? (கூறுக) (கூச)

95. கே ... க்கிக் கொள்ளுங் கொடியேனையுநினக்கோ
... க்கிக் கொள்ளற் கமைவாயே - வீளாக்குஞ்
... கேச வேணிச் சிவனேயென் ஞணவத்திற்
... வகே யிடங்கா ணியம்பு.

(வி-ரை) கோள் - தீமை; ஆக்கிக்கொள்ளும் - உண்டாக்கிக்கொள்கின்ற; கொடியேனையும் - துட்டனேனையும்; இதில் உம் - இழிவுசிறப்புப்பொருளது. நினக்கு - தேவரீருக்கு; ஓர்-ஒரு; ஆள் ஆக்கி - தொண்டனாக்கி; கொள்ளற்கு - என் பணியை அங்கீகரித்தற்கு; அமைவாயேல் - திருவுள்ளம் இசைவாயெனில்; நீள் ஆக்கும் - நீட்சியை யுடையதாக்கிய; செழ் கேசம் வேணி-சிவந்த உரோமமுடைய சடாதரனாகிய; சிவனே - சிவபெருமானே ! என் ஆணவத்திற்கு - எனது மூல மலமாகிய(ஆணவத்திற்கு); இடம் எங்கே - புகலிடம் எங்குள்ளது; இயம்பு - சொல்லுக. காண் முன்னிலை யசை சிவனே நீ யென்னை அடிமைகொள்ள இசைவாயேல் என்னை அடிமைப்படுத்திய ஆணவம் அடங்கும்; யானும் உய்வேன் என்பதாம். (௯௫)

96. திண்ணஞ்சற் றீந்திடநின் சித்தந் திரும்பாத
வண்ணஞ்சற் றேதெரிய வந்ததுகா - ணெண்ணெஞ்சி
னித்தனையு மென்வினைக ணீங்கி யிருக்கவண்ட
மெத்தனையும் போதாமை யென்று.

(வி-ரை) என்வினைகள் என்னுடைய புண்ணிய பாவமாகிய இருவினைகளும்; நீங்கியிருக்க-என்னைவிட்டு நீங்கியிருப்பதற்கு; அண்டம் எத்தனையும் - அளவற்ற அண்டங்களும்; போதாமையென்று-போதுமான இடமுடையன வல்லவாமென நினைந்து. நின்சித்தந்திரும்பாத வண்ணம்-எனக்கருள தேவரீரது திருவுள்ளந் திரும்பாதிருக்கின்ற வகை; சற்றே-சிறிது; தெரிய வந்தது - யானும் அறிய நேர்ந்தேன் என்றபடி. எத்தனை யண்டகோடிகளிலும் அடங்காத கர்ம மல பந்தனாக அடியேனிருப்பினும், அம்மலத்தை நாசஞ்செய்து தேவரீர் அருளவேண்டுமென்பது கருத்து. அண்டம் - உலகு. (௯௬)

97. இண்டைச் சடையோ யெனக்கருள வெண்ணுதியே
றொண் டைப் பெறுமென் றுயரெல்லாஞ் - சண்டைக்கிங்
குய்ஞ்சே மெனவோடு மோட்டத்திற் கென்னுடைய
நெஞ்சே பிறகிடுங்கா ணின்று.

(வி-ரை) இண்டை-திருமுடியிற் சூடும் இண்டைமாலை. தொண்டைபெறும் என் - உனது திருவடித்தொண்டு செய்யப்பெற்ற எனது; துயரெல்லாம் - துன்பம் முழுதும்; சண்டைக்கு இங்கு உய்ஞ்சேம் - போரிடுவதினின்றுந் தப்பிப்பிழைத்தேம்; என வோடும் - என்று ஓடாநிற்கும்; (அப்பொழுது) (அந்த) ஓட்டத்திற்கு என்னெஞ்சே பிறகிடும்-அந்தவோட்டத்தைப் பின்பற்ற முடியாமல் என்மனம் பிற்பட்டு நிற்கும்; என்பதனால் சிவனே நீ யருள்செய்யத் திருவுள்ளங் கொள்ளில் என் வினைகள் நாசமாம்; மனம் சலிப்பற்று நிற்கும் என விண்ணப் பித்தவாறும். இண்டை - இங்கு கொன்றைமாலை யென்பது பொருள். (௯௭)

98. கண்ணா ணிழுதைகள்பாற் காட்டிக் கொடுக்கிலெனை
யண்ணா வருளுக் கழகன்றே - யுண்ணாடு
நின்னடியார் கூட்டத்தி னீரிவனைச் சேர்த்திடுமி
னென்னடியா னென்பா யெடுத்து.

(வி-ரை) கண் நாண் - பார்ப்பதற்குக் கண்கூசுகின்ற; இழுதைகள்பால் - அடியரல்லாத இழுக்குநெறியாரிடம்; என்னைக்காட்டிக்கொடுக்கில் - இவனை உங்களுடன் சேர்த்துக்கொள்ளுங்களென வொப்புக்கொடுத்தால். அண்ணா - எனது தந்தையே. அருளுக்கு அழகு அன்று-அங்ஙனம் செய்வது உனது கருணைக்கு அழகாகமாட்டாது. (ஆகலின்) என்னை உன்னடியார் திருக்கூட்டத்தில் இவன் என்னடியான் உம்மோடு சேர்த்துக்கொள்ளுங்கள் எனத் திருவாய் மலர்ந்தருளவேண்டும் எனப்பிரார்த்தித்தனர். (௯௮)

99. கண்ணப்ப னேத்துநுதற் கண்ணப்ப மெய்ஞ்ஞான
விண்ணப்ப நின்றனக்கோர் விண்ணப்ப - மண்ணிற்சில்
வானவரைப் போற்று மதத்தோர் பலருண்டு
நானவரைச் சேரா மனுட்டு.

(வி-ரை) மெய்ஞ்ஞான விண்ணப்ப - சத்திய ஞானகாச சொரூபத்தந்தையே! ஓர் விண்ணப்பம் - ஒரு மனு; சில வானவரை - சில சிறுதேவரை; போற்றும் - வழிபடும்; மதத்தோர் - சமயநெறியோர்; பலருண்டு-பலர் உள்ளார்; நான் அவரைச்சேராமற் பெருநெறிபிடித்தொழுக என்னை நாட்டியருள் என்பது விண்ணப்பக்கருத்து. (௬௯)

100. பொன்னின் ஒளிரும் புரிசடையோய் நின்னையன்றிப்
பின்னொன் றறியேன் பிழைநோக்கி - யென்னை
யடித்தாலு நீயே யணைத்தாலு நீயே
பிடித்தேனுன் பொற்பாதப் பேறு.

(வி-ரை) பொன்னின்ஒளிரும்......பின்னொன்றறியேன் - பொன்வண்ணம் விளங்கும் செஞ்சடையோய்! உன்னை யுணர்கின்ற மெய்யுணர்வை யன்றி வேறொன்றை யான் அறியேன்; எனது பிழை நோக்கித் திருத்தி யடிமைகொள்ள உன் மறக்கருணை காட்டினும் சரி அறக்கருணைகாட்டினும் சரி, வேறு புகலிடமில்லை யென்பார். "அடித்தாலுநீயே அணைத்தாலு நீயே பிடித்தேனின் பொற்பாதப்பேறு" என்றார். (௧00)

101. துற்குணத்தில் வேறு தொடர்வே னெனினுமற்றை
நற்குணத்தி லுன்சீர் நயப்பேன்காண் - சிற்குணத்தோய்
கூற்றுதைத்த நின்பொற் குரைகழற்பூந் தாளறிக
வேற்றுரைத்தே னில்லை விரித்து.

(வி-ரை) துற்குணத்தில்-கெட்ட குணத்தில்; வேறு - சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய வேறு விடயங்களை; தொடர்வேன் - அநுபவிக்கப் பற்றுவேன், எனினும் - என்றாலும், நற்குணத்தில் - நல்லகுணத்தில்; உனது சீர் நயப்பேன் - உன்புகழ் பேசவிரும்புவேன்; சிற்குணத்தோய்-சிற்சத்தியே குணமாகவுடையவனே, சீவர்கள் நினைவையும், செயல்களையும் ஒருங்கே யுணருஞ் சர்வ சீவ சாட்சியாக நிற்பது திருவடியாதலால் "குரைகழற்பூந் தாளறிக வேற்றுரைத்தேனில்லை விரித்து" என்றார். (௧0௧)

102. இப்பாரி லென்பிழைக ளெல்லாம் பொறுத்தருளென்
னப்பாநின் றாட்கே யடைக்கலங்கா - ணிப்பாரி
னுனது தாணீழ லெண்ணுமட்டு நின்னடியர்
பானினது சீர்கேட்கப் பண்.

(வி-ரை) இப்பாரில்.........சீர்கேட்கப்பண் - எனது உயிர்த்தந்தையாக வுள்ளவனே! இவ்வுலகில் அடியேன் செய்த பிழைகளெல்லாவற்றையும் திருவுள்ளத்திற்கொண்டு, கோபியாது மன்னித்தருள். அடியேன் உனது திருவடிக்கே அடைக்கலம்; இவ்வுலகில் அடியேன் உனது திருவடி நீழலிற் பேரின்ப வாழ்வடைந்து சுகிக்குமளவும் உன் அடியார் திருக்கூட்டத்திற்சேர்த்து, உனது மெய்யாகிய அருட்புகழையே யான்கேட்கும் வண்ணம் செய்தருள்வாயாக. இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாகும் அளவும் பிழையின்றி உயிர் தூய்மையுடையதாதல் கூடாமையின் "பிழைகளெல்லாம்" எனவும்; "மக்கள் செய்கின்ற பிழைகளைப் பொறுக்குந்தாயினும் பேரருளுடையனாதலிற் "பொறுத்தருள்" எனவும்; அருளாகியகுணத்தினின்றும் பிரியாத குணியாக உயிரோடொன்றி யிருத்தலின் "என்னப்பா" எனவும்; பிறவாப் பெருங்கடலைக் கடப்பான் மரக்கலம் போல்வது திருவடியாகலானும், அதனை யடைந்தாலன்றி யுய்வது கூடாதாகலானும் "நின்தாட்கே அடைக்கலங்காண்" எனவும்; பிறவிவெப்பத்தை யகற்றிப் பேரின்ப சுகத்தைத்தருவது திருவடிநீழலாதலின் " தாணீழல் " எனவும்; அந்தப்பேற்றை யடைவிக்க வல்லது சாதுசங்கமும். அவன்மெய்ப்புகழைக் கேட்டலும் சிந்தித்தலுமாதலால் "நின்னடியார் நினது சீர்கேட்கப்பண்" எனவுங் கூறினர். (௧0௨)

திருச்சிற்றம்பலம்.

## சிவநேச வெண்பா உரை முற்றிற்று.

---